தமிழ்நாட்டு வரலாறு

பல்லவர் - பாண்டியர் காலம்

முதற்பகுதி

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு

தமிழ்நாட்டு வரலாறு

பல்லவர் - பாண்டியர் காலம்

முதற்பகுதி

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

குறளகம் : சென்னை 600108.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Comprehensive History of Tamil Nadu Pallava - Pandya Age. Volume-I.
Authors	:	Editorial Board of the Comprehensive History of Tamil Nadu.
Publisher	:	Director of Tamil Development, "Kuralagam", Madras - 600 108.
Copyright	:	Government of Tamil Nadu.
Publication Number	:	3
Language	:	Tamil
Edition	:	First
Number of Copies	:	2000
Date of Publication	:	April 1990
Paper Used	:	T.N.P.L. 16
Binding	:	TAMIL UNIVERSITY PUBLICATION
Size of the Book	:	22 × 14.5 Cms.
Printing type used	:	11 pt.
Number of Pages	:	468
Price	:	Rs.

Printers : *Tamil University Offset Press, Thanjavur 613 001.*

மு. கருணாநிதி

முதலமைச்சர்

தலைமைச் செயலகம்

சென்னை-600 009

நாள் 20-12-1990.

அணிந்துரை

"தமிழக வரலாறு தெளிவான முறையில் முறையாக எழுதப்பட வேண்டும்" – என்ற கோரிக்கையைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில், 1967-ஆம் ஆண்டுக்கு முன்பு எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபொழுதே திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தெரிவித்தோம்.

1967-இல் ஆட்சிக்கு வந்த பிறகு சொன்னதைச் செய்திட முனைந்தோம். 1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18-ஆம் நாள் கூடிய தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், தமிழ்நாட்டு வரலாற்றை முழுமையாக உருவாக்க முடிவெடுத்தது.

அந்த முடிவின்படி தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு அமைக்கப்பட்டது.

வரலாற்றுக் குழு ஆராய்ந்து எழுதும் வரலாற்று நூல்கள் ஆறு தொகுப்புகளாக வெளியிட முடிவு செய்யப்பட்டது. தொல் பழங்காலம் (வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்) சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பிற்காலம், இக்காலம் என ஆறு காலப் பகுப்புக் கொண்டு அவை வெளிவர முடிவு எடுக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் 'தொல் பழங்காலம்' – 1975-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்த நூலுக்கு எழுதியுள்ள அணிந்துரையிலேயே வரலாற்றுக் குழு அமைக்கப்பட்ட விவரங்களைச் சுட்டிக் காட்டியிருக்கின்றேன்.

1975-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடைப்பட்ட காலத்தில் 'சங்க காலம்' பற்றிய வரலாற்று நூல் மட்டும் இரு மடலங்களாக வெளிவந்திருக்கிறது.

இப்பொழுது மீண்டும் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு 'பல்லவர் காலம்' நூல் வெளிவருகிறது.

தமிழ்நாட்டு வரலாற்றில் பல்லவர் - பாண்டியர் காலச் செய்திகளைத் தொகுத்துத்தரும் இந்த வரலாற்று நூலில், களப்பிரர் பற்றிய செய்திகளையும் பல்லவர் காலக் குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளையும் பல்லவர் ஆட்சி முறையையும் பாண்டியர் ஆட்சி முறையையும் விரிவாக அறிகின்றோம்.

வரலாற்று விவரங்களை ஆராய்ந்து அறிய நமக்கு வாய்ப்புகள் மிகுதி என்று சொல்ல இயலவில்லை. செப்பேடுகளும் கல்வெட்டுகளும் அகழாய்வுகளும் வரலாற்றுச் சின்னங்களாகத் திகழும் பல்வேறு இடங்களில் கிடைத்திருக்கும் ஆதாரங்களும் வரலாற்று ஆராய்ச்சி அறிஞர்கள் பலரின் ஆய்வுகளும் இந்நூல் உருவாகப் பெரிதும் பயன்பட்டிருப்பதை அறிகின்றோம்.

தமிழர்களின் அந்தநாள் பெருமையை அவனிக்குக் காட்டிட 'பல்லவர் காலம்' வரலாற்று நூல் ஒரு பெருந்துணை ஆகும்.

தமிழ் மக்களின் உண்மையான வரலாற்றை உணர்ந்திட இந்நூல் பயன்படும் என்பதுடன், பாண்டியர் ஆட்சி முறையைப் படிக்கும்பொழுது அரசனின் செயலகம் 'எழுத்து மண்டபம்' என அழைக்கப்பட்டதை அறிகின்றோம்; அமைச்சர்களின் பொறுப்புகளுக்கு உட்பட்ட துறைகளின் விவரங்களை அறிகின்றோம்.

மக்களாட்சியின் அடிப்படை நோக்கங்கள் ஊர் நிருவாகத்தில் செயல்பட்டதையும் காண்கின்றோம். தன்னாட்சி அமைப்புகளாக ஊர்கள் விளங்கின என்பதை அறிகின்றோம்.

இப்படிப் பக்கத்துக்குப் பக்கம் பயனுள்ள வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துப் பல்லவர் காலத்தையும் பாண்டியர் காலத்தையும் காட்டிடும் இந்நூல் கடும் உழைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இந்த அரிய முயற்சி விரைந்து தொடர வேண்டும். அடுத்தடுத்துள்ள வரலாற்று நூல்களும் விரைவில் வெளிவர வேண்டும்.

இப்பணிகளுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் துணை நிற்க வேண்டும்.

(மு. கருணாநிதி).

க. அன்பழகன், எம் ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 20.12.1990

அணிந்துரை

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினர் ஆய்ந்து தேர்ந்து வழங்கிய தமிழ்நாட்டு வரலாறு, "தொல் பழங்காலம்", சங்ககாலம் - வாழ்வியல்", "சங்ககாலம் - அரசியல்" ஆகிய பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்ச்சியாகப் பல்லவர் - பாண்டியர் காலம் முதற்பகுதி இது காலை வெளிவருகின்றது.

தமிழ் மக்களின் வரலாற்றில், பொற்காலம் எனப்படும் சங்க காலத்தில் அறிவு முதிர்ச்சியும் வாழ்க்கைப் பொலிவும் பெற்று விளங்கிய தமிழர் நாகரிகம், அதற்கடுத்த காலப்பகுதியில், பெரு வெள்ளத்தால் தாக்கமுற்ற நிலப்பகுதியைப் போல் காட்சியளிக்கின்றது. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் நிலைபெற்ற களப்பிரர் ஆட்சியில் பல்வேறு மாற்றங்களைக் காண்கிறோம். அவற்றிற்குக் காரணமான களப்பிரர் யார்? எங்கிருந்து வந்தவர்கள் ? என்பவை பற்றி அறிஞர்களிடையே இன்றும் கருத்து வேறுபாடு உள்ளது. ஆயினும், தமிகத்தில் பெரும் மாற்றங்களுக்குக் காரணமான களப்பிரர் தமிழகத்திற்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்னும் கருத்து உண்மை என்றே தெரிகிறது. அவர்கள் காலத்தில் பண்டைச் சோழ, பாண்டிய குலங்கள் ஆட்சியிழந்து ஒடுங்கி வாழ்ந்து வந்தன என்பது பிற்கால வரலாற்றிலிருந்து அறியப்படுகின்றது.

களப்பிரர் தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் ஆட்சியைப் பற்றிய செய்திகள் மிகவும் அரிதாகவே உள்ளன. அவர்கள் காலத்தில் சோழ,பாண்டிய மரபினைச் சேர்ந்தோர் ஆந்திர, கருநாடக மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்து சென்று, அங்கு ஆட்சி புரிந்ததைக் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து அறிகிறோம். ரேநாடு, பொத்தப்பி முதலிய இடங்களை ஆண்ட சோழரும் துளு நாட்டில் ஆட்சிபுரிந்த அலுபரும் தமிழகத்திலிருந்து சென்றவர்களே. தெலுங்கு நாட்டில் ஆண்டுவந்த சோழச் சிற்றரசர் பலர், கல்வெட்டுகளில் தங்களைக் கரிகால்ன் வழியினர் என்று குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

களப்பிரர் சமண, பௌத்த சமயங்களையும் வடமொழி, பாலி போன்ற பிற மொழிகளையும் போற்றியது அக்காலச் சான்றுகளிலி ருந்து அறியப்படுகின்றது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் மதுரையில் வச்சிரநந்தி திராவிட சங்கத்தை நிறுவி தமிழைப் போற்றியதாகவும் அறிகிறோம். தங்கள் சமயத்தைப் பரப்ப முயன்ற சமணர், தமிழின் இனிமையில் ஈடுபாடு கொண்டது வியப்பிற்குரியதன்று. அரசு ஆதரவு இல்லாவிடினும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பலவும் கிளி விருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் போன்ற நீதி நூல்களும் பொதுவகை நூலான முத்தொள்ளாயிரம், சமய நூலான திருமந்திரம், காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஆகியவையும் அக்காலத்தே தோன்றியவை என்று ஆராய்ச்சி அறிஞர் திரு தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் கூறுவது கருதற்பாற்று.

அரசியல் மாறுதல் எத்தகையதாயினும் இலக்கியப் படைப்பு உடனே நின்றுவிடக்கூடியதன்று. ஆனால், அக்கால இலக்கியப் படைப்பில் ஒரு பெரும் மாறுதலைக் காண்கிறோம். அகவாழ்வைப் பற்றிய நூல்கள் மிக மிக அரிதாக உள்ளன. அதுவும் சங்க கால நூல்களைப் போன்று எதுவுமில்லை. களப்பிரர் கால வழிபாட்டிடங் கள் காலப்போக்கில் அழிந்ததுடன், எஞ்சியவை சைவ, வைணவக் கோயில்களாக மாறியிருக்கக் கூடும். ஆனால், தமிழ்நாட்டில் கோயில் கட்டும் முறையில், அவர்தம் பழக்கம் ஒரு மாறுதலை ஏற்படுத்த உதவியுள்ளது. கருங்கல்லை இறுதிச் சடங்கிற்கு மட்டும்

தொடக்கத்தில் பயன் படுத்தி வந்த தமிழர், அதைப் பயன்படுத்திக் கோயில் கட்டும் முறையை மேற்கொள்ளக் களப்பிரர் காலச் சமணர், சாக்கியர் தொடர்பு ஏதுவாயிற்று என்று கருதலாம்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி மறையத் தொடங்கியது. வடக்கே பல்லவர், தம் ஆட்சியை ஏற்படுத்தினர். அதே போன்று தென் தமிழ்நாட்டில், கடுங்கோன் தலைமையில் பாண்டியர் மீண்டும் ஆட்சி புரியத் தொடங்கினர். இம்மாறுதல்களைப் பற்றி விரிவாகக் கூறுவதற்குச் சான்றுகளில்லை. அடுத்த ஒரு நூற்றாண்டிற்குள் களப்பிரர் ஆட்சியினின்று விடுபட்ட பாண்டியர், சேரநாடு, கொங்கு நாடு, துளு நாடு, சோழ நாட்டின் தென்பகுதி முதலிய நிலப்பரப்புகளை வென்று ஒரு பேரரசை ஏற்படுத் தினர். சோழ நாட்டைக் கைப்பற்றுவதற்காகப் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை நீடித்தது. முடிவில் பாண்டியர் தோல்வி அடைந்தனர்.

அக்காலப் பாண்டியர்களில் குறிப்பிடத்தக்கவர், சம்பந்தரும் சுந்தரரும் போற்றிய அரிகேசரி; மேலைச் சாளுக்கிய வேந்தனை வென்ற கோச்சடையன் இரணதீரன்; மாவீரனும் பரம வைணவனு மான நெடுஞ்சடையன்; வாதவூரர், நம்பியாண்டார், பட்டினத்தடிகள் முதலியோர் போற்றிய முதல் வரகுணவர்மன்; இலங்கையை வென்ற சீவல்லபன் ஆகியோர் ஆவர்.

முதலாம் இராசராசன் காலத்திற்கு மிகவும் முன்னரே, செப் பேடுகளில் தம், முன்னோர் வரலாற்றினை வரையும் மரபினைத் தொடங்கியவன் வேள்விக்குடிச் செப்பேடுகளை வெளியிட்ட பாண் டியன் நெடுஞ்சடையனே ஆவான். சோழர்கால மெய்கீர்த்திகள் அதே பாணியில் இருப்பது இங்கு நோக்கத்தக்கது. வளநாடு என்னும் நாட்டுப் பிரிவை முதன் முதல் தொடங்கியவர் இக்காலப் பாண்டியர் களே ஆவர். சங்க காலத்தில் விளங்கிய ஊர் மன்றங்களும் அவை களும் ஊர்ச் சபைகளாக வளர்ச்சியுற்றதை, இக்காலப் பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். பல்லவர்களைப் போல்

கட்டடக் கலை, சிற்பக் கலை முதலிய நுண்கலைகளை இக்காலப் பாண்டியர் போற்றி வளர்த்த விவரம் அடுத்த பகுதியில் இடம் பெறும்.

பல்லவர் தோற்றம் பற்றி வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுள்ளது. பல்லவர் பக்லவர் என்றும் ஆந்திரரென்றும் வாகாடகர் என்றும் தமிழரான தொண்டையரின் வழியினரெனவும் புலிந்தரெனவும் பல்வேறு கருத்துகள் உள்ளன. அவை யாவும் நூலில் ஆராயப்பட்டுள்ளன. சங்க நூல்கள் அவர்களைப்பற்றி எதுவும் குறிப்பிடாததும் தொடக்கத்தில் அவர்கள் பிராகிருதம், வடமொழி முதலியவற்றைப் போற்றியதும் அவர்கள் பிற இடங்களிலிருந்து தமிழகத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள் என்பதைக் காட்டுவன.

களப்பிரர் வருகைக்கு முன்னரே தொடங்கிய பல்லவராட்சி, கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு வரை, தமிழகத்தின் வடபகுதியில் நீடித்தது. களப்பிரர் ஆட்சியை நீக்கியதும் வலிமைமிக்க ஒரு பேரரசை நிறுவியதும் அர்ச வர்த்தனனைத் தோற்கடித்த பெருவேந்தன் இரண்டாம் புலிகேசியை வென்று அவன் தலைநகரைக் கைப்பற்றியதும் இலங்கையை வென்றதும் பல்லவரின் குறிப்பிடத்தக்க அரசியல் சாதனைகளாகும். பல்லவ வேந்தரில் சிறந்தோர், பல கலைகளில் வல்லவனான மகேந்திரவர்மனும் வாதாபியையும் இலங்கையையும் வென்ற மாவீரனான மாமல்லனும் அறுபத்து மூன்று நாயன்மார் வரிசையில் சேர்ந்தவனும் வடமொழி, தமிழ் முதலியவற்றில் புலவனுமான முதலாம் பரமேசுவரவர்மனும் நாயன்மார் வரிசையில் இடம் பெற்றவனும் சுந்தரரால் போற்றப்பட்டவனும் காஞ்சி கைலாச நாதர் கோயிலை எடுப்பித்தவனுமான, இரண்டாம் இராசசிம்மனும் அறுபத்தைந்து ஆண்டுக்கு மேல் ஆட்சி புரிந்தவனும் திருமங்கையாழ்வாரால் போற்றப்பட்டவனும் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலை எடுப்பித்தவனுமான இரண்டாம் நந்திவர்மனும் பாண்டியரைப் பல போர்களில் வென்ற பெருவீரனான தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மனும் ஆவர்.

பிற்காலச் சோழர் காலத்திற்கு முன்னரே, வாரியங்களைக் கொண்ட ஊர்ச்சபைகள் பல்லவர் நாட்டில் செயல்பட்டு வந்தன

என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில்தான் அத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டதென்பது நினைவு கூரத்தக்கது.

பல்லவரும் பாண்டியரும் தமிழ் நிலத்தில் தலைதூக்கிச் செங்கோல் செலுத்தி, கோவில் அமைப்பில் நாட்டங்கொண்டு, கலை பண்பாட்டுப் பரிமாற்றம் செய்து கொண்டதையும் இந்நூலிற் காண லாம்.

பல்லவர் நாடு, வளநாடு, கோட்டம், கூற்றம், ஊர் என்னும் பிரிவுகளுடையதாய் விளங்கியது. ஊர்ச்சபைகள், மகாதேவ மங்கல சபைகள் ஆகியவை இயங்கிவந்தன. மகாதேவ மங்கல சபைகட்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேதப் பயிற்சி ஒரு கட்டாயத் தகுதியாகக் கூறப்பட்டுள்ளதை எண்ணுவோர், இது தமிழர் மரபுக்கு மாறாவதைக் காண்பர். பார்ப்பனர்களின் ஊர்ச்சபைகளான மகாதேவ மங்கல - பிரம்ம தேயச் சபைகளின் தனித்தாளுமையில், மன்னனும் தலையிடல் ஆகாது என்பதும் நியதியாக இருந்துள்ளது. எனவே, தமிழ் மக்களின் வாழ்வில், அரசியல் வழிப்பட்ட மாற்றத்தால் ஏற்பட்ட, பிறமொழியாளர் ஆதிக்க நிலை இது என்பது தெளிவு.

மேலும், தமிழ்நாட்டு வரலாறு பல்லவர்-பாண்டியர் காலம் - கலைப்பணி - சமுதாயம் - சமயம் - பொருளாதாரம் - பண்பாடு முதலியன அடுத்த பகுதியில் மலரவிருப்பதால் தமிழர்களின் அக் கால நிலை மேலும் தெளிவுறும் என எதிர்நோக்கலாம்.

பேராசிரியர் முனைவர் சி.இ. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் கடமையாற்றிய வரலாற்றுக் குழுவினர் யாவர்க்கும் எனது அன்பான பாராட்டுகள் உரியவாம்.

அன்பன்,

க. அன்பழகன்.

பதிப்புரை

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை 1968-இல் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் தொடங்கி வைத்துத் தமிழ்ப் பேறறிஞர் களுக்குச் சிலைகள் நிறுவித் தமிழன்னையை அரியணையில் ஏற்றிக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், சாமா னியரும் படித்து அறியுமாறு தமிழ்நாட்டு வரலாற்றை எளிய நடையில் வெளியிட வேண்டும் எனும் தம் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார். அவ்வாறு வெளியிடப்படும் தமிழ்நாட்டு வரலாற்றைப் படிக்கும் தமிழன், தனது இன வரலாற்றை உளமார உணர்ந்து பெருமிதம் அடைவதோடு தனக்கென ஒரு வரலாற்றையும் படைப்பான் என்றார். காலம் கனியும்போது இதையே உலகப் பொது மொழியாம் ஆங்கிலத் திலும் திலும் மொழிபெயர்த்து வெளியிடவேண்டும் என்றார்.

அண்ணாவின் கனவை நனவாக்கும் வகையில் 18.8.1970-ஆம் நாள் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு வரலாற்றை எழுதி வெளியிடும் குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் தலைவராகக் காலஞ்சென்ற உயர்திரு டாக்டர் மு.வரதராசனார் அவர்களைப் பணியாற்ற நியமித்தார்.

தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக 1975-ஆம் ஆண்டு "தமிழ்நாட்டு வரலாறு-தொல்பழங்காலம்" எனும் முதல் மடலம் வெளியானது. அதையடுத்து 1983-ஆம் ஆண்டு "தமிழ்நாட்டு வரலாறு - சங்க காலம்" எனும் இரண்டாம் மடலம் வெளியானது. அதையடுத்து, இவ்வாண்டுதான் (1991) மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தரும் ஊக்கத்தினால் "தமிழ்நாட்டு வரலாறு பல்லவர்-பாண்டியர் காலம் - முதற்பகுதி" எனும் மூன்றாம் மடலம் வெளிவருகி றது. மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கொண்டுள்ள மட்டற்ற ஆர்வம் இங்குக் குறிப்பிடத்தக்க தாகும்.

இது, பல்லவர்- பாண்டியர் கால வரலாற்றை அறிய உதவும் அடிப்படைச் சான்றுகள்; பல்லவர், பாண்டியர், களப்பிரர், அக்காலக் குறுநில மன்னர்கள் ஆகியோரின் சுருக்கமான வரலாறு; பல்லவர் ஆட்சிமுறை; பாண்டியர் ஆட்சிமுறை ஆகிய உள்தலைப்புகளைக் கொண்ட முதல் பகுதியாக வெளியிடப்படுகிறது. இதனையடுத்துப் பல்லவர், பாண்டியர் காலக் கட்டடக் கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை, நுண்கலைகள் முதலிய கலை வரலாற்றையும் அக்காலச் சமயம், சமூகம், பண்பாடுகள், பொருளாதாரம், அயலக உறவுகள் முதலிய கூறுபாடுகளையும் உள்ளடக்கிய இரண்டாம் பகுதியாக வெளிவர அணியமாகிறது. அதற்குப் பிறகு சோழப் பெருவேந்தர் காலம், பாண்டியப் பேரரசுக் காலம், விசயநகர ஆட்சிக் காலம், ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழகம் முதலியனவாகத் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டு வரலாறு வெளிவரும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

காலம் (Chronology) வரலாற்றின் கண் என்பர். காலமற்ற வரலாறு கதையாகுமே ஒழிய வரலாறு ஆகாது. வரலாறு எழுந்து நின்று, ஓடியாடி, உயிரோடு வாழ வேண்டுமானால் அதற்கு முதுகெலும்பு தேவை. அந்த முதுகெலும்புதான் காலம். இக்காலத்தைக் கணிக்க நமக்கு உதவுபவை அகழ்வாராய்ச்சிகள், கல்வெட்டுகள், பட்டயங்கள், காசுகள், இலக்கியங்கள், சமகால அயலகக் குறிப்புகள் முதலிய சான்றுகள் ஆகும். எனவேதான் இப்பகுதியில் பல்லவர்-பாண்டியர் காலச் சான்றுகள் தனித்தனியாகத் தரப்பட்டுள்ளன. அடுத்துவரும் இயல்களில் பொதுமக்கள் படித்து அறியுமாறு பல்லவர், பாண்டியர், களப்பிரர், குறுநில மன்னர்கள் ஆகியோரின் வரலாறுகள் சுருங்கக் கூறி விளங்க வைக்கப் பெற்றுள்ளன. இப்பகுதியின் கடைசி இயலாகப் பல்லவர் ஆட்சி முறையும் பாண்டியர் ஆட்சி முறையும் கூறப் பெற்றுள்ளன.

மிக அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் குறிப்பாகத் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலும் வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்திலும் கிடைத்துள்ள நடுகற்கள், காசுகள் முதலியவற்றைக் கொண்டு சில புதிய கருத்துகளையும்

கோணங்களையும் இந்நூலில் சேர்க்க இயலவில்லை. அவை யாவும் மீண்டும் ஆராயப் பெற்று, அறிஞர்களிடையே முடிந்த முடிவு ஏற்பட்ட பின் மறு பதிப்பில் அக்கருத்துகளையும் உட்கொண்டு இந்நூல் திருத்தி எழுதப்படலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பதிப்பாசிரியர் குழு

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு (1971-74)

1. டாக்டர் மு. வரதராசனார்,
துணை வேந்தர்,
மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை. — தலைவர்

2. திரு. முத்து. இராசாக்கண்ணனார்,
எம்.ஏ.,பி.ஓ. எல்.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர். — உறுப்பினர் செயலாளர்

3. தமிழறிஞர் திரு. மயிலை சீனி வேங்கடசாமி,
74, காரணீசுவரர் கோயில் தெரு,
சென்னை- 4. — உறுப்பினர்

4. திரு. இரா. நாகசாமி,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 28. — உறுப்பினர்

5. திரு. அ. இராகவன்,
61, பெருமாள் வடக்கு இரத வீதி,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம். — உறுப்பினர்

6. திரு. கா. அப்பாத்துரையார்,
அண்ணா இல்லம்,
8, அப்பாத்துரையார் தெரு,
சென்னை - 18. — உறுப்பினர்

7. திரு. சி.ஈ. இராமச்சந்திரன், எம்.ஏ.,எம்.லிட்.,
இணைப்பேராசிரியர்,
வரலாற்றுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 5. — உறுப்பினர்

8. திரு. க.த. திருநாவுக்கரசு, எம்.ஏ.,
திருக்குறள் ஆராய்ச்சித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 5. — உறுப்பினர்

9. திரு. கி.ர. அனுமந்தன், எம்.ஏ.,
வரலாற்றுப் பேராசிரியர்,
மாநிலக்கல்லூரி, சென்னை - 5. — உறுப்பினர்

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு (1975-79)

1. சைவசித்தாந்த கலாநிதி
ஔவை சு. துரைசாமிப்பிள்ளை — தலைவர்

2. திரு. மயிலை சீனி. வேங்கடசாமி.
ஆராய்ச்சிப் பேரறிஞர் — உறுப்பினர்

3. திரு. இரா.நாகசாமி,எம்.ஏ.,
இயக்குநர்,தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 28. — உறுப்பினர்

4. திரு. அ. இராகவன்,
61,பெருமாள் வடக்கு வீதி,
பாளையங்கோட்டை.
திருநெல்வேலி. — உறுப்பினர்

5. திரு. கா. அப்பாத்துரையார்
எம்.ஏ.,(அங்கிலம்) எம்.ஏ.(தமிழ்), விசாரத் (இந்தி),
அன்னை இல்லம்,
8, அப்பாத்துரையார் தெரு,
சென்னை - 18. — உறுப்பினர்

6. டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன்,எம்.ஏ.,
எம்.லிட்.,பிஎச்.டி.,
பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 5. — உறுப்பினர்

7. திரு.க.த. திருநாவுக்கரசு,எம்,ஏ., (தமிழ்)
எம். ஏ. (வரலாறு), எம். லிட்.,டிப். இன்.லிங் — உறுப்பினர்

8. டாக்டர் சி.ர. அனுமந்தன், எம்.ஏ.,பிஎச்.டி.,
தலைமை வரலாற்றுப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை - 5. — உறுப்பினர்

9. திரு. கொண்டல் சு. மகாதேவன்
பி.எஸ். சி., எம்.ஏ.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
குறளகம், சென்னை - 1. — உறுப்பினர், செயலாளர்.

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு (1979-82)

1. டாக்டர். கே.கே. பிள்ளை,
எம்.ஏ., பிஎச்.டி., டி.லிட்.,
இயக்குநர், மரபு வழி - பண்பாட்டு நிலையம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 5. தலைவர்

2. டாக்டர் சி.ஈ. இராமச்சந்திரன்,
எம்.ஏ.,எம்.லிட்,பிஎச்.டி.,
பேராசிரியர், வரலாற்றுத்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 5. உறுப்பினர்

3. டாக்டர் க.த. திருநாவுக்கரசு,
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
இணைப்பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 113. உறுப்பினர்

4. டாக்டர் கே. சுரேஷ் பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 113. உறுப்பினர்

5. டாக்டர் கு. நம்பி ஆரூரன்,
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.,
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21. உறுப்பினர்.

6. டாக்டர் மா. நன்னன், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
குறளகம், சென்னை - 1 உறுப்பினர்,
செயலாளர்.

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு. (1983-84)

1. டாக்டர் சி.ஈ. இராமச்சந்திரன்.,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பேராசிரியர், வரலாற்றுத்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005. தலைவர்

2. டாக்டர் க.த. திருநாவுக்கரசு எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113. உறுப்பினர்

3. டாக்டர் கு. நம்பி ஆரூரன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.,
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21. உறுப்பினர்

4. டாக்டர் கே.வி. இராமன்,
பேராசிரியர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.
சென்னை - 600 005. உறுப்பினர்

5. டாக்டர் சுரேஷ் பிள்ளை உறுப்பினர்

6. தமிழ் வளர்ச்சி இயக்குநர் உறுப்பினர், செயலாளர்.

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு (1989-92)

1. டாக்டர் சி.ஈ. இராமச்சந்திரன்,
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம். — தலைவர்

2. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் — உறுப்பினர்

3. டாக்டர் எம்.எஸ். கோவிந்தசாமி,
வரலாற்றுத்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம். — உறுப்பினர்

4. டாக்டர் கே. வி. இராமன்,
பண்டைய வரலாறு - தொல்பொருளியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம். — உறுப்பினர்

5. டாக்டர் கோ. தங்கவேல்,
வரலாற்றுத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் — உறுப்பினர்

6. டாக்டர் கே. ஆர். அனுமந்தன்,
ஓய்வுபெற்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியர். — உறுப்பினர்

7. டாக்டர் பி. இராசாராமன்,
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி. — உறுப்பினர்

8. பேராசிரியர் ஆர். இராமசாமி,
அரசினர் கலைக்கல்லூரி, மேலூர். — உறுப்பினர்

9. திரு நடன காசிநாதன்,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 28. — உறுப்பினர்

10. திரு புலவர் கோவிந்தன்,
முன்னாள் சட்டமன்ற அவைத் தலைவர். — உறுப்பினர்

11. திரு கு. சிவஞானம், எம்.ஏ.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
"குறளகம்", சென்னை - 600 108. — உறுப்பினர், செயலாளர்

தமிழ்நாட்டு வரலாறு

கட்டுரையாளர்கள்

1. அடிப்படைச்சான்றுகள்:

(அ) பல்லவர் காலம்

அகழ்வாராய்ச்சிச் சான்றுகள்
காசுகள்
இலக்கியச் சான்றுகள்
அயல்நாட்டார் குறிப்புகள்

(ஆ) பாண்டியர் காலம்

அகழ்வாராய்ச்சிச் சான்றுகள்
காசுகள்
இலக்கியச் சான்றுகள்
அயல் நாட்டார் குறிப்புகள்

டாக்டர் கோ. தங்கவேலு, எம்.ஏ., பிஎச்.டி.,
பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
மதுரை காமராாசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

அடிப்படைச் சான்றுகள்

(அ) பல்லவர் காலம்
கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

(ஆ) பாண்டியர் காலம்
கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

திரு.நடன காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை.,
சென்னை - 600 028.

2. களப்பிரர் வரலாறு:

டாக்டர் அ. கிருஷ்ணசாமி.,
ஓய்வுபெற்ற வரலாற்றுப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும்
முன்னாள் தமிழ்நாட்டு வரலாற்றுப் பதிப்பாசிரியர்
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
"குறளகம்" சென்னை - 600 108.

3. பல்லவர் வரலாறு :

திரு. ஆர். கோபாலன்,
ஆசிரியர்,
"History of the Pallavas of Kanchi"
ஆராய்ச்சி அறிஞர், மரபு வழிப் பண்பாட்டு
நிறுவனம்,
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

4. பாண்டியர் வரலாறு:

டாக்டர் கே. வி. இராமன்,
பேராசிரியர் - தலைவர்,
பண்டைய வரலாறு மற்றும்
தொல்பொருளியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

5. பல்லவர் காலக் குறுநில மன்னர்கள் :

டாக்டர் அ. கிருஷ்ணசாமி,
ஓய்வுபெற்ற வரலாற்றுப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மற்றும்
முன்னாள் தமிழ்நாட்டு வரலாற்றுப்
பதிப்பாசிரியர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
குறளகம், சென்னை - 600 108.

6. பல்லவர் ஆட்சி முறை:

டாக்டர் அ. கிருஷ்ணசாமி,
ஓய்வுபெற்ற வரலாற்றுப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும்
முன்னாள் தமிழ்நாட்டு வரலாற்றுப் பதிப்பாசிரியர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
குறளகம், சென்னை - 600 108.

திரு. த. வீரப்பன், எம்.ஏ.,
தமிழ்நாட்டு வரலாற்று முன்னாள் உதவிப்
பதிப்பாசிரியர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
"குறளகம்", சென்னை - 600 108.

7. பாண்டியர் ஆட்சி முறை:

திரு. ந. க. மங்களமுருகேசன், எம்.ஏ.,எம்.லிட்.,
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

பொருளடக்கம்

இயல் ஒன்று

I பல்லவர்

அகழாய்வுச்சான்றுகள் 1

நாணயங்கள் 3

இலக்கியங்கள் 4

அ. தமிழ் இலக்கியங்கள் 5

ஆ. வடமொழி இலக்கியங்கள் 10

II பாண்டியர் 13

தமிழ் இலக்கியங்கள் 15

இயல் இரண்டு

களப்பிரர் 23

தொண்டைநாட்டில் களப்பிரர் 39

சோழநாட்டில் களப்பிரர் 40

பாண்டிய நாட்டில் களப்பிரர் 44

கொங்கு நாட்டில் களப்பிரர் 46

இயல் மூன்று

பல்லவர் - பாண்டியர் காலத் தமிழகம்

பல்லவர் செப்பேடுகள் 53

பாண்டியர் காலச் செப்பேடுகள் 71

பல்லவர் காலக் கல்வெட்டுகள் 76

பாண்டியர் காலக் கல்வெட்டுகள் 91

இயல் நான்கு

அ. பல்லவர் வரலாறு	....	115
சிம்மவர்மனும் சிம்மவிட்டுணுவும்	....	133
மகேந்திரவர்மன்	....	137
முதலாம் நரசிம்ம வர்மன்	....	145
இரண்டாம் மகேந்திரவர்மன்	....	154
பரமேசுவரவர்மன் - I	....	155
இரண்டாம் நரசிம்மன் அல்லது இராசசிம்மன்	....	162
இரண்டாவது பரமேசுவரவர்மன்	....	169
இரண்டாம் நந்திவர்மன்	....	173
தந்திவர்மன்	....	186
மூன்றாம் நந்திவர்மன்	....	191
நிருபதுங்க வர்மனும் அபராசிதவர்மனும்	....	202
அபராசிதவர்மன்	....	209
ஆ. பாண்டியர் வரலாறு	....	212
கடுங்கோன்	....	213
மாறவர்மன் அவனிசூளாமணி	....	214
செழியன் சேந்தன்	....	215
மாறவர்மன் அரிகேசரி	....	217
கோச்சடையன் இரணதீரன்	....	221
அரிகேசரிபராங்குச மாறவர்மன்	....	223
நெடுஞ்சடையப் பராந்தகன்	....	228
சிரீமாறன் சிரீவல்லபன்	....	235
இரண்டாம் வரகுணன்	....	239
பராந்தகவீர நாராயணன்	....	243
இரண்டாம் இராசசிம்மன்	....	244
பாண்டியன் வீழ்ச்சி - வீரபாண்டியன்	....	246

இயல் ஐந்து

பல்லவர் காலக் குறுநில மன்னர்கள்	.....	261
பல்லவர் பாண்டியர் காலக் குறுநில மன்னர்கள் வரலாறு	.....	264
பல்லவர் காலத்திய சோழ (குறுநில) மன்னர்கள்	.....	286
பல்லவர் - சோழர் உறவு	.....	291
கொடும்பாளூர்த் தலைவர்கள்	.....	295
சேர நாட்டுச் சோழர்	.....	301
நந்திவர்மன், சிம்மவிட்டுணு	.....	303
மகேந்திரவர்மன்	.....	304
குணமுடிதன்	.....	305
புண்ணிய குமாரன்		
அதியமான்கள்	.....	308
மேலைக் கங்கர் - அதியமான்கள் அரசியல் உறவு	.....	311
மேலைக் கங்கர் - பல்லவர் உறவு	.....	312
உதிரி கங்கத் தலைவர்கள்	.....	316
பாணர்களும் பல்லவர்களும்	.....	318
பாண செய நந்திவர்மன்	.....	324
வதுவல்லப மல்லதேவ நந்திவர்மன்	.....	326
பாண விக்கிரமாதித்தியன்	.....	327
பாணர்களும் கோலார் கங்கர்களும்	.....	329
உதிரிக் குறுநில மன்னர்கள்	.....	333

இயல் ஆறு

அ. பல்லவர் ஆட்சிமுறை	.....	353
ஆ. பாண்டியர் ஆட்சிமுறை	.....	401

தமிழ்நாட்டு வரலாறு

பல்லவர் - பாண்டியர் காலம்

இயல் ஒன்று

I பல்லவர்

அகழாய்வுச் சான்றுகள்

தொல்லியல் அகழாய்வுகள் பல மேற்கொள்ளப் பட்டிருப்பினும் பல்லவர் காலத்தோடு தொடர்புடைய செய்திகளைச் சில அகழாய்வுகளே தருகின்றன. அவற்றுள் முதன்மையானது பல்லவர் தலைநகரான காஞ்சிபுரத்தில் மேற்கொண்ட அகழாய்வாகும். இந்திய அரசின் தொல்லியல் துறையும் தமிழக அரசின் தொல்லியல் துறையும் அகழாய்வுகளை இங்கே நடத்தின. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் மற்றும் பண்டைய வரலாற்றுத்துறை 1970 முதல் 1976 வரை சற்றேறக் குறைய 20 ஆய்வுக் குழிகளை, நகரத்தின் பல பகுதிகளில் வெட்டி ஆய்வு மேற்கொண்டது. இவ்வாய்வில் பல்லவர் காலத்தைச் சார்ந்தனவாகப் பல தடயங்கள் கிட்டின.[1]

பல்லவர் காலத்தில் பயன்படுத்திய சிவப்பு நிற மெருகேற்றப்பட்ட பானை ஓடுகள் பலவும் அக்கால மக்கள் பயன்படுத்திய பலவிதமான மண்பாண்டங்களும் கிடைத் துள்ளன. உறைகிணற்றின் சிதைவுகள், செங்கல் கட்டடத்தின் எச்சங்கள் ஆகியனவற்றுடன் சுடுமண் பொம்மைகள் பலவும் கிடைத்தன. இச்சுடுமண் பொம்மைகள் பலவற்றில் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய கூறுபாடாகும். சுதை வடிவங்கள் மற்றும் வண்ண மணிக்கற்களால் ஆன பாசிகள், தொங்கல்கள் ஆகியவை அக்கால மக்களின் தொழில் நேர்த்தியைப் பறைசாற்று கின்றன. அக்கால மக்கள் பயன்படுத்திய பல்லவர் காலக் காசுகளும் அவற்றை அச்சிடுவதற்கான சுடுமண்ணாலான காசு அச்சுகளும் கிடைத்துள்ளன. அவர்கள் பயன் படுத்திய

மற்ற பொருள்களில் கல் உருளைகளைக் குறிப்பிடலாம். சிறுவர்கள் உருட்டி விளையாடும் சிறு தேரின் உடைந்த பகுதிகளும் நூல் நூற்பதற்கான தக்களியின் அடித்தட்டும் இங்குக் கிடைத்துள்ளன. காஞ்சிபுரம், கோட்டையுடைய நகரம் என்று இலக்கியங்கள் குறித்தாலும் கோட்டையின் பகுதிகளை இன்றுவரை நடத்திய அகழாய்வில் காண இயலவில்லை.

சென்னையை அடுத்த நங்கநல்லூரில் நடுவண் அரசின் தொல்லியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு மூலம் பல்லவர் காலக் கோயில் ஒன்றின் அடித்தளம் வெளிக் கொணரப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகம், விழுப் புரத்திற்கு அருகே திருவாமாத்தூரில் நடத்திய அகழாய் வினால் பல்லவர் காலத்தினைச் சார்ந்த சிவப்பு நிற மெருகேற்றிய பானை ஓடுகள் கிடைத்தன. அக்கால மக்கள் பயன்படுத்திய உறைகிணற்றின் சிதைவுகளும் அங்குக் கிடைத்துள்ளன.

பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களும் கட்டடங்களும் அக்காலச் சிற்பம் மற்றும் வாழ்வியலை அறிந்து கொள்வதற்குத் தக்க சான்று பகர்கின்றன. மாமல்லபுரத்தில் உள்ள பல குடைவரைக் கோயில்களும் மண்டகப்பட்டு, தளவானூர், பல்லாவரம், மகேந்திரவாடி ஆகிய இடங்களில் உள்ள குடைவரைக் கோயில்களும் பல்லவர் காலத்தில் எவ்வாறு குடைவரைகள் குடையப் பட்டன என்பதற்குத் தக்க சான்றுகளைத் தருகின்றன. அக்காலக் கட்டட இயலைத் தெரிந்து கொள்வதற்குக் காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலும் வைகுந்தப் பெருமாள் கோயிலும் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. பனமலையில் உள்ள இராசசிம்மேசுவரக் கிருகம் அக்காலக் கோயில் கட்டுமானக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் பிறிதொரு வகைக் கட்டுமான முறையை நமக்கு அறிவிக்கிறது. இக்கோயில்கள்

அக்காலத்தில் நிலவிய சமய ஒழுக்கத்தையும் கடவுள் வழிபாட்டு முறைகளையும் தெற்றெனத் தெரிவிக்கின்றன.

சிற்பங்களும் ஓவியங்களும் அக்கால நுண்கலை மற்றும் வாழ்வியலை அறிதற்குத் துணைபுரிகின்றன. மாமல்ல புரத்தில் உள்ள கிருட்டிண மண்டபப் புடைப்புச் சிற்பங்கள் கிராமப்புற வாழ்வை நன்கு விளக்குகின்றன. அருச்சுனன் தவம், அக்காலச் சமயச் சான்றோர் வாழ்க்கை முறையை நமக்குத் தெளிவாக்குகின்றது. கொற்றவைக்கு நவகண்டம் கொடுக்கும் சிற்பங்கள் அக்கால மக்களின் சமய நெறிகளைத் தெற்றெனப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அரசியல் துறையில் வைகுந்தப் பெருமாள் கோயில் கருவறையைச் சுற்றியுள்ள புடைப்புச் சிற்பங்கள், இரண்டாம் நந்தி வர்மனின் வரலாற்றை விளக்குகிறது. இஃது அவன் பட்டமேற்ற நிகழ்ச்சிகளைத் தெற்றென விளக்கி நிற்கும் அரிய புடைப்புச் சிற்ப வரிசையாகும். அங்குள்ள சுதைச் சிற்பங்களும் சிறந்த சான்றுகளாகின்றன.

ஓவியங்களும் இக்கால மக்களின் வாழ்வியலை அறிதற்குத் துணைபுரிகின்றன. காஞ்சிபுரம், கைலாசநாதர் ஆலயத்தின் சுற்றுச் சுவரில் உள்ள சிறு தேவ கோட்டங்களிலும் பனமலையிலும் ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. இவை யாவும் மிகச் சிறந்த முறையில் வண்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன. சிவபெருமான், பார்வதி, கந்தன் ஆகிய உருவங்கள் எழிலாக வண்ணந் தீட்டப்பட்டுள்ளன. அக்கால ஓவியக்கலை மற்றும் சமய நிலை ஆகியவற்றை அறிய இவை உதவுகின்றன.

நாணயங்கள்

பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள், பல பகுதிகளில் கிடைத்துள்ளன. காஞ்சிபுரம் அகழாய்வு களில் எருது உருவம் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. அண்மைக் காலத்தில் சென்னையில் திருவான்மியூரிலும்

எருது உருவம் பொறித்த ஈயக் காசுகளைக் கண்டெடுத்துள்ளனர். மாமல்லபுரம். எல்லேசுவரம் மற்றும் பல பகுதிகளிலும் காசுகள் கண்டெடுத்துள்ளனர். இக்காசுகள் பொன், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இக்காசுகளில் ஒருபுறம் திமில் உள்ள காளைமாட்டின் வடிவமும் மறுபுறம் ஸ்ரீபர, ஸ்ரீநிதி போன்ற சொற்களும் காணப்படுகின்றன. சிங்கத்தின் உருவத்தையும் பல்லவர்கள் தம் காசுகளில் பதித்துள்ளனர். 'லஷித' என்ற பெயருடைய காசுகளும் தற்போது கிடைத்துள்ளன. எனினும், பல்லவர் கால நாணயங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை. எனவே அவர்களது காசுகளின் எடை, மற்றும் மாற்று ஆகியவைப் பற்றி அறிவதற்குத் தக்க சான்றுகள் இப்போது இல்லை. ஆயினும், இந்நாணயங்களைக் கொண்டு அக்கால நாணயப் பொருளாதாரத்தை ஓரளவு அறிந்து கொள்ள இயலும். நாணயங்களை வார்த்தல் முறை பற்றித் தெரிந்துகொள்ள காஞ்சிபுரம் அகழாய்வுகளில் கிடைத்துள்ள அச்சுகள் பயன்படுகின்றன.

இலக்கியங்கள்

பல்லவர் கால இலக்கியங்களை இருகூறுகளாகப் பிரித்தறியலாம். அவை தமிழ் இலக்கியங்கள், வடமொழி இலக்கியங்கள். இவை இரண்டுமே பெரும்பாலும் இறையருள் (பக்தி) இலக்கியங்களேயாம். சிவனிய, மாலிய சமயங்களின் மறுமலர்ச்சிக் காலமான பல்லவர் காலத்தில் இத்தகைய இறையருள் இலக்கியங்கள் தோன்றித் தமிழ் மொழிக்கு ஆக்கம் தந்தன. கல்வெட்டுகளும் செப்புப் பட்டயங்களும் கூடத் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் ஏராளமாக ஏற்பட்ட காலமும் இதுவேயாகும். அவற்றையும் கல்லிலும் செம்பிலும் பதித்த இலக்கியங்களென்றே கூறலாம். பல்லவர் காலத்தில் தமிழும் வடமொழியும் விரவி

வளர்ந்ததால் தமிழில் 'மணிப்பவள நடை' அல்லது 'மணிப்பிரவாள நடை' தோன்றியது.

இறையருள் இலக்கியங்களோடு இலக்கண நூல்களும் யாழ் நூல், காந்தருவ நூல் முதலிய கலை நூல்களும் இயல், இசை, கூத்து பற்றிய நுண்கலை நூல்களும் கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலியனவற்றைப் பற்றிய நூல்களும் இக்காலத்திலெழுந்தன. அணி இலக்கண வளர்ச்சியில் ஒரு திருப்பக் கட்டமும், வெண்பா வளர்ச்சியும் கலம்பகத்தின் சிறப்பான வளர்ச்சியும் இக்காலத்தில் எழுந்தனவேயாகும்.

அ. தமிழ் இலக்கியங்கள்

தேவாரப் பாடல்கள்

பல்லவர் காலத் தமிழ் இலக்கியங்களில் பெரும் பகுதி சிவனிய, மாலியச் சமயநெறி இலக்கியங்களாகவே உள்ளன. சிவனியக் குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரப் பாடல்களில் பல்லவர் பற்றிய குறிப்புகள் உள்ளன. சமணத்தின் ஆதிக்கம் மக்களிடையே இருந்ததையும் தென்னகத்திலிருந்த பல்வேறு சமணப்பாழிகள் (மடங்கள்) பற்றியும் சமணத்தை அழித்து, சிவனியம் தழைக்க இக்குரவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி அறியவும் தேவாரப்பாடல்கள் உதவுகின்றன. குறிப்பாக அப்பர் பாடிய 4,5,6-ஆம் திருமுறைகளில் பல்லவர் காலத்துச் சமண சமயம் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்பெறுகின்றன.

இரண்டாம் இராசசிம்மன் காலத்தில் சுந்தரர் வாழ்ந்துள்ளார். அவர் தமது தேவாரத்தில் இவ்வரசனைக் "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமாள் காடவர் கோன்கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என்று புகழ்ந்துள்ளார். இராசசிம்மனைப் போலவே பல பல்லவ அரசர்களும் அதிகாரிகளும் சிவனிய, மாலிய

அடியார்களாயிருந்தனர். அப்பரும் சம்பந்தரும் இராச சிம்மனும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம காலத்தவரென்பதைத் தேவாரப்பாடல்களால் அறிய முடிகிறது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

திருமால் அடியார்களான பன்னிரு ஆழ்வார்களின் பக்திப்பாக்கள் நான்காயிரத்தைத் தொகுத்து 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்' என அழைத்தனர். அத்தொகுப்பிலும் பல்லவர்களைப் பற்றி அறிவதற்கான பல சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, திருமங்கை ஆழ்வார் கும்ப கோணத்தையடுத்த நந்திபுரம் என்னுமிடத்திலுள்ள நந்திபுர விண்ணகரம் (நாதன்கோயில்) எனும் திருமால் கோயிலைப் பற்றியும் அவ்வூரைப் பற்றியும் பாடியுள்ளார். நாதன் கோயில் கோட்டைமதில்களால் சூழப்பெற்ற காவல் கோட்டையெனப் புகழ்ந்துள்ளார். நந்திவர்ம பல்லவன் மேற்கொண்ட போர்களில் 'நென்மலி' எனுமிடத்தில் நடந்த போரைப்பற்றித் திருமங்கை ஆழ்வார்,

> "நெல்மலியில் வெருவிடச் செருவேல் வலக்கைப் பிடித்த
> படைத்திறல் பல்லவர் கோன்"

எனப் பாடியுள்ளார்.[2]

பல்லவ மன்னர்கள் சாளுக்கியரோடு போரிலீடுபட்ட போது, அவர்கள் கையாண்ட போர்க்கருவிகளைப் பற்றியும் இவ்வாழ்வார் குறிப்பிடுகிறார். இவர், பல்லவமன்னன் இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.730--795) காலத்தவராகலாம்.

நந்திக்கலம்பகம்

இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. இது மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.846-869) மீது பாடப்பட்ட பாடலாகும். இந்நூலில் இவ்வரசனுடைய போர்ச்

செயல்களைப் பற்றியும் மயிலை, கச்சி, கடல்மல்லை முதலிய நகரங்களைப் பற்றியும் இவன் தமிழ் மொழியின்மீது கொண்டிருந்த மீளாக்காதல் பற்றியும் பல்வேறு செய்திகள் அறியக்கிடக்கின்றன. இவனுக்கு முன் ஆண்ட தந்திவர்மன் (கி.பி.796-846) காலந்தொட்டே பாண்டியர்கள் பல்லவ நாட்டைக் கைப்பற்றப் படையெடுக்க முற்பட்டனர். இதனைத் தந்திவர்மன் தனது கல்வெட்டுகளிலும் குறிப்பிடு கிறான். மூன்றாம் நந்திவர்மன் பட்டத்திற்கு வந்ததும் படையெடுத்த பாண்டியரைத் தெள்ளாறு என்ற இடத்தில் படு தோல்வியடையச் செய்து ஓடச்செய்தான். இதனால்தான் நந்திக் கலம்பகத்தின் ஆசிரியர் இவனைத் 'தெள்ளா றெறிந்த நந்தி' என அழைக்கிறார். தெள்ளாறு, இன்றைய வந்தவாசி வட்டம், திருவண்ணாமலைச் சம்புவராயர் மாவட்டத் திலுள்ள ஊராகும். இப்போரில் இவனுடன் பொருதுவென்ற பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணப் பாண்டியனாக இருக்கலாம். இவன் கி.பி. 862 முதல் 855 வரை ஆண்டவன். பல்லவர் படை. வையையாற்றையும் தாண்டிச் சென்றதாக இந்நூல் கூறுகிறது. இதனால் இவன் மதுரையையும் கைப்பற் றினானோவென எண்ண வேண்டியுள்ளது. இவனுடைய தந்தையான நந்திவர்மனும் பழையாறு, வெள்ளாறு, நல்லாறு, குறுக்கோட்டை, கடம்பூர், வெளியலூர், தொண்டி முதலிய போர்க்களங்களிலும் வெற்றி பெற்றானென நந்திக்கலம்பகம் கூறுகிறது.

'சந்திர குலபிரகாசன்' என இந்நூல் இவனை விளம்புகிறது. இதனால் இவன் சந்திரகுலத்து அரசனாவா னென்பது தெளிவாகிறது. இவனுக்கு நந்திப் போத்தரையன், விக்கிரமவர்மன், குமாரமார்த்தாண்டன், அவனி நாராயணன், உக்கிரக்கோபன், சோநந்தி, விடேல்விடுகு, வரதுங்கன், மனோதயன், கொங்கன், சோணாடன் முதலிய பட்டப்பெயர்கள் உண்டென்பதையும் நந்திக்கலம்பகத்தில் காண்கிறோம்.

பெருவீரனான மூன்றாம் நந்திவர்மன் சிறந்த கடற்படையையும் கொண்டிருந்தானென்பதை இந்நூல் "ஆள் குலம் கடற்படை அவனி நாரணன்" - என்று விளிக்கிறது.[3] இக்கடற்படையால் இவன் கடல் கடந்து பல நாடுகளிலும் வெற்றிபெற்றதை "நாற் கடற்கு ஒரு நாயகன்"[4] எனவும் புகழ்கிறது. எனவே, இவன் காலத்தில் கடல்மல்லை ஒரு தலைசிறந்த வணிகத்தலமாக இருந்ததென்பதை அறிகிறோம். இதனைத் திருமங்கை ஆழ்வாரும் தமது பாசுரத்தில் கடல் மல்லையிலிருந்து ஏற்றுமதியான யானை, முத்து முதலியன பற்றியும் இறக்குமதியான பொருள்கள் பற்றியும் குறிப்பிடுவதாலும் அறியலாம்.

'நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்ற கூற்றால், கலம்பகத்தைக் கேட்டால் தனக்கு இறப்பு நேரிடுமென்பதை அறிந்திருந்தும் தமிழ் மீதிருந்த காதலால் இவன் அக்கலம்பகத்தைப் பாடக்கேட்டு உயிர் நீத்தானென்பது மரபுவழிச் செய்தியாகும்.

பாரத வெண்பா

இந்நூலை இயற்றியவர் பெருந்தேவனார். இவர் மூன்றாம் நந்திவர்மன் காலத்தவராவார். இந்நூல் பன்னிரண்டாயிரம் வெண்பாக்களைக் கொண்டது. ஆனால், இன்று நமக்கு எண்ணூறு பாடல்களே கிடைக்கின்றன. இந்நூலின் உத்தியோகப் பருவத்தில் மூன்றாம் நந்திவர்மன், தெள்ளாற்றுப் போரில் கண்ட வெற்றி பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

பெரியபுராணம்

மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் தலைமை அமைச்சரான சேக்கிழாரால் இயற்றப்பட்ட இந்நூல் சிவனிய நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுகிறது. பல்லவ மன்னர்களான முதலாம் பரமேசுவரவர்மன், இராசசிம்மன்

முதலிய அரசர்களையும் பல்லவரின் தானைத் தலைவராக விருந்து வாதாபி மீது படையெடுத்துப் புலிகேசியை வென்ற பரஞ்சோதியாரையும் பல்லவரின் கீழாண்ட சிற்றரசர் களான நரசிங்க முனையரையர், மெய்ப்பொருள் நாயனார் முதலியோரையும், இரண்டாம் இராசசிம்மன் காலத்தில் வாழ்ந்த பூசலார் நாயனாரையும் சேக்கிழார் சிவனிய அடியார்களாகப் பாடியுள்ளார். மகேந்திரவர்மன், பல்லவ மல்லன் ஆகியோரைப் பற்றியும் பாடியுள்ளார். பல்லவர் களின் ஒற்றைக் கல் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார். பல்லவ நாட்டின் பல்வேறு இடங்கள் பற்றிய குறிப்புகள் பெரியபுராணத்தில் காணப்பெறுகின்றன.

பெரியபுராணத்தில் சமணம் வலுப்பெற்றிருந்ததையும் மகேந்திரவர்மன் (குணபரன்) (கி.பி. 615-630) அப்பர் பெருமானுக்கு இழைத்த கொடுமைகளையும் கடைசியில் அவன் சமணத்தைத் துறந்து, சிவனியத்திற்கு மாறியதையும் காண்கிறோம். நரசிம்மவர்மனின் (கி.பி.630-668) தானைத் தலைவரான பரஞ்சோதியார் வாதாபி வென்றதின் விரைத்தையும் பெரியபுராணம் விரிவாகக் கூறுகிறது. பல்லவரின் சிற்றரசர்கள் பட்டியலைக் கூறுகின்ற பெரியபுராணச் செய்தியால் பல்லவமன்னர்கள் பெருநில மன்னர்களாக இருந்ததை அறிகிறோம். சோழர் வலுக்குன்றிக் குறுநில மன்னர்களாகிப் பல்லவருக்குட்பட்டு ஆண்டதையும் பாண்டியர், பல்லவரையும் களப்பிரரையும் சிறிது, சிறிதாக வென்று பேரரசையேற்படுத்திக் கொண்டதையும், பல்லவர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் பெரியபுராணத்தாலறியலாம். எனவேதான், வரலாற்றறிஞர்கள் இந்நூலை இறையருள் பேசும் வரலாற்று நூல் என்கின்றனர்.

நாலடியார்

சமண முனிவர் நானூறு பேர் தலைக்கொன்றாக இயற்றிய நான்கு அடிகளைக் கொண்ட நானூறு வெண்பாக்களையுடைய இந்நூல், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததென அறிகிறோம். இந்நூலின் நயம், பொருள் முதலியவற்றைக் கொண்டு பல்லவர் காலத் தமிழகத்தை ஒருவாறு உய்த்துணர முடிகிறது. இந்நூலை இயற்றிய சமணமுனிவர்களை ஆதரித்த முத்தரையர்கள் பல்லவரின் கீழிருந்து ஆண்ட குறு நிலத் தலைவர்களாவர். தண்டிவர்ம பல்லவனின் கீழிருந்த பல முத்தரையர்கள் இச் சமண முனிவர்களை ஆதரித்தனரென்பதையும் அறிகிறோம்.

ஆ. வடமொழி இலக்கியங்கள்

லோகவிபாகம்

இந்நூலை இயற்றியவர் சர்வநந்தியெனும் ஒரு சமணமுனிவராவார். இவர் திக்குகளையே ஆடையாக அணியும் திகம்பரச் சமணப்பிரிவைச் சேர்ந்தவர். இவர் பாணராட்டிரத்திலுள்ள பாடலியில் பிறந்தவரெனவும் சிம்மவர்மப் பல்லவன் காலத்தவரெனவும் கூறுகின்றனர். 'பாடலி' என்ற ஊர் இன்று தென்னார்க்காடு மாவட்டத் திலுள்ள திருப்பாதிரிப் புலியூரேயாகுமென்றும் அவ்வூர் பல்லவர் காலத்தில் சிறந்த சமணசமய இடமாகத் திகழ்ந்த தென்றும் கூறுவர். இந்நூலை, அவர் சிம்மவர்மப் பல்லவன் ஆட்சிக்கு வந்த இருபதாவது ஆட்சியாண்டில் சகம் 380-இல் எழுதினாரென்றும் கூறுவர். எனவே இந்நூல் கி.பி. 458-இல் (380 + 78 = 458) எழுதப்பெற்றதென அறிகிறோம். ஆகவே, சிம்மவர்மப் பல்லவன் அரியணையேறிய ஆண்டு கி.பி. 438 (458-20 = 438) ஆகலாமெனவும் அறிகிறோம். இந்நூல் நமக்குச் சமணத்தின் செழிப்பையும் சமயங்களின் குழப்பத்தையும் தருவதால் இக்காலப் பிற சமய நிலைகளை அறிவதற்கும் சான்றாக உதவுகின்றது.

அவந்தி சுந்தரி கதை

பாரவியென்னும் வடமொழி அறிஞர் இந்நூலை யாத்துள்ளார். அவந்தி சுந்தரியின் கதையைக் கூறும் இந்நூலின் முகவுரையில் இந்நூலாசிரியர் கூறும் குறிப்புகளிலிருந்து தாழைக்காட்டு மேலைக் கங்கமன்னன் துர்விநீதன் (கி.பி.540-604) பல்லவ அரசனான சிம்மவிட்டுணு (கி.பி.575-600) கீழைச் சாளுக்கிய மன்னன் விட்டுணு வர்த்தனன் (கி.பி.615-633) ஆகிய மூவரும் சமகாலத்தவரென அறிகிறோம்.

மத்த விலாசப் பிரகசனம்

இந்நூலை இயற்றியவன் மகேந்திரவர்மன் (கி.பி. 615-630). இஃதோர் நாடக நூல். புத்த சமயத் துறவிகள், சமணமுனிவர்கள், சிவனியத்திலுள்ள கபாலிகர், பாசுபதம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கை நெறிகளைக் கேலி செய்வதுபோல் இந்நாடகத்தில் பாத்திரங்களமைக்கப் பெற்றுள்ளன. இக் காலச் சமய நெறிகளை அறிய இந்நூல் உதவுகிறது. மகேந்திரவர்மன் அப்பர் காலத்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

அயலகச் சான்றுகள்

யுவான் சுவாங் (600-64)

"மேலை நாடுகளின் ஆவணங்கள்" (Records of the Western World) எனப் பொருள்படும் சி-யூ-கி என்ற சீனமொழி நூல் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல், சமய நிலைமைகளைப் பற்றி அறிய உதவுகிறது. இதனை இயற்றியவர் யுவான் சுவாங் (கியூன்-சிங்) எனும் சீனப் பயணி ஆவார். இந்தியாவுக்கு வந்த சீனப் பயணிகளில் இவரே தலை சிறந்தவர். எனவே, இவரைப் பயணிகளில் 'இளவரசன்' என்றும் 'புத்தசமயச் சட்டத்தின் தந்தை' என்றும் 'ஏழாம் நூற்றாண்டின் சாக்கிய முனிவர்'

என்றும் அழைப்பர். 'நிலாஉலகை'க் காணவேண்டுமென்றும் பகவான் புத்தரின் புனிதவிடங்களைத் தரிசிக்க வேண்டு மென்றும் ஆவல் கொண்டு இந்தியாவுக்கு வந்தவர்.

யுவான் சுவாங் கி.பி.600-இல் சீனாவில் பிறந்தார். துறவு பூண்டு புத்த பிக்குவான இவர் கடவுச் சீட்டு இல்லாமல் கி.பி. 629-இல் இந்தியாவுக்கு வந்தார். ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் இந்தியாவில் தங்கி, அர்ச வர்த்தனர் நாட்டில் எட்டு ஆண்டுகளைக் கழித்தார். அதில் இரண்டாண்டுகள் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் மாணவராகவுமிருந்தார். மேலைச் சாளுக்கியர் நாட்டைப் பார்த்து விட்டு, ஏறத்தாழ கி.பி. 642-இல் பல்லவரின் தலைநகரான காஞ்சிக்கு வந்தார். ஒரளவு இந்தியாவின் முதன்மை நகரங்களைச் சுற்றிப் பார்த்த யுவான்-சுவாங் காஞ்சிபுரத்தைப் பற்றி மிகவும் பெருமையாகக் கூறியுள்ளது நோக்கத்தக்கதாகும்.

அர்சவர்த்தனர் கி.பி.644-இல் தமது சிற்றரசன் உதித்தன் என்பவனைத் துணைக்கு அனுப்பி இவரை இந்தியாவைத் தாண்டி வழியனுப்பினார். பாமீர், கோட்டான் பகுதிகளைத் தாண்டி கி.பி.645-இல் சீனாவை அடைந்த யுவான்-சுவாங் தம்முடன் கொண்டுசென்ற 150-க்கும் மேற்பட்ட புத்தரின் சமயச் சின்னங்களையும் 657 புத்தரின் உருவப் படிமங்களையும் எண்ணிறந்த புத்த சமய மூல நூல்களையும் அடிப்படைச் சான்றுகளாகக் கொண்டுதான் சி-யூ-கி என்னும் தமது பயண நூலை எழுதினார். காமரூபம், கன்னோசி, காஞ்சி, காசுமீரம், கபிலவசுத்து, காசி, கயை, குசி நகரம் முதலிய இந்திய நகரங்களைக் கண்ட இவர், இந்நூலில் பல்லவ நாட்டுக் கோநகரைப் பற்றியும் அந்நாட்டில் நிலவிய சமயங்கள், பண்பாடுகள் மக்களின் மனவளம் முதலியன பற்றியும் கூறும் போது, அவர் மிகத்தெளிவாக, ஐயம், திரிபு, மயக்கமில்லாமல் அறிந்த உண்மைகளையே கூறுகிறாரென அறியலாம். இவருடைய கூற்றுகளை, நம்முடைய நூல்களும் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் மெய்ப்பிக்கின்றன. காஞ்சி

நகரத்திலுள்ள கோயில்கள், பௌத்த மடாலயங்கள், மக்களின் பண்பாடு, ஆற்றல்கள் முதலியவைகளைப் பற்றிய இலக்கிய குறிப்புகள் இவர்தம் நூலில் காணப்படுகின்றன.[5]

II பாண்டியர்

அகழாய்வுச் சான்றுகள்

இக்கால வரலாற்றை எழுதுவதற்குத் துணைபுரியும் சான்றுகளைத் தரும் அகழாய்வுகள் மிகச் சிலவே. கொற்கை, மதுரை போன்ற இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதிக்குட்பட்ட அகழாய்வுத் தடயங்கள் இவ்விடங்களில் கிடைத்தில. கொற்கையில் நடைபெற்ற அகழாய்வில் இக்காலத்தைச் சார்ந்ததென ஐயுறும் வண்ணம் சில சிவப்பு நிறப் பானை ஓடுகள் கிடைத்துள்ளதைக் குறிப்பிடலாம். ஆயினும், இவை பற்றிய முழுமையான செய்திகளை அறிய இயலவில்லை.

இக்காலத் தடயங்கள், உக்கிரன்கோட்டை (திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டம்) என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்துள்ளன.[6] பாண்டிய மன்னர்களின் முக்கிய அமைச்சராகத் திகழ்ந்த மாறன் காரியின் சொந்த ஊர் இது. இவ்வூரைக் களக்குடி என்று கல்வெட்டுகள் குறிக்கும். நடுவண் தொல்லியல்துறை இவ்விடத்தை அகழ்ந்து பல பொருள்களை வெளிக் கொணர்ந்துள்ளது. பழையகோட்டை மதிலின் சிதைவுகள், கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டடங்களின் அடித்தளங்கள் பலவும் இவ்வகழ்வாய்வின் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளன. பெரிய செங்கற்களைக் கொண்டு மதிற் சுவரும் மற்ற கட்டடங்களும் கட்டப்பட்டன எனத் தெரிகிறது. மக்கள் பயன்படுத்திய பல பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்களும் சிற்பங்களும் இக்கால வரலாற்றின் சில தன்மைகளைத் தெளிவாக அறியத் துணைபுரிகின்றன. பாண்டியர்கள் மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருச்சி (மலையடிவாரக் குடைவரைக் கோயில்) ஆகிய இடங்களில் குடைவரைகளை அமைத்துள்ளனர். இவற்றின் அமைப்பைக் கொண்டு அக்காலப் பாண்டியப் பகுதியில் நிலவி வந்த குடைவரைக் கோயில் கலையைத் தெற்றென அறிய முடிகிறது. கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும் இக்காலத்தைச் சார்ந்தது. இது மலையை வெட்டி அமைக்கப்பட்ட கோயிலாகும்.

கட்டுமானக் கோயில்களும் இக்கால வரலாறு எழுதுவதற்குத் துணைபுரியும் சான்றுகள் ஆகும். இக் கோயில்கள் உக்கிரன்கோட்டை, திருவாலீசுவரம், சீவலப் பேரி, உத்தரகோசமங்கை, சின்னமனூர் ஆகிய இடங்களில் உள்ளன. குடைவரைக் கோயில்களிலும் கட்டுமானக் கோயில்களிலும் புடைப்புச் சிற்பங்கள் பல உள்ளன. இவைகளைக் கொண்டு அக்கால மக்களின் சமய ஒழுங்கு, ஆடை, அணிகலன்கள் போன்றவற்றை நன்கு அறியலாம். முக்கியமாகத் திருப்பரங்குன்றம் குடைவரையில் உள்ள கொற்றவை, கார்த்திகேயர் புடைப்பு உருவங்கள் அக்காலச் சிற்பிகளின் தனித்திறமையை வெளிப்படுத்துகின்றன. திருச்சிராப்பள்ளி மலையடிவாரக் குடைவரையில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் அக்கால மக்களின் சமய ஒழுங்கினையும் கடவுள் உருவங்களையும் தெரிந்து கொள்ளச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இக்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்த சில ஓவியங்களும் வரலாறு எழுதுவதற்குத் தக்க சான்றுகளாகத் திகழ்கின்றன. சித்தன்னவாயிலில் உள்ள சமணக் குடை வரைக் கோயிலினுள் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் அக்காலச் சமண சமயத்தின் சில தன்மைகளை விளக்கி

நிற்கின்றன. பாண்டியன் சிரீமாற சிரீவல்லபன் காலத்தில் சமண முனிவரான இளங்கௌதமன் என்பாரது முயற்சியால் இவ்வோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ் ஓவியங்களைத் தீட்டும் முறை சிறப்பான பிரஸ்கோ (Fresco) வகையைச் சார்ந்தது. வண்ணக் கலவைகளைப் பயன்படுத்தும் முறை, அரசன், அரசியின் ஆடை ஆபரணங்கள் ஆகியனவற்றையும் இவ் ஓவியங்களிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம். ஆனைமலையிலும் இக்கால ஓவியங்களின் எச்சங்கள் சிலவற்றைக் காணலாம்.

பாண்டியரின் நாணயங்கள்

இக்காலப் பாண்டியரின் நாணயங்கள் அதிகம் கிடைத்தில. பொன், செம்பு ஆகிய மாழைகளில் காசுகள் வார்க்கப்பட்டுள்ளன. இக்காசுகள் பாண்டிய நாட்டில் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. குறிப்பாக மதுரை, கொற்கை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இரண்டாம் வரகுணனின் பொற்காசுகள் சிலவற்றில் இரட்டை மீனின் உருவமும் 'ஸ்ரீவரகுண' என்ற பெயரும் பொறிக்கப் பட்டுள்ளன. செப்புக் காசுகளில் 'ஸ்ரீஅவனிய சேகரன்' என்றும் இரட்டைமீன் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகளைக் கொண்டு அக்கால நாணய முறையைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ள இயலும்.

இலக்கியங்கள்

(அ) தமிழ் இலக்கியங்கள்

சங்க இலக்கியங்கள் பல சங்க காலப் பாண்டியரைப் பற்றியறிய முதன்மைச் சான்றுகளாகின்றன. சங்க காலத்திற்குப்பின் பாண்டிய நாட்டைக் களப்பிரர்கள் ஆண்டனர். அவர்களிடமிருந்து பாண்டிய நாட்டை மீண்டும் கைப்பற்றி ஆளத் தொடங்கிய கடுங்கோன் (கி.பி.575-600) காலம் முதல் விசயநகர மன்னர் ஆட்சி தமிழகத்திலேற்பட்ட

காலம் வரையில், முதற் பாண்டியப் பேரரசு (கி.பி. 575-920) என்றும் கி.பி. 1190-முதல் 1310 வரையில் நிலவியதை இரண்டாம் பாண்டியப் பேரரசு என்றும் பிந்தியதைப் பிற்காலப் பாண்டியராட்சி என்றும் அழைக்கிறோம். இதற்குப் பின்னர் விசயநகர ஆட்சி ஏற்பட்டது. பின்னர் நாயக்கர்கள் ஆண்டனர். இடையிடையே பாண்டிய நாட்டில் சோழராட்சியும் சுல்தான்கள் ஆட்சியும் பிறவும் ஏற்பட்டன. ஆயினும், இவர்களின் அறுபட்ட, ஆனால் நீண்ட ஆட்சிக் காலத்தை அறிவதற்கான அடிப்படைச் சான்றுகளாகவுள்ள தமிழ் இலக்கியங்களை ஈண்டு பார்ப்போம்.

இறையியல் இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் ஆகியவை நமக்குப் பாண்டியரைப் பற்றியறிய மிகவும் உதவுகின்றன. முதற் பாண்டியப் பேரரசு காலத்தில் தமிழகத்தில் நிலவிய சமயங்களில் சமணம் (ஆருகதம்) புத்தம் (சாக்கியம்) சிவனியம் (சைவம்) ஆகிய மூன்றும் முதன்மையானவையாகும். மாலியமும் (வைணவம்) இக்காலத்தில் திளைத்திருந்தது. இறைநெறி இயக்கம் மும்முரமடைந்த இக்காலத்தில் மேற்கூறிய இறையியல் இலக்கியங்கள் சிறப்பாகப் போற்றப்பட்டன. இதன் விளைவாகச் சமணமும் புத்தமும் தமிழகத்தை விட்டகன்றன.

தேவாரம்

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் பாடல்களின் தொகுப்பே தேவாரமாகும். அப்பர், சம்பந்தர், பாண்டியன் நெல்வேலி வென்ற நெடுமாறன் ஆகியோர் சமகாலத்தவராவர். பதினாறு ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்த சம்பந்தர் அகவையில் மூத்தவரான திருநாவுக்கரசரை 'அப்பரே' யென அழைத்ததால்தான் அவரை அப்பர் என்று சிறப்பாக அழைத்தனர். அப்பர், எண்பது ஆண்டுகள் வாழ்ந்தார். இதனால் பல்லவ, பாண்டிய, சோழ வேந்தர்கள் பலர் அவருடைய சமகாலத்தவராகவுள்ளனர். அப்பரின்

நீண்டகால ஓயாத சமயப் பணியால் தமிழகமெங்கிலும் சிவனடியார்கள் தோன்றினர். சிவனியம் மக்களிடையே புகழோடு பரவியது. முதலில் சமணராகவும் திருப்பாதிரிப் புலியூரிலிருந்த சமணமடத்தின் தலைவராகவுமிருந்த 'தருமசேனர்', சிவனடியாராகி 'அப்பரானார்'. அப்பரான பின் தமது சமண மடத்தையே அழித்தார். சமணனாகவிருந்த பல்லவன் மகேந்திரவர்மனையும் சிவனடியாராக்கினார். இவ்வாறே, தமிழகமெங்கிலும் பல சிவனடியார்களைத் தோற்றுவித்துச் சிவனியம் தழைக்கச் செய்தார். அவர்களுள் பாண்டியன் நெல்வேலிவென்ற நெடுமாறனும் அவருடைய மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் குறிப்பிடத்தக்கவர். இதற்குப்பின், பாண்டியன் 'நெடுமாற நாயனார்' எனும் சிறந்த சிவனடியாரானார்.

அப்பரைப் போலவே, திருஞானசம்பந்தரும் கூன் பாண்டியனான நெடுமாறனைச் சமணத்திலிருந்து சிவனியத் திற்கு மாற்றினார். பதினாறு ஆண்டுகளே வாழ்ந்த சம்பந்தர் பதினாறாயிரம் பாடல்களைப் பாடியுள்ளார். தமிழகத் திலிருந்து சமணம் மறைந்து, சிவனியம் செழித்ததற்கு இவரே மூலமாவார்.

திருநாவலூரில் அந்தணர் குடும்பத்தில் பிறந்த சுந்தரர், வேற்றுக்குல மாதர்களை மணந்து சாதிக் கட்டுப்பாட்டை உடைத்தவர். அற்புதங்கள் பல புரிந்த இவரும் பாண்டியர் காலத்தவரே. கொடுங்கானூரை ஆண்ட சேரமான் பெருமாள் நாயனாருடன் இணைந்து சேர, சோழ, பாண்டிய நாடுகளிலெல்லாம் சிவனியத்தை வளர்த்தவர்.

திருவாசகம், திருக்கோவையார்

இவற்றின் ஆசிரியர் திருவாதவூரிலே பிறந்த மாணிக்க வாசகராவார். இந்நூலில் பா்ண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன் (கி.பி.862-885) குறிப்பிடப்படுகிறார். பாண்டியரின் அமைச்சராயிருந்த மாணிக்கவாசகரே

சிவனடியாராகி இவ்விரு நூல்களையும் யாத்துள்ளார். வரகுணன், பல்லவ மன்னன் அபராசிதனிடம் கி.பி.885-இல் தோற்ற பின் உலகியலை வெறுத்து ஆன்மீகத் துறைக்குச் சென்று, தலை சிறந்த சிவனடியாரானாரென்று அறிகிறோம். அவருடைய சிவநேயத்தை மாணிக்கவாசகர் தமது திருச்சிற்றம்பலக் கோவையாரில்,

"வரகுணனாந் தென்னவனேத்து
சிற்றம்பலத்தான்"

என்று பாராட்டியுள்ளார்.

பெரியபுராணம்

இதன் ஆசிரியரான சேக்கிழார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அறுபத்து மூன்று சிவனிய நாயன்மார்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைக் கூறும் இந்நூலில், சம்பந்தர் குறிப்பிடும் ஒன்பது நாயன் மார்களையும் சேர்த்து எழுபத்து இரண்டு சிவனடியாரின் வாழ்க்கைக் குறிப்புகளைக் காணலாம். இஃது, புராணமென்று அழைக்கப்பட்டாலும் தொல் கதைகளைக் கூறும் நூலாக இல்லாமல் வரலாற்றுச் சம்பவங்களையே கூறுகிறது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய சிவனடி யார்களின் வாழ்க்கை நெறிகளைக் கூறும் இந்நூல் ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகாலத் தமிழக வரலாற்றை அறிய சில அரிய சான்றுகளைத் தருகிறது. சேர, சோழ, பாண்டியரோடு பல்லவர் கால மன்னர்கள், தானைத் தலைவர்கள், மற்றும் பல சிவனடியார்களின் ஒருமித்த இறைநெறி இயக்கத்தைப் பற்றி அறிய உதவும் இந்நூலில் பல்வேறு குலங்களைச் சேர்ந்தோரும் இறைநெறியில் இணைந்து நிற்பதைக் காண்கிறோம். பாண்டிய நாட்டின் சிவன் கோயில்கள், மன்னர்களின் சிவத்தொண்டுகள் முதலியனவும் இந்நூலில் காணப்படுகின்றன. பாண்டியநாடு களப்பிரர் ஆட்சியில் கண்ட கொடுமைகளைப் பற்றியும் இந்நூலில் காணலாம்.

திருவிளையாடல் புராணம்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலெழுதப்பெற்ற இந்நூலின் ஆசிரியர் பெரும் பற்றப்புலியூர் நம்பியென்பவராவார். இந்நூலில் மதுரையைப் பற்றிய பல தொல்கதைகளைக் காண்பதோடு, ஆங்காங்கே வரலாற்றுக் குறிப்புகளையும் காண்கிறோம். பாண்டிய நாட்டில் சமணம் தழைத் திருந்ததையும் அதனைச் சாய்க்கச் சிவனியம் முற்பட்டதையும் தொல்கதை போல் இந்நூல் கூறுகிறது. சமணர்கள் சிவபெருமானைக் கொல்ல மதுரை மீது யானையை ஏவியதாகவும் அவ்யானையைச் சிவபெருமான் அரிமாமுக அம்பை எய்தி மலையாகச் சமைத்தாரென்றும் அதுவே ஆனைமலையாக உள்ளதென்றும் இந்நூல் கூறுகிறது. இந்நூலை வரலாற்றுச் சார்பு நூலெனவே கூறலாம். தள்ளுவனதள்ளி, கொள்ளுவன கொண்டால் இஃதொரு வரலாற்று நூலே எனலாம். இன்றும் சமண முனிவர்கள் வாழ்ந்த கற்பலகைக் குகைகள் அம்மலையிலிருக்கக் காணலாம். பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனின் அமைச்சரால் எடுப்பிக்கப்பட்ட நரசிங்கப் பெருமாள் குடைவரைக்கோயில் இம்மலையிலுள்ளது.

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்

நான்காயிரம் பாடல்களைக் கொண்ட இந்த மாலிய அருள் தொகுப்பு, மாலியம் பெற்ற பெருமையைக் கூறுகிறது. சமணத்தைச் சாய்த்த சிவனியம், மாலிய மறுமலர்ச்சியோடும் மோதியதென்பதை இந்நூலில் காண்கிறோம். மாலிய இறையியல் பாக்களைப் பாடியவர்களை ஆழ்வார்கள் என்கிறோம். அவர்கள் பன்னிருவராவர். அவர்களில் பெரியாழ்வாரும் அவருடைய மகள் ஆண்டாள் நாச்சியாரும் பாண்டிய நாட்டில் திருவில்லிப்புத்தூரில் தோன்றியவர்கள். இவர்கள் பாண்டிய மன்னன் சிரீமாறன் சிரீவல்லன் (கி.பி. 815-862) காலத்தவர். பெரியாழ்வாரை இம்மன்னன் தன் அவையிலமர்த்திப் போற்றிக் காத்தானென்பதை இந்நூலில்

காண்கிறோம். ஆழ்வார்களுள் முக்கியமானவராகப் போற்றப்படும் நம்மாழ்வாரும் அவரது சீடரான மதுரகவியும் பாண்டிய நாட்டில் அவதரித்தவர்கள். மதுரகவி ஆழ்வார், பாண்டியர் அவைக்களத்தில் அமைச்சராக இருந்தவர்.

பன்னிரண்டு ஆழ்வார்களும் கி.பி. 500-க்கும், கி.பி. 800-க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் சாதிவேற்றுமை, தீண்டாமை ஆகிய கொடுமைகளை எதிர்த்து முடுக்கமாகப் போரிட்டவர்கள். இவர்களது பாடல்களில் பாண்டிய நாட்டுச் சமயம், கோயில்கள், சமுதாயம் போன்ற வற்றைப் பற்றி நல்ல பல குறிப்புகள் காணப்படுகின்றன.

பாண்டிக்கோவை

களவியல் காரிகையில் 'களவியல் உரை' மேற்கோள்கள் காட்டப்பட்டிருந்ததையுணர்ந்த திரு. வையாபுரிப் பிள்ளை யவர்கள், இப்பாடல்கள் யாவும் 'பாண்டிக்கோவை' யெனும் நூலிலிருந்தே எடுக்கப்பட்டதையறிந்தார். "இறையனார் களவியல் உரை'' எனும் நூலில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள பாடல்களும் 'பாண்டிக்கோவை'யெனும் நூலிலிருந்தே எடுக்கப்பட்டவையென்பதும் தெரிந்ததே. இதன் பின்னர் களவியல் உரை, காரிகையுரை, இளம்பூரணர் உரை, யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரை முதலிய நூல்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள பாடல்களைத் தொகுக்கும்போது தான் அவை யாவும் 'பாண்டிக் கோவை' யெனும் நூலிலிருந்தே எடுக்கப்பட்டவை யென்பது தெளிவாயிற்று. இன்று இப்பாண்டிக்கோவை முழுவதுமாகக் கிடைக்காவிட்டாலும் இந்நூல்களிலுள்ள மேற்கோள் பாடல்களைத் தொகுத்தறியலாம்.

பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற, மதுரையில் ஆட்சி புரிந்த மாறவர்மன் அரிகேசரியாகிய இவனுக்கு (கி.பி. 642-700) பராங்குசன், நெல்வேலி வென்ற நெடுமாறன் முதலிய பட்டப் பெயர்களுண்டென்பதை

இந்நூலில் காண்கிறோம். ஒவ்வொரு பாடலும் குறைந்தது ஒரு வரலாற்றுக் குறிப்பையாவது குறிப்பிட்டுச் செல்லுகிறது.

பாண்டிக் கோவையில் ஆற்றுக்குடி, கடையல், களத்தூர், இளந்தை, கோட்டாறு, சங்க மங்கை, செந்நிலம், சேவூர், நடையாறு, நெடுங்களம், நெல்வேலி, பாழி, பூலந்தை, வல்லம், விழிஞம் முதலிய போர்க்களங்களில் நெடுமாறனாற்றிய வீரச் செயல்கள் பற்றியும் கூறப்படுகிறது.[7] இவை கல்வெட்டுச் சான்றுகளுடன் ஒத்து வரும் உண்மைகளாகின்றன.

இந்நூல்களைத் தவிர, பட்டினத்தாரின் திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, நம்பியாண்டார் நம்பியின் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களிலும் பாண்டியர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இலங்கை வரலாற்று நூல்கள்

இலங்கை வரலாற்று நூலான மகாவமிசம், தீபவமிசம் போன்ற நூல்களும் பாண்டியரின் வரலாற்றைப் பற்றிய பல அரிய செய்தியினைக் குறிப்பிடுகின்றன. இந்நூல்கள் ஈழபாண்டிய உறவு பற்றியும் ஈழ, பாண்டிய போர்களைப் பற்றியும் கூறுவதோடு சில பாண்டிய வேந்தர்களது ஆட்சிக் காலத்தைக் கணிப்பதற்கும் உற்ற துணையாக உள்ளன.

அடிக்குறிப்புகள்

1. K.V. Raman, Archaeological Excavation in Kanchipuram, Tamil Civilization Vol.5, pp. 61-72
2. பெரிய திருமொழி: வி. 10;9,-8;11-9
3. நந்திக்கலம்பகம்-பாடல்-18.
4. மேற்படி நூல்-பாடல்-26.
5. R. Gopalan, History of Pallavas of Kanchi.
6. கே.வி. இராமன், தொல்லியல் ஆய்வுகள் பக்.100..
7. மு.அருணாசலம் "தமிழ் இலக்கிய வரலாறு-புலவர் வரலாறு"(பத்தாம் நூற்றாண்டு) பக். 278, காந்தி வித்தியாலயம், திருச்சி 1972.

இயல் இரண்டு

களப்பிரர்

தமிழக வரலாற்றில் ஏறத்தாழ கி.பி. 250 முதல் கி.பி. 575 வரையில் உள்ள காலத்தின் வரலாறு ஓர் இருண்ட காலமாகக் கருதப்பெற்றது. இக்காலத்தில் கடைச்சங்கம் முடிவுற்று, மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களுடைய வரலாறும் அவர்களுக்கடங்கிய குறுநில மன்னர்களுடைய வரலாறும் தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டின் மீது களப்பிரர் என்ற இனத்தவர் படையெடுத்துக் கொங்குநாடு, தொண்டைநாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகிய தமிழ் மாநிலங்களைக் கைப்பற்றி ஆட்சி புரிந்ததாகும். இக்களப்பிரர் என்பவர் யாவர்? அவர்கள் எங்கிருந்து வந்தனர்? ஏன் வந்தனர்? அவர்களுடைய படையெடுப்பால் தமிழ் நாட்டின் வரலாற்றிலும் தமிழர்களுடைய வாழ்க்கையிலும் தோன்றிய விளைவுகள் எவை? என்பதைப் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

களப்பிரர்களுடைய இனம், அவர்கள் ஆதியில் வசித்த இடம் முதலியவற்றைப் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. க.ப. அறவாணன்[1] என்பாரும் பி.ஜி.எல். சுவாமி[2] என்பாரும் தாங்கள் எழுதிய நூல்களில் களப்பிரர்கள் வேற்று நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தவர்கள் அல்லர் என்றும் அவர்கள் இந்து சமயத்தைப் பின்பற்றியவர்கள் என்றும் கூறுவதோடு, தமிழ் நாட்டில் வழங்கிய ஆரியப் பிராமண மக்களின் கொள்கைகளையும் வேத வழிபாட்டையும் அடக்குவதைத் தங்களுடைய முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும் கூறுவர்.[3] களப்பிரர் என்ற சொல்லும் பல்லவர் என்ற சொல்லும் சங்க இலக்கியங்களில் காணப்பெறவில்லை. கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிந்திய பாண்டிய பல்லவச்

செப்பேடுகளில்தான் களப்பிரர், களப்பாழர் என்ற பெயர்கள் காணப் பெறுகின்றன. கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பல்லவ மன்னனாகிய சிம்மவிட்டுணுவும் அவனுக்குப் பின் வந்தோரும் பாண்டிய மன்னனாகிய கடுங்கோனும் அவனுக்குப் பின் வந்த பாண்டியர்களும் களப்பிரர்களைத் தோற்கடித்து வெற்றி கொண்டதாகத் தங்களுடைய செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் கூறுகின்றனர். சங்க நூல்கள் களப்பிரரைப் பற்றிக் கூறவில்லை என்பதும் கி.பி. 505 முதல் 587 வரை வாழ்ந்த வான நூலறிஞர் வராகமிகிரரும் களப்பிரரைப் பற்றிக் கூறவில்லை என்பதும் களப்பிரர்கள் சங்க காலத்திற்கும் வராகமிகிரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் மேன்மையுற்ற குடியினர் என்பதும் போதரும். சங்க காலத்திய மூவேந்தர் களுடைய வரலாற்றிலும் அக்காலத்தில் தோன்றிய இலக் கியங்களிலும் களப்பிரர்கள் என்ற பெயர் காணப்படவே இல்லை. பாண்டிய, பல்லவச் செப்பேடுகளில் களப்பிரர் என்ற பெயர் பிராகிருத (கிரந்த) மொழி எழுத்துகளில் எழுதப் பெற்றுள்ளது. களப்பிரர்களுடைய மொழியில் பிராகிருதம் அல்லது பாலி மொழியோடு கன்னடச் சொற்களும் கலந்துள்ளது. அவர்கள் கைப்பற்றிய சில பகுதிகளில் சமண சமயத்தையும் மற்ற இடங்களில் பௌத்த சமயத்தையும் மேற்கொண்டுள்ளனர். மொழி, சமயம் ஆகியவற்றின் தன்மைகளை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் வேற்று நாட்டிலிருந்து தமிழ் நாட்டில் குடியேறியவர்கள் என்பது தெளிவாகிறது. வேள்விக்குடிச் செப்பேடுகளிலிருந்து கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் கி.பி. 575-ஆம் ஆண்டில் களப்பிரர்களுடைய ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வந்தான் என்பதை நாம் அறியமுடிகிறது.[4] பாண்டிய நாட்டின் வரலாற்றில் கி.பி. 250-ஆம் ஆண்டிற்குப் பிறகு பாண்டியர்களிடமிருந்து மதுரை நகரத்தைக் கைப்பற்றிய பிறகு ஏறக்குறைய கி.பி. 575-ஆம் ஆண்டு வரையில் களப்பிரர்கள் ஆண்டனர் எனக் கொள்ளலாம்.

களப்பிரர்கள் யார்

களப்பிரர்கள் தமிழர்கள் அல்லர் என்பதும் அவர்களுடைய சமயங்கள் சமணமும் பௌத்தமும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. களப்பிரர்கள் தாழைக்காட்டுக் கங்க இனத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது மைசூர்ப் பகுதிக்குச் சங்க காலத்தில் வழங்கிய எருமையூர் என்னும் இடத்தைச் சேர்ந்தவர்களா? என்று ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் கங்கர்கள் அல்லர் என்பதும் எருமையூர் நாட்டிற்கும் அவர்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதும் புலனாகின்றன. களப்பிரர்கள் கலியரசர் என்று செப்பேடுகளில் கூறப்பெறுவதால் அவர்கள் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் கொப்பாரம் செப்பேடுகளில் கூறப்பெற்றுள்ள கலிக்குலம் என்ற குலத்தைச் சேர்ந்தவராகலாம் என்று திரு. கே.ஆர். வேங்கடராமய்யர் கூறுகிறார்.[5] கலியப்தம் அல்லது கலியாண்டு என்ற காலவரையறை தென்னிந்தியாவில் வழங்கியுள்ளது. சிராவணப் பெல்கோலாவில் காணப்பெறும் கோமதீசுவரர் சிலை கலியாண்டு கி.பி.983-இல் அமைக்கப் பெற்றதென்றும் அக்கலியாண்டு கி.பி. 383-இல் தொடங்கியது என்றும் கூறுவர். கன்னட நாட்டில் கலிதேவ வணக்கம் என்ற சமயக் கொள்கை கி.பி. பதினோறாம் நூற்றாண்டு வரையில் நிலவியது. அவ்வணக்கத்தைப் பின்பற்றியவர் எல்லோரும் சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள். மேற்கூறப்பெற்ற காரணங்களால் வேள்விக்குடிச் செப்பேட்டில் கூறப்பெற்ற கலியரசன் என்னும் சொற்றொடர் களப்பிரருடைய கலிக்குலத்தைக் குறிக்கும் என்பர்[6].

ஆனால், இக்கூற்று வரலாற்றறிஞர்களால் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. அச்சுத விக்கந்தன் என்னும் களப்பிர குலத்து அரசனைப் பற்றிக் கூறும் புத்த தத்தர், அவ்வரசன் களப்பக் குலத்தைச் சேர்ந்தவன் என்றே கூறுகிறார். "களப்பிரர் என்னும் சொல் பாலி மொழியில் களப்பா

என்றாகிக் களப்பகுலம் என்று மாறுவதால், கலிக்குலம் என்ற தனிப்பட்ட குலம் ஒன்றைக் களப்பிரருக்குக் கற்பிக்க வேண்டுவதில்லை.'' என திரு. மு. அருணாசலம் கூறுவர்[7]. தளவாய்ப்புரம் செப்பேடுகளில் 'களப்பாளர் குலம் களைந்தும்' எனக் கூறப்பெறுவதால், களப்பாளர் அல்லது களப்பிரர் ஒரு தனிக் குலம் என்பது பெறப்படும். ஆகையால், இவர்கள் கலிக்குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். கலியரசன் என்னும் தொடரில் கலி என்ற அடைமொழி கொடுங் கோலன், கொடிய அரசன் என்ற பொருளுடன் வழங் கப்பட்டதாகக் கருதலாம்.

களப்பிரர் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவரா?

சில ஆராய்ச்சியாளர்கள் களப்பிரர் என்னும் இனம் கள்வர் (அ) கள்ளர் என்ற பெயர்களையுடைய வேங்கட மலைத் தலைவனாகிய புல்லி என்பாரின் குலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் கூறுவர். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கையாழ்வார் தம்மைக் கலியன் என்று கூறிக் கொள்வதாலும் அவர் கள்ளர் இனத்தவராதலாலும் களப்பிர குலத்தைச் சேர்ந்தவர் எனக் கொள்வர். திருமங்கையாழ்வார் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் இருந்த களப்பிரர்களோடு அவரை இணைப்பது பொருத்தமற்றதாகும். நடன காசிநாதன் என்பார் எழுதியுள்ள களப்பிரர் என்னும் நூலில் களப்பிரரும் கள்ளர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொன்னிவாடி என்னும் இடத்தில் அண்மையில் கிடைத்த கல்வெட்டின் துணை கொண்டு கூறுவர். இக்கல்வெட்டில்

1. ஸ்வஸ்திஸ்ரீ சந்திராதித்ய குலதிலகன்
2. சர்வபௌமன கலிநிருவ கள்வனாயின
3. கோக்கண்டன் இரவி

என்ற தொடர்களைக் காட்டிக் களப்பிரரும் கள்ளர்களும் ஒரே இனம்தான் எனக் கூறுவர். ஆனால், இந்தக் கல்வெட்டில் கூறப்பெறும் கோக்கண்டன் இரவி என்பவன் களப்பிர குலத்தைச் சேர்ந்தவனா என்பது ஆராய்தற் குரியதாகும். திருவேங்கடத்தை யாண்ட புல்லி என்னும் கள்வர் தலைவன் கடைச் சங்க காலத்தில் அதாவது கி.பி. 250-க்கு முன் இருந்தவன். அவனால் ஆளப்பெற்ற நாடு மொழிபெயர் தேயம் என்ற வடுகநாடு அல்லது ஆந்திர நாடாகும். ஆனால், களப்பிரரைப் பற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்களாகிய கல்லாடமும் பெரியபுராணமும் களப்பிரர் தலைவனைக் கருநாடர் வேந்தன் என்று கூறுகின்றன. ஆகையால், களப்பிரர் புல்லி என்ற தலைவனுடைய கள்ளர் இனத்தைச் சேர்ந்தவரல்லர் என்பது போதரும்.

களப்பிரரும் வடுகரும்

வேங்கடமலைக்கு வடக்கில் உள்ள பகுதி மொழிபெயர் தேயம் அல்லது வடுகர் நாடு என்றழைக்கப்பெறுகிறது. அந்நாட்டு மக்கள் வடுகர் ஆவர். தமிழிலக்கியங்களில் வடுகநாட்டையும் கருநாடக நாட்டையும் ஒன்றென மயங்கிக் கூறும் வழக்கம் உண்டு. எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் மதுரையைக் கைப்பற்றிய களப்பிரத் தலைவனை வடுகக் கருநாடகன் எனக் கூறுவர்.[8] ஆனால், களப்பிரர் வடுகர்கள் அல்லர்.

களப்பிரருடைய உண்மையான ஆதி இருப்பிடம்

கருநாடக அல்லது மைசூர் நாட்டில் உள்ள சிராவண பெலகோலாவிற்கு அருகில் தொட்டபெட்டா அல்லது பெரியமலை, சிக்க பெட்டா அல்லது சிறிய குன்று என்ற இரு மலைகள் உள்ளன. அவற்றுள் சிறிய குன்றிற்குச் சந்திரகிரிமலை என்று பெயர் வழங்குகிறது. ஏனெனில், மௌரியப் பேரரசனாகிய சந்திரகுப்த மௌரியர் தம்முடைய

அரச பதவியைத் துறந்து, பத்திரபாகு என்ற சமணப் பெரியாரின் சீடனாகி இம்மலையடிவாரத்திற்கு வந்து தங்கிச் சமண சமயத்தை மேற்கொண்டு சல்லேகானம் என்ற உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்ததாக ஒரு வரலாற்றுக் கதை வழக்கத்தில் உள்ளது. இந்நிகழ்ச்சி கி.மு. 298-இல் நடந்திருக்க வேண்டும். இந்தச் சிராவண பெலகோலாவிற்கு 12000 சமண முனிவர்கள் சந்திரகுப்த மௌரியருடன் வந்தனர். அவர்கள் தென்னாட்டில் சமணசமயக் கொள்கை களைப் பரவச் செய்திருக்கக்கூடும். ஆகையால் சிராவண பெலகோலாவைச் சூழ்ந்த இடங்கள் சமணசமயக் கொள்கை களைப் பரவச் செய்வாரின் தலைமை இடமாயின. பழைய கன்னடக் கல்வெட்டுகளில் சந்திரகிரிமலைக்குக் களவாப்பு என்ற பெயர் வழங்கியது.[9] இஃது, கன்னடமொழியில் களபாப்பு என்று உச்சரிக்கப்படும். கருநாடக மாநிலத்தில் பேலூர் மாவட்டத்தில் உள்ள ஹால்மிதி என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டு ஒன்றின்படி களப்போரா என்ற இனத்தவர் வாழ்ந்தனர் என்று அறிகிறோம். கடம்ப வமிசத்து அரசனாகிய காகுத்தவருமனுக்கு (கி.பி. 425-450) களப்போரரர் களின் எதிரிகள் என்ற பெயர் வழங்கியுள்ளது.

பிற்காலத் தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டு களிலும் செப்பேடுகளிலும் காணப்பெறும் களப்பிரர் என்னும் பெயர் களப்போரரர் என்ற கன்னடச் சொல்லின் தமிழ் வழக்கேயாகும்.

மேற்கூறப்பெற்ற களப்போரரர் என்னும் இனத்தவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழ் நாட்டிற்குள் புகுந்து கொள்ளை அடித்ததோடு சோழ, பாண்டிய நாட்டு முடிவேந்தர்களையும் வென்று தங்களுடைய ஆட்சியை அமைத்தனர் எனக் கொள்ளலாம்.[10] இவர்கள் தொண்டை மண்டலத்தில் பாலாற்றின் கரையில் உள்ள காஞ்சி, காவிரி ஆற்றின் முகவாயிலில் இருந்த காவிரிப்பூம்பட்டினம், வையை ஆற்றின் தென்பகுதியில்

அமைந்துள்ள மதுரை ஆகிய முக்கிய நகரங்களைத் தங்கள் வசப்படுத்தினர் போலும். ஆகையால், இந்தக் களப்பிரர்கள் தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள கருநாடக மாநிலத்தின் கோலார்ப் பகுதியிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தமிழகத்தில் புகுந்தவராவர். இவர்கள் சேர, சோழ, பாண்டியர், கங்கர், பல்லவர் போன்ற அரச வமிசத்தவர் அல்லர். தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வருவதற்குத் தகுந்த தலைவர்கள் அவர்களிடம் இருந்தனர். அவர்கள் புகார் நகரத்திலும் மதுரையிலும் ஆட்சிபுரியத் தொடங்கினர்.

களப்பிரர்களுடைய ஆதி இருப்பிடமாகிய களபாப்பு என்னும் பெயரிலிருந்து களப்போரரர் என்ற குடிப் பெயரிலிருந்தும் களப்பிரர் என்னும் பெயர் தோன்றிய தெனக் கூறலாம். களபாப்பு -ஊரான் என்று இவர்களை தமிழ் மக்கள் அழைத்திருக்கக்கூடும். களபாப்பு-ஊரான் என்பது களப்பூரான் என்றும் பின்னர் களப்பிரன் என்றும் மருவியிருத்தல் கூடும் என திரு. மு. அருணாசலம் கருதுகிறார்.[10அ] கன்னடமொழியில் வரையப்பட்ட கல்வெட்டுகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே கிடைக்கின்றன. ஆனால், அம்மொழி கி.பி.முதலாம் நூற்றாண்டிலிருந்தே வடமொழி, பிராகிருதம், பாலி முதலிய மொழிகளின் துணை கொண்டு தமிழிலிருந்து தோன்றித் தனி மொழியாயிற்று என்று மொழிநூல் வல்லோர் கூறுவர். தமிழ் நாட்டின் மீது படையெடுத்த களப்பிரர், தொடக்கத்தில் பிராகிருதம், பாலி முதலிய மொழிகளைப் பேசியிருக்க வேண்டும். ஆகையால், அவர்களுடைய பெயர்கள் இம்மொழிகளிலும் கல்வெட்டுகளில் எழுதப்பெற்றுள்ளன. பிற்காலத்தில்தான் களப்பிரர், களப்பாழர் என்று தமிழில் எழுதப்பெற்றனர். இதுகாறும் கூறியவற்றால் தமிழகத்தின் மீது படையெடுத்துத் தொண்டை மண்டலம், சோழநாடு, பாண்டியநாடு ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய களப்பிரர் மொழிபெயர் தேயமாகிய ஆந்திரநாட்டில் இருந்து

வந்தவர்கள் அல்லர் என்பதும் மைசூரில் தாழைக்காட்டுப் பகுதியில் ஆட்சிபுரிந்த கங்க வமிசத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதும் புலனாகின்றது.

கடைச் சங்க காலத்தில் திருவேங்கடப் பகுதியை ஆட்சிபுரிந்த புல்லி என்ற கள்ளர் கோமானுடைய கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்களும் அல்லர்; வடுகர்களும் அல்லர்; இந்திய வரலாற்றில் சந்திரகுப்த மௌரியரும் பத்திரபாகு என்ற அவருடைய சமணக்குருவும் வந்து தங்கிச் சமண சமயத்தைப் பரவச் செய்த சிராவண பெலகோலா என்ற கருநாடகப் பகுதியில் இருந்து தமிழ் நாட்டிற்குள் புகுந்தவர்கள் களப்பிரராவர். இக்களப்பிரர்களை அரச வமிசத்தைச் சார்ந்தவர்களாகவும் கருத முடியாது. அவர்களைப் பிறநாடுகளை வலிந்து கொள்ளும் ஒரு நாடோடிக் கூட்டத்திற்கு ஒப்பிடலாம். அவர்கள் பிராகிருதமும் கன்னடமும் கலந்த ஒரு மொழியைப் பேசினர். சோழ, பாண்டிய அரச வமிசங்களை இவர்கள் முற்றிலும் அழித்துவிடவில்லை. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சோழர் களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு சோழ மன்னர்கள் பழையாறையிலும் உறையூரிலும் அடங்கி ஒடுங்கி இருந்தனர் போலும். மதுரையில் தங்களுடைய ஆதிக்கத்தை இழந்த பாண்டியர்கள் பாண்டிய நாட்டில் மறைவானதோர் இடத்தில் இருந்திருக்க வேண்டும். இக்கருத்தை வேள்விக்குடிச் செப்பேட்டில் காணப்பெறும் ஒரு சொற்றொடர் தெரிவிக்கிறது. அஃது 'படுகடல் முளைத்த பருதிபோல் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு' என்பதாகும். வெளிப் பட்டு என்பதனால் மறைந்து வாழ்ந்த பாண்டியர்கள் மீண்டும் வன்மை பெற்றுக் களப்பிரன் என்னும் கலியரசன் கைக்கொண்டதனைத் தன் வசப்படுத்தினான் என்று பொருள் கொள்ளலாம்.[11] கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் கள்ப்பிரர் களிடமிருந்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தஞ்சையை

ஆண்டு வந்த முத்தரையர் களப்பிரர் இனத்தைச் சார்ந்தவர் என்ற கருத்து நிலவி வருகின்றது.

முத்தரையர்கள் களப்பிரரா?

முத்தரையர் என்னும் பெயரைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் மூன்று விதமான கருத்துகளை ஆய்ந்துள்ளனர். 1. சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்கள் ஆட்சி புரிந்த பகுதிகள் ஒன்று சேரும் ஓரிடத்தை இவர்கள் ஆட்சிபுரிந்தமையால் இவர்களுக்கு 'மூதரையர்' என்ற பெயர் பொருந்தும் எனக் கூறுவர் சிலர். ஆனால் முத்தரையர்கள் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் ஒன்று சேரும் ஒரு பகுதியைத்தான் ஆண்டனர். இந்த மாவட்டங்களின் பெயர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தோன்றியவையாகும். சேர, சோழ, பாண்டியர்களுடைய ஆட்சிப்பகுதிகள் இப்பகுதியில் ஒன்று சேரவில்லை. முத்தரையர்களுடைய ஆட்சிக் காலத்தில் சேர நாட்டிற்கும் சோழ, பாண்டிய நாடுகளுக்கும் எவ்வித நிலத் தொடர்பும் இல்லை. ஆகையால் இக்கொள்கை வரலாற்றுண்மைக்கு மாறுபட்டதாகும்.

2. முத்து - அரையர் என்னும் சொற்களைப் புணர்த்து, முத்தரையர் எனக்கூட்டி, முத்தரையர்கள் முத்துகளுக்குத் தலைவர்களாக இருக்கலாம் எனக் கூறுவாருமுளர். இன்றும் தஞ்சைப் பகுதியில் வலையர், மீனவர் ஆகியோர் தங்களை முத்தரையர் என்றே அழைத்துக் கொள்கின்றனர். பழங்காலத்தில் இருந்து முத்துக் குளிக்கும் தொழிலிலும் மீன்பிடிக்கும் தொழிலிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளமையால் இவர்களுக்கு முத்தரையர் என்ற பெயர் தோன்றியது எனத் திரு. நடன காசிநாதன் கூறுகிறார்.[12] ஆனால், முத்தரையர் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டின் உட்பகுதியாகிய தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் ஆட்சி புரிந்துள் ளனரேயன்றி முத்துக் குளிப்பதற்கும் மீன் பிடிப்பதற்கும் ஏற்ற கடற்கரைப் பகுதிகளில் இவர்களுடைய ஆட்சி

நடைபெறவில்லை. இவர்கள் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தால் கொடும்பாளூர் இருக்குவேள் குலத்துச் சிற்றரசர்கள் இவர்களிடம் திருமண உறவு கொண்டிருக்க மாட்டார்கள். புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டுப் பின்வருமாறு கொடும்பாளூர் இருக்குவேளிருக்கும் முத்தரையர்களுக்கும் இடையே நிலவிய உறவு முறையைக் கூறுகிறது.

> "ஸ்வஸ்திக் கோப்பரகேசரி - வர்மருக்குயாண்டு ஏழாவது குன்றியூர் நாட்டுத் தேவதானம் திருநலக்குன்றத்துத் திருமூலட்டானத்துப் பெருமான் அடிகளுக்குச் செம்பியன் இருக்குவேள் தேவியார், முத்தரையர் மகளார், வரகுணனாட்டிப் பெருமாள் நொந்தா விளக்கிற்கு வைத்த துணைப் பொன் ஏழுகழஞ்சு"[13]

இக்கல்வெட்டின்படி கி.பி.பத்தாம் நூற்றாண்டில் முத்தரையர்கள் இருக்குவேளிர்களோடு மணவுறவு கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. இதனால் முத்தரையர்கள் வேளிர்களுள் ஒரு பிரிவினர் என்பது தெளிவாகுமேயன்றி அவர்கள் முத்துக் குளிப்பதிலும் மீன் பிடிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர் என்னும் கூற்றுப் பொருந்தாது.

3. பாண்டியநாட்டின் தெற்குக் கிழக்குக் கடற்கரைப் பகுதிகள் முத்துகளைச் சேகரிப்பதற்குப் பெயர் பெற்ற இடங்களாகும். கம்பராமாயணத்தில் பாண்டிய நாட்டின் பெருமையைக் கூறுமிடத்துக் கம்பர் 'அத்திருத்தகு நாடு முத்தும் முத்தமிழும் தந்துமுற்றுமே' எனக் கூறுவர். முத்துகளுக்குப் பெயர் பெற்ற பாண்டிய நாட்டில் வசித்த அரையர்கள் ஆகிய வேளிர் குறுநில மன்னர்கள் முத்தரையர் என்று அழைக்கப் பெற்றனர். ஆனால், இவர்கள் களப்பிரர் இனத்தைச் சேர்ந்தவர்களா அல்லது தமிழ்நாட்டு வேளிர்

இனத்தைச் சேர்ந்தவர்களா என்பதை உறுதியாகக் கூறமுடியவில்லை.

முத்தரையர்களைப் பற்றிய புதிய செய்திகள்

சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள தண்டராம்பட்டில் இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுகளும் பல்லவ அரசன் முதலாம் நரசிம்மனின் ஏழாவது ஆட்சி ஆண்டில் எழுதப் பெற்றவை.

அவைகளில் ஒன்று

"வாண கோ முத்தரசர் நாடு பரவி
மேற்கோவலூர் மேல் வந்து
தஞ்சிற்றப்படிகளை எறிந்த ஞான்று"

ஒரு போர் வீரன் வீரமரணம் எய்தியதைக் குறிப்பிடுவதில் முத்தரசர் நாடும் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாம் கல்வெட்டு அந்தப் போரில் இறந்துவிட்ட மற்றொரு போர் வீரனைப் பற்றித் தெரிவிக்கிறது. அத்தோடு வாணகோ முத்தரைசனின் சிற்றப்பனின் பெயர் பொன் மாந்தனார் என்றும் தெரிவிக்கிறது[14]. தருமபுரி மாவட்டத்தில் பாலவாடியில் கிடைத்துள்ள கல்வெட்டில் பெரும்பாண முத்தரைசர் ஒருவர் குறிக்கப்படுகிறார். இவர் கங்க நாட்டை ஆண்டதாகக் கல்வெட்டில் காணப்பெறுகிறது. இந்தச் சான்றுகளைக் கொண்டு, செந்தலைக் கல்வெட்டில் குறிக்கப்பெறும் மன்னர்களுக்கும் குவாவன் சாத்தனுக்கும் முன்னரே வாணகோ முத்தரைசரும் பொன்மாந்தனாரும் தொண்டைமண்டலப் பகுதியிலும் தமிழகத்தின் வடபகுதியிலும் ஆட்சிபுரிந்ததாக நடன காசிநாதன் எழுதியுள்ளார். இந்தக் கல்வெட்டுகளின் துணை கொண்டு

பின்வருமாறு அவர்களுடைய மரபுப் பட்டியலை நடன காசிநாதன் முறைப்படுத்தியுள்ளார்.

1. பொன் மாந்தனார்
2. வாணகோ முத்தரைசர்
3. பெரும்பாண முத்தரைசர்
4. சாத்தன் மாறன்
5. குவாவன்
6. குவாவன்மாறன் 7. குவாவன் சாத்தன்
8. மாறன் பரமேசுவரன்
9. சுவரன் மாறன்

மேலே கூறப்பெற்ற மரபுப் பட்டியலில் காணப்பெறும் முத்தரையத் தலைவர்கள் பல்லவ மன்னர்களாகிய முதலாம் நரசிம்மவர்மன் காலம் முதற்கொண்டு இரண்டாம் நந்திவர்மன் காலம் வரையில் (கி.பி. 630 முதல் 796 வரை) இருந்தவர்களாகத் தெரிகிறது.[15] மேலே கொடுக்கப்பெற்ற பட்டியலில் காணப்பெறும் பெயர்களில் குவாவன், குவாவன் மாறன், குவாவன் சாத்தன், சுவரன்மாறன் என்பவை இத்தலைவர்கள் பாண்டிய மன்னர்களுக்கு அடங்கி ஆட்சிபுரிந்தனர் என்பதை உணர்த்துகின்றன. ஆனால் குவாவன், சுவரன் என்ற பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகத் தோன்றவில்லை. ஆகையால், இவர்கள் சரவண பெலகோலாவில் இருந்து தமிழ்நாட்டில் வந்து குடியேறிய களப்பிரர்களுடைய இனத்தைச் சேர்ந்தவர் களாகவும் இருக்கக் கூடும். களப்பிரர்கள் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தபொழுது அவர்களுக்கு அடங்கிய ஓர் இனத்தவராக இருந்து, பின்னர்,

களப்பிரர்களைப் பாண்டிய மன்னர்கள் அடக்கி ஒடுக்கிய பிறகு பாண்டிய, பல்லவர்களுக்குக் கீழ்ப்படிந்து, தஞ்சை, வல்லம் முதலிய பகுதிகளில் ஆட்சி செலுத்தியவர்கள் எனக் கூறலாம். இவர்கள் பாண்டிய, பல்லவ மன்னர்கள், களப்பிரர்களை அடக்கி அழிப்பதற்கு உதவி செய்திருக்கக் கூடும். ஆகவே, இவர்கள் கள்ளர், கள்ளன் என்று தங்களைக் கூறிக் கொண்டவர் போலும். முத்தரையர்கள் தொடக்கத்தில் சமண சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்து திருஞானசம்பந்தருடைய காலத்திற்குப் பிறகு சைவ சமயத்திற்கு மாறியவர்களாகத் தெரிகிறது.[16]

களப்பிரரும் களப்பாளரும்

களப்பிரரும் - களப்பாளரும் ஒரே இனத்தவர்களா அல்லது இருவேறு பிரிவினரா என்பதைப் பற்றிப் பல கருத்துகள் வரலாற்று ஆசிரியர்களிடையே நிலவியுள்ளன. வேள்விக்குடிச் செப்பேட்டில் இரண்டு இடங்களில் களப்பிரன் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டின் 40-ஆவது அடியில் 'களப்பிரன் என்னும் கலியரசன் கைக் கொண்டதனை இறக்கிய பின்' என்றும் 112-ஆம் அடியில் 'களப்பிரரால் இறக்கப்பட்டது' என்றும் எழுதப்பட்டுள்ளன.[17] தளவாய்ப்புரம் செப்பேட்டில் 'களப்பாழர் குலம் களைந்தும்'[18] என்றும் 'களப்பாளரைக் களைகட்டும்' என்றும் எழுதப்பெற்றுள்ளன. வேள்விக்குடிச் செப்பேட்டில் களப்பிரன் என்னும் சொல் கிரந்த எழுத்துகளிலும் தளவாய்ப்புரம் செப்பேட்டில் 'களப்பாழர்' என்னும் சொல் தமிழ் எழுத்துகளிலும் காணப்பெறுகின்றன. பல்லவ மன்னர்களுடைய செப்பேடுகளிலும் களப்பிரர் என்னும் பெயர் கிரந்த எழுத்துகளில் காணப்பெறுகின்றது. தளவாய்ப்புரம் செப்பேடுகள், வேள்விக்குடிச் செப்பேடு களுக்குப் பிறகு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு சென்ற பிறகு எழுதப்பட்டவையாகும். எனவே, அப்பொழுது களப்பிரன் என்னும் பெயரைத் தமிழாக்கிக் 'களப்பாழர்' என்று தமிழ்

எழுத்துகளில் எழுதப்பெற்றது போலும். 'களப்பிரன்' என்னும் பெயரைச் செப்பேட்டில் எழுதியவர் களப்பாழன் எனத் தமிழ்ப் படுத்தி எழுதியிருக்கக் கூடும். ஆகையால், களப்பிரரும் களப்பாழரும் ஒன்றுதான் எனக் கொள்ளலாம்.

ஆனால் களப்பாளர், களப்பாளராயர்கள் என்ற பெயர்கள் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த வேளாள சமூகத்தினருக்கும் மற்றையோர்களுக்கும் வழங்கியுள்ளன. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தென்னார்க்காடு மாவட்டம் பெண்ணாடகத்தில் வாழ்ந்த வேளாளப் பெருமகனாகிய அச்சுதக் களப்பாளர் என்பவர், தூய சைவ சமயத்தைச் சேர்ந்தவர். திருவெண்காட்டு இறையருளால் பிறந்த அவருடைய மகன் மெய்கண்டார் சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு முதல்நூலாகிய சிவஞான போதத்தை இயற்றிப் பொன்றாப்புகழ் கொண்டவராவார். அச்சுதக் களப்பாளரையும் அவருடைய மகன் மெய்கண்டாரையும் களப்பிரர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவது பொருந்தாக் கூற்றாகும். களப்பிரர்களும் அவர்களுடைய தலைவர்களும் சமணசமயத்தையும் பௌத்தத்தையும் சார்ந்தவர்கள் ஆவர். களப்பாளர், களப்பாளராயர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றி நாயன்மார்களாகவும், சிவனடியார்களாகவும் விளங்கியுள்ளனர். சென்னைக்கு அருகில் உள்ள நெற்குன்றம் என்னும் ஊரில் களப்பாளராயர் நெற்குன்றம் கிழார் என்ற வேளாளச் செல்வர், சிறந்த சிவனடியாராகவும் புலவராகவும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார். பெரிய புராணத்தை இயற்றிய சேக்கிழார் நாயனாருடைய இளவல் 'பாலறாவாயனான களப்பாள ராயன்' என்ற பட்டப் பெயருடன் திருவட்டத்துறை என்னும் இடத்தில் உள்ள சிவன் கோயிலுக்கு ஒரு சிறந்த அறத்தைச் செய்துள்ளார். இச்செய்தி மூன்றாம் இராசராசசோழன் (கி.பி. 1216-1256) காலத்திய கல்வெட்டு ஒன்றால் புலனாகிறது.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1271) காலத்தில் தில்லை என்ற சிதம்பரத்தில் உள்ள காளிகோயிலுக்குக் களப்பாளராயன் என்பவன் ஒரு நிவந்தம் ஏற்படுத்தியுள்ளான். இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. 1133-1150) கங்கை கொண்ட சோழக் களப்பாளன் என்ற ஒருவன் அரசாங்க அதிகாரியாக இருந்துள்ளான். விசயநகர வேந்தர் கிருட்டிணதேவராயர் காலத்தில் 'இரு சமய விளக்கம்' என்ற சமயநூலை எழுதிய அரிதாசருக்குக் களப்பாளராயர் என்ற பட்டம் இருந்துள் ளது. இக் காலத்திலும் கார்காத்த வேளாளரிடையேயும், வன்னியர்களிடையேயும் களப்பாளர் என்ற பட்டப் பெயர் வழக்கத்தில் உள்ளது. சோழ, பாண்டியப் பேரரசர்களால் வழங்கப்பெற்ற பட்டப் பெயர்களுள் களப்பாளராயர் என்பதும் ஒன்றாகும். தென்னவராயர், கொங்குராயர், காலிங்கராயர், சேதிராயர், மழவராயர் போன்று களப்பாளராயர் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது. களப்பிரரை அடக்குவதில் பங்கு கொண்ட வேளாள, வன்னிய வீரர்களுக்குக் களப்பாளர் அல்லது களப்பாளராயர் என்ற பட்டங்கள் வழங்கப் பட்டிருக்கக் கூடும்.

பெரிய புராணத்தில் கூற்றுவநாயனார் என்பாரின் வரலாறு கூறப்பெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையில் 'கூற்றன் களந்தைக் கோன்' என்று இவரைக் கூறுகிறார். நம்பியாண்டார் நம்பியவர்கள் இயற்றிய திருத்தொண்டர் அந்தாதியில் 'களப்பாளனாகிய கூற்றுவனே' என்று இவரைப் பற்றிக் கூறுகிறார். சேக்கிழார் இவரைக் 'களந்தை முதல்வனார்' என்றும் 'களந்தைக் கூற்றுவனார்' என்றும் கூறுவர்.[19] இந்தக் களந்தை என்னும் ஊர் சோழ நாட்டில் திருத்துறைப் பூண்டிக்கு அருகில் உள்ள களப்பாழ் என்னும் ஊரெனக் கொள்ளலாம். இங்கு ஆதித்த சோழனால் அமைக்கப்பெற்ற களந்தை - ஆதித்தேச்சுரம் என்னும் திருக்கோயில் உள்ளது. இவ்வூரில், கூற்றுவன்திடல், கூற்றுவன்குளம் என்ற இடப் பெயர்களும் காணப்

பெறுகின்றன. ஆகையால், தஞ்சை மாவட்டத்தில் உள்ள களப்பாழ் என்னும் ஊரே கூற்றுவநாயனாருடைய ஊர் எனக் கொள்ள வேண்டும். சோழ நாட்டை வென்ற அரசனாகிய இந்தக் கூற்றுவனாருக்குத் தில்லை வாழ் அந்தணர்கள் முடிசூட்ட மறுத்ததற்குக் காரணம் இவர் சோழர் குடியிற் பிறந்தவர் அல்லர் என்ற காரணமே தவிர, இவர் களப்பிரர் என்ற காரணத்தால் அல்ல. சேதி நாட்டில் வாழ்ந்த தலைவர்களுக்குச் சேதிராயர் என்ற பட்டம் வழங்கப்பட்டது போல், களப்பாழ் என்னுமிடத்தில் வாழ்ந்த தலைவர்களுக்குக் களப்பாளராயர் என்ற பட்டம் சோழ மன்னர்களால் வழங்கப்பட்டதெனக் கொள்ளலாம். ஆகையால், களப்பிரரும் களப்பாளரும் களப்பாளராயர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர் என்றோ, களப்பிரர் இனத்தில் இருந்து களப்பாளர் தோன்றினர் என்றோ கொள்வது பொருத்தமற்ற கொள்கையாகும். பெரிய புராணத்தில் 63 நாயன்மார்களில் ஒருவராகிய கூற்றுவன், களப்பாழ் என்ற இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாண்ட களப்பாளர் என்று கொள்ள வேண்டும். தளவாய்ப்புரம் செப்பேட்டில் களப்பிரருக்குப் பதிலாக எழுதப் பெற்றுள்ள களப்பாழர் என்ற சொல் களப்பாளர், களப்பாளராயர் என்ற பட்டங்களோடு தொடர்புடையதல்ல.

மூவேந்தரை அடிப்படுத்திய அச்சுதக் களப்பாளன்

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற தமிழ் நாவலர் சரிதை என்னும் நூலில் 260 செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் அச்சுதக் களப்பாளன் என்னும் அரசன் தமிழ்நாடு முழுவதையும் வென்று சேர, சோழ, பாண்டியர்களைச் சிறையிலிட்டதாகவும் அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வெண்பாவை இயற்றி அச்சுதக் களப்பாளனிடம் கொடுத்துச் சிறையிலிருந்து மீண்டதாகவும் கூறப்பெறுகிறது. இந்த அச்சுதன், தில்லையாகிய சிதம்பரத்தில் ஆட்சி புரிந்ததாகவும் கூறப்பட்டு உளது. ஆனால், அந்தச் செய்யுட்கள் மிகப்

பிற்காலத்தனவாகத் தோன்றுகின்றன. அச்சுதக் களப்பாளன் சிதம்பரத்தில் ஆட்சிபுரிந்ததற்குச் சான்றுகள் இல்லை. அவனால் தோற்கடிக்கப்பட்ட மூவேந்தர்களின் பெயர்களும் தெரியவில்லை. எங்கு, எப்பொழுது அச்சுதக் களப்பாளன் மூவேந்தரைத் தோற்கடித்தான் என்பன ஐயமாகவே உள்ளன. ஆகையால், தமிழ் நாவலர் சரிதையில் வரும் அச்சுதக் களப்பாளன் என்னும் அரசன் தமிழ்ப் புலவர்களுடைய கற்பனையில் தோன்றிய களப்பாளன் என்று கூறலாமே தவிர வரலாற்றில் காணப்பெறும் களப்பாளன் என்று கூற முடியாது.

தொண்டை நாட்டில் களப்பிரர்

சிராவண பெல்கோலாவிலிருந்து தமிழகத்தின்மீது படையெடுத்த களப்பிரர்கள் தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களிலும் பரவித் தங்களுடைய ஆதிக்கத்தை அமைத்தனர் என்று கூறலாம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தொண்டை, சோழ, பாண்டிய நாடுகளைத் தங்கள் வசப்படுத்தினர். தொண்டை நாட்டின் முக்கிய நகரமாகிய காஞ்சிபுரத்தைத் தங்கள் வசப்படுத்தி அங்கே தங்கள் சமயமாகிய சமண சமயத்தையும் பரவச் செய்திருப்பர். இதனால்தான் களப்பிரர்களை வென்ற பல்லவ மன்னர்களில் சிலர் சமண சமயத்தைத் தழுவினர் போலும். ஆனால், தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் அமைந்தது போன்று களப்பிரர்களுடைய ஆட்சி உறுதியாக அமையவில்லை. பல்லவ மன்னர்களுக்கும் களப்பிரர்களுக்கும் அடிக்கடி போர்கள் நடந்துள்ளன. பல்லவர்களும் களப்பிரர்களும் காஞ்சி நகரத்தை மாற்றி மாற்றித் தங்கள் வசத்தில் கொண்டு வந்துள்ளனர். இறுதியாகக் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதி களப்பிரரிடமிருந்து சிம்மவிட்டுணு என்ற பல்லவ மன்னர் காஞ்சி நகரத்தைக் கைப்பற்றியுள்ளதை நாம் அறிந்து

கொள்ளுகிறோம்.[20] சிம்மவிட்டுணுவின் ஆட்சிக் காலத்தில் காஞ்சிபுரம் களப்பிரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கூறுகின்றன.[21] ஆயினும் பல்லவராட்சிக்குட்பட்ட தொண்டை நாட்டில் களப்பிரர்கள் மீண்டும் மீண்டும் பல்லவர்களுக்கு அடங்காமல் கலகம் விளைவித்துக் கொண்டிருந்தனர் என்பதைக் கல்வெட்டு களிலிருந்து நாம் உணரமுடிகிறது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் எழுதப்பெற்ற கசாக்குடிச் செப்பேடுகளில் களப்பிரர், சோழ, பாண்டிய மன்னர்களை அவனிசிம்மன் என்ற சிம்மவிட்டுணு வென்றதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன.[22] கொற்றங்குடி செப்பேடுகளிலும் இரண் டாம் நந்திவர்மனுடைய அரண்மனை வாயிலில் களப்பிரர் முதலிய ஏழு மன்னர்கள் காத்துக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.[23] மேற்கூறப்பெற்ற கல்வெட்டுச் சான்று களிலிருந்து தொண்டைநாட்டில் களப்பிரரை அடக்குவதற்குச் சிம்ம விட்டுணு காலம் முதற்கொண்டு பல்லவ மன்னர்கள் பல போர்களைப் புரிய வேண்டியிருந்ததென நாம் உய்த்துணரலாம்.

சோழ நாட்டில் களப்பிரர்

சங்க காலத்தில் பெரும்புகழுடன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்த சோழ மன்னர்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தங்களுடைய பெருமை அனைத்தையும் இழந்து களப்பிரர் ஆட்சிக்குக் கீழ்ப்படியலாயினர். களப் பிரரைப் பல்லவ மன்னர்கள் வென்று சோழ நாட்டையும் கைப்பற்றியிருக்க வேண்டும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையில் சோழநாடு பல்லவப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. வடதிசையிலிருந்து பல்லவர்களும் தெற்கிலிருந்து பாண்டியர்களும் சோழ நாட்டை நெருக்கியமையால் சோழர்கள் நாட்டைக் காக்கும் திறமையற்றுக் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பகுதியிலும், பழையாறை,

உறையூர் முதலிய இடங்களிலும் குறுநில மன்னர்களாக வாழ்ந்து வந்தனர். சரவண பெல்கோலாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்த களப்பிரர், சோழ நாட்டைத் தங்கள் வயப்படுத்துவது எளிதாயிற்று. சோழ மன்னர்கள் தங்களுடைய வலிமை இழந்து நின்ற காலத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய கோச்செங்கட்சோழன் அல்லது கோச்செங்கணான் என்னும் சோழ மன்னர் இருந்ததாக நாம் கருதலாம். ஏனெனில், இச்சோழ மன்னன் காலத்திற்கு முன்பிருந்த கோயில்கள் பல அழிந்து விட்டமையால் எண்டோளீசற்கு எழுபது மாடக் கோயில்களை, அமைத்தாகத் திருமங்கையாழ்வார் ஒரு பாசுரத்தில் கூறியுள்ளார்.[24] கோச்செங்கட்சோழன் கடைச் சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்தவனாகக் கொள்ளலாம். கோச்செங்கட்சோழர் திருவானைக்காவலில் உள்ள சிவபெருமானுக்குக் கோயில் அமைத்துச் சிறப்புகள் செய்துள்ளமையால் அந்தச் சிவத்தலத்திற்கு அருகிலுள்ள உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்திருக்கலாம். களப்பிரருடைய படையெடுப்பினால் புகார் நகரத்தை விட்டு உறையூருக்கு இவர் சென்றிருக்க வேண்டும். இந்த இடைவெளிக் காலத்தில்தான் களப்பிரர்கள் சோழ நாட்டினையும் அதன் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தையும் கைப்பற்றியிருக்க முடியும்.

புகார் நகரத்தையும் அதைச் சூழ்ந்துள்ள சோழ நாட்டினையும் அச்சுத விக்கிரந்தன் என்ற களப்பிர மன்னன் ஆண்டதாகப் புத்ததத்தர் என்பவர் கூறியுள்ளார். பாலிமொழியில் அபிதம்மாவதாரம், வினயவினிச்சயம் என்ற இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார். இவர் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், பூதமங்கலம், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் இருந்த பௌத்த மடங்களில் வசித்துள்ளார். சோழ நாட்டிலிருந்த பூதமங்கலம் என்னும் ஊரில் வேணுதாசர் என்பாரால் அமைக்கப்பெற்ற பௌத்த மடத்தில் இவர் தங்கியிருந்தபொழுது வினயவினிச்சயம் என்ற

நூலைக் களப்ப குல மன்னர் அச்சுத விக்கந்தன் என்பான் ஆட்சியில் இயற்றியதாகக் கூறுகின்றார்.[25] இந்தப் புத்ததத்தர் இலங்கை அரசனாகிய சிறுகுட்டன் (கி.பி. 409-430) காலத்தில் வாழ்ந்தவர். புத்ததத்தரின் சமகாலத்தவராகிய புத்த கோசரும் தம்முடைய நூலில் சோழ நாட்டை அரசாண்ட களப்பிர அரசன் ஒருவரைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.[26] இந்த அச்சுதன் சேர, சோழ, பாண்டியர்களை வென்று தமிழ் நாட்டின் பெரும் பகுதியைத் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான் என்றும் புலி, கயல் ஆகிய இலச்சினைகளைத் தன்னுடைய கொடியில் எழுதிக் கொண்டான் என்றும் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் மேற்கோள் காட்டியுள்ள பாடல் ஒன்று உள்ளது.

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழில் மார்பில்
கயலொடு கிடங்க சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
ஒன்று கடல் உலகம் முழுவதும்
ஒன்றுபு திகிரி உருட்டுவோன் எனவே.

இப்பாடல், அச்சுதன் என்ற ஓர் அரசனைப் பற்றிக் கூறுகிறதேயன்றி அச்சுத விக்கிரந்தன் என்றோ, அச்சுதக் களப்பாளர் என்றோ கூறவில்லை. மேலும் சோழ நாட்டில் புகார் நகரத்தில் அச்சுத விக்கரந்தன் ஆட்சி செலுத்தியுள்ளான். பாண்டிய நாட்டை இன்னொரு பெயர் தெரியாத கருநாடக வேந்தன் ஆட்சி புரிந்துள்ளான். சேர நாட்டின் மீது களப்பிரர் படையெடுத்துச் சென்றனர் என்பதற்கு சான்றுகள் இல்லை. ஆகையால், இந்த அச்சுதன் புலி, வில், கயல் ஆகிய மூவேந்தர்களுடைய கொடிச் சின்னங்களைத் தன் கொடியில் எழுதிக் கொண்டான் என்பது நம்பத்தகுந்த செய்தியாக இல்லை. இப்பாடலில் கூறப்பெற்ற அச்சுதனும் அச்சுத

விக்கிரந்தனும் ஒருவராக இருக்க முடியாது. ஆகையால் அச்சுதன், அச்சுத விக்கிரந்தன், அச்சுதக் களப்பாளன் ஆகிய மூன்று பெயர்களும் ஒரே அரசனைக் குறிக்கின்றன என்பதை வரலாற்று உண்மையாகக் கொள்ள முடியாது. அச்சுத விக்கிரந்தன் என்பவர்தான் காவிரிப்பூம் பட்டினத்தையாண்ட களப்பிர அரசனாகத் தோன்றுகிறது.

புத்ததத்தர் எழுதிய அபிதம்மாவதாரம் என்னும் நூலில் காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் செழிப்பும் வாணிக மேன்மையும் நகர மக்களின் நாகரிக வாழ்க்கையும் விளக்கப் பட்டுள்ளன. ஆகையால், காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் கொள்வதற்கு முன் புத்ததத்தர் அந்நகரத்திலோ அதற்கருகில் உள்ள போதிமங்கை என்னும் ஊரிலோ வாழ்ந்திருக்க வேண்டும். பூதமங்கலம் அல்லது போதிமங்கை சோழ நாட்டின் 'இருதயத்தானம்' என்றும் புகழ்ந்துள்ளார். அச்சுத விக்ரந்தன் காவிரிப்பூம் பட்டினத்தில் ஆட்சிபுரியும் பொழுது அபிதம்மாவதாரம் என்ற நூலை எழுதியதாகவும் கூறியுள்ளார். சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஆட்சி செலுத்திய அச்சுத விக்கிரந்தன் பௌத்த சமயத்தைச் சார்ந்தவன் என்பதும் அவனுடைய ஆட்சி செங்கோன்மை பொருந்தியதென்பதும் நமக்குக் கிடைக்கும் பலவித தமிழ்ப் பாவியங்களால் புலனாகின்றன. யாப்பருங்கல விருத்தியில் ஒரு பாடல் அச்சுதக்கோ என்னும் அரசனைப் புகழ்ந்து கூறுகிறது.

பொருகுடை வளாகம் ஒருகுடை நிழற்றி
இருபிறப்பாளர்க்கு ஈந்து மனமகிழ்ந்து
அருள்புரி பெரும்புகழ் அச்சுதக்கோவே
நந்தி மாமலைச் சிலம்ப
நந்தி நிற்பரவுதல் நாவலர்க்கரிதே.[27]

இப்பாடலின் பொருளைக் கொண்டு அச்சுத விக்கிரந்தன் பௌத்த சமயத்தைத் தழுவியிருந்தபோதிலும் வைதிக சமயத்தையும் அந்தணர்களையும் ஆதரித்தான் என்று கூறலாம்.

பாண்டிய நாட்டில் களப்பிரர்

களப்பிரர்கள் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து மதுரையைக் கைப்பற்றிய வரலாற்றுண்மையை மூர்த்தி நாயனாருடைய புராணத்தில் சேக்கிழாரும் கல்லாடம் என்னும் நூலின் ஆசிரியரும் கூறியுள்ளனர். கல்லாடம் என்னும் நூலின் ஆசிரியர்,

"படைநான்கு உடன்று பஞ்சவன் துறந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
அருகர்ச்சார்ந்து நின்று அரன்பணி அடைப்ப."

எனக் கூறுவர்.

இப்பாடலின்படி கருநாடகத்திலிருந்து வந்த களப்பிரத் தலைவன் ஒருவன் நா.ன்கு வகையான படைகளைக் கொண்டு பாண்டிய மன்னனை மதுரையை விட்டுத் துரத்திவிட்டு மதுரை நகரத்தைத் தன் வயப்படுத்தினான். அவ்வரசன் சமண சமயத்தைச் சார்ந்தவன். மதுரை நகரத்தில் சமண சமயத்தைப் பரவச் செய்வதற்குப் பல முறைகளைக் கையாண்டான். சைவ சமயத்தின் முதன்மைக் கொள்கையாகிய அரன்பணி செய்வதைத் தடை செய்தான் என்று நாம் அறிகிறோம்.

இச் செய்தியைப் பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழார் மிகத் தெளிவாக மூன்று பாடல்களில் மூர்த்திநாயனார் புராணத்தில் கூறுவர். அப்பாடல்களாவன:

கானக்கடி சூழ் வடுகக் கருநாடர் காவல்
மானப்படை மன்னன் வலிந்து நிலன் கொள்வானாய்
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திரண்ட
சேனைக் கடலும் கொடு தென்திசை நோக்கி வந்தான்.

வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பி
சந்தப் பொதியில் தமிழ் நாடுடை மன்னன் வீரம்
சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்தும் ஆற்றால்
கந்தப் பொழில் சூழ் மதுராபுரிக் காவல் கொண்டான்.

வல்லாண்மையில் வண்தமிழ்நாடு வளம்படுத்து
நில்லா நிலை ஒன்றி இன்மையின் நீண்டமேரு
வில்லான் அடிமைத் திறம் மேவிய நீற்றின் சார்பு
செல்லாது, அருகந்தர் திறத்தினில் சிந்தை தாழ்ந்தான்.[28]

இந்தபெரியபுராணப்பாடல்கள், மதுரை நகரைக் கருநாடகக் களப்பிரத் தலைவன் ஒருவன் நால்வகைப் படைகளுடன் வந்து பாண்டிய மன்னனைத் தோற்கடித்து மதுரையை விட்டுத் துரத்திய பின், அந்நகரத்தின் அரசுரிமையை மேற்கொண்டதன் பின்னர் தன்னுடைய வல்லாண்மையினால் கொடுங்கோல் செலுத்திச் சமண சமயத்தைப் பின்பற்றிச் சைவசமயத்திற்கும் சைவ அடியார்களுக்கும் பெருந்தீங்கு விளைவித்தான் என்று கூறுகின்றன. மதுரையில் இருந்த சிவலிங்கத்திற்குச் சந்தனக்காப்பு அணிவிக்கும் தொண்டாற்றி வந்த மூர்த்தி நாயனாருக்குச் சந்தனக்கட்டைகள் கிடைக்காதவாறு செய்தான். இறைவனுடைய அருளினால் களப்பிர மன்னன் திடீரென்று மாரடைப்பினாலோ அல்லது வேறு எவ்வித நோயினாலோ இறந்துபடவே மூர்த்தி நாயனார் மதுரை அரசை மேற்கொண்டார். அவர் சடைமுடி, திருநீறு, உருத்திராக்கதமாலை ஆகிய மூன்றையும் கொண்டு ஆட்சி புரிந்தமையின் 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' என்று திருத்தொண்டர் தொகையில் பாராட்டப்பட்டுள்ளார்.

களப்பிர மன்னன் இறப்பதற்கு முன் அந்தணர்களுக்கும் தேவாலயங்களுக்கும் கொடுக்கப்பட்ட பிரமதேயம், தேவதானம் முதலிய நிலங்களையும் தன் வசப்படுத்தியதால், பின்னர் வந்த கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் வேள்விக்குடிச் செப்பேடுகளின்படி அவற்றை மீண்டும் தகுந்த உரிமையாளர்களுக்கு அளித்துள்ளான். மூர்த்தி நாயனாரின் சைவ சமய ஆட்சியும் பாண்டிய மன்னர் களுடைய ஆட்சியும் மதுரையில் மீண்டும் நிலை பெற்றிருந்த போதிலும் சமண சமயமும் சமணத் தலைவர் களுடைய தீயச் செயல்களும் மறையவில்லை. அவர்கள், அரிகேசரி மாறவர்மன் என்ற பாண்டிய மன்னனும் சமண சமயத்தைத்தழுவுமளவுக்கு மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தனர். பின்னர் இச்சமணர்களும் அவர்களுடைய சமயமும் திருஞான சம்பந்தர், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் முதலியோர்களுடைய முயற்சியால் பாண்டிய நாட்டை விட்டு அகன்றன.[29]

கொங்கு நாட்டில் களப்பிரர்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிர குலத்தைச் சேர்ந்த சிற்றரசர்கள் கொங்கு நாட்டிலும் ஆட்சிபுரிந்துள்ளதாகச் சில கல்வெட்டுகளின் துணை கொண்டு நடன காசிநாதன் ஆராய்ந்து எழுதியுள்ளார்.[30] கோயம்புத்தூர் மாவட்டம் பொன்னிவாடி என்னும் கிராமத்தில் அண்மையில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ சந்திராதித்ய குலதிலகன்
2. சார்வ பௌம கலிநிருவ கள்வனாயின
3. கோக்கண்டன் இரவி'

இக்கல்வெட்டில் உள்ள கலிநிருவ கள்வனாயின, கோக்கண்டன் இரவி என்னும் தொடர் கோக்கண்டன்

என்னும் அரசனைக் குறிப்பதாகவும் கலி நிருபன் என்னும் சொற்கள் களப்பிரர்களைக் குறிப்பிடும் கலியரசன் என்னும் பெயரின் வடமொழி மொழிபெயர்ப்பு என்றும் அவர் கருதுகிறார். இது, வேள்விக்குடிச் செப்பேட்டில் காணப் பெறும் கலி அரசன் என்பதின் மாறுபட்ட வடிவமாகவே கொள்ள வேண்டும் எனவும் எழுதுவார். இவன் கலி அரசன் என்ற தன் பெயரோடு சந்திர, சூரிய குலத்தைச் சேர்ந்தவனாகவும் தன்னை அழைத்துக் கொண்டான். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளலூர் என்னுமிடத்தில் மற்றொரு கல்வெட்டிலும் இப்பெயரும் குலப்பெயரும் காணப்பெறுகின்றன.

1. ஸ்வஸ்திஸ்ரீ சந்திராதித்ய குலதிலக
2. சர்வ பௌமனாகிய ஸ்ரீகோக்கண்டன் இரவிக்குச்
3. செல்லாநின்ற யாண்டு இருபத்திநான்கு[31]

மேற்கூறப்பெற்ற கல்வெட்டுகளின் துணை கொண்டு கொங்கு நாட்டில் ஆட்சிபுரிந்த களப்பிரர்களின் மரபுப்பட்டியலைப் பின்வருமாறு நடன காசிநாதன் வரிசைப்படுத்தியுள்ளார்.

கண்டன்

கண்டன் வீரநாராயணன் — கண்டன் ரவி

கண்டன் ரவி: இரவி கண்டன் — இரவி கோதை

வரகுண பராந்தகன்

இவ்வரசர்களுள் கண்ட வீரநாராயணன், கண்டன் இரவியாகிய மன்னர்கள் கி.பி. 900ஆம் ஆண்டிலும்

அவர்களின் தந்தையான கண்டன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் இருந்திருக்கக்கூடும் இரவி கண்டன், இரவி கோதை ,என்னும் இருவரும் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஆட்சி புரிந்திருக் கலாம். கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் வரகுண பராந்தகன் இருந்திருக்கிறான். கோயம்புத்தூர் மாவட்டம் பிரிமியம் என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் இந்த வரகுண பராந்தகனும் சந்திர சூரிய குலத்தைச் சேர்ந்தவனாகக் கூறிக் கொள்கிறான். மேல் கொடுக்கப் பட்ட பட்டியலில் காணப்பெறும் அரசர்களுடைய கல்வெட்டுகள் கோவை மாவட்டத்தில் பொன்னிவாடி, வெள்ளலூர், கீரனூர், பழனி, ஈரோடு, பேரூர், பிரமதேசம் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. இந்த ஊர்கள் அமைந்திருக்கும் இடங்கள் கோவை மாவட்டத்தின் பெரும்பகுதியாகும்.

பிறகு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழ்நாட்டின் வடக்குப் பகுதி அபராசித பல்லவனுடைய ஆட்சியில் இருந்தது. இந்தப் பல்லவ மன்னன் களப்பிரர்களை வென்றதாகக் கூறிக் கொள்ளுகிறான். அஃது உண்மையான செய்தியானால், கொங்கு நாட்டில் ஆட்சிபுரிந்த கோக்கண்டன் இரவியைத்தான் அபராசித பல்லவன் வென்றிருக்க வேண்டும். பல்லவ மன்னன் அபராசிதனையும் பல்லவ நாட்டையும் வென்று தன்னடிப்படுத்திய ஆதித்த சோழனும் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டை வென்றதாகப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன.[32] ஆகையால் அபராசித பல்லவனும் ஆதித்த சோழனும் கொங்கு நாட்டை ஆண்ட களப்பிர மன்னர்களிடம் இருந்துதான் அந்நாட்டை வென்றிருக்க வேண்டும் என நடன காசிநாதன் கூறுகின்றார்.

ஆனால் மேற்கூறப் பெற்ற களப்பிர மன்னர்கள் பாண்டிய நாட்டிலிருந்து கொங்கு நாட்டிற்கு வந்தனரா?

அல்லது சோழ நாட்டிலிருந்து வந்தனரா? என்பதையும் அவர்கள் எப்பொழுது வந்தனர் என்பதையும் விளக்கமாகக் கூறவில்லை. கொங்கு நாட்டில் அரசாண்டவர்கள் களப்பிரர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதி செய்யக்கூடிய மற்ற சான்றுகளும் காணப்பெறவில்லை ஆகையால் நடன காசிநாதன் கூறும் 'கொங்கு நாட்டில் களப்பிரர் ஆட்சி' என்னும் தலைப்பு தொடக்க நிலையில் உள்ளது என்று கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. அறவாணன், க.ப., தமிழ் இலக்கண நன்கொடை
2. Swamy. B.G.L.,Kalabhra Interregnam, Bulletin of the Institute of Traditional Cultures, Madras 1976 January to June PP.81 - 148.
3. மு. அருணாசலம், பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி, பக்கம்-20.
4. "அளவறிய அதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக் களப்ரன் என்னும் கலியரசன் கைக்கொண்டதனை இறக்கிய பின்" வேள்விக்குடிச் செப்பேடுகள், வரிகள் 10-12. கே.வி.ராமன், பாண்டியர் வரலாறு, பக் 58-60.
5. K.R. Venkataraman, Transactions of the Archaeological Society of South India, 1956-57 P.P. 94-100.
6. மு. அருணாசலம், முன்னூல் பக்.25.
7. நடன காசிநாதன், களப்பிரர், பக்.14.
8. "கானக்கடி சூழ் வடுகக்கருநாடர் காவன்.....பொழில் சூழ் மதுராபுரி காவல் கொண்டான்" (பெரியபுராணம்)
9. K.R. Venkataraman, முன்னூல்.
10. மு.அருணாசலம் முன்னூல் பக். 32-33.

10-அ. மேற்படி பக்கம் 32.

11. வேள்விக்குடிச் செப்பேடுகள், வரிகள்:12-13 பான். செப்.பத்.பக் 38.
12. நடன காசிநாதன், முத்தரையர், பக் 24-25.
13. நடனகாசிநாதன், முன்னூல் பக்.22.
    தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி XIX. எண்.155.
14. நடனகாசிநாதன், முத்தரையர், பக்.30.
15. மு.அருணாசலம்,முன்னூல் பக்.38.
16. மேற்படி பக்கம் - 80.
17. பாண்டியர் செப்பேடுகள் - பத்து, பக்கம் 22, 112.
18. மேற்படி பக்கம் - 89.

19. கூற்றுவநாயனார் புராணம், செய்யுள் - 1, வரி 4
20. மு.அருணாசலம்,முன்னூல் - ப்க்.63.
21. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக்கம் 12.
22. மு.அருணாசலம்,முன்னூல் பக்.64.
23. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக்கம் 237.
24. இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோவில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே

-பெரியதிருமொழி - திருமங்கையாழ்வார்.

25. நடனகாசிநாதன், களப்பிரர், பக்.7.
26. மேற்படி
27. யாப்பெருங்கலவிருத்தி.
28. மூர்த்திநாயனார் புராணம், 11,13.
29. கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு பக்.58-60
30. நடனகாசிநாதன், களப்பிரர், பக்.30.
31. மேற்படி பக்.32.
32. கொங்கு தேச ராசாக்கள். திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய நூல்கள்.

இயல் மூன்று

பல்லவர் — பாண்டியர் காலத் தமிழகம்

செப்பேடுகளும் கல்வெட்டுகளும்

பல்லவர் செப்பேடுகள்

தமிழக வரலாற்றில் சங்க காலத்தை அடுத்து, பல்லவர் காலம் இடம் பெறுகிறது. இக்காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை எனக் கூறலாம். பல்லவ மன்னர்கள் வெளியிட்டுள்ள செப்பேடுகளில் காணப்பெறும் மொழியைக் கொண்டு அவர்களுடைய வரலாற்றை மூன்று பகுதிகளாகப் பிரித்துணரலாம்.[1] தங்களுடைய செப்பேடுகளில் பிராகிருத மொழியைக் கையாண்ட பல்லவர்கள் என்றும்[2] வட மொழியைக் கையாண்ட பல்லவர்கள் என்றும்[3] வடமொழியையும் தமிழையும் கலந்து செப்பேடுகளை எழுதுவித்த பல்லவர்கள் என்றும் அவர்களைப் பிரித்துக் கூறுவர். பிராகிருதம் வடமொழி ஆகிய இரு மொழிகளையும் தங்களுடைய செப்பேடுகளில் கையாண்ட பல்லவ மன்னர்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தோராவர். வடமொழியையும் தமிழையும் செப்பேடுகளில் கையாண்ட பல்லவ மன்னர்கள் கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர்.

பிராகிருத மொழியில் வெளியிடப்பட்ட செப்பேடுகள் மூன்று கிடைத்துள்ளன. இவற்றுள் மிகப் பழமையானது மயிதவோலு செப்பேடும் ஹீரஹதஹள்ளி, குணபதேயம் ஆகிய செப்பேடுகளும் ஆகும். முழுவதும் வடமொழியில் எழுதப் பெற்ற செப்பேடுகள் பதினைந்தும் முற்பகுதியில்

வடமொழியும் பிற்பகுதியில் தமிழும் கலந்து எழுதப் பெற்ற செப்பேடுகள் பத்தும் உள்ளன. கங்கமன்னன் சிரீமாற னுடைய ஹல்லகெரே செப்பேடுகளும் கோபால தேவ னுடைய ஹால்திபூர் செப்பேடுகளும் மூன்று பல்லவ அரசர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.[4]

பிராகிருதமொழிச் செப்பேடுகள்

பிராகிருத மொழியில் உள்ள மூன்று செப்பேடுகளுமே சிவகந்தவர்மன் காலத்தவை எனக் கருதப்பெறுகின்றன. திரு. டி.என். சுப்பிரமணியம் அவர்கள் பிராகிருத மொழியில் உள்ள குணபதேயச் செப்பேட்டைப் பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த வேறொரு கந்தவர்மன் காலத்தில் வெளியிடப் பட்டிருக்கலாம் என்று கருதுகிறார்.[5] அச்செப்பேட்டின் பிற்பகுதியில் வடமொழி கையாளப் பட்டிருப்பதும் எழுத்தமைப்பில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும் இஃது பிற்காலத்ததே எனக் கூறுவர். இம்மூன்று செப்பேடுகளும் பல்லவ மன்னன் சிவகந்தவர்மனுடைய காலத்தைக் கணிப்பதற்கு உதவவில்லை. மயிதவோலு செப்பேட்டை வெளியிடும்போது சிவகந்த வர்மன் இளவரசனாக இருந்தான் என்பதும் பாரத்துவாச கோத்திரத்தில் பிறந்த அவன் காஞ்சிபுரத்தில் இருந்து இச்செப்பேட்டை வெளியிட்டான் என்பதும் இச்செப் பேட்டிலிருந்து தெரிகின்றன.

ஹீரஹதஹள்ளி செப்பேட்டில் சிவகந்தவர்மனை இராசாதிராசன் என்றும் பாரத்துவாச கோத்திரத்தில் பிறந்து, அக்னித்தோம, வாஜபேய, அசுவமேத வேள்விகளைச் செய்தவன் என்றும் தெரிவிக்கிறது. சிவகந்தவர்மன் காஞ்சிபுரத்திலிருந்து தன்னுடைய அதிகாரிகளுக்கு ஆணை இடுவதாக இச் செப்பேடு அமைந்துள்ளது.

குண்டூர் மாவட்டத்திலுள்ள குணபதேயம் என்னும் இடத்தில் கிடைத்த செப்பேடுகள், யுவமகாராசன் விசயபுத்தவர்மனுடைய தேவியும் அங்குரன் என்று முடியும்

பெயரைக் கொண்டவனுடைய தாயுமான சாருதேவி நிலக்கொடை அளித்ததாகக் கூறுகிறது.[6] மயிதவோலு, ஹீரஹதஹள்ளி, குணபதேயம் ஆகிய மூன்றிடங்களில் கிடைத்த பிராகிருத செப்பேடுகளும் ஓரளவு வளர்ச்சியுற்ற பிராமி எழுத்துகளில் எழுதப் பெற்றுள்ளன. இந்த எழுத்துகள் நாகார்ச்சுன கொண்டாவில் காணப்பெறும் எழுத்துகளைப் பெரும்பாலும் ஒத்துள்ளன வென ஆராய்ச்சி யாளர் கூறுவர். மயிதவோலுச் செப்பேட்டையும் ஹீரஹதஹள்ளி செப்பேட்டையும் வெளியிட்ட மன்னன் ஒருவனே என்றும் அவன் சிவகந்தவர்மனே என்றும் சிலர் கூறுவர். குணபதேயச் செப்பேட்டில் கூறப்பெற்ற விசயகந்த வர்மனும் முதலாம் ஓங்கோட்டுச் செப்பேட்டில் குறிப்பிடப் படும் கந்தவர்மனும் ஒருவராக இருக்கலாம் என்று டி.சி.சர்க்காரின் கருத்தாகும்.[6.அ]

ஆந்திர நாட்டில் குண்டூர் மாவட்டத்திலுள்ள மஞ்சிக்கல்லு என்னும் இடத்திலிருந்து கிடைத்த பிராகிருத மொழிக் கல்வெட்டில் சிம்மவர்மன் எனும் பெயர் காணப் பெறுகிறது. இஃது ஓரளவு வளர்ச்சியுற்ற பிராமி எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதப் பெறுகிறது.[6.ஆ] ஆகவே, கி.பி. நான்காம் நூற்றாண்டில் சிம்ம வர்மன் என்ற பல்லவ மன்னன் ஆட்சி புரிந்தான் என்று கொள்ளலாம். மற்றச் செப்பேடுகளில் குறிக்கப்பெறும் அரச மரபுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வளவு முற்காலத்தில் சிம்மவர்மன் என்பான் இருந்ததாகக் கூறமுடியவில்லை. எனவே இச்சிம்மவர்மன், பல்லவர்களில் வேறு கிளை வழியைச் சேர்ந்தவனாக இருக்கக்கூடும் என்று டி.என். சுப்பிரமணியம் கூறுகிறார்.[7] ஆனால் இந்தச் சிம்மவர்மன் மயிதவோலு-ஹீரஹதஹள்ளி செப்பேடுகளை வெளியிட்ட சிவசுகந்தவர்மனின் தந்தையாக இருக்கலாம் எனக் கருதுவாருமுளர்

வடமொழிச் செப்பேடுகள்

அண்மைக் காலத்தில் கிடைத்த சிக்மகளூர் செப்பேட்டையும் சேர்த்து மொத்தம் 16 செப்பேடுகள் வடமொழியைக் கையாண்ட பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்டனவாகத் தெரிகின்றன. இவைகளில் காணப்பெறும் எழுத்து வடிவம் வளர்ச்சியுற்ற பிராமி எழுத்தாகவும் பலவற்றில் பல்லவ கிரந்த எழுத்துகளாகவும் காணப் பெறுகின்றன.

இச்செப்பேடுகளில் வீரவர்மனின் மகனான விசயகந்தவர்மனுக்குரியதாக ஒரு செப்பேட்டையும் (ஓங்கோடு-1)[8] விசயகந்தவர்மனின் மகனான சிம்மவர்மனைச் சேர்ந்ததாக மூன்று செப்பேடுகளையும் (வேசந்தா),[9] நெடுங்கராயம்[10], உருவப்பள்ளி[11] இளவரசர் விட்டுணு கோபவர்மனின் மகனான சிம்மவர்மனைச் சார்ந்ததாக ஆறு செப்பேடுகளையும் (தர்சி[12] சிக்மகளூர்,[13] மிகிரா,[14] மங்களூர்,[15] விடிவெட்டி,[16] ஓங்கோடு[17] பிற்காலத்தைச் சேர்ந்ததாக மூன்று செப்பேடுகளையும் (சுரா,[18] சேந்தலூர்[19] ஹொசக் கோட்டை)[20] கூறலாம். இச்செப்பேடுகளில் பெரும்பாலானவற்றில் செப்பேட்டை வெளியிட்ட மன்ன னுடைய பெயரையும் அவனது தந்தை, பாட்டன், முப்பாட்டன் ஆகியோர்களுடைய பெயர்களையும் காணமுடிகிறது. மேலும் இவற்றில் அரசியல் சமுதாயச் சூழ்நிலைகளைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளுகிறோம். அக்காலத்தில் நிலவிய நாட்டுப் பிரிவுகள், அரசியல் அதிகாரிகள், வணிகப் பொருட்களுக்கும் மற்றவைகளுக்கும் விதிக்கப் பெற்றிருந்த வரிவகைகள் மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

வடமொழியிலும் தமிழிலும் பொறிக்கப் பெற்ற செப்பேடுகள்

முற்பகுதியில் வடமொழியும் பிற்பகுதியில் தமிழும் கலந்து எழுதப் பெற்ற செப்பேடுகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கிடைக்கின்றன. இவைகளில் மிகவும் பழமையானது சிம்மவர்மன் காலத்திய பள்ளன்கோயில் செப்பேடாகும்.[21] இதற்கடுத்து முதலாம் பரமேசுவரவர்மனின் கூரம் செப்பேட்டைக் கூறவேண்டும்[22]. நந்திவர்மன் காலத்திய கசாக்குடி,[23] புல்லூர்,[24] தண்டந்தோட்டம்,[25] கொற்றங்குடி[26] ஆகியவைகளும் மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப்பாளையம் செப்பேட்டையும் கூறலாம்.[27] முதலாம் பரமேசுவரவர்மனுடைய உன்னகுரவயச் செப்பேடுகளும்,[28] இரண்டாம் நரசிம்ம வர்மனுடைய ரேயூருச் செப்பேடும்[29] இரண்டாம் நந்திவர்மனுடைய உதயேந்திரம் செப்பேடும்[30] வட மொழியில் மட்டும் எழுதப்பெற்றிருந்த போதிலும் அவை மேற்கூறப் பெற்ற வடமொழித் தமிழ்ச் செப்பேடுகளின் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

கந்த சிசியனின் இராயக்கோட்டைச் செப்பேடு வடமொழி தமிழ் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. நிருபதுங்கவர்மன் காலத்தில் பொறிக்கப்பெற்ற பாகூர்ச் செப்பேடுகளும் அபராசிதவர்மன் காலத்திய வேலஞ்சேரிச் செப்பேடுகளும் இதிலடங்கும்.[31] இராயக்கோட்டைச் செப்பேடுகளில் கூறப்பெற்ற கந்த சிசியன் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. டி.என். சுப்பிரமணியம் இவனைச் சித்திரமாயன் காலத்தில் இருந்த ஒரு பல்லவ மன்னனாக இருக்கக்கூடும் என்று கூறியுள்ளார்.[32]

பல்லவர் செப்பேடுகளும் இலக்கியங்களும்

மேற்கூறப்பெற்ற செப்பேடுகளின் துணை கொண்டு தான் பல்லவர் வரலாற்றை ஓரளவிற்கு முழுமையாக அறிய முடிகிறது. சிம்மவர்மன் காலம் முதல் பல்லவர்களின் மரபு

வழியை இச்செப்பேடுகளின் வடமொழிப் பகுதிகள் தெரிவிக்கின்றன. மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப் பாளையச் செப்பேடுகளில் "அசோகவர்மன் போன்ற மன்னர்களுக்குப் பிறகு காலபர்த்துரு பிறந்தான். அவன் மகன் ரூத பல்லவன்;அவனுக்குப் பிறந்தவன் வீரக்கூர்ச்சன். இவன் நாகராசன் மகனுடைய கைத்தலத்தோடு அரசையும் கைப்பற்றினான்''[33] என்று கூறப் பெற்றுள்ளது. இச் செய்தியும் தமிழிலக்கியங்களில் காணப்பெறுகிறது. "சோழ அரசன் கிள்ளி என்பான் நாகலோகம் சென்று நாகக்கன்னி ஒருத்தியை மணந்து சிறிது காலம் அங்கே வாழ்ந்தான். பின்னர் அந்த நாகக்கன்னிகை, தன்னுடைய ஆண் நழந்தைக்குத் தொண்டைக்கொடியொன்றை அடையாள மாகக் கட்டி, தந்தையான சோழ மன்னனிடம் கப்பல் மூலம் அனுப்பிவைத்தாள். அக்குழந்தையை அடையாளம் கண்டு சோழ மன்னன் எடுத்து வளர்த்துத் தன் நாட்டின் ஒரு பகுதிக்கு இளவரசனாக முடி சூட்டி அப்பகுதியைத் "தொண்டை மண்டலம்'' என்று அழைத்தானென்ற செய்திகளைக் கொண்டு பல்லவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சில ஆராய்ச்சியாளர் கூறுவர்.

செப்பேடுகள் கிடைத்த பகுதிகள்

பிராகிருத மொழியில் எழுதப்பெற்ற மூன்று செப்பேடுகளும், மஞ்சுகல்லு (நல்லமலை) கல்வெட்டும் தமிழ் நாட்டின் வட பகுதியிலுள்ள ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ளன. ஆனால் செப்பேடுகள் மூன்றும் அரசன் காஞ்சிபுரத்தில் இருந்தே ஆணையிட்டான் என்று தெரிவிக்கின்றன. இவற்றால், சிம்மவர்மன், சிவசுகந்தவர்மன் முதலிய முற்காலப் பல்லவ மன்னர்களின் ஆட்சியில், ஆந்திரக் கருநாடகப் பகுதிகள் அடங்கியிருந்தன என்பதை நாம் அறியலாம்.

வட மொழியில் எழுதப்பெற்ற பெரும்பாலான செப்பேடுகள் ஆந்திரப் பகுதிகளிலிருந்தே கண்டெடுக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் திரு டி.ஜி. ஆராவமுதன் என்பார், காஞ்சிபுரம் ஆந்திரப் பகுதியில் இருந்த ஓர் ஊரென்றும் அங்குத்தான் முற்காலப் பல்லவர்கள் தங்கியிருந்து தங்களுடைய அரசாணைகளை வெளியிட்டார்கள் என்றும் கருத்தைத் தெரிவித்தார்.[34] ஆனால், இக்கருத்து ஏற்புடைய தாகத் தோன்றவில்லை. முற்பகுதியில் வடமொழியிலும் பிற்பகுதியில் தமிழ் மொழியிலும் எழுதப் பெற்ற செப் பேடுகள் அனைத்தும் தமிழ் நாட்டிலேயே கிடைத்துள்ளன. பல்லவர்களுடைய ஆட்சியின் எல்லை, தென்பகுதியில் விரிவடைந்த காலங்களில் செப்புப் பட்டயங்கள் தமிழில் எழுத வேண்டியநிலை தோன்றியதெனக் கூறலாம். தமிழ்நாட்டில் கிடைத்துள்ள பல்லவர் செப்பேடுகளுக்கும் ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளுக்கும் இடையே சில வேறுபாடுகளைக் காண முடிகிறது. ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளில், கொடையளித்த மன்னனையும் சேர்த்து நான்கு தலைமுறையினர் தான் தெரிவிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளில் கொடையளித்த மன்னனும் அவனது முன்னோர்களும் புராண பரம்பரையும் கூறப் பெற்றுள்ளன.

செப்பேடுகளின் முத்திரைகளிலும் சில வேறுபாடு களை நாம் காண்கிறோம். ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளின் முத்திரைகளில் அட்டமங்கலங்களின் உருவங்கள் காணப்படவில்லை. நந்தியைத் தவிர பிறைச் சந்திரன், சூரியன் அல்லது விண்மீன், சிரீவத்சம் போன்ற உருவங்கள் பெரும்பாலும் காணப்பெறும். பெரும்பாலான வற்றில் கொடையளித்த மன்னனின் பெயர் எழுதப் பட்டிராது. அவ்விதம் எழுதப் பெற்றிருந்தாலும் முத்திரை யின் நடுவில் ஒரு வரியில் அரசனின் பெயர் மட்டும் பொறிக் கப்பட்டிருக்கும். தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளின் முத்திரைகளில் படுத்திருக்கும் நந்தியின் உருவத்தோடு எண்

வகை மங்கலப் பொருட்களின் உருவங்களும் சூரியன், சந்திரன் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாகக் காணப் பெறும். அவ்வுருவங்களைச் சுற்றி விளிம்பின் உட்புறமாக அரசனின் முத்திரை வாசகம் ஒரு வரியில் எழுதப் பெற்றிருக்கும்.

மேற்கூறப்பெற்ற வேறுபாடுகளைக் கண்டுணர்ந்த திரு டி.என். சுப்பிரமணியம், ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளைப் பற்றிப் பின்வருமாறு குறித்துள்ளார். "ஜிதம் பகவதா என்று தொடங்கி தானத்தை வழங்கிய அவனுடைய முப்பாட்டன், பாட்டன், தந்தை ஆகிய மூவரையும் சேர்த்து நான்கு தலைமுறைகளைப் பற்றியே கொடுக்கப்பட்டிருக்கும். அவர்களுடைய புகழ்மாலையும் ஒரே முறையில் குறிப்பிட்டுச் சில சொற்றொடர்களைக் கொண்டு அமைந்திருக்கும். இறுதியில் காணப்படும் பல சுருதி சுலோகங்களைத் தவிர மற்றப் பகுதி உரைநடையாகவே காணப்படும். இதை ஆராய்ந்து பார்த்தால் முன்னதாக அமைக்கப்பெற்ற ஒரு வாசகத்தில் சூழ்நிலையையொட்டி அரசனுடைய பெயரையும் அவன் முன்னோர்களுடைய பெயர்களையும் அந்தந்த இடங்களில் இட்டு நிரப்பி அது நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகும்[35]" என்பார்.

செப்பேடுகள் பெற்றவர்கள்

இதுகாறும் கிடைத்துள்ள பல்லவர் செப்பேடுகளில் 20 செப்பேடுகள் அந்தணர்களுக்குப் பிரமதேயமாக நிலக் கொடை அளிக்கப்பட்டதையும் இரண்டு செப்பேடுகள் சமணப் பள்ளிகளுக்குப் பள்ளிச் சந்தமாக நிலக்கொடை அளிக்கப் பெற்றதையும் இரண்டு செப்பேடுகள் சிவன் கோயிலை எடுப்பித்துத் தேவதானமாக நிலக்கொடை அளிக்கப் பெற்றதையும், இரண்டு செப்பேடுகள் வைணவக் கோயில்களுக்குத் திருவிளையாட்டமாக நிலக்கொடை அளிக்கப்பெற்றதையும் ஒரு செப்பேடு பாகூரில் இருந்த

கல்விக் கூடத்திற்கு வித்யாபோகமாகத் தரப்பட்டதையும் தெரிவிக்கின்றன. ஒரு செப்பேட்டில் திருத்தணி முருகப் பெருமான் கோயிலுக்குக் கொடையளித்த செய்தி குறிப்பிடப்படுகிறது.

பொதுவாக இச்செப்பேடுகளில், பல்லவ மன்னர்கள் தங்களுடைய ஆயுள், தருமம், வெற்றி ஆகியவை சிறந்து விளங்குவதற்கு அவர்கள் அளித்த கொடைகள் பற்றிக் கூறப் பெற்றுள்ளன.[36] மேலும், அரசர்களுடைய முதன்மை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க அளித்த கொடை களைப் பற்றியும் தெரிவிக்கின்றன. இவற்றிலிருந்து முற்காலத்தில் அரசர்கள் நேரிடையாகத் தங்களுடைய ஆணையின்படி அளிக்கப் பெற்ற கொடைகளைத்தான் செப்புப் பட்டயங்களில் எழுதி வைக்கும்படிச் செய்தனர் எனத் தெரிகிறது. கசாக்குடிச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில் 'கோனோலை' என்ற சொற்றொடர் காணப் பெறுகிறது. விட்டுணுபுராணம் என்னும் நூலில், "அரசன் அந்தணர்களுக்கு நிலங்களைக் கொடையாக அளிக்க வேண்டும். செப்பேடுகளில் அரசனது முத்திரை பதிப்பிக்கப் பெற்றிருக்க வேண்டும். அரசனது முன்னோர்களைப் பற்றியும் எழுதப் பெற்றிருக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.[37] தமிழ் நாட்டில் கிடைத்த சில கல்வெட்டுகளில் செம்பிலும் சிலையிலும் வெட்டுவித்துக் கொள்க என்று அரசாணை குறிக்கப்பட்டுள்ளது. விட்டுணு புராணத்தில் கோடிட்டுக் காட்டியுள்ள விதிகளை நன்கு கடைப்பிடித்து எழுதப் பெற்றுள்ள செப்பேடுகள் தமிழகத்தில்தான் அதிகமாகக் கிடைக்கின்றன. பல்லவர் செப்பேடுகளில் காணப்பெறும் வடமொழி, தமிழ் ஆகிய இரு பகுதிகளில் தமிழ்ப் பகுதியில்தான் கொடையைப் பற்றிய செய்தி காணப் பெறுகிறது. இம்முறை தற்காலத்தில் எழுதப் பெறும் ஆவணங்களிலும் பின்பற்றப் பெறுகிறது.[38]

வடமொழிப் பகுதியின் அமைப்பு

கடவுள் வாழ்த்தோடு தொடங்கப்பெறும் வடமொழிப் பகுதி கொடையளிப்போரின் குலத்தோற்றம் முன்னோர் களின் வரன்முறை, அவர்களது வீரச் செயல்கள் ஆகியவற் றைத் தொகுத்துக் கூறிய பிறகு, கொடையளித்த மன்னனின் சிறப்பு அவனது இருப்பிடம், ஆட்சியாண்டு முதலியவற்றைக் கூறுகிறது. பின்னர், கொடையைப் பெறுபவர்களுடைய இருப்பிடங்கள் அவர்களது குலம், கோத்திரம் முதலியவற் றைத் தெரிவித்துக் கொடையளிக்கப் பெற்ற ஊர் அல்லது நிலங்களை விவரித்துக் கூறும் தன்மையில் அமைந்திருக்கிறது. இப்பகுதியின் உதவி கொண்டு கொடையளித்த மன்னனுடைய முன்னோர்களையும் அவர்களுடைய சமகாலத்து அரசர்களையும் குறுநில மன்னர்களையும் பற்றி நாம் உணர முடிகிறது. மேற்கூறப்பெற்ற அரசர்களும் குறுநில மன்னர்களும் செய்த போர்கள், அவர்களுடைய அறக்கொடைகள் ஆகியவற்றையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

வடமொழிப் பகுதியில், கொடையளித்த மன்னர்கள், தெய்வங்களோடு ஒப்பிட்டப் பெற்றுப் புகழப் பெறுவர். அம்மன்னர்களின் பண்புநலங்களும் அவர்களுடைய தேவிமார்கள், புதல்வர், புதல்விகள் முதலியோரைப் பற்றியும் குறிப்புகள் காணப் பெறும். அரசியர்களின் பிறந்த நாடு, அரசகுலம், சமயம் முதலியனவும் தெரிகின்றன.

தமிழ்ப் பகுதியின் தன்மை

செப்பேடுகளில் தமிழில் எழுதப்பெற்ற பகுதியில் கொடையளிக்கும் மன்னனுடைய ஆட்சியாண்டு, கொடை யளிக்கப் பெற்ற ஊர் அல்லது நிலத்தின் இருப்பிடம் முதலிய செய்திகள் காணப் பெறுகின்றன. நிலக்கொடையைப் பெற்றவர்களின் கல்வித் தகுதி, கோத்திரம், சூத்திரம் முதலியவைகளும் இறையிலி நிலங்களா அல்லது குடிநீங்கிய

அல்லது குடிநீங்காத் தேவதானங்களா என்பதும், அரசாங்கத் திற்குரிய வரிகள் நீங்கியவையா அல்லது நீக்கப்படாதவையா என்பதும் கூறப் பெற்றிருக்கும்.[39]

கொடையளிக்கப் பெற்ற பிரமதேயங்களுக்கும் அதில் உள்ள நிலங்களுக்கும் எவ்வித நீர்ப்பாசன ஏந்துகள் இருந்தன என்ற செய்திகளும் காணப் பெறுகின்றன.[40] ஆந்திரப் பகுதிகளில் கிடைத்துள்ள பல்லவர் செப்பேடுகளில் தமிழ்ப் பகுதி காணப் பெறவில்லை. ஆகவே அச்செப்பேடுகளில் கொடையளிக்கப் பெற்ற நிலங்களின் எல்லைகள் கூறப் பெறவில்லை. ஆந்திரப் பகுதியில் கிடைத்த செப்பேடுகளில் ஆட்சியாண்டு குறிப்பிடப் பெற்றவுடன் எந்தப் பருவத்தில் வெளியிடப்பட்டது என்பதைத் தெரிவிக்க வேனிற்காலம், கார்காலம், பனிக்காலம் ஆகியவற்றுள் ஒரு காலம் தரப்பட்டிருக்கிறது.[41] இத்தகைய காலப் பிரிவுகள் தமிழ்ப் பகுதிகளில் காணப் பெறவில்லை.

அரசர்களது ஆணையின் பேரில் இச்செப்பேடுகள் எழுதப் பெற்றமையால் அவை வெகு கவனத்துடன் வெளியிடப்பெற்றன எனக் கூறலாம். மயிதவோலு,[42] ஹிரஹதஹள்ளி[43] செப்பேடுகளின் தொடக்கத்தில் 'திருஷ்டம்' என்ற சொல்வருகிறது. இச் சொல்லிற்குச் 'சரி பார்க்கப்பட்டது', என்று பொருள் கூறுகின்றனர். அவ்வா றாயின் மன்னர்கள் ஆணையிட்ட ஒவ்வொரு செப்பேடும் நன்கு சரிபார்க்கப்பட்ட பின்னரே வெளியிடப் பெற்றது என்பது புலனாகின்றது.

மங்கலச் சொற்கள்

மயிதவோலு, ஹிரஹதஹள்ளி, குணபதேயச் செப் பேடுகள் 'சித்தம்' என்ற மங்கலச் சொல்லைக் குறித்து விட்டு மற்ற செய்திகளைத் தெரிவிக்கின்றன. சித்தம் என்றால் காரியத்தில் வெற்றி கிட்டட்டும் என்ற பொருளோடு காத்யாயனர் காலத்தில் வழக்கில் இருந்ததாகத்

தெரிகிறது.[43.அ] இந்தச் செப்பேடுகளுக்குக் காலத்தால் பிந்திய வடமொழி செப்பேடுகளில் 'ஜிதம்பகவதா' என்ற சொல்லோடு 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச்சொல் காணப் பெறுகிறது. இச்சொல்லிற்கு 'மங்கலம் உண்டாகட்டும்' என்பது பொருளாகும். இதைவிட மிகப் பொருத்தமான சொல் 'அருளிச்செயல்' என்ற சொல் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்பெறுகிறது.[43.ஆ] வேலூர்ப்பாளையச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில் 'ஸ்வஸ்திஸ்ரீ' நமசிவாய[43.இ] என்ற மங்கலச் சொற்கள் காணப்படுகின்றன. மற்றச் செப்பேடுகளில் தமிழ்ப்பகுதி 'கோவிசைய' என்ற சொற்றொடருடன் பொறிக்கப் பெற்றுள்ளது. இராயக்கோட்டை,[44] புல்லூர்[45] செப்பேடுகளில், 'ஸ்வஸ்திஸ்ரீ', 'கோவிசைய' என்ற சொற்கள் தொடக்கத்தில் காணப்பெறுகின்றன. கசாக்குடிச் செப்பேட்டின் தமிழ்ப்பகுதி 'கோன்ஒலை' என்று தொடங்குகிறது. இம்முறை பிற்காலத்தில் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் 'சோழ கோன்' என்று காணப் பெறுகிறது.

பாண்டியர் காலச் செப்பேடுகள்

பல்லவ மன்னரோடு சமகாலத்தவரான பாண்டிய மன்னர்களுடைய செப்பேடுகள் இதுவரையில் ஆறு கிடைத்துள்ளன. இந்த ஆறு செப்பேடுகளும் பாண்டிய நாட்டுப் பகுதிகளிலே கண்டெடுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர் (சிறிய செப்பேடு) ஆகிய மூன்றும் சடைய வர்மன் பராந்தக நெடுஞ்சடையனுடைய காலத்தைச் சேர்ந்தவையாகும். தளவாய்ப்புரம் செப்பேடு பராந்தக வீரநாராயணனுடைய காலத்தைச் சேர்ந்ததாகும். சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் இரண்டாம் இராசசிம்மன் காலத்தையும் சிவகாசிச் செப்பேடுகள் வீரபாண்டியனின் காலத்தையும் சேர்ந்தனவாகும்.

இச்செப்பேடுகள் அனைத்திலும் முற்பகுதி வடமொழியிலும் பிற்பகுதி தமிழிலும் எழுதப் பெற்றுள்ளன. பல்லவர் செப்பேடுகளைப் போலவே வடமொழிப் பகுதியில் கடவுள் வணக்கமும் பாண்டியர் மரபு தோன்றியவிதமும் கொடையளித்த மன்னனுடைய முன்னோர்களின் வரன்முறையும், கொடையளித்தவனுடைய சிறப்பும் கொடையைப் பற்றிய சில குறிப்பும் காணப் பெறுகின்றன. தமிழ்ப் பகுதியில் பல்லவர்களுடைய செப்பேடுகளுக்கும் பாண்டியர்களுடைய செப்பேடுகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் உள்ளன.

பாண்டியர்களுடைய செப்பேடுகளின் தமிழ்ப் பகுதிகள் எவ்வித மங்கலச் சொல்லும் இல்லாமல் தொடங்குகின்றன. இச்செப்பேடுகளில் தமிழ்ப் பகுதியில் கொடையளிக்கும் முன்னோர்களைப் பற்றி வடமொழிப் பகுதியில் குறிப்பது போன்றே குறிக்கப் பெற்றிருப்பது பல்லவர் செப்பேடுகளில் காண முடியாது.[46] பாண்டியர் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதியில் ஒவ்வொரு மன்னனுடைய வெற்றிச் சிறப்புகளும் விரிவான முறையில் தரப்பட்டுள்ளன.[47] இவை, பிற்காலச் சோழர்களின் மெய்க்கீர்த்திப் பகுதிகளுக்கு முன் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

ஆட்சியாண்டு குறிப்பிடும் முறை

தமிழ்ப் பகுதியில் கொடையளிக்கும் மன்னனின் ஆட்சியாண்டு குறிப்பிடப்படும் முறையும் புதுமையாக உள்ளது. தளவாய்ப்புரச் செப்பேட்டில் "தன் செங்கோல் யாண்டு நாற்பதில் மேல் மூன்றோடு ஈராண்டில்[48] என்று கூறப்பட்டுள்ளது. சின்னமனூர்ப் பெரிய செப்பேடு, "இராஜ்யவர்ஷம் இரண்டாவதன் எதிர் பதினான்காம் ஆண்டில்" என்று குறிக்கிறது.[49]

பாண்டியர் செப்பேடுகளின் தமிழ்ப்பகுதியில் அரசன் அக்கொடையை அளிக்கும்பொழுது எங்கு தங்கியிருந்தான்,

யாருடைய வேண்டுகோளின்படி அக்கொடை அளிக்கப் பெற்றது; ஆணத்தியாக இருந்தது யார்; தமிழ்ப் பகுதியைப் பாடிய கவிஞருடைய பெயர்; அதைச் செப்பேட்டில் எழுதியவருடைய பெயர் முதலிய செய்திகள் தெளிவாகக் கூறப் பெற்றுள்ளன.

இத் தமிழ்ப் பகுதி பெரும்பாலும் செய்யுள் நடையில் காணப் பெறுகிறது. இதைப் பாடிய கவிஞன் நிலக்கொடை அளிக்கப் பெற்றுள்ளான். வேள்விக்குடிச் செப்பேட்டில் தமிழ்ப் பகுதியைப் பாடியவன், "இப்பிரசஸ்தி பாடின சேனாபதி ஏனாதி ஆன சாத்தஞ் சாத்தற்கு" எனவரும் தொடரால் சாத்தஞ்சாத்தன் என்ற பெயர் அறியப்படுகிறது.[50] அஃதுடன் அவனுக்கு, 'மூன்று கூற்றாருமாய்த் தங்களோடொத்த நான்கு படாகாரங் கொடுத்தார்' என்ற செய்தியும் புலனாகிறது.[51] தளவாய்ப்புரச் செப்பேடுகளில்

"தேர்மிகுமாம் கடற்றானைத் தென்னவர்கோன் திருவருளால்
சீர்மிகு செப்பேட்டிற்குச் செந்தமிழ்ப்பா
தொடை செய்தோன்
இருயுக மெனும் ஊழிக்கண் அவிர்சடைமுடி அரன் வேண்ட
நற்பரசு நிர்மித்தவன் அவிர்சடைமேல் அலங்கல் பெற்ற
மாமுனி மனுவழி வந்தோன் பாமரு பண்டிதராசன்
பொன்வரன்றி மணிவரன்றி அகில் வரன்றி கரைபொருபுனல்
தென் வையை வளநாடன் செழுங்குண்டூர் நகர்த் தோன்றல்
பாண்டித் தமிழாபரணன் என்னும் பல
சிறப்புப் பெயரெய்திய
பாண்டிமாராயப் பெருங்கொல்லனாகிய ஸ்ரீ வல்லவன்"[52]
என்பவரால்,சீரிய செழும்பணியிதற்குச் செப்பேடு ஆரியம்
வீராய்த் தமிழ்தொடுத்த மதியார்"

என்று புகழ்ந்துள்ளது.

இதில் இவருக்கு இறையிலியாக நிலம் அளிக்கப்பெற்ற செய்தியும் தெரியவருகிறது.[53]

பிரசஸ்தி, பிரசஸ்திசேஷம்

செப்பேடுகளில் வடமொழிப் பகுதிக்குப் பிரசஸ்தி என்றும் தமிழ்ப் பகுதிக்குப் பிரசஸ்திசேஷம் என்றும் பெயர்கள் வழங்கியுள்ளனர்.[54]

தளவாய்ப்புரச் செப்பேட்டில் பிரசஸ்தியை இயற்றியவன் "சிரீ வல்லப மங்கலத்தில் வசிப்பவனும் வாக்காளனுமான மாதவிகவி" என்றும், பிரசஸ்திசேஷத்தை இயற்றியவன் "பாண்டிய த்ரமிடர்களுக்கு அலங்கார மானவனும் கருமார் குலத்தில் முக்கியனும் சிவபாதத் தாமரையைத் தியானிப்பவனுமாகிய கவி" என்றும் கூறப்பட்டுள்ளது. இவனைத்தான் தமிழ்ப் பகுதி "பாண்டியத் தமிழாபரணர்" என்றும் "பல சிறப்புப் பெயர்களை யடைந்த பாண்டி மாராகிய பெருங்கொல்லனாகிய சிரீவல்லவன்" என்று தெரியப் படுத்துகிறது.

சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டின் பிரசஸ்தியைக் "கலைகள் அனைத்தும் கற்றவனும் அடக்கம், நீதி இவற்றின் பிறப்பிடமுமான விஷ்ணு என்பவனின் முன்தோன்றலும் மதுகுமரனின் நண்பனுமான வாசுதேவன் என்பான் இயற்றியுள்ளான்."[55] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிவகாசிச் செப்பேட்டின் பிரசஸ்தியை "நல்ல கவிதைக்கு இருப்பிடமானவனும் பிருகஸ்பதி போன்றவனுமான ரவி என்பவனின் பெயரனும் சாத்திர ரீதியான புகழ்மிக்க விஷ்ணுத்ராதர் என்பவர் புத்திரனும் அந்தம் என்ற கிராமத்தில் பிறந்தவனும் இந்த அரசனுக்குத் தருமோபதேசம் செய்யும் குருவுமான பார்த்திவகேசரி என்ற கவி இயற்றியவர்" என்று கூறப்பெற்றுள்ளது.[56]

செப்பேடுகளை எழுதியவர்கள்

இச்செப்பேடுகளின் தமிழ்ப் பகுதியை எழுதிய பொற்கொல்லர் பெரும்பணைக்காரனும்[57] சின்னமனூர்ச்

செப்பேட்டைப் பாண்டிப் பெரும் பணைக்காரன் மகன் அரிகேசரி என்பவனும்[58] தளவாய்ப்புரச் செப்பேட்டை "இச்சாசனத்திற்குச் செழுந்தமிழ்ப்பாடினோன் தாதை நிருபசேகரப் பெருங்கொல்லன் நிறைபுகழ் நக்கன்[59] என்பவனும் எழுதியதாகக் காணப்பெறுகின்றன. சிரீவர மங்கலச் செப்பேட்டை எழுதியவனும் இவனும் ஒருவனாகக் காணப்படுவதால் இரண்டு செப்பேடுகளும் பராந்தக நெடுஞ்சடையனைச் சேர்ந்தவை என்பது ஐயமறப் புலனாகிறது. பெரும்பணைக்காரன் என்பதற்குப் பெரிய கொல்லன் பட்டறையை உடையவன் எனப் பொருள் கொள்ளலாம்.

வடமொழிப் பகுதியில் சில புதுமைகள்

தளவாய்ப்புரச் செப்பேடு, சின்னமனூர்ப் பெரிய செப்பேடு, சிவகாசிச் செப்பேடு ஆகியவற்றின் வடமொழிப் பகுதியில் யாருக்குக் கொடையளிக்கப்பட்டது? கொடையளிக்கப் பெற்ற நிலம் எங்குள்ளது? நிலம் அளித்த அதிகாரிகள் யாவர்? என்ற செய்திகள் தரப்பட்டுள்ளன. இச்செய்திகள் பல்லவர் செப்பேடுகளில் காணப்பெறவில்லை. வேள்விக்குடி, சிரீவர மங்கலம், சின்னமனூர் (சிறியது) முதலிய பாண்டியர் செப்பேடுகளில் கூடக் காணமுடியவில்லை. ஆகவே, மேற்கூறப் பெற்ற செய்திகள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து வடமொழிப் பகுதியில் சேர்க்கப்பட்டது எனக் கூறலாம்.

இலக்கியங்களும் செப்பேடுகளும்

இச்செப்பேடுகளில் தமிழ்ப் பகுதியில் சங்ககாலப் பாண்டிய மன்னர்கள் ஓரிருவரும் அவர்களுடைய சிறப்புகளும் புகழப்பெற்றுள்ளன. "கொல்யானை பல வோட்டிக்கடா மன்னர் குழாந்தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய.ாதிராசன்"[60] என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. சின்னமனூர்ச் சிறிய

செப்பேட்டில் பாண்டிமன்னருள் ஒருவன் "ஓராயிரம் கிரது செய்தான்" என்று தெரிவிக்கிறது. இச்செய்தி, பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி வேள்விகள் செய்ததைத் தெரிவிப்ப தாகவே கருத வேண்டியுளது. சங்க இலக்கியங்களில் ஒன்றான மதுரைக்காஞ்சி, முதுகுடுமிப்பெருவழுதி யைப் 'பல்சாலை முதுகுடுமி' என்று கூறுகிறது.[61] சாலை என்பது இவ்விடத்தில் வேள்விச் சாலையாகும். எனவே, சங்க நூல்களில் கூறப்பெறும் சில வரலாற்றுச் செய்திகள் செப்பேடுகளின் மூலமாக உறுதி பெறுகின்றன.

ஆலங்கானத்துப் போர்

"பாண்டிய மன்னர்களின் முன்னோர் சிறப்புகளைக் கூறுமிடத்து,'ஆலங்கானத்து அமர்வென்று ஞாலங்காவல் நன்கு எய்தியும்''[62] என்று தளவாய்ப்புரச் செப்பேடும் "தலையாலங்கானத்தில் தன்னொக்கும் இரு வேந்தரைக் கொலைவாளிற்றலைதுமித்துக் குறத்தலையின் கூத்தொழித் தும்''[63] என்று சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றிப் பேசுகின்றன.

மதுரை நகரை அமைத்து அங்கு தமிழ்ச் சங்கம் நிறுவப் பெற்றதும் அச்சங்கத்தில் தமிழ்வளர்த்ததையும் "தென் மதுராபுரம் செய்தும் ஆங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்''[64] என்று தளவாய்ப்புரச் செப்பேடும், "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்''[65] என்று சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளும் புலப்படுத்துகின்றன. தளவாய்ப்புரச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியைப் பாடிய பாண்டித் தமிழாபரணன் என்னும் சிறப்புப் பெயர் எய்திய பாண்டிமாராயப் பெருங்கொல்லனாகிய சிரீவல்லபன் மதுரைக் காஞ்சியைப் பழுதறப் படித்துணர்ந்தவன் போல்

தெரிகிறது. ஏனெனில் செப்பேட்டின் தொடக்கமே மதுரைக் காஞ்சியின் அடிகளை ஒத்துள்ளன.

பகல் செய்யும் வெண் ஞாயிறும் இரவுசெய்யும் வெண்திங்களும்

கொடையளிக்கின்றவன், தான் அளிக்கின்ற அக் கொடை சந்திராத்தியவரை நிலை பெற்றிருக்கும் என்று கூறி அளிப்பதுதான் வழக்கமாகக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. அதைக் கூறவந்த இக்கல்வெட்டுக் கவிஞன், மதுரைக் காஞ்சியின் வரிகளாகிய "பகல் செய்யும் வெண்ஞாயிறும் இரவு செய்யும் வெண்திங்களும்"[66] என்ற பகுதியை அப்படியே "பகல் செய்யும் பருதி ஞாயிறும் இரவு செய்யும் பனிமதியும் ஞாலமும் உள்ளனவும் என்ற செந்தமிழ்ச் சொற்களால் அமைத்துள்ளான்".[67] எனவே அவனுக்குத் தமிழாபரணன் என்னும் பெயர் மிகவும் பொருத்த முடையதாகும்.

ஆரியம் விராய தமிழ்

பாண்டியர் செப்பேடுகளில் காணப்பெறும் தமிழ்ப் பகுதியில் வடமொழிச் சொற்கள் வருமிடங்களிலெல்லாம் கிரந்த எழுத்துகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இதைத் தளவாய்ப்புரச் செப்பேடு 'ஆரியம் விராயத் தமிழ்' என்று கூறுகிறது.[68] இம்முறைதான் பிற்காலத்தில் 'மணிப் பிரவாளநடை' என்று வழக்கத்தில் வந்தது போலும்.

பல்லவர் செப்பேடுகளில் தமிழ்ப் பகுதி

பாண்டியர் செப்பேடுகளில் காணப் பெறுவது போன்று தமிழ்ப் பிரசஸ்தி பகுதி இருந்திருந்தால் பல்லவர்களைப் பற்றிய தெளிந்த வரலாறு கிடைத்திருக்கும். பல்லவர்களுடைய செப்பேடுகளில், தமிழ்ப்பகுதி, தேர்ச்சி பெற்ற புலவர்களால் இயற்றப்பெறவில்லை. தமிழ்ப் பகுதி

சாதாரணமாகக் கொடையளிக்கப்பெற்ற நிலத்தையும் அதன் எல்லைகளையும் யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்ற விவரத்தையும் தெரிவிப்பனவாகவே காணப்பெறுகின்றன. ஆனால், பல்லவர் செப்பேடுகளில் வடமொழிப் பகுதி சிறந்த கவிஞர்களால் இயற்றப் பெற்றுள்ளன. இப் பகுதியின் மூலம் பல்லவர்களின் பரம்பரையைத் தெரிந்து கொள்ள ஏதுவாகிறது. பாண்டியர் செப்பேடுகளில் காணப்பெறுவது போன்ற தமிழ்ப்பிரசஸ்தி பகுதி சேர்க்கப்பட்டிருந்தால், பல்லவர்கள் யார்? அவர்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள உறவு யாது? இலக்கியங்களில் கூறப்படும் கதைகளுக்கும் அவர்களுக்கும் உண்மையில் தொடர்பு உண்டா என்ற வினாக்களுக்குச் சிறந்த விளக்கம் கிடைத்திருக்கும்.

பாண்டியர்காலச் செப்பேடுகள்

தென்னிந்திய வரலாற்றுச் சான்றுகளில் செப்பேடு களும் கல்வெட்டுகளுமே முக்கியமானவை. பல்லவர்-பாண்டியர் அரச மரபுகளை அறிவதற்கு அவை பெருந் துணை புரிந்துள்ளன. பாண்டிய மன்னர்களின் செப் பேடுகளின் துணைகொண்டு கடுங்கோன் வழிவந்த பாண்டியரின் வமிசாவழி, அவர்கள் கண்ட வெற்றிகள், அவர்களுடன் போட்டியிட்ட பிற பேரரசர்கள் பாண்டியர் களுடைய இலக்கிய, சமய ஈடுபாடுகள் முதலிய பல உண்மைகள் நமக்குக் கிடைத்துள்ளன. பாண்டியர்களது வரலாற்றிற்கு அவர்களும் அவர்களுடைய சிற்றரசர்களான ஆய்குல மன்னர்களும் விடுத்துள்ள பத்துச் செப்பேடுகளின் சிறப்பைப் பற்றி நாம் ஆராய்தல் முக்கியமானதாகும். அவை யாவன

1. வேள்விக்குடிச் செப்பேடுகள், 2. சிரீ வரமங்கலச் செப்பேடுகள் 3. சின்னமனூர்ச் சிறிய செப்பேடுகள் 4. தளவாய்ப்புரச் செப்பேடுகள் 5. சின்னமனூர்ப் பெரிய

செப்பேடுகள் 6. சிவகாசிச் செப்பேடுகள் 7, 8, 9, 10. ஆய்குல மன்னரின் நான்கு செப்பேடுகள்.

இவற்றுள், தளவாய்ப்புரச் செப்பேடுகளும் சிவகாசிச் செப்பேடுகளும் அண்மைக் காலத்தில்தான் கிடைத்தன. நீலகண்ட சாத்திரி 1926-இல் 'பாண்டிய வரலாறு' என்னும் நூலை எழுதும்போது அவை கிடைக்கவில்லை. இச் செப்பேடுகளின் மூலம் புதிய சான்றுகள் பல இப்பொழுது கிடைத்துள்ளன.

1. வேள்விக்குடிச் செப்பேடுகள்

இவை கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவனாகிய நெடுஞ்சடையன் பராந்தகனால் வெளியிடப்பட்டவை. இவற்றின் மூலப் படிகள் இலண்டன் அருங்காட்சியகத்தில் உள்ளன. பத்து ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டின் 18 பக்கங்களில் 115 வரிகள் பொறிக்கப் பட்டுள்ளன. பாண்டியர்குலமுன்னோனாகிய பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப் பற்றிக் கூறப்பட்ட செய்திகள் சங்கஇலக்கியச் சான்றுகளில் ஒன்றியுள்ளன. பிறகு கடுங்கோன் வழிவந்த ஆறு மன்னர்களைப் பற்றிய விவரங்கள் இச்செப்பேட்டின் மூலமாகத்தான் தெரியவருகின்றன.[68அ]

2. சிரீவரமங்கலச் செப்பேடுகள்

வேள்விக்குடிச் செப்பேட்டை அளித்த நெடுஞ்சடையன் பராந்தகனால் இச்செப்பேடுகளும் அளிக்கப்பெற்றன. இவை சென்னை அருங்காட்சியகத்தில் 15-ஆம் எண்ணிட்ட செப்பேடாகப் பாதுகாக்கப் பெற்றுள்ளன. ஏழு செப் பேடுகளில் 12 பக்கங்கள் எழுதப் பெற்றுள்ளன. இவற்றில் பராந்தக நெடுஞ்சடையன்; (அ)பல்லவர், கேரளர்; கொங்கர் மீது கொண்ட வெற்றிகள்; (ஆ) வெள்ளூர், விண்ணம் போன்ற இடங்களில் பெற்ற வெற்றிகள்; (இ)

காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் கோயில் கட்டியது; (ஈ) ஆய்வேள் அரசனை வென்றது, (உ) கரவந்தபுரத்திற்கு மதிலையும் அகழியையும் அமைத்தது ஆகிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

3. சின்னமனூர்ச் சிறிய செப்பேடு

சின்னமனூர், மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் உள்ளதொரு ஊர். இந்தச் செப்பேடுகளில் மூன்று ஏடுகள்தான் மிஞ்சியுள்ளன. இவை, இப்பொழுது மைசூரில் உள்ள இந்தியக் கல்வெட்டுத் துறை அலுவலகத்தில் உள்ளன. சிரீ வரமங்கலத்துச் செப்பேடுகளை எழுதிய அரிகேசரி என்பவனே இச்செப்பேடுகளை எழுதியுள்ளபடியாலும் வேறு சில அகச் சான்றுகளாலும் பராந்தக நெடுஞ்சடையனே இச்செப்பேடுகளை வழங்கியவன் என்று கருதப் பெறுகிறது. இவற்றில் பாண்டியரைப் பற்றிய புராணக் கதைகளும் பராக்கிரமச் செயல்களும் கூறப்பெற்றுள்ளன. இச்செப்பேடுகளுக்கு ஆணத்தி, உத்தரமந்திரியாகிய குண்டூர்த் தாயன்சிங்கன் ஆவான். இச்செப்பேட்டை எழுதியவன் பாண்டிப்பெரும் பணைக்காரன் மகன் அரிகேசரி என்பான் ஆவான்.

4. தளவாய்ப்புரச் செப்பேடுகள்

இவை மதுரை மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகில் உள்ள தளவாய்ப்புரம் என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்டன. ஏழு ஏடுகள் வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவும் பல செய்திகளைக் கொண்டுள்ளன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போரில் இரு பெருவேந்தர்களை வென்றதையும், மகாபாரதம் தமிழ்ப் படுத்தப்பெற்றதையும், மதுரையில் சங்கம் வைத்ததையும் சிறப்பித்துக் கூறுகின்றன. அரிகேசரி என்னும் அரசனும் அவனது மகன் சடைய வர்மன், அவன் மகன் இராசசிம்மன், அவன் மகன் வரகுணன், சிரீ வல்லபன், அவனுடைய

புதல்வர்களுள் வரகுணன், பராந்தகச் சடையன் என்று பாண்டிய பரம்பரை வரிசை கொடுக்கப் பெற்றுள்ளது.[69]

5. சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள்

இவை பாண்டிய மன்னன் இரண்டாம் இராச சிம்மனால் வழங்கப் பெற்றவை. கிடைத்துள்ள ஏழு ஏடுகளில் ஆராய்ச்சிக்கு உதவும் பல செய்திகள் அடங்கியுள்ளன. பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தில் இருபெரும் வேந்தர்களை வென்றதையும், மகாபாரதம் தமிழ்ப்படுத்தியதையும் மதுரையில் சங்கம் வைத்ததையும் சிறப்பாகக் கூறுகிறது. அரிகேசரிக்குப் பிறகு அவனுடைய மகன் சடிலன் இராசசிம்மன், வரகுணன், சிரீ வல்லபன், இரண்டாம் வரகுணன், பராந்தகச் சடையன் என்று பாண்டியர் குலமரபை இச்செப்பேடுகள் அளிக்கின்றன. பராந்தக நெடுஞ்சடையனின் மனைவி வானமாதேவி. இவர்களது மகன் இரண்டாம் இராசசிம்மன் இச்செப் பேடுகளை வழங்கியுள்ளான். இராசசிம்மன் அடைந்த வெற்றிகளும் வழங்கிய கொடைகளும் விவரிக்கப் பெற்றுள்ளன.

6. சிவகாசிச் செப்பேடுகள்

இந்தச் செப்பேடுகள் 1960ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பெற்று சென்னை அருங்காட்சியகத்தில் இப்பொழுது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை ஐந்து ஏடுகளைக் கொண்டவை. இவற்றில் மொத்தம் எட்டுப் பக்கங்கள் எழுதப் பெற்றுள்ளன. இதை வெளியிட்டவன் பாண்டிய அரசன் வீரபாண்டியன் ஆவான். இச்செப்பேடுகளில் காணப் பெறும் மரபுப் பட்டியலில், தீவிரகோபன், மானகுலாசனன், மானாபரணன் என்ற பல புதிய பெயர்கள் கிடைக்கின்றன. மானாபரணனுக்கும் சேர இளவரசிக்கும் பிறந்தவன் வீரபாண்டியன். இவனும், சோழர் தலைக்கொண்ட வீர பாண்டியனும் ஒருவன்தானா? என்பது ஆராயப்படுவதற்கு

இச்செப்பேடுகள் வழி வகுத்துள்ளன. திருநெல்வேலி பாண்டியர்களின் வரலாற்றிற்கு அவர்கள் வெளியிட்ட புதுக்கோட்டைச் செப்பேடுகள் துணைசெய்கின்றன.

7-10. ஆய்குல மன்னர்களின் செப்பேடுகள்

பொதியமலை, திருவாங்கூர், கன்னியாகுமரி பகுதிகளை ஆண்டு வந்த ஆய்குல மன்னர்களுடைய செப்பேட்டுச் சாசனங்கள் நான்கு கிடைத்துள்ளன. இவை பார்த்திவசேகரபுரம், திருப்புறப்பு, பாலியம், திருநந்திக்கரை என்ற இடங்களில் கிடைத்துள்ளன. அவற்றை ஆராய்ந்து வரலாற்று அறிஞர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் டி.ஏ. கோபிநாதராயர் ஆவார். பாண்டியர்களது செப்பேடுகளைப் போல, இச்செப்பேடுகளிலும் ஒரு பகுதி வடமொழியிலும் மறுபகுதி தமிழிலும் எழுதப்பெற்றுள்ளன.

தமிழ்ப் பகுதி வட்டெழுத்தில் எழுதப் பெறாமல் தமிழ் எழுத்துகளில் எழுதப்பெற்றுள்ளன. வேணாட்டுப் பகுதியைத் தனித்தாண்டு வந்த ஆய்குல மன்னர்களை, பாண்டியர்கள் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர். வெற்றிபெற்ற அரசனுடைய விருதுப் பெயர்களை அவனுக்கடங்கிய சிற்றரசர்கள் சூட்டிக் கொள்ளுவது அக்காலத்து மரபு. அம்மரபின்படியே ஆய்குல மன்னன் கருநந்தடக்கன், பாண்டிய அரசர்களின் பெயர்களான, சிரீ வல்லபன் வரகுணன் என்ற பெயர்களைச் சூட்டிக் கொண்டான். சடையன் என்ற பெயரையும் சூட்டிக் கொண்டனர். அக்காலத்தில் காந்தளூர்ச்சாலை, பார்த்திவ கேசர புரச்சாலை போன்ற சாலைகள் இயங்கிய முறையையும் ஆங்குப் படித்த சட்டர்களின் ஒழுக்கத்தைப் பற்றிய சட்டதிட்டங்களைப் பற்றிய விவரங்களையும் ஒரு செப்பேட்டிலிருந்து நாம் அறிகிறோம். அதுபோல் அவர்கள் அமைத்த கோயில்கள் அவர்களால் போற்றப் பெற்ற சமயம் முதலியவற்றையும் அறிகிறோம்.

பாண்டியர் காலத்திய நாணயங்கள்

பாண்டியர்களுடைய நாணயங்கள் பெருமளவில் கிடைக்கவில்லை என்றாலும் அக்காலத்தைச் சேர்ந்தவை என்று சொல்லக்கூடிய அழகிய செப்பு நாணயங்கள் சில கிடைத்துள்ளன. அவை சதுர வடிவாகவும் ஒருபுறம் யானையும், அட்டமங்கலக் குறிப்புகளும் மறுபுறம் பாண்டியச் சின்னங்களான இரு கயல்களும் பொறிக்கப் பெற்றுள்ளன. இவ்வகையான நாணயங்கள் மதுரையில் வையைக் கரையோரப் பகுதிகளில் கிடைத்துள்ளன. இவற்றில் எழுத்துகள் இல்லாதது ஒரு குறைபாடாகும். பிற்காலப் பாண்டியர்களின் நாணயங்கள் பலவும் கிடைத்துள்ளன. இரண்டாம் வரகுணனின் பொற்காசு ஒன்று கிரந்த எழுத்தில் அவரது பெயருடன் கிடைத்துள்ளது. பாண்டிய நாடு சோழர்களுடைய ஆட்சிக்குட்பட்டபொழுது அக்காசுகள் இங்கு வழக்கத்தில் இருந்தன. இதுபோல பாண்டியர்களுடைய ஆட்சி தொண்டை நாட்டில் பரவிய பொழுது அவர்களுடைய நாணயங்கள் அங்கே வழக்கில் வரலாயின.

பல்லவர்காலக் கல்வெட்டுகள்

பல்லவர் காலக் கல்வெட்டுகள் இதுவரையில் 300க்கும் குறைவாகவே கிடைத்துள்ளன. இவைகளுள் மிகவும் பழமை வாய்ந்த ஒரு கல்வெட்டு ஆந்திர மாநிலத்தில் மஞ்சிக்கல்லு என்னுமிடத்தில் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு சிம்ம வர்மன் காலத்தது ஆகும். இது பிராகிருத மொழியின் பிற்காலத்திய பிராமி எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது. இதற்கு அடுத்ததாக அமராவதித் தூண் கல்வெட்டைக் குறிப்பிடலாம். இக்கல்வெட்டு இப்பொழுது சென்னை 70
அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. இக்கல்வெட்டு இரண்டாம் சிம்ம வர்மன் வடநாட்டிற்கு படையெடுத்துச் சென்று திரும்பி வருகையில் 'தானியகடம்'

என்ற இடத்திலுள்ள புத்தக்கோயிலுக்கு நன்கொடை அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. 'தானியகடகம்' என்பது அமராவதியின் பழைய பெயராகும்.

இவைகளையடுத்துத் தமிழ்நாட்டில் சம்புவராயர் மாவட்டம் செங்கம் பகுதியில் கிடைத்த ஒரு நடுகல் கல்வெட்டைக் குறிப்பிட வேண்டும். இந்நடுகல் சிம்ம விட்டுணுவின் தந்தையான சிம்மவர்மன் காலத்தைச் சேர்ந்ததாகும்.[71]

இம்மன்னுடைய 23ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு அம்பேத்கார் மாவட்டம் சோழபுரத்திலும் மற்றொரு கல்வெட்டு அவ்வூர் சிவன் கோயிலில் இருந்தும் கிடைத்துள்ளது. செங்கம் நடுகல் கல்வெட்டுச் சிம்மவர்மனின் ஆறாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டிருக்கிறது. சிம்மவிட்டுணுவின் காலத்தில் இருந்து எல்லாப் பல்லவ மன்னர்களுடைய கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன.

சிம்ம விட்டுணுவின் கல்வெட்டுகள்

சிம்மவிட்டுணுவின் காலத்திய கல்வெட்டுகள் இதுகாறும் எட்டு கிடைத்துள்ளன.[72] அவற்றில் ஆறு கல்வெட்டுகள் தருமபுரி மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளன. இரண்டு கல்வெட்டுகள் சம்புவராயர் மாவட்டத்திலிருந்து[72அ] கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் அனைத்தும் நடுகல் கல்வெட்டுகளாகும். இவை தமிழ் மொழியிலும், வட்டெழுத்திலுமாக எழுதப்பட்டுள்ளன.

முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டுகள்

மகேந்திரவர்மன் காலத்திய கல்வெட்டுகள் இது வரையில் 31 காணப்பெற்றுள்ளன. மூன்று கல்வெட்டுகள் செங்கை அண்ணா மாவட்டத்தில் இருந்தும்,[73] 12 கல்வெட்டுகள் வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டத்திலிருந்தும்[74]

இரண்டு கல்வெட்டுகள் தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்தும்[75] ஐந்து கல்வெட்டுகள் திருச்சி மாவட்டத்திலிருந்தும்[76] ஒன்பது கல்வெட்டுகள் தருமபுரி மாவட்டத்திலிருந்தும்[77] படியெடுக்கப்பெற்றுள்ளன. இக்கல்வெட்டுகள் குகைக் கோயில்களிலும் நடுகற்களிலும் காணப் பெறுகின்றன. குடைவரை அல்லது குகைக் கோயில்களில் காணப்பெறும் இவனது கல்வெட்டுகள் எல்லாம் கிரந்த எழுத்திலும், வடமொழியிலும் உள்ளன. வல்லம் குகைக் கோயிலில் காணப்பெறும் ஒரு கல்வெட்டு மட்டும் தமிழ் எழுத்திலும், தமிழ் மொழியிலும் காணப்பெறுகிறது.[78] இம்மன்னன் காலத்திய நடுகல் கல்வெட்டுகள் அனைத்தும் வட்டெழுத்திலும் தமிழ் மொழியிலும் எழுதப் பெற்றுள்ளன.

முதலாம் நரசிம்மவர்மனின் கல்வெட்டுகள்

முதலாம் மகேந்திரவர்மனின் மகனாகிய முதலாம் நரசிம்மவர்மன் காலத்திய கல்வெட்டுகள் ஒன்பது கிடைத்துள்ளன. இவற்றுள் ஆறு கல்வெட்டுகள் வடார்க்காடு மாவட்டத்திலிருந்தும்[79] ஒரு கல்வெட்டு செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்தும்[80] ஒன்று தருமபுரி மாவட்டத்திலிருந்தும்[81] மற்றொரு கல்வெட்டு பாதாமியிலிருந்தும்[82] கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆந்திர மாநிலத்தில் காணப்பெறும் முதலாம் நரசிம்மவர்மனுடைய கல்வெட்டுகள் கிரந்த எழுத்திலும் வடமொழியிலும் காணப்படுகின்றன. தருமபுரி, வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டங்களில் கிடைக்கும் இவனது கல்வெட்டுகள் வட்டெழுத்திலும் தமிழ்மொழியிலும் எழுதப்பெற்றுள்ளன. வட்டெழுத்தில் காணப்பெறும் கல்வெட்டுகள் அனைத்தும் நடுகல் கல்வெட்டுகளாகும். திருக்கழுக்குன்றத்தில் உள்ள கல்வெட்டு, தமிழ் மொழியிலும் தமிழ் எழுத்திலும் உள்ளது.

இரண்டாம் மகேந்திரவர்மன் கல்வெட்டுகள்

முதலாம் நரசிம்மவர்மன் மகனாகிய இரண்டாம் மகேந்திரவர்மன் காலத்திய கல்வெட்டுகள் இரண்டு தருமபுரி, வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டங்களில் உள்ளன. இவ்விரண்டும் நடுகல் கல்வெட்டுகளாகும். வட்டெழுத்திலும் தமிழ் மொழியிலும் எழுதப் பெற்றவையாகும்.[83]

முதலாம் பரமேசுவரவர்மனின் கல்வெட்டுகள்

இரண்டாம் மகேந்திரவர்மனின் மகனாகிய இரண்டாம் மகேந்திரவர்மன் காலத்திய கல்வெட்டுகள் ஆறு கிடைத் துள்ளன. தருமபுரி, வடார்க்காடு அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் முறையே இரண்டிரண்டு கல்வெட்டுகள் கிடைத் துள்ளன.[84] சேலம், செங்கை அண்ணா மாவட்டங் களில் முறையே ஒவ்வொரு கல்வெட்டும் கிடைத்துள்ளது[85]. தருமபுரி, வடார்க்காடு அம்பேத்கார் சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கிடைத்த கல்வெட்டுகள் வட்டெழுத் திலும் தமிழ் மொழியிலும் உள்ளன. வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் கிடைத்த இரு கல்வெட்டுகளும் நடுகற்கள் ஆகும். செங்கை அண்ணா மாவட்டத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டு மட்டும் தமிழ் எழுத்திலும் மொழியிலும் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்திய கல்வெட்டுகள்

(இராசசிம்மன்) முதலாம் பரமேசுவரவர்மன் மகனாகிய இரண்டாம் நரசிம்மன் காலத்திய கல்வெட்டுகள் முப்பதிற்கு மேல் கிடைத்துள்ளன. அவற்றுள் சில துண்டுக் கல் வெட்டுகளாக மன்னனுடைய பெயரில்லாது காணப் பெற்றமையால் அவைகளை நீக்கி ஏறத்தாழ 24 கல்வெட்டுகள் முழுமையாகக் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் பதினாறும்[86] வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஐந்தும்[87] தென்னார்க்காடு

மாவட்டத்தில் இரண்டும்[88] தருமபுரி மாவட்டத்தில் ஒரு கல்வெட்டும்[89] படியெடுக்கப் பெற்றுள்ளன.

இரண்டாம் நரசிம்மவர்மன் அல்லது இராசசிம்மனுடைய காலத்திய கல்வெட்டுகள் பெரும்பாலும் கிரந்த எழுத்திலும் வட மொழியிலும் உள்ளன. மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள சாளுவன் குப்பத்துக் குடைவரைக் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்று தேவநாகரி எழுத்தில் உள்ளது.[90] தமிழ்நாட்டில் கல்வெட்டு களில் தேவநாகரி எழுத்தைப் புகுத்திய முதல் அரசன் இராசசிம்மனேயாவான். மலர்களின் வடிவிலும், பறவை களின் வடிவிலும் கிரந்த எழுத்துகள் பொறிக்கப் பெற்றிருப் பதை, இவ்வரசனால் அமைக்கப்பெற்ற கைலாசநாதர் கோயிலில் இன்றும் காணலாம். சம்புவராயர் மாவட்டத்தில் கிடைத்த ஐந்து கல்வெட்டுகளும் தருமபுரி மாவட்டத்துக் கல்வெட்டு ஒன்றும் வட்டெழுத்திலும் தமிழ் மொழியிலும் காணப்பெறுகின்றன. இவற்றுள் முதல் ஐந்து கல்வெட்டுகள் நடுகல் கல்வெட்டுகளாகும். செங்கை அண்ணா மாவட்டம் சின்ன நாகபூண்டி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த கல்வெட்டுகள் தமிழ் எழுத்திலும் மொழியிலும் உள்ளன.

மூன்றாம் மகேந்திரவர்மன் கல்வெட்டுகள்

இராசசிம்மனுடைய முதல் மகனாகிய மூன்றாம் மகேந்திரவர்மனுடைய கல்வெட்டுகள் செங்கை அண்ணா மாவட்டத்தில் மூன்று கிடைத்துள்ளன.[91] இம்மூன்றும் கிரந்த எழுத்துகளிலும், வட மொழியிலும் எழுதப்பெற்றுள்ளன.

இரண்டாம் பரமேசுவரவர்மனின் கல்வெட்டு

இராசசிம்ம பல்லவனுடைய மற்றொரு மகனாகிய இரண்டாம் பரமேசுவரவர்மன் காலத்திய கல்வெட்டு ஒன்று

மாத்திரம் தென்னார்க்காடு மாவட்டம் திருவதிகையிலிருந்து கிடைக்கிறது.[92] இக்கல்வெட்டு தமிழ் எழுத்திலும் மொழியிலும் பொறிக்கப்பெற்றுள்ளது.

இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டுகள்

சிம்மவிட்டுணுவின் தம்பி பீமவர்மனின் வழி வந்தவனான இரணியவர்மனின் மகன் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்திய கல்வெட்டுகள் பதினெட்டுக் கிடைத்திருக்கின்றன. செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்து ஆறு கல்வெட்டு களும்,[93] வடார்க்காடு சம்புவராயர் மாவட்டங்களிலிருந்து பதினொரு கல்வெட்டுகளும்,[94] திருச்சி மாவட்டத்திலுருந்து ஒரு கல்வெட்டும்[95] ஆக அவற்றின் எண்ணிக்கை பதினெட் டாகும். வடார்க்காடு மாவட்டத்துக் கல்வெட்டுகளில் இரண்டு நடுகற்கள்; ஒன்று வட்டெழுத்திலும் மற்றொன்று தமிழிலும் உள்ளன. மற்ற கல்வெட்டுகள் தமிழ் எழுத்திலும் மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

நந்திவர்மனின் கல்வெட்டுகள்

நந்திவர்மன் காலத்திய கல்வெட்டுகள் செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்து எட்டும்[96] வடார்க்காடு மாவட்டத்திலிருந்து மூன்றும்[97] திருச்சி மாவட்டத்திலிருந்து மூன்றும்[98] சித்தூர் மாவட்டத்திலிருந்து ஒன்றும்[99] தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து இரண்டும்[100] ஆக 17 கல்வெட்டுகளாகும். இவற்றுள், வடார்க்காடு மாவட்டம் பிஞ்சூரில் கிடைத்தது மட்டும் நடுகல்லாகும். இந்தப் பதினேழு கல்வெட்டுகளும் தமிழ் எழுத்திலும் மொழியிலும் எழுதப் பெற்றுள்ளன.

மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டுகள்

மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டுகள் 36 கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகள் செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்து ஆறும்[100.அ] வடார்க்காடு மாவட்டத்திலிருந்து மூன்றும்[101] தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து பதின்மூன்றும்[102] தஞ்சை மாவட்டத்திலிருந்து எட்டும்[103] திருச்சி மாவட்டத்திலிருந்து ஆறும்[104] ஆகும். திருச்சி மாவட்டம் சென்னி வாய்க்காலிலிருந்து கிடைத்த கல்வெட்டு நடுகல் கல்வெட்டாகும். இக்கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் எழுத்திலும் மொழியிலும் உள்ளன.

நிருபதுங்கனின் கல்வெட்டுகள்

மூன்றாம் நந்திவர்மனின் மகனாகிய நிருபதுங்கன் கல்வெட்டுகள் 47 கிடைத்துள்ளன. செங்கை அண்ணா மாவட்டத்தில் இருபத்திரண்டும் வடார்க்காடு சம்புவராயர் மாவடத்தில் பன்னிரண்டும், தென்னார்க்காடு மாவட்டத்தில் இரண்டும், தஞ்சை மாவட்டத்தில் ஏழும் திருச்சி மாவட்டத்தில் நான்கும் கிடைத்துள்ளன. இவையனைத்தும் தமிழ் எழுத்திலும் தமிழ் மொழியிலும் எழுதப் பெற்றுள்ளன. இவற்றுள் செங்கை அண்ணா மாவட்டம் மடவளத்தில் ஒன்றும் அம்பேத்கார் மாவட்டம் ஆம்பூரில் இரண்டும் நடுகற்கள் ஆகும்.

அபராசிதனின் கல்வெட்டுகள்

அபராசிதன் காலத்திய கல்வெட்டுகள் 18 கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. இவையனைத்தும் செங்கை அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்தவை. எல்லாக் கல்வெட்டுகளும் தமிழ் மொழியிலும் தமிழ் எழுத்திலும் உள்ளன. இவன் காலத்திய நடுகற்கள் ஏதும் கிடைக்கவில்லை.[105]

கம்பவர்மனின் கல்வெட்டுகள்

மூன்றாம் நந்திவர்மனின் மற்றொரு மகனான கம்பவர்மனின் கல்வெட்டுகள் செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்து 26 கல்வெட்டுகளும் வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டத்திலிருந்து பதினேழு கல்வெட்டுகளும் தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து ஒன்றும், நெல்லூர் மாவட்டத்திலிருந்து ஒன்றும் ஆக 45 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றுள் அம்பேத்கார் மாவட்டம் சின்னையன்பேட்டை, வீராணம், மேல்பட்டி, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள ஒலக்கூர், நெல்லூர் மாவட்டத்திலுள்ள மல்லாம் ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் நடுகற்கள் ஆகும். வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் சோழபுரத்தின் கல்வெட்டு கிரந்தம், தமிழ் ஆகிய எழுத்துகளிலும், வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப் பெற்றுள்ளன. மற்றக் கல்வெட்டுகள் தமிழ் எழுத்திலும் மொழியிலுமாக எழுதப் பெற்றுள்ளன.[106]

பிற பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகள்

மேற்கூறப்பெற்ற கல்வெட்டுகள் அல்லாது பல்லவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் வைரமேகன், அபிமானசித்தி, காடவர்களின் அரசன் என்று கூறப்படும் சத்தி, சந்திராதித்தன்,[107] கலிநாரி ஆகியோரின் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. வைரமேகன் காலத்தியக் கல்வெட்டுகள் நான்கு காணப்பெறுகின்றன. செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்து ஒன்றும்[108] வடார்க்காடு மாவட்டத்திலிருந்து இரண்டும்[109] தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து ஒன்றும்[110] ஆகும். இவையனைத்தும் தமிழ் எழுத்திலும் மொழியிலும் எழுதப் பெற்றுள்ளன.

அபிமான சித்தி என்னும் பல்லவன் காலத்திய கல்வெட்டு செங்கை அண்ணா மாவட்டத்திலிருந்தும்[111] சத்தி என்ற மன்னனின் கல்வெட்டு வடார்க்காடு

மாவட்டத்திலிருந்தும்[112] சந்திராதித்யனின் கல்வெட்டு தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்தும்[113] கலிநாரி என்பாரின் கல்வெட்டு திருநாம நல்லூரிலிருந்தும் கிடைத்துள்ளன. அபிமான சித்தியின் கல்வெட்டும் சத்தியின் கல்வெட்டும் தமிழ் எழுத்திலும், மொழியிலும் காணப்பெறுகின்றன. சந்திராதித்தியன் கல்வெட்டும் கலிநாரியின் கல்வெட்டும் கிரந்த எழுத்திலும் வட மொழியிலும் எழுதப் பெற்றுள்ளன.

கல்வெட்டுகளில் காணப்பெறும் நிலப்பகுதிகளும் அவை புலப்படுத்தும் வரலாற்று உண்மைகளும்

சிம்மவர்மன், சிம்மவிட்டுணு ஆகியோரது கல்வெட்டுகள் தருமபுரி, வடார்க்காடு பகுதியில் மட்டும் கிடைக்க, முதலாம் மகேந்திரவர்மனுடைய கல்வெட்டுகள், இந்த இரு மாவட்டங்களோடு செங்கை அண்ணா, தென்னார்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களிலும் கிடைக்கின்றன. இஃது முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் பல்லவப் பேரரசு விரிவடைந்த நிலைமையயும் சிம்மவர்மன் காலத்தில், பல்லவப் பேரரசு காஞ்சிபுரத்திற்குத் தெற்கே பரவாத நிலைமையையும் தெளிவாகக் காட்டுகிறது. ஆகவே சிம்மவிட்டுணுவின் முன்னோரின் செப்பேடுகள் ஆந்திரப் பகுதியிலேயே கிடைப்பதில் வியப்பேதும் இல்லை. காரணம் சிம்மவிட்டுணுவின் முன்னோர் ஆந்திர மாநிலத்தின் தென்பகுதியையும் தொண்டை மண்டலத்தின் வட பகுதியையும்தான் தொடக்கத்தில் ஆண்டுள்ளனர். சிம்மவிட்டுணுவின் காலத்தில்தான் தமிழ்நாட்டில் ஆண்ட களப்பிர, சோழ, பாண்டியர்கள்[114] வென்று அடக்கப்பட்டிருக்கிறார்கள். இருப்பினும்,சிம்மவிட்டுணுவின் இவ்வெற்றி அவனுடைய இறுதிக் காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடும். அவ்வெற்றியின் பயனை முழுமையாக நுகர்ந்தவன் முதலாம் மகேந்திரவர்மன்தான். ஆகவே, அவன் காலத்திய

கல்வெட்டுகள் காஞ்சிக்குத் தெற்கே திருச்சி,[115] திருமெய்யம்[116] போன்ற பகுதிகளிலும் கிடைத்திருக்கின்றன.

களப்பிரரும் முத்தரையரும்

தஞ்சை மாவட்டப் பகுதி சிலவற்றில் மகேந்திர வர்மனின் கல்வெட்டுகள் காணப்பெறவில்லை. களப்பிரர்கள் இப்பகுதியில் வலிமை பெற்றிருந்தனரோ என்று கருத வேண்டியுளது. முதலாம் நரசிம்மவர்மன் சேர, சோழ, பாண்டியர் களப்பிரர் முதலியோரை வென்றதாகக் குறிப்பிடுகிறான்.[117] எனவே, நரசிம்மவர்மனின் காலத்திலும் களப்பிரர்கள் இருந்திருக்கின்றனர் என்பது பெறப்படுகிறது. முதலாம் நரசிம்மன் களப்பிரரை வென்றதுதான் களப்பிரர்கள் ஒடுங்குவதற்குக் காரணமாக இருந்திருக்கும்.[118] இம்மன்னனுக்கு அடங்கிய சிற்றரசர்களாக முத்தரையர்கள் இந்தக் காலக்கட்டத்தில் தஞ்சைப்பகுதிக்கு வந்திருக்கக்கூடும். ஏனெனில், முதலாம் பரமேசுவரன் காலம் தொடங்கி தஞ்சைப் பகுதியில் உள்ள செந்தலையில் முத்தரையர்கள் ஆண்டு வந்தனர் என்பது செந்தலையில் கிடைத்துள்ள கல்வெட்டுகளினால் உறுதியாகிறது. இம்முத்தரையர்கள் மூன்றாம் நந்திவர்மன் காலம் வரை ஒரு சமயம் பல்லவர்க்கு அடங்கியும் பிறிதொரு சமயம் பாண்டியர்க்கு அடங்கியும் ஆட்சி புரிந்துள்ளனர்.

எனவே, இப்பகுதியில் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேசுவரவர்மன், இரண்டாம் நந்திவர்மன், தந்திவர்மன் ஆகியோர் கல்வெட்டுகளைக் காணமுடியவில்லை.[119] மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டுகள் தஞ்சைப் பகுதியில் செந்தலையிலும் அதைச்சுற்றியுள்ள பகுதியிலும் காணப் பெறுகின்றன. இவன் காலத்தில், முத்தரையர்கள் சோழ நாட்டின் கிழக்குப் பகுதிக்கு வந்து விட்டனர் என்று கூறலாம். நிருபதுங்கன் காலத்திலும் முத்தரையர்கள் இப்பகுதியில் ஆட்சி புரிந்துள்ளனர். இதனால் நிருபதுங்கனுடைய கல்வெட்டுகள் செந்தலைக் கருகில் உள்ள திருச்சின்னப்பூண்டியில் கிடைக்கின்றன.

அபராசித பல்லவன் காலத்தில் முத்தரையர்கள் விசயாலய சோழனால் தோற்கடிக்கப் பெற்றனர்.[120] அதற்குப்பின் முத்தரையர்களில் சிலர் சோழ மன்னர்களிடம் அதிகாரிகளாகப் பதவி வகித்தனர்.[121] அபராசிதன் காலத்தில் தஞ்சைப் பகுதியை உள்ளடக்கிய சோழநாடு முழுமையும் ஆதித்தசோழன் ஆதிக்கத்தில் இருந்த காரணத்தால் அபராசிதன், கம்பவர்மன் ஆகியோர்களுடைய கல்வெட்டுகளைத் தஞ்சை, திருச்சிப் பகுதிகளில் காண முடியவில்லை.

பல்லவர்களது ஆட்சியின் இறுதிக்காலம்

சோழர்கள் தலையெடுக்கத் தொடங்கியதும் பல்லவர்களின் ஆதிக்கம் குறைந்தது என்பதை அவர்களுடைய கல்வெட்டுகளில் காணப் பெறும் பகுதிகளிலிருந்து உணரலாம். அபராசிதனுடைய கல்வெட்டுகள் செங்கை அண்ணா மாவட்டத்தில் மட்டும் காணப் பெறுகின்றன. கம்பவர்மனின் கல்வெட்டுகள் செங்கை அண்ணா, வடார்க்காடு அம்பேத்கார், தென்னார்க்காடு, நெல்லூர் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. விசயாலய சோழனுக்குப் பின் வந்த பல்லவர்கள் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள ஒலக்கூருக்குத் தெற்கே நகர முடியாத அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டனர் என்பது அவர்களுடைய கல்வெட்டுகளால் புலனாகின்றது. அபராசிதனுக்குப் பிறகு வந்த பல்லவத் தலைவர்கள் ஆதித்த சோழனுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாயினர்.

பல்லவர் கல்வெட்டுகளில் எழுத்தும் மொழியும்

பல்லவர்களுடைய தமிழ்க் கல்வெட்டுகள் சிம்ம விட்டுணு காலம் முதல் இரண்டாம் நரசிம்மன் காலம் வரை 'கோவிசைய' என்றே தொடங்குகின்றன. இதுகாறும் கிடைத்துள்ள சிம்ம விட்டுணுவின் கல்வெட்டுகள் அனைத்தும் வட்டெழுத்திலேயே உள்ளன. இக்கல்

வெட்டுகள் கிடைத்துள்ள நிலப்பகுதியில் காணப்பெறும் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோாரின் கல்வெட்டு கள் வட்டெழுத்தில்தான் காணப்படுகின்றன. ஆனால், அதே சமயத்தில் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோரின் கல்வெட்டுகள் செங்கற்பட்டுப் பகுதியில் தமிழ் எழுத்திலும் மகேந்திரவர்மன் கல்வெட்டுகள் செங்கற்பட்டு, தென்னார்க் காடு, திருச்சிப் பகுதிகளில் கிரந்த எழுத்திலும் காணப் படுகின்றன. இவர்கள் காலத்தில் கிடைத்த வட்டெழுத்துக் கல்வெட்டுகள் அனைத்தும் நடுகற்களாக உள்ளன. இந்த நடுகற்கள் பெரும்பாலும் ஆனிரை கவர்ந்தபோது உயிர் துறந்த வீரனுக்காகவும் ஆனிரை மீட்டபோது உயிர் துறந்த வீரனுக்காக எடுக்கப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. இவைகள் அனைத்துமே ஊர்ப்புறப் பகுதிகளில் அமைந் துள்ளன. ஆகவே, சாதாரண நிலையிலுள்ள சமுதாய மக்கள் தங்களுக்குத் தெரிந்த எழுத்தில் எழுதி வைத்துக் கொண்டனர் எனக் கொள்ளலாம்.

கோனுக்கு ஓர் எழுத்து; குடிமக்களுக்கு ஓர் எழுத்து

முதலாம் மகேந்திரவர்மன் முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் மிகுந்த அளவில் வட்டெழுத்திலும் கிரந்த எழுத்திலும் மூன்று கல்வெட்டுகள் மட்டும் தமிழ் எழுத்திலும் கிடைத்துள்ளன. செங்கற்பட்டிற்கு அருகில் உள்ள வல்லம் குகைக்கோயிலில் ஒரு கல்வெட்டும்[122] திருமெய்யம் குடைவரைக் கோயிலில் ஒரு கல்வெட்டும்[123] திருக்கழுக்குன்றத்து மலை மண்டபத்தில் ஒரு கல்வெட்டும்[124] தமிழ் மொழியில் காணப் பெறுகின்றன. முன்னவை இரண்டும் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தவையாகும். பின்னது முதலாம் நரசிம்மவர்மன் காலத்ததாகும். வல்லத்துக் கல்வெட்டு, கந்தசேனன் என்ற பணியாள் எடுப்பித்த கோயிலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. திருமெய்யம் கல் வெட்டுச் சிதைந்த நிலையில் உள்ளது. மன்னனுடைய பெயர் குறிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. குடிமகன் ஒருவன்

அளித்த கொடையைக் குறிப்பதாகவே உள்ளது. ஆகவே மகேந்திரவர்மன் காலம் வரை குடிமக்கள் ஒருவகை எழுத்திலும் நாடாண்ட மன்னர்கள் ஒருவகை எழுத்திலும் கல்வெட்டுகளை எழுதி வந்தனர் எனக் கூறலாம்.

குடிமக்கள் கூட நடுகற்களில் பொறிப்பதற்கு ஒரு வகையான எழுத்தையும் மற்ற இடங்களில் எழுதுவதற்கு வேறு வகையான எழுத்தையும் பயன்படுத்தினார்கள் எனக் கூறலாம். இவ்விரு வகையான கல்வெட்டுகள் வெவ்வேறு இடங்களில் காணப் பெறுகின்றன. அண்மையில் தீர்த்தமலையில் கிடைத்த ஒரு கல்வெட்டும்[125] சென்னை நகரில் கிடைத்த கல்வெட்டும்[126] இந்தளூரில் கிடைத்த கோழிக்கல்வெட்டும் வட்டெழுத்தில் எழுதப் பெற்றிருக்கின்றன.

தமிழில் மிகுந்த அளவில் கல்வெட்டுகள்

இரண்டாம் நந்திவர்மன் காலம் முதல் தமிழ் எழுத்தில் கல்வெட்டுகள் மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. இரண்டாம் நந்திவர்மனுக்குக் குடிமக்களின் ஆதரவு பெருத்த அளவில் இருந்தபடியால் அவர்களுக்கு எளிதில் விளங்கக் கூடிய எழுத்திலும் மொழியிலும் தன் காலத்திய கல்வெட்டுகளை எழுதவேண்டும் என ஆணையிட்டிருக்கலாம். இவனுடைய ஆட்சிக் காலத்திற்கு முன்னர் இருந்த நடுகல்லில் வட்டெழுத்தில் எழுதும் பழக்கம் இவன் காலத்திலும் தொடர்ந்து இருந்ததெனத் தெரிகிறது.[127]

எல்லாக் கல்வெட்டுகளும் தமிழ் எழுத்தில்

தந்திவர்மன் காலம் முதல் எல்லாக் கல்வெட்டுகளும் (நடுகற்கள் உட்பட) தமிழ் எழுத்தில் மட்டும்தான் எழுதப் பெற்றுள்ளன. இவன் காலத்தையோ அல்லது இரண்டாம் நந்திவர்மப் பல்லவன் காலத்தையோ சார்ந்த கிரந்த எழுத்துக் கல்வெட்டுகள் காணப்படவில்லை. இரண்டாம் நந்திவர்மன்

காலம் முதல் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்தைப் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுவிட்டது போன்று தெரிகிறது. ஆனால், கம்பவர்மன் காலத்திய ஒரே ஒரு கல்வெட்டில் கிரந்த எழுத்தும் தமிழ் எழுத்தும் சேர்ந்து பொறிக்கப் பெற்றிருக்கிறது[128] கம்பவர்மன் காலத்துத் தமிழ்க் கல்வெட்டுகள் தெளிந்த தமிழ் நடையில் கருத்துச் செறிவுடன் எழுதப்பட்டிருக்கின்றன.

பல்லவர் கல்வெட்டுகளில் அரசனுடைய ஆட்சியாண்டைக் குறிப்பிடும் இடங்களில் எழுத்தாலேயே குறிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் இருந்து எண்ணால் குறிக்கும் முறையும் வழக்கத்திற்கு வந்தது.[129] பல்லவர்களுடைய கல்வெட்டுகள் எதிலும் கலி ஆண்டையோ அல்லது சக ஆண்டையோ குறித்துப் பொறிக்கப்படவில்லை.

பெயர்களோடு அடைமொழி

பல்லவ மன்னர்களின் பெயர்களோடு பருமர் அல்லது பன்மர், விக்கிரபருமர், போத்தரையர் என்ற அடைமொழிச் சொற்கள் காணப் பெறுகின்றன. சில மன்னர்கள் தங்கள் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க வெற்றிகளைத் தங்கள் பெயர்களுக்கு முன்னால் சூட்டிக் கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, முதலாம் நரசிம்மவர்மன் தன்னை வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்[130] என்றும் மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன்[131] என்றும் அழைத்துக் கொண்டனர்.

நடுகற்களில் பல்லவ மன்னர்களின் பெயர்கள் தூய தமிழிலேயே காணப்பெறுகின்றன. குறிப்பாக வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் ஓர் இடத்தில் கூடக் கிரந்த எழுத்தைக் காண முடியவில்லை. சிம்மவிட்டுணு நரசிம்மவர்மன் என்று வருமிடங்களில் எல்லாம் சிங்கவிண்ணபருமர்[132] என்றும், நரைசிங்க பருமர்[133], நரசிங்கபன்மர்[134] என்றும் குறிக்கப்பட்டுள்ளன. மகேந்திர வர்மனின் பெயர்

மசீந்திரபருமர்[135] மயீந்திரபருமர்[136] மயேந்திர பருமர் என்று காணப் பெறுகிறது. ஒரு கல்வெட்டில் யகரயீக்குப் பதிலாக உயிர் எழுத்தாகிய 'இ' போடப்பட்டு 'மஇந்திரபருமர்' என்றும் எழுதப் பெற்றுள்ளது. பரமேசு வரமனைக் குறிக்கும் இடத்தில் 'பரமேச்வரபருமர்' என்று எழுதப்பட்டிருக்கிறது.

நமசிவாயத் தொடக்கம்

திருமெய்யம் குடைவரைக் கோயிலில் உள்ள முதலாம் மகேந்திரவர்மன் காலத்திய இசைக்கல்வெட்டின் தொடக்கத்தில் 'நமசிவாய' என்று எழுதப்பட்டுள்ளது.[137] அப்பர் இயற்றிய நமச்சிவாயத் திருப்பதிகம்தான்[138] இவ்வாறு எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்திருக்குமோ என்று நினைக்கத் தோன்றும். அப்பருடைய தொடர்பால் முதலாம் மகேந்திரவர்மன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறினான் என்பர். அஃது உண்மைதான் என்பது போன்று மகேந்திரவர்மனின் திருச்சிக் குகைக் கல்வெட்டில் இச்சொல் காணப்படுகிறது.[139]

செங்கை அண்ணா மாவட்டம் வயலூரில் உள்ள வியாகரபுரீசுவரர் கோயிலில் காணப்படும் ஒரு தூணில் இரண்டாம் நரசிம்மன் காலத்திய கல்வெட்டு ஒன்றில் பல்லவர் குலத்தோற்றம், பிரமன் முதல் தொடங்கி 54 மன்னர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[140] இவ்வாறு மன்னர்களின் கால்வழிக் குறிக்கப்படுவது செப்பேடுகளில்தான் பெரும்பாலும் காணப்படும். ஆகவே, இந்தக் கல்வெட்டுக்குச் செப்பேட்டுப் பிரதி ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

மன்னர்களுடைய விருதுப் பெயர்கள்

பல்லவ மன்னர்கள் ஒவ்வொருவரும் பலவிதமான விருதுப் பெயர்களைக் கொண்டிருந்தனர் என்பதை அவர்களுடைய கல்வெட்டுகளிலிருந்து உணரமுடிகிறது.

சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் காணப்பெறும் முதலாம் மகேந்திர வர்மனின் கல்வெட்டு அவ்வரசன் மேற்கொண்டிருந்த 90-க்கு மேற்பட்ட விருதுப் பெயர்களைக் குறிக்கிறது.[141] இராசசிம்மனுடைய கைலாய நாதர் கோயில் கல்வெட்டு அவனுடைய பலதிறப்பட்ட பட்டப் பெயர்களைச் சுட்டுகிறது.[142]

பாடல் கல்வெட்டுகள்

பல்லவ மன்னர்களுடைய கல்வெட்டுகளில் கவிதை நடையில் அமைந்துள்ள சில கல்வெட்டுகளையும் காண முடிகிறது. முதலாம் நரசிம்மவர்மனுடைய தளவானூர் குடைவரைக் கோயிலில் 'தொண்டையம் தார்வேந்தர்'[143] என்று தொடங்கும் ஒரு பாடல் கல்வெட்டைக் காண்கிறோம்.[144] திருச்சி மாவட்டம் திருவெள்ளறையில் தந்திவர்மன் காலத்திய பாடல் கல்வெட்டு ஒன்று 'சிரீ கண்டார் காணா உலகத்தில் காதல் செய்து நில்லைதேய்' என்று கூறுகிறது. தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்தில் திரு வெள்ளறையில் ஒரு கல்வெட்டுப் பாடலாகப் பொறிக்கப்பெற்றுள்ளது. அதைப் பாடியவன் பெருந் காவிதி சடையன் பள்ளி என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.[145] திருத்தணி வீராட்டானேசுவரர் கோயிலில் பொறிக் கப்பட்டுள்ள ஒரு பாடல் கல்வெட்டு அபராசித மன்னன் இயற்றியதாகக் கருதப் பெறுகிறது. அக் கல்வெட்டு 'திருந்து திருத்தணியால் செஞ்சடை ஈசர்க்கு கருங்கல்லில் கற்றளியாக நிற்க' என்று தொடர்கிறது.[146]

பாண்டியர் காலக் கல்வெட்டுகள்

கி.பி. 1000-த்திற்கு முன் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களின் காலத்தியக் கல்வெட்டுகள் ஏறத்தாழ 225 இதுவரையில் கிடைத்துள்ளன. இவற்றில் சமண சமயச் சார்பான கொடைகளைக் குறிக்கும் சிறுசிறு துண்டுக் கல்வெட்டுகள் ஏறத்தாழ 125 ஆகும். இவை பெரும்பாலும்

மதுரைக்கு அண்மையில் உள்ள ஆனைமலை,[147] கழுகு மலை[148] ஐவர்மலை[149] ஆகிய மலைகளில் அதிகமாகக் காணப் பெறுகின்றன. மற்ற செய்திகளைக் குறிப்பிடும் கல் வெட்டுகள் மீதமுள்ள ஏறத்தாழ 100 கல்வெட்டுகளில் காணலாம்.

இக்காலக் கட்டத்தில் ஆட்சிபுரிந்தவர்களாக நமக்குத் தெரிபவர்கள் 1. கடுங்கோன், 2. மாறவர்மன் அவனிசூளா மணி, 3. செழியன் வேந்தன், 4. அரிகேசரி பராங்குச மாறவர்மன், 5. கோச்சடையன் இரணதீரன், 6. மாறவர்மன் இராசசிம்மன், 7. சடிலவர்மன் பராந்தக (வரகுணன்) நெடுஞ்சடையன், 8. சிரீ மாற சிரீ வல்லபன், 9. இரண்டாம் வரகுணன், 10. பராந்தக வீரநாராயணன், 11. இரண்டாம் இராசசிம்மன், 12. வீரபாண்டியன் ஆவர். மேலே குறிப்பிடப் பெற்றவர்களில் செழியன் சேந்தன் காலத்தில் இருந்துதான் நமக்குக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

செழியன் சேந்தனின் காலத்திய கல்வெட்டு ஒன்றும்[150] அரிகேசரி பராங்குச மாறவர்மன் காலத்திய கல்வெட்டு இரண்டும்[151] சடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்திய இருபத்து மூன்று கல்வெட்டுகளும்[152] சிரீ மாற சிரீ வல்லபனின் கல்வெட்டுகள் நான்கும்[153] இரண்டாம் வரகுணவர்மன் காலத்திய இருபத்திரண்டு கல்வெட்டுகளும்[154] இரண்டாம் இராசசிம்மன் காலத்திய கல்வெட்டுகள் முப்பத்து நான்கும்[155] சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் காலத்திய கல்வெட்டுகள் பதினேழும் கிடைத்திருக்கின்றன.[156]

கல்வெட்டுக் காணப்படும் பகுதி

இப்பாண்டியர்கள் காலத்தில் மதுரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பாண்டிய நாட்டின் மையப் பகுதிகளாக இருந்தன என்பது அவர்களது கல்வெட்டுகள் கிடைக்கும் இடங்களிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இவர்கள் காலத்தில் மிகப் பழமையான கல்வெட்டான சேந்தனின் கல்வெட்டுத் திருநெல்வேலி மாவட்டம் மலையடிக்குறிச்சியில் கிடைத்திருக்கிறது.[157] அடுத்ததாகக் கருதப் பெறும் அரிகேசரியின் கல்வெட்டு மதுரையில் ஒன்றும் மதுரை மாவட்டம் ஏனாதியில் ஒன்றுமாகக் கிடைத்திருக்கின்றன.[158]

சடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனுடைய கல்வெட்டுகள் நான்கு மதுரை மாவட்டத்திலிருந்தும் பதினொன்று திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத் திலிருந்தும் ஆறு இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டத்திலிருந்தும், இரண்டு புதுக்கோட்டை மாவட்டத்தி லிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் (திருநெல் வேலி மாவட்டம்) கழுகுமலையில் இருந்து கிடைத்துள்ள ஒரு நடுகல் கல்வெட்டும் சேர்ந்ததாகும்.[159]

சிரீ மாற சிரீ வல்லபனின் கல்வெட்டுகள் மதுரை மாவட்டத்திலிருந்து ஒன்றும் திருச்சி மாவட்டத்திலிருந்து ஒன்றும் இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டத்திலிருந்து இரண்டும் கிடைத்துள்ளன. இரண்டாம் வரகுணவர்மனின் காலத்தில் மூன்று கல்வெட்டுகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்தும் இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டத்திலிருந்து நான்கும் திருச்சி மாவட்டத்திலிருந்து ஐந்தும் தஞ்சை மாவட்டத்திலிருந்து பத்தும்படியெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் இராசசிம்மன் காலத்தியக் கல்வெட்டுகள் மதுரை மாவட்டத்திலிருந்து ஏழும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்து இருபத்தி மூன்றும் இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டத்திலிருந்து மூன்றும் திருச்சி மாவட்டத்தில் இருந்து ஒன்றும் கிடைத்துள்ளன. வீரபாண்டியன் காலத்திய கல்வெட்டுகள் மூன்று மதுரை மாவட்டத்திலிருந்தும், ஆறு திருநெல்வேலி

கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்தும் எட்டு இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டத்திலிருந்தும் சேகரிக்கப் பெற்றுள்ளன.

கல்வெட்டுகளில் எழுதப்பெற்றுள்ள எழுத்துகள்

பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் கிரந்தம், வட்டெழுத்து, தமிழ் ஆகிய எழுத்துகளில் காணப் பெறுகின்றன. இவர்களுடைய கல்வெட்டுகளில் ஆண்டு குறிப்பிடப்படும் முறை புது மாதிரியாக உள்ளது. ஓர் ஆண்டைக் குறிப்பிட்டு அதனோடு எதிர் இத்தனை ஆண்டு என்று குறிப்பிடப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, நான்கு இதன் எதிர் எட்டாம் ஆண்டு என்று காணப்படும். இந்த நான்கும் எட்டும் என்று சேர்த்துக் கணக்கிட்டுக் கொள்ளுதல் வேண்டும். ஆண்டு குறிப்பிடும் பொழுது ஆண்டுக்கு முன்னால் 'இராச்சிய வத்சரம்' அல்லது செங்கோல் ஆண்டு[160] என்று குறிக்கப் பெற்றிருக்கும். இவைகளிலிருந்து மன்னன், ஆட்சிக்கட்டில் ஏறியதிலிருந்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்பதைக் காட்டுவதுதான் கல்வெட்டுகளில் காணப்பெறும் ஆண்டு முறை என்று கூறலாம்.

சில மன்னர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஆண்டிலிருந்து மேலும் ஒன்று, இரண்டு என்று கணக்கிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக முதலாம் வரகுணனுக்கு நான்காம் ஆண்டிலிருந்து எதிராமாண்டு ஒன்று, இரண்டு என்று கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இரண்டாம் இராசசிம்மன் கல்வெட்டுகளில் இரண்டாம் ஆண்டின் எதிராம் ஆண்டு ஒன்று, இரண்டு என்று தரப்பட்டுள்ளன. எனவே, ஒரு சில கல்வெட்டுகளில் மன்னனின் பெயர் அழிந்து காணப் பட்டாலும் அங்கு தரப்பட்டுள்ள ஆண்டு முறையைப் பார்த்தே அது யார் காலத்துக் கல்வெட்டு என்பதை உறுதிப்படுத்தலாம்.[161]

பாண்டியர்களுக்குப் பின் தமிழ்நாட்டில் பல்லவ, கேரள, யாதவ, சோழர் மன்னர்கள் இம்முறையைத் தங்களுடைய கல்வெட்டுகளில் பின்பற்றியுள்ளனர். இம்முறையைப் பின்பற்றுவதற்குக் காரணம் என்ன என்று அறிந்து கொள்வதற்குப் பலரும் பலவாறாக முயன்றுள்ளனர். குறிப்பாகப் பண்டித சுப்பிரமணிய சாத்திரிகள் என்பார் வேங்கடேசுவர கீழ்த்திசை ஆராய்ச்சி நிறுவன வெளியீடு ஒன்றில் மிக விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரம் என்னும் ஊரில் கிடைத்த முதலாம் இராசாதிராசனுடைய கல்வெட்டு ஒன்றிலிருந்து அரசனுடைய ஆணை ஒன்று அவ்வூர்ச் சபையாரிடம் வந்து சேருவதற்கு மூன்று ஆண்டுகளும் 103 நாட்களும் ஆயின என்று அறிய முடிகிறது.[162] முதலாம் இராசேந்திர சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலிருந்து அவ்வரசனுடைய ஆட்சியில் ஆறாம் ஆண்டு அளிக்கப்பெற்ற அந்தக் கொடை அவனுடைய ஆட்சியின் 12-ஆம் ஆண்டுக்குப் பிறகே செப்பேட்டில் பொறிக்கப் பெற்றது என்று தெரிய வருகிறது.[163] அவனுடைய ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டில் நிகழ்ந்த கங்காவிசயம் அச்செப்பேட்டின் வடமொழிப் பிரசசுதியில் வருணிக்கப்பட்டதிலிருந்து இது விளங்குகிறது. இவ்விதம் அரச ஆணை தோன்றியதற்கும் அதை நிறைவேற்றி முடிப்பதற்கும் இடையே கால இடைவெளி ஏற்படுவதை நோக்கும்பொழுது ஓர் உண்மை தெளிவாகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்பெறும் இரண்டு ஆண்டுகளில் முதலில் கூறப்பெறுவது அரசனுடைய ஆணை வழங்கப் பெற்ற ஆண்டாகும். இரண்டாவதாகக் கூறப்பெறும் ஆண்டு அவ்வித அரசாணைக்குப் பிறகு செப்பேட்டில் அல்லது கல்வெட்டில் பொறிக்கப் பெற்ற நாள் வரையில் சென்ற இடைவெளிக் காலம் என்று கொள்ளலாம் என டி.என்.சுப்பிரமணியம் கருதுகின்றார்.[164] இந்த ஆண்டுகள் சிலவற்றில் இரண்டுடன் நின்றுவிடாமல் ஐந்து ஆண்டுகள்

வரையில் செல்வதையும் கருத்தில் கொண்டு (நான்காம் ஆண்டிற்கு எதிராம் ஆண்டுக்கு எதிராம் ஆண்டு) இவ்விதம் பின்னர் வரும் பல எதிராம் ஆண்டுகளை முதலில் அளிக்கப் பெற்ற உத்தரவை நிறைவேற்றுவதில் அந்தந்த நிருவாகக் கட்டங்களில் ஏற்படும் கால தாமதத்தைக் காட்டுவனவாக இருக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.[165]

மேலே கூறப் பெற்றிருக்கும் கருத்துகள் ஓரளவிற்கு ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் உள்ளன. ஆனாலும் பராந்தக நெடுஞ்சடையனின் கல்வெட்டுகள் பெரும்பாலும் 4-ஆம் ஆண்டிற்கு எதிராம் ஆண்டுகளாகவும் இரண்டாம் இராசசிம்மனின் கல்வெட்டுகள் இரண்டாம் ஆண்டிற்கு எதிராம் ஆண்டுகளாகவும் குறிக்கப் பெற்றிருப்பது திரு டி.என். சுப்பிரமணியம் கொண்ட கருத்தை வலுவிழக்கச் செய்கிறது. இக்கருத்துப்படி பார்த்தால், இவ்விரண்டு மன்னர்களின் எல்லாக் கல்வெட்டுகளிலும் பெரும்பாலும் முறையே நான்காம் ஆண்டிலும் இரண்டாம் ஆண்டிலும் எழுதுவதற்கு ஆணை இடப்பட்டவைகளாக இருத்தல் வேண்டும்.

முதலாம் வரகுணனது கல்வெட்டுகள் நான்காம் ஆண்டிலிருந்து ஒன்று, இரண்டு என்று கணக்கிட்டுச் செல்வது, நான்கு ஆண்டுகள் அவன் இளவரசர்ப் பட்டம் சூட்டப் பெற்றிருந்தான் என்பதையும், அதேபோன்று இரண்டாம் இராசசிம்மனின் கல்வெட்டுகள் இரண்டாம் ஆண்டிலிருந்து தொடர்வதால் அவனும் இரண்டு ஆண்டுகள் இளவரசனாக இருந்திருக்கலாம் என்பதையும் காட்டுகின்றன எனக் கொள்ளலாம்.

கலி ஆண்டு சக ஆண்டு

பல்லவர் காலத்துக் கல்வெட்டுகள் போல அல்லாது பாண்டியர் கல்வெட்டுகளில் சிலவற்றில் கலி ஆண்டும் அரசனுடைய ஆட்சி ஆண்டும், சக ஆண்டும்

தரப்பட்டுள்ளன. எனவே ஒரு சில மன்னர்கள் எப்பொழுது ஆளத் தொடங்கினார்கள் என்பதை நிச்சயமாகக் கணக்கிட முடியாது. சில கல்வெட்டுகளில் ஆட்சி ஆண்டோடு மாதங்களும் தரப்பட்டுள்ளன. மாதங்களின் பெயர்கள் இராசிகளின் பெயரால் விருச்சிக ஞாயிறு, தனுர் ஞாயிறு முதலியனவாகக் குறிக்கப்படுகின்றன.[166]

மெய்க்கீர்த்திகள்

மாறஞ்சடையன், சடையமாறன் என்ற சொற்களை அல்லாது பாண்டிய மன்னர்களின் பெயர்களுக்கு முன்னால் எவ்வித மெய்க்கீர்த்தியையும் காண முடியவில்லை. வீரபாண்டியனுக்குச் சோழன் தலை கொண்ட கோவீர பாண்டியன்[167] என்று கல்வெட்டுகள் தொடங்குகின்றன. பாண்டிய மன்னர்களுடைய கல்வெட்டுகளில் விரிவான மெய்க்கீர்த்திகள் இன்மையால் அவர்களுடைய பட்டத் தரசிகளின் பெயர்களை அறியமுடியவில்லை. ஆனால் தளவாய்ப்புரச் செப்பேட்டின் மூலம் சிரீமாற சிரீ வல்லபனின் அரசிகளில் ஒருத்தி அக்களநிம்மடி என்பதும்[168] சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டின் உதவியால் பராந்தக நெடுஞ்சடையனின் பட்டத்தரசி வானவன்மாதேவி[169] என்பதும் தெரிய வருகின்றன.

இந்தக் காலக்கட்டத்தில் பாண்டியர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக விளங்கியவர்கள் தமிழகத்தின் தென்மேற்குப் பகுதியைச் சேர்ந்த ஆய் மன்னர்களும் தஞ்சைப் பகுதியில் வாழ்ந்த முத்தரையர்களும் ஆவர். இவ்விரு குறுநில மன்னர்களுள் ஆய்குலத்தரசர்கள் தொடர்ந்து பாண்டியர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக இருந்திருக்கின்றனர். ஆனால், முத்தரையர்கள் சில சமயம் பாண்டியர்களுக்கும் சில சமயம் பல்லவர்களுக்கும் அடங்கிய சிற்றரசர்களாக இருந்திருக்கின்றனர். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள காளையார்கோயில் என்ற ஊர் முன்னாளில் கரவந்தபுரம் என்றும்

உக்கிரன்கோட்டை என்றும் வழங்கி வந்திருக்கிறது. இவ்வூருக்குக் களந்தை, களக்குடி என்ற பெயர்களும் உண்டு. களக்குடி நாடு என்ற பகுதியில் களக்குடி அமைந்திருந்த தாகவும் தெரிகிறது.[170]

இவ்வூர் பாண்டிய மன்னர்களுக்குப் பல சிறந்த அதிகாரிகளைத் தந்து உதவியிருக்கிறது. இவ்வூரில் வைத்திய குலத்தினர் என்று ஒரு சிலர் வாழ்ந்தனர். அக்குலத்திலிருந்து வந்த பலர் பாண்டிய மன்னர்களின் முதலமைச்சர்களாகவும் மகாசாமந்தர்களாகவும் விளங்கியுள்ளனர். மாறங்காரி பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேட்டை வெளியிடுகையில் ஆணத்தியாகவும் விளங்கினான்?[171] இந்த மாறங்காரிக்குப் பிறகு இவனது இளவல் மாறன் எயினன் அமைச்சர் பதவி வகித்து வந்தான் என்றும் அவனுடைய காலத்தில் ஆனைமலை நரசிம்மக்குகை முற்றுவிக்கப் பெற்றது என்றும் ஆனைமலைக் கல்வெட்டு கூறுகிறது.[172]

வெண்பையில் நடைபெற்ற போரில் இம்மாறங் காரியின் தலைமையில் பெரும்படையொன்று பராந்தக நெடுஞ்சடையனுக்காக வெஞ்சமர் புரிந்தது என்பது வேள்விக்குடிச் செப்புப் பட்டயத்தால் விளக்கமாகிறது. இவன் மதுர தரனென்றும் சிறந்த பேச்சாளன் என்றும் தலைசிறந்த கவிஞன்[173] என்றும் பலவிதக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவன் என்றும் ஆனைமலைக் கல்வெட்டும், வேள்விக்குடிச் செப்பேடும் கூறுகின்றன.

வைத்திய குலத்தைச் சேர்ந்த மூர்த்தி எயினன் என்னும் மற்றொருவன் சடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்தில் மகாசாமந்தனாக விளங்கினான். இவனைப் பற்றிச் சென்னை அருங்காட்சியகச் செப்பேடு புகழ்ந்துரைக்கிறது.[174] இச்செப்பேட்டிற்கு ஆணத்தியாக இருந்தவனும் இவனே. இவன் வீரமங்கலப் பேர ரையன் என்றும் தீரதீரன் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறான்.

சாத்தன் கணபதி என்னும் வைத்திய குலத்தைச் சேர்ந்தவன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்தில் மகாசாமந்தனாகப் பதவி வகித்திருக்கிறான். இவனுக்கு அமிர்தமங்கலப் பேரரையன் என்ற பெயரும் வழங்கியது. இவன் திருப்பரங்குன்றத்தில் குடைவரைக் கோயிலை அமைத்துள்ளான்.[175] இவனது தங்கையான நக்கன் கொற்றி என்பாள் துர்க்காதேவிக்கும் சேட்டைக்கும் கோயில் எடுப்பித்துள்ளாள்.[176] இந்தச் சாத்தன் கணபதியே சம்புவிற்கு ஒரு கோயில் குடைந்திருக்கிறான் என்பது திருப்பரங்குன்றம் மலையில் காணப்பெறும் கல்வெட்டொன்றால் தெரிய வருகிறது.[177] இவன் சாமந்த பீமன் என்றும் அழைக்கப் பெற்றான்.

இருப்பைக்குடிக் கிழான்

ஆலங்குடியைச் சேர்ந்த எட்டிச் சாத்தன் என்பான் சிரீ மாறசிரீ வல்லபன் காலத்தில் மதிப்புமிக்க அதிகாரியாக விளங்கினான். இவன் 'சத்துரு பயங்கர முத்தரையன்' என்றும் அழைக்கப் பெற்றான்.[178] கிழான் என்ற பட்டப்பெயர் பாண்டிய மன்னனால் தரப்பட்டதாகும்.[179] பல சமுதாயச் சீர்திருத்தப் பணிகள் புரிந்து மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட இவன், பல ஏரிகளையும் குளங்களையும், கால்வாய்களையும் அமைத்து வேளாண்மைப் பணிக்கு மிகவும் உதவியுள்ளான். இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டம் சாத்தூர் வட்டம் எருக்கங்குடிக்கருகில் ஏரியொன்றை அமைத்து அதற்குத் தன் பெயரிட்டு அழைத்தான் என்ற செய்தி கல்வெட்டினால் உறுதியாகிறது.

"கோச்சடைய மாறர்க்கு யாண்டு பதினாறு இவ்வாண்டு
பழங்கரை இழித்து அதனடியிற் கல்லு
நாட்டி மன்னுமடைக்கு
மேற்கும் கருங்குளத்திற்குக் கிழக்கும் நிலத்திட்டு கரை செய்து

மடை வைப்பித்து இருப்பைக்குடி கிழவன் தன்பேரிட்டு
ஏறுவித்தது. இவ்வெல்லையில் கடந்த கரை
கிழவனேரி என்பது [180]

"கொங்கார் மலர்க்கடம்பு சூட்டாதிக் கொல் வளையை
எங்கோன் இருப்பைக் குடிக்கிழவன் - பொங்கார்ந்த
தொட்டார் கரும்பிரைக்கும் தொன்னீர் வயலிருஞ்சோடி
நாட்டான் தார் சூட்டுதிரேன் என்று [181]

இத்தலைவர் தென்வெளியாங்குடி மூதனூர் ஆகிய ஊர்களில் சிவனுக்குக் கோயில் எடுப்பித்து மகிழ்ந்திருக்கிறார். இருப்பைக்குடி என்ற பெருநகரை அமைப்பித்து ஆங்கொரு பெரும்பள்ளி ஏற்படுத்தி அம்பலமும் கட்டுவித்தான் என்ற செய்திகளை எருக்கங்குடி ஏரிக்கரையில் காணப்பெறும் பாடல் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. [182]

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செவலப்பேரி அழகர் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில் இவன் ஆலங்குடியைச் சேர்ந்தவன் என்றும் இவன் மனைவி அனுக்கன் அப்பிநங்கை என்பாள் தென் திருமாலிரும்சோலையில் எழுந்தருளியிருக்கின்ற கருமாணிக் கத் தேவருக்குத் திருவிளக்கு எரிவிப்பதற்காக இருபத்தைந்து ஆடுகளைக் கொடையாக வழங்கினாள் என்றும் கூறப்பட்டுள்ளது. [183]

அதிகாரிகள்

வீரபாண்டியன் காலத்தில் சில அதிகாரிகள் சிறந்த நிலையில் இருந்தமை சில கல்வெட்டுகளில் தெளிவாகிறது. பொழியூரைச் சேர்ந்த மாறன் ஆதித்தன் என்னும் படைத்தலைவன் சோழர்கள் மீது படையெடுத்துள்ளான். இவனுக்குச் சோழாந்தகப் பல்லவரையன் என்ற பெயரும் வழங்கியது.[184] சோழாந்தகப் பிரமராயன் என்னும் மற்றொரு அதிகாரியும் -வீரபாண்டியன் காலத்தில் வாழ்ந்துள்ளான். இவன் பெயரில் சில அளவுகளும்

தோட்டங்களும் வழக்கத்தில் இருந்தன.[185] தென்னவன் தமிழவேள் என்னும் மற்றொரு அதிகாரி வீரபாண்டியன் காலத்தில் மிகச் சிறந்த நிலையில் இருந்தான். இவன் தென்மொழி, வடமொழி ஆகியவற்றில் பெரும்புலமை வாய்ந்தவனாக இருந்தமை 'தமிழோடு ஆரியநூல் வல்ல தமிழவேள்' என்ற கல்வெட்டுத் தொடரால் அறிய முடிகிறது.[186] தமிழ் வடமொழி இலக்கியங்களைக் கற்றுத் துறைபோகியவனாக விளங்கியவன் என்பது ஒரு கல்வெட்டினால் தெளிவாகிறது. இவன் திருமாத்தூரில் ஒரு கோயில் எடுப்பித்துள்ளான்.[187]

இராமநாதபுரம் தேவர் திருமகனார் மாவட்டம் சாத்தூர் வட்டத்தைச் சேர்ந்த எருக்கங்குடியில் கிடைத்துள்ள சிரீ வல்லபனின் கல்வெட்டு ஒன்று பெரியாழ்வாரின் காலத்தைக் கணிப்பதற்கு உதவி புரிகிறது. பெரியாழ்வார் நெடுமாறன் என்ற அரசனைப் புகழ்ந்து பாடியுள்ளார். அந்நெடுமாறன் இதுகாறும் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்று கருதப்பெற்று வந்தது. எருக்கங்குடி கல்வெட்டில்[188] 'தென்னவர்கோன் நெடுமாறன், செந்தணிக்கோல் சிரீவல்லபனின் அருளால்' என்ற தொடர்களின் மூலம் பராங்குச மாறவர்மனுக்குச் சீவல்லபன் என்ற பெயரும் இருந்ததெனத் தெரிகிறது. மாறவர்மன் அரிகேசரியை எந்த ஒரு கல்வெட்டும் செப்புப் பட்டயமும் நெடுமாறன் என்று கூறவில்லை. ஆகவே பெரியாழ்வார் சிரீ வல்லபன் காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டுமென்று இப்பொழுது கருதப் பெறுகிறது.[188அ]

மானூர்க் கல்வெட்டு

தமிழகத்தில் ஊராட்சிமுறை நிலவியதைப் பற்றித் தெரிவிக்கும் மிகப் பழமையான கல்வெட்டு இந்த மானூர்க் கல்வெட்டாகும்.[189] இது மாறன் சடையனின் 35-ஆம் ஆட்சியாண்டில் எழுதப் பெற்றுள்ளது. களக்குடி நாட்டுப் பிரமதேயமான மானநிலை நல்லூர் மகாசபையார்

ஒருங்குகூடிச் செய்த தீர்மானங்களைத் தெரிவிக்கிறது. அத்தீர்மானத்தில் பின்வரும் கூறுபாடு காணப் பெறுகின்றன.

1. ஊரில் பங்குடைய மக்கள் சபையில் உறுப்பினராவதற்கு ஒரு தருமம் உட்பட மந்திரப் பிராமணம் நன்கு கற்றவராக நன்னடத்தையுடையவராய் இருத்தல் வேண்டும்.

2. ஒரு பங்குடையார் ஒருவர்தான் உறுப்பினராகலாம்.

3. தன்னுடைய பங்கு விலையாகவோ, கொடையாகவோ அல்லது திருமணக் கொடையாகவோ பெற்றிருந்தால் மந்திரம் உட்பட தருமம் உட்பட மந்திர பிராமணத்தில் தேறியவராய் நல்ல நடத்தை உடையவராக இருந்தால்தான் சபையின் நடவடிக்கையில் கலந்து கொண்டு செயலாற்றலாம்.

4. இனி புதிதாக நிலம் விலைக்கு வாங்கியோ கொடையாகப் பெற்றோ அல்லது சிரீதனமாகப் பெற்றோ தமக்குப் பங்கு உண்டு என்று கூறிக்கொண்டு சபையில் உறுப்பினராக யாராவது விரும்பினால் அவர்கள் முழுச் சிராவணை இன்றி கால், அரை, முக்கால் சிராவணைப் பெற்றிருந்தால் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. விலைக்கு நிலம் வாங்கிய பிறகு தாம் பங்குடையார் என்று வருபவர்கள் பரிசிட்டத்தோடு முழு வேதத்தையும் அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. இஃதல்லாமல் சபையில் உறுப்பினராகிறவர்கள் சபையின் தீர்மானப்படி சபையின் உரையாடலில் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

7. இந்தத் தீர்மானத்தின்படி சிராவணை இல்லாதவர் எந்தவொரு வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்.

8. இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டவர்கள் பின்னர் ஒப்புக் கொள்ளவில்லை என்று கூறக் கூடாது. தீர்மானத்திற்கு எந்தவிதக் குந்தகமும் விளைவித்தல் கூடாது.

9. குந்தகம் விளைவிப்பாருக்கும் குந்தகம் விளைவிப்பவர்களுக்குத் துணை நிற்பாருக்கும் தலா 5 காசு வீதம்

தண்டம் விதிக்கப்படும். தண்டம் செலுத்தி விட்டோம். பணி தீர்ந்தது என்று எண்ணாமல் அதன் பிறகும் தீர்மானத்தை நன்கு கடைப்பிடித்தல் வேண்டும்.

மேலே குறிக்கப் பெற்றவைகளிலிருந்து சபைகளின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்குப் பங்குடையவ ராகவும் மந்திர பிராமணம், தருமம் ஆகியவற்றில் தேர்ச்சி உடையவராகவும் நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் அவசியம் என்பது தெரிய வருகிறது. அந்தப் பங்கு என்பது எவ்வளவு நிலம் என்பது குறிக்கப் பெறவில்லை. அங்கத்தினர்களின் வயது வரம்பும் குறிக்கப் பெறவில்லை. தேர்தல் எம்முறையில் நடைபெற்றதென்றும் தெரியவில்லை. ஆனால், சபைகளில் அங்கம் வகித்தவர்களில் இருசாரார் இருந்தனர் என்பது தெரிய வருகிறது. ஒரு சாரார் உரையாடல்களில் மட்டும் கலந்து கொள்வர். அவர்கள் தங்கள் விருப்பங்களைத் தெரிவிக்கலாம். ஆனால், எவ்வித வாரியத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். இஃதி லிருந்து அவர்கள் தற்காலத்தில் சட்டமன்ற மேலவை உறுப்பினராதல் போன்று இருந்தனர் எனக் கொள்ளலாம்.

மற்றொரு சாரார் வாரியங்களுக்குத் தேர்ந்து எடுக்கப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். அவர்களுக்கு அதிக அளவில் அதிகாரங்கள் தரப்பட்டிருக்கிறது. சோழர்கள் காலத்தில் இருந்தது போன்று கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் வாரியங்கள் இருந்திருக்கின்றன என்பதையும் இக்கல்வெட்டால் உணர முடிகிறது. சோழர்கள் காலத்தில் நிலவாத ஊராட்சிமுறை (இருசாரார் தேர்ந்தெடுக்கப்படும் முறை) பாண்டியர்கள் காலத்தில் வழக்கத்தில் இருந்தது என்பது போற்றற்குரிய செய்தியாகும்.[190]

இக்கல்வெட்டில் "இவ்வூர் பங்குடையார் மக்கள் சபையில் மன்றாடுகிறது என்று வரும் தொடரை டாக்டர்

கே.வி. இராமன் 'பங்குடையார் மக்கள்' என்றும் 'மக்கள் சபை' என்றும் பிரித்து 'மக்கள் சபை' என்ற தொடர் தமிழகத்தில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே வழங்கியது என்று கூறுவர்.[191] முன்னர் இக்கல்வெட்டைப் பதிப்பித்த கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் 'மக்கள்' என்று வருவதற்குத் தனியாகப் பொருள் கொள்ளாமல் பங்குடையார் என்ற சொல்லோடு சேர்த்துப் பொருள் கொண்டுள்ளார். ஆனால் அதைப் பங்குடையார் மக்கள் சபையில் மன்றாடுகிறது என்று பிரித்துப் பொருள் கொள்ளுதல் சிறப்புடையதாகத் தெரிகிறது. 'மக்கள் என்பதைப்' பெருமக்கள் என்று கொள்ளலாம். பிற்காலக் கல்வெட்டுகளில் பெருங்குடிப் பெருமக்கள்[192] கணப் பெருமக்கள்[193] வாரியப் பெருமக்கள் என்று ஆளப் பெறுவதைக் காணலாம்.[194] இக்கல்வெட்டும் பங்குடையார் மக்கள் என்று குறிப்பதாகக் கொள்ளலாம்.

வையைக் கல்வெட்டு

மதுரைக்கு அருகில் பாயும் வையை ஆற்றின் கரையில் சேந்தன்மாறனின் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு திருஞானசம்பந்தரின் காலத்தை வரையறை செய்வதற்கு உதவுகிறது. சேந்தன் மாறன் என்பவன் சேந்தனின் மகனாகிய மாறவர்மன் அரிகேசரி பாவான். இவ்வரசன் ஐம்பது ஆண்டுகள் கி.பி. (650-700) ஆட்சி செலுத்தியுள்ளான் என்பதை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது இம்மன்னன் நெல்வேலியில் போரிட்டதாகச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. எனவே, இம்மன்னன் காலத்தில் தான் திருஞானசம்பந்தர் வாழ்ந்திருக்க வேண்டு மென்று திரு. நாகசாமி கருதுவர்.[195]

ஏனாதிக் கல்வெட்டு

இராமநாதபுரம் அருப்புக்கோட்டை வட்டம் பள்ளி மடத்துக்குக் கைலாசநாதர் கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு திருச்சுழியல் பள்ளிமடைச் சுந்தர பாண்டிய

ஈசுவரம் என்ற கோயிலைக் குறிப்பிடுகிறது.[196] இக்கோயில் சுந்தரபாண்டியனின் பள்ளிப்படை மீது எழுப்பப்பட்ட கோயிலாக இருக்கக் கூடும்.இந்தச் சுந்தர பாண்டியர் என்பது யாரென்று உறுதிசெய்ய முடியவில்லை. இக்கல்வெட்டு, சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. E.I. Vol.VI, pp 86-89
2. *Ibid*, Vol. I, p. 2
3. *Ibid*, Vol. VIII p.143
4. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 390 - 402
5. மேற்படிP. XXIII
6. மேற்படி - பக். 373

6 - அ. Select Inscriptions No.66,467

6 - ஆ. E.I.Vol. XXII p.87

7. பல்லவர் செப்பேடுகள்கள் முப்பது, பக். VI
8. E.I.Vol. XIA pp.246-52
9. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 309
10. மேற்படி பக். 303
11. மேற்படி பக். 283
12. மேற்படி பக்.339
13. Epigraphica Carnatica.
14. மேற்படி பக். 297
15. மேற்படி பக். 291
16. மேற்படி பக். 315
17. மேற்படி பக். 341
18. மேற்படி பக். 341
19. மேற்படி பக். 323
20. மேற்படி பக். 375
21. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். I
22. மேற்படி, பக். 33
23. மேற்படி, பக்.141
24. மேற்படி, பக். 181

25. மேற்படி, பக். 205
26. மேற்படி, பக். 237
27. மேற்படி, பக். 237
28. மேற்படி, பக். 61
29. மேற்படி, பக். 71
30. மேற்படி பக். 107
31. Nagaswamy, R. Studies in Ancient Tamil Law and Society, p.38-43
32. பல்லவர்கள் செப்பேடு முப்பது பக்.102
33. மேற்படி, பக். 250
34. Archaeological Society of South India, Silver Jubilee Vol. The Early Pallavas of Kanchi, p.71
35. பல்லவர் செப்பேடுகள் முப்பதுபக். 62
36. மயிதவோலுச் செப்பேடுகள் (பல்லவர் செப்பேடுகள் முப்பது)பக். 356
37. Circar, D.C. Indian Epigraphy, p. 61
38. பல்லவர்கள் செப்பேடுகள் முப்பது பக். 61
39. மேற்படி, பக். 355
40. மேற்படி கசாக்குடிச் செப்பேடுகள் பக். 141
41. மேற்படி உருவப்பள்ளி செப்பேடுகள் பக். 282
42. E.I. Vol. V, p. 86-89
43. *Ibid* Vol. I, p.2
43.அ. S.I.I. Vol. III p. V
43.ஆ. S.I.I. Vol. V, No. 740
43.இ. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 249
44. மேற்படி பக். 180
45. மேற்படி பக். 141
46. பாண்டியர் செப்பேடுகள் முப்பது, சிவகாசிச் செப்பேடுகள், பக். 190

47. மேற்படி சிரீவரமங்கலச் செப்பேடுகள், பக். 57-59

48. மேற்படி தளவாய்ப்புரச் செப்பேடுகள், பக். 106

49. மேற்படி, சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் பக். 157

50. பாண்டியர் செப்பேடுகள் பத்து வரிகள் 139-40, பக். 31

51. மேற்படி வேள்விக்குடிச் செப்பேடுகள் வரிகள் 140-41, பக். 31.

52. தளவாய்ப்புரச் செப்பேடுகள், வரிகள் 229-235

53. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக். 114

54. மேற்படி பக். 123

55. மேற்படி பக். 166

56. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக். 201

57. மேற்படி வேள்விக்குடிச் செப்பேடுகள் வரி -155, பக். 32

58. மேற்படி சின்னமனூர்ச் சிறிய செப்பேடுகள் வரி 38, பக். 77

59. மேற்படி தளவாய்ப்புரச் செப்பேடுகள், வரிகள் 237-38

60. மேற்படி பக். 22

61. மதுரைக்காஞ்சி, - வரி 759

62. பாண்டியர் செப்பேடுகள் பத்து தளவாய்ப்புரச் செப்பேடுகள், வரி 98-99

63. மேற்படி சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் வரி 100-102

64. மேற்படி தளவாய்ப்புரச் செப்பேடுகள் வரிகள் 97-98

65. மேற்படி வரி 66

66. மதுரைக் காஞ்சி வரிகள் 7-8

67. பாண்டியர் செப்பேடுகள் பத்து தளவாய்ப்புரச் செப்பேடுகள் வரிகள் 222-23

68. இராமன், கே. வி., பாண்டியர் வரலாறு பக். 9

68-அ. மேற்படி பக்.9

69. மேற்படி, பக். 11

70. South Indian Inscriptions Vol. 1. No. 32

71. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் திருவண்ணாமலைச் சம்புவராயர் மாவட்டம் பெருங்களத் தூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

72. இரா.நாகசாமி 'செங்கம் நடுகற்கள்' 1972/1, 1972/2, 1972/4, 1973/2, 1973/3, 1974/164

72-அ. 1971/86, 1971/30

73-77. Kasinathan, N. Hero Stones in Tamilnadu p. 66-8

78. S.Indian Inscriptions Vol.2 No. 72

79. இரா. நாகசாமி செங்கம் நடுகற்கள் 1971/69, 1971/68, 1971/36, 1971/90 Nos. 1971/34, 1971/91

80. South Indian Inscriptions, Vol. XII, No.16

81. இரா. நாகசாமி மேற்படி நூல் 1974/71

82. S.I.I. Vol. II, No. 1

83. இரா. நாகசாமி" Nos.Ch. 1973/26, Ch. 1971/96

84. மேற்படி நூல்" Nos. Ch. 1974/61, 1974/68 Ch. 1971/78, 1971/97

85. Epigraphica Indica Vol. VII, pp.23-24 and Vol. 32, No.23.

86. Natana Kasinathan, Hero Stones in Tamil Nadu pp. 69-70

87. *Ibid*

88. *Ibid*

89. இரா. நாகசாமி தருமபுரி கல்வெட்டுகள் 1974/71

90. S.I.I., Vol.I, p.22, E.I., Vol.X, p.24

91. S.I.I., Vol.I, No.27, Vol.XII, No.31, XII No. 18

92. *Ibid* Vol.III, No.331

93. *Ibid* Vol.IV, No. 135, Ibid, Vol.No. 257 A.S.I.No. 26, S.I.I. Vol.6, No.453,S.I.I. Vol. 5, No. 356

94. Natana Kasinathan Hero Stones in Tamil Nadu 72-73

95. *Ibid.*

96 - 99 *Ibid* p. 74

100. *Ibid* 103.pp.74-75

104. *Ibid.* p. 76

105. *Ibid.* p. 86-87

106. *Ibid.* pp. 78 - 82

107. முதலாம் நரசிம்மவர்மன் கல்வெட்டு என்று டி.என். சுப்பிரமணியம் கருதுகிறார். பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 33-44

108. A.R.E. 178 of 1934-35

109. South Indian Inscriptions Vol.12

110. A.R.E. Para 233 of 1934-35

111. S.I.I., Vol VII, No. 132

112. E.I. Vol. VII, No.5

113. S.I.I. Vol. XII, No.115

114. கசாக்குடிச் செப்பேடுகள், பாடல். 20

115. S.I.I. Vol.I, pp. 29-30

116. *Ibid.* Vol.XII No. XII A

117. கூரம் செப்பேடுகள் பாடல் 4 (பல்லவர் செப்பேடுகள் முப்பது) பக். 55

118. இரண்டாம் நந்திவர்மன் காலத்திலும் களப்பிரர்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் பல்லவ மன்னனுக்கு அடங்கியே இருந்தனர்.

119. அண்மையில் நடனகாசிநாதனும் அவருடைய நண்பர்கள் திரு கு. தாமோதரன் திரு.கி.சிரீதரன் ஆகியோரும் இரண்டாம் நந்திவர்மனுடைய கல்வெட்டு ஒன்றை, தஞ்சை மாவட்டம் பொன்விளைந்தான் பட்டியில் கண்டுபிடித்தனர். இக்கல்வெட்டில் முத்தரையமன்னன் குவாவனின் மனைவி அளித்த தானம் குறிக்கப்பட்டுள்ளது.

120. Sastri, K.A.N. Colas p. 112

121. S.I.I. Vol.V, No.715

122. South Indian Inscriptions Vol.II No.72

123. *Ibid* Vol.XII No.74 Foot Note

124. Archaeological Survey of India No.17
125. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது.
126. அண்மையில் நடனகாசிநாதன் அவர்களால் தேனாம் பேட்டையில் உள்ள ஒரு சிற்பக்கிடங்கில் கண்டுபிடிக் கப்பட்டது.
127. N.Kasinathan, Op. Cit.S.1971/74 and S.1971/51
128. Epigraphia Indica, Vol.VII No.26 A
129. South Indian Inscriptions Vol. XII No.46
130. Epigraphia Indica Vol.III P.279
131. South Indian Inscriptions Vol.XII 56,57.
132. இரா.நாகசாமி, செங்கம் நடுகற்கள் S. 1971/30 S.1971/86
133 .மேற்படி S.1971/69, S.1971/68 and S.1971/36
134. மேற்படி S.1971/54, S.1971/73, and S. 1971/90
135. மேற்படிS.1971/76 and S.1971/50
136. மேற்படி S.I.I. Vol.XII 7A
137. S.I.I. Vol. XII
138. தேவாரம் - நாலாம் திருமுறை பக். 99
139. S.I.I. Vol. I, p. 25
140. *Ibid*
141. S.I.I.Vol. XII No.13
142. S.I.I. Vol.I p. 25
143. Epigraphia Indica Vol. XII 29
144. *Ibid* Vol. XIp. 147
145. S.I.I. Vol. XIIIp.48
146. *Ibid* 94
147. S.I.I. Vol. XIV pp 99-106
148. S.I.I. Vol. V. pp 309-404
149. *Ibid* pp 107-119

150. Annual Report on Epigraphy No. 358 of 1959-60
151. Epigraphia Indica Vol. 36 No. 4
152. S.I.I. Vols I . III 17-19 23, 25-27, 30-42
153. *Ibid* Vol. XIV 43-45
154. *Ibid* Nos. 14 4-16A 24,28
155. S.I.I. Vol. XIV. 46-77
156. S.I.I. Vol. XIV 76-96
157. A.R.E. No. 358 of 1959-60
158. A.R.E 330 - 331 of 1961-62
159. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
160. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 28 வரி 103.
161. South Indian Inscriptions Vol. XIXNo. 136
162. Annual Report on Epigraphy No. 330 of 1917
163. South Indian Inscriptions Vol. III No.205
164. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி 2, பக்கம் 370.
165. *Ibid*
166. South Indian Inscriptions Vol. XIV No. 92
167. *Ibid* Vol. XIVNo.79-80
168. தளவாய்ப்புரச் செப்பேடுகள் வரி.144
169. சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் வரி-123.
170. Epigraphia Indica Vol.XXIII p. 283
171. வேள்விக்குடிச் செப்பேடுகள் வரிகள் 132-34
172. South Indian Inscription Vol.14 No1
173. வேள்விக்குடிச் செப்பேடுகள் வரி 128-30
174. Indian Antiquary Vol.XIV P.27
175. South Indian Inscriptions Vol.14 No.3
176. *Ibid*

177. A.R.E. 1951-52 Appendix 3 No.143

178 *Ibid* No. 71

179. S.I.I. Vol.XIV No.44

180. *Ibid* No.43

181. *Ibid*

182. *Ibid* No.44

183. S.I.I. Vol. XIV No.17

184. *Ibid* Vol. 79

185. *Ibid* 5 No.84

186. *Ibid* No.87 line 1

187. *Ibid* line 5

188. S.I.I. Vol. XIV. No.44

188. அ. இரா. நாகசாமி, கல்வெட்டு காலாண்டு இதழ்

189. Epigraphia Indica Vol.XXII, P.5

190. நடன காசிநாதன், பாண்டியர் கால ஆட்சி இயல்.

191. Raman K.V. Some Aspects of Pandiyan History, P.42

192. Epigraphia Indica Vol.XX p.11

193. S.I.I. Vol.XIXNo.2 p.231

194. *Ibid* No.XXII p.127

195. கல்வெட்டு காலாண்டு வெளியீடு 8 & 7

196. S.I.I. Vol. XIV

இயல் நான்கு

அ. பல்லவர் வரலாறு

பாண்டிய நாட்டில் நிலைபெற்றிருந்த களப்பிரர் ஆட்சியைக் கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் அகற்றிப் பாண்டியர் ஆட்சியை அமைத்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடுகளின் மூலம் நாம் கண்டோம். தொண்டை மண்டலத்தில் நிலைப்பெற்றிருந்த களப்பிரர் களைச் சிம்மவிட்டுணு என்ற பல்லவ மன்னன் அகற்றியதைப் பல்லவர் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் பேசுகின்றன. தொண்டை மண்டலத்தில் பல்லவ ஆட்சி நிலைபெற்றது தென்னிந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். சிம்ம விட்டுணுவின் ஆட்சிக்கு முன்னரே பல்லவ மன்னர்களில் பலர் காஞ்சிபுரத்தைக் கோ நகராகக் கொண்டு தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்திய போதிலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்துதான் பல்லவ மன்னர்களுடைய ஆட்சி தொடர்ந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் நடைபெற்றது. பல்லவர்களுடைய ஆதி இருப்பிடம் யாது? பல்லவ வமிசத்தின் தோற்றம் என்ன? அவர்கள் தமிழர்களா அல்லது அயல் நாட்டினரா என்ற கேள்விகளுக்கு இன்றளவும் முடிவான விடைகள் கிடைத்துவிட்டதாகக் கூறமுடியாது. சேர, சோழ பாண்டியர் களுடைய மரபு மூலம்போலப் பல்லவர்களுடைய மரபு மூலமும் ஒரளவிற்குத் தெளிவற்றதாகவே காணப் பெறுகிறது. பல்லவர்களுடைய மரபு மூலத்தைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் பல்வேறு வரலாற்றறிஞர்களால் ஆளப் பட்டுள்ளன. அவற்றை இங்குத் தொகுத்துரைப்பது சாலவும் அமைவுடைத்தாகும்.

சாக அல்லது பஹ்லவ வழியினரா? (Saka or Pahlava)

மைசூர் நாட்டின் கல்வெட்டுகளை ஆய்ந்த லூயி ரைசு என்பார், பல்லவர்களைப் பஹ்லவர் என்ற இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் நடு ஆசியப் பகுதியிலிருந்து இந்திய நாட்டின் வடமேற்குப்பகுதியில் குடியேறிப் பின்னர் தென்னிந்தியாவிற்கு வந்தவர்கள் என்றும் கூறுவார். அவர் பல்லவர்களும் பஹ்லவர்களும் ஒரே இனத்தவரென்றும் பஹ்லவர் பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வந்தவர்கள் என்றும் கருதினார்.[1]

கல்வெட்டு அறிஞராகிய திரு. வேங்கைய்யா என்பார் பல்லவர் என்னும் பெயர், பஹ்லவர் என்னும் சொல்லின் வடமொழி பெயர்ப்பென்றும் பஹ்லவர் பார்த்தியா (Parthia) நாட்டிலிருந்தும் போந்தவர் என்றும் கூறுவார்.[2]

பிரான்சு நாட்டிலிருந்து புதுச்சேரிக்கு வந்து இந்திய வரலாறு பண்பாடு முதலியவற்றை ஆராய்ச்சி செய்த ஜோவோ துப்ரே[3] என்ற அறிஞர், பல்லவர்கள் அயல் நாட்டவர் என்ற கொள்கையைப் பின்பற்றி, கூர்ச்சர மாநிலத்தில் ஆட்சிபுரிந்த உருத்திரதாமனுடைய அமைச்சராகிய சுவிசாகப் பஹ்லவர் என்பாரின் இனமாகிய பஹ்லவர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கூறியுள்ளார்.[4] காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயிலின் உட்புறச் சுவர்களில் காணப்பெறும் சிற்பங்களில், இரண்டாம் நந்திவர்மனுடைய தந்தையாகிய இரணிய வர்மனுக்குப் பல்லவ நாட்டு அதிகாரிகளும் மக்களின் படிநிகராளிகளும் முடிசூட்டுவதற்காக யானைத்தலையின் உருவம் போன்ற ஒரு மகுடத்தை அளிப்பதாகக் காணப்படுகிறது. இந்த யானைத்தலை போன்ற மகுடத்தை நடு ஆசியப் பகுதிகளில் வாழ்ந்த பார்த்தியர் அல்லது சாகர் என்ற இனத்தவர் அணிவது வழக்கமாகும். ஆகையால் வேங்கடசுப்பையர் என்ற கல்வெட்டு ஆய்வாளர், இவ்விதத் தலையணியைப் பார்த்திய இனத்தைச் சேர்ந்த பல்லவர்கள் அணிந்து

கொண்டனர்; எனவே பல்லவர்கள் பார்த்திய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுவார்.[5]

நாகர் வழியினரா?

'தமிழ் இலக்கிய ஆய்வுகள்'[6] என்ற நூலை இயற்றிய எம். சீனிவாச அய்யங்கார் "தமிழ்நாட்டின் வடபகுதியில் வாழ்ந்த நாக மரபினரோடு பல்லவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். ஆகையால் அவர்கள் நாகமரபைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளார். இக்கொள்கைக்கு ஆதாரமாக மணிமேகலை என்ற நூலில் கூறப்பெற்றுள்ள சோழ-நாகர் மண உறவினையும் தாளகுண்டாக்கல்வெட்டில் காணப்பெறுகின்ற சில செய்திகளையும் கூறுவார். திரு. வின்சென்ட் சுமித் இக்கொள்கையை ஆதரித்துள்ளதாக அறிஞர் என். சுப்பிரமணியம் கூறியுள்ளார்.[7]

வட இந்தியரா?

கே.பி. ஜெயசுவால் என்னும் வடநாட்டு வழக்கறிஞர் தாம் எழுதிய இந்திய வரலாறு என்னும் நூலில், பல்லவர்கள் தக்காணத்தை ஆட்சிபுரிந்த வாகாடக மரபைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் அந்தணர்கள் என்றும் கூறுவர்.

குறும்பர் அல்லது புலிந்தர் வழியினரா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த திரு, இரா. சத்தியநாதையர் தாம் எழுதிய இரு நூல்களில் அசோகருடைய கல்வெட்டுகளில் கூறப்பெற்ற புலிந்தர், பாலிதர் என்ற சொற்களே பல்லவரின் ஆதிமரபு ஆகும் என்று கூறுவர். பாலிதர் என்னும் சொல் பல்லவர் என்றாகித் தமிழில் தொண்டையர் என வழங்கியது. தொண்டைநாட்டில் இருந்த கோட்டங்களில் புலியூர்க் கோட்டமும் ஒன்றாகும். புலியூர்க் கோட்டத்தில் பல்லவர்

வாழ்ந்தனர். தொடக்கத்தில் புலிந்தர் என்று வழங்கப் பெற்றவர்கள் பின்னர் பல்லவராயினர் எனக் கூறுவர்.[8]

பல்லவர்கள் தமிழர்களா?

முதுபெரும் தமிழ்ப் புலவராகிய இரா. இராகவ அய்யங்கார், பெரும்பாணாற்றுப் படையின் தலைவனாகிய தொண்டைமான் இளந்திரையன், சோழ மன்னன் ஒருவனுக்கும் நாகர் மகளாகிய பீலிவளைக்கும் பிறந்த இளங்குமரன் ஆவான்; அவனே பல்லவ குலத்து முதல் அரசன் என்று கூறுவர்.[9] இலங்கையைச் சேர்ந்த சி. இராசநாயக முதலியார் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் உள்ள தீவுகளில் ஒரு தீவிற்கு மணிபல்லவம் என்ற பெயர் வழங்குகிறது. இந்த மணிபல்லவத்திலிருந்து வந்து தமிழ் நாட்டை ஆண்ட அரசமரபினரே பல்லவர் என்று கூறுவர். கோபாலன் எழுதிய "காஞ்சிப் பல்லவர் வரலாறு" என்னும் நூலின் முகவுரையில் பல்லவர்கள் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த திரையர்களின் வழிவந்தவர்கள் எனச் சா. கிருட்டிணசாமி அய்யங்கார் கூறியுள்ளார் என்று திரு. என். சுப்பிரமணியம் எழுதியுள்ளார்.[10]

ஆந்திரரா?

தென்னிந்திய வரலாற்றில் முக்கியமாகப் பல்லவ வரலாற்றில் ஆய்வுகள் செய்து புகழ்பெற்ற ஆர். கோபாலன், சி. மீனாட்சி, கே. எ. நீலகண்ட சாத்திரி, டி.வி. மகாலிங்கம், மா. இராசமாணிக்கம் முதலிய வரலாற்று அறிஞர்களும் மற்றும் பலரும் பல்லவர்கள் ஆந்திர நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்து காஞ்சிபுரத்தைத் தங்களுடைய கோ நகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர் எனக் கூறுவர். மேலே கூறப்பெற்ற ஆராய்ச்சியாளர்கள், "சதவாகனப் பேரரசின் தென்கிழக்குப் பகுதியில் பல்லவர், ஆனந்தர், விட்டுணுகுண்டியர், இக்குவாகர், சாலங்காயனர் முதலிய சிற்றரசர்கள் சதவாகனர்களுக்கு அடங்கி ஆட்சிபுரிந்தனர்.

சதவாகனப் பேரரசு சிதைவுற்ற பின்னர் பல்லவர்கள் தெற்கே பெயர்ந்து ஆந்திர நாட்டின் தென்பகுதியையும் தமிழ் நாட்டின் வடபகுதியையும் தங்களுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்து அதிகாரம் செலுத்தலாயினர்'' எனக் கூறியுள்ளனர். இக்கருத்தைக் கே.கே. பிள்ளையவர்களும் அவர்கள் பதிப்பித்துள்ள பல்லவருடைய ஆட்சிமுறையும் சமூகவரலாறும் என்ற நூலின் முகவுரையில் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.[11]

ந. சுப்பிரமணியம், பல்லவர்கள் தமிழர்கள்தான் என்றும் அதுவே சிறந்த கொள்கையென்றும் கூறியதோடு அமையாது அதனை வலியுறுத்தச் சில ஆதாரங்களை மேற்காட்டியுள்ளார். தமிழ் நாட்டின் வடபகுதியாகிய திருவேங்கடத்தின் அருகில் 'திரையர்' என்ற தமிழ் இனத்தவர் வாழ்ந்தனர். அகநானூற்றிலும் பெரும்பாணாற்றுப் படையிலும் இவர்கள் கூறப்பெற்றுள்ளனர். தொண்டையர் என்ற மற்றொரு இனத்தவரும் இவர்களுடன் வாழ்ந்தனர். இவர்களில் முன்னவர்கள், கடல் அலைகளைத் தங்களுடைய மரபுச் சின்னமாகவும் பின்னவர்கள் தொண்டைக் கொடியைத் தங்களுடைய மரபுச் சின்னமாகவும் கொண்டிருந்தனர். கரிகாற் சோழன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய சமயத்தில் இவ்விரு மரபினரும் ஒன்று சேர்ந்து காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள இடங்களைத் தங்களாட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். கோசர்களில், இளங்கோசர், முதுகோசர் என இரு பிரிவினர் இருந்ததைப் போல, திரையர்களிடையேயும் முதுதிரையர், இளந்திரையர் என்ற இரு பிரிவினர் தோன்றியிருக்கக்கூடும். முதுரையர் திருவேங்கடப் பகுதியை ஆட்சிபுரிய, இளந்திரையர் காஞ்சிப் பகுதியை ஆண்டுவந்தனர் போலும். இந்த இளந்திரையர் இனத்தின் தலைவனே பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பெறும் தொண்டைமான் இளந்திரையன் ஆவான். தொண்டைமண்டலத்துத் திரையர்-தொண்டையர் ஆவார்கள். இவர்கள் மணிமேகலையில் கூறப்பெற்ற சோழர்-நாகர்

உறவுமுறையில் சோழர்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்க வேண்டும். கரிகாலனுக்குப் பிறகு இளந்திரையர்கள் சோழருக்குக் கீழ்ப்படிந்து ஆளுநர்களாகப் பணியாற்றி இருக்கலாம். தொண்டை மண்டலத்தை ஆண்டவர்கள், திரையர்களாக இருந்தாலும் இல்லாமல் போனாலும் தொண்டைமான் என்ற பட்டத்தைப் பெற்றனர். காவிரிப் பூம்பட்டினத்தைக் கடல் கொண்ட பிறகு அந்நகரத் தில் ஆட்சி செலுத்திய சோழ மன்னன் காஞ்சிபுரத்திற்குத் தன் கோநகரத்தை மாற்றி ஆட்சி புரிந்திருக்கக்கூடும்.

காஞ்சிபுரத்தையும் அந்நகரத்தைச் சூழ்ந்திருந்த பகுதிகளையும் சோழ மன்னர்கள் கைப்பற்றியமையால் திரையர்கள் திருவேங்கடத்திற்கு வடக்கே நாடு பெயர்ந்து சென்று வடபெண்ணையாற்றுப் பகுதியில் வாழ்ந்து ஆந்திர மன்னர்களிடம் அடிபணிந்து வாழ்ந்தனர். ஆந்திரநாட்டில் இருந்த சூழ்நிலையில் தொண்டையர் என்ற தமிழ்ப்பெயர் பல்லவர் என மாற்றம் அடைந்தது. தங்களுடைய செப்பேடுகளில் பிராகிருதம், வடமொழி ஆகிய இரு மொழிகளைக் கையாண்டமை ஆந்திரர்களுடைய தொடர்பினால் ஏற்பட்டதாகும். பல்லவ மன்னர்கள் தங்களுடைய செப்பேடுகளில் வடமொழியைக் கையாண்டதும், மௌரியருடைய ஆட்சி முறையில் பல கூறுபாடுகளை மேற்கொண்டதும் ஆந்திரப் பேரரசில் இவர்கள் அடங்கியிருந்தமையே காரணமாகும். ஆந்திரப் பேரரசின் குறுநில மன்னர்களாகிய இக்குவாகர், சாலங்காயனர், ஆனந்தர் முதலியோர், பல்லவர்களைத் தெற்குப் பகுதிக்குத் தள்ளினர். ஆகையால் பல்லவர்கள் மீண்டும் தங்களுடைய பழைய இருப்பிடமாகிய தொண்டை மண்டலத்தை நாடி வந்தனர். இவர்களுடைய நெருக்கத்தால் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய களப்பிரர்கள் சோழ, பாண்டிய மண்டலங்களில் குடியேற வாய்ப்புகள் தோன்றின. திரையர்களாகிய பல்லவர்கள் ஆந்திரர்கள் அல்லர்; தமிழர்களேயாவர் என்றும் ஆந்திரர்களுடைய தொடர்பினால்

ஆந்திரர்களைப்போலத் தோன்றினாலும் அவர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவர்களேயாவர்' என்றும் என். சுப்பிரமணியம் கூறியுள்ளார்.[12]

மேற்கூறப் பெற்ற கருத்துகள் வரலாற்றுச்சான்றுகளைக் கொண்டு ஆய்வு செய்தல் அமைவுடைத்தாகும். இக்கருத்துகளை முதலில் கோவைப்படுத்திப் பின்னர் அவற்றை ஆய்வு செய்தல் வேண்டும்.

1. தொண்டையர் - திரையர் என இரு தமிழினப் பிரிவுகள் இருந்தன.

2. திரையர், தொண்டையர்களுடன் ஒன்றுபட்டு ஒரே இனமாயினர்.

3. முதுதிரையர், இளந்திரையர் என்ற பிரிவுகளும் இருந்தன.

4. காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டபிறகு சோழ மன்னர்கள் காஞ்சிபுரத்தைத் (சிறிது காலம்) தங்கள் தலைநகராகக் கொண்டனர்.

5. ஆகையால் திரையரும் தொண்டையரும் ஆந்திர நாட்டிற்குச் சென்று குடியேறி ஆந்திர மன்னர்களுக்கு அடங்கி இருந்தனர்.

6. அங்கே தொண்டையர் என்ற பெயர் பல்லவர் என்று மாறியது.

7. தங்களுடைய தலைவர்களுடைய ஆட்சிமுறையைப் பின்பற்றிச் செப்பேடுகளில் பிராகிருதத்தையும், வடமொழியையும் கையாண்டனர்.

8. ஆந்திரப் பேரரசின் சிதைவிற்குப்பின், அப்பேரரசின் மற்ற குறுநில மன்னர்களால் தெற்கே குடிபெயர்ந்து செல்ல நேரிட்டது.

9. மீண்டும் தங்களுடைய பழைய இருப்பிடமாகிய தொண்டை மண்டலத்திற்கு வந்தனர்.

10. ஆகவே, பல்லவர்கள் தமிழர்களே ஆந்திரநாட்டில் குடியேறி ஆந்திரப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு பின்னர் தமிழ் நாடாகிய தொண்டை மண்டலத்திற்குத் திரும்பிய தமிழர்கள் ஆவர்.

மேலே தொகுத்துக் கூறப்பெற்ற கருத்துகளுக்கு சான்றுகளை என். சுப்பிரமணியம் குறிப்பிடவில்லை. காவிரிப்பூம்பட் டினத்தைக் கடல் கொண்ட பிறகு எந்தச் சோழ அரசன் காஞ்சிபுரத்தைத் தலைநகராக்கினான்? அது எந்த ஆண்டில் அல்லது எப்பொழுது நடந்தது என்பதற்கும் சான்றுகள் இல்லை. தொண்டையர்கள் தொண்டை மண்டலத்தை விட்டு ஆந்திரப் பகுதிக்குச் சென்று, அங்குப் பல்லவர் என்ற பெயர் மாற்றத்தை அடைந்தனர் என்பதற்கும் சான்றுகள் இல்லை. ஆகையால், தொண்டையர்கள் என்ற தமிழனத்தவர்தான் பல்லவர்கள் என்ற கொள்கையும் அவர்கள் தொடக்கத்தில் தமிழ் நாடாகிய தொண்டை மண்டலத்திலிருந்து, வட பெண்ணையாற்றின் பகுதிக்குக் குடியேறி மீண்டும் தொண்டை மண்டலத்திற்கு வந்தனர் என்ற கொள்கையும் ஏற்புடைத்தாகாது.

இதுகாறும் கூறப்பெற்ற கொள்கைகளுள், பல்லவர் ஆந்திர நாட்டிலிருந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்கள் என்பதும், அவர்கள் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் தமிழர்கள் அல்லர் என்பதும், மற்ற அயல் நாட்டினரும் அல்லர் என்பதும் தெளிவாக விளங்குகின்றன. இக்கருத்தை கே.கே. பிள்ளை பின்வருமாறு தெளிவாக விளக்கியுள்ளார்.

பல்லவர்களுடைய செப்பேடுகளிலும் கல்வெட்டு களிலும் அசுவமேதம், வாசபேயம் முதலிய வேத வேள்வி களைச் செய்த சத்திரிய வமிசத்தினர் என்று கூறிக் கொள்ளு கின்றனர்; தக்காணத்தில் ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த மற்ற அரச மரபுகளோடு திருமணவுறவு கொண்டுள்ளனர்; சதவாகனப் பேரரசர்களுக்கு அடங்கி ஆளுநர்களாகவும், படைத்தலைவர்களாகவும் இருந்துள்ளனர். தொடக்கத்தில் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் எவ்விதத் தொடர்புடையவர்களாகவும் தோன்றவில்லை; ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பெல்லாரி மாவட்டத்தின் பகுதிகளிலும் மற்ற இடங்களிலும் பல்லவர்களுடைய செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அவைகள் பிராகிருதத்திலும் வடமொழியிலும் எழுதப்பெற்றுள் ளனவேயன்றித் தமிழில் எழுதப் பெறவில்லை. பல்லவர்களுடைய ஆட்சி முறையும் மௌரிய சதவாகன அமைப்புகளைப் பின்பற்றியுள்ளன. தொடக்கக் காலத்திய பல்லவ மன்னர்கள் தமிழ் மொழியை ஆதரிக்கவில்லை. காஞ்சி நகரத்தில் அவர்கள் அமைத்த கடிகை என்னும் கலைக்கழகத்தில் வடமொழிதான் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது. தொடக்கக் கால அரசர்களின் சபையில் பாரவி, தண்டி போன்ற வடமொழிக் கவிஞர்கள் போற்றப்பட்டுள்ளனரேயன்றித் தமிழ்ப் புலவர்களும் தமிழ் மொழியும் ஆதரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தம் செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் பல்லவ மன்னர்கள் தங்களைப் பரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகின்றனர். இஃதே போன்று ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த சாலங்காயனர்களும் தங்களைப் பரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகின்றனர். கந்தவர்மன், நந்திவர்மன், புத்தவர்மன் என்ற பெயர்களும் நந்தி உருவம் அமைக்கப்பெற்ற அரசு முத்திரையும் செப்பேடுகளில் பின்பற்றப்பெறும் எழுத்துகளின் வரிவடிவங்கள் முதலிய

வகைகளில் பெரும் ஒற்றுமைகள் காணப்பெறுகின்றன. கிளை (branch) என்ற பொருளுடைய பல்லவம் என்னும் சொல் சதவாகன வமிசத்துச் சூட்டு (Chutu) என்ற மரபிலிருந்து கிளைத்த ஓர் இனமாகும் என்றும் பல வரலாற்று அறிஞர்கள் கருதுவர். ஆந்திரப் பகுதியில் உள்ள நெல்லூர், குண்டூர் மாவட்டங்களில் சாலங்காயனர்களோடு பல்லவர்களும் ஆந்திரப் பேரரசின் குறுநில மன்னர்களாக விளங்கி யுள்ளனர். மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப்பாளையச் செப்பேடுகளில், நாகர்களுடன் திருமண உறவு கொண்ட பிறகுதான் பல்லவர்கள் காஞ்சிபுரத்திற்கு வந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.[13] எனவே பல்லவர்கள், ஆந்திரர்கள் என்பதும் ஆந்திர நாட்டில் இருந்து முதலில் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிப் பின்னர்த் தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளிலும் தங்கள் ஆதிக்கத்தை அமைத்தனர் என்பதும் தெளிவு பெறுகின்றது என்று கே.கே.பிள்ளை கூறுவார்.

பிராகிருத செப்பேட்டுப் பல்லவர்கள்

பல்லவர் வரலாற்றினை மூன்று பிரிவுகளாக வரலாற்றாசிரியர்கள் பிரித்துள்ளனர். முதற்காலப் பல்லவர்கள் தங்களுடைய பட்டயங்களைப் பிராகிருத மொழியிலும், இரண்டாவது காலப் பல்லவர்கள் வடமொழியிலும் மூன்றாவது காலப்பல்லவர்கள் வடமொழியும் தமிழும் கலந்தும் வெளியிட்டுள்ளனர். முதற்காலப் பல்லவர்களுடைய செப்பேடுகளை நுணுகி ஆய்ந்தால் அவைகளை மன்னர்களுடைய காலத்தை ஒருவாறு கணிக்கலாம். சமுத்திரகுப்தனுடைய அலகாபாதுத்தூண் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள காஞ்சி விட்டுணுகோபன் கி.பி. 350-இல் இருந்தவனாகக் கொள்ளலாம். இந்த ஆண்டு மற்ற பல்லவ மன்னர்களுடைய காலத்தைக் கணிப்பதற்கு உதவியாக உள்ளது.

பிராகிருத மொழியில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளில் நான்கைப்பற்றி நாம் ஆய்வு செய்தல் வேண்டும். அவையாவன:

1. சிம்மவர்மனுடைய மஞ்சுகல்லுக் கல்வெட்டு

2. யுவமகாராஜ சிவகந்தவர்மனுடைய தந்தையால் 10-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்ற மயிதவோலு செப்பேடுகள்.

3. மகாராசா சிவகந்தவர்மனுடைய எட்டாவது ஆட்சி யாண்டில் வெளியிடப்பெற்ற ஹீரஹதஹள்ளிச் செப் பேடுகள்

4. சாருதேவி அரசியாரால் வெளியிடப்பெற்ற பிரிட்டிட்டு அருங்காட்சியகப் பட்டயங்கள் அல்லது குணபதேயப் பட்டயங்கள். இப்பட்டயங்கள் (அ) விஜயகந்தவர்மன் (ஆ) விசய புத்தவர்மன் (இ) புத்தாங்குரன் என்ற மூன்று அரசர்களின் பெயர்களைப் பாட்டன், தகப்பன், மகன் என்ற முறையில் கூறுகின்றன. மயிதவோலு, ஹீரஹதஹள்ளி பட்டயங்களில் கூறப்பெற்றுள்ள சிவகந்தவர்மனும் குணபதேயப் பட்டயத்தில் வரும் விஜயகந்தவர்மனும் ஒருவரா ? அல்லது வேறுவேறா ? என்பது விளங்கவில்லை.

அலகாபாதுத் தூண் கல்வெட்டில் காணப்பெறும் விட்டுணுகோபன் என்ற பல்லவ மன்னனை எவ்விடத்தில் பொருந்தும்படிச் செய்வதென்பதும் கடினமாக உள்ளது. தினேசு சந்திர சர்க்கார் என்பார் விட்டுணுகோபனைச் சிவகந்தவர்மனுடைய மகனாகக் கருதி கி.பி. 355 முதல் கி.பி.375 வரை அவன் ஆட்சி புரிந்ததாகக் கருதுவர். இந்த விட்டுணுகோபன், வடமொழிச் செப்பேடுகளில் காணப் பெறும் குமாரவிட்டுணுவே என்று ஆர். கோபாலன் கருதினார். ஆனால் விட்டுணுகோபனும், குமாரவிட்டுணுவும் ஒருவரைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது. பல்லவச்

செப்பேடுகளில் மூன்று விட்டுணுகோபர்களும், மூன்று குமார விட்டுணுக்களும் காணப்பெறுகின்றனர். பிராகிருதச் செப்பேடுகளிலிருந்து, பின்வருமாறு பிராகிருத காலத்துப் பல்லவ மன்னர்களின் வரிசையை முறைப்படுத்தலாம்.

சிம்மவர்மன் (ஏறத்தாழ கி.பி. 315-45)
|
சிவகந்தவர்மன் - கி.பி. 345-55

சமுத்திரகுப்தரால் தோற்கடிக்கப் பெற்ற விட்டுணுகோபன் (கி.பி. 350)

பப்பதேவன்
|
புத்தவர்மன்
|
புத்தாங்குரன்

வடமொழியில் பட்டயங்களைப் பொறித்த பல்லவ அரசர்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு ஏழு முக்கிய செப்பேடுகள் துணை செய்கின்றன. அவையாவன:

1. கந்தவர்மனுடைய 33-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப் பட்ட ஓங்கோடு பட்டயம்.

2. சிம்மவர்மன் என்பவனுடைய 11, 12-ஆம் ஆட்சியாண்டு களில் வெளியிடப்பட்டதும் யுவமகாராச விட்டுணு கோபனால் வெளியிடப்பட்டதுமாகிய உருவப்பள்ளி, நெடுங்கராயச் செப்பேடுகள்.

3. சிம்மவர்மனுடைய (1) ஓங்கோடு, (2) பிகீரா, (3) மாங்களூர், (4) விழவெட்டிச் செப்பேடுகள்.

4. சூராச் செப்பேடுகள்.

5. முதலாம் நந்திவர்மன் காஞ்சிபுரத்திலிருந்து வெளியிட்ட உதயேந்திரம் செப்பேடுகள்.

6. சேந்தனூர்ச் செப்பேடுகள்.

7. பள்ளன்கோயில் செப்பேடுகள்.

இவற்றுள் பள்ளன்கோயில் செப்பேடுகளும் இராச சிம்மனுடைய வயலூர் தூண் கல்வெட்டும் விட்டுணு கோபன், சிம்மவர்மன், சிம்மவிட்டுணு என்ற மூன்று அரசர்களை முறைப்படுத்திக் கூறுகிறது. மேற்கூறப்பட்ட செப்பேடுகள், கல்வெட்டுகளைக் கொண்டு பின்வரும் மரபு விளக்கப்பட்டியலை முறைப்படுத்தலாம். (காண்க மரபு விளக்கப் பட்டியல் பக்.எண் : 128)

அலகாபாதுத் தூண் கல்வெட்டில் கூறப்பெற்ற விட்டுணுகோபனும், வடமொழியில் எழுதப்பெற்ற செப்பேடு களில் கூறப்பெறும் குமாரவிட்டுணுவும் ஒருவரே என்ற ஆர். கோபாலனின் கூற்று ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. தினேசு சந்திர சர்க்கார், விட்டுணுகோபனும் கந்தவர்மனும் ஒருவனே என்று கூறுவர். டி.வி. மகாலிங்கம் சிவகந்தவர்மனை, கந்தவர்மன் என்று கூறி முதலாம் குமாரவிட்டுணுவின் மகனாகிய கந்தவர்மனை இரண்டாம் கந்தவர்மன் என்று கூறுவர்.

பிராகிருதம், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பெற்றுள்ள சாசனங்களில் அவைகளை விடுத்த அரசர்களின் பெயர்களை மட்டும் தெரிவித்து, அதில் காணப்பெறும் அரசர்களின் தொடர்பு யாது? அவர்களுடைய வரலாறு என்ன என்பதைத் தெரிவிக்க வில்லையாதலால் அவற்றைக் கொண்டு முற்காலப் பல்லவர் வரலாற்றை எழுதுவது எளிதாகத் தோன்றவில்லை. ஆனால் அலகாபாதுத் தூண் கல்வெட்டும் காகுத்தவர்மனுடைய தாளகுண்டாத் தூண் கல்வெட்டும் இரண்டாம் மாதவவர்மனுடைய பெனுகொண்டாச் செப்பேடும் சிறிதளவு துணைபுரிகின்றன. சங்க இலக்கியங்களில் பெரும்பாணாற் றுப்படையும் மணிமேகலையும் தொண்டைமான் இளந்திரை யனைப் பற்றியும் காஞ்சிபுரத்தில் நிலவிய சமயநிலையைப்

சிம்மவர்மன்

சிவகந்தவர்மன்

சமுத்திரகுப்தனிடம் தோல்வியுற்ற விட்டுணுகோபன்

பப்பதேவன்

குமாரவிட்டுணு-ஏறத்தாழ கிபி. 355-70

புத்தவர்மன்

கந்தவர்மன் II – கி.பி. 370-85

புத்தாங்குரன்

வீரவர்மன் - கி.பி. 385-400

கந்தவர்மன் III – கி.பி. 400-436

சிம்மவர்மன் II – கி.பி. 435-65

யுவமகாராசா விட்டுணுகோபன்

கந்தவர்மன் IV – கி.பி. 465-490

சிம்மவர்மன்

விட்டுணுகோபன் II

சிம்மவர்மன் III

நந்திவர்மன்

குமாரவிட்டுணு II
கி.பி. 520-40

சிம்மவிட்டுணு
(கி.பி. 557-590)

புத்தவர்மன்
கி.பி.540-60

மகேந்திரவர்மன் I
(கி.பி. 590-630)

குமாரவிட்டுணு III
கி.பி.560-80

பற்றியும் ஓரளவு கூறுகின்றன. கடம்ப வமிசத்தைச் சேர்ந்த மயூரசர்மன் காஞ்சியில் இருந்த கடிகையில் கல்வி பயில வந்து, ஒரு பல்லவ வீரனுடன் மன வேற்றுமை கொண்டதால் பல்லவர்களுக்கு அடங்காத கடம்ப குலத்தை அழித்ததைப் பற்றித் தாளகுண்டாக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. மேலைக் கங்க வமிசத்து இரண்டாம் மாதவனுடைய பெனுகொண்டாச் செப்பேடுகளில், ஆரியவர்மன் என்ற கங்க அரசனைச் சிம்மவர்மன், கந்தவர்மன் என்ற இரு அரசர்கள், அரச பதவியில் அமர்த்திய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இந்தப் பெனுகொண்டாச் செப்பேடுகளின் எழுத்தமைதி நோக்கி அவைகள் கி.பி. 475 - ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, அச்செப்பேடுகளில் கூறப்பெற்ற சிம்மவர்மனும் கந்தவர்மனும் இரண்டாம் சிம்மவர்மன், மூன்றாம் கந்தவர்மன் எனக்கூறலாம். கங்கவமிசத்து அரசர்களுக்குப் பல்லவ மன்னர்கள் முடிசூட்டியுள்ளமையால் முன்னவர் பின்னவர்களுக்கடங்கியவர் எனக் கூறலாம்.

பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையனைப்பற்றியும் சோழர் , நாகர் உறவு பற்றியும் கூறப்பெற்றுள்ளன. உலோக விபாகம் என்னும் திகம்பர சமண நூல் காஞ்சிநகரத்து அரசன் சிம்மவர்மனுடைய இருபத்திரண்டாம் ஆட்சி ஆண்டாகிய கி.பி. 458 - இல் இயற்றப்பட்டதாக நாம் அறிகிறோம். இந்தச் சிம்மவர்மனின் ஆட்சியின் தொடக்க ஆண்டு கி.பி. 436 என்று நாம் உறுதியாகக் கொள்ளலாம். மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப்பாளையம் செப்பேடுகளில் பிராகிருத, வட மொழிப் பட்டயங்களை எழுதிய முற்காலப் பல்லவ மன்னர்களின் பெயர்களுள் அசோகவர்மன் என்ற பெயரொன்றும் காணப்பெறுகிறது. இந்தச் செப்பேடுகள் பல்லவர்களை அந்தணர்கள் என்றும் பரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மொழிகின்றன. இதனால் பல வரலாற்றறிஞர்கள் பல்லவர்களைப்

பிராமணர்கள் என்று மயங்கினர். ஆனால் என். சுப்பிரமணியம் அவர்கள் பல்லவர்கள் பரத்துவாச கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறிக்கொள்வதற்கு, அவர்கள் தங்களுடைய புரோகிதர்களுடைய கோத்திரத்தையே மேற்கொண்டனர் என்றும் பல்லவர்கள் அந்தணர்கள் அல்லர் என்றும் கூறுகின்றார்.[13அ]

வேலூர்ப்பாளையம் செப்பேடுகளில் 'வீரகூர்ச்சன்' என்ற பல்லவ மன்னன், சூடு பல்லவன் (Ghutu Pallavan) என்றும் அவன் நாகர் இனத்தில் திருமணம் செய்து கொண்டு காஞ்சியைக் கைப்பற்றியதாகவும் கூறப்பெற்றுள்ளது.[14] இந்த வீரகூர்ச்சனின் மகன், சத்தியசேனன் என்பவனிடமிருந்து அந்தணர்களுடைய கடிகையையும் காஞ்சி நகரத்தையும் கைப்பற்றியதாக மேற்படி செப்பேடுகள் கூறுகின்றன. ஆனால் இந்தச் சத்தியசேனன் யார் என்பதை அறியமுடியவில்லை. பின்னர் குமாரவிட்டுணு என்பவனும் அவனுடைய மகன் புத்தவர்மனும் காஞ்சியை மீண்டும் கைப்பற்றியதாகவும் புத்தவர்மன் சோழர்களுக்கு வடவாக்கினி போன்றவன் என்றும் கூறப்பெற்றுள்ளனர். மேலே கொடுக்கப்பட்டுள்ள மரபுப் பட்டியல்படி இந்தக் குமாரவிட்டுணு இரண்டாம் குமாரவிட்டுணுவாக இருக்கலாம். இந்தக் குமாரவிட்டுணுவிற்கும் சிம்மவிட்டுணுவின் தகப்பனாகிய சிம்மவர்மனுக்கும் எவ்வித உறவு என்பதை நாம் அறியமுடியவில்லை. குமாரவிட்டுணு என்பவன் காஞ்சியைக் கைப்பற்றிய செய்தி ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறது.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் களப்பிரரோ, அல்லது சோழரோ காஞ்சி நகரத்தைப் பல்லவர்களிடமிருந்து கைப்பற்றியிருக்கக்கூடும். ஆனால், காஞ்சி நகரத்தைச் செங்கணானும் அவனுடைய மகன் நல்லடியும் கைப்பற்றியிருப்பர் என்ற கொள்கை வியப்பைத் தருவதொன்றாகும். வேலூர்ப்பாளையம் செப்பேடுகளில் புத்தவர்மன் என்ற மன்னன் சோழர் சேனையொன்றை

முறியடித்ததாகக் கூறப்பெற்றுள்ளது. சிம்மவிட்டுணு (மகேந்திரவர்மனின் தகப்பன்) களப்பிரர்களை வென்ற தாகவும் அறிகிறோம். இதன் பிறகே பல்லவ அரசு வடபெண்ணையாற்றிலிருந்து காவிரி ஆறு வரையில் பரவியதெனக் கொள்ளலாம்.

பல்லவர்கள் அந்தணர்களா?

கி.பி. 150 முதல் 350 வரை இந்திய வரலாறு என்னும் நூலை இயற்றிய கே.பி. ஜெயசுவால் என்ற வழக்கறிஞர், பல்லவர்கள் வாகாடக மரபைச் சேர்ந்தவர்கள் என்றும், அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறியுள்ளார்.[15] வாகாடர்கள் தங்களைப் பரத்துவாச கோத்திரத்தினர் என்று அழைத்துக் கொள்வதாலும் பல்லவர்களும் தங்களுடைய கல்வெட்டுகளில் மகாபாரத வீரர்களாகிய துரோணர், அசுவத்தாமன் முதலிய அந்தணர் மரபில் தோன்றிய பல்லவன் என்ற வீரன், பரத்துவாசர் என்ற முனிவரின் சந்ததியினர் என்று கூறிக்கொள்ளுவதாலும் பல்லவர்கள் அந்தணர்களாக இருத்தல் வேண்டும் என்ற கருத்து வேரூன்றியுள்ளது. ஆந்திர நாட்டில் பல்லவர்களோடு தொடர்புள்ள சாலங்கயானர்களும் தங்களைப் பரத்துவாச கோத்திரத்தினர் என்று அழைத்துக் கொண்டனர். துரோ ணர் அந்தணர் வகுப்பில் பிறந்து வில் வித்தையில் தேர்ச்சிப் பெற்றுப் போர்வீரராக விளங்கினார் அஃதேபோன்று பல்லவர்களும் சத்திரியர்களுடைய தொழிலாகிய போர் செய்வதை மேற்கொண்டு தங்களைப் பிரம்ம சத்திரியர் என்று அழைத்துக் கொண்டனர். பள்ளன் கோயில் செப்பேடுகளில் பல்லவர்கள் பிரம்ம சத்திரியர் என்று கூறப்பெறுகிறார்கள்.[16] புள்ளூர்ச் செப்பேடுகளில் பல்லவர் மரபு துரோணரின் மரபில் தோன்றியது என்று கூறப்பட்டுள்ளது.[17]

ஆனால், பல்லவ மன்னர்களுடைய பிராகிருதச் செப்பேடுகளில் அவர்கள் அந்தணர் வகுப்பைச் சேர்ந்த வர்கள் என்று கூறப்பெறவில்லை. யுவமகாராசா

விட்டுணுகோபனுடைய நெடுங்கராய செப்பேடுகளில் சத்திரியர்களாகிய பல்லவர்கள் அந்தணர்களுடைய செயல்களையும் மேற்கொண்டனர் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.[18] மாமல்லபுரத்தில் உள்ள காவ மேடைக் கல்வெட்டில் கடற்கரைக் கோயிலுக்குச் சத்திரிய சிம்மபல்லவேச்சுரம் என்ற பெயர் வழங்கியது. இராசசிம்ம பல்லவனுக்குச் சத்திரிய சிம்மன் என்ற பெயரும் உண்டு. பல்லவ மன்னர்கள் வர்மன் என்ற சத்திரியப் பட்டத்தை மேற்கொண்டனரேயன்றிச் சர்மன் என்ற பிராமணப் பட்டத்தை மேற்கொள்ளவில்லை. வீரகூர்ச்சன் என்ற பல்லவ அரசன் நாகர் இளவரசியை மணந்து கொண்டான். இந்த நாகர்கள் பிராமணர்கள் அல்லர். காஞ்சியில் இருந்த கடிகையில் கல்வி பயிலவந்த கடம்ப இனத்து வீரனாகிய மயூரசர்மன் பல்லவர்களைச் சத்திரியர்கள் என்றே கூறியுள்ளான்.[19] பல்லவ மன்னர்கள் தங்களுக்குப் புரோகிதம் செய்த அந்தணர்களின் கோத்திரங்களைத் தாங்களும் மேற்கொண்டு தங்களைப் பரத்துவாச கோத்திரத்தினர் என்று தங்களுடைய செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் அழைத்துக் கொண்டனர். உண்மையில் பல்லவர்கள் அரச மரபைச் சார்ந்தவர்களேயன்றி அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது தெளிவு பெறுகின்றது.[20] பல்லவ மன்னர்களுடைய புரோகிதர்கள் பரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாகையால் தங்களுடைய கோத்திரத்தைச் சத்திரியர்களாகிய அரசர்களும் மேற்கொள்ளும்படிச் செய்துள்ளனர். புரோகிதர்களுடைய கோத்திரத்தை இணைத்துக்கொண்ட பிறகு வருணாசிரம தருமத்தையும் பிராமணர்களுக்குப் பிரமதேயம் வழங்கு வதையும் வடமொழியையும் ஆரியப் பண்பாட்டையும் நாட்டில் பரப்புவதையும் தங்களுடைய கடமைகளாகக் கருதினர். வடநாட்டில், காசிநகர் வடமொழிக் கல்விக்குப் பெயர் பெற்றிருந்தது போன்று தொண்டைமண்டலத்தில் பல்லவரின் கோநகராகிய காஞ்சியிலும் 'கடிகை' என்ற வடமொழிக் கல்லூரியும் அமைக்கப்பெற்று அதன்மூலமாக

வடமொழி கற்பிக்கப்பட்டது. காரவேலன் காலத்தில் வடஇந்தியாவிற்கு மட்டும் 'பாரதவர்ஷம்' என்ற பெயர் வழங்கியது என்றும் பல்லவர்காலத்தில் தென்னிந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கும் அப்பெயர் வழங்கியது என்றும் அறிஞர் கூறுவர்.[21]

சிம்மவர்மனும் சிம்மவிட்டுணுவும்

களப்பிரர்களுடைய கொடுங்கோன்மையிலிருந்து பாண்டிய நாட்டை மீட்டு நல்லாட்சி அமைத்த கடுங்கோன் என்ற பாண்டிய மன்னனும் அவனுக்குப் பின்வந்தோரும் செய்ததுபோன்று சிம்மவர்மனும் அவனுடைய மகன் சிம்மவிட்டுணுவும் சோழநாட்டையும் தொண்டை மண்டலத்தையும் வென்று பல்லவப் பேரரசிற்கு அடி கோலினர் எனக்கூறலாம். பல்லவ வரலாற்றில் சிம்ம வர்மனுடைய செயல்களைப் பற்றியும் அவருடைய, சைவ சமயம் பரவுவதற்குரிய செய்கைகளைப் பற்றியும் வரலாற்று ஆசிரியர்களிடையே ஒரு குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சிம்மவர்மன் பெரியபுராணத்தில் கூறப் பெற்றுள்ள ஐயடிகள் காடவர்கோன் என்றும் இவர் தம்முடைய முதுமைக் காலத்தில் அரசுரிமையைத் தன் மகனுக்கு அளித்துவிட்டு தமிழ்நாட்டுச் சிவத்தலங்களாகிய சிதம்பரம், கும்பகோணம், குற்றாலம், திருப்பனந்தாள், திருவையாறு, குளித்தலை முதலிய சைவக் கோயில்களுக்குச் சென்று இப்பொழுது கிடைக்கப்பெறும் 24 வெண்பாக்களைத் தூய தமிழில் இயற்றியவர் என்றும் டி.வி. மகாலிங்கம் கூறுவர்.[22] ஆனால் தமிழில் திருமுறை வரலாறு என்ற நூலை எழுதியுள்ள க. வெள்ளைவாரணனார் இந்த ஐயடிகள், இராசசிம்மப் பல்லவனின் தகப்பனாகிய முதலாம் பரமேசுவரவர்மன் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.[23]

சிம்மவர்மனுக்குச் சிம்மவிட்டுணு, பீமவர்மன் என்ற இரு மக்கள் இருந்தனர். சிம்மவர்மனுக்குப் பிறகு அவனுடைய முதல் மகனாகிய சிம்மவிட்டுணு பல்லவ அரசனாக

முடிசூட்டிக்கொண்டான். சிம்மவர்மன் முதல், இரண்டாம் பரமேசுவரன் வரையில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்களுடைய வரலாற்றை எழுதுவதற்குப் பலவிதமான சான்று துணை செய்கின்றன. அவற்றுள் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் சிறப்பானவை. கங்கவமிசத்து அரசனாகிய இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரம் செப்பேடுகளும் பராந்தக நெடுஞ்சடையனுடைய வேள்விக்குடிச் செப் பேடுகளும் முக்கியமானவையாகும். இக்காலத்தில் தோன்றிய சிவனிய, மாலிய இறை நெறி இலக்கியங்களாகிய தேவாரப் பாடல்களும் நாலாயிரத்திவ்யப் பிரபந்தப் பாடல்களும் பல்லவ மன்னர்களுடைய செயல்களையும் போர்களையும் பேசுகின்றன. மகேந்திரவர்மனால் இயற்றப்பெற்ற மத்தவிலாசப் பிரகசனம் என்னும் வடமொழி நாடகமும் தண்டி என்பவருடைய அவந்தி சுந்தரி கதாசாரமும் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் தோன்றிய நந்திக்கலம்பகம், பாரத வெண்பா போன்ற தமிழ் நூல்களும் சான்றுகளாகின்றன. முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த யுவான்-சுவாங் எழுதிய குறிப்புகள் அக்காலத்திய சமயச் சமூக நிலைமையைப் பற்றி அறிந்து கொள்ளுவதற்குத் துணை செய்கின்றன. சோழ மன்னருடைய ஆட்சிக் காலத்தில் சேக்கிழாரால் இயற்றப்பெற்ற பெரிய புராணத்தில் பல்லவ அரச குலத்தைச் சேர்ந்த நாயன்மார்களுடைய வரலாறும், பல்லவச் சிற்றரசர்களுடைய வரலாறும், சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திற்கு முன்வாழ்ந்த பல நாயன்மார்களுடைய வரலாறும், பொதுவாகத் தமிழ்நாட்டின் வரலாற்றுச் செய்திகள் பலவும் காணப்பெறுகின்றன. "உண்மை, தியாகம், வணக்கம் போன்ற பரிசுத்தமான நற்குணங்களின் கூட்டம் யாரிடம் உறைவிடமாகக் கொண்டனவோ வீரர்களின் சத்திரிய குணங்கள் உயர்ந்த நிலையில் பெருகி வேறு எவரிடமும் அடையாமல் யாரை அடைந்தனவோ அந்தச் சிம்மவிட்டுணு கவேரன் மகளாகிய காவிரி நதியை மாலையாகவும் நெல்வயல்கள், செழுமையான கரும்பு வயல்கள் ஆகியவற்றை ஆடையாகவும் கமுகுத் தோட்டம்

வாழைத்தோட்டம் ஆகியவற்றை ஒட்டியாணமாகவும் கொண்டது போன்ற சோழ நாட்டைக் கைப்பற்றினான்''.[24] இச்செய்தியை மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப் பாளையச் செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. "மலையர், களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர், சிங்களர், கேரளர் முதலியோரை வென்றவன்'' என்று கசாக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.[25]

மேற்கூறப்பெற்றவர்களுள் மலையர் என்போர் திருக் கோவலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மலையமாநாடு அல்லது மலாடு என்ற நடு நாட்டை ஆண்ட மலைய மான்களைக் குறிக்கும். களப்பிரர்கள் காவிரிப்பூம் பட்டினத்தில் ஆட்சி செலுத்திய அச்சுதக் களப்பிரனின் சந்ததியாரைக் குறிக்கும். கொல்லிமலைப் பகுதியை ஆண்ட தமிழ்க் குறுநில மன்னன் மழவராயனாகும். ஆனால் சிம்மவிட்டுணு வெற்றி பெற்றுச் சோழ நாட்டை எந்தச் சோழ மன்னனிடமிருந்து கைப்பற்றினான் என்பது விளங்க வில்லை. டி.வி. மகாலிங்கம் சோழன் செங்கணான் என்ப வரிடமிருந்து சோழ நாட்டைக் கைப்பற்றியிருக்கக்கூடும் எனக் கருதுகிறார்.[26] ஆனால் இந்தச் சோழ மன்னன் சங்க காலத்திய கோச்செங்கட் சோழனாக இருக்கமுடியாது. செங்கணான் என்ற பெயரோடு வேறு ஒரு சோழச் சிற்றரசன் இருந்தான் என்பதற்குத் தகுந்த சான்றுகள் இல்லை. பாண்டிய நாட்டையும் சிங்களத்தையும் சிம்மவிட்டுணு வென்றமைக்கும் தகுந்த சான்றுகள் கிடையாது. பள்ளன்கோயில் செப்பேடுகள் பல்லவ சிம்மவிட்டுணு இன்னொரு சிம்மவிட்டுணுவை வென்றதாகக் கூறுகின்றன. ரேநாடு என்ற தெலுங்குச் சோழநாட்டை கி.பி. 565 முதல் 575 வரை சிம்மவிட்டுணு என்ற தெலுங்குச் சோழச் சிற்றரசன் ஆட்சி புரிந்ததாக எம்.எஸ். கோவிந்தசாமி எழுதியுள்ளார்.[27] பல்லவ அரசனுக்கு அடங்கி ஆட்சிபுரிந்தமையால் தன்னைச் சிம்மவிட்டுணு என்று அழைத்துக் கொண்டான் போலும்.

மகேந்திரவர்மன் இயற்றிய மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடகத்தில் தன் தந்தையின் குணநலன்களைப் பின்வருமாறு விவரித்துள்ளான். "பல்லவ குலம் என்ற உலகைத் தாங்கும் குலமலை போன்றவன்; நுகர்ச்சிப் பொருட்கள் அனைத்தையும் உடையவன்; பலநாடுகளை வென்றவன்; வீரத்தில் இந்திரனையும் செல்வத்தில் குபேரனையும்; அரசர்களுள் சிங்கத்தையும் போன்றவன்" என்று புகழப் பெற்றுள்ளான்.[28] கும்பகோணத்தை அடுத்துள்ள கஞ்சனூர் என்ற ஊரும் சென்னைக்கருகில் உள்ள மணலி என்ற பகுதியும் பல்லவர் காலத்திய கல்வெட்டுகளில் சிம்மவிட்டுணு சதுர்வேதி மங்கலங்கள் என்று வழங்கப்பெற்றன. சிம்மவிட்டுணு மாலிய சமயத்தவன் என்பது அவனுடைய பெயரைக் கொண்டு அறியலாம். சீயமங்கலம் என்னுமிடத்தில் காணப்பெறும் குகைக் கோயிலும் சிங்க உருவங்களும் இவ்வரசனுடைய ஆட்சிக்காலத்தில் தோன்றியிருக்கலாம். மாமல்லபுரத்தில் உள்ள ஆதிவராகர் குகைக்கோயிலில் வடக்குப் புறத்துப் பாறையில் சிரீ சிம்மவிட்டுணு போதாதிராசன் என்று பல்லவக் கிரந்த மொழியில் எழுதப்பெற்றுள்ளது. அதன் அடிப்பகுதியில் ஓர் ஆண் உருவம் உட்கார்ந்த நிலையில் உள்ளது. அவ்வுருவத்தின் மீது உயர்ந்த மகுடமும் மார்பிலும் கழுத்திலும் பல அணிகளும் அமைந்துள்ளன. அவ்வுருவத்தின் இருபுறங்களிலும் முடியணிந்த பெண்மணிகளின் உருவங்கள் நின்ற நிலையில் காணப்பெறுகின்றன. இவ்வுருவங்கள் சிம்மவிட்டுணுவையும் அவனுடைய மனைவியரையும் குறிப்பனவாகும்.[29]

இவ்வுருவங்கட்கு எதிரில் சிரீ சிம்மவிட்டுணு மகேந்திர போதாதி ராசன் என்று எழுதப்பட்டுள்ளது. சிம்மவிட்டுணுவின் சபையில் வடமொழியில் வல்லுநரான தாமோதரன் என்ற பாரவி சிறந்த புலவராக விளங்கினார். இப்புலவர் தொடக்கத்தில் கீழைச்சாளுக்கிய அரசனான விட்டுணுவர்த்தனுடைய சபையிலும் பின்னர் மேலைக்கங்க

அரசனான துர்விந்தன் அவையிலும் அரசவைக் கவிஞராக விளங்கினார். இக்கவியரசனின் பெருமையைக் கேள்வியுற்ற சிம்மவிட்டுணு அவரைக் காஞ்சிபுரத்திற்கு வரவழைத்துத் தன்னுடைய அவைக் கவிஞராக அமர்த்திக் கொண்டான். இப்புலவருடைய வரலாற்றிலிருந்து கீழைச் சாளுக்கிய அரசன் விட்டுணுவர்த்தனன், கங்கநாட்டரசன், துர்விந்தன், பல்லவ சிம்மவிட்டுணு ஆகிய மூன்றரசர்களும் சமகாலத்தவர் என்பது விளங்குகிறது.

மாமல்லபுரத்தில் உள்ள ஆதிவராகர் குடைவரைக் கோயிலில் சிம்மவிட்டுணுவின் உருவம் காணப்பெறுவதால் அது இவ்வரசனால் அமைக்கப் பெற்றதென்று ஆராய்ச்சி யாளர் கருதுவர்.[30] சிம்மவிட்டுணுவும் அவருடைய மூதாதையரும் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவர்களாகையால் அந்நாட்டிலிருந்த குடவரைகளைப் போலவே தமிழ்நாட்டில் குகைக்கோயில்களை அமைத்தனர் என்று கூறுவது பொருத்தமுடையதாகும். இக்குடைவரைக் கோயிலைப் பின்பற்றியே மகேந்திரவர்மனும் பல கோயில்களை அமைத்தான் என்றும் கொள்ளலாம். ஆனால் இந்தக் கோயிலில் காணப்பெறும் தூண்கள் மகேந்திரவர்மனுடைய குகைக் கோயில் தூண்களைப் போன்று செம்மையுடையவை அல்ல.[31] சிம்மவிட்டுணு ஏறத்தாழ 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கலாம் என்று ஆர். கோபாலன் கூறுகின்றார்.

மகேந்திரவர்மன்

ஏறத்தாழ கி.பி. 590 – 630

சிம்மவிட்டுணுவிற்குப் பிறகு அவனுடைய மகன் மகேந்திரவர்மன், பல்லவ அரசனாகி கி.பி. 590 முதல் 630 வரை ஆட்சி செய்தான் எனக் கொள்ளலாம். மகேந்திர வர்மனுடைய ஆட்சிக் காலத்தினைத் திட்டவட்டமாகக் கூறும் வகையில் செங்கம் வட்டத்தில் கிடைத்த வீரக்கல் ஒன்றில் இவனது 39-ஆம் ஆட்சியாண்டு குறிப்பிடப்

பட்டுள்ளது. அதன்படி இவனது ஆட்சியின் தொடக்கம் கி.பி. 590-க்குப் பின்னாதல் இயலாது. இவ்வரசனுடைய மகன், முதலாம் நரசிம்மனுடைய பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று வாதாபி நகரத்தில் கிடைத்திருப்பதைக் கொண்டு இவன் கி.பி. 630 - ஆம் ஆண்டு வரையில் ஆட்சி புரிந்திருக்கலாம் எனக் கருதப்பெறுகிறது.[32] மகேந்திர வர்மன் ஆட்சியில் பல்லவப் பேரரசு வடக்கே கிருட்டிணை யாற்றிலிருந்து தெற்கே காவிரி ஆறு வரையில் பரவியிருந்தது. குண்டூர் மாவட்டத்திலுள்ள சிராலா (Cheryala) என்னும் ஊரில் கபோதீசுவரம் கோயிலில் உள்ள கல்வெட்டின்படி ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர், குண்டூர் மாவட்டங்களும் பல்லவ மன்னனுடைய ஆட்சியில் இருந்ததென அறிகிறோம்.[33] இக்கல்வெட்டில் "வேகவதியாற்றின் கரையிலுள்ள காஞ்சிமாநகரிலிருந்துகொண்டு குணபரன், அவனிபாஜனன் என்று விருதுப் பெயர்களையுடைய மகேந்திர விக்கிரம மகாராசன் ஆட்சிபுரிந்தான்" என்று கூறப்படுகிறது.

மகேந்திரவர்மனின் ஆட்சியைத் தென்னிந்திய வரலாற்றில், குறிப்பாகத் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு முக்கியமான காலமாக வரலாற்று அறிஞர்கள் கருதுவர், அதனைப் பின்வருமாறு கோவைப்படுத்திக் கூறலாம்.

1. தமிழ்நாட்டின் சமய வரலாற்றில், சிவனிய நாயன்மார்களும் மாலிய ஆழ்வார்களும் தோன்றி இந்து சமயத்தின் இரு கண்கள் எனப் போற்றப்பெறும் சிவனியம், மாலியம் ஆகிய இரண்டு உயர் சமயங்களும் வேத, ஆகமக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பரவத் தொடங்கின. இவ்விரு சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் வடநாட்டில் தோன்றிய வேதங்களைப் பின்பற்றியபோதிலும் இக்கொள்கைகள் உயர் சமயங்களாக மறுமலர்ச்சியடைந்தமை தென்னாட்டில் தமிழகத்திலேதான்

என்பதை நாம் உணர்தல் வேண்டும். மகேந்திரவர்மனின் காலத்தில் அம்மறுமலர்ச்சி தொடங்கியது என்று கூறலாம்.

2. இரண்டாவதாக மகேந்திரவர்மனுடைய ஆட்சியில் தமிழகத்தின் கலைவரலாறு ஒரு புதிய உருவம் பெற்றுத் திகழலாயிற்று. தமிழ்நாட்டின் தொண்டை மண்டலத்தில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப் பெற்றது இக்காலத்தில்தான். மண்டகப்பட்டு என்னும் இடத்தில் அமைந்துள்ள குடைவரைக் கோயிலின் கல்வெட்டு, அக்கோயிலைச் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவற்றைக் கொண்டு அமைக்காது முற்றிலும் கருங்கல்லால் அமைக்கப் பெற்றது எனக் கூறுவதை நாம் உணர்தல் அவசியமாகும். மேலும் மகேந்திரவர்மனுக்கு முற்பட்ட பல்லவ மன்னர்கள் செப்பேடுகளில்தான் தங்களுடைய அரசாங்க ஆணைகளைப் பொறித்துள்ளனர். மகேந்திரவர்மன் காலம் முதற்கொண்டு கருங்கற் பாறைகளின் மீதும் அரசாங்க ஆணைகள் பொறிக்கப்பெற்று அவைகள் உண்மையில் கல்வெட்டுகள் என்று பெயர் பெற்றன.

3. மூன்றாவதாக வடமொழியும், அம்மொழியின் இலக்கியங்களும் தமிழ்நாட்டில் பெருவாரியாகப் பரவுவதற்கும் அவற்றை மக்கள் படித்து உணர்வதற்கும் பிறருக்குப் கற்பிப்பதற்கும் ஏற்ற முறையில் வடமொழிப் புலவர்களும், வடமொழியைப் கற்பிக்கும் கல்லூரிகளும் பள்ளிகளும் தமிழ்நாட்டில் அதிகமாகத் தோன்றலாயின.

4. தென்னிந்திய வரலாற்றை, தக்காணத்தை ஆண்ட அரசுகளுக்கும் தமிழ்நாட்டில் ஆண்ட அரச வமிசங்களுக்குமிடையே நடந்த பெரியதொரு போராட்ட வரலாறாகக் கொள்ளலாம். தொடக்கத்தில் இப்போராட்டம் பல்லவர்களுக்கும் வாதாபிச் சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்தது. பின்னர் சோழ மன்னர்களுக்கும் இராட்டிரகூடர்களுக்கும், பின்னர் கலியாணிச் சாளுக்கியர்களுக்கும் பிற்காலச் சோழர்களுக்கும் நடந்தது. பிற்காலத்தில்

விசயநகரத்தரசர்களுக்கும் பாமினி சுல்தான்களுக்கும் இடையே நடந்தது. இப்போராட்டத்தின் முதற்கட்டம் பல்லவ மன்னன் மகேந்திரவர்மனுக்கும் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசிக்குமிடையே தொடங்கியதெனக் கூறலாம்.

5. இறுதியாகத் தமிழ்நாட்டு மக்கள் சங்க காலத்தில் திரைகடல் ஓடியும் திரவியம் தேடியதைப் போன்று, பல்லவர் ஆட்சிக் காலத்திலும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் இலங்கையிலும் பல்லவ மன்னர்கள் தங்களுடைய ஆட்சியையும் வணிகத்தையும் பெருகச் செய்வதற்குத் தகுந்த முயற்சிகளும் இக்காலத்தில் தோன்றியதென வரலாற்றுப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளது[34] இவண் சிந்திக்கத் தக்கதாகும்.

மகேந்திரவர்மன் காலத்துப் போர் நிகழ்ச்சிகள்

மகேந்திரவர்மன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த காலத்தில் கிருட்டிணை ஆற்றுக்கு வடக்கே சாளுக்கிய மன்னனாகிய இரண்டாம் புலிகேசி ஒரு பேரரசனாக விளங்கினான். இவ்வரசன் கடம்பர், கங்கர், ஆலுபர் முதலிய சிற்றரசுகளை அடக்கித் தன்னுடைய பேரரசை அமைத்தான். தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த வடநாட்டுப் பேரரசனாகிய ஹர்ஷவர்த்தனனை நருமதை ஆற்றிற்கருகில் தோற்கடித்து வெற்றிமாலை சூடினான். இரண்டாம் புலிகேசி கிருட்டிணை ஆற்றுக்குத் தெற்கேயும் தன்னுடைய பேரரசை அமைக்க எண்ணிப் பல்லவ நாட்டின் மீதும் படையெடுத்தான். கி.பி.635-இல் வெளியிட்ட அய்ஹொளே கல்வெட்டில் வேங்கி நாட்டை வென்ற பிறகு பல்லவ நாட்டையும் தாக்கியதாகக் குறித்துள்ளான். அய்ஹொளே கல்வெட்டில் "அழுக்கற்ற, வெண்சாமரங்களையும் நூற்றுக்கணக்கான கொடிகளையும் குடைகளையும் பிடித்துக் கொண்டு புலிகேசியின் படைகள் சென்றன. இந்தப் படைகளைக் கண்டு பல்லவ அரசன்

காஞ்சிபுரத்துக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான்'' என்று கூறப் பெற்றுள்ளது.[35] ஆனால் கசாக்குடிச் செப்பேடுகளின் 21-வது பாடலில் இந்திரனைப் போன்று கீர்த்தி வாய்ந்த மகேந்திரவர்மன் தன்னுடைய எதிரிகள் அனைவரையும் புள்ளலூரில் அழித்து அவர்களை வேரறுத்தான் என்ற செய்தி காணப் பெறுகிறது.[36]

இவ்விரண்டு கூற்றுகளின் வரலாற்றுண்மையைக் கண்டு அறிவது நம் கடமையாகும். அய்ஹொளே கல்வெட்டில் பல்லவ மன்னன் ஒளிந்து கொண்டான் என்று கூறப்பெற்றுள்ளதேயன்றி அவ்வரசன் மகேந்திரவர்மன் என்றோ அவன் தோல்வியடைந்தான் என்றோ கூறப் பெறவில்லை. மேலும் "துள்ளி விழும் கயல் மீன்களைக் கண் களாகக் கொண்ட காவிரி, சாளுக்கியனது யானைகளின் மதநீர் விழுந்ததால் ஓட்டம் தடைபட்டுக் கடலில் கலக்காது போயிற்று. புலிகேசியும் பல்லவப் பனியைப் போக்கும் சூரியனைப் போல சேர, சோழ பாண்டியர்களைக் களிப்புறச் செய்தான்'' என்று கூறுகிறது.[37] இதனால் மகேந்திரவர்மன் புலிகேசியுடன் போர்புரியாமல் ஒளிந்து கொண்ட செய்தி அவன் பகைவராகிய தமிழ்நாட்டு மன்னர்களை மகிழச் செய்தது என்பது விளங்குகின்றது. ஆனால் சாளுக்கியன் பல்லவ மன்னனைத் தோற்கடித்தானா என்பது தெரியவில்லை. தெற்கே காவிரி வரையில் சென்ற புலிகேசி திரும்பிக் காஞ்சிபுரத்திற்கு வருகையில், புள்ளலூர் என்னுமிடத்தில் அவனைத் திடீரென்று தாக்கி இருத்தல் வேண்டும். புள்ளலூர் காஞ்சிபுரத்திற்கு 16 கி.மீ தொலைவில் உள்ளது. பல்லவன் தனக்கு வாய்ப்பான இடத்தில் பகைவன் வந்து சேரும்வரை காஞ்சிபுரம் கோட்டைக்குள் இருந்தான். பகைவன் தன்னை எதிர்ப்பவர் இல்லை என்று நினைத்துக் காஞ்சிபுரத்திற்கு அருகில் வந்ததும் திடீரென்று அவனை வளைத்துக் கொண்டு போரிட்டுப் பகைவரை அழித்தான். இவ்வரலாற்று உண்மையை இரண்டு பட்டயங்களையும் கூர்ந்து ஆராய்பவர்கள் நன்கு உணரலாம்.

மேற்கூறப் பெற்ற புள்ளலூர் போர் மகேந்திரவர்மனுக்கும் இரண்டாம் புலிகேசிக்கும் இடையே நடைபெறவில்லை என்றும் சோழ வமிசத்தைச் சேர்ந்த நல்லாதி என்ற சிற்றரசனுக்கும் மகேந்திரவர்மனுக்கும் நடந்ததென்றும் டி.வி. மகாலிங்கம் ஒரு ஐயப்பாட்டை உருவாக்கியுள்ளார்.[38] 'நல்லிமங்கலம், மங்கலம் என்ற பெயர்களைக் கொண்டு சோழன் செங்கணானுக்கு நல்லடி என்ற மகன் ஒருவன் இருந்ததாகவும் இப்பெயர் பிற்காலத்திய சோழர்களுடைய கல்வெட்டுகளில் காணப்பெறுவதாகவும் கூறுவர். இந்த நல்லடியை மகேந்திரவர்மன் புள்ளலூர்ப் போரில் வென்றதைக் கசாக்குடிச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன என்றும் கூறுவர். இக்கூற்றிற்கு எவ்வித சான்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகையால் இந்த நல்லடிக் கதை வரலாற்று உண்மையாகாது எனச் சுப்பிபிரமணியன் கூறியுள்ளார்.[39]

கங்கர்களுடன் நடத்திய போர்

புள்ளலூரில் நடந்த போரைப் பற்றிப் பல்லவர் கல்வெட்டில் கூறப் பெறுகிறதேயன்றிச் சாளுக்கியக் கல்வெட்டுகளில் காணப்பெறவில்லை. கங்க அரசனான துர்விநிதன் தன்னுடைய கல்வெட்டுகளில் அந்தரி, ஆலத்தூர், போலுளரே (புள்ளலூர்) பேர்நகர (பெருநகர்) என்ற இடங்களில் மகேந்திரவர்மனை வென்றதாகக் கூறிக் கொள்ளுகிறான். துர்விநிதன், காடுவெட்டி (பல்லவன்)யைப் போரில் வென்று தன் மகள் வயிற்றுப் பெயரனைச் சாளுக்கிய அரியணையில் அமர்த்தினான் என்று ஹும்சாவில் கிடைத்த கல்வெட்டு கூறுகிறது.[40] தன்னுடைய பெயரன் ஒருவனுக்கு அரசுரிமை பெறுவதற்காகக் கங்க துர்விநிதன் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியுடன் சேர்ந்துகொண்டு புள்ளலூரில் மகேந்திரவர்மனுடன் போரிட்டதாகக் கொள்ளலாம். இருப்பினும் இப்போரில் அவ்விருவரும் வெற்றிபெற்றனர் என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை.

மகேந்திரன் காலத்து மற்றைய அரசர்கள்

பல்லவர்களுடைய பகைவர்களாகிய மேலைச் சாளுக்கியர் வடக்கே வாதாபியில் இருந்து தெற்கே கிருட்டிண ஆறுவரையில் ஆதிக்கம் செலுத்தினர். சாளுக்கியருடைய எழுச்சியினால் தங்கள் நாட்டை இழந்த கடம்பர்கள் முன்னவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர்.

இக்காலத்திய கருநாடகப் பகுதியைக் கங்கர்கள் தழைக்காட்டிலிருந்து ஆண்டு வந்தனர். வடக்கே கோதாவரி, கிருட்டிணை ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதியைக் கீழைச் சாளுக்கியர்கள் ஆண்டு வந்தனர். மதுரையில் பாண்டிய மன்னன் செழியன் சேந்தன் நிலை பெற்றிருந்தான்: (கி.பி. 625 - 640)[41] பல்லவ நாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் இடையே சோழர்களும், களப்பிரர்களும் முத்தரையர்களும் இருந்தனர். சோழருள் ஒரு பிரிவினர் வடக்கே சென்று குடியேறிக் கடப்பை, கர்நூல் மாவட்டங்களில் சிற்றரசர்களாக வாழ்க்கை நடத்தினர். இவர்கள் ரேநாடு சோழர் என்றும் கரிகாலன் மரபினர் என்றும் தங்களை அழைத்துக் கொண்டனர்.[42]

மகேந்திரவர்மனின் விருதுப் பெயர்கள்

மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப் பெற்ற குடைவரைக் கோயில்களில் அவனுடைய விருதுப் பெயர்கள் எழுதப் பெற்றுள்ளன. சில இடங்களில் அவை அகர வரிசையிலும் பொறிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் முக்கியமானவை பின்வருவனவாகும்.

1. அலுப்தகாமன்: தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்று பவன்.
2. அபிமுகன்: முன் உணர்ந்து நடப்பவன்.
3. திருதகழி: திடசித்தமுள்ளவன்.
4. குணபரன்: நற்குணங்கள் நிறைந்தவன்.

5. சத்தியசந்தன்:உண்மை பேசுபவன்.
6. புருஷோத்தமன்:ஆண்களில் சிறந்தவன்.
7. நித்தியவினிதன்:என்றும் அடக்கமுள்ளவன்.
8. அனித்தியராகன்:அற்ப சுகங்களை வெறுப்பவன்.
9. நைதிக அனுத்திரிகா:இகபர சுகங்களை விரும்பாதவன்
10. கலகப் பிரியன்:போர் செய்வதில் விருப்பமுள்ளவன்.
11. சத்துருமல்லன்:எதிரிகளுடன் மல்போர் புரிபவன்.
12. உலக ஆஸ்லேயன்:உலகத்தை வெல்லும் அம்பு
13. சித்திரகாரப் புலி:கலைஞர்களுக்குள் புலி போன்றவன்.
14. சைத்தியகாரி:கோயில்களை அமைத்தவன்.
15. சங்கீரணசாதி:சங்கீரண சாதி என்ற தாளக்கட்டை அமைத்தவன்.
16. கட்டுணா:வீணான கட்டுப்பாடுகளை விரும்பாதவன்.

பளவு, விலசு, மிலயுகடுந்தையா, கடுத்தரம்பு என்னும் தெலுங்கு விருதுப் பெயர்களையும் கொண்டிருந்ததாக தெரிகிறது.[43]

மகேந்திரவர்மனுடைய நாடக நூல்

மகேந்திரன் சிறந்த நாடக நூலாசிரியன் என்பதை இவனால் எழுதப் பெற்ற மத்தவிலாசப் பிரகசனம் என்னும் வடமொழி நாடகநூலைக் கொண்டு அறிகிறோம். இந்நூல் திருவாங்கூரில் வெளியிடப்பட்டது. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல்லவர் தலைநகராகிய காஞ்சிபுரத்தில் பல சமயங்களைச் சேர்ந்த மக்கள் நடத்திய வாழ்க்கை முறையை ஒரளவு எடுத்துக்காட்டுகிறது. காபாலிக சமயத்தினன் ஒருவன் ஒழுக்கம் கெட்ட காபாலினி ஒருத்தியுடன் குடித்து மயங்கிக் கிடந்தான். அப்பொழுது அவன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை ஒரு நாய் கௌவ்விச் சென்று விடுகிறது. அதை அறியாத காபாலிகன் அவ்வழியே சென்ற பௌத்தக் துறவியை மறித்துப் பூசல் இடுகிறான். இப்பூசலைத் தீர்க்க ஒழுக்கம் கெட்ட பாசுபதன் ஒருவனைக் கூப்பிடுகிறான். இறுதியில் குணபேதகன்

ஒருவனிடமிருந்து காபாலம் மீட்கப்படுகிறது. இந்நூலில் மகேந்திரனுடைய சிறப்பும் சத்துருமல்லன், அவனிபாசனன், குணபரன், மத்தவிலாசன் என்னும் விருதுப் பெயர்களும் காணப் பெறுகின்றன.[44] காபாலிகர், பாசுபதர் பௌத்தர் முதலிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை இச்சிறிய நாடக நூலின் மூலம் அறிகிறோம். யுவான் சுவாங் என்ற சீனப் பயணி கூறியுள்ள இராசவிகாரம் என்ற செல்வமிக்க பௌத்த விகாரம் எவ்விதச் சீர்கேடான நிலைமையடைந்ததென நாம் அறிய முடிகிறது. பாகவதகுக்கியம் என்னும் வடமொழி நூல் ஒன்றைப் பற்றி மாமண்டூர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. ஒரு துறவியொருவர், அட்டமா சித்திகளில் ஒன்றாகிய பரகாயப் பிரவேசம் என்னும் சித்து விளையாட்டின் மூலம் ஒரு கணிகையின் உடலுக்குள் புகுந்த செய்தியைச் சுவைபடக் கூறுகிறது. ஆனால் இந்நூல் மகேந்திரவர்மனால் எழுதப் பெற்றதா என்று துணிந்து கூற முடியாது.

முதலாம் நரசிம்மவர்மன்
(கி.பி. 630 — 668)

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் காஞ்சிபுரத்தில் பல்லவப் பேரரசனாகப் பதவி ஏற்றுச் சிம்மவிட்டுணு காலம்முதல் பெருகிய பல்லவப் பேரரசை முதன்மை நிலை அடையும்படிச் செய்தான். இவ்வரசன் மாமல்லன், வாதாபி கொண்ட நரசிம்மன் என்ற விருதுப் பெயர்களை மேற்கொண்டான். இம்மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் பல்லவப் பேரரசில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஐந்து முக்கிய சம்பவங்கள் நடைபெற்றதெனக் கூறலாம்.

1. நரசிம்மவர்மனுடைய 13-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 642 -643) மேலைச் சாளுக்கியத் தலைநகராகிய வாதாபியின் மீது படையெடுத்துச் சாளுக்கிய வேந்தனாகிய இரண்டாம் புலிகேசியை வென்றது.

2. இலங்கை நாட்டு இளவரசனாகிய மானவர்மனுக்கு உதவி செய்வதற்காக அந்நாட்டிற்குக் கடற்படையொன்றை அனுப்பி அவனுக்கு உதவி செய்தது.

3. மாமல்லபுரத்தில் பல குகைக் கோயில்களை அமைத்து அந்நகரத்தை ஒரு கலைக் கூடமாக அமைத்தது.

4. சீன நாட்டிலிருந்து இந்தியவிற்கு வந்த பௌத்த சமயப் பயணியாகிய யுவான்சுவாங் வடநாட்டில் ஹர்ஷவர்த்தனரைக் கண்டு அளவளாவிய பின்னர் பல்லவத் தலைநகராகிய காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தது.

5. மகேந்திரவர்மனுடைய காலத்தில் திருஞான சம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் தொடங்கப் பெற்ற சைவ சமய வளர்ச்சியும் முதல் மூன்று ஆழ்வார்களால் தொடங்கப் பெற்ற வைணவ சமய வளர்ச்சியும் தமிழ்நாட்டில் நன்கு வேர் ஊன்றிச் சைவ, வைணவர் சமயங்களாக வளர்ச்சி பெற்றமை.

முதலாம் நரசிம்மவர்மனுடைய ஆட்சிக்காலம், மகேந்திரவர்மனுடைய ஆட்சிக் காலத்தைப் போன்று தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலம் எனக் கருதுவது பொருத்தமானது. இப்பொற்காலம் இராசசிம்ம பல்லவன் என்ற காடவர்கோன் கழற்சிங்கன் காலம் வரையில் நீடித்தது எனக் கொள்ளலாம். முதலாம் நரசிம்மவர்மனுக்கு மகாமல்லன், சிரீபரன், சிரீமேகன், சிரீநிதி, இரணசயன், ஆதியந்தகாமன், நயனாங்குரன் முதலிய விருதுப் பெயர்கள் வழங்கியதாகப் பல்லவர்களுடைய கல்வெட்டுகளிலிருந்து அறியலாம்.

வாதாபி வெற்றி

மகேந்திரவர்மன் ஆட்சிக்காலத்தில் தோன்றிய பல்லவ சாளுக்கியப் போராட்டம் முதலாம் நரசிம்மவர்மன் காலத்திலும் தொடர்ந்து நடந்தது. புள்ளலூர் என்னு மிடத்தில் மகேந்திரனிடம் தோல்வியுற்ற இரண்டாம் புலிகேசி இரண்டாவது முறையாகப் பல்லவ நாட்டின்மீது படை யெடுத்தான். பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தை நன்கு உணர்ந்து கொள்வதற்கு இவ்விரு அரச வமிசத்துச் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் இலக்கியச் சான்றுகளும் நம்பத்தகுந்த சான்றுகளாக உள்ளன. முதலாம் பரமேசுவரவர்மனுடைய கூரம் செப்பேடுகள் நரசிம்மவர்மனுடைய புகழைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றன.

பல்லவ வமிசத்தில் உதயகிரியிலிருந்து சூரிய சந்திரர் தோன்றுவது போலப் பிறந்தவனும், அவிநிதன் முதலிய அரசர்களுடைய தலைகளுக்கு வச்சிராயுதம் போன்றவனும், பகை மன்னர்களாகிய யானைக் கூட்டங்களுக்குச் சிங்கம் போன்றவனும் நரசிம்மபகவான் தாமே அரசன் உருவத்தில் பூவுலகத்திற்கு வந்தவரே போன்றவனும் சோழ, கேரள, களப்பிர, பாண்டியர்களை வெற்றி கொண்டவனும் ஆயிரம் கரங்களையுடைய அரசன் (கார்த்தவீரியன்) போன்றவனும் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய போர்க்களங் களில் வெற்றிபெற்றுப் புலிகேசியின் முதுகு பட்டயத்தில் வெற்றியைக் குறிக்கும் எழுத்துகளை எழுதியவனும் அகத்திய முனிவர் வாதாபி என்ற அசுரனை அழித்ததைப் போல வாதாபி நகரத்தை அழித்தவனுமாகிய நரசிம்மன் (தோன்றினான்). இரண்டாம் நந்திவர்மனுடைய உதயேந்திரம் செப்பேடுகள் “பல்லவ குலத்தில் விஷ்ணுவை ஆராதித்தவனான சிம்மவிட்டுணு தோன்றினான். சிம்ம விட்டுணுவிடமிருந்து மகேந்திரனுக்குச் சமமான பராக்கிரமம் கொண்ட மகேந்திரவர்மன் தோன்றினான்: அவனிடமிருந்து

வாதாபி என்னும் அசுரனை அழித்த அகத்தியர் போல வாதாபி என்ற நகரையழித்தவனும் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் வல்லப அரசனை அநேக தடவைகள் வெற்றிகொண்டவனுமான நரசிம்மவர்மன் தோன்றினான்.'' எனக் கூறுகின்றன.[45] வேலூர்ப்பாளையம் செப்பேடுகளில் "பிரகாசிக்கும் பாக்கு மரங்கள் நிறைந்ததும், செந்நெல் வயல்கள் நிறைந்த காடுகளை அணியாகக் கொண்டதும் காவிரியினால் அலங்கரிக்கப் பட்டதுமான சோழர்களுடைய நாட்டை சிம்மவிட்டுணு கைப்பற்றி யுள்ளான். அவனுடைய மகனான மகேந்திரனிடமிருந்து உபேந்திரன் போன்ற புகழையுடைய நரசிம்மவர்மன் தோன்றினான். அவன் சத்துருக்கூட்டங்களை முறியடித்து வாதாபி நகரின் மத்தியில் நிலையாக நின்ற வெற்றித்தூணை நிலை நிறுத்தினான்.[46]

முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் பல்லவ நாட்டின்மீது படையெடுத்த இரண்டாம் புலிகேசி இரண்டாவது தடவையாகப் படையெடுத்துவரக் காரணம் யாது என்று ஆராய்தல் நலமாகும். முதற் படையெடுப்பில் பல்லவ நாட்டிற்கு வடக்கிலிருந்த பாணர்களையும் தெலுங்குச் சோழ மன்னர்களையும் வென்று தன்னடி வணங்கும்படி செய்துள்ளான். காவிரியாற்றிற்குத் தெற்கேயும் சென்று சோழ மன்னர்களையும் பல்லவர்களுடைய ஆதிக்கத்தி லிருந்து நீக்கினான். இம்மூன்று குறுநில மன்னர்களுடைய நாடுகளின் மீது நரசிம்மவர்மன் தன்னுடைய ஆதிக்கத்தை மீண்டும் நிலைபெறச் செய்திருக்க வேண்டும். இக்காரணத் தினால் இரண்டாம் புலிகேசி இரண்டாவது தடவையாக பல்லவ நாட்டின் மீது படையெடுத்திருக்க வேண்டுமென டி.வி. மகாலிங்கம் கூறுகின்றார்.[47] புலிகேசியினுடைய படைகளை நரசிம்மவர்மன் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் என்ற இடங்களில் தோற்கடித்ததாகப் பல்லவச் செப்பேடுகள் கூறுகின்றன. இவற்றுள் பரியளம் என்னும் இடம் இன்ன இடத்தில் உள்ளது என்பது விளங்கவில்லை. காஞ்சிபுரத்திற்கு

கிழக்கே 30 கி.மீ. தொலைவில், மணிமங்கலம் உள்ளது. எம்.எஸ். கோவிந்தசாமி என்பவர் சூரமாரம், சூரமாலா என்று இப்பொழுது வழங்கப்பெறும் இடம் என்றும்; அது சித்தூர் மாவட்டத்தில் உள்ளதென்றும், பரியளம் என்பது கடப்பை 'மாவட்டத்திலுள்ள பைதலா என்ற இடமென்றும் கூறியுள்ளார்.[48] இந்த மூன்று வெற்றிகளுக்குப் பிறகு சாளுக்கியப் படைகள் தமிழ்நாட்டிலிருந்து முற்றிலும் விரட்டப்பட்டன.

இஃதோடு அமையாது நரசிம்மவர்மன் சாளுக்கியத் தலைநகராமாகிய வாதாபியையும் கைப்பற்ற எண்ணி அந்நகரத்தின் மீதும் தன் படைகளைச் செலுத்தினான். இந்த வாதாபி படையெடுப்பில் நரசிம்மனே படைகளைச் செலுத்தினானா அல்லது தன்னுடைய சேனைத் தலைவராகிய பரஞ்சோதியிடம் தலைமைப் பதவியை அளித்தானா என்பது பற்றி வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை நிலவியுள்ளது. பல்லவர் வரலாற்றை முதன் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய ஆர். கோபாலன் என்பார் சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியே வாதாபி நகரத்தின் மீது படையெடுத்து அந்நகரத்தில் பல அழிவு வேலைகளைச் செய்து ஒரு வெற்றிக்கம்பத்தையும் அமைத்தார் எனக் கூறுவர். இதற்குச் சான்றாக பெரிய புராணத்தில் உள்ள சிறுத் தொண்ட நாயனார் புராணத்தில்,

> மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
> தொன்னகரம் துகளாகத் துளை நெடுங்கை வரையுகத்துப்
> பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
> இன்னை எண்ணில கவர்ந்தேஇகல்அரசன் முன்
> கொணர்ந்தார்.[49]

என்ற பாடலைக் கூறுகிறார்.

நரசிம்மவர்மன் தானே வாதாபி நகரத்திற்குப் படை களை நடத்தி செல்லவில்லை என மா. இராசமாணிக்கமும்

கூறுகின்றார். பரஞ்சோதியின் தலைமையிலேயே பல்லவப் படைகள் சென்றன என்ற கருத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.[50] ஆனால் நீலகண்ட சாத்திரியின் கருத்தையொட்டி டி.வி. மகாலிங்கம், முதலாம் பரமேசுவரவர்மனுடைய காலத்தில் (கி.பி. 669-71) பரஞ்சோதி வாதாபி நகரத்தின் மீது படையெடுத்திருக்க வேண்டும் என்றும் நரசிம்மவர்மனே கி.பி. 641-42 இல் வாதாபி நகரத்தைப் பிடித்து வெற்றித்தூண் நாட்டியிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.[51] இந்த வாதாபிப் போரில் இரண்டாம் புலிகேசி உயிரிழந்த்தாகவும் பல்லவர் சேனைக்குக் கணக்கற்ற கொள்ளைப் பொருட்களும், யானைகளும், பரிமாக்களும் கிடைத்ததாகவும் அறிகிறோம். பரஞ்சோதியார், வாதாபியிலிருந்து கணபதி சிலை யொன்றைக் கொண்டு வந்து தன்னுடைய சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடியில் நிலைபெறச் செய்ததாகவும் தெரிகிறது. இம்மாபெரும் வெற்றியின் அறிகுறியாக நரசிம்ம வர்மன் 'வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்' என்று அழைக் கப்பெறுகிறான். இரண்டாம் புலிகேசியின் மகனான முதலாம் விக்கிரமாதித்தனது கர்நூல் பட்டயம் "இரண்டாம் புலிகேசி பகைவர் மூவரால் தோல்வியுற்றான்; வாதாபியில் இருந்த கோயில்கள் வருவாயின்றித் தவித்தன" என்றும், புலிகேசியின் பெயரனான விநயாதித்தனது சோராப் பட்டயம் "மேலைச் சாளுக்கிய மரபின் அழிவிற்கும், தாழ்விற்கும் பல்லவரே பொறுப்பாளிகள்" என்றும் கூறுகின்றன.[52]

பல்லவ-பாண்டிய-கங்கர் உறவுகள்

கூரம் செப்பேட்டில் சோழ, கேரள, களப்பிர, பாண்டியர்களை வெற்றி கொண்டதாகக் கூறப்பட்டதைக் கொண்டு பாண்டிய மன்னன் அரிகேசரி மாறவர்மன் மீது வெற்றி கொண்டதாகச் சில வரலாற்று அறிஞர்கள் கருதுவர். ஆனால் இச்செய்தி பாண்டியர் செப்பேடுகளால் உறுதிபெறவில்லை. சக்கரமங்கை என்னுமிடத்தில் அரிகேசரி

மாறவர்மன் பல்லவ மன்னன் மீது வெற்றி கொண்டதாகப் பல்லவச் செப்பேடுகளிலோ அல்லது கல்வெட்டுகளிலோ கூறப்பெறவில்லை. அரிகேசரி மாறவர்மன் முதலாம் நரசிம்மவர்மனுடைய சம காலத்தவன். ஆயினும் இவ்விரு வருக்கும் எவ்வித உறவு நிலவியது என்பது விளங்கவில்லை. கங்க அரசன் துர்விநிதன் நரசிம்மவர்மன் மீது வெற்றி கொண்டதாகக் கூறிக்கொள்ளும் செய்தியும் தெளிவு பெறவில்லை.

நரசிம்மவர்மனும் இலங்கை மானவர்மனும்

மகாவமிசம் என்னும் இலங்கை வரலாற்று நூலிலிருந்து இலங்கையில் கி.பி. 632 முதல் 641 வரை இரண்டாம் காசிபன் ஆட்சிபுரிந்தான் என்றும் அவனுடைய இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்தான் என்றும் அறிகிறோம். இவ்வரசனுக்குப் பிறகு இவனுடைய மகனாகிய மானவர்மனுக்கு ஆட்சியுரிமை மறுக்கப்பட்டு உரோகண நாட்டு இக்குவாகு குடும்பத்தைச் சேர்ந்த மானா என்பான் அரசுக் கட்டிலில் ஏறினான். மானவர்மனுக்கு அரசுரிமை கிட்டாதது ஏன் என்பது விளங்கவில்லை. எவ்விதமாயினும் மானவர்மன் தமிழ்நாட்டிற்குத் தப்பி வந்து பல்லவத் தலைநகராகிய காஞ்சிபுரத்தில் முதலாம் நரசிம்மவர்மனிடம் தஞ்சம் புகுந்தான். அப்போது நடந்த பல்லவ சாளுக்கிய போர்களில் கலந்து கொண்ட மானவர்மன் நரசிம்ம வர்மனுக்குப் பேருதவி புரிந்து தனக்கும் உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டான்.[53] நரசிம்மவர்மனும், மானவர்மனுக்கு உதவி செய்யத் துணிந்தனன். கி.பி. 642 - இல் வாதாபிப் போர் முடிவடைந்த பிறகுதான் நரசிம்மவர்மனுடைய கடற்படையும், தரைப்படையும் இலங்கைக்கு அனுப்பப் பெற்றிருக்க முடியும்.[54] மகாவமிசம் இலங்கைத் தீவின்மீது மானவர்மன் இரண்டு முறை படையெடுத்ததைப் பற்றிக் கூறுகிறது. கி.பி. 642-இல் பல்லவச் சேனை மாமல்ல

புரத்திலிருந்து கப்பல்களில் புறப்பட்டுச் சென்று இலங்கைத் தீவை அடைந்ததெனக் கூறலாம். இது முதலாவது படையெடுப்பாகும்.

முதற்படையெடுப்பின்போது மானா(Mana) என்பவனை நீக்கிவிட்டு ஹஸ்த தாமிஷ்டரா (Hasta Damstra) என்பவன் ஆட்சிப்பீடத்தில் இருந்தனன். மானவர்மன் தலைமையில் படையெடுத்த பல்லவப் படைகள் ஹஸ்த தாமிஷ்ட்ரா என்பானைத் தோற்கடித்து வெற்றியும் பெற்றன. ஆனால் தங்களுடைய அரசனின் உடல்நலமின்மையைப் பற்றிக் கேள்விப்பட்டபிறகு போரிட மனமின்றித் தமிழ்நாட்டிற்குத் திரும்பிவிட்டன. மானவர்மனும் தன்னுடைய எண்ணம் நிறைவேறாமல் காஞ்சிபுரத்திற்குத் திரும்பிவிட்டான். கி.பி. 641 முதல் 668-ஆம் ஆண்டுவரையில் இலங்கையில் நான்கு அரசர்கள் ஆட்சி செலுத்தினர். இந்த இருபத்தேழு ஆண்டுகளை மானவர்மன் காஞ்சிபுரத்திலே கழித்ததாகத் தெரிகிறது. இலங்கை மன்னர்களுள் கடைசி இருவராகிய தத்தா (DATTA) ஹஸ்த தாமிஷ்ட்ரா ஆகியவர்கள் பெயரளவில் ஆட்சிபுரிந்தனர். அவர்களுடைய அமைச்சன் புஷ்டகுட்டன் (PUSTAKUSTA) என்பான் எல்லா அதிகாரங்களையும் மேற்கொண்டு கொடுங்கோல் ஆட்சி புரிந்து மக்களைத் துன்புறுத்தினான். இந்த நல்வாய்ப்பை மானவர்மன் உணர்ந்து கி.பி. 668 இல் இரண்டாவது தடவையாக இலங்கையின்மீது படையெடுத்துப் பல்லவ மன்னனின் துணையுடன் ஆட்சியை கைப்பற்றினான்.[55] நரசிம்மவர்மன் உதவியால் மானவர்மன் மீண்டும் இலங்கைத்தீவின் அரசனானான். இந்த இலங்கை வெற்றியைக் கசாக்குடிச் செப்பேடுகள் பின்வருமாறு புகழ்ந்து பேசுகின்றன. "இலங்கையை வென்ற இராமனுடைய பராக்கிரமத்தையொத்த வீரம் கொண்டவனும் வாதாபி நகரத்தை அழித்தவனுமாகிய நரசிம்மவர்மன் அகத்திய முனிவரையொத்து விளங்கினான்."[56]

யுவான்சுவாங் வருகை

சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி காஞ்சி புரத்தின் மீது இரண்டாவது தடவையாகப் படை யெடுப்பதற்கு முன் சீன பயணி யுவான் சுவாங் தமிழகத்திற்கு வந்தார். அவருடைய வருகையின் முக்கிய நோக்கம் மகாயான பௌத்த சமயம் பற்றிக்கூறும் நூல்களைச் சேகரித்துச் செல்லவேண்டும் என்பதேயாகும். ஆகையால், அக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய அரசியல் நிலைமை பற்றி அவர் ஏதும் கூறவில்லை. தக்காணத்தில் ஆட்சிபுரிந்த இரண்டாம் புலிகேசி வடநாட்டுப் பேரரசனாகிய ஹர்ஷவர்த்தனரைப் போரில் முறியடித்ததை மட்டும் கூறியுள்ளார். யுவான் சுவாங் தொண்டை மண்டலத்தை 'தலோபீட்டு' என்றும் காஞ்சிபுரத்தைக் 'காஞ்சிபுலோ' என்றும் அழைத்துள்ளார். காஞ்சிபுரத்தின் பரப்பளவு 10 கி.மீ. மேல் இருந்தது. திராவிட அல்லது தமிழ் நாட்டின் மக்கள், கல்வியிலும் வீரத்திலும் பிறருக்கு நன்மை செய்வதிலும் நாட்டுப் பற்றிலும் தலை சிறந்து விளங்கினர்.[57] அப்பொழுது காஞ்சி நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த விகாரங்கள் இருந்தன வென்றும் அவற்றில் பதினாறாயிரம் பௌத்த சந்நியாசிகள் தேரவாத பௌத்த சமய நூல்களைக் கற்றனர் என்றும் கூறியுள்ளார். பௌத்த சமய மூலக்கூறு, தர்க்கம், நுண்பொருட்கோட்பாட்டியல் (METAPHYSICS) முதலிய வற்றில் வல்லவரான தருமபாலர் என்ற பௌத்த அறிஞர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர் என்றும் கூறியுள்ளார். யுவான் சுவாங் கூறியுள்ள பௌத்த விகாரம் மகேந்திர வர்மனுடைய மத்தவிலாசப் பிரகசனத்தில் கூறப் பட்டுள்ள இராசவிகாரம் என்ற இடமாகத் தோன்றுகிறது. அவ்விகாரத்தில் காஞ்சியிலிருந்த மிகச் சிறந்த கல்விமான்கள் தோன்றினர்.[58]

காஞ்சிபுரத்தைப் பற்றிய சில செய்திகளை உண்மைக்கு மாறாகவும் யுவான்சுவாங் கூறியுள்ளார். பிறர் சொல்லக் கேட்டவற்றின் உண்மையை உணராது கூறியுள்ளார் எனக்

கருத வேண்டியுள்ளது. கௌதம புத்தர் இந்நகரத்திற்குப் பல தடவைகள் வந்துள்ளார்; பல இடங்களில் தம்முடைய தருமத்தைப் போதித்து பௌத்த சமயத்தில் மக்களைச் சேர்த்துள்ளார்; புத்தர் போதனை செய்து மக்களை தம்முடைய சமயத்தில் சேர்த்துக் கொண்ட இடங்களில் பிற்காலத்தில் அசோகர் பல விகாரங்களை அமைத்துள்ளார். காஞ்சிபுரம் ஒரு துறைமுகப்பட்டினம் என்றும் அஃது குணகடல் வரையில் 30 கி. மீ தூரம் பரவியிருந்தது என்றும் அவர் கூறும் கூற்றுக்கள் நம்பத்தகுந்தவை அல்ல.

இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 668-669)

முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் பல்லவ அரியணை ஏறினான். இவனுடைய மகன் பரமேசுவரவர்மனுடைய கூரம் செப்பேடுகளில் இவனும் இவனுடைய மகனுமாகிய பரமேசுவர வர்மனும் பின்வருமாறு புகழப்பெற்றுள்ளார்கள். "தேவர்கள் மீது மகேந்திரன் பொழியும் செல்வத்தைப்போல நல்வழியில் தேடப்பட்ட செல்வத்தையுடையவனும் வருணாசிரம தருமத்தை நன்கு கடைப்பிடித்தவனுமாக மகேந்திர வர்மன் இருந்தான். அவனுக்கு மூன்று கண்களையுடைய பரமேசுவரன் போன்ற அதிக அழகு கொண்ட[59] பரமேசுவரன் தோன்றினான் காசக்குடிச் செப்பேடுகளிலும் "நரசிம்மவர்மனுக்குத் தண்டாயுதம் போல் நீளமான தன்னுடைய கைகளினால் தன்னுடைய பகைவர்ளுக்கு வச்சிராயுதம்போல் அடிகொடுத்தவனான மகேந்திவர்மன் தோன்றினான். கொடையாளியான அவனுடைய காலத்தில் தேவர் அந்தணர் போன்றோரின் நல்வாழ்விற்கான அறச்செயல்கள் பெருகி, கலைகளும் வளர்ந்தன"[60] என்று கூறப் பெறுகிறது. வேலூர்ப் பாளையச் செப்பேடுகளில் இம் மன்னனுடைய பெயர் கூறப்படவே இல்லை. எம்.எஸ். இராமசாமி அய்யங்கார் என்பார்

இவனுடைய ஆட்சிக்காலத்தில் திருநாவுக்கரசர் வாழ்ந்தார் என்று கூறுவது வரலாற்று ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை.[61]

சாளுக்கிய மன்னனாகிய இரண்டாம் புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன், தன்னுடைய தந்தை காலத்தில் பல்லவர்கள் வென்றுகொண்ட பகுதிகளைத் தன்வயப் படுத்திக் கொண்டு பல்லவப் பேரரசின் மீதும் அடிக்கடி படையெடுத்து இரண்டாம் மகேந்திரவர்மனுக்கு பெருந்தொல்லை கொடுத்தனன். இவ்விரு வமிசத்தினருக்கும் இடையே நடந்த போர்களில் ஒன்றில் மகேந்திரவர்மன் இறந்திருக்கக்கூடுமென்று என். சுப்பிரமணியம் அவர்கள் கூறுவர்.[62]

பரமேசுவரவர்மன் - I
(669 - 690-1)

இரண்டாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் முதலாம் பரமேசுவரவர்மன் பல்லவப் பேரரசனாகப் பதவி ஏற்றனன். இவனுடைய ஆட்சிக் காலம் தமிழ் நாட்டின் வரலாற்றின் மிகச் சிறப்புற்ற காலம் எனக் கருதப்பட வேண்டும். இவனுடைய தந்தையின் ஆட்சிக்காலத்தில் சாளுக்கியர் கைப்பற்றிக்கொண்ட பகுதிகளை மீண்டும் தன் வயப்படுத்தினான். தனக்கு ஏற்பட்ட பல இடுக்கண்களைக் களைந்து தன்னுடைய மகன் இராசசிம்ம பல்லவனுடைய புகழ்மிக்க ஆட்சிக்கு அடிப்படையை அமைத்தான். தமிழ்நாட்டில் குடைவரைக் கோயில்களோடு, கட்டுமானக் கோயில்களையும் (Structural Temples) அமைப்பதற்கு ஒரு வழிகாட்டியாக இருந்தவன் முதலாம் பரமேசுவர வர்மனாவான். எடுத்துக்காட்டாகக் கூரம் என்ற சிற்றூரில் அமைக்கப்பெற்ற வித்யாவினித பல்லவ பரமேசுவர கிருகமும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சிற்றம்பாக்கம் கோயிலும் இக்காலத்தில் அமைக்கப்பெற்றனவாகும்.[63]

பல்லவ - சாளுக்கியப் போராட்டம் இம்மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் மீண்டும் தொடங்கலாயிற்று. இப்போராட்டத்தை நன்கு உணர்ந்து கொள்வதற்குச் சாளுக்கிய மன்னர்களுடைய செப்பேடுகளும் பல்லவ மன்னர்களுடைய செப்பேடுகளும் மிக்க துணை செய்கின்றன.

பல்லவர் செப்பேடுகள்

(1) பரமேசுவரன் போர் முனையில் அநேக இலக்கம் வீரர்கள் நிறைந்த சேனையைக்கொண்ட விக்கிரமாதித்தனை ஒரு கந்தையைச் சுருட்டிக் கொண்டு தனியாக ஓடச்செய்தான்.[64]

(2) பெருவளநல்லூரில் நடந்த பெரும் போரில் விக்கிரமாதித்தனுடைய (வல்லவன்) படையை முறியடித்தான்[65]

(3) மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப்பாளையம் செப்பேடுகளில் "பரமேசுவரவர்மன் தன் பகைவர்களுடைய அகந்தையை அடக்கியவன் என்றும், அவன் சாளுக்கிய அரசனது பகைமையாகிய இருளை அழிக்கும் பகலவனாக இருந்தான்"[66] எனக் கூறப்பட்டுள்ளது.

சாளுக்கியரது செப்பேடுகள்

1. "விக்கிரமாதித்தன் தன் தந்தையின் அரசைத் தன் வலிமையால் அடைந்தான். மூன்று கூட்டரசரை வென்று தன் உரிமையை நிலை நாட்டினான். தன்னுடைய பகைவர்களைப் பல நாடுகளில் வென்றுத் தன் உரிமையைப் பெற்றான்.

(கர்நூல் செப்பேடுகள்)

2. சிரீவல்லபனாகிய விக்கிரமாதித்தன் நரசிம்மவர்மனது பெருமையை அழித்தான்; மகேந்திரன் செல்வாக்கை அழித்தான்; ஈசுவரப் போத்தரசனை வென்றான்.

(பரமேசுவரன் - 1) தென்னாட்டின் மேகலை போல் விளங்கும் காஞ்சியைக் கைப்பற்றினான்.

(கத்வால் செப்பேடுகள்)

3. விநயாதித்தன் வெளியிட்ட சோரப்பட்டயம் பல்லவர் கோவைத் தோற்கடித்தப் பிறகு விக்கிரமாதித்தன் காஞ்சியை அடைந்தான் என்று கூறுகிறது.

4. தமிழரசர்கள் பலர் சேர்ந்து விக்கிரமாதித்தனை எதிர்த்தனர்

(கேந்தூர் செப்பேடுகள்)

மேலே கூறப்பெற்ற இருதிறத்தார் செப்பேடுகளும் தங்களுடைய வெற்றிகளைக் கூறுகின்றனவேயன்றித் தோல்விகளைக் கூறவில்லை. எனினும் இரண்டு வரலாற்றுண்மைகளை நாம் இங்கு உணரலாம். 1. சாளுக்கியர் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியது. 2. பெருவளநல்லூரில் பல்லவ மன்னன் சாளுக்கியப் படைகளைத் தோற்று ஓடும்படிச் செய்தது. இவையிரண்டும் ஒரே படையெடுப்பில், வெவ்வேறு காலத்தில் நடைபெற்றவை எனக்கொளின் இதில் பொதிந்துள்ள வரலாற்றுண்மைகள் வெளிப்படும்.

விக்கிரமாதித்தன் முதலில் பல்லவனைத் தோற்கடித்துக் காஞ்சி நகரத்தைக் கைப்பற்றினான். பிறகு சோழ நாட்டில் உள்ள உறையூரை அடைந்து தங்கினான். பல்லவச் செப்பேடுகளில் கூறப்பட்ட பெருவளநல்லூர் திருச்சிக்கருகில் உள்ளது. காஞ்சியை இழந்ததாகப் பல்லவர் பட்டயங்கள் கூறவில்லை. பெருவளநல்லூரில் தோற்றுப்போனதாகச் சாளுக்கியர் பட்டயங்கள் கூறவில்லை. இங்ஙனம் ஆராய்ந்து பார்த்தால் முதலில் வெற்றிகொண்ட சாளுக்கியர் முடிவில் தோல்வியடைந்தனர் என்பது விளக்கமாகிறது.[67]

பரமேசுவரவர்மன் சிறந்த சிவபக்தன்

முதலாம் பரமேசுவரவர்மன் கூரம் என்ற ஊரில் வித்யாவினீத பல்லவ பரமேசுவர கிருகம் என்ற சிவன் கோயிலை அமைத்து அதற்குப் பரமேசுவரமங்கலம் என்ற சிற்றூரை மானியமாக விட்டான். இவ்வரசனால் விடப்பட்ட கூரம் செப்பேடுகளின் முதலிரண்டு வடமொழிப் பாடல்கள் சிவபெருமானுடைய உருவத்தையும் புகழையும் கூறுகின்றன. மாமல்லபுரத்தில் உள்ள கணேசர் கோயிலும், இராமானுச மண்டபமும், தருமராசந் தேரில் மூன்றாம் அடுக்கும் இவ்வரசனால் அமைக்கப்பெற்றவையாகும். கணேசர் கோயிலில் காணப்பெறும் 11 வடமொழிப் பாடல்கள் சிவபெருமானுக்கும் இவ்வரசனுக்கும் பொருள் பொருந்தும் படி சிலேடையாக அமைந்துள்ளன.

1. காமனை அழித்த சிவன், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் காரணன்; அஃதே போன்று பரமேசுவரவர்மன் சிவத்தலங்களைக் கட்டுவதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும் தன்னுடைய எதிரிகளை அழிப்பதிலும் வல்லவன்.

2. கைலாய மலையை எடுக்க முயற்சிசெய்த இராவணனைப் பாதாளம் வரை அமுத்திய சிவனை இவ்வரசன் தன் தலைமேற் கொண்டுள்ளான்.

3. தன்னுடைய பகைவரையழித்த அத்தியந்த காமனுக்கு சிரீ நிதி, காமராகன் என்ற விருதுப்பெயர்களும் உண்டு. சிவனுடைய அபிடேக நீரும் மணிகளால் ஆன தாமரைகளும் நிறைந்த தடாகம் போல இவ்வரசனுடைய சிரசு இருக்கிறது. அதில் சங்கரன் எப்பொழுதும் இருக்கிறான்.

4. பரமேசுவரவர்மன் சங்கரனை அடைய விரும்பி இந்தச் சிவன் கோயிலைத் தன் குடிமக்களின் விருப்பப்படி அமைத்தான்.

5. தீயவர்களுடைய மனதில் சிவன் நிலைபெற மாட்டான். தீயவர்கள் அழியட்டும் அத்யந்த காம பல்லவேசுவரகிருகம்.[68]

இக்கல்வெட்டின் மூலம் பரமேசுவரவர்மனுடைய சிவபக்தியும் வடமொழியில் இவனுக்கிருந்த ஆர்வமும் தெளிவாகின்றன. மாமல்லபுரத்திலுள்ள கணேசரத தேர் இராமானுசர் மண்டபம் முதலிய கட்டடங்கள் சிவன் கோயில்களே என்பதை உணரவேண்டும்.

ஐயடிகள் காடவர்கோன் என்பவர் யார்?

சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய திருத்தொண்டத் தொகையில் தனியடியார் அறுபத்திமூவரில் ஒருவராக ஐயடிகள் காடவர்கோன் என்பாரைப்பற்றிக் கூறியுள்ளார். இந்த ஐயடிகளின் வரலாறு நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறப்பெற்றுளது.

சத்தித் தடக்கைக் குமரன் நற்றாதை தன் தானமெல்லாம்
முத்திப்பதல் ஓரோர் வெண்பா மொழிந்து முடியரசாம்
அத்திற்கு மும்மை நன்றால் அரற்கா வையம் ஏற்றல் என்னும்
பத்திக் கடல் ஐயடிகளாகின்ற நம்பல்லவனே[69].

இவ்வாறு சேக்கிழார் பெருமான் ஒன்பது பாடல்களில் ஐயடிகளின் வரலாற்றை விரித்துரைத்துள்ளார். அவ் வரலாற்றைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம். "ஐயடிகள் காடவர் கோன் காஞ்சிபுரத்திலே பல்லவர் குலத்திலே தோன்றியவர். "எல்லா உயிர்களும் இன்பம் நுகர்தல் வேண்டும்'' என்ற கொள்கையுடையவர். இவருடைய ஆட்சியில் சைவம் தழைத்தது. கலைகள் பெருகின. நாளடைவில் அவருக்கு அரசாட்சியில் வெறுப்பு உண்டாயிற்று. அதனால் தன் புமகனுக்கு முடி சூட்டிவிட்டுச் சிதம்பரம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று ஆண்டவனை வழிபட விரும்பினார். பல சிவத்தலங்களுக்குச் சென்றார்.

ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு வெண்பாப் பாடினார். இவ்வெண்பாக்களில் தற்காலத்தில் 24 தான் கிடைத்துள்ளன. இவ்வாறு சிவப்பணி செய்து சிவலோகம் சேர்ந்தார்.[70]

இந்த ஐயடிகள் காடவர்கோன் பல்லவ மன்னர்களில் யாராக இருக்கலாம். என்பது பற்றி வரலாற்று அறிஞர் களிடையே கருத்து வேற்றுமையுள்ளது. டி.வி. மகாலிங்கம், சிம்மவிட்டுணுவின் தகப்பனாகிய சிம்மவர்மன் என்பார் இந்த ஐயடிகள் காடவர்கோன் நாயனாராக இருக்கக்கூடும் என்று கூறுவர்.[71] கே. கே. பிள்ளையவர்கள், கன்னட மொழியில் உள்ள சில இலக்கியங்கள் 'பீமவர்மன் மகனும் பரதசிம்ம, பஞ்சபாதசிம்ம என்ற பெயருடைய சிம்மவர்மன் என்பவன் என்று கூறுகின்றன என்பர். ஆனால் இப்பெயர் ஒற்றுமை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உறுதி செய்யப்படவில்லை எனக் கூறியுள்ளார்[72] மா. இராசமாணிக்கம், என். சுப்பிர மணியம் ஆகிய இருவரும் ஐயடிகள் காடவர்கோன் எந்தப் பல்லவ மன்னன் என்ற கேள்வியைத் தாங்கள் எழுதிய வரலாற்று நூல்களில் எழுப்பவே இல்லை. ஆனால் மா. இராசமாணிக்கம் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சியில் சிம்மவிட்டுணுவின் தந்தையாகிய மூன்றாம் சிம்மவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்று கூறுவர்.[73]

திருமுறை வரலாறு என்ற ஆராய்ச்சி நூலை எழுதிய க. வெள்ளைவாரணன், பல்லவ மன்னன் முதலாம் பரமேசு வரவர்மன் தான் ஐயடிகள் காடவர்கோன் என்ற நாயன் மாராக இருக்க முடியும் என்பதற்குப் பின்வரும் ஏதுக்களை எடுத்துரைப்பர்.

1. பரமேசுவரவர்மன் சிவபெருமானிடம் அளவிலாப் பேரன்பு செலுத்திய மன்னன் என்பது அவனால் அமைக்கப் பெற்ற சிவன் கோயில்களாலும் அக்கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுகளாலும் செப்பேடுகளாலும் துணியப்பெறும்.

2. பெரியபுராணத்தில் "செய்ய சடையார் சைவத்திரு நெறியால் அரசளிப்பார்" என்றும் "வடநூல் தென்றமிழ் முதலாம் பன்னுகலைப் பணி செய்யப் பாரளிப்பார்" என்றும் போற்றப்பட்டுள்ளார்.

3. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பல்லவ மன்னர்கள் தமிழ் மொழியில் பயிற்சி இல்லாதவர் என்பதை அவர்களுடைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் உணர்த்துகின்றன.

4. கி.பி. 600 முதல் 630 வரை ஆட்சிபுரிந்த மகேந்திரவர்மன் சிரா என்ற சமணமுனிவர் வசித்த சிராப்பள்ளிக் குன்றைக் குடைவரைக் கோயிலாக்கி அதில் சிவலிங்கத்தை அமைத்துள்ளான். அதற்கு முன்னர் அது சமணப் பள்ளியாக இருந்தது. திருச்சிராப்பள்ளிச் சிவன் கோயிலைப்பற்றி ஐயடிகள் ஒரு வெண்பாப் பாடியுள்ளார். ஆகையால் அவர் முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிற்பட்டவரேயாவர்.

5. ஐயடிகள் காடவர்கோனுடைய சேத்திர வெண்பாக்களில் திருநாவுக்கரசருடைய தேவாரத் திருத்தாண்டகங்களில் காணப்பெறும் சைவசமயக் கருத்துகளும் சொற்றொடர்களும் அதிகம் காணப்பெறுகின்றன.

மேற்கண்ட ஏதுக்களைக் கொண்டு ஐயடிகள் காடவர்கோன் முதலாம் மகேந்திரவர்மனுக்கும் திருநாவுக்கரசருக்கும் பிற்பட்டவர் என்பதும் சிவபக்திச் செல்வரும் வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வல்லவராகிய முதலாம் பரமேசுவரவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்பதும் தெளிவாகும். இவர் அரசாட்சியை விட்டு விலகித் தன்னுடைய மகன் இராசசிம்ம பல்லவனுக்கு முடிசூட்டிச் சிவத்தலங்களைத் தரிசித்து, சேத்திர வெண்பாக்களைப் பாடி முத்தியடைந்தார். காடவர்கோன் கழற்சிங்கன் என்ற நாயனார் இராசசிம்ம பல்லவன் ஆகும் என்று வரலாற்றறிஞர்கள் கூறுவர். இங்கே காடவர்கோன் என்ற

தொடர் கழற்சிங்கனுடைய தந்தையாகிய ஐயடிகள் காடவர் கோனை குறிப்பதாகும்.[74]

இரண்டாம் நரசிம்மவர்மன் அல்லது இராசசிம்மன்

(ஏறத்தாழ கி.பி. 690 முதல் 729 வரை)

இராசசிம்மன் என்ற விருதுப்பெயருடைய இரண்டாவது நரசிம்மவர்மன் கி.பி. 690 ஆம் ஆண்டில் தம்முடைய தகப்பன் ஐயடிகள் காடவர்கோனுக்குப் பிறகு பல்லவ மன்னாகப் பதவி ஏற்றிருக்கக் கூடும். சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய திருத்தொண்டத்தொகையில் இவனைக் "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" என்று நிகழ் காலத்தில் குறிப்பிடுகின்றபடியால் அவருடைய சமகாலத்தவன் என்பது போதரும். கல்வெட்டுகளில் இம்மன்னன் சிவபெருமானின் புதல்வராகிய சுப்பிரமணியருக்கு ஒப்பிடப்படுகிறான்.[75] பல்லவ வரலாற்றில் சிறப்பு மிக்க காலம் என்று கருதப்படும் ஒரு கட்டத்தில் இவ்வரசன் 40 ஆண்டுகள் அரசு புரிந்தான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் சைவ, வைணவ சமயங்களின் ஏற்றமும், பல்லவ மன்னர்களின் வெற்றிகளும், நுண் கலைகளின் வளர்ச்சியும், கோயில்கள் அமைவுற்ற திறமையும், இலக்கிய மேன்மையும் எழில்பெற்று விளங்கின எனக் கூறலாம். அயல்நாடுகளிலும் பல்லவ ஆட்சி பரவி யிருந்த தென டி.வி. மகாலிங்கம் கூறுவர்[76] இம்மன்னனுடைய வரலாற்றை அறிந்துகொள்வதற்கு ஏற்ற பல கல்வெட்டுகளும் இவன் மேற்கொண்ட பல விருதுப் பெயர்களும் இவனுடைய புகழை வெளிப்படுத்துகின்றன. இவனால் அமைக்கப்பெற்ற கோயில்களில் காணப்பெறும் வடமொழிக் கல்வெட்டுகள் இவனுடைய சமயப் பற்றையும் வெற்றிச் செயல்களையும் எடுத்துரைக்கின்றன. காஞ்சிபுரத்திலும் மாமல்லபுரத்திலும் மற்ற இடங்களிலும் இவனால் அமைக்கப்பெற்ற கோயில்கள்

விலை மதிப்பற்ற கலைச்செல்வங்களாக இன்றும் நிலை பெற்றுள்ளன.

காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும், பனமலை கோயிலிலும் காணப்பெறும் கல்வெட்டுகளில் இராசசிம்ம பல்லவனின் பல விருதுப் பெயர்கள் கோர்வையாகக் காணப்பெறுகின்றன. வயலூர் தூண் கல்வெட்டில் இராசசிம்மனுடைய மூதாதையர்களின் பெயர்கள் வரிசையாகக் கொடுக்கப்பெற்றுள்ளன.[77] இரண்டாம் நந்திவர்மனுடைய கசாக்குடிச் செப்பேடுகளில் இராசசிம்மன் பரமேச்சுவரனுடைய அவதாரம் என்றும், நரசிம்மமூர்த்தியையொத்த தோள்வன்மையும் இவ்வுலக முழுவதும் பரவிய புகழுடையவன் என்றும் தேவலாயங்களுக்கும் வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்களுக்கும் தன்னுடைய செல்வத்தை வாரி வழங்கிய சத்திரிய சிகாமணி" என்றும் புகழப்பட்டுள்ளான். வேலூர்பாளையச் செப்பேடுகளில் "மகேந்திரனை யொத்த இராசசிம்மன சந்திரமௌலியாகிய சிவபெருமானுக்குக் கைலாய மலையை யொத்த கற்கோயிலை அமைத்தான்" என்று கூறப்பட்டுள்ளது[78]

இராசசிம்மனுடைய விருதுப் பெயர்கள்

இராசசிம்மனுடைய விருதுப் பெயர்களில் பல அவன் போரில் ஈடுபட்டுத் தன்னுடைய பகைவர்களை வென்றான் என்பதைச் சுட்டுகின்றன. ஆகையால் இவ்வரசன் காலத்தில் போர்கள் நடக்கவில்லையென்பது பொருந்தாக் கூற்றாகும். அவ்விருதுப் பெயர்கள் பின்வருவனவாகும்.

(1) இரணசயன் - போர்களில் வெற்றி பெற்றவன்.
(2) இரணவிக்கிரமன் - போர்களில் வல்லமை காட்டுபவன்.
(3) அபராசிதன் - பிறரால் வெல்லமுடியாதவன்.
(4) அமித்ரமன்னன் - தன் எதிரிகளுடன் மற்போர் புரிபவன்.
(5) அதிரணசண்டன் - பகைவர்களை அழித்தவன்.
(6) அரிமர்த்தனன் - பகைவர்களை அழித்தவன்.

(7) அகண்டாசன் - திடீரெனத் தோன்றும் இடி போன்றவன்.
(8) அமித்ராசன் - பகைவர்களுக்கு இடி போன்றவன்.
(9) பரத்சக்ரமர்த்தனன் - பணியாத பேரரசுகளை அழிப்பவன்.
(10) பார்த்த விக்ரமன்
சமர தனஞ்சயன் - போர் புரிவதில் அருச்சுனனை யொத்தவன்
(11) சன்சிராமரான் - இராமனைப்போல் போர் புரியவன்.
(12) தனசூரன் - (பகைவருடைய) பொருளைப் பெற்று தேவலாயங்களை அமைப்பவன்.[79]

மேற்கூறப்பெற்ற விருதுப் பெயர்கள் இராசசிம்மன் சில போர்களில் ஈடுபட்டான் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றன. அரங்கபதாகை என்ற பெயருடைய அரசியால் அமைக்கப்பெற்ற சிறு கோயிலின் மாடத்தில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்று இராசசிம்மன், சாளுக்கியருடன் நடத்திய போரினைப் பற்றிச் சிலேடையாகக் குறிப்பிடுகிறது. "சிவபெருமானின் முப்புரங்களை அழித்தது போல் இராசசிம்மனும் ஒரு புரத்தை யழித்தான்" இங்கே புரம் என்ற சொல் சாளுக்கியத் தலைநகராகிய இரணரசிகபுரத்தைக் குறிக்கும் என டி.வி. மகாலிங்கம் கருதுகின்றார்.[80] பெரியபுராணம், காடவர் கோன் கழற்சிங்க நாயனார் புராணத்தில்,

ர் குரிசிலார்தாம் கழற்பெருஞ்சிங்கவார தாம்
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரில் சென்று
கூடலர் முனைகள் சாட வடபுலங் கவர்ந்து கொண்டு
நாடகநெறியில் வைக நன்னெறி வளர்க்கும் நாளில்[81]

என்று கூறுகிறது.

இங்கே கழற்சிங்க நாயனார் என்பது இராசசிம்ம பல்லவனைக் குறிக்கும் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுவர். இதனால் இராசசிம்மன் வடபுலத்தில் இருந்த சாளுக்கியர் மீது படையெடுத்து வெற்றிபெற்றான் என்பதை நாம் உணரலாம். விசயாதித்தனுடைய கோநகராகிய

இரணரசிகபுரத்தை வென்று அங்கிருந்து பெரும் பொருட்குவியலைக் காஞ்சிபுரத்திற்குக் கொண்டுவந்து கைலாசநாதர் கோயிலை அமைத்திருக்கக்கூடும். கி.பி. 708 முதல் 718 வரையில் சாளுக்கிய நாட்டில் குழப்பம் மிகுந்து இருந்ததாகவும் விசயாதித்தனை அவனுடைய பகைவர்கள் சிறைப்பிடித்ததாகவும் சாளுக்கிய நாட்டுக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[82] இராசசிம்மனுக்குக் காலகாலன் என்ற விருதுப்பெயர் வழங்குவதைக் கொண்டு அவ்வரசன் கூற்றுவநாயனார் என்ற தமிழ்நாட்டுக் குறுநில மன்னன் ஒருவன் மீது வெற்றி கொண்டதாக டி.வி. மகாலிங்கம் கூறியுள்ளார். கூற்றுவன் என்னும் பெயர் எமன் அல்லது காலன் என்ற பொருளுடையதாகும். காலன் அல்லது கூற்றுவனை வென்றதால் இராசசிம்மன் 'கால காலன்' என்ற விருதுப் பெயரைக் கொண்டான் எனவும் கருதுவர். மேலும் கூற்றுவன் களப்பிரர் இனத்தைச் சேர்ந்தவர் என்றும் எழுதுவர்.

கூற்றுவநாயனார் சிவனடியார் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். அவர் களப்பாளர் என்ற வேளிர் குலக் குறுநில மன்னர். கழற்சிங்க நாயனாராகிய இராசசிம்மன் இன்னொரு சிவனடியார் மீது போர் தொடுத்தார் என்பது நம்பத்தகுந்ததன்று. கூற்றுவநாயனார் இராசசிம்மன் காலத்தவர் என்பதற்குத் தகுந்த சான்றுகள் இல்லை. அவர் இராசசிம்மன் ஆட்சிக் காலத்திற்கு முன் இருந்தவராவார். அவர் மீது இராசசிம்மன் வெற்றிபெற்றுக் காலகாலன் என்ற விருதை மேற்கொண்டான். என்பது உண்மை வரலாற்றுச் செய்தியாகாது.[83]

இராசசிம்மனுடைய அயல் நாட்டுறவுகள்

வயலூர் தூண் கல்வெட்டின்படி இராசசிம்ம னுடைய பேரரசில் ஓராயிரம் தீவுகள் இருந்தனவாகக் கூறப்பெற்றுள்ளதைக் கொண்டு இலக்கத் தீவுகள் என்ற தீவுக் கூட்டங்களிலும் மற்றும் பல அயல் நாடுகளிலும்

பல்லவர்களுடைய ஆட்சி நிலை பெற்றிருந்ததென நம்புவர். கி.பி. 720 - ஆம் ஆண்டில் ஸ்ரீநரசிம்மன் (சீலி நலோ சிங்கியா) என்ற தமிழ் நாட்டரசன் அரேபியர்களுக்கும் திபேத்தியர்களுக்கும் எதிராகச் சீனநாட்டுப் பேரரசனுக்கு உதவி செய்ததாகக் கூறுவர்[84].

காயூன் என்ற சீனப் பேரரசனுடைய எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 720) தென்னிந்திய ஸ்ரீநரசிம்மவர்மன் தாசி (அரேபியர்) டொபோ (திபேத்தியர்) ஆகிய இரு இனத்தவர்களுக்கு எதிராகத் தன்னுடைய குதிரைப்படை, யானைப்படைகளை அனுப்பி உதவி செய்வதற்கு முன்வந்தார். தன்னுடைய படைகளை ஆசீர்வதித்து நாமகரணம் செய்யும்படி சீனப்பேரரசனைக் கேட்டுக் கொண்டார். பேரரசரும் அவ்விதமே செய்தார்.[85] இந்தச் சீன வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு டி.வி. மகாலிங்கம் தென் கிழக்கு ஆசியப் பிரதேசமாகிய காம்போச நாட்டிலும் பல்லவர் பேரரசும் பல்லவ நாட்டின் வணிகமும் பரவி இருந்ததெனக் கூறுவர்.[86] ஆனால் -என் -சுப்பிரமணியன் இது மிகைப்படுத்தப்பெற்றக் கூற்றாகும் என மறுத்து எழுதியுள்ளார்.[87]

இராசசிம்மனுடைய கலைச்செல்வங்கள்

காஞ்சிபுரத்திலுள்ள இராசசிம்மேசுவரம் அல்லது கைலாசநாதர் கோயிலும் மாமல்லபுரத்திலுள்ள கடற்கரைக் கோயிலும், பனமலையில் உள்ள தாளகிரீசுவரர் கோயிலும் இராசசிம்மன் காலத்தில் அமைக்கப் பெற்றவையாகும். பெரியபுராணத்தில் பூசலார் நாயனார் வரலாற்றில் இராசசிம்மன் அமைத்த இக்கோயிலைப் பற்றியும் இவ்வரசன் வானொலி கேட்டது பற்றியும் வெகு விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.[88] இக்கைலாசநாதர் கோயில், இராச சிம்மனுடைய தலைசிறந்த படைப்பாகும். இக்கோயில் திருவதிகை வீராட்டானேசுவரர் கோயில் தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலிய கோயில்களின் விமான

அமைப்பிற்கு ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது. இக்கோயிலின் அமைப்பையும் தோற்றத்தையும் நேரில் கண்டு களிக்க வேண்டுமேயன்றிச் சொற்களால் விவரிக்க முடியாது. ஆயினும் இக்கோயில் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பெறாமல் மணற்பாறைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பெற்றமையால் அதிலுள்ள சிற்பங்கள் தட்ப, வெப்ப மாற்றங்களால் வெடிப்புற்று வருகின்றன. மாமல்லபுரத்திலுள்ள சத்திரியசிகாமணி பல்லவேசுவரம், இராசசிம்மபல்லவேசுவரம், தலசயனப் பெருமாள் கோயில் ஆகிய மூன்றும் இராசசிம்மன் காலத்தில் அமைக்கப் பெற்றவை ஆகும். இக்கோயில்களில் முதல் இரண்டையும் கடல் அலைகள் அழித்துவிட்டன. மூன்றாவது கோயில் மாத்திரம் இன்று கடற்கரைக்கோயில் என வழங்குகிறது. இது கடற்கரையில் இருந்து ஒரு கி.மீ தூரம் மேற்கில் உள்ள தலசயனப் பெருமாள் கோயிலினின்று வேறானது. காஞ்சிக் கைலாசநாதர் கோயிலின் திருச்சுற்றில் காணப்படும் ஆறு சிறு கோயில்கள் இராசசிம்மனுடைய மனைவியார் அரங்க பதாகை அம்மையாரால் அமைக்கப்பெற்றவையாகும்.

இராசசிம்ம பல்லவனுடைய சமயம்

பல்லவ மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் சமணம், பௌத்தம் முதலிய புறச்சமயங்கள் நிலைபெற்றிருந்த போதிலும் சைவம், வைணவம் ஆகிய இரு உயர் சமயங்களும் வளர்ச்சியடைவதற்கும் ஏற்ற இறைநெறி இயக்கமே, நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகிய சமயக் குரவர்களால் ஏற்றம் பெற்றது. முதலாம் மகேந்திரவர்மன் சமண சமயத்தை விட்டுச் சைவம் சார்ந்தது திருநாவுக்கரசருடைய வரலாற்றிலிருந்து தெளிவுறுகிறது. முதலாம் மகேந்திர வர்மனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேசுவரவர்மன், இரண் டாம் நரசிம்மன் அல்லது இராசசிம்மன் முதலிய அரசர்கள் சைவத்தை மேற்கொண்டனர்.

சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய தேவார ஆசிரியர்கள் மூவரும் பல்லவ மன்னர்களைப் பற்றியும் அவர்களுடைய சமயப்பற்றைப் பற்றியும் கூறியுள்ளனர். சுந்தரருடைய காலத்திற்கு முற்பட்ட அடியார்களைப்பற்றித் 'திருத்தொண்டத் தொகையில்' கூறப்பட்டுள்ளது. இந்த நாயன்மார்கள் செயற்கருஞ் செய்கைகளைச் செய்து சைவ சமயத்தைப் போற்றிச் சிவனையே முழு முதற் கடவுளாகக் கொண்டவர்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவருக்கும் காலத்தால் பிற்பட்டவராவார் சுந்தரமூர்த்தி நாயனார். சுந்தரமூர்த்தியின் சமகாலத்திய நாயன்மார்களில் பல்லவ மன்னர்கள் இருவர் முக்கியமானவர்கள். அவர்கள் ஐயடிகள் காடவர் கோனும், காடவர்கோன் கழற்சிங்கனும் ஆவர். இவ்விருவருள் ஐயடிகள் காடவர்கோன் முதலாம் பரமேசுவரன் என்றும் சிம்மவிட்டுணுவின் தந்தையாகிய சிம்மவர்மன் அல்லவென்றும் இங்குக் கொள்ளப்படுகிறது. ஐயடிகள் காடவர்கோனாகிய முதலாம் பரமேசுவர வர்மனுடைய மகன் இராசசிம்மபல்லவனாவான்.

ஐயடிகள் காடவர்கோனுடைய மகன்தான் காடவர் கோன் கழற்சிங்கன் என்பதற்குத் தகுந்த சான்றுகள் உள்ளன. நரசிம்மன் என்ற வடமொழிப் பெயரின் தமிழ் வடிவம் கழற்சிங்கன்; ஐயடிகள் என்றால் 'பெருமை யுடையவன்' என்று பொருள் கொண்டு சிவபக்திச் செல்வத்தால் சிறப்புற்றவன் என்று கொண்டான். அப்பெயர் முதலாம் பரமேசுவரவர்மனைக் குறிக்கும். அவனுக்குக் காடவர்கோன் என்ற விருதுப்பெயர் வழங்கியமையால் அவனுடைய மகனுக்குக் காடவர்கோன்கழற்சிங்கன் என்றும் ஐயடிகள் காடவர்கோன் மகனாகிய கழற்சிங்கன் என்றும் தனியடியார்கள் அறுபத்துமூவரில் ஒருவன் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். இந்தக் காடவர்கோன் கழற்சிங்கனுக்குச் சந்திரசேகர், சிகாமணி, தீப்தமௌலி, [illegible] மணி மகேசுவரசிகாமணி என்ற சைவ சமயப்

பெயர்கள் வழங்கியுள்ளன. இராசசிம்மேசுவரம் என்ற கைலாசநாதர் கோயிலை அமைத்துத் திருநின்றவூரில் பூசலார் நாயனார் அமைத்த மனக்கோயிலைக் கண்டு வணங்கியவனும் இவ்வரசனே என்பது உய்த்துணரப்படுகிறது. சுந்தர மூர்த்திகள் இவ்வரசனைக் கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமாள், காடவர்கோன் கழற்சிங்கன் என்று தம்முடைய திருத்தொண்டத்தொகையில் குறிப்பிடுவதால் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்ம பல்லவனே காடவர்கோன் கழற்சிங்கன் என்பது தெளிவு பெறுகிறது.

இரண்டாவது பரமேசுவரவர்மன் (கி.பி. 728-731)

இராசசிம்ம பல்லவனுக்கு மகேந்திவர்மன், பரமேசுவர வர்மன் என இரு புதல்வர்கள் இருந்ததாகத் தெரிகிறது. கைலாசநாதர் கோயிலின் பிரகாரத்திலுள்ளதோர் கல்வெட்டின்படி அந்தப் பிரகாரத்தில் உள்ள ஒரு சிவன் கோயிலை மகேந்திரவர்மன் அமைத்தாக நாம் அறிகிறோம். இவ்விளவரசன் தன்னுடைய தந்தை இராசசிம்மன் காலத்திலேயே இறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. வைகுந்தப்பெருமாள் கோயிலில் காணப் பெறும் வரலாற்றுச் சிற்ப வரிசைகளில் 17, 18 - வது சிற்பங்கள் போலக் காயமுற்ற ஒருவனை ஒரு துணிப் பல்லக்கில் வைத்து அரசன் அரசியற்கு முன் சுமந்து செல்லப்படுவதையும் இரண்டு அந்தணர்கள் அவ்விடத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்வதையும் பார்த்தால், மூன்றாம் மகேந்திரவர்மன் போரில் இறந்துபோனான் என்பதை உணரலாம் என்று மீனாட்சி அம்மையார் கூறுவர்.[89] இராசசிம்மன் காலத்திலேயே இந்நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும். ஆகையால் இராசசிம்ம பல்லவனுக்குப் பிறகு அவனுடைய இரண்டாம் மகன் இரண்டாம் பரமேசுவரவர்மன் காஞ்சிபுரத்தில் அரியணையில் அமர்ந்தான்.

திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலில் காணப் பெறும் கல்வெட்டு ஒன்று இரண்டாம் பரமேசுவர்மனுடைய மூன்றாவது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பெற்றதாகும். இக்கல்வெட்டில் இவன் அக்கோயிலுக்குச் சில பொற்காசு களைத் தானம் செய்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டைத் தவிர வேறு சான்றுகள் கிடைக்கப் பெறாமையால் இவன் மூன்று ஆண்டுகளே ஆட்சிபுரிந்தான் எனக் கூறலாம்.

"பலவிதமான செல்வங்களையும் வெற்றிமாலை சூடிய புகழையும் கலியுகத்தின் கோலாகலங்களை வெற்றி கொண்டவனும் பிரககுபதி விதித்த நீதிசாத்திரத்தை நன்கு அறிந்து அவ்வழியில் நடத்திச் செல்பவனுமாகிய பரமேசுவர போத்தவர்மன் தோன்றினான் என்று காசக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.[90] வேலூர்ப்பாளையம் செப்பேடு களில் 14 - வது பாடலில் பின்வருமாறு புகழப்பட்டுள்ளான். இராசசிம்மனுடைய மகன் பரமேசுவரவர்மன் அர்சர்களால் கொண்டாடப்பெற்றான். கலிகாலத்தின் கேடுகளை நீக்கிய அந்த பரமேசுவரன் மனுநீதி முறைப்படி ஆட்சிபுரிந்து பூவுலகத்தில் இருந்து கலி நீங்கும்படிச் செய்தான்.[91]

இராசசிம்ம பல்லவனுடைய ஆட்சிக்குப் பிறகு கி.பி. 731-ஆம் ஆண்டில் கர்நூல் வட்டம் உல்சலா (Ulcala) என்னுமிடத்தில் கிடைத்த கன்னட மொழிக் கல்வெட்டு ஒன்று கி.பி. 731 - ஆம் ஆண்டில் சாளுக்கிய மன்னன் விசயாதித்தன், காஞ்சி நகரத்தின் மீது படையெடுத்து பரமேசுவரவர்மனிடம் திறை பெற்றதைப் பற்றிக் கூறுகிறது.[92] சாளுக்கிய படையெடுப்பிற்குப் பிறகு சாளுக்கிய மன்னனுக்கு உதவிபுரிந்த கங்க அரசனாகிய ஏரியப்பா (Ereyappa) என்பவனைத் த்ண்டிப்பதற்குக் கங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அங்கு நடந்த போரில் பரமேசுவரவர்மன் உயிரிழந்ததாகத் தெரிகிறது.[93] கங்க ஏரியப்பா என்பவனுக்கு ஸ்ரீபுருடன் என்ற பெயரும் வழங்கியது. கி.பி. 1077ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற கங்க

மன்னன் கல்வெட்டு ஒன்று "விளந்தை என்னுமிடத்தில் நடந்த போரில் காஞ்சிபுரத்துக் காடுவெட்டி அரசனைத் தன்னுடைய தோள் வன்மையால் வென்று அவனுடைய வெண்கொற்றக் குடையையும் 'பெருமானடிகள்' என்ற பட்டத்தையும் தன் வசப்படுத்தினான்" என்று புகழ்ந்து கூறுகிறது. கங்க நாட்டிற்குச் சென்று போர் நடத்தி அங்கேயே தன்னுடைய உயிரையும் இழந்த பரமேசுவரவர்மனுக்குப் பிறகு பல்லவ நாட்டில் பெரும் குழப்பம் தோன்றியதெனக் கூறலாம். இக்குழப்பங்களால் பரமேசுவரனுடைய கால்வழியினர் காஞ்சிபுரத்தில் அரசுபதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று. சிம்மவிட்டுணுவின் இரண்டாவது மகனாகிய பீமவர்மனின் மரபில் தோன்றியவனும் இரண்டாம் இரணியவர்மனுடைய மகனுமாகிய இரண்டாம் நந்திவர்மன், பல்லவ அரசனாகக் காஞ்சிபுரத்தில் அரியணையில் அமர்ந்தான். திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில் விமானம் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் விமானத்தைப்போல் அமைந்திருப்பதால் அஃது இரண்டாம் பரமேசுவரவர்மன் காலத்தில் அமைக்கப் பெற்றிருக்கலாம் என்று துப்ரே கருதுவர்.[94] மாமல்லபுரத்தில் உள்ள ஆதிவராகர் கோயிலும் காஞ்சிபுரத்திலுள்ள பரமேசுவர விண்ணகரமும் இரண்டாம் பரமேசுவரன் காலத்தில் அமைக்கப் பெற்றவையாகும்.

பிற்காலப் பல்லவ மன்னர்களுடைய மரபுப்பட்டியல்

1. சிம்மவர்மன் (ஏறத்தாழ 550 கி.பி.)

Left line:

- சிம்மவிட்டுணு (ஏறத்தாழ 557-590 கி.பி.)
- முதலாம் மகேந்திரவர்மன் (590-630)
- நரசிம்மவர்மன் (630-668)
- இரண்டாம் மகேந்திரவர்மன் (668-670)
- பரமேசுவரவர்மன் (670-700)
- இரண்டாம் நரசிம்மவர்மன் அல்லது இராசசிம்மன் (700-728)
  - மூன்றாம் மகேந்திரவர்மன்
  - இரண்டாம் பரமேசுவர வர்மன் (728-731)
    - சித்திரமாயன்

Right line:

- பீமவர்மன்
- புத்தவர்மன்
- ஆதித்தவர்மன்
- கோவிந்தவர்மன்
- இரணியவர்மன்
- இரண்டாம் நந்திவர்மன் (பல்லவ மல்லன்) (731-796)
- தந்திவர்மன் (796-847)
- மூன்றாம் நந்திவர்மன் (847-869)
  - நிருபதுங்கன்
  - அபராசிதன்
  - கம்பவர்மன்.

இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 731 முதல் 796 வரை)

இரண்டாம் பரமேசுவரனுக்குப் பிறகு பல்லவ அரசனாக முடிசூடியவன் இரண்டாம் நந்திவர்மன் ஆவான். இவன் சிம்மவிட்டுணுவின் தம்பியான பீமவர்மனுடைய கிளை மரபில் தோன்றியவனாவான். தமிழக வரலாற்றில் அறுபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சிபுரிந்தவன் இரண்டாம் நந்திவர்மனேயாவான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் பல அரிய வரலாற்று நிகழ்ச்சிகள் தென்னிந்திய வரலாற்றில் தோன்றின. தக்காணத்தில் பல்லவ மன்னர்களுடைய பரம்பரை எதிரிகளாக இருந்த மேலைச் சாளுக்கிய மரபு வீழ்ச்சியுற்று இராட்டிரகூட மன்னர்கள் ஆட்சிபுரிவதற்கேற்ற சூழ்நிலை தோன்றியது. தமிழ்நாட்டில் பாண்டிய மன்னர்களுடைய ஆதிக்கம் அதிகரித்துப் பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையில் பெரியதொரு போராட்டம் தொடங்கியது இக்காலத்தில் தான். பல்லவ மரபைச் சேர்ந்த நுளம்ப மன்னர்கள் கன்னட நாட்டின் ஆதிக்கம் பெற்று தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும் தங்களுடைய அதிகாரத்தைப் பரவச் செய்தனர். பிற்காலத்தில் இந்த நுளம்ப பல்லவர்கள் சோழப் பேரரசர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாயினர். இரண்டாம் நந்திவர்மனுடைய ஆட்சிக்காலத்தில் இருந்துதான் பல்லவ மன்னர்கள் தங்களுடைய கல்வெட்டுகளிலும் செப்பேடு களிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்தியதோடு அல்லாமல் ஆட்சியாண்டையும் குறிப்பிடத் தொடங்கினர். இதனால் பல்லவ மன்னர்களுடைய காலவரையறை செம்மை பெற்றது. இராசசிம்ம பல்லவன் காலத்தில் தொடங்கப்பெற்ற கட்டுமானக் கோயில் கட்டடக்கலை வளர்ச்சியுற்ற நிலைமை காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலின் அமைப்பினாலும் அதில் காணப்பெறும் சிற்பங்களாலும் மேன்மையுற்றது.

ஆயினும் இம்மன்னவன் எந்த ஆண்டில் அரியணையைப் பெற்றான், எங்கிருந்து காஞ்சிபுரத்திற்குக் கொண்டு வரப்பெற்றான், ஏன் கொண்டுவரப் பெற்றான் என்ற விவரங்கள் பல்லவ வரலாற்று ஆசிரியர்களைத் திகைக்க வைத்துள்ளன. துப்ரே என்ற அறிஞர் கி.பி. 717-ஆம் ஆண்டில் இரண்டாம் நந்திவர்மன் அரியணையில் அமர்ந்தான் எனக் கூறினார்.[95] ஆர். கோபாலன் ஏறத்தாழ கி.பி. 710 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம் எனக் கூறினார்.[96] இவ்வரசன் கி.பி. 725_ஆம் ஆண்டிற்கு முன்னர் அரியணையில் இருந்திருக்க முடியாது என்று என். வெங்கட்டரமணய்யா கருதினார். கி.பி. 705- ஆம் ஆண்டாக இருக்கலாம் என்று கே.வி. சுப்பிரமணிய அய்யர் கூறியுள்ளார். இரா. சத்தியநாதய்யர் கிபி. 730_ஆம் ஆண்டாக இருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

ஆனால் இக்கருத்து வேற்றுமைகள் எல்லாம் சீனநாட்டு வரலாற்றுக் குறிப்பு ஒன்றினாலும் உள்சலா (Ulcala) என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றினாலும் இப்பொழுது நீங்கிவிட்டன. சீனதேசத்து வரலாற்றுக் குறிப்பு ஒன்றில் கி.பி. 720 - ஆம் ஆண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராசசிம்மன் ஆட்சிபுரிந்ததாகவும் உள்சலா கல்வெட்டில் இரண்டாம் பரமேசுவரவர்மனை கி.பி. 730இல் சாளுக்கிய விக்கிரமாதித்தன் தோற்கடித்ததாகவும் கூறப்பட்டுள்ளதால் கி.பி. 730-731 இல் தான் இரண்டாம் நந்திவர்மன் பட்டம் ஏற்றிருக்க வேண்டுமெனத் தெளிவாகிறது.[97]

பட்டத்தாள்மங்கலச் செப்பேடுகளில் "அரசர்களில் சிறந்தவனாகிய இரணியவர்மன் அரசனாக இருந்தான்; அவனிடம் இருந்து சிரீ நந்திவர்மன் தோன்றினான்; ஒப்பற்ற வீரனான இந்த அரசன் இளைஞனாக இருக்கும்பொழுதே இராச்சியத்தை அடைந்தான்"[98] என்று புகழப்பட்டுள்ளான். கசாக்குடிச் செப்பேடுகளில் இவ்வரசன் "சிம்மவிட்டுணுவின் தம்பியான பீமவர்மனுடைய கால்வழியில் வந்தவன் என்றும் மக்களால் தேர்ந்து எடுக்கப்பெற்றுப் பரமேசுவர

வர்மனுடைய இராச்சியத்தை அரசு புரிந்தான் என்றும் தன்னைப்பற்றிக் கூறிக் கொள்கிறான்.[99] காஞ்சிபுரம் வைகுந்தப்பெருமாள் கோயிலின் சுற்றுச் சுவர்களில் காணப்பெறும் வரலாற்றுச் சிற்பங்கள், நந்திவர்மன் இளைஞனாக இருந்தபோதிலும் பல்லவ இராச்சியத்தின் அரச பதவியை ஏற்ற சூழ்நிலையையும் எவ்விதம் ஏற்றுக் கொண்டான் என்பதையும் சித்திரித்துக் காட்டுகின்றன. முதல் வரிசைச் சிற்பங்கள் பிரம்மதேவனிடம் இருந்து தோன்றிய பல்லவ குலத்தரசனாகிய பரமேசுவர போத்தரையர் விண்ணுலகம் அடைந்த பிறகு பல்லவ நாட்டின் அரசியலில் குழப்பம் மிகுந்திருந்தது. ஆகையால், காஞ்சிபுரத்தில் இருந்த அமைச்சர்களும் கடிகையார்களும் மூலப்பிரகிருதியாரும் காடவர் குலத்தலைவனாகியவனும் தாய் தந்தை ஆகிய இருவர் வழியிலும் பரிசுத்தமானவனும் பல்லவ இராச்சியத்தை நிருவகிக்கக் கூடியவனுமான இரணியவர்ம மகாராசனை அணுகி அரசுப் பொறுப்பை ஏற்கும்படி வேண்டிக் கொண்டனர் என்பதைக் குறிக்கின்றன.

இரண்டாவது வரிசையில் உள்ள சிற்பங்கள் மேற்கூறப்பெற்ற காஞ்சிபுரம் நகரவாசிகளை அவர்கள் அங்கு வந்த காரணமென்ன என்று இரணியவர்மன் வினாவுவதும் பல்லவநாட்டின் அரசன் இறந்துவிட்டபடியால் நாட்டில் கொடுங்கோலும் குழப்பமும் மிகுந்துள்ளன. குற்றமற்ற குலப்பெருமையுடைய தாங்கள் அரசுரிமையை ஏற்று உதவிபுரிய வேண்டும் என அவர்கள் பதில் கூறுவது சிற்பங்களாகக் காணப்பெறுகின்றன.

மூன்றாவது வரிசையில் அதைக் கேட்ட இரணிய வர்மன் தன்னுடைய குலமல்லர்களை அழைத்து "யாராவது பல்லவநாட்டின் அரசுரிமையை ஏற்க முன்வருவீர்களா? என்று வினவ அவருள் ஒருவரும் முன்வரவில்லை. பின்னர் சிரீமல்லன், இரணியமல்லன், சங்கிராம மல்லன், பல்லவ மல்லன் என்ற நான்கு மக்களையும் அழைத்துக் கேட்டனன். முதல் மூவரும் மறுத்துவிடவே நான்காவது மகனாகிய பல்லவ

மல்லன் மாத்திரம், தன் தகப்பனுடைய கால்களில் வீழ்ந்து வணங்கி ஒப்புக்கொண்ட செய்திகளை விவரிக்கிறது. நான்காவது வரிசைச் சிற்பங்கள் பின்வரும் செய்திகளை விளக்குவதாகக் கூறலாம். நான்காவது மகனுடைய சொற்களைக் கேட்ட இரணியவர்மனுடைய மனதில் பல்லவப் பேரரசைத் தன்னுடைய மகன் ஆளப்போகிறான் என்ற இன்பமும் பன்னிரண்டு வயதுடைய தன்னுடைய மகனைப் பிரிய வேண்டுமே என்ற துன்பமும் கலந்து ஊசலாடுவதையும் அச்சமயத்தில் தரணிகொண்ட போசர் என்ற வயது முதிர்ந்த அமைச்சர் "உன்னுடைய மகன் (நந்திவர்மன்) முற்பிறவியில் திருமாலை வணங்கித் தவம் செய்தவன் ஆகையால் இப்பிறவியில் அரசுரிமையைப் பெறும் ஊழ்வினையுடையவன் ஆவன்.[100] நீ வருந்தற்க" என்று தேற்றுவதைக் குறிக்கிறது.

ஐந்தாவது, ஆறாவது வரிசைகளில் உள்ள சிற்பங்களும் எழுத்து விவரங்களும் மிக்க சேதம் அடைந்துள்ளன. கருங்களிற்றின் தலை போன்ற ஒன்றைக் கண்ட இரணியவர்மன் அஃதென்னவென்று கேட்பது போலத் தோன்றுகிறது. அதை இஃது கரிய யானையின் தலையன்று. பல்லவ மன்னர்களுடைய மணிமுடியும் அரசச் சின்னங்களும் என்று தரணிகொண்ட போசர் கூறி இரணியவர்மனுடைய குழப்பத்தைப் போக்கியது போன்று தெரிகிறது.

ஏழாவது வரிசையிலுள்ள எழுத்துகள் "இரணியவர்ம மகாராசனும் தரணி கொண்ட போசரும் பல்லவ மன்னனைப் பார்த்து நீங்கள் மேற்செல்லலாம்" என்று விடைகொடுத்த பிறகு தான் அமர்ந்திருந்த சிவிகையை விட்டிறங்கி இருவரையும் வணங்கி விடைபெற்றதைக் கூறுகின்றன" எனக் கொள்ளலாம். எட்டாவது வரிசையில் காணப்பெறும் விவரம் பின்வருமாறு படிக்கப்பெற்றது. அங்கு நின்றும் போந்து பல கிரி, நதி, வன ககனங்களைக் கடந்து வருகின்றமை கேட்ட பல்லவாதி அரையர் எதிரே மகா பலத்தோடும் வந்து யானை ஏற்றிக் கொண்டு காஞ்சி

மகாநகரத்தருகில் மரிந்து போந்த இடம்'' இக்கல்வெட்டு வாசகத்தை“பல மலைகளையும் ஆறுகளையும் நெருக்கமான காடுகளையும் கடந்து காஞ்சிபுரத்திற்கு வந்த பல்லவ மன்னனைப் பல்லவாதி அரையர் ஒரு பெருஞ்சேனையோடு வந்து வரவேற்று யானைமீது ஏற்றிக்கொண்டு காஞ்சிப் பெருநகருக்குள் நடத்திச் சென்ற இடம்'' என முன்னர் விளக்கப்பட்டது. ஒன்பதாவது அணிவரிசையில் “பல்லவ மன்னன் யானையின் மீது அமர்ந்து வருவதைக் கண்ட மகாசாமந்தர்களும் நகரத்தார்களும் மூலப்பிரகிருதியாரும் காடக முத்தரையரும் சேர்ந்து எதிர் கொண்டழைக்க எல்லோரும் நகருக்குள் புகுந்தனர்.

பத்தாவது வரிசையில் “பல்லவ மன்னன் அரண் மனைக்குள் நுழைந்த பிறகு மந்திரி மண்டலத்தாரும் மகாசாமந்தர்களும் உபயகணத்தார்களும் கடிகையாரும் சேர்ந்து பல்லவமன்னனுக்கு நந்திவர்மன் என்ற அபிடேக நாமத்தைச் சூட்டி முடிசூட்டுவிழாவும் நடத்தினர். அரசபதவிக்குரிய காரிவை என்ற அவனுடைய தேருக்கு வெண்கொற்றக்குடையையும், சமுத்திரகோஷம் என்ற சங்கையும் கட்வாங்கக் கொடியையும் இடப இலச்சினை யையும் அளித்து “விடேல் விடுகு'' என்ற அரசாணை முத்திரையையும் அளித்தனர்.

மேலே கூறப்பெற்ற எட்டாவது, ஒன்பதாவது அணிவரிசைகளில் காணப்பெறும் சொற்றொடர்களுக்கு டி.வி. மகாலிங்கம் அவர்கள் புதிய பொருள் ஆய்ந்து கூறியுள்ளார். புதிதாக அரசுப் பதவி ஏற்க வந்த பல்லவ மல்லனைப் பல்லவாதி அரையர் மகாபலத்தோடு எதிர்கொண்டழைக்கக் காரணம் இல்லை. பல்லவாதி அரையர் நந்திவர்மப் பல்லவனை எதிர்த்துப் போர் செய்வதற்காகவே மகாபலத்தோடும் சேனையோடும் வந்திருக்க வேண்டும். யானை ஏற்றிக் கொண்டு என்னும் தொடர் யானை எற்றிக் கொண்டு என இருக்கவேண்டும். ஏனெனில் பின்னர் மரிந்து போந்த இடம் என்று

எழுதப்பெற்றுள்ளது. ஆகையால் பல்லவாதி அரையர் என்பார் பல்லவ மல்லனை எதிர்கொண்டழைத்து யானையின் மீது ஏற்றிச் செல்லவில்லை. மகாபலத்தோடும் யானைகளோடும் வந்து போரிட்டார்; அப்போரில் இறந்தார் எனப் பொருள் கொள்ள வேண்டுமெனக் கூறுவர்.[101]

மேலும், ஒன்பதாவது வரிசையில் காணப்பெறும் கல்வெட்டுச் செய்தியில் 'அங்கு நின்றும் போந்து பல, கிரி நதி, வன ககனங்களைக் கழிந்து' என்னும் தொடரில் உள்ள ககனங்கள் என்னும் சொல்லுக்குக் கடல் அல்லது நீர் நிறைந்த இடம் என்னும் பொருள் கொண்டு, பல்லவமல்லனும் அவனுடைய தந்தை இரணியவர்மனும் காம்போச நாட்டிலிருந்து வந்து காஞ்சிபுரத்தில் அரசுரிமை ஏற்றனர் என்றும் கூறுவர்[102]. எட்டாவது வரிசையில் நந்திவர்மன் யானைமீது அமர்ந்து வருகின்ற சிற்பம் காணப்பெறவில்லை. ஆகையால் பல்லவாதி அரையர் யானைப்படையொன்றைக் கொண்டு வந்து பல்லவமல்லனை காஞ்சிபுரத்தருகில் எதிர்த்துப் போரிட்டு அதில் இறந்தபிறகுதான் நந்திவர்மப் பல்லவமல்லன் நகருக்குள் நுழைந்திருக்க வேண்டும் எனக் கூறி, மரிந்து போந்த இடம்' என்பதற்கு இதுவே சரியான பொருளாகும். யானை ஏற்றிக்கொண்டு என்பதை யானை எற்றிக்கொண்டு என படித்தல் வேண்டும் எனவும் கூறுவார். இப்புதிய பொருள் வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. கல்வெட்டு எழுத்துகளைத் திருத்தி நம்முடைய கருத்திற்கு ஏற்றவாறு பொருள்கொள்ளுதல் நடுநிலையுள்ள ஆராய்ச்சியாகாது.

ஒன்பதாவது வரிசையில் உள்ள 'ககனம்' என்ற சொல்லுக்குக் காடு, ஆகாயம் என்ற பொருட்கள்தாம் இதுவரையில் வழக்கத்தில் உள்ளன. பிங்கலந்தை நிகண்டில் ககனம் என்ற சொல்லுக்குக் கடல் அல்லது நீர் நிறைந்த குடம் என்று பொருள் கூறப்படுவதாக டி.வி. மகாலிங்கம் கூறுவர். ஆனால் பல தமிழறிஞர்கள் 'ககனம்' என்றால் ஆகாயத்தைக்

குறிக்குமே அன்றிக் கடலைக் குறிக்காது எனக் கூறுவர்.[103] ககனம் என்ற சொல்லிற்குக் 'கடல்' என்று பொருள் கொண்டு நந்திவர்மனும் அவனுடைய தகப்பன் இரணியவர்மனும் காம்போச நாட்டிலிருந்து கடல் கடந்து வந்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிய தொண்டை மண்டலத்திற்கு வந்தனர் என்பது வலியற்ற செய்தியாகத் தெரிகிறது.

இரணியவர்மனையும் நந்திவர்மனையும் நேரில் சந்தித்துக் காஞ்சிபுரத்திற்கு வந்து பல்லவ அரியணையில் அமரும்படி வேண்டிக் கொண்டவர், தரணி(டி) கொண்ட போசர் என்னும் தலைவராவர். இவர் 'தரணி கொண்டா' என்னும் இடத்திற்குச் சிற்றரசராக விளங்கியவர் எனலாம். இந்தத் தரணிகொண்டா என்னும் இடம், ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்திலுள்ள தாடிக்கொண்டா என்ற இடமாக இருக்கவேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது[104]. ஆகையால் இரணியவர்மனும் அவனுடைய மக்களும் ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதியில் பல்லவப் பேரரசிற்கு உட்பட்டு ஆட்சி புரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

பல்லவ சாளுக்கியப் போராட்டம்

நந்திவர்மப் பல்லவ மல்லன் ஏறத்தாழ கி.பி. 731-32ஆம் ஆண்டில் முடிசூட்டிக்கொண்டதாகக் கொள்ளலாம். இவ்வரசன் அரியணையில் அமர்ந்த இரண்டொரு ஆண்டு களுக்குள் மேலைச் சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் விக்கிரமாதித்தன் பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வந்தான். சாளுக்கிய விக்கிரமாதித்தனுடைய படையெடுப் பைப் பற்றி அவனுடைய நார்வான் (Narvan) செப்பேடுகளும் கீர்த்திவர்மனுடைய வக்கலேரி, கேந்தூர்த் செப்பேடுகளும் காஞ்சிக் கைலாசநாதர் கோயிலில் உள்ள கன்னடமொழிக் கல்வெட்டு ஒன்றும் குறிப்பிடுகின்றன.[105] பரமேசுவர வர்மனுடைய ஆட்சிக் காலத்தில் காஞ்சிபுரத்தின் மீது விக்கிரமாதித்தன் படையெடுத்தான் என்பதை நாம் ஆராய

வேண்டும். இரண்டாம் பரமேசுவரனுடைய இறப்பிற்குப் பிறகு பல்லவப் பேரரசில் இரண்டு அரசியல் கட்சிகள் தோன்றின. ஒரு கட்சியினர் தரணிகொண்ட போசருடைய தலைமையில் இரணியவர்மனுடைய மகனாகிய நந்திவர்மனை ஆதரித்தனர். மற்றொரு கட்சியினர் பரமேசுவரவர்மனின் மகனாகிய சித்திரமாயனுக்கு உதவி செய்தனர். சாளுக்கிய இரண்டாம் விக்கிரமாதித்தனும் சித்திரமாயனுக்கு உதவி செய்ய முன்வந்து இரண்டாம் நந்திவர்மனை நீக்கிவிட்டுச் சித்திரமாயனை அரியணையில் அமர்த்த முன்வந்தனன் போலத் தெரிகிறது. கைலாசநாதர் கோயிலுள்ள கல்வெட்டின்படி இரண்டாம் விக்கிர மாதித்தனே தன் படைகளைச் செலுத்தி வந்தனன் என்றும் அவனுடைய படைவீரர்கள் காஞ்சியைக் கைப்பற்றிய பொழுது விக்கிரமாதித்தனும் உடன் இருந்தனன் என்றும் அறிகிறோம்[106]

சாளுக்கியர்களுடைய கல்வெட்டுகளின்படி இரண் டாம் நந்திவர்மன் தோல்வியடைந்து தலைநகரமாகிய காஞ்சிபுரத்தையும் பல்லவ நாட்டையும் விட்டுப் பாதுகாப்பான இடத்தை நாடிச் சென்றனன் போலத் தெரிகிறது[107]. விக்கிரமாதித்தன் இரண்டாம் பரமேசுவர னுடைய மகனாகிய சித்திரமாயனைப் பல்லவ அரியணையில் அமர்த்தினான். இந்தச் சித்திரமாயன் இருபது ஆண்டு களுக்குப் பல்லவ நாட்டை ஆண்டிருக்கக்கூடும். ஏனெனில் நந்திவர்மனுடைய உதயேந்திரம் செப்பேடுகளில் குறிப்பிடப் படும் அரசன் இந்தச் சித்திரமாயனாக இருக்கக்கூடும் என்று டி.வி. மகாலிங்கம் கருதுவர்.[108] ஒரு வாணர்குலத் தலைவனுடைய வேண்டுகோளின்படி படுவூர் கோட்டத்தைச் சேர்ந்த மேல் ஆடையூர் நாட்டுச் சரகூர் என்னும் ஊரைக் கந்தசிசியமங்கலம் என்னும் பெயரிட்டு மாதவசர்மபட்டன் என்ற அந்தணனுக்குப் பிரமதேயமாக இவ்வரசன் அளித்துள்ளான்.[109] தன்னுடைய இராச்சியத்தையும் அரச

பதவியையும் இழந்த இரண்டாம் நந்திவர்மன் இராட்டிரகூட அரசை கி.பி. 753 - இல் தோற்றுவித்த தந்திதுர்க்கனுடைய அவைக்குச் சென்று அவனிடம் தஞ்சம் புகுந்ததாக டி.வி. மகாலிங்கம் கருதுகிறார். முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கையிலிருந்து வந்த இளவரசனாகிய மானவர்மன் பல்லவ மன்னனிடம் தஞ்சம் அடைந்தது போன்று இரண்டாம் நந்திவர்மன் இராட்டிரகூடத் தலைவனிடம் தஞ்சம் புகுந்ததாகக் கருதப்பெறுகிறது. நந்திவர்மனுடைய 61 - ஆம் ஆட்சியாண்டில் விடப்பெற்ற பட்டத்தாள் மங்கலச் செப்பேடுகளில் வல்லபர், களப்பிரர், கேரளர், பாண்டியர், சோழர், துளு, கொங்கண அரசர்கள் நந்திவர்மனுக்குக் கீழ்ப்படிந்து இருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. அவனுடைய 33 - ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றச் செப்பேடுகளும் அவனுடைய பல வெற்றிகளைப் பற்றிக் கூறுகின்றன. தந்திவர்மனுடைய 21 - ஆம் ஆட்சியாண்டில் விடப்பெற்ற உதயேந்திரம் செப்பேடுகளில் இவ்வரசனுடைய படைத்தலைவனாகிய உதயச்சந்திரனின் வெற்றிச் செயல்கள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. தசாவதாரக் கோயிலில் காணப்பெறும் தந்திதுர்க்கனுடைய கல்வெட்டு ஒன்றில் வல்லப அரசனாகிய சாளுக்கியன், காஞ்சிபுரத்தரசன் ஆகிய இரு அரசர்களை வென்ற செய்தி கூறப்பெறுகிறது.[110] காஞ்சிபுரத்து அரசனாகிய நந்திவர்மனும் அவனுடைய தளபதி உதயச்சந்திரனும் தந்திதுர்க்கனோடு இருக்க, இத்தலைவன் காஞ்சிபுரத்து அரசனை வென்றான் என்பதை நாம் எவ்விதம் நம்பக்கூடும். உண்மை என்னவென்றால் நந்திவர்மனுக்காக தந்திதுர்க்கன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டும். பின்னர் சித்திரமாயன் என்ற கந்தசிசியனைக் காஞ்சிபுரத்தை விட்டுத் துரத்திவிட்டு நந்திவர்மனை மீண்டும் அரசு பதவியில் கி.பி. 745-46 இல் அமர்த்தியிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

நந்திவர்மனும் உதயசந்திரனும்

நந்திவர்மனுடைய 21 - ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற உதயேந்திரம் செப்பேடுகளில் வில்லவபுரத்துத் தலைவனும் பல்லவ மன்னனுடைய தானைத் தலைவனுமாகிய உதயச்சந்திரனுடைய வீரச் செயல்களும் அவன் நந்திவர்மனுக்கு ஆற்றிய சேவைகளும் குறிப்பிடப்பெற்றுள்ளன. நாதன்கோயில் என்று தற்காலத்தில் வழங்கப்பெறும் நந்திபுரக்கோட்டையில் திரமிள மன்னர்களால் முற்றுகையிடப்பெற்று நந்திவர்மன் தவித்துக் கொண்டிருந்ததை உதயச்சந்திரன் கேள்வியுற்றான். அச்செய்தி கேட்டு மிகக் கோபமுற்று "ஆம்பல் இதழின் காந்தி போன்ற பளபளப்புடைய உறையிலிருந்து தன்னுடைய வாளை எடுத்துப் பல்லவ மன்னனுடைய எதிரிகளுக்குக் கூற்றுவன் போலப் பாய்ந்து சித்திரமாயப் பல்லவராசன் முதலியவர்களைக் கொன்று இராச்சியம் முழுவதையும் தன் அரசனுக்கு அளித்தான். நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம், நெல்வேலி, சூராவழுந்தூர் முதலிய இடங்களில் பல்லவ மன்னனுடைய எதிரிகளின்மீது வெற்றி கொண்டான். நெல்வேலிப் போரில் உதயணன் என்ற வேட அரசனையும் அவனுடைய சேனாதிபதி சங்கன் என்பானையும் வென்று மயில் தோகைகளால் செய்யப்பெற்ற அவனுடைய கண்ணாடிக்கொடியைக் கைப்பற்றினான். வடதிசையில் பிருதிவியக்ரன் என்ற நிடத நாட்டு அரசனை வென்றான். கீழைச் சாளுக்கிய அரசன் விட்டுணுராசனை வென்று அவனுடைய நாட்டின் ஒரு பகுதியைப் பல்லவ ராச்சியத்தோடு சேர்த்தான். காளிபகவதியால் காப்பாற்றப் பட்டு வந்த காளிதுர்க்கத்தைக் கைப்பற்றினான். மண்ணைக்குடி கிராமத்தில் பாண்டிய மன்னன் மீது வெற்றிகொண்டான் எனப் பலவாறு புகழப்பட்டுள்ளான்[111]

கி.பி. 744-45 - இல் இராட்டிரகூட வமிசத்து தந்திதுர்க்கனுடைய உதவிகொண்டு சித்திரமாயனிடமிருந்து

காஞ்சிபுரத்தில் பல்லவ அரியணையைக் கைப்பற்றிய நந்திவர்மன் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திபுரக்கோட்டையில், சித்திரமாயன், பாண்டிய மன்னன் இராசசிம்மன் முதலிய திராவிட மன்னர்களால் முற்றுகையிடப்பட்டதையும் அம்முற்றுகையிலிருந்து நந்தி வர்மனைக் காப்பாற்றிச் சித்திரமாயனைக் கொன்று பல்லவப் பேரரசைத் தன்னுடைய அரசனுக்கு உதயச்சந்திரன் கொடுத்தாகவும் மற்றும் வடநாட்டில் தந்திதுர்க்கனுக்கு உதவியாக உதயசந்திரன் பல போர்களில் வெற்றிபெற்றதையும் இச்செப்பேட்டு வாசகங்களிலிருந்து நாம் அறிகிறோம்[112].

நந்திவர்மனும் கங்க மன்னர்களும்:

இரண்டாம் நந்திவர்மனுடைய சமகாலத்தில் சிரீ புருஷ கொங்கணி மகாதிராசன் (ஏறத்தாழ 725-78) என்பான் கங்க மன்னனாக விளங்கினான். இவ்வரசன் சாளுக்கிய இரண்டாம் விக்கிரமாதித்தனுடைய நெருங்கிய நண்பனாக இருந்து கி.பி. 731 – இல் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்ததற்கு உதவி செய்தான். நந்திவர்மன் கி.பி. 764 –இல் கங்கநாட்டின்மீது படையெடுத்து சிரீ புருடனைத் தோற்கடித்தாகத் தெரிகிறது. மானபுரம் என்ற இடத்தில் வெற்றிபெற்றான். முதலாம் பரமேசுவரவர்மன் காலத்தில் பூவிக்ரமன் என்ற கங்க அரசன் விளந்தை என்னுமிடத்தில் பல்லவ அரசனைத் தோற்கடித்து அவனுடைய வெண்கொற்றக்குடையையும், பெருமானடிகள் என்ற பட்டத்தையும் பெற்றதாகக் கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளன.[113] தன்னுடைய மூதாதையர்கள் இழந்த அரசச் சின்னங்களைத் திரும்பப் பெறுவதற்கு நந்திவர்மன் கங்கநாட்டின்மீது படையெடுத்து சிரீ புருடனைத் தோற்கடித்து அவனிடமிருந்து உக்ரோதயம் என்று கழுத்தணையைத் திரும்பப் பெற்றான். கங்கபாடி ஆறாயிரம் என்ற நிலப்பகுதியையும் கைப்பற்றி செயநந்திவர்மன் என்ற வாணர்குலச் சிற்றரசனுக்கு அளித்தான்.[114]

நுளம்ப பல்லவர்

இரண்டாம் நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் நுளம்ப பல்லவர் என்ற பல்லவப் பிரிவினர் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் அரசு செலுத்தலாயினர் எனக் கூறலாம். கங்கர், இராட்டிரகூடர் அரசுகளுக்கு இடைப்பட்ட பகுதியான நுளம்பால்கே ஆயிரம் என்ற பகுதியில் தங்களுடைய சிற்றரசைத் தொடங்கிய நுளம்பப் பல்லவர்கள் காஞ்சி புரத்துப் பல்லவ வமிசத்தில் உதித்த திரிநயனப் பல்லவனுடைய கால்வழியில் வந்தவர்கள் என்றும் ஈசுவரவமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் கூறிக்கொண்டனர்.[115] இந்தச் சிற்றரச வமிசத்தைத் தொடங்கிய மங்கள நுளம்பாதிராாசன் வாதாபிச் சாளுக்கி யரையும், கங்கர்களையும் வென்றதாகக் கூறிக்கொண்டுள் ளான். மங்களனுக்குப் பிறகு அவனுடைய மகன் சிங்கபோதன் என்பவன் ஆட்சிபுரிந்தான். இந்த நுளம்ப பல்லவ அரசர்கள் தொடக்கத்தில் நந்திவர்மனுக்கு எதிரிகளாக இருந்தபோதிலும் பின்னர் அவ்வரசனுக்கடங்கிய சிற்றரசர்களாயினர். சிங்க போதன் என்ற நுளம்பப் பல்லவன் தன்னுடைய மகனுக்கும் பெயரனுக்கும் பரமேசுவரன், பல்லவ மன்னன் என்று பெயரிட்டபடியால் இவன் நந்திவர்ம பல்லவனுக்கும் அவனுக்குப் பின்வந்தோருக்கும் அடங்கியிருந்தான் என்பது தெளிவாகிறது.

பல்லவ பாண்டிய உறவு

நந்திவர்மனுக்கு எதிராகச் சித்திரமாயனுக்கு உதவி செய்த மாறவர்மன் இராசசிம்ம பாண்டியனுக்குப் பிறகு அவனுடைய மகனாகிய சடிலபராந்தக நெடுஞ்சடையன் என்ற முதலாம் வரகுணபாண்டியன் அரசு புரிந்தனன். தன்னுடைய வேள்விக்குடிச் செப்பேடுகளில் காடவ குலத்து அரசனாகிய நந்திவர்மனைக் காவிரியின் தென்கரையிலுள்ள பெண்ணாகடத்தில் வென்றதாகக் கூறிக்கொள்ளுகிறான். இந்தப் பெண்ணாகடப் போர் கி.பி. 768-771

ஆண்டுகளுக்கிடையே நடந்திருக்கலாம். பெண்ணாகடத்தில் தோல்வியுற்ற நந்திவர்மன் சேர நாட்டரசன், கொங்குநாட்டு அதியமான் முதலியவர்களுடன் கூட்டுச் சேர்ந்து சடில பராந்தக நெடுஞ்சடையன்மீது மீண்டும் போர் தொடுத்தனன். சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகளில் பராந்தக பாண்டியன், புகலியூர் ஆயிரவேலி, அயிரூர் என்ற இடங்களில் அதிகமானைத் தோற்கடித்து, பல்லவ, கேரளக் கூட்டணியை அழித்து மேற்கொங்கு நாட்டரசனைச் சிறையில் அடைத்ததாகவும் கூறிக்கொள்ளுகிறான்.[166] ஆனாலும், நந்திவர்மனுடைய பேரரசின் தென் -எல்லை முன்னிருந்தது போலவே இருந்து, பாண்டியர் வசமாகவில்லை எனத் தெரிகிறது.

நந்திவர்மன் அமைத்த கோயில்கள்

பரமேசுவர விண்ணகரம் என்று அழைக்கப்பெறும் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலும் காஞ்சிபுரத்திலுள்ள முக்தீசுவரர் மாதாங்கீசுவரர் கோயில்களும் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பெற்றவையாகும். நந்திபுர விண்ணகரம் என்ற நாதன் கோயிலைப் பற்றியும் பரமேசுவர விண்ணகரத்தைப் பற்றியும் திருமங்கையாழ்வார் பாசுரங்கள், நாலாயிரப் பிரபந்தத்தில் காணப்பெறுகின்றன. இவ்வரசனுடைய ஆட்சிக்காலம் முதல் தமிழ்நாட்டில் காணப்பெறும் கல்வெட்டுகளில் தமிழ் அழகிய நடையில் எழுதப்பெற்றுள்ளன.[117]

நந்திவர்மனின் சமயம்

இவ்வரசன் வைணவ சமயத்தைப் பின்பற்றியவன் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்பெறும் வரலாற்றுச் சிற்பங்களும் கல்வெட்டுகளும் புடைப்புச் சிற்பங்களும் இவனுடைய ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பெற்றனவாகும். திருவரங்கத்தில் ஒரு பல்லவ மன்னன் அரங்கநாதப்

பெருமாளின் அருளைப் பெற்றதாகத் திருமங்கை ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார். இம்மன்னன் நந்திவர்மனாக இருக்கக் கூடும்.[118] நந்திபுர விண்ணகரத்தில் உள்ள திருமாலின் கோயிலில் செய்த திருப்பணிகளும் இவரால் குறிப்பிடப் பெற்றுள்ளன.[119] திருமங்கையாழ்வார் சோழநாட்டில் ஆலிநாட்டுப் பகுதியான திருமங்கையில் குறுநில மன்னனாக வாழ்ந்தவராவார். திருமங்கை ஆழ்வார் நாகப்பட்டினத்தில் இருந்த பௌத்தச் சிலையொன்றைக் கைப்பற்றி அதன் மூலம் கிடைத்த பொருளைக் கொண்டு திருவரங்கக் கோயில் பணிக்குச் செலவிட்டார் என்ற ஒரு பரம்பரைச் செய்தி ஆதாரமற்றதெனக் கூறுவர்.[120]

தந்திவர்மன்
(கி.பி. 796 – 846)

இரண்டாம் நந்திவர்மனுடைய மகன் தந்திவர்மன் தன்னுடைய தந்தைக்குப் பிறகு பல்லவப் பேரரசனாகப் பதவி ஏற்றனன். இவ்வரசனுடைய 51-ஆம் ஆட்சியாண்டின் கல்வெட்டு ஒன்று கிடைக்கப்பெறுவதால் 51-ஆண்டுகளுக்கு மேல் அரச பதவியில் இருந்தான் எனக் கூறலாம். தந்தையும் மகனும் சேர்ந்து 116 ஆண்டுகள் பல்லவப் பேரரசை ஆட்சிபுரிந்துள்ளனர்.

சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தனால் தன் பதவியை இழந்த இரண்டாம் நந்திவர்மன், இராட்டிரகூடத் தந்திதுர்க்கனுடைய ஆதரவில் இருந்த பொழுது அவனுடைய மகள் ரேவா என்பாளைத் திருமணம் செய்து கொண்டனன். தந்திவர்மன் தந்திதுர்க்கனுடைய பெயரனாகையால் இவனுக்கு அப்பெயர் வந்ததுபோல் தெரிகிறது. தமிழ்நாட்டின் வரலாற்றில் தந்திவர்மனுடைய ஆட்சிக்காலம் சில முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் வடக்கே இராட்டிரகூடர்களுடைய எழுச்சியும் தெற்கே பாண்டியப் பேரரசின் வளர்ச்சியும் அவர்

களுக்குப் பின் விசயாலயனை அரசனாகக் கொண்டு மேன்மையுற்ற பேரரசும் தென்னிந்திய வரலாற்றில் பெரிய மாற்றங்களைத் தோற்றுவித்துப் பல்லவப் பேரரசு -நிலை குலைவதற்கு வழி வகுத்தன. இவ்விதம் புதிய சக்திகள் தோன்றிய போதிலும் தந்திவர்மனும் அவனுடைய மகன் மூன்றாம் நந்திவர்மனும் பல்லவப் பேரரசைத் தங்களுடைய சீரிய முயற்சிகளால் பாதுகாத்தனர்.

பல்லவ இராட்டிரகூட உறவு

தந்திவர்மனுடைய ஆட்சிக்காலத்தில் இரண்டாம் கோவிந்தன், துருவன், மூன்றாம் கோவிந்தன் என்ற இராட்டிரகூட அரசர்கள் ஆட்சிபுரிந்தனர். இவர்களுள் இரண்டாம் கோவிந்தனுக்கும் துருவனுக்குமிடையே அரசுரிமைப் பற்றிய போராட்டம் நிகழ்ந்தது. அப்போராட்டத்தில் தந்திவர்மன் துருவனுக்கெதிராக இரண்டாம் கோவிந்தனுக்கு உதவி செய்தனன். இதை வெறுத்த துருவன் தந்திவர்மனுடைய காஞ்சிபுரத்தின் மீது படையெடுத்துத் தந்திவர்மனைத் தோற்கடித்தான். தந்திவர்மனும் தனது பெரிய யானைப்படையைத் துருவனுக்கு அளித்துக் கப்பம் கட்டுவதற்கும் ஒப்புக்கொண்டான் என்று இரதனபுரப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன.[121] துருவனுக்குப் பிறகு அவனுடைய மூன்றாவது மகன் கோவிந்தன் இராட்டிரகூட அரசனானான். இந்த மூன்றாவது கோவிந்தனுடைய கல்வெட்டு ஒன்று கி.பி. 804-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நான்காம் தேதியோடு கூடியதாகும். இக்கல்வெட்டுத் துங்கபத்திரை நதிக்கரையில் உள்ள இராமேசுவர தீர்த்தம் என்னுமிடத்தில் தங்கி ஒரு சைவப்பெரியாருக்குக் கோவிந்தன் தானம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. காஞ்சிபுரத்து அரசனாகிய தண்டிகன் என்பவனைத் தோற்கடித்துக் கப்பம் பெற்ற செய்தியும் அதில் கூறப்பெற்றுள்ளது. அமோகவர்சன் எனும் மற்றொரு இராட்டிகூட அரசனுடைய சஞ்சன் செப்பேடுகள்,

வளர்ந்து வந்த பல்லவ மன்னனின் ஆட்சியை மூன்றாம் கோவிந்தன் உலர்ந்து போகும்படிச் செய்தான் என்று கூறுகின்றன. மூன்றாம் கோவிந்தனுடைய நேசரிகா (NESERIKA) செப்பேடு, பல்ல்வ மன்னன்மீது அவன் பெற்ற வெற்றியைக் குறிப்பிடுகிறது. ஆகையால் தந்திவர்மன் ஆட்சியில் இருமுறை இராட்டிரகூட மன்னர்கள் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்துக் கப்பம் கட்டும்படிச் செய்தனர் எனக் கொள்ளலாம்.[122] ஆனால் தந்திவர்மப் பல்லவன் இராட்டிரகூடர்களுக்கு அடங்கிக் கப்பம் கட்டிய நிலைமை சிறிது காலத்திற்குத்தான் நீடித்தது. கி.பி. 814-ஆம் ஆண்டில் மூன்றாம் கோவிந்தன் இறந்த பிறகு தோன்றிய அரசியல் குழப்பத்தில் தந்திவர்மப் பல்லவன் மீண்டும் தன்னாட்சியுரிமையை அடைந்தான் எனக் கொள்ளலாம்.[123]

தந்திவர்மனும் பொத்தப்பிச் சோழரும்

இராட்டிரகூடர்களுடைய பிடியினின்றும் தங்களை விலக்கிக் கொண்ட போதிலும் ஏறத்தாழ 28 ஆண்டுகளுக்குத் தெலுங்குச் சோழர் மரபைச் சேர்ந்த சிரீகண்டசோழனுக்கு தந்திவர்மன் அடிபணிய வேண்டிவந்ததென்று டி.வி. மகாலிங்கம் அவர்கள் கூறுவர்.[124] தந்திவர்மனுடைய 21-ஆம் ஆட்சியாண்டிலிருந்து 49-ஆம் ஆட்சியாண்டு வரையில் சோழ மண்டலத்தில் எந்த இடத்திலிருந்தும் அவனுடைய கல்வெட்டுகளோ, செப்பேடுகளோ கிடைக்கவில்லை. இதற்கு ஏற்ற காரணங்கள் எவை என்று இப்பொழுது நாம் ஆராயவேண்டும். காஞ்சி என்ற வைகுந்தப்பெருமாள் கோயிலில் அபிமான சித்தி ஒரு பல்லவ அரசனுடைய கல்வெட்டு காணப்பெறுகின்றது. அபிமானன் என்பவன் பல்லவ மரபைச் சேர்ந்தவன் என்றும் சித்தி என்னும் பட்டம் தெலுங்குச் சோழ மன்னர்களால் வழங்கப்பெற்றதென்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.[125] பாண்டிய மன்னன் பராந்தக வீரநாராயணன் சிரீமாற சிரீவல்லபனுடைய மகனும் இரண்டாம் வரகுணனுடைய தம்பியுமாவான்.

இவ்வரசனுடைய தளவாய்ப்புரச் செப்பேடுகள் பராந்தக வீரநாராயணுடைய தாய் பொத்தப்பி நாட்டு அரசன் சிரீகண்ட சோழனுடைய மகள் அக்கள நிம்மதி எனக் கூறுகின்றன.[126] மேற்கூறப்பெற்ற சிரீசோழனுக்குத் தொண்டையர்கோன், மயிலையர்கோன் என்ற பட்டங்களும் காணப்படுகின்றன. மத்தமாமலை வளவன் என்றும் கூறப்பெறுகிறான். இந்தப் பொத்தப்பிச் சோழ மன்னன் தந்திவர்மனுடைய சமகாலத்தவன் ஆவான். தந்திவர்மனுடைய 21 - ஆம் ஆட்சியாண்டிலிருந்து 49 - ஆம் ஆண்டு வரையில் அவனுடைய கல்வெட்டுகளோ, செப்பேடுகளோ தொண்டை மண்டலத்திலும் பல்லவ நாட்டின் மற்ற பகுதிகளிலும் காணப் பெறாமைக்குக் காரணம் இந்த சிரீ கண்ட சோழன், பாண்டிய சிரீமாற சிரீவல்லபனுடைய உதவி பெற்று பல்லவ நாட்டைத் தந்திவர்மனிடமிருந்து கைப்பற்றித் தன்னாட்சியை நிலைபெறச் செய்திருக்கலாம் என்று டி.வி. மகாலிங்கம் கூறுகின்றார்.[127] ஆகையால் இராட்டிரகூட மன்னர்களுடைய பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்ட தந்திவர்மன் மதுராந்தக பொத்தப்பி சோழ மன்னன் சிரீகண்ட சோழனுக்கு அடிபணிய வேண்டி வந்தது. அவன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றித் தனக்கு அடிபணிந்த அபிமானன் என்ற பல்லவ மரபைச் சேர்ந்த ஒருவனுக்குச் சித்தி என்ற பட்டப்பெயரை அளித்துத் தன்னுடைய ஆளுநராக நியமித்திருந்தான். இந்த அபிமான சித்தியின் கல்வெட்டுகள் வைகுந்தப்பெருமாள் கோயிலில் காணப்பெறுகின்றன. அவன் ஏறத்தாழ 28 ஆண்டுகளுக்குக் காஞ்சிபுரத்தில் அரசு புரிந்திருக்கலாம்.

தந்திவர்மனுடைய 49 - ஆம் ஆட்சியாண்டில் அவனுடைய மகன் மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாற்றுப் போரில் இந்த சிரீகண்ட சோழனையும் அவனுடைய பழநிகராளியாகிய அபிமானசித்தியையும் அவர்களுக்கு உதவியாக வந்த பாண்டியப் படைகளையும் வென்று மீண்டும்

தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டும் என்று அறிஞர் மகாலிங்கம் கூறியுள்ளார்.[128]

பல்லவர் பாண்டியர் உறவு

தெள்ளாற்றுப்போர் நடப்பதற்கு முன் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனும் பல்லவ நாட்டின் மீது படையெடுத்ததாகத் தெரிகிறது. இந்தப் பாண்டிய மன்னன் தகடூர் நாட்டு அதியமானை எதிர்த்தபொழுது, தந்திவர்மன் அதியமானுக்கு உதவி செய்தான். வரகுணன் அதியமானையும் அவனுக்கு உதவியாக வந்த பல்லவப் படைகளையும் வென்று வாகை சூடினான். இவ்வரசன் தனது 16-ஆம் ஆட்சியாண்டில் தொண்டை மண்டலத்தில் பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள அரசூரில் போர்ப் பாசறையில் இருந்த பொழுது அம்பா சமுத்திரப் பட்டயத்தை அளித்துள்ளான். வடக்கிலிருந்து இராட்டிரகூடர்களுடைய படையெடுப்புகளும் ரேநாட்டுச் சோழன் சிரீகண்டனுடைய தொல்லைகளும் தெற்கிலிருந்து பாண்டியர்களுடைய படையெடுப்பும் தந்திவர்மப் பல்லவனுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுத்தன எனக் கூறலாம்.

தந்திவர்மனுடைய நலம் தரும் செயல்கள்

திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் உள்ள ஆலம் பாக்கத்தில் 'மாற்பிடுகு ஏரி' என்ற ஏரியையும், கைலாச நாதர் கோயில் என்ற ஆலயத்தையும் அமைத்துள்ளான். புதுக்கோட்டைப் பகுதியில் 'வாலி ஏரி' என்ற நீர் நிலையை இவனுடைய சிற்றரசனான வாலிவடுகன் என்பான் அமைத்துள்ளான். உய்யக்கொண்டான் திருமலைக் கருகில் வயிரமேகன் வாய்க்கால் என்னும் நீர்ப்பாசன வாய்க்கால் தந்திவர்மன் காலத்தில் வெட்டப்பட்டது. திருவெள்ளறை என்னும் சிற்றூரில் காணப்பெறும் 'ஸ்வஸ்திக்' வடிவக் கிணறும் தந்திவர்மனுடைய ஆட்சிக்காலத்தில் கம்பன் அரையன் என்ற அரசாங்க அதிகாரியால் அமைக்கப்

பெற்றது. ஆலம்பாக்கத்திற்குத் தந்திவர்ம மங்கலம் எனத் தன்னுடைய பெயரிட்டு அதைப் பிரமதேயமாக வழங்கினான். திருமங்கையாழ்வார் இவன் காலத்திலும் இருந்ததாகக் கருதப்பெறுகிறது. தந்திவர்மனது 16-ஆம் ஆட்சியாண்டில் குவாவன் சாத்தன் என்ற விடேல் விடுகு முத்தரையன் திருவாலத்தூர் மலையைக் கோயிலாகக் குடைந்து இறைவனை எழுந்தருளச் செய்தான். காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயிலுக்குப் பொற்குடம் ஒன்றும் வழங்கப்பெற்றது.[129]

மூன்றாம் நந்திவர்மன் கி.பி. 846 — 869

மூன்றாம் நந்திவர்மனுடைய வரலாற்றை எழுதுவதற்குப் பல ஆதாரங்களும், சான்றுகளும் உள்ளன.

(1) இவன் காலத்துச் செப்பேடுகளில் சிறந்தது வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் ஆகும். இது பொன்னேரிக் கூற்றத்து திருக்காட்டுப்பள்ளியில் உள்ள சிவன் கோயிலுக்கு ஒரு சிற்றூரைத் தானமாகக் கொடுத்த செய்தியைக் கூறுவது.

(2) நந்திவர்மனுடைய பத்தாம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்ற திருநெய்த்தானக் கல்வெட்டு இவனுடைய தெள்ளாற்று வெற்றியைக் கூறுகிறது.

(3) செந்தலைக் கல்வெட்டு இவ்வரசனுடைய 12-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது.

(4) திருவல்லம் கல்வெட்டு இவனது 17-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது.

(5) காஞ்சி உலகளந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டு 18-ஆம் ஆட்சியாண்டில் வெளிவந்தது.

(6) கோயிலடிக்கருகில் உள்ள திருச்சின்னம்பூண்டிக் கல்வெட்டும் மேற்கூறப்பெற்ற ஆட்சியாண்டில் வெளி வந்தது.

(7) திருப்பராய்த்துறை ஆதிமூலேசுவரர் கோயில் சுவரில் உள்ள கல்வெட்டு இவனது 22-ஆம் ஆட்சியாண்டைக் குறிக்கிறது.

(8) குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் கல்வெட்டு நந்திவர்மனது 23-ஆம் ஆட்சியாண்டைக் குறிப்பிடுகிறது.[130]

தமிழிலக்கியச் சான்றுகளில் நந்திக்கலம்பகமும், பாரதவெண்பாவும் முக்கியமானவையாகும். நந்திக்கலம் பகத்தில் இவனது தெள்ளாற்றுப் போர் புகழ்ந்து கூறப் பட்டுள்ளது. நந்திவர்மன் சந்திரகுலத்தைச் சேர்ந்தவன். சேர, சோழ, பாண்டியர்களைத் தெள்ளாறு, வெறியலூர், பழையாறு மற்றும் வெள்ளாறு முதலிய இடங்களில் நடந்த போர்களில் முறியடித்தவன். மூவேந்தர்களிடமும் வடபுலத் தரசர்களிடமும் திறை பெற்றவன். 'அவனி நாராயணன்' என்ற பட்டத்தை உடையவன் என்று புகழ்கின்றது. பாரதவெண்பாவில் 'தெள்ளாற்றில் வென்றோன்' என்று கூறப்பட்டுள்ளது.[131]

நந்திக்கலம்பகத்தின் பாட்டுடைத்தலைவனும் தெள் ளாற்றில் வெற்றி கொண்டவனும் மூன்றாம் நந்திவர்மனே என்னும் கொள்கையை மறுத்துச் சில வரலாற்று அறிஞர்கள் எழுதியுள்ளனர். டி.என். சுப்பிரமணியம் என்பாரும் கே.ஆர். சீனிவாசன் என்பாரும் நந்திக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவனும் தெள்ளாற்றுப் போரில் வெற்றி பெற்றவனும் மூன்றாம் நந்திவர்மன் அல்லன். அவ்வரசன் நான்காம் நந்திவர்மன் ஆவான் எனக் கூறுவர்.[132] அங்ஙனம் கூறுவதற்கு மூன்று காரணங்களைக் காட்டி விளக்குவர்.

(1) திருச்சி மாவட்டம் திருத்தவத்துறை என்னும் இலால்குடிக்கு அருகில் உள்ள சென்னி வாய்க்கால் என்னும்

இடத்தில் கிடைத்த வீரக்கல் கல்வெட்டு ஒன்று நந்திவர்மனுடைய 21-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்டது. அக்கல்வெட்டில் பராந்தகபுரத்திலுள்ள அரிந்திகை ஈசுவரம் என்னும் கோயில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடைய எழுத்தமைதி பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். சோழ மன்னன் பராந்தகனும் அவனுடைய மகன் அரிஞ்சயனும் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். ஆகையால் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பெற்ற நந்திவர்மன், பராந்தக சோழன் காலமாகிய கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இருந்த நான்காம் நந்திவர்மனாக இருத்தல் வேண்டும்.

(2) இரண்டாவதாகத் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவைகாவூரில் கிடைத்த கல்வெட்டில் நந்திவர்ம ராசனுடைய 22-வது ஆட்சியாண்டு குறிப்பிடப் பெற்றுள்ளது. இந்த திருவைகாவூருக்குத் ‘திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம்’ என்ற பெயர் வழங்கியுள்ளது. திரிபுவனமாதேவி என்ற பெயர் பராந்தக சோழனுடைய மனைவியைக் குறிக்கும். ஆகையால், இக்கல்வெட்டில் குறிப்பிடப்பெற்ற நந்திவர்மன் பராந்தக சோழனுடைய சமகாலத்தவன் ஆவன்.

(3) தெள்ளாற்றுப் போரில் வெற்றிபெற்ற நந்திவர்மன் மூன்றாம் நந்திவர்மனாக இருந்தால் அவனுடைய மகன் நிருபதுங்கவர்மனுடைய பாகூர்ச் செப்பேடுகளில் தன் தந்தைப் பெற்ற தெள்ளாற்று வெற்றியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், அவ்விதம் குறிப்பு ஒன்றும்[133] பாகூர்ச் செப்பேடுகளில் காணப்பெறவில்லை.

மேற்கூறப்பெற்ற வரலாற்று வாதங்களைப் பின் வருமாறு மறுத்துக் கூறலாம். திருச்சின்னம்பூண்டியில் மூன்றாம் நந்திவர்மனுடைய 18-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் சென்னி வாய்க்காலில் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் திருப்பராய்த்துறையில் 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் கிடைத்ததின் மர்மம் யாது? சென்னிவாய்க்கால்

கல்வெட்டு நான்காம் நந்திவர்மனுடையதாக இருந்தால் திருப்பராய்த்துறைக் கல்வெட்டு எங்ஙனம் மூன்றாம் நந்திவர்மனுடைய இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாக இருக்கக்கூடும்? தெள்ளாற்றில் வெற்றிபெற்ற நந்திவர்மனுடைய ஆட்சியின் தொடக்கத்தைக் கி.பி. 925 என்று டி.என். சுப்பிரமணியமும் கி.பி. 964 என்று கே.ஆர். சீனிவாசனும் உறுதியாகக் கூறுவர். திருச்சின்னம்பூண்டி, சென்னிவாய்க்கால், திருப்பராயத் துறை ஆகிய மூன்றிடங் களில் கிடைத்த கல்வெட்டுகள் கி.பி. 943, 946, 947 ஆகிய ஆண்டுகளில் பொறிக்கப்பெற்றவையாகும். இவ்வாண்டு களில் பராந்தக சோழனுடைய ஆட்சிச் சோழ நாட்டில் நிலைபெற்றிருந்தது. அச்சமயத்தில் நான்காம் நந்திவர்மன் என்ற ஒரு பல்லவ அரசன் இருந்தான் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. சென்னிவாய்க்கால் கல்வெட்டின் எழுத்தமைதியை மட்டும் கருதி அது கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று கூறமுடியாது.

அரிந்திகை ஈசுவரம், பராந்தகபுரம் என்ற இரண்டு சொற்களைக் கொண்டு பராந்தக சோழன் காலத்திலும் அவனுடைய மகன் அரிஞ்சயன் காலத்திலும் சென்னிவாய்க் கால் கல்வெட்டு எழுதப்பெற்றது என்று கூறமுடியாது. கல்வெட்டில் அரிந்திகை ஈசுவரம் என்று உள்ளதே தவிர அரிஞ்சயன் ஈசுவரம் என்று இல்லை. அரிந்திகை என்னும் பெயர் பெண்பால் பெயராகும்; அரிஞ்சயன் என்பது ஆண்பால் பெயராகும். பராந்தகன் என்ற பெயரை சோழ மன்னர்கள் மாத்திரம் கொள்ளவில்லை; பாண்டியர்களும் கொண்டுள்ளனர். கொடும்பாளூர் சிற்றரசன் விடேல்விடுகு இளங்கோ வேளினுடைய மனைவிக்கும் பூதிஅரிந்திகை என்ற பெயர் வழங்கியுள்ளது. சென்னிவாய்க்கால் கல்வெட்டில் கூறப்பெற்ற அரிந்திகை ஈசுவரம், பராந்தகபுரம் என்ற இடங்கள் சோழ பராந்தகனுக்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே வாழ்ந்த பராந்தக பாண்டியன் காலத்தில் அமைக்கப் பெற்றிருக்கலாம்.[134]

மூன்றாம் நந்திவர்மனுடைய இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்ற திருவைகாவூர் கல்வெட்டில் கூறப்பெற்ற திரிபுவனமாதேவி சதுர்வேதிமங்கலம் பராந்தக சோழன் காலத்தில்தான் தோன்றியதெனக் கூறமுடியாது. திரிபுவனமாதேவி என்ற பெயர் சோழர்குல அரசியர்களுக்கு மாத்திரம் வழங்கியது எனக் கொள்ளுதல் பொருத்தமற்றது. பல்லவ மரபைச் சேர்ந்த அரசிகளுக்கும் இளவரசிகளுக்கும் இப்பெயர் வழங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக திரிபுவன மர்தேவியார் என்ற பல்லவ இளவரசி தஞ்சை மாவட்டம் திருப்பழனத்தில் உள்ள திருக்கோயிலுக்கு ஒரு நந்தாவிளக்கு வைப்பதற்கு 20 கழஞ்சு பொன் தானம் அளித்துள்ளாள். திருச்சோற்றுத்துறை கல்வெட்டு ஒன்றில் மேற்கூறப்பெற்ற திரிபுவனமாதேவியார் காடுவெட்டியார் தமர்மேட்டியாரின் மகள் எனக் கூறப்பட்டுள்ளது. ஆகையால்,திருவைகாவூருக்கு வழங்கிய திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் பராந்தக சோழன் காலத்தில் ஏற்பட்டது என்பது பொருந்தாது.[135]

மூன்றாவதாகப் பல்லவ நிருபதுங்கனுடைய பாகூர்ச் செப்பேடுகளில் அவனுடைய தந்தையாகிய மூன்றாம் நந்திவர்மனுடைய தெள்ளாற்று வெற்றி கூறப்பெறவில்லை என்பதாகும். பாகூர்ச் செப்பேடுகளில் நிருபதுங்கனுடைய முன்னோர்களின் வெற்றிகள் அல்லது தோல்விகள் முழுவதும் கூறப்பெறவில்லை. பல்லவ மன்னர்களுடைய செப்பேடுகளில் சில அரசர்களுடைய வெற்றிகள் பற்றி வழக்கமான முறையில் கூறப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக கூரம், கசாக்குடி, வேலூர்ப்பாளையம் முதலிய செப்பேடுகளில் முதலாம் நரசிம்மவர்மன் வாதாபிகொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது. ஆனால்,இச்செய்தி ரேயூரு (Reyuru) உன்ன குரவபாளையம் ஆகிய செப்பேடுகளில் காணப் பெறவில்லை. முதலாம் பரமேசுவரவர்மன் சாளுக்கிய முதலாம் விக்கிரமாதித்தன் மீது கொண்ட வெற்றி கூரம் செப்பேடுகளிலும் கைலாசநாதர் கோயில் கல்வெட்டிலும்

கூறப்பெற்றுள்ள போதிலும், உன்ன குரவபாளையம் செப்பேடுகளில் காணப்படவில்லை. ஆகையால் பாகூர்ச் செப்பேடுகளில் மூன்றாம் நந்திவர்மனுடைய தெள்ளாற்றுப் போர் கூறப்பெறவில்லையாதலால் நிருபதுங்கன் மூன்றாம் நந்திவர்மனுடைய மகன் அன்று என்றோ தெள்ளாற்றுப் போர் நான்காம் நந்திவர்மன் ஆட்சியில் நடைபெற்றிருக்க வேண்டும் என்றோ வாதிட முடியாது.[136] ஆகையால் நான்காம் நந்திவர்மன் என்ற அரசன் ஒருவன் இருந்தான் என்பது ஒப்புக்கொள்ளத்தக்கது அன்று.[137]

தெள்ளாற்றுப் போரின் காலம்

மூன்றாம் நந்திவர்மனின் பத்தாவது ஆட்சியாண்டு முதல் வெளியிடப்பட்ட எல்லாக் கல்வெட்டுகளிலும் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்றே குறிக்கப்படுகிறான். ஆனால், இவனது 6-ஆம் ஆட்சியாண்டில் வெளிவந்த வேலூர்ப்பாளையம் செப்பேட்டில் இச்செய்தி காணப் பெறவில்லை. ஆகையால், நந்திவர்மனது ஆறாம் ஆட்சியாண்டிற்குப் பின்னரும் பத்தாம் ஆட்சியாண்டிற்கு முன்னும் தெள்ளாற்றுப் போர் நடந்திருக்க வேண்டுமென மா.இராசமாணிக்கம் கூறுகிறார்.[138] தெள்ளாற்றுப்போர் எந்த ஆண்டில் நடந்தது? நந்திவர்மன் எந்த அரசர்களைப் போரில் வென்றான் என்பதைப்பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. தன்னுடைய தந்தை தந்திவர்மனுடைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் இளவரசனாக இருந்த மூன்றாம் நந்திவர்மன் தன்னுடைய சிற்றரசர்களின் உதவி கொண்டு பாண்டிய மன்னன் சிரீமாற சிரீவல்லபனையும் அவனுடைய மாமனாகிய சிரீகண்டனையும் தெள்ளாற்றுப் போரில் தோற்கடித்தான் என்று கே.ஏ. நீலகண்டசாத்திரி கூறுகிறார்.[139] டிவி.மகாலிங்கம் தந்திவர்மனுடைய 21-ஆம் ஆட்சியாண்டிலிருந்து 49-ஆம் ஆட்சியாண்டு வரையில் சோழ நாட்டில் அவனுடைய கல்வெட்டுகள் காணப்பெறவில்லை.

வேலூர்ப்பாளையச் செப்பேடுகளில் 20-வது பாடலில் "உறை நீக்கிய வாளினால், கொல்லப்பட்ட யானையின் மத்தகத்திலிருந்து வெளிவந்து சிதறிய முத்துகளின் காந்தியில் வெளுத்து நகைப்பதைப்போல் விளங்கிய போர்க்களத்தில் தன்னுடைய தோள் வலிமையால் சத்துருக்களைக் கொன்று வேறு யாராலும் அடையமுடியாத (பல்லவ) இராச்சியத்தின் திருவையடைந்தான்" என்று எழுதப்பட்டுள்ளது[140] நந்திவர்மனுடைய 21-ஆம் ஆட்சியாண்டிற்குப் பிறகு தெலுங்குச் சோழனாகிய சிரீகண்ட சோழன் என்பான் பல்லவ நாட்டைக் கைப்பற்றித் தன்னுடைய ஆளுநராகிய அபிமானசித்தி என்பவனுக்குப் பல்லவ நாட்டை அளித்திருந்தான். தெலுங்கு அல்லது பொத்தப்பி சோழனாகிய சிரீகண்டனுக்குத் தொண்டையர்கோன், பல்லவர்கோன் என்ற பட்டங்களும் வழங்கியுள்ளன. சிரீகண்ட சோழனுடைய மகள் அக்கள நிம்மிடி, பாண்டிய அரசன் சிரீமாற சிரீவல்லபனுடைய மனைவியாவாள். ஆகையால், பாண்டிய மன்னவனுக்கும் சிரீகண்ட சோழனுக்கும் நெருங்கிய உறவு நிலைபெற்றிருந்தது. சிரீகண்ட சோழனுக்குத் தொண்டைநாடு பரவிய சோழன், பல்யானைக் கோக்கண்டனாயின இராசகேசரி வர்மன் என்ற விருதுப்பெயர்கள் வழங்கின. கி.பி. 845-ஆம் ஆண்டில் இந்த சிரீகண்ட சோழனையும் அவனுக்கு உதவியாக இருந்த அபிமான சித்தியையும், சிரீகண்டசோழனுடைய மாமனாராகிய பாண்டிய மன்னன், சிரீமாற சிரீ வல்லபனையும் தெள்ளாற்றுப் போரில் வென்று பல்லவ இராச்சியத்தில் தன் தந்தையாகிய நந்திவர்மனை மீண்டும் அரசுப் பதவியை பெறும்படிச் செய்தான் என்று கூறுவர். டி.வி. மகாலிங்கம் தெள்ளாற்றுப்போர் கி.பி. 845-இல் நடந்திருக்கலாம் என்று கருதுவர்[141]

தெள்ளாற்றுப் போரைப் பற்றி நந்திக்கலம்பகத்திலும் பாரத வெண்பாவிலும் பலகுறிப்புகள் காணப்பெறுகின்றன. நந்திவர்மன் தெள்ளாற்றில் பெரும் வெற்றி பெற்றமையால் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்ற விருதுப்பெயரும்

வழங்கலாயிற்று. இப்போரில் தோற்றோடிய பகைவர்களைத் துரத்திச் சென்று கடம்பூர், வெறியலூர், வெள்ளாறு, நள்ளாறு, பழையாறை முதலிய இடங்களில் வெற்றி பெற்றான் என நந்திக்கலம்பகம் என்னும் நூலிலிருந்து அறிகிறோம்.[142] பாரத வெண்பாவில் நந்திவர்மனுடைய பெருமை பின் வருமாறு விவரிக்கப்பட்டுளது.

> வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
> உண்மையால் பாராள் உரிமையால் - திண்மையால்
> தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானொடு
> யார் வேந்தர் ஏற்பார் எதிர்.[143]

குருக்கோட்டைப் போர்

நந்திக்கலம்பகத்தில் நான்கு செய்யுட்களில் மூன்றாம் நந்திவர்மன் குருக்கோட்டை என்னுமிடத்தில் தன்னுடைய பகைவர்களை வென்று வாகை சூடியதாகக் கூறப்பெற்றுள்ளது.[144] இந்தக் குருக்கோட்டை பெல்லாரி மாவட்டத்தில் துங்கபத்திரை ஆற்றுக்கரையில் உள்ள குருகோடு என்பதாகும் என்று கல்வெட்டு அறிஞர்கள் கூறுவர்.[145] அங்குள்ள மலை மீது அழகிய கோட்டையும் சாளுக்கியர் காலத்து கோயில்களும் அழிந்த நிலையில் இருக்கக் காண்கிறோம்.[146] இக்கோட்டையில் ஆட்சிபுரிந்த சிற்றரசன் இராட்டிரகூட மன்னன் அமோகவர்சனுக்கு அடங்காது கலகம் செய்திருக்க வேண்டும். இராட்டிரகூட மன்னனுடைய மகள் சங்கா என்ற இளவரசியை மூன்றாம் நந்திவர்மன் மணந்து கொண்டமையால் தன் மாமனுக்கு உதவியாகக் குருக்கோட்டைச் சிற்றரசன்மீது படையெடுத்துச் சென்று அக்கோட்டையை நந்திவர்மன் பிடித்திருக்கக்கூடும்.

மூன்றாம் நந்திவர்மன் காடவர்கோன் கழற்சிங்கனா?

சி. மீனாட்சியின் கருத்தை ஆதரித்து மா. இராசமாணிக்கமும் பெரிய புராணத்தில் தனியடியார் அறுபத்தி மூவரில் ஒருவரான காடவர்கோன் கழற்சிங்கனே மூன்றாம்

நந்திவர்மன் என்று கூறியுள்ளார்.[147] திருத் தொண்டத் தொகையைப் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் மூன்றாம் நந்திவர்மனுடைய காலத்தில் வாழ்ந்தவரென்றும் அவருடைய 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்' என்னும் சொற்றொடரில் சுந்தரர், மூன்றாம் நந்திவர்மனையே கழற்சிங்கன் எனக் கூறினர் என்றும் சாதிப்பர். ஆனால் தி.வை. சதாசிவப் பண்டாரத்தாரும், கே.கே. பிள்ளையும் சுந்தர மூர்த்தி நாயனார் தொகுத்துரைத்த நாயன்மார்களில் காடவர் கோன் சுழற்சிங்கன் என்னும் பெயர், இராச சிம்மனைக் குறிக்குமேயன்றி நந்திவர்மனைக் குறிக்காது என்றும் கூறுவர் இராசசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலில் வானொலி கேட்ட வரலாறும், பூசலார் நாயனார் வரலாறும் தொடர்புடையனவாகும். பூசலார் நாயனார், சுந்தரமூர்த்திகள், இராசசிம்மன் இம்மூவரும் ஒரே காலத்தவர் என்பது, காக்கின்ற பெருமான் என்று நிகழ்கால இடைநிலையாகிய <u>கின்ற</u> என்ற சொல்லே வலியுறுத்தும் எனக் கூறுவர்.[148]

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் சமகாலத்தவர் ஆவர். இவ்விருவருக்கும் பிற்பட்டவர் சுந்தரர். ஏனெனில், 'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தரும் நாவினுக்கரையனும் சொல்லியவே சொல்வதை ஏத்துகப்பானை' என்று தனக்கு முற்பட்ட இருவரையும் குறிப்பிட்டுள்ளார். அவருடைய திருத் தொண்டத்தொகையில் மாணிக்கவாசகர் பெயர் இல்லாமை யால் பெரிய புராணத்திலும் இடம்பெறவில்லை. ஆதலால், மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்கள் மூவருக்கும் பிற்பட்டவர் என்பது விளங்குகிறது. மாணிக்கவாசகர் வரகுணபாண்டிய மன்னன் காலத்தில் வாழ்ந்தவர் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுவர். இரண்டாம் வரகுணன் கி.பி. 865 - 885 வரை அரசாண்டவன் என கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் கூறுவர்.[149] நீலகண்டசாத்திரியாரும் அவரைப் பின்பற்றி என். சுப்பிரமணியமும் மூன்றாம் நந்திவர்மன் கி.பி.

846 முதல் 869 வரை ஆட்சிபுரிந்தான் எனக் கூறியுள்ளார்.[150] இக்காலத்தை டி.வி. மகாலிங்கமும் ஒப்புக்கொண்டுள்ளார். மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் சுந்தரர் இருந்தார் எனக் கொண்டால் அவருடைய காலம் மாணிக்கவாசகருடைய காலத்திற்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டதாகும். ஆகவே, சுந்தரருடைய திருத்தொண்டத்தொகையில் கூறப்பெற்ற காடவர்கோன் கழற்சிங்கன் இராசசிம்ம பல்லவன் என்பதே யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வரலாற்று உண்மை யாகும்.[151]

நந்திவர்மன் பேரரசன்

இம்மன்னன் பேரரசன் என்பதை நந்திக் கலம்பகம் பலவாறு புகழ்ந்து கூறுகிறது. மூவேந்தரும் வடபுலத்தரசரும் திறை தந்தனர். காவிரிப்பூம்பட்டினம் இவனது ஆட்சிக்குப்பட்டிருந்தது. பொதுவின்றி ஆண்ட பொலம்பூண் பல்லவன், செங்கோல் அரசன், தண்செங்கோல் நந்தி தனிக்குடையவன், தமிழ்த் தென்றல் புகுந்துலவும் தண் சோணாடன் என்னும் சொற்றொடர்கள் நந்திவர்மனுடைய பேரரசுப் பெருமையைக் குறிப்பனவாகும்.[152] இப்பேரரச னுடைய மனைவியருள் இருவரே செப்பேடுகளில் குறிப்பிடப்பெற்றுள்ளனர். அவருள் இராட்டிரகூட அரசன் அமோக வர்சநிருபதுங்கன் மகளான சங்கா ஒருத்தியாவள். இவளுடைய பெருமையை நிருபதுங்கனுடைய பாகூர்ச் செப்பேடுகள் புகழ்ந்து கூறியுள்ளன. "சூரன் என்ற அசுரனைக் கொன்ற மகாவிட்டுணுவின் தேவியான இலக்குமியைப்போல இராட்டிரகூட குலத்தில் பிறந்த சங்கா என்ற பெயர் கொண்ட மெல்லியலாள் நந்திவர்மனுடைய தேவியாவள். இவள் பூமியைப் போன்ற பொறுமை கொண்டவளும் குடி மக்களால் தாயைப்போல் நேசிக்கப்பட்டவளும் ஆவள். இலக்குமி தேவியே மானிடவுருவில் வந்தது போன்று விளங்கினாள்.[153] மற்றொரு மனைவி அடிகள் கண்டன் மாறம் பாவையார். இவ்வம்மையார் 75 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து சிறந்த

சிவநேயச் செல்வியாகத் திகழ்ந்து பல கோயில் திருப்பணிகளைச் செய்துள்ளார்.[154]

நந்திவர்மன் காலத்து அறப்பணிகள்

இப்பேரரசன் பல சிற்றூர்களைத் தேவதானமாகவும், திருவிடையாட்டங்களாகவும் கொடுத்துள்ளான். செங்கை அண்ணா மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் உள்ள சிவன் கோயிலுக்கு அவ்வூரைத் தேவதானமாக கொடுத்தான். தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநாகேசுவரத்தைக் குமர மார்த்தாண்ட புரம் எனப் பெயரிட்டு அவ்வூரை அங்குள்ள கோயிலுக்குத் தானமாக அளித்துள்ளான். திருச்சிராப்பள்ளிக்கு அடுத்து திருக்கற்குடி என்னும் ஊரில் உள்ள நிலங்களைப் பிரம்மதேயமாகப் பல அந்தணர்களுக்கு அளித்துள்ளான். மாறம் பாவையர் என்ற அரசி தஞ்சையை அடுத்துள்ள நியமம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலுக்குப் பல தானங்களைச் செய்துள்ளாள். அம்பேத்கார் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள காவிரிப்பாக்கம் என்ற ஊருக்கு அவனி நாராயணச்சதுர்வேதிமங்கலம் எனப் பெயரிட்டு அந்தணர் களுக்குப் பிரம்மதேயமாக அளித்துள்ளான்.

நந்திவர்மனுக்கு அடங்கிய சிற்றரசர்கள் பலர் பல தானங்களைச் செய்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோயிலில் திருவாதிரை நாளில் நூறு பேருக்கு உணவளிக்க வழுவூரான் என்பவன் அரிசி தானம் செய்துள்ளான். மற்றொருவன் திருநெய்த்தானம் சிவன் கோயிலில் நந்தா விளக்கிற்காகப் பொன் அளித்துள்ளான். செந்தலை சுந்தரேசுவரர் கோயிலுக்கும் திருவல்லம் கோயிலுக்கும் பல சிற்றூர்கள் தேவதானமாக விடப் பட்டுள்ளன.[155] அவற்றின் வருமானத்திலிருந்து திருப்பதி கங்கள் ஓதுவார்க்கு ஊதியம் அளிக்கப்பட்டது. தென்னார்க் காடு மாவட்டத்தில் உள்ள கிளியனூர் விட்டுணு கோயிலும் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள பள்ளிகொண்டா சிவன்

கோயிலின் முகமண்டபமும் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பெற்றன.

தாய்லாந்து என வழங்கும் சயாம் நாட்டிலுள்ள தாக்குவா-பா (Takua-Pa) என்னுமிடத்தில் கிடைத்த தமிழ்மொழிக் கல்வெட்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்பெறுகிறது. அக்கல்வெட்டில் 'அவனி நாரணம்' என்ற நீர் நிலையைத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கூர்வேள் என்பான் அமைத்து மணிக் கிராமத்தார் என்ற வணிகக் குழுவினரின் பாதுகாப்பில் வைத்தான் என்று கூறப்பெற்றுள்ளது. ஆகையால்,மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் தமிழ் நாட்டிற்கும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே வாணிகத் தொடர்பு இருந்ததெனக் கூறலாம். நந்திக் கலம்பகத்தில் ஆட்குலாம் கடற்படை அவனிநாரணன்[156] "நுரைவெண்டிரை நாற்கடற்கு ஒரு நாயகன்"[157] என்று மூன்றாம் நந்திவர்மன் புகழப்பெற்றுள்ளான். மேலும் தொண்டை நாட்டின் கிழக்குக் கடற்கரையில் உள்ள மல்லை (மாமல்லபுரம்) மயிலை (மயிலாப்பூர்) முதலிய துறைமுகங்களும் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றால் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் தரைப்படையோடு, கடற்படையும் இருந்தன என உணரலாம்.

நிருபதுங்கவர்மனும் (865-906)
அபராசிதவர்மனும் (கி.பி. 870-890)

தெள்ளாறு எறிந்த நந்திவர்மனுக்குச் சங்கா, மாறம்பாவை என்ற இரு மனைவியர்கள் இருந்தனர் என்பதை முன்னரே நாம் அறிந்தோம். சங்கா என்ற அரசிக்கு நிருபதுங்கவர்மன், கம்பவர்மன் ஆகிய இரு மக்களும் மாறம்பாவைக்கு அபராசிதன் என்ற மகனும் இருந்தனர் என ஆராய்ச்சியாளர் கூறுவர்.[158] அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ள வேலஞ்சேரி செப்புப் பட்டயத்தில் கம்பவர்மனின் மகன் அபராசிதன் என்பது தெரியவருகிறது. திருப்புறம்பயம்

என்னும் இடத்தில் நடந்த போரில் அபராசிதவர்மன் கங்கர், சோழர் முதலியவர்களுடைய உதவி பெற்று நிருபதுங்கனை வென்று பல்லவ நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது. திருப்புறம்பயத்தில் நடந்த போர் கி.பி. 885இல் நடந்ததென்று நீலகண்ட சாத்திரியார் கூறுவர். ஆனால் டி.வி. மகாலிங்கம் அவர்கள் கி.பி. 895-இல் நடந்ததென்று எழுதியுள்ளார்[159] நிருபதுங்கனுடைய வரலாற்றை அறிவதற்கு அவனுடைய எட்டாவது ஆட்சியாண்டில் வரையப்பெற்ற பாகூர்ச் செப்பேடுகள் மிக்கத் துணைபுரிகின்றன. அவனுடைய இரண்டாவது ஆட்சியாண்டிலிருந்து 41-வது ஆட்சியாண்டு வரையில் உள்ள காலத்திற்குச் சான்றுகளாக எந்தவிதக் கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டம் திருச்சின்னம்பூண்டியில் நிருபதுங்கனுடைய 22-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஆண்டு, மாதம், திதி, நட்சத்திரம் முதலிய கூறுகளைக் கொண்டு கி.பி. 845-ஆம் ஆண்டில் நிருபதுங்கன் பட்டம் பெற்றிருக்க வேண்டுமெனக் கருதப்பட்டது.[160] ஆனால்,மேற்கூறப்பெற்ற வானவியல் கூறுகளைக் கொண்டு, கி.பி. 891-ஆம் ஆண்டு எனக் கொண்டு, இந்த ஆண்டிலிருந்து 22-ஐக் கழித்தால் 869 எனக்கொள்ளலாம். இவ்வாண்டே மூன்றாம் நந்திவர்மனுடைய ஆட்சியின் இறுதியாண்டாகும். ஆகவே, மூன்றாம் நந்திவர்மனுக்குப் பிறகு நிருபதுங்கவர்மன் கி.பி. 869-இல் பட்டம் ஏற்றிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.[161]

பாகூர்ச் செப்பேடுகள் நிருபதுங்கனுடைய வீரச் செயல்களைப் பின்வருமாறு இரண்டு பாடல்களில் தொகுத்துக் கூறுகிறது. "யாருடைய அருளால் முன்னர் பாண்டியனால் சேனை வெற்றிபெற்றதோ அந்த அரசனாகிய நெருப்பு அரிசில் ஆற்றின் மறுகரையில் எதிரிகளின் கூட்டத்தை எரித்தது. சிறுவனாயினும் பூமியின் அதிபதியான இவன், நிருபதுங்கன் என்ற புகழை எய்தினான். அந்தப் புகழ்

பூமியில் மட்டுமல்லாமல் இராமனைப்போல் வேறு உலகத்திலும் எட்டிப் பரவியது[162] என்று தெரிவிக்கின்றது.

மேற்கூறப்பெற்ற பாடல்களில் மூன்று முக்கிய வரலாற்றுச் செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

(1) பாண்டிய மன்னன் ஒருவனுக்கு நிருபதுங்கன் படைகளைக் கொடுத்து உதவி செய்துள்ளான்.

(2) அரிசில் ஆற்றங்கரையில் தன்னை எதிர்த்த பகைவர்கள் மீது வெற்றி கொண்டான்.

(3) இராமபிரானுடைய புகழ் இலங்கையில் பரவியது போல் இவனுடைய புகழும் அந்நாட்டில் பரவியது.

1. இலங்கை நாட்டு வரலாற்று நூலாகிய மகாவமிசத்தில் முதலாம் சேனனுடைய ஆட்சிக் காலத்தில் பாண்டிய மன்னன் ஒருவன் இலங்கையின்மீது படையெடுத்தான். அப்பொழுது நடந்த போரில் தோல்வியுற்ற முதலாம் சேனன் தன் நாட்டை விட்டு ஓடி மலயமாகாணத்தில் ஒளிந்து கொண்டான் என்று கூறுகிறது. முதலாம் சேனனுடைய சமகாலத்துப் பாண்டிய அரசன் சிரீமாற சிரீவல்லபன் ஆவன். பெரியசின்னமனூர்ச் செப்பேடுகள் இப்பாண்டிய மன்னன் இலங்கை நாட்டரசன் மீது படையெடுத்தாகக் கூறுகிறது.[163] முதலாம் சேனனுக்குப் பிறகு அரசு புரிந்த இரண்டாம் சேனன் தனக்கு முந்திய ஆட்சியில் இலங்கையின் மீது படையெடுத்த பாண்டிய மன்னனுக்குப் பாடம் கற்பிக்க எண்ணி பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கத் திட்டமிட்டான்.

பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் தறுவாயில் பாண்டிய மன்னனால் துன்புறுத்தப்பெற்ற மாயா பாண்டியன் என்ற இளவரசன் பாண்டிய அரசுரிமை தனதே என்றும் தனக்கு இரண்டாம் சேனன் உதவி செய்து தன்னைப் பாண்டிய அரியணையில்

அமர்த்த வேண்டுமென்று கூறிக்கொண்டு இலங்கைக்கு வந்து சேர்ந்தனன். அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கி இரண்டாம் சேனன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத் தனன். இப்படையெழுச்சியின் பயனாக இலங்கை அரசனுக்குப் பெரும் வெற்றி எய்தியது. தோல்வியுற்ற பாண்டியன் போர்க்களத்தை விட்டு ஓடிப் பின்னர் இறந்தனன். தன்னடிபணிந்த நாட்டிற்கு மாயா பாண்டியன் அரசனாக்கப்பெற்றான். இலங்கை அரசன் இரண்டாம் சேனன் 'மதுராதுனன்' என்னும் பட்டத்தையும் மேற் கொண்டான். இவ்விதமாக இரண்டாம் சேனன் பாண்டிய அரசன்மீது பெற்ற வெற்றி பல கல்வெட்டுகளில் கூறப்பெற் றுள்ளது. பிற்காலத்தில் சோழ மன்னர்கள் பாண்டிய நாட்டில் பெற்ற வெற்றிகளைக் கூறும் 'மதுரைகொண்ட' 'மதுராந் தகன்' என்ற விருதுப்பெயர்களைப் போல் இலங்கை மன்னன் இரண்டாம் சேனன் 'மதுராதுனன்' என்ற பட்டத்தை மேற்கொண்டனன்.[164] இலங்கை நாட்டு வரலாற்று நூலாகிய மகாவமிசத்தில் மேற்கண்டவாறு கூறப்பெற்ற செய்திகள் உண்மையான வரலாற்றுச் செய்திகளாக இருக்கக்கூடும் என்று டி.வி. மகாலிங்கம் கூறுவர்.[165]

இரண்டாம் சேனன் கி.பி. 851-இல் பட்டம் ஏற்றனன். அவனுடைய ஒன்பதாம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 860-இல் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்திருக்க வேண்டும். இந்த ஆண்டுப் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனுடைய காலம் ஆகும். இந்த ஆண்டில் பாண்டிய அரசன் சிரீமாற சிரீ வல்லபன், போரில் தோற்று மரணமடைந்தான். சிரீ மாற சிரீவல்லபனுடைய மகனாகிய இரண்டாம் வரகுணன் கி.பி. 862-இல் அரசுரிமை எய்தினான் என்று ஐவர்மலைக் கல்வெட்டாலும் மற்ற சான்றுகளாலும் நாம் அறிகிறோம்.[166]

கி.பி. 859-862 ஆகிய மூன்றாண்டு இடைவெளியில் மாயா பாண்டியன் என்பான் மதுரையில் அரசு புரிந்திருக்கக்கூடும். சிரீமாற சிரீவல்லபனுடைய மகனாகிய

இரண்டாம் வரகுணன் மூன்றாம் நந்திவர்மனுடைய உதவியை நாடினான் போலும். அப்பொழுது இளவரசனாக இருந்த நிருபதுங்கன் இரண்டாம் வரகுணனுக்குப் படை உதவி செய்து மதுரையில் ஆட்சிபுரியும்படி செய்திருக்கலாம். இச்செய்தியே பாகூர்ச் செப்பேடுகளில் "எவனுடைய அருளினால் முன்னாளில் பாண்டியனின் சேனை வெற்றி பெற்றதோ அந்த அரசனாகிய நெருப்பு" என்று நிருபதுங்கன் புகழப்பட்டுள்ளான்.[167]

2. இரண்டாவதாக அரிசில் ஆற்றங்கரையில் தன்னுடைய எதிரிகளின்மீது நிருபதுங்கவர்மன் வெற்றி கொண்டதைப் பற்றிப் பாகூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. அந்த எதிரிகள் யாவர் என்று அறிவது முக்கியமாகும். வடக்கே இராட்டிரகூடர்களும் தெற்கே பாண்டியர்களும் நிருபதுங்கவர்மனுக்கு நண்பர்களாக இருந்தனர். அரிசில் ஆறு காவிரியின் கிளை ஆறுகளில் ஒன்று. அது சோழ நாட்டில் காரைக்காலுக்கு அருகில் கடலோடு கலக்கிறது. ஆகையால், சோழ நாட்டின் முக்கியமான நடுப்பகுதியில் இப்போர் நடந்திருக்க வேண்டும். பழையாறையில் இருந்த விசயாலயன், ஆதித்தன் ஆகிய இரு சோழத் தலைவர்களும் கொடும்பாளூர்ச் சிற்றரசனுடைய உதவியோடு அரிசிலாற்றங்கரையில் போர் தொடுத்தனர் போலும். கி.பி. 876-ஆம் ஆண்டில் புதுக்கோட்டைக்கருகில் உள்ள தென் வெள்ளாறு வரையில் உள்ள நிலப்பகுதிகள் நிருபதுங்கனுடைய ஆட்சியில் இருந்தன. நிருபதுங்கவர்மன் பாண்டியர்களுடைய உதவிகொண்டு சோழர்களைத் தோற்கடித்ததாகத் தெரிகிறது. ஆனால், கி.பி. 878-ஆம் ஆண்டில் ஆதித்த சோழன் மீண்டும் தன்னுடைய ஆட்சியை நிலை பெறச் செய்தான்.[168]

நாளடைவில், நிருபதுங்கவர்மனுக்கும் அபராசித வர்மனுக்கும் பல்லவ நாட்டின் அரசுரிமை பற்றிப் பெரியதொரு போராட்டம் தோன்றியது. நிருபதுங்கனுக்குப் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன் உதவி செய்தான்.

அபராசிதவர்மனுக்குக் கங்க மன்னன் முதலாம் பிருதிவி பதியும், ஆதித்த சோழனும் உதவி செய்ய முன்வந்தனர். இத்தருணத்தில் சோழர் குலத்தின் தலைவனாகிய விசயாலயன் தஞ்சாவூர், புதுக்கோட்டைப் பகுதிகளை முத்தரையர்களிடம் இருந்து வென்று தஞ்சையில் தன்னுடைய ஆட்சியை நிலை நிறுத்தினான். பாண்டியர், பல்லவர் ஆகிய இரு அரசுகளின் பிடியினின்றும் தன்னை விலக்கிக் கொண்டு சோழர் அரசை மேன்மையுறச் செய்ய விரும்பினான். இவ்விருப்பம் நிறைவேறுவதற்கு ஏற்ற காலமும், சூழ்நிலையும் விசயாலய னுடைய மகன் ஆதித்தனுடைய ஆட்சியில் தோன்றியது. ஆதித்தன் நிருபதுங்கனுக்கு எதிராக அபராசித பல்லவனுடன் சேர்ந்தான். நிருபதுங்கனுடைய தூண்டுதலின் பேரில் இரண்டாம் வரகுணன் சோழ நாட்டின் மீது படையெடுத்துத் தஞ்சை மாவட்டத்தில் இடவை என்னும் இடத்தையும் அரசூர் என்னும் இடத்தையும் தன்வயப் படுத்தினான். தன்னுடைய பேரரசனான நிருபதுங்கனுக்கு உதவியாகச் சோழ நாட்டில் படைவீடு அமைத்துத் தங்கியிருந்தான்.[169] முன் கூறியது போல அபராசிதன் கங்க அரசன் முதலாம் பிருதிவி பதியையும் ஆதித்த சோழனையும் தன்னுடைய நண்பர் களாகக் கொண்டு இரு கட்சியினரும் போரில் ஈடுபட்டனர்.

திருப்புறம்பியப் போர்

கி.பி. 885 அல்லது 895-இல் நிகழ்ந்த திருப்புறம்பயப் போர் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். இப்போரில் நிருபதுங்கனும் அபராசிதவர்மனும் பல்லவ நாட்டின் அரச பதவிக்குப் போட்டியிட்டு அதில் நிருபதுங்கன் தோல்வியுற்று அபராசிதவர்மன் வெற்றி பெற்றான். இப்போர் கி.பி. 885-ஆம் ஆண்டில் நடந்ததா அல்லது கி.பி. 895-இல் நடந்ததா என்பது பற்றி வரலாற்று அறிஞர்கள் இடையே கருத்து வேற்றுமையுள்ளது. கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் இது உத்தேசமாக கி.பி. 885-ஆம் ஆண்டில் நடந்திருக்கலாம் எனக் கருதுகிறார்.[170]

டி.வி.மகாலிங்கம் இப்போர் கி.பி. 895-இல் நடந்திருக்க லாமெனக் கல்வெட்டுகள் துணை கொண்டு ஆய்ந்து கூறியுள்ளார்.[171] இப்போரில் நிருபதுங்கனும் அவனுடைய நண்பன் இரண்டாம் வரகுணனும் தோல்வியுற்றனர். அபராசிதவர்மன் வெற்றி பெற்றுப் பல்லவ நாட்டின் அரசனான்.

நிருபதுங்கனுடைய கல்வெட்டுகளிலிருந்து அவனுக்கு இரு மனைவிமார்கள் இருந்தனர் என்று தெளிவாகிறது. எட்டாவது ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்ற ஒரு செப்பேட்டின்படி பானுமதியின் மகளாகிய பிருதிவி மாணிக்கம் என்ற பெண்மணி அவனுடைய முதல் மனைவியாகக் கருதப் பெறுகிறாள்.[172] நிருபதுங்கனுடைய 15-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று திருத்தணி வட்டத்தில் உள்ள திருவாலங்காட்டில் கிடைத்துள்ளது. அக்கல்வெட்டில் பிருதிவிமாணிக்கம் என்னும் முகத்தல் அளவைக் கருவியினால் எண்ணெய் அளந்து ஒரு கோயிலுக்கு விளக்கெரிப்பதற்குக் கொடுக்கப்பட்ட செய்தி கூறப்பெற்றுள்ளது. இந்த முகத்தல் அளவைக் கருவிக்கு இவ்வரசியின் பெயர் இடப்பட்டிருக்க வேண்டும். உக்கல் என்னும் இடத்தில் அமைந்துள்ள விண்ணகரத்திற்குப் பிருதிவி மாணிக்க விட்டுணு கிருகம் என்ற பெயர் வழங்கியது. கும்பகோணம் வட்டம் திருக்கோடிக்காகோயிலில் நிருபதுங்க னுடைய 22-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டில் வீரமகாதேவியார் என்ற மற்றொரு அரசியின் பெயர் காணப் பெறுகிறது. இவ்வம்மையார், இரணியகர்ப்பம், துலாபாரம் முதலிய தானங்களைச் செய்து, தன்னிறை யான 50 கழஞ்சு பொன்னைத் திருக்கோடிக்கா கோயிலுக்குத் தானம் செய்துள்ளாள். திருத்தணி வட்டம் திருவாலங் காட்டில் நிருபதுங்கனுடைய 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலிருந்து காடவன் மகாதேவியார் என்ற அரசி எட்டுக் கழஞ்சு தங்கத்தைக் கோயிலுக்குத் தானம் செய்ததாக

அறிகிறோம். இவ்வரசி மேற்கூறப்பெற்ற பெண்மணிகளில் ஒருத்தியாக இருக்கக்கூடும்.[173]

புதுக்கோட்டையைச் சார்ந்த நார்த்தாமலைக் கல்வெட்டு ஒன்றின்படி சாத்தன் பழியிலி என்ற முத்தரையச் சிற்றரசன் பழியிலீச்சுரம் என்ற குடைவரைக் கோயிலை அமைத்துள்ளான். அக்கோயிலில் ஒரு முகமண்டபத்தையும் பலிபீடத்தையும், நந்தி, நந்தி மண்டபம் முதலியவற்றையும், சாத்தன் பழியிலியின் மகளாகிய பழியிலி சிறிய நங்கை அமைத்துள்ளாள்.[174] நந்தி நிறைமதி என்பார் ஒருவர் சூரம் கைலாச நாதர் கோயிலுக்குத் திருவமுதிற்காக 11 கழஞ்சு பொன் கொடுத்துள்ளார்.[175]

அபராசிதவர்மன் (கி.பி. 870 – 890)

வடார்க்காடு மாவட்டம் ஆம்பூரில் இரண்டு நடுகல் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.பி. 895-இல் எழுதப் பெற்ற இக்கல்வெட்டுகள் நிருபதுங்கவர்மனின் 26-ஆம் ஆட்சியாண்டில் ஏற்பட்டவையாகும். இக்கல்வெட்டுகள் நுளம்பப் பல்லவத் தலைவனும் பிருதிவி கங்கரையர் என்ற கங்கத் தலைவனும் அபராசித பல்லவனுக்காக நிருப்துங்கனுடன் போரிட்டதாகக் கூறுகின்றன. கங்க அரசனாகிய இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரம் செப்பேடுகளில் 'திருப்புறம்பியத்தில் நடந்த போரில் தன்னுடைய உயிரைத் துச்சமாக நினைத்துப் போர் முனையில் நின்று அபராசிதன் வெற்றிபெற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தினால் வரகுண பாண்டியனைத் தோற்கடித்துத் தானும் வீரசுவர்க்கமடைந்தான்'' என்று கூறப்பட்டுள்ளது.[176] இதுகாறும், வரலாற்று ஆசிரியர்கள் திருப்புறம்பியப் போர் கி.பி. 880-ஆம் ஆண்டில் நடந்ததாகக் கருதி வந்தனர். ஆனால், ஆம்பூரில் கிடைத்துள்ள நடுகல் கல்வெட்டுகளின்படியும் இரண்டாம் பிருதிவிபதியின் தக்கோலம் கல்வெட்டின்படியும் இப்போர் கி.பி. 895-இல் நடந்தது என்னும் உண்மை உறுதியாகிறது.[177] இப்போருக்குப்

பிறகும் அவனுடைய 41-ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னும் நிருபதுங்கனைப் பற்றிய செய்திகளை நம்மால் அறிய முடியவில்லை. கி.பி. 895-இல் திருப்புறம்பியத்தில் வெற்றி பெற்ற அபராசிதன், அவ்வாண்டிலேயே பல்லவ அரசனாக முடிசூடி கி.பி. 913-ஆம் ஆண்டு வரையில் பதினெட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்ததாகத் தெரிகிறது.[178] ஆனால் அவனுடைய கல்வெட்டுகள் தொண்டைமண்டலத்தின் வடபகுதியில் மட்டும் காணப்பெறுகின்றன. இம்மண்டலத்தின் தென்பகுதியில் ஆதித்த சோழனுடைய ஆட்சியாண்டையும் ஆதிக்கத்தையும் குறிக்கின்ற கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. திருவொற்றியூரில் கிடைத்த இரண்டு கல்வெட்டுகளின்படி பாணர் குலத் தலைவர்கள் அவனுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர் என்பது புலனாகின்றது.[179] சோழன் வீரராசேந்திரனுடைய கன்னியாகுமரி கல்வெட்டிலும், இராசேந்திர சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலும் ஆதித்த சோழன் அபராசிதப் பல்லவனைக் கொன்றான் என்றும் அவனோடு போரிட்டான் என்றும் முறையே கூறப்பெற்றுள்ளன. ஆதித்த சோழனுக்குப் பிறகு அரசுரிமை எய்திய பராந்தக சோழன் கி.பி. 907-இல் அரியணையில் அமர்ந்தான் எனத் தெரிகிறது.[180] தந்தையும் மகனும் சேர்ந்து ஆட்சி செலுத்தும் வழக்கம் சோழப் பேரரசில் நிலைபெற்றிருந்தது. தில்லைத் திருக்கோயிலுக்குப் பொன் வேய்ந்ததும், கொங்கு நாட்டை வென்றதும், அபராசித பல்லவனை வென்றதும் ஆகிய வரலாற்றுச் செய்திகள், ஆதித்தன், பராந்தகன் ஆகிய இரு மன்னர்களுக்கும் உரியதாக இலக்கியங்களும், கல்வெட்டுகளும் கூறுகின்றன. ஆகவே, அபராசிதனுடைய இறுதியாண்டாகிய கி.பி. 910-ஆம் ஆண்டே அவனைக் கொன்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய ஆதித்த சோழனுடைய இறுதியாண்டாகவும் இருக்கக்கூடும்.

திருத்தணியில் கருப்புக் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பெற்ற வீரட்டானேசுவரர் கோயில் அபராசித

மன்னன் காலத்திய கட்டடக் கலைப்பாணிக்கு எடுத்துக் காட்டாகும். இக்கோயிலில் பொறிக்கப்பெற்றிருக்கும் சிறந்த தமிழ் வெண்பாவின் செய்யுள் அமைதியைக் கொண்டு இவ்வரசனுக்கு வெண்பாக்கள் இயற்றும் திறமையிருந்ததெனக் கூறுவர். அபராசிதனுடைய கோயில்களும் மற்ற கட்டடங்களும் பல்லவப் பேரரசின் வீழ்ச்சியின் அறிகுறிகளாகும் எனக் கலை வல்லுநர்கள் கூறுவர். அபராசிதனை வென்று, தொண்டை மண்டலத்தின் வடபகுதியைச சோழப் பேரரசின் ஒரு பகுதியாக்கிய ஆதித்தன் காலம் முதல் பல்லவப் பேரரசு சோழப் பேரரசாக மாறி, பல்லவர்களுடைய கலை, இலக்கியப் பணிகளைப் பேணித் தமிழ்நாட்டின் வரலாற்றை மிளிரச் செய்ததெனக் கூறலாம்.

முடிவுரை

தென்னிந்திய வரலாற்றிலும் குறிப்பாகத் தமிழக வரலாற்றிலும் பல்லவர்களுடைய எழுச்சியும் வீழ்ச்சியும் மேன்மை பொருந்திய செய்திகளாகும். வட இந்தியாவில் குப்த மன்னர்கள் தங்களுடைய பேரரசை அமைத்த சமகாலத்தில் பல்லவப் பேரரசு தமிழகத்தில் அமைவுற்றது. ஆயினும் குப்தப் பேரரசை விட இஃது நீண்டகாலத்திற்கு நிலை பெற்றிருந்தது. தக்காணத்திலிருந்து சாளுக்கியருடைய எதிர்ப்பையும், தெற்கிலிருந்து பாண்டியர்களுடைய பகைமையையும் சமாளித்து அருங்கலைகளாகிய குடவரைக் கோயில்களையும், சிற்பம், சித்திரம் முதலியவைகளையும் பல்லவ மன்னர்கள் ஆதரித்தனர். சங்க காலத்திய தமிழ் அரச மரபினைச் சேராத பல்லவர்கள், தங்களுடைய ஆட்சியின் பிற்பகுதியில் தமிழ் மொழியையும் ஆதரித்துள்ளனர். இறைநெறி இயக்கம் சைவ, வைணவ சமயங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய பெரியோர்களுடைய தீவிர பக்தியினாலும் இலக்கியச் செல்வங்களாலும், பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தோன்றி இன்றும் நிலவிவருகின்றன பல்லவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தோன்றிய அயல் நாட்டுறவுகள் தமிழக

வாணிகத்தையும் பண்பாட்டையும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவும்படிச் செய்தன.

முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இராசசிம்மன் முதலிய பல்லவப் பேரரசர்களுடைய கலைச் செல்வங்களை இன்றும் நாம் கண்டு களிப்புறுகிறோம். பல்லவப் பேரரசு மறைந்துவிட்ட போதிலும், அப்பேரரசின் ஆட்சிக்காலத்தில் வளர்ச்சியுற்ற உயர் சமயங்களாகிய சைவமும் வைணவமும், அச்சமயங்களின் இருப்பிடமாகக் கருதப்பெறும் திருக்கோயில்களும் இன்றும் நிலைபெற் றுள்ளன. தமிழகம் உள்ளவரையில் பல்லவர்களுடைய பெயர் மறைந்து விடாது. பேரரசுகளும் நாகரிகங்களும் உயர் சமயங்களின் அடிப்படையில் தோன்றுகின்றன என்ற அர்னால்டு டாயின்பியின் கூற்று பல்லவ வரலாற்றினால் தெளிவுறுகிறது. தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரமும், மாமல்லபுரமும் மற்றும் பல சிற்றூர்களில் காணப்பெறும் குடைவரைக் கோயில்களும் கட்டுமானக் கோயில்களும் பல்லவருடைய ஆட்சியின் மேன்மையை உலகத்திற்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

ஆ பாண்டியர் வரலாறு

தென்னிந்திய வரலாற்றினை முழுமையாக அறிந்து கொள்வதற்கும் இந்திய வரலாற்றின் இன்றியமையாப் பகுதி யினைக் கண்டு கொள்வதற்கும் சங்ககாலத்தின் முன்னர்த் தொடங்கி கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீண்டு நிலவிய பாண்டியரின் வரலாற்றினை அறிந்து கொள்ளல் அவசியமாகின்றது. அப்பாண்டியர் வரலாற்றில் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை உள்ள ஆட்சிப் பகுதியானது சிறப்பாக மதிக்கத்தக்க ஒரு வரலாற்றுப் பகுதியாக விளங்குகின்றது. அவ்வரலாற்றினை இன்று நாம் அறிந்து கொள்வதற்குத் துணை புரிவதாகச் செப்பேட்டுச் சாசனங்களும் கல்வெட்டுகளும் இலக்கியங் களும் கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டில் செந்தமிழ்நாடு என்று சிறப்பாக அழைக்கப்படும் நாடு பாண்டிய நாடேயாகும். "தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாடு" என்றார் மாணிக்கவாசகர். "முத்தும் முத்தமிழும் கொழித்த நாடு" எனப் பாண்டிய நாட்டின் பெருமையைப் பறைசாற்றுவார் கம்பர். 'ஆகி இன்னது என்று ஓதுதற்கு அரிய வழுதியின் தொழுகுலம்,' எனப் பேராசிரியர் சுந்தரனார் பாண்டியர் தொல் குலத்தினைப் பாரறியச் செய்வித்தார்.

சங்க காலத்தின் இறுதியில் ஒரு நீண்ட இடையீட்டுக் காலம் நிலவிற்று. அவ்விடையீட்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் களப்பிரர்களின் ஆட்சி நிலவிற்று. கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவ்விருள் மறைந்து ஒரு மறுமலர்ச்சிக் காலம் தொடங்கிற்று. சங்க காலத்துப் பாண்டியரின் வழித்தோன்றலான கடுங்கோன் என்பான் களப்பிரரின் ஆதிக்கத்தினின்றும் நாட்டை மீட்டான். இவன் காலத்தில் பாண்டியர் ஆட்சியானது மீண்டும் புத்துயிர் பெற்றது. இவன் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி முதலாம் பாண்டியப் பேரரசின் எழுச்சிக்கு அடிப்படை அமைத்தான் என்பதைச் செப்பேட்டின் வாயிலாக அறியலாம்.

கடுங்கோன் கி.பி. 575 முதல் 600 வரை

கலி அரசனான களப்பிரனைக் கடுங்கோன் என்னும் அரசன் வெற்றி கொண்டுள்ளான் என வேள்விக்குடி சாசனம் கூறுகின்றது.[1] பல்லவ வேந்தனாகிய சிம்மவிட்டுணுவும் களப்பிரரை முறியடித்துள்ளதாகக் கசாக்குடிச் செப்பேடு கூறுகின்றது.[2] எனவே, இவ்விரு அரசர்களும் சற்றேறக்குறைய ஒரே காலத்து வாழ்ந்த அரசர்களாகக் கருத இடமுள்ளது. பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் கடுங்கோனின் காலத்தைக் கி.பி. 590 முதல் 620 வரை ஆண்டுள்ளான் எனக் கணித்துள்ளார்.[3]

சிறப்பியல்புகள்

இவன் கடைச்சங்கக் காலப் பாண்டியரின் வழித் தோன்றலாவான்; அநீதியை நீக்கி நீதியைத் தழைத்தோங்கச் செய்தான். பல குறுநில மன்னர்களை வென்று அவர்களது நாடுகளைக் கைப்பற்றினான்.[4] இவன் மானம் பேர்த்த தானைத் தலைவன் என்றே புகழப்பட்டுள்ளான். பேர்த்த என்ற சொல்லைப் போர்த்த என்று கொண்டு மானத்தைப் போர்வையாகக் கொண்டுள்ள சேனையைக் கொண்டுள் ளவன் என்றே திருவாளர்கள் மு. இராகவையங்காரும், சதாசிவபண்டாரத்தாரும் பொருள் கொள்கின்றனர். இச்சொல்லின் விளக்கமாகப் பாண்டிய நாட்டுத் தமிழில் காண்போமானால் குறைந்த, போக்கிய, அழித்த, சிதைத்த என்னும் பொருள்களைக் காணலாம். எனவே, மானம் பேர்த்த என்ற சொல்லுக்கு எதிரிகளாகிய களப்பிரரின் பெருமையைச் சிதைத்த சேனையை உடையவன் என்று பொருள் கொள்வதேசிறப்பாகும். மேலும் பேர்த்த என்னும் சொல்லே தளவாய்ப்புரம் செப்பேட்டிலும் கூறப்பட்டுள்ளது.[5] பல்வேறு வேந்தர்களின் நகரங்களை அழித்து அவர்களை வென்றான்.[6] ஆசி என்ற நாட்டில் அடங்கிய திருமங்கலம் என்னும் ஊரை அந்தணர்கள் பன்னிருவருக்குத் தானமாக வழங்கியுள்ளான்[7]. மற்போர்கள் பல புரிந்து திண்ணிய தோள்களைப் பெற்றிருந்தான். கல்வியறிவாளர்கள் அவனது திறத்தினை வியந்து போற்றினர். வீரத்திலும் வெற்றியிலும் அதிக நாட்டத்தினைக் கொண்டிருந்தான்.

இவன் தோற்றுவித்த பாண்டியர் பரம்பரையானது ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் நீடித்துள்ளதென அறிஞர் துப்ராய் கூறுகின்றார்.

மாறவர்மன் அவனி சூளாமணி (கி.பி. 600-620)

கடுங்கோனுக்குப் பிறகு அவனுடைய மகன் அவனி சூளாமணி என்னும் மறுபெயர் கொண்ட மாறவர்மன்

அரியணை யேறினான். இவனைக் குறித்த சிறப்புச் செய்திகள் ஏதும் செப்பேட்டில் இடம் பெறவில்லை. இவன் முதற் பாண்டியர் காலத்தில் மாறவர்மன் என்ற விருதுப் பெயரோடு விளங்கிய முதல் பாண்டிய அரசனாவான். கடல்போன்ற சேனையைப் பெற்றிருந்தான்.[8] அப்படையானது எப்போதும் தயார் நிலையில் இருந்தது எனச் செப்பேடு கூறுகின்றது. இவன் மிக்க செல்வத்தைப் பெற்றிருந்தான். போரில் எதிரிகளை அழிக்கவல்ல மதங்கொண்ட யானைகளை உடையவனாக விளங்கினான். இவனுக்குப் பின்னர் 'மாறவர்மன்' 'சடையவர்மன்' என்ற பட்டங்களை ஒருவர் பின் ஒருவராகப் புனைந்து வந்தனர். இவன் சில ஆண்டுகளே ஆட்சிபுரிந்துள்ளான்.

செழியன் சேந்தன் (சயந்தவர்மன்)
(கி.பி. 620-642)

செழியன்சேந்தன், மாறவர்மன் அவனி சூளாமணியின் மைந்தனாவான். இவன் போரில் மிக்க விருப்பம் கொண்டவனாக விளங்கினான். நெறிமுறை பிறழாமல் ஆட்சி செய்தான்[9]. இவன் வானவன் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டுள்ளான். இதனால், இவன் வானவன் என அழைக்கப்படும் கேரளனை வென்றுள்ளான் என்பதை அறியலாம். செழியன் என்றும் போற்றப்படுவதால் சோழனையும் வென்றான் என்பதனை அறியலாம். பல வேந்தர்களை அடக்கியுள்ளதால் வேந்தர் வேந்தன் எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றான். இவன் விற்போரில் வல்லவனாக விளங்கினான். இவனும் யானைப் படையைக் கொண்டிருந்தான். இவன் தான் பெற்ற வெற்றியினை மலையில் பொறித்துள்ளான் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகின்றது. அவ்வெற்றியின் பிற விவரங்கள் யாதும் குறிக்கப்படவில்லை. அரிசேகரி மாறவர்மனின் தந்தையாகச் செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ள சயந்தவர்மன் இவனே யாவான். சடையன் என்பது சயந்தனுக்குரிய தமிழ்ப் பெயராக உள்ளது. இவனது கல்வெட்டு ஒன்று திருநெல்வேலி

மாவட்டத்திலுள்ள மலையடிக்குறிச்சிக் குகைக்கோயிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[10] அது கலப்புத் தமிழிலும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டு இவ்வரசைப் பற்றிய செய்திகளை நன்கு தருகின்றது. இவன் மாறன்சேந்தன் அல்லது மாறன சேந்தன் என்று குறிக்கப்பட்டுள்ளான். இவன் அங்கு ஒரு குடைவரையொன்றினை அமைத்துள்ளான். மதுரை வையைக்கரையில் மேலும் ஒரு கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. அஃது இச்சேந்தனைப் பற்றியது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆயினும், அது சேந்தனின் மகனான அரிகேசரி மாறவர்மனைப் பற்றியது என்று கருதுவதே பொருத்தமாக உள்ளது.

அக்கல்வெட்டில் அரசன் பெயர் மற்றும் ஆட்சியாண்டு குறிக்கப்பட்டுள்ளது. பாண்டியன் குலமணி பரதீபனாம்......கலி கடந்து செங்கோவடாவி நின்ற கோச்சேற்கள் மற்றைப்பதாவது ராச்ய சம்வத்ரைச் செல்லா நிற்க வைகை சொன் மதகு படுத்தரி சேகரியானென பியரிட்டு....... எனக் குறிப்புள்ளது. இதனைச் சேற்களின் மற்றைப்பதாவது என படித்தால் இதனைச் சேந்தனின் ஐம்பதாவது ஆண்டாகவும்[11] மற்றைப்பதாவது என்பதனை மாறன் ஐம்பதாவது என படித்தால் சேந்தனின் மகன் மாறனின் ஐம்பதாவது ஆண்டாகவும் கொள்ள இடமுண்டு.[12] இதனால், கண்மாய் ஒன்று அரிகேசரியான் என்ற பெயரில் உள்ளதை அக்கல்வெட்டுக் கூறுகின்றது. அக்கல்வெட்டினைச் சேந்தனது கல்வெட்டாகக் கொண்டால் அவன் தன் மகன் அரிகேசரியின் பெயரை வைத்திருத்தல் வேண்டும். அரிகேசரியாலும் அக்கண்மாய்க் கட்டப்பட்டு இருக்கலாம் எனக் கருதவும் இடமளிக்கின்றது.

சிறப்பியல்புகள்

இவன் மங்கலபுரம் என்னும் அழகிய நகரை அமைத்துள்ளான்.[13] இது மதுரை மாவட்டத்தில் உள்ள கோயில்பட்டிக்கு அருகில் உள்ள மங்கலபுரமாக

இருந்திருத்தல் வேண்டும். பல சிற்றரசர்களையும் மாரதர் களையும் வென்றுள்ளான். இரணியகர்ப்பம், துலாபாரம் போன்ற மகாதானங்கள் பலவும் செய்து புகழ் பெற்றவன் என வையைக்கரைக் கல்வெட்டு இவனைப் புகழ்ந்துள்ளது.

ஆட்சிக்காலம்

இவன் கி.பி. 620 முதல் 650 வரையில் ஆட்சிபுரிந் துள்ளான் என்று இரா. நாகசாமி குறிப்பிட்டுள்ளார்.[14] யுவான்சுவாங் காஞ்சியில் தங்கியிருந்தபோது காஞ்சி மக்கள் மதுரையில் பாண்டிய அரசன் ஒருவன் இறந்ததைக் கூறியதாக அறிவித்துள்ளான். அவன் காஞ்சியில் தங்கியிருந்த ஆண்டினை கி.பி. 642-ஆகக் கொண்டு அவ்வாண்டில் இறந்தவனே செழியன் சேந்தன் எனக் கொள்ளலாம். அவனது ஆட்சியின் தொடக்க ஆண்டாக அவனி சூளாமணியின் இறுதி ஆண்டான கி.பி. 620-ஐக் கொள்ளலாம்.

மாறவர்மன் அரிகேசரி (கி.பி. 642-690)

வேள்விக்குடிச் செப்பேட்டில் மாறவர்மன் அரிகேசரி நான்காவதாகக் குறிக்கப்பட்டுள்ளான். சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டில் இவன் சயந்தவர்மனின் மகனாகக் குறிக்கப் பட்டுள்ளான். இவனைத் தமிழ் நூல்கள் கூன்பாண்டிய னென்றும் நெடுமாறன் என்றும் சுந்தரபாண்டியன் என்றும் கூறியுள்ளன. சின்னமனூர்ப் பெரியச் செப்பேட்டில் அரிகேசரி பராந்தகன் என்று குறிக்கப்பட்டுள்ளான். இவனது ஆட்சி கி.பி. 650-இல் தொடங்கி 700 முடிய இருந்ததாக திரு. இரா. நாகசாமி குறிப்பிடுகின்றார்.[15] இவனது ஆட்சியானது கி.பி. 670-இல் தொடர்ந்து 710 வரை நீடித்ததாகத் திரு நீலகண்ட சாத்திரி கூறுகின்றார்.[16] காஞ்சிக்கு வருகை தந்த சீனப் பயணி யுவான்சுவாங் காஞ்சியில் தங்கியிருந்த காலமாகிய கி.பி. 642-ஐ தொடக்கக் காலமாகக் கொண்டு வையைக்கரை கல்வெட்டின்படி இவன் ஐம்பதாண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்ததாகக் கொண்டு

இவனது இறுதியாண்டினைத் தோராயமாக கி.பி. 700 எனக் கொள்ளலாம்.

இவன் சமணனாக இருந்து பின்னர் சைவனானவன் என்பதும் திருஞானசம்பந்தரே இவனைச் சைவனாக்கினார் என்பதும் சைவ சமய வரலாற்றின் புகழ்பெற்ற செய்தியாகும். இவனே சோழர்குலச் செல்வியாகிய மங்கையர்க்கரசியாரை மணந்து கொண்டவனாவான். இவன் மனைவியும் இவன் அமைச்சராக விளங்கிய குலச்சிறையாரும் நாயன்மார்களின் திருக்கூட்டத்தில் இடம் பெற்று விளங்கினர். மங்கையர்க் கரசியாருக்கு மாளி என்ற சிறப்புப் பெயர் உண்டு.

வெற்றிகள்

இவனது காலத்தில் தான் பாண்டிய நாடானது பல முனைகளில் விரிவு பெற்றது. இவன் மற்றவர்க்குப் பழிப்பின்றி வழித்தோன்றினான் என்று புகழப்பட்டுள்ளான்.[17] இதனால் இவன் ஆட்சிக்கு வந்ததை அனைவரும் விரும்பினர் என்பது பெறப்படும். இவன் தனது யானைப் படையைச் செலுத்திப் பாழி என்ற இடத்தில் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றுள்ளான். பாழிப்போரினைப் பாண்டிக் கோவை என்ற நூலில் காணும் செய்திகள் உறுதியளிப் பனவாக உள்ளன. இப்பாழி என்ற இடம் சங்க இலக்கியங்கள் கூறும் செருப்பாழி என்ற இடமாக இருக்கலாம். மற்றும் கடல்போன்ற வில் ஏந்திய பெரிய படையினை நெல்வேலி என்னும் போர்க்களத்தில் தோல்வியுறச் செய்துள்ளான். இச்செய்தியைச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடும் கூறுவதால் மேலும் வலிவு தருவதாக உள்ளது. இந்நெல்வேலி வெற்றியானது மக்கள் மனதில் நீங்காமல் இடம் பெற்றிருக்கச் சுந்தரர் பாடியுள்ள திருத்தொண்டர் தொகையுள் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறனுக்கும் அடியார்க்கும் அடியேன் என்று புகழ் பாடியுள்ளமையால் அறிய முடிகின்றது. நெல்வேலி என்ற ஊர் திருநெல்வேலியாக இருக்கலாம் என்றே பல வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். நெல்வேலியானது

திருநெல்வேலி அன்று எனத் திரு.நீலகண்ட சாத்திரி கூறியுள்ளமை மேலும் ஆராயத்தக்கதாக உள்ளது.

நெல்வேலிப் போரில் தோல்வியுற்றவன் 'வில்லவன்' என்றே சின்னமனூர்ப் பெரிய செப்பேடு கூறுகின்றது.[18] வில்லவன் என்பானைச் சேரனாகக் கொள்ள இயலவில்லை. கேரளனைப் பலமுறையும் வென்றுள்ளான் என வேள்விக்குடிச் செப்பேடு தனியாகக் கூறுகின்றது. எனவே, வில்லவன் என்பானை வல்லவுர் அல்லது வல்லவன் என்பதன் திரிபாகக் கொண்டு அவர்கள் சாளுக்கியர்களேயாவர் எனச் சிலர் கூறியுள்ளனர். இக்கருத்தின்படி சாளுக்கிய விக்கிரமாதித்தியன் பல்லவர்களை வென்று உறையூரில் தங்கிய பிறகு பாண்டிய நாட்டையும் தாக்க முற்பட்டனன். நெடுமாறன் அவர்களுடன் போரிட்டு நெல்வேலி என்ற இடத்தில் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளான் எனக் கருத இடமுண்டு. இதனை உறுதி செய்வதாகப் பெரிய புராணக் குறிப்பான 'சேய்புலத்தேவர்'[19] எனக் கூறுகின்றது. இதனால், அவர்கள் நீண்ட தொலைவிலிருந்து வந்த பகைவர்கள் என்று உறுதி செய்கின்றது. எனவே, நெல்வேலி என்றது பாண்டி நாட்டின் தென்பகுதியில் உள்ள திருநெல்வேலியை அன்று; வடக்கில் புதுக்கோட்டை பகுதியில் அமையப்பெற்ற நெல்வேலி என்ற ஊரே பொருத்தமாக உள்ளது. அப்பகைவர்கள் சாளுக்கியர் என்றே கருதப்படுகிறது. நெடுமாறனிடம் தோல்வியுற்ற சாளுக்கியன் பின்னர் பல்லவவேந்தன் பரமேசுவரனைப் பெருவளநல்லூரில் தோல்வியுறச் செய்துள்ளான். இதனால், சாளுக்கிய விக்கிரமாதித்தனின் தமிழகப் படையெடுப்பு கி.பி. 674-675-இல் நிகழ்ந்திருக்கலாம். போரில் நெடுமாறனுக்குத் துணை புரிந்ததால் அவன் மகன் கோச்சடையன் இரணதீரன் என்ற சிறப்பு விருதினைப் பெற்றான்.

பாண்டிய நாட்டின் தென் பகுதியில் வாழ்ந்த பரதவர் என்னும் இனத்தவர் பாண்டியர் ஆட்சியில் குழப்பம் விளைவிக்க முயன்றனர். சங்க காலம் தொட்டு அவர்கள்

பாண்டியர்க்கு அடங்காது தொல்லைகள் கொடுத்து வந்தனர். சங்க காலப் பாண்டியர்கள் பரதவர்கள் மீது வெற்றி பெற்றுள்ளனர். தென்பாண்டிக் கடற்கரையின் பகுதியில் தொல்லை விளைவித்த பரதவரை அரிகேசரி மாறவர்மன் கடுஞ்செயல்முறைகளால் அடக்கினான்.[20] குறுநாட்டவரை வென்றுள்ளான்[21] இவர்கள் குறுநில மன்னர்களே என்றும் கருத இடமுண்டு. சக்கரமங்கை என்ற இடத்தில் நடந்த போரில் பல்லவர்களை வென்றான்.

புலியூர்ப் போர்

மாறவர்மன் அரிகேசரி கேரளனைப் பலமுறை வென்றுள்ளான். அவன் சுற்றத்தினரையும் யானைப் படையினையும் கைப்பற்றிக் கொண்டான். பின்னர் மதில்களையுடைய புலியூர் என்னும் கடற்கரைப் பட்டினத்தில் கடற்போர் புரிந்து பகற்பொழுது ஒரே நாழிகைக்குள் கைப்பற்றியுள்ளான்.[22] இவ்வூர் கடற்கரைப் பட்டினமாக விளங்கியதால் முக்கியத் துறைமுகமாக விளங்கியிருத்தல் வேண்டும்.

விருதுகளும் வெற்றிக் குறிப்புகளும்

பாண்டிக் கோவையானது இவனது வெற்றியினைப் பரக்கப் பேசுகின்றது என டாக்டர் கே.கே. பிள்ளை கருதுகின்றார்.[23] இதனையே திரு இரா. நாகசாமி அவர்களும் உறுதி செய்கின்றார்.[24] இவன் நெடுமாறன், பூழியன், மீனவன், நேரியர், வானவன், மாறன், அரிகேசரி, பராங்குசன், விகாரி, அதியமான், இரணோதயன், இரவாந்தகன் போன்ற விருதுகளைப் பெற்றிருந்தான்.

இவன் முப்பத்தி நான்கு வெற்றிகளைப் பெற்றிருந்தான். அவற்றில் பதினைந்து வெற்றிகளைச் சேரருக்கு எதிராகப் பெற்றான். சேரர்களை முதன் முதலாக ஆற்றுக்குடி என்ற ஊரில் தோல்வியுறச் செய்தான். பின்னர் பூலந்தை, விழிஞம்,

கடையல், கோட்டாறு, நரையாறு, குலந்தை, வஞ்சி, வட்டாறு ஆகிய இடங்களிலும் சேரர்களை அடக்கி ஒடுக்கியுள்ளான் எனப் பாண்டிக்கோவை கூறுகின்றது. இவனது பிற வெற்றிகளாகப் பாழி செந்நிலம், நெல்வேலி, புளிப்பால் போன்ற இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளான் என மேலும் அந்நூல் கூறுகின்றது.

சமயப் பற்று

இவன் வைதிக சமயங்களுக்குப் பேராதரவு அளித்துள் ளான். அறுபத்து மூன்று சிவனடியார்களுள் ஒருவராகப் போற்றப்படுகின்றான். சைவ சமய வரலாற்றில் கூன்பாண்டியனெனவும் நெடுமாறன் எனவும் சிறப்பிக்கப் பட்டுள்ளான். இவன் முதலில் சமணனாக இருந்து பின்னர் திருஞானசம்பந்தரின் அறிவுரை கேட்டுச் சைவனாக மாறியுள்ளான். இவனது மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவம் தழைக்கப் பாடுபட் டவராவர்.

இவனது ஆட்சிக்காலத் தொடக்கத்தில்தான் சீனப் பயணி யுவான்சுவாங் பாண்டி நாட்டுக்கு வந்திருந்தார். எனவே, தொடக்க ஆட்சியாண்டு கி.பி.642 - ஆக இருத்தல் வேண்டும். வையைக் கரையில் காணப்படும் கல்வெட்டானது ஐம்பதாண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்துள்ளான் என்று கூறுவதால் இவன் கி.பி. 642 முதல் 700 வரை ஆட்சிபுரிந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது. கி.பி.700 - இல் இவனது ஆட்சி முடிவுற்றதும் இவன் மகன் கோச்சடையன் இரணதீரன் முடி புனைந்து தந்தையின் அரசினை மேலும் விரிவாக்க முயற்சிகள் மேற்கொண்டான்.

கோச்சடையன் இரணதீரன் (கி.பி. 700-730)

இவன் கொங்கர் கோமான் என்றும் வானவன் என்றும் செம்பியன் என்றும், மதுர கருநாடகன் என்றும்

போற்றப்பட்டுள்ளான். இதனால் இவன் சேரர், சோழர், கொங்கர், கருநாடக வேந்தன் ஆகியோரை வெற்றி கொண்டுள்ளான் என அறிய முடிகின்றது. அவ்வரசர்கள் யாவரும் இவனுக்குக் கப்பம் செலுத்தியுள்ளனர். இவனிடம் வீரமும் நீதியுணர்வும் மிகுந்திருந்ததென வேள்விக்குடிச் செப்பேடு புகழ்கின்றது.[25] மேற்கூறிய வெற்றிச் செய்திகள் இவனது மேலாண்மை நிலையை நன்குணர்த்துவதாக உள்ளன.

இவன் மாரதர் என்பாரை, மங்கலபுரத்தில் வென்றுள்ளான். மங்கலபுரமென்பது கருநாடக மாநிலத்தில் உள்ள மங்களூரே என்று திரு. நீலகண்ட சாத்திரி கருதுகின்றார். இவ்வூர் தென் கன்னட மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கில் உள்ளது. இங்குதான் கோச்சடையன் இரணதீரன் கொங்கு மன்னனைப் போரில் வென்றுள்ளான் என ஊகிக்கின்றார். ஆனால், திரு பண்டாரத்தார் கோச்சடையன் இரணதீரன் என்ற விருது புனைந்திருப்பதால் இரண இரசிகன் என்ற விருது பெற்ற சாளுக்கிய மன்னனான விக்கிரமாதித்தனைப் போரில் வென்றமையேயாகும் எனக் கூறுகின்றார். இச் செய்தியினைத் தொடர்ந்து அவர் மங்கலபுரம் என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள மங்கலம் என்ற ஊராக இருந்தல் வேண்டும் எனக் கூறுகின்றார். சாளுக்கியர்களே இரண ரசிகன், இரணபராக்கிரமன், இரணராகம் என்னும் சிறப்புப் பெயர்கள் புனைந்திருந்தனர். சாளுக்கிய அரசன் முதலாம் விக்கிரமாதித்தன் தமிழகத்தில் படையெடுப்பை மேற்கொண்டு திருச்சி வரை முன்னேறியபோது திருச்சி மாவட்டத்தில் உள்ள கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள மங்கலம் என்ற ஊரில் இரணதீரன் தோற்கடித்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். எனினும், இக்காலத்தில் கோவில்பட்டிக்கருகாமையில் உள்ள மங்கலபுரமே அக்காலத்திலும் விளங்கியிருக்கக்கூடும் என்று கருதவும் இடமுண்டு. கொங்குநாடு, சேரநாடு, சோழநாடு, சாளுக்கிய

நாடும் கங்கநாடும் இணைந்த கருநாடக நாடு முழுமையும் இவனது ஆட்சி பரவியிருந்தது. இப்போர்களின் மேல் விவரங்கள் அறிய முடியவில்லை. இவன் மகன் அரிகேசரி பராங்குசன் கொங்கு நாட்டுப் பகுதியினை வென்றுள்ளான் என்று கூறப்படுவதால் தந்தை அடைந்துள்ள வெற்றிகளையே அவன் நினைத்து அவ் வெற்றிகளைத் தனக்கு ஆக்கிக் கொண்டுள்ளான் என அறிய முடிகின்றது.

ஆய்வேளிரால் ஏற்பட்ட உள்நாட்டுக் கலக மொன்றினை இரணதீரன் அடக்கிப் பேரரசினை உறுதி யான அடிப்படையில் நிலைநிறுத்த வேண்டி ஆய்வேளிரை மருதூர் என்ற இடத்தில் (திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருப்புடை மருதூராக இருத்தல் வேண்டும்) அக்குறுநில மன்னனை முறியடித்துள்ளான். மற்றும் செங்கோடு, புதன்கோடு ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ள போர்களில் வெற்றி பெற்றுள்ளான். இவைகள் சேரநாட்டுப் பகுதியாகவே காணப்படுகின்றன.

இரணதீரன் காலத்தில்தான் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் மதுரைக்கு வந்தனர். அவர்களை வரவேற்று இரணதீரன் உபசரித்துள்ளான். இவன் பல்லவ இளவரசியை மணந்து கொண்டான். தனது மகளைச் சோழ மன்னனுக்கு மணமுடித்து வைத்தான்.

அரிகேசரி பராங்குச மாறவர்மன் (முதலாம் இராசசிம்மன்) (கி.பி. 730-769)

கோச்சடையன் இரணதீரன் தன் மகனுக்கு இராச சிம்மன் என்றே பெயரிட்டிருந்தான். இவன் பல்லவ இராச சிம்மனின் மகளை மணந்து அவன் வழித்தோன்றியவனுக்குத் தாய்வழிப் பாட்டனின் பெயரை வைத்திருத்தல் வேண்டும் என்கிறார் அறிஞர் துப்ராய். இவனே பாண்டியர் பரம்பரையில் தோன்றிய முதலாம் இராசசிம்மன் ஆவான். இவனது தந்தைவழிப் பாட்டன் பெயரே அரிகேசரி பராங்குச

மாறவர்மன் என்பதாகும். மாறன் என்ற பெயரினை நெடுமாறனென்றும் மாறவர்மன் என்றும் கூறுவதுண்டு. இவன் பாட்டனும் ஞானசம்பந்தரால் பாடப்பட்டவனுமாகிய மாறவர்மன் அரிகேசரியை இவ்வகையாகவே அழைக்கப்பட்டுள்ளமையையும் காணலாம்.

இவனைத் தேர்மாறன்[26] என்று செப்பேடு கூறுகிறது. இதனால், தேரையுடைய மாறன் என்பது பெறப்படுகின்றது.[27] ஆயினும் வேள்விக்குடிச் செய்தியினை "மான் தேர்மாறன்" என திரு மு. இராகவ அய்யங்கார் கூறுகின்றார். மான்தேர் என்பது சிறப்பாகக் கொள்ளக்கூடியது எனக் கருதுகின்றார். இவன் தன் முன்னோரைப் போன்று சைவ சமயத்தவனாயினும் பெரியாழ்வாரின் சீடனாகி வைணவனானான் எனத் திரு மு. இராகவ அய்யங்கார் கூறுகின்றார்.

ஆட்சிக்காலம்

இவனது ஆட்சிக் காலத்தில் வடக்கில் நந்திவர்மன் பல்லவ மன்னனும், சாளுக்கிய வேந்தர்களாகிய இரண்டாம் கீர்த்தி வர்மன் விக்கிரமாதித்தன் ஆகியோரும் கங்கஅரசன் சிரீபுருடனும் சம காலத்தவர்களாக இருந்தனர். எனவே இவனது ஆட்சிக் காலத்தினை எளிதாகக் கணக்கிடலாம். இவனது மகன் நெடுஞ்சடையன் பராந்தகன் கி.பி. 768இல் பட்டத்திற்கு வந்துள்ளான் என்பதனை அவனது திருப்பரங்குன்றம் கல்வெட்டு கூறுவதனால் உறுதியாக அறியலாம். எனவே முதலாம் இராசசிம்மன் கி.பி. 730இல் ஆட்சியினைத் தொடங்கி 768இல் முடித்துள்ளான்.

போர் வெற்றிகள்

இவன் போர் வெற்றிகளுள் சிறந்ததாகக் குறிக்கப் படுவது பல்லவர்களிடம் பெற்ற பெரு வெற்றியேயாகும். சிரீவரமங்கலச் செப்பேட்டில் 'பல்லவ பஞ்சனன்' என்று கூறப்பட்டுள்ளதால் இவன் பல்லவ அரசனை

முறியடித்தவன்[28] என்பதை அறிய முடிகின்றது. இச்செய்தியினை வேள்விக்குடிச் செப்பேடும் உறுதி செய்கின்றது.[29]

பல்லவ நாட்டில் பரமேசுவரனுக்குப் பின்னர் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. அக்காலக் கட்டத்தில்தான் பாண்டியர் பல்லவர் போர் நிகழ்ந்தது. நெடுவயல், கழும்பூர், குறுபடை பள்ளிக்குறிச்சி, பூவயலூர், திருமங்கை பெரியலூர் முதலான ஊர்களில் போர்கள் நடந்தன. இவ்வூர்கள் இருந்த பகுதிகளை அறிய முடியவில்லை. எனினும், இப்போர்களின் முடிவில் பல்லவ மன்னன் புறமுதுகிட்டு ஓடியதாக வேள்விக்குடிச் செப்பேடு கூறுகின்றது.[30]

பாண்டியர் பல்லவர் போரில் பல்லவ மன்னன் புறமுதுகிட்டான் என வேள்விக்குடிச் சேப்பேடு கூறுவதைக் கண்டோம். பாண்டிய நாட்டுக்கும் பல்லவ நாட்டுக்கும் உள்ள இடைப்பட்ட பகுதியினை முத்தரையர் ஆண்டு வந்தனர். அவர்கள் பல்லவருக்குத் துணை நின்று பாண்டியருக்கு எதிராய்ப் போரிட்டனர். போரின் முடிவில் பல்லவ மன்னன் சிறை வைக்கப்பட்டான். அவனைப் பல்லவர் படைத் தலைவனான உதய சந்திரன் தனது போர்த் திறமையால் விடுவித்தான் எனக் கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன.[31] மங்கை என்ற இடத்திலும் நெல்வேலி என்ற இடத்திலும் வெ́ற்றி பெற்றதாக உதயேந்திரம் செப்பேடு கூறுகின்றது. நெல்வேலி, மன்னை ஆகிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் பாண்டியனைப் பல்லவன் தோற்கடித்தான் என்று பரமேசுவர விண்ணகரப் பதிகம் கூறுகின்றது. இச்செய்தியினால் பாண்டியர் சில இடங்களிலும் பல்லவர் சில இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

மழகொங்கு நாட்டை இவன் கைப்பற்றியுள்ளான். அந்நாட்டு மன்னன் இவனுக்குத் தொடர்ந்து திறை செலுத்தி வந்தான். அப்படையெடுப்பின் போது திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் திருப்பதிக்குச் சென்று சிவபெருமானை

வணங்கினான். அக்கோயிலுக்குப் பொற்குவியலும், நவமணிகளும் அளித்துள்ளான். இதனால், அவனது சிவ ஈடுபாடு நன்கு விளங்குகின்றது. பின்னர் கங்கர் நாட்டின் மீது போர் தொடுத்தான். கங்க அரசன் பராங்குசனுடன் மண உறவு செய்து கொள்ள விரும்பினான். தனது மகள் பூசுந்தரியைப் பராங்குசனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். இம்மண உறவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பூர்வ ராசர்களையும் சாளுக்கிய அரசர்களையும் பராங்குசனின் மகாசாமந்தனான மாறங்காரி ஒரு பெரும்படையுடன் சென்று முறியடித்தான். அப்போர் வெம்பை என்ற இடத்தில் நிகழ்ந்தது.

இவன் சிவநெறியில் நின்று சீரிய பக்தனாக விளங்கியவன் என்பதனை முன்னர்க் கூறினோம். வைணவப் பெரியாராகப் பெரியாழ்வார் பராங்குச மாறவர்மன் காலத்திலும் அவன் மகன் நெடுஞ்சடையன் பராந்தகன் காலத்திலும் வாழ்ந்தவர் என திரு மு. இராகவ அய்யங்கார் கருதுகின்றார்.[32] இதனால் இவன் சைவத்தையும் பின்னர் வைணவத்தையும் ஆதரித்துள்ளான் என்பதை அறிய முடிகின்றது. பெரியாழ்வார் பாண்டியனது அவைக்களத்தில் வைணவத்தின் பெருமையை நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றார் என வைணவ இலக்கியம் கூறுகின்றது. ‘பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான்’ என்று பெரியாழ்வாரின் திருமொழித் தனியன் கூறுகின்றது. இதனால், இப் பாண்டியனின் வைணவப் பற்றினை நன்கறிய முடிகின்றது.

சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் ஆன்மீக ஆற்றலை மக்கட்குப் புகட்டி வந்தனர். மாறவர்மன் கொங்கு நாட்டைத் தன்னாட்சிக்கு உட்படுத்திய பின்னர் நொய்யலாறு என வழங்கப்படும் காஞ்சி மாநதியின் அருகில் உள்ள பேரூர் என்ற சிவத் தலத்தில் திருமாலுக்கு ஒரு கோயில் எடுத்துள்ளான்.[33] இதனை பெரியாழ்வாரின் பாடலும் உறுதி செய்கின்றது.[34]

பெரியாழ்வார் தம் காலத்துப் பாண்டியனைக் 'கோன் நெடுமாறன்' என்று கூறியுள்ளார். கோன் நெடுமாறன் என்பான் கோ நெடுமாறன் என்று அறியப்படும் பாண்டிய அரசன் பராந்தக நெடுஞ்செழியனின் தந்தையான அரிகேசரி பராங்குச மாறவர்மனேயாகும்.[35]

மாறவர்மன் காலத்தில் மற்றொரு வைணவப் பெரியாரான நம்மாழ்வார் வாழ்ந்துள்ளார். இவர் வரகுண மங்கையையும் சிரீ வர மங்கலத்தையும் பாடியுள்ளார். இதனால், இவர் மாறவர்மனின் மகனான நெடுஞ்சடையன் காலத்திலும் வாழ்ந்துள்ளார் என்பதை அறியலாம். பராங்குசனுக்கு 'மதுரகன' என்ற சிறப்புப் பெயர் பெற்ற மாறங்காரி உத்தரமந்திரியாக விளங்கினார். இவர் நம்மாழ்வாரின் சீடர் ஆவார். இதன் விளைவாகவே அரிகேசரி பராங்குச நெடுமாறனும் நெடுஞ்சடையப் பராந்தகனும் வைணவத்தைப் பின்பற்றியிருத்தல் வேண்டுமெனவும் திரு. மு. இராகவ அய்யங்கார் கூறுகின்றார். ஆனால், இவனது பேரனான சிரீமாறன் சிரீவல்லபனுக்கும் நெடுமாறன் என்ற பெயர் உண்டு.[36]

பராங்குசன் தமது வாழ்வின் பிற்பகுதியில் திருமாலிருஞ் சோலை திருமாலிடம் அதிக ஈடுபாடு கொண்டிருந்தான். அவ்வூரைச் சிறப்பித்து மூன்று பதிகங்களால் பாடியுள்ள பெரியாழ்வாரை ஞான குருவாகக் கொண்டு வைணவன் ஆனான். ஆயிரக்கணக்கில் பசுக்களைத் தானம் செய்தும் துலாபாரம், மகாதானம் ஆகியனவும் புரிந்துள்ளான். கூடல், வஞ்சி, உறையூர் போன்ற ஊர்களை அழகுறச் செய்ய மாடம் மதில்கள் போன்றவற்றைப் புதுப்பித்தான்.[37] இங்குக் கூடல் என்று கூறப்பட்டது வெஞ்சமாக் கூடலாக இருத்தல் வேண்டும். மதுரையில் மாடம், மதில்கள் முதலியன முன்னரே அமைந்திருத்தல் வேண்டும். உறையூர் வஞ்சியுடன் கூடலையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளதாலும், இந்நகரங்கள் காவிரிக்கரையில் அமைந்துள்ளதாகையாலும் அவற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் அழிவு நேரிட்டதால்

அவ்வூர்களைப் புதுப்பித்திருக்கலாம் என அறிய முடிகின்றது. இவன் நாட்டின் எல்லையானது சேர நாடு, சோழநாடு, கொங்கு நாடு வரையில் பரவியிருந்தது.

நெடுஞ்சடையப் பராந்தகன் (முதலாம் வரகுணன்) (கி.பி. 768-815)

விருதுப் பெயர்கள்

இவன் சிரீவரன், சிரீமனோகரன், சினச் சோழன், புனப் பூழியன், வீதகன் மகன், வீரயளிச்சுருதன், விக்ரமபாரகன், வீரப்புரோகன் மருத்மலன், மான்ய சாசனன் மதூபமன், மர்த்திதவீரன், கிரீஸ்தீரன், சீறிசிந்நரன், கிருபாலயன், கிருதாபதானன், களிப்பகை அண்ட நிஷ்குரன், காரிய தக்ஷிணன், கார்முகமார்த்தன், பராந்தகன், பண்டித வத்சலன், பரிபூர்ணன், பாபபீரு, கடற்படைத்தானை குணக்கிருகியன், கூட நிர்ணயன் நேர்யர்கோன் நெடுஞ்சடையன் என்னும் விருது பெயர்களை உடையவன். இவற்றுள் பெரும்பாலான பெயர்கள் வடமொழிப் பெயர்களாக உள்ளன.

இவன் மாறவர்மனுக்கும் கங்கநாட்டு இளவரசியான பூசுந்தரிக்கும் பிறந்தவனாவான். ஜடிலன் என்ற வடமொழிப் பெயரும் இவனுக்கு உண்டு.[38] சின்னமனூர்ப் பெரிய சாசனம் இவனை வரகுணன் என்றே குறிப்பிடுகின்றது.[39] பாண்டியர் வரலாற்றில் காணும் முதலாம் வரகுணன் இவனேயாவான். இவன் இளமைக் காலத்திலேயே சிறப்பான போர்ப் பயிற்சி அளிக்கப்பெற்றவன். தமது மூன்றாம் ஆட்சியாண்டில் வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனத்தையும் கி.பி. 17 - ஆம் ஆட்சியாண்டில் சிரீவரமங்கலம் செப்பேட்டுச் சாசனத்தையும் வழங்கியுள்ளான். இவ்விரு செப்பேடுகளும் பராந்தகனைப் பற்றியும் ஆட்சிமுறையினைப் பற்றியும் மற்றும் பங்குபெற்ற போர்கள், எதிரிகளின் வலிமை, தன்மை ஆகியன பற்றியும் எடுத்துக் கூறுவனவாக உள்ளன.

இவைகளால் பாண்டியரின் வரலாற்றைத் தொடர்ச்சியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் இவன் சிறப்புகளைக் கூறுவனவாக இவனது கல்வெட்டுகள் சிலவும் கிடைத்துள்ளன.

ஆட்சிக் காலம்

இவன் ஏறத்தாழ ஐம்பதாண்டுகள் ஆட்சிபுரிந்துள்ளான் என்றும் இவனுக்குப் பின் இவனது மகன் சிரீமாறன் சிரீ வல்லபன் ஆட்சி செய்துள்ளான் என்றும் திரு நீலகண்ட சாத்திரி கூறுகின்றார்.[40] இவன் கி.பி. 792 முதல் 835 வரையில் ஆட்சி செய்திருக்கக் கூடும் என்று திரு டி. என். சுப்பிரமணியம் கூறுகின்றார்.[41] திருப்பரங்குன்றத்தில் காணும் இவனது ஆறாம் ஆண்டுக் கல்வெட்டில் 3874 கலியாண்டு குறிக்கப்பட்டுள்ளது. 'இக்கலியாண்டு என்பது. கி.பி. 773 - ஐக் குறிப்பதாக உள்ளது. எனவே, இவன் ஆட்சியேற்ற ஆண்டானது கி.பி.768 என்று கொள்ளுதல் சிறப்புடையது ஆகும். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளான். ஆதலால், இவனது இறுதியாண்டினை கி.பி. 815 எனக் கொள்ளலாம்.

போர்ச் செயல்கள்

இவன் காலத்தில் பல்லவ நாட்டை இரண்டாம் நந்திவர்மனே ஆட்சிபுரிந்து வந்துள்ளான். இவன் பராங்குசன் காலத்திலும் பராந்தகன் காலத்திலும் ஆட்சி செய்துள்ளான். பராங்குசனின் இறுதிக் காலத்தில் நந்திவர்மன் சில வெற்றிகளைப் பாண்டியர் மற்றும் பிற வேந்தரை எதிர்த்துப் பெற்றிருந்தான். பராந்தக நெடுஞ்சடையன் பட்டத்திற்கு வந்தவுடன் நந்திவர்ம பல்லவன் பாண்டியரை எதிர்த்துக் கூட்டணி ஒன்றினை அமைத்தான். அதில் கேரள அரசனையும் கொங்கு நாட்டு அரசனையும் தகடூர் அதியமானையும் இணைத்து ஒரு புதிய கூட்டு

அமைப்பை ஏற்படுத்தினான். சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகளின்படி பராந்தகன் அக்கூட்டமைப்பினை எதிர்த்துப் போரிட்டுப் புகழியூர் என்ற இடத்தில் அதியமானை வென்றானெனத் தெரிகிறது. தொடர்ந்து போரிட்டதில் கொங்கு அரசனைக் கைதுசெய்தான். வடக்கில் தொடர்ந்து போரிட்டுச் சென்று தொண்டை மண்டலத்தில் உள்ள அரைசூர் என்ற இடம் வரை வென்றுள்ளான் என அம்பாசமுத்திரம் கல்வெட்டு கூறுகின்றது.[42] இவன் புகழியூர் ஆயிதவேலி, அயிரூர் ஆகிய இடங்களில் பல்லவனையும் அவனுக்குத் துணை நின்றவர்களையும் போரில் வென்றான் என்று சிரீவரமங்கலச் செப்பேடு கூறுகின்றது.[43] இப்போரால் பல்லவனும் கேரளனும் பெரிதும் துன்புற்றார்கள், அவர்களுக்குத் துணைக்கு வந்த கொங்குநாட்டின் வலிமை மிக்க வேந்தன் தோற்கடிக்கப்பட்டு அவன் ஏறிவந்த பட்டத்து யானையுடன் கைது செய்யப்பட்டான் என அச்செப்பேடு மேலும் கூறுகின்றது. அவன் பின்னர் மதுரையில் சிறைவைக்கப்பட்டான்.

கங்கநாடு வரை சென்று கங்கரைப் போரிட்டு வென்றான்.

வேணாட்டுப்போர்

சேரநாட்டில் வேணாடு என்றொரு பிரிவு இருந்தது. அங்கு ஆய்வேள் என்னும் குடியினர் சங்ககாலம் முதல் ஆண்டு வந்தனர். அவர்களின் விழிஞம் என்னும் கடற்கரைப் பட்டினம் சிறப்பானது. அஃது இலங்கையின் அரண்களைப் போல் அழகால் சிறந்து விளங்குகின்ற பெரிய மாடங் களையும் மதில்களையும் உடையதாக விளங்கிற்று. அவ்வாய்வேள் குறுநில மன்னனாக விளங்கியும் பராந்தகனை எதிர்க்கத் துணிந்தான். பராந்தகன் விழிஞத்தை முற்றுகை யிட்டுக் கைப்பற்றினான். இவ்வெற்றியினால் அவனுக்குப் பெரிய யானைகளும் பிடரி மயிரையுடைய குதிரைகளும் சிறந்த பொருள்களும் கிடைத்தன. வேணாடு இவன் வசம்

ஆயிற்று. ஆய்வேளிர் தொடர்ந்து தொல்லைகள் அளித்து வந்ததால் அவர்களைக் கண்காணிக்கக் கர்வந்தபுரம் என்ற இடத்தில் பெரும் கோட்டையொன்றைக் கட்டியுள்ளான். அதனைச்சுற்றிலும் இடமகன்ற கருங்கல்லினால் கட்டப்பட்ட அகழியோடு வானத்தை அளாவிய அகன்ற உச்சியை உடைய பெரிய மதிலை உருவாக்கினான் என சிரீவரமங்கலச் செப்பேடு கூறுகின்றது. அங்கு ஒரு காவற்படையையும் நிறுத்தி வைத்தான். இக்கோட்டை இன்றும் அழிந்துள்ள நிலையில் காணப்படுகிறது.

சமயப் பற்று

இவன் பரம வைணவன் என்றும் குருசரிதம் கொண்டாடியவன் என்றும் போற்றப்படுகின்றான்.[44] இவன் வேம்பில் மதிலை அழித்து நியமத்தில் தங்கியிருந்தபோது திருச்சிராப்பள்ளி இறைவர்க்குத் திருவிளக்குகள் எரிப்பதற்கு 125 கழஞ்சு பொன் தானமாக அளித்தான் என்பதனைத் திருச்சிராப்பள்ளியில் கிடைத்துள்ள இவனது பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரத்துக் கோயிலுக்கு இருநூற்றுத் தொண்ணூறு பொற்காசுகள் நாள் வழிபாட்டிற்காகத் தானமாக அளித்துள்ளான் என்று இவனது பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. கொங்குநாட்டைக் கைப்பற்றியபோது அங்குள்ள காஞ்சி வாய்ப்பேரூர் திருமாலுக்குக் குன்றை ஒத்த கோயில் ஒன்றினைக் கட்டியுள்ளான்.[45] மாறன் மகளாகி மாலுருவில் வெளிப்பட்டு என வேள்விக்குடிச் செப்பேடு கூறுவதனால் இவன் தந்தை போற்றியாதரித்த வைணவத்தைப் பின்பற்றியுள்ளான் என அறிய முடிகிறது. இவன் பரமவைணவனாக விளங்கியபோதிலும் பிரமன், திருமால், சிவன் ஆகியோரை வழிபட்டான் என சிரீவரமங்கலச்செப்பேடு கூறுகின்றது. எனவே, இவனை

சைவ வைணவச் சமரச நன்னிலை கண்டவன் என்று போற்றலாம்.

அமைச்சர்கள்

மாறன்காரி

இவன் கரவந்தபுரமாகிய களக்குடி என்னும் ஊரில் தோன்றிய வைத்திய குலத்தினன் ஆவான். இவன் மதுரகவி என்ற சிறப்புப் பெயர் பெற்றதனால் கவி புனையும் ஆற்றல் மிக்கவன் என்பதை அறியலாம். இவன் இயற் பெயர் காரி ஆகும். மாறன் என்பானுக்கு மகன் ஆதலால் மாறன்காரி என்று அழைக்கப்பட்டான். மாறவர்மன் பராங்குசன் காலத்தில் முதலமைச்சராகப் பணிபுரிந்தான். கங்கராசனுடைய பெண்ணை மாறவர்மனுக்கு மணம் முடிப்பதைத் தடுக்க எண்ணிய பூர்வராசர்களையும் சாளுக்கியர்களையும் வெண்மை என்ற இடத்தில் தோல்வியுறச் செய்தான். மூவேந்தன் மங்கலப் பேரரையன் என்று பாண்டிய மன்னனால் போற்றப்பட்டான். வேள்விக்குடிச் சாசனத்திற்கு ஆணத்தியாக விளங்கிச் செயல்பட்டவன் இவனேயாவான். மதுரைக்கருகில் உள்ள ஆனைமலையில் திருமாலுக்கு ஒரு கற்றளி அமைத்து அதில் நரசிங்கப்பெருமானை எழுந்தருளச் செய்தான்.[46] அஃதல்லாமல் அக்கோயிற்கண்மையில் அந்தணர்க்கு அக்கிரகாரம் ஒன்றை அளித்துள்ளான். நெடுஞ்சடையனது மூன்றாம் ஆட்சியாண்டில் இவன் இறந்தான் என்பதைச் செப்பேட்டால் அறியலாம். இவன் இரு பாண்டிய அரசர்களுக்கு அமைச்சனாக விளங்கினான் எனத் திரு. மு. இராகவ அய்யங்கார் கூறுகின்றார்.

மாறன் எயினன்

இவன் மேலே குறிப்பிடப்பட்ட மாறன்காரியின் தம்பியாவான். அண்ணனுக்குப் பிறகு முதலமைச்சர் பதவியை

இவனே பெற்றிருந்தான். இதனை நரசிங்கப் பெருமாள் கோயில் கல்வெட்டு 'மாறன்காரிக்குப் பின் உத்தரமந்தர் பதமெய்தின பாண்டி மங்கல விசையரையன்' என்று குறிப்பிட்டுள்ளது. மாறன்காரியால் எடுப்பித்த நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு முக மண்டபம் ஒன்றமைத்துக் கடவுள் மங்கலஞ் செய்துள்ளமை குறப்பிடத்தக்கதாகும். அக்கோயில் அவனது தமையன் காலத்தில் முடிக்கப்பெற்ற போதிலும் கடவுள் மங்கலம் செய்து முடிக்காமையானது கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[47]

சாத்தன் கணபதி

இவன் கரவந்தபுரத்தில் வாழ்ந்த சாத்தன் என்பானின் மகனாவான். வைத்திய குலத்தினன். கணபதி என்னும் இயற்பெயருடையான். பராந்தக பாண்டியனின் ஆட்சியின் முற்பகுதியில் எல்லாப் படைகட்கும் மகா சாமந்தனாக விளங்கினான். இவன் சாமந்தன் கணபதி என்றும் சாமந்தன் பீமன் என்றும் அழைக்கப்படுகின்றான். பாண்டிய மன்னன் இவனுக்குப் 'பாண்டி அமிர்தமங்கல வரையன்' என்ற பட்டத்தினை வழங்கியுள்ளான். இவன் திருப்பரங்குன்றத் திலுள்ள கோயிலுக்குத் திருப்பணி புரிந்து திருக்குளத்தையும் திருத்தி அறச்செயல்களையும் ஒழுங்குப்படுத்தினான்.[48] மேலும் அவ்வூரில் சிவனுக்குக் கோயில் ஒன்றை அமைத்து கடவுள் மங்கலம் செய்துள்ளான்.[49] இவன் மாணவி நக்கன்கொற்றி என்பாள், அவ்வூர் கொற்றவைக்கும் சேட்டைக்கும் இரு கோயில்கள் அமைத்துள்ளாள் எனத் திருப்பரங்குன்றம் கல்வெட்டின் பிற்பகுதி கூறப்பட்டுள்ளது.

ஏனாதி சாத்தஞ் சாத்தன்

இவன் சாத்தன் கணபதியின் உடன்பிறப்பு ஆவான். வேள்விக்குடிச் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதியைப் பாடியவன். ஏனாதி என்னும் பட்டம் பெற்றவன். இதனால், இவன் மகாசாமந்தனுக்குக் கீழ் ஒரு படைப் பிரிவுக்குத்

தலைவனாக இருந்திருக்க வேண்டும். பெரும் வீரனாக விளங்கிய இவன் தமிழ்ப் புலமையுடையவனாகவும் காணப்பட்டான். பாண்டிய வேந்தர்களின் வரலாறுகளைப் பாடி அவர்தம் பெருமைகளைச் செப்பேட்டில் சேர்த்துள்ளார். எனவே, அறம் புரிந்த அரசர்களின் வரலாற்றைச் செப்பேடுகளில் எழுதி வைக்கும் வழக்கத்தைப் பாண்டிய நாட்டில் முதன் முதலாகத் தோற்றுவித்தவன் இவனேயாவான்.

தீரதீரன் மூர்த்தி எயினன்

இவன் சிரீவரமங்கலச் செப்பேட்டில் ஆணத்தியாக விளங்கியவன் ஆவான். இசைப்புலமைமிக்க களக்காடு வைத்திய குலத்தில் உதித்தவன் ஆவான். நெடுஞ்சடையனது ஆட்சியின் முற்பகுதியில் பாண்டியப் படைகளுக்கு மகா சாமந்தனாக விளங்கினான். இவனுக்கு வீரமங்கலப் பேரரையன் என்ற பட்டம் பாண்டியனால் கொடுக்கப்பட்டது.

சங்கரன் சிரீதரன்

இவன் பாண்டிய நாட்டுக் கொழுவூரில் பிறந்தவன். நெடுஞ்சடையப் பராந்தகனின் யானைப் படைக்குத் தலைவனாக விளங்கியவன். பாண்டி இளங்கோ மங்கலப் பேரரையன் என்ற சிறப்புப் பட்டம் பெற்றிருந்தான்.[50] இக்குறிப்புகளால் வைத்திய குலத்தினர் அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும் பணியாற்றியுள்ளனர். இவர்களது பணிகளைப் பாராட்டிக் கௌரவ விருதுகள் பாண்டியனால் வழங்கப்பட்டன. இவர்கள் அலுவலர்களாகத் திகழ்ந்ததோடல்லாமல் கலை ஆர்வமும் சமயப் பற்றும் நிறைந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் அனைவரும் நெடுஞ்சடையன் காலத்தில் பணிபுரிந்த உயர் அதிகாரிகளாவர்.

சிரீமாறன் சிரீ வல்லபன் (கி.பி.815-862)

நெடுஞ்சடையப் பராந்தகனுக்குப் பின்னர் அவனது மகனான சிரீமாறன் சிரீவல்லபன் பட்டத்திற்கு வந்துள்ளான் என்பதனைத் தளவாய்ப்புறம் செப்பேடு கூறுகின்றது.[51] சின்னமனூர்ப் பெரிய சாசனமும் சிரீவல்லபனின் தந்தை வரகுணன் என்றே குறிக்கின்றது. இவனே முதலாம் வரகுணன் எனப்பட்ட பராந்தக நெடுஞ்சடையன் ஆவான். சின்னமனூர்ப் பெரியச் செப்பேட்டில் பாண்டியர் கால்வழி கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றது.[52]

பராங்குசன் ..(அரிகேசரி பராங்குச மாறவர்மன்)
|
சடிலன் ..(கோச்சடையன் இரணதீரன்)
|
இராசசிம்மன் ..(அரிகேசரி மாறவர்மன்)
|
வரகுணன் ..(நெடுஞ்சடையப்பராந்தகன்)
|
சிரீ வல்லபன்..
|
வரகுணன் (இரண்டாம் வரகுணன்) — பராந்தக வீரநாராயணன்
|
இராசசிம்மன் (பராந்தக வீரநாராயணனின் கீழ்)

இக்கால் வழியினைக் குழப்பமில்லாமல் சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டின் பத்தாம் பாடல் கூறுகின்றது. அரிகேசரியின் மகனாக சடிலன் என்பானையும் அவனது மகனாக சிரீ இராசசிம்மனையும் இராசசிம்மன் மகனாக வரகுணன் என்பானையும் வரகுணனின் மகனாக சிரீ மாற சிரீவல்லபனையும் கூறுகின்றது. நெடுஞ்சடையப் பராந்தகனே முதலாம் வரகுணன் எனத் திருநீலகண்ட சாத்திரியின் கருத்தைத் தளவாய்ப்புரச் செப்பேடு உறுதிப்படுத்துகிறது. சின்னமனூர்ச் செப்பேடு இரண்டு வரகுணர்களைத் தெரிவிக்கின்றது. ஒருவன் சிரீமாறனின் தந்தையாகவும் மற்றவனை சிரீமாறனின் மைந்தனாகவும்

கொண்டால் குழப்பமேதும் இல்லை.[53] முதலாம் வரகுணன் வைணவனாக விளங்கிய்வன். அவனது பெயரன் இரண்டாம் வரகுணனின் சைவப் பற்றினைத் தளவாய்ப்புரச் செப்பேடு நன்கு கூறுவதால் அறிய முடிகின்றது. எனவே முதலாம் வரகுணனின் பெயரனாகவும் சைவத்தைப் போற்றியாதரித்துள்ளவனாகவும் மாணிக்கவாசகர் காலத்தில் வாழ்ந்தவனாகவும் விளங்கியவன் இரண்டாம் வரகுணன் என்று கருதலாம்.

சிறப்பியல்புகள்

இவன் செங்கோன்மை மிக்கவனாகத் திகழ்ந்தான்.[54] குடிமக்கள் இவனிடம் பேரன்பு கொண்டிருந்தனர். நீதியுடன் ஆட்சிபுரிந்துள்ளான். இவன் காலத்தில் பாண்டிப் பேரரசு பரந்து இருந்தது. இதனால் பார் முழுதாண்ட பஞ்சவர் குலமுதல் என்று போற்றப்பட்டான். மிகச் சிறந்த வீரனாவான்.[55] இவன் மயிலைத் தலைவனாக விளங்கிய பொத்தப்பிக் குலச் சோழன் சிரீ கண்டதாசனுடைய மகள் அக்களநிம்மடியை மணம் புரிந்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்தவனே பராந்தக வீர நாராயணன் ஆவான்.

போர்ச் செயல்கள்

இவனது போர்ச் செயல்களைச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடே தருகின்றது. சில வெற்றிகளைக் கல்வெட்டுகள் தருகின்றன. இவன் குன்னூர், இலங்கை, விழிஞம் ஆகிய இடங்களில் பகைவர்களை வென்று வெற்றிக்கு அறிகுறியாகப் பொன்னால் ஆன வாகை மலரை அணிந்து கொண்டான் எனச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் கூறுகின்றன.[56] விழிஞத்தில் இவன் தந்தையும் போர் புரிந்ததாக சிரீவர மங்கலச் செப்பேடுகள் கூறுகின்றன. இதனால் பாண்டியர் பிடிக்குள் அடங்காமல் தொடர்ந்து விடுதலை பெற முயன்றுள்ளனர் என்பதனை அறியலாம்.

இலங்கையில் இவன் பெற்ற வெற்றியினைத் தளவாய்ப்புரச் செப்பேடு உறுதி செய்கின்றது.[57]

முதலாம் சேனன் (சேனா 1) சிங்களத்தில் ஆட்சி செய்தபோது சிரீமாறன் சிங்களத்தின்மீது படையெடுத்தான். மகாதலீதா என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பாண்டியர் வெற்றி பெற்றனர். பாண்டியர் படை, புத்தத் தலைநகரைக் கைப்பற்றியது. சிங்கள இளவரசன் மகிந்தன் தற்கொலை புரிந்து கொண்டான். சிங்களப் பேரரசன் பாண்டியப் படையோடு போரிட முடியாமல் மலேயா நாட்டுக்கு ஓடினான். பாண்டியர்கள் பல நகரங்களைக் கொள்ளை யிட்டனர். புத்த விகாரங்களில் இருந்த பொற்படி மங்களையும், விலையுயர்ந்த பொருள்களையும் கைப்பற்றி னார்கள். இதனால் சிங்கள தேசம் தனது செல்வமெல்லாம் இழந்து சிறுமையுற்றதென மகாவமிசம் கூறுகின்றது. பின்னர் சிங்கள மன்னன் முதலாம்சேனன் பாண்டிய மன்னனுடன் சமாதான உடன்படிக்கையொன்று செய்து கொண்டு மீண்டும் ஆட்சியினைப் பெற்றான் என்பதனை மகாவமிசம் கூறுகின்றது. இச்செய்திகள் சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டுச் செய்தியை உறுதி செய்வனவாக உள்ளன.

குடமூக்கு என்னும் கும்பகோணத்தில் நடைபெற்ற போரில் சிரீ மாறன் ஏறத்தாழ கி.பி. 859 - இல் பங்கேற்றான். அப்போரில் இவனை எதிர்த்த பல்லவர், சோழர், கங்கர், கலிங்கர், மகதர் ஆகியோரின் கூட்டுப்படையை முறியடித்தான்.[58] இவ்வெற்றியினைத் தளவாய்ப்புரச் செப்பேடும், நிருபதுங்கவர்மனின் பாகூர்ச் செப்பேடும் குறித்துள்ளது. எனவே இது பெரியதொரு வெற்றியாகக் கருதப்படுகின்றது.

பல்லவர் பாணடியர் போர்

கி.பி.854 - இல் சிரீமாற மூன்றாம் நந்திவர்மனுடன் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வந்தவாசி

வட்டத்தில் உள்ள தெள்ளாறு என்ற ஊரில் போர் நிகழ்த்தினான். அப்போரில் நந்திவர்மனே வெற்றி கொண்டான். இதனால் நந்திவர்மனின் தந்தையான தந்திவர்மன் முதலாம் வரகுண பாண்டியனிடம் தோற்று இழந்த தொண்டை நாட்டின் பகுதியை மீட்டுக் கொண்டான்.

தோல்விகள்

கும்பகோணத்திற்குத் தென்புறமாக ஓடும் அரிசிலாற்றங் கரையில் நடந்த போரில் நந்திவர்மனின் மகனாகிய நிருபதுங்கவர்மனுக்கும் சிரீமாறனுக்கும் நடைபெற்ற போரில் பல்லவனே வெற்றி பெற்றான்.[59]

சிரீமாறனின் இறுதிக் காலத்தில் சிங்கள மன்னன் இரண்டாம் சேனன் ஒரு பெரும்படையைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பினான். மதுரை முற்றுகையிடப்பட்டது. சிரீமாறனிடம் முரண்பட்டிருந்த பாண்டிய இளவரசன் சிங்களவருடன் சேர்ந்து கொண்டான். போர்க்களத்தில் பாண்டியன் காயமுற்று இறந்துவிட்டான் என மகாவமிசம் கூறுகின்றது.[60] போர்க்களத்தில் பேராற்றால் காட்டிப் போர்புரிந்து உயிர் துறந்தான் எனத் தளவாய்ப்புரச் செப்பேடு கூறுகின்றது. இதன் பின்னர் வெற்றியெய்திய சிங்களப் படைத்தலைவன் சிரீமாறனுடைய மகன் வரகுணனுக்கு முடிசூட்டினான் எனத் திரு. நீலகண்ட சாத்திரி கூறுகின்றார்.

மாயா பாண்டியன்

இவன் சிரீமாறனுக்குத் தாயாதிக்காரனாக விளங்கிய மாயாபாண்டியர் என்பான் இரண்டாம் சேனனுடன் சேர்ந்து கொண்டான் என்று மகாவமிசம் கூறுவதாக டி.என். சுப்பிரமணியம் கூறுகின்றார்.[61] இம்மாயா பாண்டியனை வெற்றி பெற்றுள்ளான் எனச் சின்னமனூர்ப் பெரிய பட்டயக் கூறுகின்றது.[62] இம்மாயா பாண்டியனே இரண்டாம்

வரகுணன் எனத் திருநீலகண்ட சாத்திரி கருதுகின்றார். சிரீமாறன் முதல் மகனான இரண்டாம் வரகுணனை விட்டு இரண்டாம் மனைவியின் மகனான சிரீ நாராயணனைக் கி.பி. 860 - இல் இளவரசனாக நியமித்தான். இதனால், வெகுண்ட வரகுணன் சிரீமாறனுடன் பகைமைக்கொண்டு சிங்கள அரசன் இரண்டாம் சேனனுடன் சேர்ந்துகொண்டான். இதன்படி இரண்டாம் வரகுணனே மாயாபாண்டியன் எனக் கருதப்படுகின்றது. போரில் சிரீமாறன் தோல்வியுற்று மரணமடைந்ததையும் செப்பேடு தெரிவிக்கின்றது.[63] இவன் கி.பி. 862இல் இறந்திருத்தல் வேண்டும். முதலாம் இலங்கைப் போரில் இவன் இலங்கையைச் சூறையாடியது போலவே இரண்டாம் போரில் சிங்களவர்கள் பாண்டியர் தலைநகரத்தைத் தாக்கி ஏராளமான பொருள்களைக் கொண்டு சென்றனர்.

சிரீமாறன் தன் தந்தையிடம் பெற்று ஆட்சிபுரிந்து வந்த பாண்டிய நாட்டைப் பல இன்னல்களுக்கிடையில் அஞ்சாமல் காத்து வந்துள்ளான். இவனது சிறப்புப் பெயரான அவனிபசேகரன் என்ற பெயரால் அவனிபசேகரமங்கலம் என்னும் ஊர் ஒன்று திருச்செந்தூர்க் கண்மையில் இருந்ததை அறியலாம்.[64] மேலும் அப்பெயரால் பொற்காசு ஒன்று அவனிபசேகரன் கோளகை என்று குறிக்கப்பட்டுள்ளது.[65] இதனால் இவனுக்கு முதலாம் பாண்டியப் பேரரசர்களின் வரிசையில் சிறப்பான இடம் உண்டு எனலாம்.

இரண்டாம் வரகுணன் (கி.பி. 862-885)

சிரீமாறனின் முதல் மனைவியின் மகனான இரண்டாம் வரகுணன் என்பான் தந்தை இறந்த அதே ஆண்டில் முடிசூட்டப்பெற்றான்.[66] இவனது எட்டாம் ஆட்சியாண்டு சக ஆண்டு 792 எனக் குறிக்கப்பட்டுள்ளதால் இவன் கி.பி. 862 - இல் பட்டத்திற்கு வந்துள்ளான் என்பதனை அறியலாம்.[67]

இவனது தந்தையின் இறுதிக் காலத்தே அரசியல் சூழ்நிலையானது பெரிதும் மாற்றத்திற்குள்ளாகியிருந்தது. பாண்டியரும் பல்லவரும் தமிழ் நாட்டில் வலுப்பெற்று நின்றனர். அந்நிலையானது மாறத் தொடங்கிக் கி.பி. 850-இல் சோழர்கள் தங்களின் மேலாண்மையினை வெளிக் கொணரலாயினர். சோழப் பரம்பரையைச் சேர்ந்த விசயாலயன் என்பான் பாண்டியரின் கீழ் இருந்த தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றினான். அக்காலத்தில் வரகுணன் தனது ஆட்சியில் முற்பகுதியில் போர்கள் எதுவும் புரியாமல் அமைதிகாத்து வந்தான். பல்லவ அர்சன் நிருபதுங்கனுடன் நட்புறவு பூண்டிருந்தான். நிருபதுங்க னுக்கும் அவனது ஒன்றுவிட்ட சகோதரன் அபராசிதனுக்கும் கருத்து வேற்றுமைகள் தோன்றிப் பல்லவர்களிடையே குழப்பம் நேரிட்டது.[68]

வரகுணன் நிருபதுங்கனுக்குச் சார்பாக நின்றான். சோழநாட்டின் ஒரு பகுதியையாண்டு வந்த விசயாலயச் சோழன் முதுமையெய்தித் தளர்ச்சியுற்றிருந்தான். பாண்டிய வேந்தன் தன் தந்தை இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்ற உரிய நேரம் என்று கருதிச் சோழநாட்டின் மீது போர் தொடுத்தான். வரகுணன் படையானது காவிரியாற்றின் வடக்கே அமைந்துள்ள மண்ணி நாட்டில் இருந்த இடவை என்ற ஊரைக் கைப்பற்றியது. மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் புகழ்ந்து கூறியுள்ள திருத்தலமாக இடவைவிளங்கிற்றெனலாம். அந்நாட்களில் இளவரசனா யிருந்த ஆதித்தச் சோழனால் பாண்டியனை எதிர்த்து வெற்றிப் பெற முடியவில்லை. இடவையும் அதனைச் சூழ்ந்த நிலப்பரப்பும் வரகுணனின் ஆட்சிக்குள்ளாகியது. இவ் இடவைப் போரைப் பற்றித் திண்டுக்கல்லுக்கண்மையில் உள்ள இராமநாதபுரத்தில் காணப்படும் கல்வெட்டாலும் அறியலாம்.[69]

பாண்டியர் சோழநாட்டில் பெற்றுள்ள வெற்றியை அறிந்த அபராசித பல்லவன் சில திங்களில் தனது படையைத்

திரட்டிப் பாண்டியனை எதிர்த்துப் போரிடப் புறப்பட்டான். கங்க அரசன் முதலாம் பிருதிவிபதி, சோழ அரசன் ஆதித்தன் ஆகிய இருவரும் அபராசிதனுடன் சேர்ந்து கொண்டனர். அப்போர் இடவையிலும் அதனருகாமையில் உள்ள ஊர்களிலும் தொடர்ந்து நடந்தது. இறுதியில் கும்பகோணத்திற்கு வடமேற்கில் 7 கி.மீ. தொலைவில் மண்ணியாற்றங்கரையின் வடக்கேயுள்ள திருப்புறம்பியம் என்னும் இடத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் வரகுண பாண்டியன் தோல்வியடைந்தான். பல்லவ அபராசிதனும் ஆதித்த சோழனும் வெற்றி பெற்றனர். கங்க அரசன் பிருதிவிபதி கொல்லப்பட்டான். இப்போர் தமிழக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. வரகுணன் சோழநாட்டில் பெரும்பகுதியை விட்டுவிட்டுப் போகும்படி நேர்ந்தது. இதனால், பாண்டியர் பலம் குன்றியது. இது பாண்டியரின் வீழ்ச்சிக்கும் சோழர்களின் வளர்ச்சிக்கும் அடிகோலியது. இராசகேசரி ஆதித்தச் சோழன் தஞ்சை மாநகரில் முடிசூடி சோழமண்டலம் முழுமையும் ஆட்சிபுரியும் பெருமை பெற்றவனானான். சோழ மண்டலத்தில் பாண்டியர், பல்லவர் ஆட்சியினை ஒருங்கே ஒழித்ததற்கு இத்திருப்புறம்பியப் போரே முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகின்றது.

தோல்வியுற்ற வரகுணன் இப்போருக்குப் பின்னர் வெகுகாலம் ஆட்சி புரியவில்லை. ஆட்சியினை விட்டு இவன் மனம் ஆன்மீகத் துறையை நாடிற்று. எனவே இவனது ஆயுட்காலத்திலேயே இவனது தம்பி பராந்தக வீர நாராயணன் முடி சூட்டப்பெற்றான்.[70] இதன் பின் வரகுணன் முழுமையாக சிவநெறியில் ஈடுபட்டான். இவனது சிவ ஈடுபாட்டினை மாணிக்கவாசகர் தமது திருச்சிற்றம்பலக் கோவையாரில் கூறியுள்ளார்.[71] இரண்டாம் வரகுணன் திருச்செந்தூர் முருகக் கடவுளிடம் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தான். அப்பெருமானுக்கு ஆண்டு முழுமையும் நாள் வழிபாடு நடத்துவதற்காக ஆயிரத்து நானூறு

பொற்காசுகளைக் கொடையாக அளித்து அவற்றைப் பன்னிரண்டு ஊர்களுக்குப் பிரித்துக் கொடுத்துள்ளான். அப்பன்னிரண்டு ஊரினரும் திருச்செந்தூர் கோயிலுக்கு இரண்டாயிரத்துத் தொண்ணூறு கலம் நெல்லை ஆண்டுதோறும் அளந்து கொடுத்தனர். இச் செய்தியாண்து நாள் வழிபாட்டுத் திட்டங்களுடன் இக்கோயிலிலுள்ள கருங்கற்பாறையில் காணும் இவனது பதிமூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகின்றது.[72] இவன் இளம்பிறைச் சந்திரனைச் சடையில் அணிந்தவனும் கையில் பிநாகம் என்ற வில்லை உடையவனுமான சிவபெருமானை உள்ளத்தில் நன்கு நிலைக்கச் செய்துள்ளவன் என்று போற்றப்படுவதால் இவன் போற்றத் துதித்தவன் என்பதனை உணரலாம்.

கி.பி.869-இல் மாணிக்கவாசகர் ஈழநாடு சென்றுள்ளார் என்பதை இராசரத்நாகரியால் அறிகிறோம். இவைகளைக் கொண்டு மாணிக்கவாசகரின் காலநிலையைக் கூறுவோமே யானால் அவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரெனக் கூறலாம். வரகுணனின் சைவப்பற்றை விளக்கி நம்பியாண்டார் நம்பியும் தாம் பாடிய கோயிற்றிருப்பணியர் விருத்தத்தில் கூறியுள்ளார். எனவே முன்னவன் பரம வைணவனாகவும் பின்னவன் பரம சைவனாகவும் விளங்கிய இருவரில் பரமசைவனாக விளங்கிய இரண்டாம் வரகுணனின் காலத்தே மாணிக்கவாசகனார் வாழ்ந்துள்ளார் என்பதனை அறியலாம்.[73]

படைத்தலைவன்

பராந்தகப் பள்ளிவேளான் என்ற சிறப்புப் பட்டத்தினை பெற்ற புள்ளன் என்ற பெயருடையவன் வரகுணன வர்மனின் படைத்தலைவனாக விளங்கி புகழ் பெற்றவனாவான். இவன் இடவைப் போரில் பங்கு பெற்று வெற்றி கண்டவன் ஆவான். இவன் பராந்தக நாராயணன்

காலத்திலும் தொடர்ந்து படைத்தலைவனாக விளங்கி யிருக்கக்கூடும்.

பராந்தக வீர நாராயணன் (கி.பி. 860-905)

இவன் சிரீமாறன் சிரீவல்லபனுக்கும் பொத்தப்பி சிரீகண்ட சோழனின் மகளான அக்கள நிம்மடிக்கும் மகனாகப் பிறந்தவனாவான்.[74] இவன் வரகுணவர்மனின் மற்றொரு தாய்க்கு மகனாகப் பிறந்தவனாவான். தளவாய்ப்புரச் செப்பேட்டை வழங்கியவன் இவனேயாவான். இச் செப்பேடு இவனது ஏழாம் ஆட்சியாண்டில் வழங்கப் பெற்றதாகும். இதில் வீரநாராயணின் வீரச் செயல்களும் அறச் செயல்களும் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன.

வீரச் செயல்கள்

இவன் தனக்கு முன் பிறந்த வேல்வேந்தனைப் போரில் தோற்கடித்துள்ளான்.[75] இதனால் இவன் தன் அண்ணனைப் போரில் வென்றுள்ளான் என அறிய முடிகிறது. செந்நிலம் என்ற இடத்தில் பகைவர்களின் யானைப் படையையும் குதிரைப் படையையும் தனது அம்பால் தோற்கடித்துள்ளான். இவன் கரிகிரி நாட்டுத் தலைவனை வென்றான். அங்குப் பகைவர்களின் யானைப்படைகளை வென்று யானைகளைக் கைப்பற்றி தன்னாட்டுக்குக் கொண்டு வந்தான். இக்கரிகிரி என்ற ஊரே களக்குடி என்றும் கரவந்தபுரம் என்றும் வழங்கிற்று. பெண்ணாகடம் என்ற ஊரில் போர் செய்து அவ்வூரை அழியச் செய்தான். இதனால் வரகுணன் காலத்தில் இழந்த சோழநாட்டை மீண்டும் கைப்பற்ற முயன்றான் என்பதை அறிய முடிகிறது. மேலும் மேற்குக் கொங்கு பொக்கரளி, தென்மாவல், மென்மை, பராந்தகம் என்னும் இடங்களில் நடைபெற்ற போர்களில் பகைவர்களை முறியடித்தான். வீரதுங்கன் என்ற சிற்றரசனையும் வென்றான்.

விருதுப் பெயர்கள்

இவன் கலிப்பகை, வீரருள் வீரன், மதுராபுரி பரமேசுவரன், கண்டருள் கண்டன், மகர கேதனன் போன்ற விருதுகள் பெற்றிருந்தான்.[76] மேலும் வீரநாராயணன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றிருந்தான். இவன் ஆறுகளை வெட்டியுள்ளான்; 'அனுபவ தலை கண்டும்' என்று செப்பேடுகள் தெரிவிக்கிறது.

பட்டத்தரசி

இவனது பட்டத்தரசி வானவன்மாதேவி ஆவாள். இவள் சேரகுலத்து இளவரசியாவாள். திருநெல்வேலி மாவட்டத்தில் இவள் பெயரில் சேரன்மாதேவி என்ற ஓர் ஊர் அமையப் பெற்றுள்ளது. இவர்களுடைய மகனே இரண்டாம் இராசசிம்மன் ஆவான்.

இரண்டாம் இராசசிம்மன் (கி.பி. 900-920)

சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளை வழங்கியவன் இவனே . இவன் பல போர்களைக் கண்டவன். உலப்பிறி மங்கலம் என்னும் ஊரில் நிகழ்ந்த போரில் பகைவர்கள் பலரை வென்றான். அங்கு ஆண்ட அரசன் யார் என அறிய இயலவில்லை. சேரரைக் கருவூரில் வென்றுள்ளான். தனது பெருஞ்சேனைகளைக் கொண்டு சென்று கொடும்பாளூரில் பகைவர்களை வென்றுள்ளான். காவிரி நீர் பாயும் வளமுடைய நாட்டையாளும் தஞ்சை அரசனை நெப்பூர் என்னுமிடத்தில் தோற்கடித்தான். சோழரது மூவகைப் படைகளும் போர்க்களத்தில் இறந்தொழியும்படி செய்துள்ளான்.[77] இவனது ஆட்சியில் பாண்டிய நாடு எண்திசையிலும் பரவியிருந்தது. முடி சூடிய மன்னர்கள் பலர் குதிரைகளையும் யானைகளையும் உயர்தர மணிக்கற்களையும் பொன்னணிகளையும் இவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர்.

கி.பி. 907-இல் ஆட்சிக்கு வந்த முதலாம் பராந்தகச் சோழன் தனது மூன்றாம் ஆண்டில் வெளியிட்ட கல்வெட்டில் 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்று கூறிக்கொள்வதால் மதுரையானது இப்பராந்தகச் சோழனால் வெல்லப்பட்டிருத்தல் வேண்டும். மதுரை கொண்ட நிகழ்ச்சியானது முதலாம் ஆதித்தன் காலத்திலேயே நடந்திருக்க வேண்டும் என திரு. நீலகண்ட சாத்திரி கூறுகின்றார்.[78] இலங்கை மன்னனின் படை உதவி கொண்டு மறுபடியும் சோழனுடன் போர்புரிந்த இராசசிம்மன் வெள்ளூர் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டான். வெள்ளூர்ப் போரானது கி.பி. 915-இல் நடந்திருக்கக்கூடும் என்றும் சாத்திரி கருதுகின்றார்.

வெள்ளூரில் பெருமானடிகளோடு பாண்டியனும் சிங்கள வேந்தனும் போரிட்ட செய்தியினை வடார்க்காடு மாவட்டக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. அப்போரில் பராந்தகச்சோழன் பெருவெற்றி பெற்றான். இச் செய்தியினைக் கங்க அரசன் இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரச் செப்பேடுகளிலும் காணலாம்.[79] திருவாலங்காடு செப்பேடுகளிலும் இலங்கை அரசன் பாண்டிய அரசனுக்குப் பெருஞ்சேனை அனுப்பிய போதிலும் பாண்டியப் படை வெற்றிபெற இயலவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைப் படையினரில் பெரும்பாலோர் கொடிய நோய் ஒன்றினால் தாக்கப்பட்டு இறந்தனர். எஞ்சிய சேனையை இலங்கைக்குத் திருப்புமாறு இலங்கை அரசன் பணித்தான். இராசசிம்மன் தோல்வியுற்று இலங்கை சென்று மீண்டும் படையுதவி கோரினான். இலங்கை மன்னனும் மேலும் உதவி செய்ய இருந்த நிலையில் அங்கு நேரிட்ட உள்நாட்டுக் குழப்பத்தால் இலங்கை அரசனிடம் தன் மகுடத்தையும் அரச சின்னங்களையும் வைத்துவிட்டு தனது தாய் வானவன்மாதேவி பிறந்த நாடாகிய சேரநாட்டை அடைந்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது.

விருதுப்பெயர்கள்

இவன் விகடவாடவன், சிரீகாந்தன், (இலக்குமியின் கணவன்) மீளாங்கிதசை வேந்திரன் (இமயத்தில் மீனைப் பொறித்தவன்) இராசிகாமணி (அரசர்கள் உச்சியில் வைத்து கொண்டாடும் மணி போன்றவன்) தென்னன், ராசீதகுண கணதங்கோன் (அரசர்க்குரிய குணங்கள் அனைத்தும் நிறைந்த நம் தலைவன்) என்னும் விருதுப் பெயர்களைக் கொண்டிருந்தான்.

கொடைகள்

இவன் கொடைகள் அளிப்பதில் மிகச் சிறந்தவன் எனச் செப்பேடு புகழ்கின்றது. தனது பதினாறாம் ஆட்சியாண்டில் பராந்தகன் என்று பெயர் கொண்ட அந்தணனுக்குப் புத்தூரைத் தானமாக வழங்கினான். இவ்வேந்தன் எண்ணிறந்த பிரம்மதேயமும் தேவதானமும் பள்ளிச் சந்தமும் வழங்கியுள்ளான். இவன் நூற்றுக் கணக்கான ஏரிகளை வெட்டி பாசனப் பணி செய்தான்.

பாண்டியன் வீழ்ச்சி
வீரபாண்டியன் (கி.பி. 946-966)

இரண்டாம் இராசசிம்மன் காலத்தில் பாண்டியராட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது. இவ்வீழ்ச்சியானது முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் தொடங்கிற்று எனலாம். திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் முதலான மாவட்டங்களில் காணப்படும் முதலாம் பராந்தகச் சோழனின் கல்வெட்டுகளே இதற்குச் சான்றாக அமை கின்றன. இருந்தபோதிலும் அக்காலத்தில் வீரபாண்டியன் என்பான் பெருமுயற்சிகள் மேற்கொண்டு மீண்டும் பாண்டியராட்சியைக் கொண்டு வர முயன்றான். இரண்டாம் இராசசிம்மனுக்குப் பிறகு அவனது மகனான வீரபாண்டியன்

என்பான் கி.பி.946-இல் அரியணையேறினான். இவனது கல்வெட்டுகள் மதுரை வட்டத்தில் உள்ள கீழ்மாத்தூரிலும் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயில், சுசீந்திரம் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.[80] இவற்றில் வீரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டின் தென்பகுதி அவன் வசம் இருந்தது எனக் கொள்ளலாம். இவ்வீரபாண்டியன் சில கல்வெட்டுகளில் சோழன் தலைக் கொண்ட வீரபாண்டியன் என்று புகழ்ந்து கூறிக் கொள்கின்றார். இது வெறும் தற்புகழ்ச்சியன்று. பாண்டிய நாட்டை விடுவிக்கக் கருதி நடைபெற்ற தீவிரப் போர்களில் சோழனை வென்றிருக்கலாமெனக் கருத இடமுண்டு. மேலும் இவன் சோழாந்தகன் என்ற விருதினைப் பெற்றுள்ளான். இது சோழனைக் கொன்றவன் என்ற பொருளிலே உள்ளது. ஆயினும், இவனுடன் போரிட்டுத் தலை துண்டிக்கப்பட்ட சோழ அரசன் யார் எனத் தெரியவில்லை. இருப்பினும் இவன் முதலாம் இராசஇராசனின் தந்தையாகிய சுந்தரசோழனைக் கொன்றிருக்க வேண்டும் என்று சுந்தர சோழனுக்குப் பொன் மாளிகைத் துஞ்சின தேவர் என்ற பெயர் காணப்படுவதால் அவன் காஞ்சியில் உள்ள பொன் மாளிகையில் இறந்துபட்டவன் என்பதனையும் அறியலாம். அச்சுந்தர சோழனே வீரபாண்டியனை கி.பி. 962-இல் சேவூர் என்ற போரில் வெற்றிக் கொண்டுள்ளான் என ஆனைமங்கலச் செப்பேடு கூறுகின்றது. மேலும் சுந்தர சோழனை மதுரை கொண்ட கோ. இராசகேசரிவர்மர் எனவும் பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் சிரீசுந்தர சோழதேவர்[81] என்றும் குறிப்பிட்டுள்ளதால் சுந்தரச் சோழன் வீரபாண்டியனை வென்ற செய்தி உறுதிப்படுகின்றது. வீரபாண்டியனால் கொல்லப்பட்ட சோழ அரசன் முதலாம் பராந்தகச் சோழன் என்று திரு. ஏ.என். இராமநாத அய்யர் கூறுகின்றார்.[82] சோழ மன்னர் யாரென்று உறுதியாக அறியமுடியவில்லை. இதனால் சோழ இளவரசரில் ஒருவரையே கொன்றிருத்தல் வேண்டும். வீரபாண்டியன் காலத்தில் பராந்தக சோழன்

முதுமையுற்றிருத்தல் வேண்டும். வீரபாண்டியனின் சமகாலத்தில் சோழ அரசர்களில் யாரும் பாண்டியர்களால் கொலை செய்யப்பட்டரென குறிப்பிடப்படவில்லை. எனவே, சோழ இளவரசர்களில் ஒருவரைப் போரில் கொல்லாது மறை முகமாகக் கொன்றிருத்தல் வேண்டும்.

கி.பி.946-இல் பாண்டிய அரசை நிறுவிய வீரபாண்டியன் குறித்து ஏனைய செய்திகள் ஒன்றும் கிடைத்தில. இவனது ஆட்சி இருபது ஆண்டுகளே நீடித்திருக்க வேண்டும். அக்காலத்தில் சோழர்களின் வலுப் பெற்று பாண்டிய நாட்டையும் ஈழநாட்டையும் வெல்லத் தலைப்பட்டனர். இரண்டாம் ஆதித்த கரிகாலன் என்பான் வீரபாண்டியனை கி.பி. 966-இல் நடைபெற்ற போரில் கொன்றான் என்பதை ஆதித்தனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகின்றது.[83] வீரபாண்டியன் இறந்த செய்தியை வீடன் செப்பேடும் உறுதி செய்கின்றது. வீரபாண்டியன் மறைவுக்குப் பின்னர் பாண்டிய மன்னரைப் பற்றிய செய்திகள் ஒன்றும் கிடைத்தில. சோழர் ஆட்சியே பாண்டி நாட்டிலும் நிலைபெற தொடங்கிற்று. முதலாம் இராசஇராசன் காலத்தில்தான் பாண்டிய நாட்டை முழுமையாகச் சோழர்கள் கைப்பற்றினர். இராசராசன் பாண்டியகுலாசனி என்ற பட்டம் பெற்றுள்ளதாலும் பாண்டிநாடு இராசஇராச மண்டலம் என்று பெயரிடப்பட்டதாலும் இவனாட்சியில் பாண்டியநாடு அடங்கியிருந்ததை அறியலாம். முதலாம் இராசேந்திரன் ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்று பாண்டியரது பண்டைய மணிமுடியையும் மற்றும் இராச சின்னத்தையும் கைப்பற்றி வந்தான். இவ்வாறு பராந்தக வீரநாராயணன் கொண்டு சென்ற பாண்டிய அரச சின்னங்கள் யாவும் சோழர் கைக்கொண்டனர். எனவே பாண்டிய நாடும் அதன் உடமைகளும் சோழராட்சிக்குள்ளாயின.[84]

அடிக்குறிப்புகள்

அ. பல்லவர் வரலாறு

1. L. Rice, Mysore and Coorg, from Inscriptions
2. A.R.E. 1906-VII, பக். 218.
3. Jouveau, Dubreiul, G. Ancient History of the Deccan. p. 47
4. தென்னிந்திய சாசனங்கள் தொகுதி- பக். 11
5. Srinivasa Aiyangar, M. Š Tamil Studies.
6. Subramaniyam, N. Š History of Tamilnadu p. 101
7. Sathianathier, R. Studies in the Ancient History of Tondaimandalam. p. 79
8. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும் பக். 1-40
9. Subramaniyam, M. N. *Op.cit* p. 103
10. Minakshi, C. Administration and Social life under the Pallavar (Revised Second edition) p.6 (Introduction given by K.K. Pillay)
11. Subramaniyam, N. *Op.cit* pp. 104-106
12. Minakshi, C. *Op.cit.* p. 6
13. Subramaniyam, M. *Op.cit.* p. 112
14. இந்த சத்தியசேனன் என்பவரைப் பற்றி டி.வி. மகாலிங்கம் அவர்களுடைய கூற்றுக்கள் ஆராயத்தக்கனவாகும். முதலாம் மகேந்திரவர்மன் காலத்திய வல்லம் கல்வெட்டு ஒன்றில் ஸ்கந்தசேனன் என்ற குறுநில மன்னன் குறிக்கப் பெற்றுள்ளான். அவன் வசந்தப்பிரயசாரனுடைய மகன் என்று அழைக்கப்படுகிறான். ஸ்கந்தசிஷ்யன், சத்தியசேனன் என்பவனிடமிருந்து காஞ்சியைக் கைப்பற்றிய செய்தியைக் கொண்டு வசந்தப்பிரயசாரனுடைய முன்னோன் ஒருவர் சத்தியசேனனாக இருக்கக்கூடும். (டி.வி. மகாலிங்கம், மு.கு.பக்.20) சத்தியசேனன். சக-க்ஷத்திரப்ப மரபைச் சேர்ந்த அரசன் ஒருவனாக இருக்கக்கூடும். (Pillay. K.K. *Op.cit.* p. 10)

சமுத்திரகுப்தனுடைய படையெடுப்பால் வலியிழந்த ஆந்திர நாட்டரசை வென்று வாகாடக் அரசன் பிருதிவிசேனன், பல்லவரிடமிருந்து காஞ்சியைக் கைப்பற்றியிருக்கக்கூடும். பிருதிவிசேனன் தன்னுடைய சேனைத்தலைவன் சத்திய சேனன் என்பவனைக் காஞ்சிக்கு அரசனாக்கி மீண்டிருக்க லாம். அந்த சத்தியசேனனிடமிருந்து ஸ்கந்தவர்மன் காஞ்சி யையும் கடிகையையும் கைப்பற்றியிருக்க வேண்டும். (மா. இராசமாணிக்கம் - பல்லவர் வரலாறு பக். 65-66)

15. Jayaswal, K.p. History of India. pp. 180-2
16. பல்லவர் செப்பேடுகள் முப்பது. பக். 4
17. மேற்படி பக். 186
18. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 305
19. Minakshi, C., *Op.cit.* p. 37
20. Subramaniyan, N. *Op.cit.* p. 112
21. Minakshi, C. *Op.cit.* p. 38
22. Mahalingam, T.V. *Op.cit.* p. 55
23. வெள்ளைவாரணன், க., திருமுறை வரலாறு. (இரண்டாம் பகுதி) பக்.546.
24. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 30-31
25. மேற்படி பக். 174
26. Mahalingam, T.V., *Op.cit.* p. 58
27. Govindasamy, M.S. The Role of Feudatories in Pallava History, p. 102
28. இராசமாணிக்கம், மா., முன்னூல், பக். 82
29. மேற்படி பக். 10
30. மேற்படி பக். 86
31. Natana Kasinathan, Hero Stones in Tamilnadu p. 7, F.N. 18.
32. Mahalingam, T.V. *Op. cit.* p. 64
33. *Ibid.*
34. Mahalingam, T.V. *Op.cit.*, p. 91

35. இராசமாணிக்கம். மா., பல்லவர் வரலாறு. பக். 91
36. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 174
37. மேற்படி பக். 92
38. Mahalingam, T.V., *Op. cit.* p. 69
39. Subramaniyan, N., *Op. cit.* p. 142
40. இராசமாணிக்கம், மா., முன்னூல், பக். 93
41. இராசசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு. பக். 259
42. இராசமாணிக்கம், மா., முன்னூல், பக். 95
43. Mahalingam, T.V. *Op. cit.*, pp. 70-71
44. இராசமாணிக்கம், மா., முன்னூல், பக். 110
45. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 133-34
46. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 259
47. Mahalingam, T.V., *Op.cit.* p. 84
48. Govindasamy, M.S., *Op.cit.* p. 107
49. பெரிய புராணம், சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 6
50. இராசமாணிக்கம், மா., முன்னூல், பக். 116
51. Mahalingam, T.V., *Op.cit.*, p. 85
52. இராசமாணிக்கம், மா. முன்னூல், பக். 117
53. Mahalingam, T.V., *Op.cit.*, pp. 86-87
54. *Ibid.*
55. *Ibid* Š 85
56. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 174-5
57. Watters, Travels of HiuenŠTŠSang, Vol. II. p. 227
58. Mahalingam, T.V. *Op. cit.* p.89.
59. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 55
60. மேற்படி பக். 55
61. Subramaniyan, N. *Op.cit.* p. 150
62. *Ibid.*

63. Mahalingam, T.V., *Op.cit.,* p. 97

64. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 58

65. இராசமாணிக்கம், மா., மு.கு. பக். 135

66. S.I.I. Vol. II p. 511

67. முதலாம் பரமேச்வரவர்மன் காலத்தில்தான் பரஞ்சோதி அல்லது சிறுத்தொண்டர் வாதாபியின் மீது படையெடுத்து வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்று டி.வி. மகாலிங்கம் அவர்கள் கூறுவர். இந்த இரண்டாவது வாதாபிப் படையெழுச்சியில்தான் 'மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித் தொன்னகரம் துகளாக்கிய' பெரியபுராணச் செய்தி நடைபெற்றிருக்கும் என்றும் கூறுவர்.

Mahalingam, T.V. Kanchipuram in Early South Indian History, pp 102-103

68. இராசமாணிக்கம், மா. முன்னூல், பக். 245-46

69. திருத்தொண்டர் திருவந்தாதி, பாடல்,56

70. பெரிய புராணம், ஐயடிகள் காடவர் கோன் நாயனார் புராணம் பக். 1052

71. Mahalingam, T.V. *Op.cit,* p. 55

72. Minakshi. C., *Op cit* p. 14

73. இராசமாணிக்கம், மா., பெரியபுராண ஆராய்ச்சி, பக். 95-6

74. க. வெள்ளைவாரணன், திருமுறை வரலாறு இரண்டாம் பகுதி, பக். 544-55

75. South Indian Inscriptions Vol. I., p. 13, Verse 5.

76. Mahalingam, T.V. *Op. cit.* p. 109

77. Epigraphia Indica, Vol. XVIII, pp. 145-52

78. Mahalingam, T.V. *Op.cit* p. 111

79. *Ibid,* p. 114

80. *Ibid,* p. 114

81. பெரிய புராணம் கழற்சிங்க நாயனார் புராணம், செய்யுள் 2.

82. Mahalingam, T.V. *Op. cit,* p. 114.

83. காலகாலன் என்னும் பெயர் காலனாகிய எமனை உதைத்து அவன் உயிரைக் கொண்டமையால் சிவபெருமானுக்குரிய பெயராகும். சிவபக்த சிரோன்மணியாகிய இராசசிம்மனுக்கு இந்தப்பெயர் வழங்கியதாகும்.

84. Nilakanta Sastri, K.A., Foreign Notices of South India, p. 116.

85. *Ibid*

86. Mahalingam, T.V. *Op.cit.* pp 118-19

87. Subramaniyan, N., History of Tamilnadu, p. 152.

88. காடவர் கோமான் கச்சிக் கற்றளி முற்ற
மாடெலாம் சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்.
நாடமால் அறியாதாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார் இரணடைக் கனலில் எய்தி.

நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடிலாயத்து நாளை நாம் புகுவம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்ளாய் என்று
கொன்றை வார் சடையார் தொண்டர்கோவில் கொண்டருளப் போந்தார்.

-பூசலார் நாயனார் புராணம். 9, 10

89. Minakshi, C. The Historical Sculptures of the Vaikuntha Perumal Temple, Kanchi, p. 32

90. பல்லவர் செப்பேடுகள் முப்பது. பக். 175.

91. மேற்படி பக். 260

92. Mahalingam, T.V. *Op. cit.* p. 135

93. *Ibid*

94. Jouveau Dubreiul G. The Pallavas. p. 46

95. *Ibid.* pp. 60-66

96. Gopalan, R. History of the Pallavas of Kanchi, p. 119

97. Mahalingam, T.V. *Op. cit.* p. 138

98. பல்லவர் செப்பேடுகள் முப்பது. பக். 238

99. Mahalingam, T.V. *Op. cit*. p. 139
100. Mahalingam, T.V. *Op. cit.* p. 139-140
101. *Ibid.* p. 146
102. *Ibid* p. 152
103. ந. சுப்புரெட்டியார், பி.கே. அருணாசலம், சிலம்பொலி, சு. செல்லப்பன் முதலியோரைக் கலந்து கேட்டதில் அவர்கள் ககனம் என்றால் 'ஆகாயம்' என்று பொருள் பொருத்த மானதென்று கூறுவர்.
104. Epigraphia Indica Vol. XXVII p. 328
105. Epigraphia Indica Vol. III. p. 360
106. Mahalingam, T.V. *Op. cit.* p. 156.
107. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 136.
108. Mahalingam, T.V. *Op. cit.* p. 157
109. *Ibid*
110. Mahalingam, T.V. *Op. cit.* p. 169
111. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 136.
112. Mahalingam, T.V. *Op. cit.* p. 172.
113. Epigraphia Carnatica, Vol. VII No. 35.
114. Mahalingam, T.V. *Op. cit.* p. 178.
115. *Ibid* p. 179
116. Nilakanta Sastri, K.A., A History of South India, p. 156.
117. *Op. cit.* p. 139
118. கோபாலன். பல்லவர் வரலாறு கட்டுரை, பக். 44
119. "நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்" பெரிய திருமொழி பாடல். 1444
120. கோபாலன், ஆர்., மு.கு. பக். 44
121. இராசமாணிக்கம், மா., பல்லவர் வரலாறு, பக். 190
122. Mahalingam, T.V. *Op. cit.* p. 187.
123. *Ibid.* p. 189

124. *Ibid.*

125. *Ibid.* p. 192

126. *Ibid* p. 193

127. *Ibid.*

128. *Ibid.* p. 195

129. South Indian Inscriptions, Vol. VI, No. 84

130. இராசமாணிக்கம், மா., பல்லவர் வரலாறு, பக். 196-97

131. *Ibid.* p. 202

132. Subramanian, T.N., South Indian Temple Inscriptions, Vol. III, Part I, p. 56.

133. Mahalingam, T.V. *Op. cit.* p. 196-97

134. Mahalingam, T.V. *Op. cit.* p. 198-200

135. *Ibid.* p. 200

136. *Ibid.* p. 201.

137. இக்கருத்தை Kanchi through the Ages என்ற வரலாற்று நூல் எழுதிய சி.ஆர். சீனிவாசன் அவர்களும் ஒப்புக் கொண்டுள்ளார் (C.R. Srinivasan, Kanchipuram through the Ages, pp. 44 to 46)

138. இராசமாணிக்கம், மா., முன்னூல் பக். 197.

139. Nilakanta Sastri, K.A., A. History of South India. p. 159

140. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 260

141. Mahalingam, T.V. *Op. cit.* pp. 192-95

142. நந்திக்கலம்பகம் பாடல்கள் 19, 22, 25, 27, 31, 61

143. இராசமாணிக்கம். மா., முன்னூல் பக். 202

144. மேற்படி பக். 199

145. Iyengar, S.K. and Robert Sewell, Historical Inscriptions of South India, p. 84.

146. Bellary. District. Gazetteer, pp. 231-36

147. இராசமாணிக்கம், மா., முன்னூல் பக். 209

148. Pillay, K.K., *Op.cit.*, p. 24.

149. Nilakanta Sastri, K.A., *Op.cit.*, p. 172

150. *Ibid.*

151. Krishnaswami, A., Topics in South Indian History, p. 143.

152. இராசமாணிக்கம், மா., பல்லவர் வரலாறு, பக். 205

153. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 274

154. இராசமாணிக்கம், மா., பல்லவர் வரலாறு பக். 207

155. Mahalingam, T.V. *Op. cit.* p. 208

156. நந்திக்கலம்பகம். பாடல் 22.

157. *Ibid.* 30.

158. Mahalingam, T.V. *Op. cit.* p. 211

159. Ibid p. 128., and South Indian Inscriptions Vol. VII, No. 258

160. Mahalingam, T.V. Op. cit. p. 212.

161. *Ibid.* p. 212.

162. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 274.

163. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக். 162. பாடல் 11.

164. Mahalingam, T.V. *Op. cit.* p. 213.

165. *Ibid*

166. Epigraphia Indica. Volumes 9 and 20, pp. 86-88 and 52-53.

167. பல்லவர் செப்பேடுகள் முப்பது. பக். 274

168. Mahalingam, T.V. *Op. cit.* p. 215

169. Nilakanta Sastri, K.A. *Op.cit.* p. 174

170. *Ibid* p. 175

171. Mahalingam, T.V. *Op. cit.* p. 217

172. Sewell, R., List of Antiquities Vol. II, p. 31

173 Mahalingam, T.V. *Op. cit.* p. 218

174. No. 365 of 1904 South Indian Inscriptions, Vol. XII No. 63

175. இராசமாணிக்கம், மா., முன்னூல் பக். 214

176. South Indian Inscriptions Vol. X., p. 375

177. Mahalingam, T.V. *Op. cit.* p. 217

178. *Ibid*

179. Nos. 158 and 161 of 1912

180. Epigraphia Indica Vol. VII p. 260

ஆ. பாண்டியர் வரலாறு

1. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 38

2. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 147.

3. K.A.R. Sastri, The Pandyan Kingdom p. 172.

4. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 133

5. மேற்படி. பக். 38

6. மேற்படி. பக். 126

7. மேற்படி பக். 38

8. மேற்படி பக். 39

9. மேற்படி பக். 39

10. கே.வி. இராமன் பாண்டியர் வரலாறு

11. K.G.Krishnan, E.I. XXXVIII Part 1

12. இரா. நாகசாமி . கல்வெட்டு எண். 9

13. கே.வி. இராமன் பாண்டியர் வரலாறு ப. 62

14. இரா. நாகசாமி மு.கு.ப. 226

15. மேற்படி பக். 226

16. K.A.N.Sastri, Op.cit.

17. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக். 39

18. மேற்படி. பக். 168

19. நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம் பாடல்கோன்.

20. வீரணி வந்து அடையாத பரதவரை பாழ்படுத்தான் பாண்டியர் செப்பேடுகள் பக். 29

21. குறுநாட்டவரை குலங்கெடுத்தும், பாண்டியர் செப்பேடுகள் பக். 39

22. புரினும் மதிற்புலியூ ரப்பகர்

23. கே.கே.பிள்ளை. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் பக் 194

24. R. Nagaswamy, Pandyan Arikasari and Pandikovai in Professor K.A.N. Sastri Felicitation volume
25. செங்கோல் தென்னன்.
26. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக். 41
27. மேற்படி
28. மேற்படி. பக். 50
29. மேற்படி பக். 40
30. மேற்படி பக். 25 வரி 75
31. S.I.I. Vol.II. p.361. ARE 1907 Para 11
32. மு.இராகவையங்கார், ஆழ்வார்கள் கால நிலை.
33. பாண்டியர் செப்பேடுகள் பத்து.
34. கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும் எங்கும் திரிந்து விளையாடும் என் மகள்-பெரி. திருமொழி 2:6:2
35. கொள்ளவில் கூர்வேற்
கோன் நெடுமாறன் தென் கடற்
தென்னன் கொண்டாடும் கோன்
தென் திரு மாரிரும் சோலையே பொரியாழ்வார் பாச
36. கே.வி. ராமன் பாண்டியர் வரலாறு.
37. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 49
38. மேற்படி.
39. மேற்படி பக். 172
40. K.A.N.Sastri, Op.cit.p.54.
41. பாண்டியர் செப்பேடுகள்.
42. E.I. p.24
43. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 65
44. சீவரமங்கலச் செப்பேடு
45. மேற்படி வரிகள் 34-36
46. S.I.I. XIV No. 3.
47. K.V.Raman, Uggarankottai Karavandapuram...J.I.H LSII (1974)

48. K.G. Krishnan, Ephigraphia Indic XXXVI
49. Ins. 142 of 1851-52 E.I.Vol. XXXVI No. 15 The Pandya Inscriptions from Thiruppurankunram.
50. கே.வி. ராமன் பாண்டியர் வரலாறு பக்கம் 73-74
51. கூடவர்கோன் சிரீ பராந்தகன் குரை சூழற் கோச்சடையற்குச் சேயாசி வெளிப்பட்ட செங்கண்மால் சிரீ பல்லபன் பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 125
52. பாண்டியர் செப்பேடுகள் பக். 161-162 சுலோகம் 10
53. கே.வி. ராமன் பாண்டியர் வரலாறு பக் 75-76
54. 368-1904 . சீர் அகழு செங்கோல் சிரீ வல்லபன்.
55. ஏகவீரன் என்று போற்றப்பட்டான்.
56. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக். 166
57. குரைகடவிழங் கொண்டு மேற்படி நூல் பக்.
58. சின்னமனூர் பெரியச் செப்பேடு பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 169.
59. இச்செய்தியினை நிருபதுங்கவர்மனின் பாகூர் செப்பேடும் காங்குடி கண்டியூர், திருச்சின்னம்பூண்டி, திருக்கோடிக்கா முதலான ஊர்களில் கிடைத்துள்ள நிருபதுங்கரின் கல்வெட்டுகளும் கூறுகின்றன.
60. ஒளிறிரை வேல் உபாய பஹ¬றயன் உம்பர்வாள் உலகனைந்தபின் - பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 126
61. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக்.
62. மேற்படி பக். 162 சுலோ. 11
63. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக். 126 வரி 1
64. Ep.Ind Vol. XXI. No. 17.
65. Annual Report on South Indian Epigraphy for 1929-30, PartŠ11, Para 4.
66. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 169 வரி 113-114
67. 705 of 1905
68. K.A.N.Sastri, A History of South India. pp. 174-175

69. S.I.I. vol. XII No. 71 Ins. 890 of 1905

70. கோவரகுணன் பிள்ளை பிறைச்
சடைக்கணிந்த பினாகாபானி எம்பெருமானை
உலகாய் காக்கின்ற நாளில்
பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக்.

71. வரகுணனாந் தென்னவனேத்து
சிற்றம்பலத்தான் திருச்சிற்றம்பலக் கோவையார்

72. கே.வி. ராமன், பாண்டியர் வரலாறு பக். 79-81

73. மேற்படி பக். 79

74. பாண்டியர் செப்பேடுகள் பத்து-தளவாய்புரச் செப்பேடு.

75. மேற்படி.

76. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 126. இவனை மூன்றாம் இராசசிம்மன் என்று திரு பண்டாரத்தார் குறிப்பது தவறாகும்.

77. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 169-70

78. Nilakanda Sastri, Cholas பக். 123

79. S.I.I. Vol. II No. 76

80. கே.வி ராமன், பாண்டியர் வரலாறு p. 86

81. E.I. Vol. XII No. 15 Ins. 392 of 1908

82. E.I. Vol. XXV p. 35

83. S.I.I. Vol. IV No. 199

84. கே.வி. ராமன், பாண்டியர் வரலாறு பக். 87-88

இயல் ஐந்து

பல்லவர்காலக் குறுநில மன்னர்கள்

கடைச்சங்க காலத்தில் பறம்பு நாட்டை ஆண்ட பாரியும், வையாவிக் கோமான் பேகனும் தகடூர் அதிகமானும் திருக்கோவிலூர் மலையமான்களும் ஆகிய குறுநில மன்னர்கள் முடிவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர் களைப் போன்று அரசவை அமைத்துக்கொண்டு புலவர் களையும் பாணர்களையும் விறலியர்களையும் ஆதரித்துப் பெரும் புகழ் ஈட்டினர். இவர்களுள் பாரி, காரி, ஓரி, அதிகன், நள்ளி, ஆய், நல்லியக் கோடன் முதலியோர் வள்ளல்கள் எனப் பெயர் பெற்றனர். சங்க காலத்தில் பெரும் புகழுடன் விளங்கிய குறுநில மன்னர்களில் சிலர் விசயநகர ஆட்சிக்காலம் வரையில் தங்களுடைய நிலப் பகுதிகளை ஆண்டு வந்தனர். பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் அமைத்த பேரரசுகளில் சங்க காலத்து குறுநில மன்னர்களின் பெயர்களும் அவர்களுடைய செயல்களும் செய்கைகளும் காணப்பெறுகின்றன. தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களின் வரலாற்றில் மட்டும் ஒரு தனித் தன்மையை நாம் காண முடிகிறது. அஃதாவது, முடிமன்னர்களாக இருந்த சேர, சோழ, பாண்டியர்களும் பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னர்களாக இருக்க வேண்டிய நிலமையும் தோன்றியது. களப்பிரருடைய ஆட்சிக் காலத்திற்குப் பிறகு சோழர்கள் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக, பழையாறையிலும் உறையூரிலும் இருந்தனர். பாண்டியர்கள் சோழப் பெருவேந்தர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாகவும் இருந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த குறுநில மன்னர்களை மேலை நாடுகளில் நிலைபெற்றிருந்த நிலமானிய அல்லது படைமானிய (Feudal) பிரபுக்களுடன் ஒப்பிடுவதும்

நிலமானிய பிரபுக்களுக்கு வழங்கிய Feudal Lord என்ற அடைமொழியைத் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களுக்கு இணைத்துக் கூறுவதும் வரலாற்று உண்மைக்கு மாறுபட்ட தாகும் என அறிஞர் ந. சுப்பிரமணியம் தன்னுடைய தமிழ்நாட்டு வரலாறு என்னும் ஆங்கில மொழி நூலில் கூறுவர்.[1] தமிழ் நாட்டு வரலாற்றில் காணப்பெறும் குறுநில மன்னர்களின் முக்கியத் தன்மைகள் இரண்டு என அவ்வாசிரியர் முறைப்படுத்தியும் கூறியுள்ளார்.

1. பரம்பரையாக குறுநிலப் பகுதிகளை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் முடியுடை வேந்தர்களுக்கு அடங்கித் திறை செலுத்தியும் அவர்களுடைய ஆணைக்குக் கட்டுப் பட்டும் இருந்தனர்.

2. பேரரசுகளின் அரசாங்கத்திலும், படையிலும் முக்கிய பதவிகளை வகித்தனர்; சேர, சோழ, பாண்டிய முடியுடை வேந்தர்களுடைய பெயர்களையும், விருதுகளை யும் மற்ற பெருமைகளையும் தங்களுடைய சந்ததியர் களுக்குச் சூட்டிக் கொண்டனர்; இப்பேரரசுகள் வலிமை குன்றிய பிறகு பல அல்லது சில குறுநிலத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து பேரரசை வீழ்த்தி தனி அரசுகளை அமைத்தனர் எனும் இருவித கூறுபாடுகளைத் தமிழ்நாட்டு குறுநில மன்னர்களின் வரலாற்றில் நாம் காண முடிகிறது.[2]

சோழ, பாண்டிய பெருவேந்தர்களும், பல்லவ மன்னர்களும் பெருநிலப் பரப்புகளாகிய சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை மண்டலம் முதலிய நாடுகளில் தங்களுடைய ஆட்சியை நிலைப்படுத்த முயன்றனர். இம்மண்டலங்களில் அடங்கியிருந்த சிறு நிலப்பகுதிகளில் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களின் வருமானங்களும் படை ஆற்றல்களும் முடியுடை வேந்தர்களுடைய வருமானங் களுக்கும் ஆற்றல்களுக்கும் அடங்கியவையாகவே இருந்தன. குறுநில மன்னர்கள், மூவேந்தர்களுடைய அல்லது பல்லவர்களுடைய இறைமை அதிகாரத்தை (Sovereignty)

நீக்கிக் கொள்வதற்கும் முடியுடை வேந்தர்கள் அதை நிலை பெறச் செய்வதற்கும் தமிழ்நாட்டில் நடத்த போர்கள் பலவாகும். தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் கூறப்பெறும் பல போர்கள் முடியுடை வேந்தர்களுக்கும் குறுநில மன்னர்களுக்கும் இடையே நடந்த போர்களைப் பற்றியனவாகும். குறுநில மன்னர்கள் முடியுடை வேந்தர்களுக்கு எக்காலத்திலும் அடங்கி நன்றி மறவாமல் இருந்தனர் என்று கூற முடியாது. குறுநில மன்னர்கள் தங்களுடைய முடியுடை வேந்தர்களுக்குக் கொடுத்த திறைப் பொருட்கள் எவை என்பதும் எவ்விதக் கடமைகளை ஆற்றினர் என்பதும் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் தெளிவாகவோ அல்லது குறிப்பாகவோ கூறப் பெறவில்லை. ஆயினும் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் இருந்து சில வரலாற்றுச் செய்திகளையும் உண்மைகளையும் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

1. குறுநில மன்னர்கள் முடியுடை வேந்தர்களுடைய போர்களில் ஈடுபட்டுத் தங்களுடைய படைகளை நடத்திச் சென்று வெற்றியும் தோல்வியும் அடைந்துள்ளனர். எடுத்துக் காட்டாகப் பல்லவ - பாண்டிய போராட்டத்தில் கங்கர்களும் பாணர்களும் முத்தரையர்களும் கொடும்பாளூர் வேளிர்களும் ஈடுபட்டுள்ளனர்.

2. முடிவேந்தர்களுடைய பெயர்களையும் பட்டங் களையும் தங்களுடைய பெயர்களுக்கு முன் வைத்துக் கொண்டனர். எடுத்துக்காட்டாக நரசிங்கமுனையரையன், பெரும்பிடுகு, விடேல் விடுகு முத்தரையன், இராசராசவாண கோவரையன், குலசேகர சம்புவராயன் முதலியன குறுநில மன்னர்களின் பெயர்களாகும்.

3. குறுநில மன்னர்கள் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களுடைய அரசியல் உறவையும் பற்றையும் மாற்றிக் கொள்வதும் உண்டு. இச்செய்கை பல்லவ, சோழ,

பாண்டிய, விசயநகரப் பேரரசுகள் மறைவதற்குக் காரணமாகவும் இருந்தது.

பல்லவர் பாண்டியர் காலக் குறுநில மன்னர்களின் வரலாறு

தோராயமாக கி.பி.300 முதல் 900 - ஆம் ஆண்டு வரையில் தமிழகம் பல்லவ - பாண்டிய அரசர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தமிழகத்தின் வடபகுதியில் பல்லவர்களும், தென்பகுதியில் பாண்டியர்களும் தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தில் மேலாண்மை அடைந்திருந்தனர். மதுரை பாண்டியரின் தலைநகராகவும், காஞ்சிபுரம் பல்லவரின் கோநகரமாகவும் விளங்கின. இவ்விரு முடியுடை வேந்தரும் தமிழகம் முழுவதிலும் தங்களது இறைமை அதிகாரத்தைப் பெருக்குவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். இவ்விரு அரச வமிசங்களுக்கிடையே நடந்த போராட்டங்களால் தமிழ் நாட்டிற்கு வடக்கே மேலைச் சாளுக்கிய அரசர்களாகிய இரண்டாம் புலிகேசியும் அவருக்குப் பின் வந்தவர்களும் பல்லவப் பேரரசை அடக்கி ஆள்வதில் பேரார்வம் கொண்டிருந்தனர். தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் அரசோச்சிய மேலைக் கங்கர்களுக்கும் பல்லவ சாளுக்கியர்களுக்கும் இடையே ஓயாத போர்கள் நடந்தன. மேற்கூறப்பெற்ற முடியுடை வேந்தர்களைச் சார்ந்த குறுநில மன்னர்களும் இந்த ஆதிக்கப் போட்டியில் பங்கு கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தமிழக வரலாற்றில் பல்லவ - பாண்டிய - சாளுக்கிய அரசர்களின் போராட்டங்களில் கலந்து கொண்ட குறுநில மன்னர்களைப் பற்றிய வரலாறே ஈண்டு எழுதப் பெறுவதாகும். பல்லவருடைய ஆட்சிக் காலத்தில் இருந்த குறுநில மன்னர்களின் வரலாறு என்ற ஆராய்ச்சி நூலை எழுதிய திரு.எம்.எஸ். கோவிந்தசாமி என்பார், அக்காலத்தில் இருந்த குறுநில மன்னர்கள் எழுவர் என வகைப்படுத்தியுள்ளார். அவர்களுள் முத்தரையர்; உறையூர், பழையாறை, ரேநாடு முதலிய இடங்களில் இருந்த சோழர்கள்; கொடும்பாளூர்த்

தலைவர்கள், பாணர்கள் அல்லது வாணகோவரையர்கள், அதிகைமான்கள், மேலைக் கங்கர்கள், தனிப்பட்ட குறுநில மன்னர்கள் என்பவர்கள் முக்கியமானவர்கள் ஆவர்.

முத்தரையர்கள்

தற்காலத்திய திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மாவட்டங்களில் பெரும் பகுதிகளை முத்தரையர்கள் ஆண்டு வந்தனர். இவர்களது நாடு முத்தரையர் நாடு என்றே கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றது. திருக்காட்டுப் பள்ளிக்கு அருகில் உள்ள செந்தலை அல்லது ஐம்பது கல் நகரம் இவர்களது தலைநகராகும். இப்பொழுது ஐம்பது கல்நகரம் அம்பிநாரம் என்றழைக்கப் பெறுகிறது.[3] செந்தலைக்கு அருகில் உள்ள நாகத்தி, உமையவள் ஆற்காடு, வல்லம், தஞ்சை முதலிய பகுதிகள் முத்தரையரின் தலைநகரத்தில் அடங்கியிருந்ததாகத் தெரிகிறது. திருக்காட்டுப்பள்ளி, நியமம், விஷ்ணம்பேட்டை, இளங்காடு, கூடநாணல்கூழாக்கி ஆற்காடு, விண்ணமங்கலம், பொன்விளைந்தான் பட்டி ஆகிய பகுதிகளும் செந்தலையைச் சார்ந்திருந்தன. செந்தலைக்குச் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயரும் வழங்கியது. தஞ்சையும் வல்லமும் முத்தரையர்களது தலைமை நகரங்களாகச் சில காலம் இருந்தன.

முத்தரையரின் தோற்றம்

முத்தரையரின் தாயகம் யாது? அவர்கள் எவ்விதம் குறுநில மன்னர்களாயினர் என்பது போன்ற வினாக்களுக்கு வரலாற்று அறிஞர்களால் இறுதியான விடை கூற முடியவில்லை. டாக்டர் கிருட்டிணசாமி அய்யங்கார் ‘முத்தரையர் களப்பிரரின்’ கிளைக் குடியினர் ஆவர் என்று கருதினர்.[4] கல்வெட்டறிஞர் கே.ஜி. கிருட்டிணன் இக்கருத்தினை ஒப்புக் கொள்கிறார். திரு மு. இராகவ அய்யங்கார் இக்கருத்தினை மறுத்துக் கூறியுள்ளார்.[5] திரு

நடன காசிநாதன், முத்தரையரைக் களப்பிரரின் கிளைக் குடியினர் என்று கூறுவதைவிட களப்பிரர், முத்தரையர் (ஆகிய இருவரும்) பொதுவான ஒரு குடியிலிருந்து பிரிந்து வளர்ந்தவர் என்று கருதியது சிறப்பாகத் தோன்றுகிறது என்று கருதுகிறார்.[6] இக்கருத்து முத்தரையர் களப்பிரர் இனத்தைச் சேர்ந்தவர் என்பதையே வலியுறுத்தும். திரு அ. நீலகண்ட சாஸ்திரியார், வெங்கட்ராமையா, ந.மு. வேங்கடசாமி நாட்டார் முதலியோர் முத்தரையர் பல்லவரின் கால்வழியினர் என்று கூறியது பொருத்த முடையதன்று.[7]

முத்தரையர் பாண்டியரின் பரம்பரையைச் சேர்ந்த வர்களாக இருத்தல் வேண்டும் என்றும் பாண்டியர்களின் நேரான வழித்தோன்றல்களாக இல்லாவிட்டாலும் அவர்களின் கிளை வழித் தோன்றல்களாக இருக்க வேண்டுமெனக் கருதுவோரும் உண்டு.[8] முத்தரையத் தலைவன் ஒருவன் மீனலவன் என்று நார்த்தாமலைக் கல்வெட்டிலும் தென்னவன் என்று மற்றொரு கல்வெட்டிலும் குறிக்கப்பட்டுள்ளதைக் கொண்டும் சுவரன் மாறனுடைய செந்தலைக் கல்வெட்டில் 'பொருகயல் சேர் வெல் கொடியோன் என்று குறிக்கப் பெற்றுள்ளமை கொண்டும் மாறன் என்னும் பெயரினை இணைத்துக் கொண்டுள்ளமை கொண்டும் முத்தரையர்களைப் பாண்டியர்களின் கிளை வழியினர் எனக் கூறமுடியாது. இவர்கள் பாண்டியர் களடங்கிய சிற்றரசர்களாக இருந்தமையால் மாறன் என்னும் பெயரைப் பெற்றனர் எனக் கொள்ளலாம். இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையனுடைய செந்தலைக் கல்வெட்டில் ஸ்ரீ கள்வர் கள்வன் என்று குறிக்கப்பட்டுள்ளான். முத்தரையர் சமண சமயத்தை ஆதரித்துள்ளனர். ஆகையால் முத்தரையர் களப்பிரரின் கிளைக் குடியினராக இருக்கலாம் என கே.ஜி. கிருஷ்ணன் கூறுவர்.[9]

மேற்கூறப்பெற்ற கொள்கைகளை ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் சில கருத்துப் பிழைகள் உள்ளன.

முத்தரையர், களப்பிரரின் கிளைக் குடியினர் என்பதற்கோ, பாண்டியர்களுடைய மரபைச் சேர்ந்தவர்கள் என்பதற்கோ தகுந்த ஆதாரங்கள் இல்லை. முத்தரையர்கள், கொடும்பாளூர் வேளிர்களுடன் திருமண உறவு கொண்டுள்ளனர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துள்ளனர். சைவ வைணவச் சமயத்தை ஆதரித்து கோயில்களை அமைத்துள்ளனர். ஆகையால், முத்தரையர்கள் தமிழ் நாட்டில் இருந்த வேளிர் இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கொள்வது ஏற்புடையதாகும்.

முற்கால முத்தரையர்கள்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செங்கத்தை அடுத்த தண்டராம்பட்டில் கிடைத்த இரண்டு நடுகல் கல்வெட்டுகள் பொன்மாந்தனார் என்ற முத்தரையத் தலைவனைப்பற்றிக் கூறுகின்றன. தமிழ்நாட்டின் வட பகுதியில் உள்ள மேற்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு இந்தப் பொன்மாந்தனார் ஆட்சி புரிந்துள்ளார்.[10] இந்தப் பொன்மாந்தனார், முதலாம் நரசிம்மவர்மப் பல்லவனின் உடன் காலத்தவன் என்பதும், பல்லவ வேந்தனுக்கு உட்பட்டு ஆட்சிபுரிந்தவன் என்பதும் கல்வெட்டுகளால் புலனாகின்றன. தொண்டைமண்டலத்திலுள்ள செங்கம் பகுதி இவனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இக்குறுநில மன்னன் தமது அண்ணன் மகனான வாணகோ முத்தரையர் என்பவரால் போரில் தோற்கடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.[11] பல்லவ முதலாம் நரசிம்மவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டில் வாணகோ முத்தரையர் மொன்மாந்தனாரைத் தாக்கியுள்ளதால் இவனது ஆட்சியாண்டு கி.பி. 637 - இல் முடிவுற்றதாகக் கருதலாம். இவனது ஆட்சி கி.பி. 630 முதல் கி.பி. 637 முடிய நீடித்ததாக ஊகிக்கலாம்.

வாணகோ முத்தரைசர்

வாணகோ முத்தரைசர், பொன்மாந்தனாரை அடுத்து மேற்கோவலூரைச் சுற்றியுள்ள பகுதியினை ஆண்டு

வந்ததாகத் தெரிகிறது. இவன் பொன்மாந்தனாரை வென்று கி.பி. 737 - இல் ஆட்சியைக் கைப்பற்றினான் என்பதனை "மேற்கோவலூர் மேல் வந்து தஞ்சிற்றப்படிகளை எறிந்த ஞான்று"[11அ] என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

முதலாம் நரசிம்மனின் உடன் காலத்தினனான வாணகோ முத்தரைசன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்பதனை அறிந்து கொள்ள முடியவில்லை.

<u>மாந்தபருமர்:</u> வாணகோ முத்தரைசரை அடுத்து மாந்த பருமர் ஆட்சிக்கு வந்ததாகக் கொள்ளலாம். மாந்தபருமர் என்னும் பெயரைக் கொண்டு, இவன் பொன்மாந்தனாரின் மகனாகவே இருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது.[12] தனது தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய வாணகோ முத்தரைசரை வென்று பழி தீர்த்துக் கொண்ட இவன் புகழ்மிக்க மன்னனாகத் திகழ்ந்தான்.

சான்றுகள்

செங்கம் பகுதியில் அமைந்துள்ள கட்டாடியிலும் மேல்புன்செய்யிலும் தருமபுரி மாவட்டம் கொளத்தூரிலும் காணப்பெறும் நடுகல் கல்வெட்டுகள் இக்குறுநில மன்னனைப்பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகின்றன. மேற்கூறப் பெற்ற கல்வெட்டுகளை ஆய்ந்து பார்க்கும்போது இவர் எந்த அரசனுக்கும் உட்படாது தனித்தாண்ட பெருவேந்தனாகத் தெரிகிறது. கொங்கணி அரசரும் கங்க மன்னரும் இவனது மேலாண்மையை ஏற்றுக் கொண்டனர்.[13] இவ்வேந்தனது 22 - வது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கிடைத்துள்ளதால் இவன் 22 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என்பது திண்ணம். அஃதாவது கி.பி. 642 முதல் 664 வரை நீடித்ததாகக் கொள்ளலாம்.

தொண்டை மண்டலப் பகுதியிலும் தமிழகத்தின் வடஎல்லையும் மைசூர் நாட்டின் தென் எல்லையும் அடங்கிய பகுதியிலும் ஆட்சிபுரிந்த இந்த முத்தரையத் தலைவனை

முற்கால முத்தரையர் என்றும் தொண்டைமுத்தரையர் என்றும் அழைக்கலாம். சோழ மண்டலப் பகுதியில் ஆண்ட முத்தரையரைப் பிற்கால முத்தரையர் என்றும் பெரு முத்தரையர் என்றும் கூறலாம்.

பிற்கால முத்தரையர் அல்லது பெருமுத்தரையர்

தொண்டை மண்டலத்தின் தென் பகுதியை ஆண்டுவந்த முத்தரையரைக் காட்டிலும், தஞ்சைப் பகுதியை ஆண்ட பிற்கால முத்தரையர் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளனர். பிற்கால முத்தரையரைப் பற்றி அறிந்து கொள்வதற்குச் சில சான்றுகள் கிடைத்துள்ளதால் அவர்களது ஆட்சி பற்றியும் போர் நடவடிக்கைகள் பற்றியும் கலை இலக்கியத்தொண்டு பற்றியும் ஓரளவிற்குத் தெரிந்துகொள்ள முடிகிறது. முற்கால முத்தரையரது ஆட்சியின் முடிவிற்கும் பிற்கால முத்தரையரது ஆட்சியின் தொடக்கத்திற்கும் இடையில் ஒரு கால இடைவெளி இருந்ததாகத் தெரிகிறது. முற்கால முத்தரைய வேந்தர்கள் தொண்டை மண்டலத்தில் ஒரு பகுதியைப் பல்லவ மன்னர்களுக்கு உட்பட்ட சிற்றரசர்களாகவே ஆண்டு வந்தனர். இதனால் தமிழகத்தின் வடபகுதியில் பல்லவரின் செல்வாக்கு மிகுந்து இருந்ததனை நாம் அறியமுடிகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாண்டியர்கள் தமிழகத்தின் தென்பகுதியில் பேராதிக்கம் பெற்ற மன்னர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் அடிக்கடி பல்லவர்களின் ஆதிக்கத்தில் இருந்து சோழநாட்டின் எல்லையோரப் பகுதிகளில் ஊடுருவல் செய்து வந்தனர். பல்லவ மன்னர்கள், மேலைச் சாளுக்கியருடனும் இராட்டிரகூடருடனும் அடிக்கடி போர் செய்து வந்ததால் சோணாட்டை தங்களுடைய ஆட்சியின்கீழ் கொண்டு வருவதற்கு முயன்ற பாண்டியனை ஒடுக்குவது சுலபமான காரியமாகத் தோன்றவில்லை.

பாண்டியர் படையெடுப்புகளைத் தகுந்த முறையில் தடுக்காவிடில் சோணாடு முழுவதையும் பல்லவர்கள் இழக்க

வேண்டிய நிலை ஏற்படக்கூடும். இதனை உணர்ந்த பல்லவ மன்னர்கள், சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த முத்தரையத் தலைவர்களைத் தங்கள் பக்கத்தில் சேர்த்துக்கொண்டு எல்லைப் பாது காவலர்களாக அமைத்துக் கொண்டனர் என்று கூறலாம்.

பல்லவருக்குப் பாதுகாவலராய் இருந்த முத்தரைய மன்னர்கள் பல்லவர்களிடம் அதிகச் சலுகைகளைப் பெற்றனர். பல்லவருக்கு உட்பட்ட குறுநில மன்னர்களாக இருந்தபோதிலும் தனியாட்சி புரிந்த அரசர்களைப் போன்றே ஆட்சி புரிந்தனர். பல்லவ - பாண்டியர் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்டனர். சோழநாட்டில் பாண்டியரது ஊடுருவல்களைத் தடுத்த முத்தரையர் பாண்டியர்களின்மீது வெற்றி கொண்டதின் நினைவாக மாறன், மீனவன், தென்னவன் என்னும் விருதுப் பெயர்களைப் பெற்றனர். பல்லவ மன்னர்களும் வெற்றி வீரர்களாகத் திகழ்ந்த முத்தரையர்களுக்கு 'விடேல் விடுகு' மாற்பிடுகு, பெரும்பிடுகு முதலான பட்டங்களை வழங்கி அவர்களைச் சிறப்பித்தனர்.

முத்தரையர் காவிரிப் பகுதியில் குறுநில மன்னர்களாக இருந்ததினால் சோழ நாட்டில் பாண்டியரது ஊடுருவல் தடுக்கப்பட்டது போன்று, சோழ நாட்டினைப் பரம்பரை யாக ஆண்டுவந்த சோழ அரச பரம்பரையினரையும் அடக்கியாளுவதற்கும் முத்தரையர்கள் உதவி செய்தனர். இதனால் முத்தரையர் பல்லவருக்கு இரு வகைகளில் பணி புரிந்தனர் என்பது போதரும். பலகாலம் பல்லவருக்குப் பெருந்துணையாக இருந்த முத்தரையர் சிலகாலம் வலிமைமிக்க பாண்டியரின் சிற்றரசராகவும் மாற்றம் அடைந்ததுண்டு. சில சமயங்களில் முத்தரையர்கள், பாண்டியருக்கும் அடங்காது விடுதலை பெற்ற வேந்தர் களாகவும் ஆண்டுள்ளனர். அரசியல் சூழ்நிலைக் கேற்ப இவர்களது நிலையும் மாற்றம் அடைந்தது.

முத்தரைய மன்னர்களுடைய பெயர்கள் வந்துள்ள பல கல்வெட்டுகளை ஆராய்ந்து பார்த்ததில் இவர்களுடைய மரபுப் பட்டியல் ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது.

இக்கல்வெட்டுகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடையிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையில் உள்ள ஒன்றரை நூற்றாண்டுகள் முத்தரையர்கள் ஆட்சி செய்துள்ளனர். விடேல் விடுகு விழுப்பேரதி அரைசன் என்ற சாத்தன் மாறன் இம்மர'பின் முதல் தலைவனாகத் தோன்றுகிறது. இவனுடைடய தாயின் பெயர் பெரும் பிடுகு பெருந்தேவி என்பதாகும். சாத்தன் மாறன் என்ற பெயரின் முதற்பகுதி இவனுடைய தந்தை சாத்தன் என்ற பெயரைக் குறிக்கின்றதாகக் கொள்ளலாம். செந்தலைத்தூண் கல்வெட்டில் இம்மரபின் மூன்று அரசர்களின் பெயர்கள் காணப்பெறுகின்றன. இவற்றுள் முதல்வனாகப் பெரும்பிடுகு முத்தரையனான குவாவன்மாறன் குறிக்கபெறுகிறான். குவாவன் என்பது இவனுடைய பாட்டன் பெயராகவும் கொள்ளலாம். மாறன் பரமேசுவரனும் அவனுடைய மகன் சுவரன் மாறனும் ஐந்தாவது ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவர்களாகக் கொள்ளலாம்.

பல்லவ மன்னன் நந்திவர்மனுடைய 16 - ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் விடேல் விடுகு முத்தரையனான குவாவன் சாத்தன் என்பானின் பெயர் காணப்பெறுகிறது. குவாவன் மாறனுக்குக் குவாவன் பரமேசுவரன், மாறன் குவாவன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர் மாறன் குவாவனுடைய மகன் விடேல் விடுகு முத்தரையனான குவாவன் சாத்தன் என்பவனாவான். குவாவன் சாத்தனுக்கு சாத்தன் பூதி, சாத்தன் பழியிலி என்ற இரு புதல்வர்களும் சாத்தன்காளி என்ற மகளும் இருந்தனர். எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொறிக்கப் பெற்றதாகக் கருதப்பெறும் கல்வெட்டு ஒன்றைக்கொண்டு சாத்தன்பூதி என்பான் சுயேச்சையாக ஆட்சி புரிந்தவனாகக்

முத்தரையர் மரபுப்பட்டியல்

I சாத்தன் - - (மனைவி பெரும்பிடுகு பெருந்தேவி

II விடேல் விடுகு விழுப்பேராதி அரைசன் (சாத்தன் மாறன்)

III மாறன் குவாவன்

IV பெரும்பிடுகு முத்தரையன் I

V இளங்கோ அதிஅரையன்

மாறன் பரமேஸ்வரன்

VI பெரும்பிடுகு முத்தரையன் II

சுரன் மாறன்

குவாவன் மாறன்

குவாவன் சாத்தன்

விடேல் விடுகு இளங்கோ அதியரையன் காத்தன்பூதி

சாத்தன்காளி (பெண்)

சாத்தன் பழியிலி

குவாவன் சாத்தன்

இளையதலைமுறை

சாத்தன் பீதி விடேல் விடுகு இளங்கோ அதியரையன்

சாத்தன்காளி

சாத்தன் பழியிலி

பழியின் சிறிய நங்கை

கணவன்

மல்லன்

- அமரீன்றி முத்தரையன் பூதிகளரி
- பூதி அரிந்திகை விடேல் விடுகு இளங்கோவேளார் சாத்தன் மறவன்

- மீனவன் தமிழதி அரையன்
  - அனந்தன் பழியிலி
- மல்லன் விடுமன் தென்னவன் தமிழ்தி அரையன் (14)

கருதலாம். பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனுடைய ஆட்சிக் காலத்தில் வரையப்பட்ட கல்வெட்டு ஒன்றில் சாத்தன் பழியிலியின் பெயர் காணப்பெறுகிறது.[15]

I. சாத்தன்

பிற்கால முத்தரைய மன்னருள் சாத்தன் என்பானே முதல் அரசன் என்று கருதப்பெறுகின்றான். பெரும்பிடுகு பெருந்தேவி என்பார் இவனது தேவியார் ஆவர். பெரும்பிடுகு என்னும் பல்லவ மன்னர்களுடைய விருதிலிருந்து இவள் பல்லவகுல இளவரசி என்று கருதலாம். முத்து வணிகத்தில் தனிப்புகழ் பெற்று விளங்கியமையால் இவ்வரசன் சாத்தன் என்று அழைக்கப்பெற்றிருக்கக்கூடும். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமெய்யம் விட்டுணு குகைக்கோயில் பெரும்பிடுகு பெருந்தேவியின் காலத்தில் அமைக்கப்பட்டது. முத்தரையரது கோயில்களுள் இதுவே பழமை மிக்கதாகும்.[16]

II. சாத்தன் மாறன்

சாத்தனை அடுத்து அவனது மகனான சாத்தன் மாறன் என்பான் அரியணை ஏறினான். இவனுக்கு விடேல் விடுகு விழுப்பேரதியரையன் என்ற விருதுப்பெயரும் உண்டு.[17] கல்வெட்டறிஞர் கே.ஜி. கிருஷ்ணன் அவர்கள் இவ்வேந்தனைப்பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் எழுத்தமைதி நோக்கி இவன் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்திருக்கலாம் என்று கூறுவர்.[18] அதாவது இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்ம பல்லவன் காலத்தில் வாழ்ந்தவன் என்று கொள்ளலாம். இவ்வேந்தனைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு திருமெய்யத்திலுள்ள மெய்யப்பெருமாள் கோயிலில் காணப்பெறுகிறது.

III. மாறன் குவாவன்

சாத்தன் மாறனை அடுத்து மாறன் குவாவன் மணிமுடி சூடிக்கொண்டான். இவ்வேந்தனும் இரண்டாம் நந்திவர்மப் பல்லவனின் உடன் காலத்தினன் ஆவன். பொன் விளைந்தான்பட்டியிலுள்ள நந்திவர்மனின் கல்வெட்டு ஒன்று

"ஸ்வஸ்தி ஸ்ரீ நந்திபன்மற்குயாண்டு
........................டுகு முத்தரையன் குவாவன் மணவாட்டிய்"

என்று குறிப்பிடுகிறது. இக் குவாவன் நந்திவர்மப் பல்லவனுக்கு அடங்கிய சிற்றரசனாக ஆண்டிருக்கிறான் என்பதும், அவனது மனைவி சமணப் பள்ளிக்குச் சில பொற்காசுகளைக் கொடையாக அளித்திருக்கிறாள் என்பதும் இக்கல்வெட்டினால் தெரியவருகிறது.[19] ஆகவே குவாவன் மாறன், குவாவன் சாத்தன் என்ற இவருடைய தகப்பன் மாறன் குவாவன் என புலப்படுகிறது. இம்மன்னனின் மகனான குவாவன் மாறனைப் பற்றிய கல்வெட்டு தஞ்சை மாவட்டத்தில் செந்தலையிலும், மற்றொரு மகனாகிய குவாவன் சாத்தனின் கல்வெட்டு மலையடிப்பட்டியிலும் கிடைத்திருப்பதால் இவ்விரு பகுதிகளும் சேர்ந்த ஒரு பெரும்பகுதியைக் குவாவன் மாறன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.[20]

IV. குவாவன் மாறன்

மாறன் குவாவனையடுத்துக் குவாவன் மாறன் ஆட்சிக்கு வந்தான். பெரும்பிடுகு முத்தரையன் என்னும் பட்டப்பெயரினைப் பூண்டிருந்தான். இவன் இரண்டாம் நந்திவர்மப் பல்லவனுக்கும் முதலாம் இராசசிம்மப் பாண்டியனுக்கும் உடன் காலத்தினன் ஆவன். இவனது பெயரில் உள்ள குவாவன் இவனுடைய தந்தையைக் குறிப்பதாகவும் மாறன் என்னும் பெயர் இவனது பாட்டனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

V. இளங்கோயதி அரையன் மாறன் பரமேசுவரன்

குவாவன் மாறன் மைந்தனான மாறன் பரமேசுவரன் தன் தகப்பனுக்குப் பிறகு மன்னன் ஆனான். செந்தலைக் கல்வெட்டு இவ்வேந்தனைக் குவாவன் மாறனவன் மகன் இளங்கோயதியரையனாயின மாறன் பரமேசுரன் என்று குறிப்பிடுகின்றது. இரண்டாம் நந்திவர்மப் பல்லவனுடைய 'பரமேசுவரன்' என்னும் விருதுப் பெயரினை மேற் கொண்டான் என்பது புலனாகும். முத்தரைய மன்னர் களுக்குள் பெரும்புகழ் பெற்ற பெரும் பிடுகு முத்தரையன் சுவரன் மாறன் என்றவனை ஈன்றெடுத்த பெருமையும் புகழும் இம்மன்னனைச் சார்ந்ததாகும்.

VI. பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறன்

இவ்வேந்தரைப் பற்றிய செய்திகள் செந்தலைக் கல்வெட்டில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.[21] இவை யனைத்தும் பாவடிவிலேயே அமைந்துள்ளன. இவற்றுள் சில சிதைந்துள்ளன. "வீரத்தின் உலைக்களனாக, வெற்றியின் நிலைக்களனாக வாழ்ந்த இவ்வாற்றல் மறவன் களம் பல கண்டு வெற்றி பல கொண்டு பல்லவரின் மேலாண்மையினை இப்பாரினில் உயர்த்துவதில் பெரும்பங்கு வகித்தான்'' என இராசசேகரத் தங்கமணி கூறுவர். ஆனால் பல்லவருக்கும் பாண்டியருக்கும் இடையே நடந்த எந்தப் போரில் எவ்வாண்டில் பங்கு கொண்டான் என்று கூறவில்லை.

இரண்டாம் நந்திவர்மனுக்கு எதிரியாகிய சித்திரமாயன் என்பவனுக்குப் பாண்டிய மன்னன் முதலாம் இராசசிம்மன் உதவி செய்தான். வேள்விக்குடிச் செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் முதலாம் இராசசிம்ம பாண்டியன் பல்லவ மன்னனைத் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில் இராசசிம்ம பாண்டியன் பல்லவப் படைகளை நெடுவயல், குறுமடை, மண்ணிக் குறிச்சி, திருமங்கை, பூவாலூர், கொடும்பாளூர் குழும்பூர்,

பெரியலூர் முதலிய இடங்களில் தோற்கடித்ததாகக் கூறுகிறது. இரண்டாம் நந்திவர்மன்மீது மேற்கூறப்பெற்ற இடங்களில் வெற்றிகொண்டு அவ்வரசனை நந்திபுரம் என்னுமிடத்தில் முற்றுகையிட்டதையும் நாம் அறிகிறோம். இந்தக் குழப்பமிக்க காலத்தில்தான் மேலைச் சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ் சிபுரத்தின்மீது படையெடுத்து அந்நகரத்தைத் தன்வசப்படுத்தினான்.

இரண்டாம் நந்திவர்மன் நந்திபுரக் கோட்டையில் முற்றுகையிடப்பட்ட சமயத்தில், வில்வலபுரத்துத் தலைவனும் பல்லவ சேனைத் தலைவனுமான உதயச் சந்திரன் நந்திபுர முற்றுகையிலிருந்து பல்லவப் பேரரசன் இரண்டாம் நந்திவர்மனை விடுவித்து மேலைச் சாளுக்கியச் சேனைகளையும் தொண்டை மண்டலத்தில் இருந்து துரத்திப் பெரும்புகழ் கொண்டான். இந்தப் பல்லவ பாண்டியப் போராட்டத்தில்தான், முத்தரைய சிற்றரசனாகிய சுவரன் மாறன் பேரரசனாகிய இரண்டாம் நந்திவர்மனுக்கு உதவி செய்திருக்க முடியும். சுவரன் மாறனுடைய செந்தலைக் கல்வெட்டில் சுவரன் மாறன் பாண்டியர்கள் மீதும் சேரநாட்டு அரசன் மீதும் கீழ்க்கண்ட இடங்களில் வெற்றி பெற்றான் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்விடங்களாவன கொடும்பாளூர், மணலூர், திங்களூர், காந்தளூர், அழுந்தியூர், காரை மரங்கூர், அண்ணல்வாயில், செம்பொன்மாரி, தஞ்சை செம்புல நாட்டு வெண்கோடல், புகலி, கண்ணனூர் முதலியன. இவ்விடங்கள் எல்லாம் தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இன்றும் உள்ளன. செந்தலைக் கல்வெட்டு சுவரன் மாறனால் ஆதரிக்கப்பெற்ற கவிஞர்களால் ஆக்கப்பெற்ற மெய்க்கீர்த்திகள் என்று கொண்டாலும் அவைகள் முற்றிலும் வரலாற்று உண்மைகள் அல்ல எனக் கூறமுடியாது. சுவரன் மாறன் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனுடைய படைத் தலைவனுடன் சேர்ந்து மேற்கூறப்பெற்ற இடங்களில் பல

வெற்றிகளைப் பெற்றுப் பல்லவப் பேரரசை நிலைபெறச் செய்தான் எனக் கூறலாம்.[22]

செந்தலைத்தூண் கல்வெட்டு

செந்தலை சுந்தரேசுவரர் கோயில் முன் மண்டபத்தில் காணப்பெறும் நான்கு தூண்களின் அடிப்பாகங்கள் சிதைந்து காணப்பெறுகின்றன. அவைகள் சிதையாமல் இருந்திருந்தால் 27 வெண்பாக்கள் நமக்குக் கிடைத்திருக்கும். இந்த நான்கு தூண்களிலும் காணப்பெறும் கல்வெட்டுகள், சுவரன் மாறன் நியமத்தில் பிடாரி கோயில் ஒன்று எடுப்பித்த செய்தியைத் தெரிவிக்கின்றன. மற்றும் தான் வெற்றி கொண்ட ஊர்களின் பெயர்களையும் கல்லில் வெட்டும்படி ஆணையிட்டுள்ளான். அதனைச் "சுவரன் மாறனவன் எடுப்பித்த பிடாரி கோயில் அவனெறித்த ஊர்களும் அவன் பேர்களும் அவனைப் பாடினார் பேர்களும் இத்தூண்கண் மேலெழுதின இவை" என அக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டுகளில் சுவரன் மாறன் கீழ்க்கண்ட பட்டங்களை மேற்கொண்டுள்ளான்.

(1) சிரீ சத்ரு மன்னன் (2) சிரீ கள்வர் கள்வன் (3) சிரீ அதி சாகசன். மேலும் பத்து பட்டப் பெயர்களையும் அக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவையாவன: சிரீ மாறன், அபிமான தீரன், சத்ருகேசரி, தமராளன், செருமாறன் வேல்மாறன், சாத்தன் மாறன், தஞ்சைக்கோன், வல்லக்கோன், வான்மாறன் முதலியனவாகும்.

சுவரன் மாறனைப் பற்றி மூன்று தமிழ்ப் புலவர் பாடியுள்ளதாக அவனுடைய கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

(1) திருச்சி மாவட்டத்திலுள்ள பாச்சில் வேள் நம்பி

(2) கோட்டாற்று இளம்பெருமானார்

(3) கிழார்க் கூற்றத்துப் பவதாயமங்கலத்து குவாவன் காஞ்சன்

மேற்கூறப்பெற்ற விருதுப் பெயர்களையும், சுவரன் மாறனைப்பற்றிப் பாடிய புலவர்களையும் ஆதாரமாகக் கொண்டு இக்குறுநில மன்னர் ஒரு பெரும் பேரரசனாகத் திகழ்ந்தனன் என்று நடன காசிநாதன் கூறுவர். "முத்தரைய அரசர்களுள் இவன் பெரும் பேரரசனாகத் (சக்கரவர்த்தி யாகத்) திகழ்ந்தவன் என்று கூறலாம். பல்லவ மன்னர்களுள் முதலாம் நரசிம்மவர்மனுக்கும், சோழ மன்னர்களுள் முதலாம் இராசராசனுக்கும் பாண்டிய மன்னர்களுள் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கும் இவனை ஒப்பிடலாம். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தனது வெற்றிகளைக் குறிக்கும் செய்திகளை வெண்பாக்களில் எழுதி பொறிக்கச் செய்த செய்கையால் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த தமிழ் மன்னர்கள் அனைவரையும் இவன் விஞ்சி நிற்கிறான்".[23]

மேற்கூறப்பெற்ற கணிப்பை வரலாற்று அறிஞர்கள் முழுவதும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இக்கூற்றுகள் ஒரு குறுநில மன்னன் தன்னுடைய பேரரசனுக்கு உதவி செய்து அப்பேரரசனால் மதிக்கப்பெறுவதற்குப் பெற்ற வெற்றிகளேயாகும். தான் ஒரு பேரரசை அமைப்பதற்கு இப்போர்களில் சுவரன்மாறன் ஈடுபடவில்லை. பல்லவ சேனைத் தலைவனாகிய உதயச் சந்திரனுடன் சேர்ந்து பக்கத் துணையாகச் சுவரன்மாறன் வெற்றிகளை அடைந்திருக்க முடியுமேயன்றித் தன்னந்தனியாக இவ்வெற்றிகளை அடைந்திருக்க முடியாது. சுவரன் மாறனால் ஆதரிக்கப் பெற்ற புலவர்கள் கம்பர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார் போன்ற கவிச்சக்கரவர்த்திகளுக்கு ஈடாகமாட்டார்கள்.[24] ஆகையால் சுவரன்மாறன் 'வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த தமிழ் மன்னர்கள் அனைவரையும் விஞ்சி நிற்கிறான்' என்ற சொற்றடரை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

முத்தரைய மன்னர்களின் இளையதலைமுறை

சாத்தன் - (மனைவி) பெரும்பிடுகு பெருந்தேவி

சாத்தன் மாறன் (வீடேல்விடுகு விழுப்பேரதி அரைசன்)

(இளையதலைமுறை)

பெரும்பிடுகு முத்தரையன் I குவாவன் மாறன்

இளங்கோ அதியரையன் மாறன் புரமேசுவரன் — குவாவன் சாத்தன் விடேல் விடுகு முத்தரையன்

பெரும்பிடுகு II முத்தரையன் சுவரன் மாறன்

விடேல் விடுகு இளங்கோ அதியரையன் சாத்தன் பூதி — சாந்தன்காளி (பெண்) — சாத்தன் பழியிலி

இம்மரபுப் பட்டியலில் காணப்பெறும் நான்காவது மன்னனாகிய பெரும்பிடுகு முத்தரையன் I குவாவன்மாறன் செந்தலைப் பகுதியை ஆண்டு வருகையில் குவாவன் மாறனின் தம்பியான குவாவன் சாத்தனின் தலைமையில், இளையபரம்பரை திருச்சிராப்பள்ளி மாவட்டம், மலையடிப் பட்டியில் ஆண்டு வந்தனர். அவர்களுள் குவாவன்சாத்தனின் முதல் மகனுக்குச் சாத்தன்பூதி, என்ற பெயர் வழங்கியது. இவனுக்கு விடேல் விடுகு இளங்கோவதியரையன் என்ற பட்டப்பெயர் இருந்தது. இக்குறுநில மன்னன் இளைய தலைமுறையில் முதல்வனாகக் கருதப் பெறுகிறான். நார்த்தாமலையில் விசயாலய சோழீசுவரம் என்று வழங்கும் சிவன் கோயிலை எடுப்பித்துள்ளான்.[25] இச்செய்தி இக்கோயிலில் காணப்பெறும் துவாரபாலகச் சிற்பத்தின் பீடத்தில் எழுதப்பெற்றுளது. அக்கல்வெட்டின் சரியான வாசகம்

"சாத்தன் பூதியான இளங்கோவதியரையர் எடுப்பித்த
க்ற்றளி மழை இடித்தழிய மல்லன் வந்துமன் ஆயின
தென்னவன் தமிழ் அதியரையன் புதுக்கு"

என்பதாகும். ஆகவே விசயாலயச் சோழீசுவரம் என்ற கற்றளி விசயாலய சோழனால் சோழீசுவரம் அமைக்கப்பெற்றதன்று. சாத்தன்பூபதி என்ற முத்தரையக் குறுநில மன்னனால் அமைக்கப்பெற்று மல்லன் விதுமன் என்பவனால் புதுப்பிக்கப் பெற்றது. பிற்காலத்தில் விசயாலய சோழீசுவரம் எனப்பெயர் பெற்றது. சாத்தன் பூதிக்குப் பூதி அரிந்திகை என்னும் .மகள் ஒருத்தி இருந்தாள். தென்னார்க்காடு மாவட்டம் திருக் கோயிலூர் வீரட்டானேசுவரர் கோயிலில் காணப்பெறும் மூன்றாம் நந்திவர்மன் காலத்திய கல்வெட்டுப் பூதி அரிந்திகை அக்கோயிலுக்கு நிவந்தம் அளித்த செய்தியைக் கூறுகிறது.[27] சாத்தன்பூதிக்குச் சாத்தன்காளி என்ற பெயருடைய உடன்பிறந்தாள் ஒருத்தி இருந்தாள். இதனை, திருக்காட்டுப் பள்ளி அக்னீசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்று 'நியமத்து ஆயிரத்தளி மகாதேவர்க்கு விடேல் விடுகு முத்தரையன் மகளான சாத்தன்காளி' என்று குறிப்பிடுகிறது. இம்மங்கை நியமத்து ஆயிரத்தளி இறைவர்க்கு நந்தாவிளக்கு வைப்பதற்குப் பதின் கழஞ்சு பொன் வைத்தாகவும் அறிகிறோம்.

சாத்தன் பழியிலி

விடேல்விடுகு முத்தரையன் குவாவன் சாத்தனுடைய இரண்டாவது மகனாவான். இவன் புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் குடைவரைக் கோயில் ஒன்றை அமைத்துள்ளான். இதனை நிருபதுங்கவர்மப் பல்லவனின் ஏழாம் ஆண்டில் வரையப்பெற்ற நார்த்தாமலைக் கல்வெட்டால் அறிய முடிகிறது. இக்கோயில் "சாத்தன் பழியிலீச்சுரம் என்று அழைக்கப்பட்டது. சாத்தன் பழயிலியின் கல்வெட்டு இதுகாறும் ஒன்றும் கிடைக்கவில்லை.

இக்கல்வெட்டிலும்கூடச் சாத்தன் பழியிலி பல்லவர்களின் விருதுப்பெயர்களை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எனவே சாத்தன் பழியிலி நிருபதுங்கப் பல்லவனுக்கு அடங்கி ஆட்சி செய்ததாகக் கூறமுடியாது. பல்லவரின் மேலாண்மையை விடுத்துத் தனித்தாண்ட குறுநில மன்னனாகக் கருதலாம்.

சாத்தன் பழியிலிக்குப் பழியிலி சிறியநங்கை என்னும் பெயரில் மகள் ஒருத்தி இருந்தாள். இம்மங்கை நல்லாள், மீனவன் தமிழதியரையனான மல்லன் அனந்தனுக்கு மணமுடிக்கப்பெற்றாள். இவ்விருவருக்கும் அனந்தன் பழியிலி என்ற மகனோ அல்லது மகளோ இருந்ததாகத் தெரிகிறது. தனது தந்தை சாத்தன் பழியிலியால் அமைக்கப்பெற்ற நார்த்தாமலைக் குடைவரைக் கோயிலின் முக மண்டபத்தினைப் பழியிலி சிறிய நங்கை அமைத்துள்ளான். இதனை நார்த்தாமலை மேல்மலைக் குன்றில் அமைந்துள்ள குடைவரைக் கோயிலின் முன்மண்டபத்து வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்றினால் அறிய முடிகிறது.[27]

தனது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் பல்லவருக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்த சாத்தன் பழியிலி தனது வலிமையைப் பெருக்கி முத்தரையரின் தனியாட்சியை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. பல்லவருக்கும் பாண்டியருக்கும் இடையே நடந்த குடமூக்குப் போருக்குப்பின் சாத்தன் பழியிலி சிரீமாற சிரீவல்லப பாண்டியனுக்குத் தனது ஆதரவை நல்கியதாகத் தெரிகிறது. (835 - 862 கி.பி.) இத்தருணத்தில்தான் விசயாலயச் சோழன் எழுச்சி பெற்று முத்தரையரை வென்று தஞ்சை நகரையும் அதைச் சூழ்ந்த பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டான். தஞ்சையை இழந்த முத்தரையர் புதுக்கோட்டைப் பகுதிக்குச் சென்றிருக்க வேண்டும். சாத்தன் பழியிலியின் இறுதிக் காலத்தில் முத்தரையர் வீழ்ச்சியுற்றனர் எனக் கூறலாம். பல்லவ வேந்தன் நிருபதுங்கவர்மனும் பாண்டியன் சிரீமாற

சிரீவல்லபனும் சாத்தன் பழியிலியின் உடன் காலத்தவர் ஆவர். சாத்தன் பழியிலி ஏறத்தாழ கி.பி. 830 முதல் 860 வரை ஆட்சி புரிந்ததாகக் கொள்ளலாம்.

பூதி களரி, சாத்தன் பூதியின் மகனாவான். இவனுக்கு அமறீன்றி முத்தரையன் என்ற பட்டப்பெயரும் இருந்தது. சாத்தன் பூதியும், பூதிகளரியும் ஒருவரே என்ற கருத்து பொருத்தம் உடையதன்று என்று இராசசேகர தங்கமணி கூறுவர்.[28] பூதிகளரி பல்லவ வேந்தன் நிருபதுங்கவர்மனின் உடன் காலத்தவன் ஆவன். இந்த முத்தரையத் தலைவனைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பல கல்வெட்டுகள் துணை செய்கின்றன. இவற்றுள் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருச்சின்னம்பூண்டி, செந்தலை, திருச்சோற்றுத்துறை. திருக்கோடிக்காவல் முதலிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் முக்கியமானவையாகும்.[29] இவற்றை ஆய்ந்து பார்த்தால், பூதிகளரி பல்லவ பாண்டிய மேலாண்மை யிலிருந்து விடுதலைபெற்ற வேந்தனாகப் புதுக்கோட்டைப் பகுதியில் ஆட்சிபுரிந்தான் என்பது விளங்குகிறது. கலையார்வம் மிக்க இவ்வேந்தன் புதுக்கோட்டை மாவட்டம் பூவாலைக்குடியில் புட்பவனேசுவரர் குடவரைக் கோயிலைக் குடைவிக்கச் செய்தான் என்பது விளங்குகிறது.[30]

தென்னவன் இளங்கோ முத்தரையன்

முத்தரையத் தலைவருள் புகழ்பெற்றவனாகிய தென்னவன் இளங்கோ முத்தரையன் பல்லவ பாண்டியருக்கு அடங்காமல் தனித்தாண்ட தலைவனாகத் தெரிகிறது. இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறனே இளங்கோ முத்தரையன் எனச் சிலர் கருதுகின்றனர்.[31] பெரும்பிடுகு முத்தரையனின் பட்டப்பெயர் பலவற்றுள் இளங்கோ முத்தரையன் என்னும் பெயர் இடம் பெறாமையாலும், பெரும்பிடுகு முத்தரையன், பல்லவருக்கு அடங்கிய குறுநில மன்னனாகவே இருந்தான் என்று தெரிவதாலும் இக்கருத்துப் பொருத்தமுடையதாகத்

தோன்றவில்லை. அடுத்து, பெரும்பிடுகு முத்தரையன் (சுவரன்மாறன்) நியமத்தில் அமைத்த பிடாரி கோயிலுக்கு இளங்கோ முத்தரையன் தானம் அளித்துள்ள செய்தி செந்தலைக் கல்வெட்டால் அறியப்படுகிறது.[32] இதில் இளங்கோ முத்தரையன் இக்கோயிலைக் கட்டியதாகக் கூறப்படாமையால், பெரும்பிடுகு முத்தரையனான சுவரன்மாறனும். இளங்கோ முத்தரையனும் ஒருவனாக இருக்க முடியாது என திரு எம்.எஸ். கோவிந்தசாமி அவர்கள் கருதுவர்.[33]

சாத்தன் பழியிலியும் இளங்கோ முத்தரையனும் ஒருவன் அன்று என்று முடிவு செய்துள்ள திரு. கோவிந்தசாமி, விடேல் விடுகு முத்தரையனான குவாவன் சாத்தனே இளங்கோ முத்தரையன் ஆவான் என்று கூறுகிறார்.[34] இதனை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் இல்லாமையால் இது ஐயப்பாட்டிற்குரியதாகும். ஆகையால், இளங்கோ முத்தரையனை விடேல் விடுகு இளங்கோவேளிராகக் கருதுவது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. இத்தலைவனைப்பற்றி அறிந்துகொள்ளப் பல கல்வெட்டுகள் துணை செய்கின்றன. இவனது 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் தஞ்சை மாவட்டம் திருச்சின்னம் பூண்டியிலும் திருகோடிக் காவலிலும் புதுக்கோட்டை கீரனூரிலும் கிடைத்துள்ளன.[35] இவனுடைய 17,18 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருக்கோடிக்காவலிலும், செந்தலையிலும் கிடைத்துள்ளன.

இத்தலைவனது திருச்சின்னம்பூண்டிக் கல்வெட்டில் எயில் நாட்டு அட்டுப்பள்ளி அரிஞ்சிகைபுரம் என்ற தொடர் காணப்பெறுகிறது. திரு.கே.சி. கிருட்டிணன் இந்த அரிஞ்சிகை புரம் பூதி அரிந்திகையின் பெயரால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறார்.[36] இளங்கோ முத்தரையனின் ஆட்சிக்காலம் சோழமன்னன் முதலாம் ஆதித்தனது ஆட்சியின் இறுதிப் பகுதியைச் சேர்ந்தது என்றும், அக்காலக் கல்வெட்டுகளின் எழுத்தமைதியும் இக்கருத்தினை உறுதி

செய்கிறதென்று கே.சி. கிருட்டிணன் கருதுகின்றார்.[37] எனவே இத்தலைவன் ஆதித்த சோழனுக்கும் முதலாம் பராந்தக சோழனுக்கும் இடைப்பட்ட காலத்தில் கி.பி. 880 முதல் 900 ஆண்டு வரையில் சோழர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனாக இருந்திருக்கலாம்.

இளங்கோ முத்தரையனுக்கு உத்தமதானி என்னும் பட்டப்பெயர் வழங்கி வந்தது. இதனைத் தஞ்சை மாவட்டம் திருச்சோற்றுத்துறையில் காணப்பெறும் ஒரு கல்வெட்டைக் கொண்டு உணரலாம். திருச்சோற்றுத்துறைக் கோயிலில் உத்தமதானி என்னும் விளக்கு எரிப்பதற்கு இத்தலைவன் பொன் தானமளித்த செய்தி கூறப்பெறுகிறது. இத்தலைவனுடைய ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பெற்ற கீரனூர் கோயில் உத்தமதானீசுவரம் என்று அழைக்கப்பெறுகிறது. திருச்சி மாவட்டம் மேலைப்பழுவூரில் உள்ள முதலாம் பராந்தக சோழனுடய 25 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உத்தமதானிச் சதுர்வேதிமங்கலத்தினைக் குறிப்பிடுகிறது.[38] மேலே குறிக்கப்பெற்ற உத்தமதானி, உத்தமதானீச்வரம், உத்தமதானி சதுர்வேதி மங்கலம் முதலான பெயர் இளங்கோ முத்தரையனின் பட்டப்பெயரான உத்தமதானி என்பதுடன் தொடர்புடையதாகும். தென்னவன் இளங்கோவேள் என்னும் பெயர் கொடும்பாளூர்த் தலைவன் பூதவிக்ரம கேசரியின் விருதுப் பெயரை நமக்கு நினைவூட்டுகின்றது. இத்தலைவன் கொடும்பாளூர் வேளிர் சாத்தன்மறவனுக்குப் பூதி அரிந்திகைக்கும் பிறந்தவனாகத் தெரிகிறது. கீரனூர் கீழ்த்தானியம் ஆகிய ஊர்களில் உள்ள உத்தம தானீசுவரர் கோயில் இத்தலைவனால் அமைக்கப் பெற்றவையாகும்.

அனந்தன் பழியிலி

அனந்தன் பழியிலி என்பான் சாந்தன் பழியிலியின் மகளான பழியிலி சிறிய நங்கைக்கும் மீனவன் தமிழதியரையனான மல்லன் அனந்தனுக்கும் மகனாவான்.

மல்லன் அனந்தன் இரண்டாம் வரகுணபாண்டியனுக்கு அடங்கிய குறுநிலத் தலைவனாவன். இவனுடைய மகன் அனந்தன் பழியிலியும் பாண்டியர்களுக்கடங்கிய தலைவனாக இருந்தான் எனக்கருதலாம்.

இதுகாறும் கூறியவற்றால் மறக்குடியினராகிய முத்தரையர் பல்லவ பாண்டியர் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்டனர் என்பதும் சில சமயங்களில் பல்லவர் பக்கமும் சிலகாலம் பாண்டியர் பக்கமும் நின்று போரிட்ட போதிலும், வாய்ப்புக் கிட்டியபோது தனித்த ஆட்சியினை நிறுவும் திறமையும் பெற்றிருந்தனர் என்பதும் புலனாகும். முத்தரையர்கள் இன்று தமிழகம், ஆந்திரம், கருநாடகம் முதலிய மாநிலங்களில் முத்துராசாக்கள், அம்பலக்காரரர்கள், முத்திரிய நாயுடுகள் என்னும் பல பெயர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

பல்லவர் காலத்திய சோழ (குறுநில) மன்னர்கள் (கி.பி. 300-885)

கடைச்சங்க காலத்தில் சோழநாட்டில் புகழ்மிக்க சோழ மன்னர்கள் ஆட்சி செலுத்தினர். கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை சோழ நாட்டில் களப்பிரரின் ஆட்சி நடைபெற்றதெனக் கூறலாம். இனத்தால், சமயத்தால், பண்பாட்டால் வேறுபட்ட களப்பிரர் சோழநாட்டு மக்களின் நலன்கருதி ஆட்சி புரிந்தனர் எனக் கூறமுடியாது. இக்காலக்கட்டத் திலும் சோழ நாட்டின் பகுதிகளாகிய உறையூர், பழையாறை ஆகிய இரண்டிடங்களிலும் சோழர்கள் புகழ்பெற்ற மன்னர் களாகவும் சிற்றரசர்களாகவும் இருந்தனர். பல்லவரும் பாண்டியரும் எழுச்சி பெற்று அரசியலில் பெருமை பெற்றதனால், சோழர்கள் மேற்கூறப்பெற்ற இரு அரச வமிசத்தினருக்கும் அடங்கிய குறுநில மன்னர்களாகவே இருந்தனர் எனக் கூறலாம். சங்க காலத்தின் இறுதியில் வீழ்ச்சியுற்ற சோழ வமிசத்தின் கிளையினர் அருவாவடதலை நாட்டிற்கு வடக்கே சென்று ஆந்திரப் பகுதியில் தமது

ஆட்சியினை நிறுவினர். இவர்கள் தெலுங்குச் சோழர் என்றழைக்கப்பெற்றனர். தமிழ்நாட்டில் உறையூரிலும், பழையாறையிலும் சோழச் சிற்றரசர்கள் இருந்தனர்.

வரலாற்றுச் சான்றுகள்

தெலுங்குச் சோழர்கள் அல்லது ரேநாட்டுச் சோழர்களைப் பற்றி அறிந்துகொள்ள நமக்குப் பல சான்றுகள் - உள்ளன. ஆனால், உறையூர் பழயாறைச் சோழர் களைப் பற்றிய சான்றுகள் நமக்கு அதிகமாகக் கிடைக்க வில்லை. பல்லவர், பாண்டியர், சாளுக்கியர் ஆகியோரின் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் இலக்கியங்களும் இக்காலத்திய சோழர்களைப் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ளப் பயன்படுகின்றன. இவற்றுள் முதலாம் பரமேசுவரவர்மனுடைய கூரம் செப்பேடுகள், முதலாம் மகேந்திரவர்மனுடைய திருச்சி மலைக்கோட்டைக் கல்வெடுகள், இரண்டாம் நந்திவர்மனுடைய கசாக்குடிச் செப்பேடுகள், மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப் பாளையச் செப்பேடுகள் ஆகியவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பராந்தகநெடுஞ்செழியனுடைய வேள்விக் குடிச் செப்பேடுகள், இராசசிம்மப் பாண்டியனுடைய சின்னமனூர்ச் செப்பேடுகள், நெடுஞ்சடையனுடைய சென்னை அருங் காட்சியகச் செப்பேடுகள், முதலாம் வரகுணபாண்டிய னுடைய கல்வெட்டுகள், சாளுக்கிய விசயாதித்தனுடைய நெரூர்ச்சாசனம், தித்தனுடைய சோரப்பட்டயங்கள், இரண்டாம் கீர்த்திவர்மனுடையகேந்தூர்ப் பட்டயங்கள், இரண்டாம் புலிகேசியின் ஐகோளேசாசனம், முதலாம் விக்கிரமாதித்தனுடைய கத்வால் சாசனம் ஆகியனவும் இவர்களைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன.

மேற்கூறப்பெற்ற சாசனச் சான்றுகளேயன்றி, இலக்கியச் சான்றுகளும் ஓரளவு பயன்படுகின்றன. இவற்றுள் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழாரின் பெரிய புராணம் முதலிய சைவசமய நூல்களும்

திவ்வியசூரிச் சரிதம் குருபரம்பரை முதலான வைணவ நூல்களும் வினயவிநிச்சயம், அபிதம்மாவதாரம் முதலிய பௌத்த நூல்களும் யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கண நூலும் நந்திச் கலம்பகமும் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழிலக்கியங்கள் கூறும் சோழவேந்தர்கள்

தேவார ஆசிரியர்களும் அவர்களுக்கு முற்பட்ட சில தமிழிலக்கியங்களும் சோழன் கோச்செங்கணான், கோச்செங்கட் சோழன் என்ற சோழ அரசனைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால், இப்பெயர்கள் பல்லவர் காலத்திய கல்வெட்டுகளிலோ அல்லது செப்பேடுகளிலோ காணப்பெறவில்லை. சேக்கிழாருடைய பெரியபுராணத்தில் கோச்செங்கட் சோழன் என்ற சோழ மன்னருடைய வரலாறு கூறப்பெற்றுள்ளது.[39] பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள இவ்வரலாறு இயற்கைக்கு மாறுபட்டதாக உள்ளது. கோச்செங்கட் சோழனின் தந்தை சுபதேவன் என்றும், தாய் கமலாவதி என்றும் கூறப்பெற்றுள்ளன. சுபதேவன் என்ற பெயர் கல்வெட்டுகளில் காணப்பெறவில்லை. கோச் செங்கட்சோழன் தாய் வயிற்றில் இருந்து உதிக்கும்முன் அவனுடைய தாய் கமலாவதி சிரசாசனம் செய்து ஒரு நாழிகை கழித்துத் தனக்குக் குழந்தை பிறக்கும் படி செய்தாள் என்று கூறப்படுகிறது. இக்கதையில் எவ்வளவு உண்மையுளது என்று நாம் ஆராய வேண்டியுளது.

சுபதேவன் உறையூரில் சிற்றரசனாக இருந்திருக்க வேண்டும். கோச் செங்கட்சோழன் திருவானைக்கா ஈசருடைய கோயிலை அமைத்துப் பின்னர் சிதம்பரதிற்குச் சென்று பல தருமங்களைச் செய்த பின்பு இறைவன் திருவடியை அடைந்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது. கோச்செங்கட் சோழன் எழுபது சிவன் கோயில்களை அமைத்ததாகத் திருமங்கை ஆழ்வார் போற்றியுள்ளார்.[40] இவ்வேந்தன் சங்ககாலச் சோழருக்கும் பிற்பட்டவர்

என்பதும் விசயாலயச் சோழனுக்கு முற்பட்டவர் என்பதும் அறிஞர்கள் கருத்தாகும்.[41] கோச்செங்கட் சோழன், பல்லவ மன்னன் சிம்ம விட்டுணுவின் உடன் காலத்தவன் என்று திரு டி.வி. மகாலிங்கம் கூறுவர்[42] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புத்தவர்மன் என்னும் பல்லவ வேந்தன் சோழர்படையாகிய கடலுக்கு வடவைக் கனலாக விளங்கினன் என்று வேலூர்ப்பாளையச் செப்பேடு குறிப்பிடுகிறது.[43] பல்லவ வேந்தனாம் சிம்மவிட்டுணு, சோழவேந்தன் ஒருவனை வெற்றி கொண்டதாக இரண்டாம் நந்திவர்மனின் கசாக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. உத்தமசோழனின் கல்வெட்டு ஒன்றில் சிம்மவிட்டுணு சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர் குறிக்கப்பெற்றுளது. ஆகவே, கோச்செங்கட்சோழன் சிம்மவிட்டுணுவின் காலத்தில் இருந்தவனாகக் கருதலாம்.[44] களவழி நாற்பதில் கூறப்பெற்ற சோழன் செங்கணானும் கோச்செங்கட் சோழனும் ஒருவர்தானா என்பது ஆராய்தற்குரியதாகும்.

மூன்றாம் கிள்ளிவளவன்

கோச் செங்கணானுக்குப் பிறகு மூன்றாம் கிள்ளி வளவன் இருந்திருக்க வேண்டுமென்று மறைமலையடிகள் கூறியுள்ளார்.[45] இவ்வரசன் காவிரிப் பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது.

புகழ்ச்சோழன்

புகழ்ச்சோழர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த சோழமன்னன் ஆவார். அறுபத்தி மூவரில் இவர் ஒருவர் என்பதும் அதியமான் என்ற குறுநில மன்னனை வெற்றிகொண்ட பிறகு ஒரு சிவனடியாரைத் தன்னுடைய படைவீரர்கள் கொன்று வெற்றி கொண்டமையைப் பெரும் பழியாக நினைத்துக் கருவூரில் தீக்குளித்து சிவகதியடைந்தார் என்பதும் பெரியபுராணத்தால் தெரியவருகிறது. புகழ்ச் சோழர் என்ற பெயர் சங்க நூல்களில் காணப்பெறவில்லை.

சிம்மவிட்டுணுவிற்குப் பிறகு இந்தச் சோழ மன்னனின் பெயர் கல்வெட்டுகளிலோ அல்லது மற்ற இலக்கியங்களிலோ காணப்பெறவில்லை. ஆகையால், பல்லவருடைய ஆட்சிக் காலத்திற்கு முன்னும் கடைச்சங்க காலத்திற்குப் பின்னரும் இவர் வாழ்ந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுவர்.[46]

திருநாவுக்கரசர்,திருஞானசம்பந்தர் காலத்துச் சோழ சிற்றரசர்கள்

திருநாவுக்கரசர் பழையாறைக்குச் சென்று சிவ லிங்கத்தை வணங்க முற்பட்டபொழுது, சமணரால் சிவலிங்கம் மறைக்கப்பட்டதாகவும் பின்னர் ஒரு சோழ மன்னனின் தலையீட்டால்தான் அவர் சிவலிங்கத்தைக் கண்டு வணங்கினார் என்றும் பெரியபுராணம் கூறும்.[47] அப்பரடிகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தவராதலின் பழையாறை வடதளியில் இருந்த சிவலிங்கத்தை அவர் கண்டு வணங்கும்படிச் செய்த சோழமன்னன் பல்லவர் காலத்திய வானவன் மாறவர்மன் அரிகேசரி என்ற பாண்டிய மன்னன் திருஞானசம்பந்தரால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றம் அடைந்தவனாவான்.

அவனுடைய தேவியர் மங்கையர்க்கரசியார் ஆவர். சேக்கிழார் மங்கையர்க்கரசியாரை வளவர் திருக்குலக் கொழுந்து எனப் புகழ்ந்துள்ளார். இவ்வம்மையார் மணிமுடிச்சோழன் எனற சோழமன்னனின் புதல்வியர் என்று திருஞானசம்பந்தர் கூறியுள்ளார்.[48] திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய இருவரும் ஒரே சமயத்தில் இருந்தவர்களாகையால் இந்த மணிமுடிச் சோழனைப் பற்றியே சேக்கிழார் திருநாவுக்கரசருடைய வரலாற்றிலும் ஞானசம்பந்தர் வரலாற்றிலும் கூறியதாகக் கொள்ளலாம். முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் பல்லவருக்கு அடங்கியிருந்த சோழமன்னன் மணிமுடிச் சோழனாவன்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் குங்கிலியக்கலைய நாயனார் ஆகிய மூவரும் உடன் காலத்தில் இருந்தவராவர். திருப்பனந்தாள் கோயில் சிவலிங்கத்தை நேராக நிற்கும்படி முயற்சிசெய்த சோழ அரசனும் இந்த மணிமுடிச் சோழனாக இருக்கக் கூடும்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார், கோட்புலி நாயனார் ஆகிய இரு நாயன்மார்களும் சுந்தரமூர்த்தி நாயனாரின் உடன் காலத்தவர் ஆவர். இவர்கள் இருவரும் சோழ மன்னருக்குப் படைத்தலைவராக இருந்தவர்கள் என்று இராசசேகர தங்கமணி கூறுவர்.[49] ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் பிறந்த ஊர் சோழநாட்டில் உள்ள திருப்பெருமங்கலம் ஆகும். கோட்புலி நாயனார் நாட்டியத்தாள் குடி என்ற ஊரைச் சேர்ந்தவராவர். இவ்விரண்டு ஊர்களும் சோழ நாட்டில் இருப்பதினாலும் சோழ நாடு பல்லவர்களுடைய ஆட்சியில் இருந்ததாலும் இவர்கள் பல்லவ மன்னர்களுடைய சேனாதிபதிகளாக இருந்தவராவர். இவர்கள் தனியடியார் அறுபத்திமூவரைச் சேர்ந்தவர்கள் என்று சுந்தரமூர்த்திகளின் திருத்தொண்டர்த் தொகை கூறுகின்றது. சுந்தரர் இண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்ம பல்லவனுடைய உடன்காலத்தவர் ஆவர். ஆகவே, ஏயர்கோன் கலிக் காம நாயனாரும், கோட்புலி நாயனாரும் பல்லவ மன்னர்களுடைய சேனைத் தலைவர்களாக இருக்க முடியுமே அன்றிச் சோழ மன்னர்களுடைய படைத்தலைவர்கள் என்று கூறமுடியாது. ஏனெனில், பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்ட நாயனாரும் பல்லவ மன்னர்களாகிய முதலாம் நரசிம்மவர்மனிடமும் அவருக்குப்பின் வந்த முதலாம் பரமேசுவரவர்மனிடமும் படைத்தலைவராகப் பணி செய்துள்ளார்.

பல்லவ-சோழர் உறவு

முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் சோழநாடு பல்லவர்களுடைய ஆட்சியில் அடங்கி

இருந்தமையால் பழையாறையிலும், உறையூரிலும் இருந்த சோழ மன்னர்கள் மகேந்திரவர்மனுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாகவே இருந்திருக்க வேண்டும். மகேந்திர வர்மனுடைய திருச்சி மலைக்கோட்டைக் கல்வெட்டுகள் இவ்வுண்மையை அறிவிக்கின்றன.[50] இதனால் மகேந்திர வர்மனது காலத்தில் சோழர்கள் பல்லவருக்கு அடங்கி இருந்தனர் என்பது புலாகின்றது. ஆனால், அக்காலத்தில் இருந்த சோழ மன்னர்களின் பெயர்களோ மற்ற வரலாற்றுச் செய்திகளோ விளங்கவில்லை.

முதலாம் மகேந்திரவர்மனை அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் நரசிம்மவர்மனது ஆட்சிக் காலத்தில் சோழர் களையும் பிற அரசியல் தலைவர்களையும் வெற்றி கொண்டதாக முதலாம் பரமேசுவரவர்மனுடைய கூரம் செப்பேடுகள் கூறுகின்றன.[51] இரண்டாம் நந்திவர்மப் பல்லவனுடைய ஆட்சியில் சோழர் பல்லவருடைய இறைமைக்கு உட்பட்டிருந்தனர். நந்திபுரக் கோட்டையில் முற்றுகையிடப்பட்டிருந்த இரண்டாம் நந்திவர்மப் பல்லவனை மீட்கும் பொருட்டும், அதனைத் தொடர்ந்து உதயச் சந்திரனாலும் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறனாலும் மேற்கொள்ளப்பட்ட போர்களில் சோழச் சிற்றரசர்கள் பல்லவருக்கு உதவி செய்ததாகத் தெரிகிறது. ஏனெனில், இரண்டாம் பெரும்பிடுகு முத்தரை யனுடைய பகைவர்களுள் சோழர் இடம் பெறவில்லை. சோழநாட்டில் காணப்பெறும் இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டுகளைக் கொண்டு சோழர்கள் பல்லவப் பேரரசிற்கு அடங்கி இருந்தனர் எனக் கொள்ளலாம். பழையாறை நந்திபுரம் என்று அழைக்கப்பெறுவதால் பழையாறைச் சோழர்கள் பல்லவ ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தனர் என்பது புலனாகிறது.[52] வேலூர்ப் பாளையச் செப்பேட்டில் குமாராங்குசன் என்னும் சோழ மன்னன் ஒருவனைப்பற்றிப் பின்வருமாறு புகழ் மாலைகள் சூட்டப்பெற்றுள்ளன. “புகழ்பெற்ற வலிமை கொண்டவனும் சோழ வமிசத்து

சூளாமணியும், தீரனும் கொடையளிப்பதில் கர்ணனுக்கு ஒப்பானவனும் உயர்ந்த நடத்தையுள்ளவனும் (செய்நன்றி மறவாதவனுமாகிய) குமாராங்குசனின் விண்ணப்பத்தினால் திருக்காட்டுப்பள்ளி உடைய மகாதேவருக்கு மேற்கூறப்பெற்ற கிராமம் தேவதானமாக அளிக்கப்பட்டது.''[53] இச் செப்பேட்டைக் கொண்டு குமாராங்குசன் என்ற சோழ மன்னன் மூன்றாம் நந்திவர்மனுக்கு உட்பட்ட சிற்றரசனாக இருந்தான் எனக் கூறலாம். குமாராங்குசன் மூன்றாம் நந்திவர்மனுக்குத் தெள்ளாற்றுப்போரில் உதவி செய்ததற்காக மேற்கூறப்பெற்ற தானம் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். தெள்ளாற்றுப் போருக்குப் பின் மூன்றாம் நந்திவர்மன் பழையாறையிலும் வெற்றிபெற்றுள்ளமையால் சோழ நாட்டில் பாண்டியர்களுடைய ஆதிக்கத்தை அறிந்து சோழக் குறுநில மன்னரைத் தன்னுடைய ஆட்சியில் கொண்டு வந்தான் எனக் கூறலாம். தெள்ளாற்றுப் போரும் வெற்றியும் பல்லவ பாண்டிய போராட்டத்தை முற்றிலும் அடக்கிவிடவில்லை. இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின் சிரீமாற சிரீவல்லவன் என்ற பாண்டிய மன்னன் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சோழர், பல்லவர், கங்கர் முதலிய அரசர்கள் மீது வெற்றிகொண்டான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் செப்புகின்றன. இவற்றால் சோழக் குறுநில மன்னர்கள் பல்லவப் பேரரசர்களுக்குத் தொடர்ந்து அடங்கி இருந்தனர் எனக் கொள்ளலாம்.

மூன்றாம் நந்திவர்மனுக்குப் பிறகு பல்லவ அரியணையில் அமர்ந்த நிருபதுங்க வர்மன் பாண்டியர்களோடு அரிசிலாற்றங் கரையில் பெரும்போர் ஒன்றில் ஈடுபட்டான். பாண்டிய மன்னன் சிரீமாற சிரீவல்லபனுக்கும் நிருபதுங்கனுக்கும் இடையே போர் நடந்த கும்பகோணத் திற்குத் தென்கிழக்கே அரிசிலாற்றங் கரையில் உள்ள அரிசிற் கரைபுத்தூராக இருக்கக்கூடும்.[54] இப்போரிலும் சோழர்கள் தங்களுடைய பல்லவப் பேரரசன் கட்சியில் சேர்ந்திருந்தனர் எனக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

அரிசிலாற்றங்கரைப் போருக்குப் பின் ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குப் பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையே எவ்விதப் போரும் நடந்ததாகத் தெரியவில்லை.[55]

இந்த இருபது ஆண்டு இடைவெளியில் பழையாறையில் இருந்த சோழ மன்னர்கள், தங்களுடைய அரசியல் பலத்தை வலுப்படுத்திக் கொண்டிருந்தனர். சோழநாட்டைத் தங்கள் வசத்தில் கொண்டுவருவதற்குப் பாண்டியர்கள் பெரிதும் முயன்றனர். இதனால் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பியத்தில் பாண்டிய - பல்லவர்களுக்கிடையே பெரும்போர் ஒன்று நடைபெற்றது. இதுகாறும் இப்போர் கி.பி. 880-இல் நடைபெற்றதென வரலாற்று அறிஞர்கள் முடிவு செய்திருந்தனர். ஆனால், அறிஞர் தே.வே. மகாலிங்கம் இப்போர் கி.பி. 885-இல் நடைபெற்றதெனக் கூறுவர்.[56] இரண்டாம் வரகுணபாண்டியனுக்கும் அபராசித பல்லவனுக்கும் இடையே நடந்த இப்பெரும்போரில் பல்லவ மன்னனுக்குச் சோழச் சிற்றரசன் ஆதித்தன் உதவி புரிந்திருப்பதாகத் தெரிகிறது.[57] இப்போரில் தன்னுடைய சிற்றரசர்களுடைய பேருதவியினால் பல்லவ மன்னன் பெரும் வெற்றி பெற்றனன். இவ்வெற்றியின் இறுதிப் பயனாகச் சோழ மண்டலத்திலும் தொண்டை மண்டலத்திலும் பல்லவ ஆட்சி மறைந்து சோழப் பேரரசு உதயமாயிற்று என்று கூறலாம். முதலாம் ஆதித்த சோழன் பல்லவ இளவரசி ஒருத்தியை மணம் புரிந்திருந்த போதிலும், அபராசித பல்லவனுக்கும் ஆதித்த சோழனுக்கும் இடையே அரசியல் பகைமை முற்றி வளர்ந்தது. முத்தரையர்களும் கொடும்பாளூர் வேளிர்களும் பல்லவப் பேரரசை விட்டு நீங்கித் தனியரசு செய்ய முற்பட்டனர். தங்களுடைய சிற்றரசர்களுடைய உதவியை இழந்த பல்லவர்களுடைய வீழ்ச்சியும் உறுதியாயிற்று. சோழப் பேரரசர்களுடைய திருவாலங்காடு, கன்னியாகுமரிச் செப்பேடுகளும் கல்வெட்டும், ஆதித்த சோழன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய செய்திகளை விளக்கமாகக் கூறுகின்றன.

கொடும்பாளூர்த் தலைவர்கள் (ஏறத்தாழ கி.பி. 600-900)

தென்னிந்தியக் குறுநில மன்னர்களின் வரலாற்றில் கொடும்பாளூர்த் தலைவர்களுடைய பங்கு முக்கிய மானதாகும். ஆனால், கொடும்பாளூர் தலைவர்களைப் பற்றிச் சில கல்வெட்டுகளே சான்றுகளாக உள்ளன. அவற்றுள் பூதி விக்கிரமகேசரி என்பாரின் கொடும்பாளூர்க் கல்வெட்டு மிக முக்கியமானதாகும்.[20] இக்கல்வெட்டில் கொடும்பாளூர்ச் சிற்றரசர்களின் மரபுப் பட்டியல் காணப் பெறுகிறது. இக்கல்வெட்டு கிரந்த எழுத்துகளிலும் வடமொழியிலும் எழுதப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டின் தொடக்கமும் முடிவும் சிதலமாகியுள்ளன. இக்கல்வெட்டின் வாசகமும் இதன் ஆண்டும் பலவிதமான ஆராய்ச்சி முடிவுகளுக்கும் வாக்குவாதத்திற்கும் உட்பட்டுள்ளன.

கல்வெட்டு

யானைகளின் கூட்டங்களை அழித்த ஓர் அரசன் இருந்தான். அவன் குடும்பத்தில் பிரவீரசித், அல்லது மழவர்களை வென்று புகழ்பெற்ற வீரதுங்கன் என்பான் பிறந்தான். வீரதுங்கனுக்கு அதிவீர அனுபாமா மூலம் சங்ககிருத் பிறந்தாள். சங்ககிருதுவிற்குப் பாம்புகளோடு வளர்ந்த நிருபகேசரி பிறந்தான். நிருபகேசரியின் மகன் (தன்னுடைய விரோதிகளின் கோட்டைகளை அழித்தவனும் வாதாபியை வென்றவனுமான) பரதுர்கமர்த்தனன் ஆவன். பரதுர்க்கமர்த்தனனுக்குத் தெய்வத்தன்மை பொருந்தியவனும், அதிராசமங்கலம் என்னுமிடத்தில் சலுக்கியை வென்ற வனுமாகிய சமராபிராமன் பிறந்தான். சமராபிராமன் யதுவமிசத்தின் குலக்கொழுந்தாவன். ஒப்பற்ற வீரனாவன். இலக்குமி, சரசுவதி, பார்வதி ஆகிய மூன்று தெய்வ மாதர்களுடைய (செல்வம், கல்வி, வீரம் ஆகிய மூன்றும் நிறைந்த) சோழ இளவரசி மனைவியாக வாய்த்தாள். அவனுடைய வயிற்றில் விக்கிரமகேசரி என்று (வீரம்

பொருந்திய சிங்கம்) அழைக்கப்பெற்ற பூதி விக்கிரமகேசரி பிறந்தான். இந்த அரசன் பல்லவர்களுடன் போரிட்டதனால் காவிரியின் நீர் இரத்த மயமாயிற்று. அங்கு நடந்த போரில் வீரபாண்டியனை வென்று வஞ்சிவேளைக் கொன்றான். மதயானைகளுடன் போரிட்டது போன்று தன்னுடைய எதிரிகளுடன் போரிட்டுக் கொடும்பாளூரில் குன்றின்மீது அரண்மனை ஒன்றை அமைத்து அதில் வாழ்க்கை நடத்தினான்.

தாமரை மலருக்குச் சூரியன் போன்றவனும்,கற்றோருக் குக் கல்பதரு போன்றவனும் அவனுடைய எதிரிகள் எல்லாம் கைகுவித்து வணங்கும் பெருமையுடையவனும் பூமிதேவியின் இரட்சகனும், வெற்றி, செல்வம், புகழ்மிக்க இன்சொல் உடையவனுமாகிய பூதிவிக்கிரம கேசரியின் ஆட்சிக் காலத்தில் எங்கும் மங்கலம் பொங்கியது. பெண்களின் கண் களில்தான் கூர்மை, அவர்களுடைய கடைக்கண் பார்வையில் தான் மாற்றம், அவர்களுடைய கூந்தலில்தான் இருள், அவருடைய இடையில்தான் சிறுமை, தனங்களில்தான் நடுக்கம் காணப்பெற்றது.

பூதிவிக்கிரமகேசரிக்கு கற்றளி, வரகுணி என்ற இரு மனைவியர் இருந்தனர் (முதல் மனைவியாகிய) கற்றளிக்குப் பராந்தகன், ஆதித்யவர்மன் என்ற இரு மக்கள் பிறந்தனர்.

மதுரை நகரவாசியும், வித்யாராசி என்பவரிடம் வேதங் களைப் பயின்று தவம் செய்தவனும் ஆத்திரேயகோத்திரத்தில் பிறந்த புகழ்மிக்க மல்லிகார்ச்சுனன் என்பான் இருந்தான். தான், தன்னுடைய இருமனைவியருடைய (பெயரினால்) மூன்று கோயில்களை அமைத்து மகேசுவரனை அவற்றில் எழுந்தருளித்து, மல்லிகார்ச்சுனனுக்கு ஒரு மடத்தை அமைத்துக் கொடுத்தான். காளாமுக சைவத்தைச் சேர்ந்த மல்லிகார்ச்சுனனுக்கு இந்த மடத்தைப் பரிபாலிப்பதற்குப் பதினொரு ஊர்களைத் தேவதானமாகக் கொடுத்தான்.

மேற்கூறப்பெற்ற கல்வெட்டு பல்லவர் காலத்தைச் சேர்ந்ததா? அவ்வாறாயின் எந்த ஆண்டைச் சேர்ந்தது என்பதை நாம் இப்பொழுது ஆராய்தல் வேண்டும். இந்தக் கல்வெட்டு கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது (650--700) என்று ஹீராஸ் பாதிரியார் கூறுவர்.[58] திரு இராதாகிருட்டிண அய்யரும், நீலகண்டசாத்திரியாரும் கி.பி. ஒன்பதாம் அல்லது பத்தாம் நூற்றாண்டு எனக் கூறுவர். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடையில் (வாதாபி)ச் சாளுக்கியப் பேரரசு நீக்கப்பெற்று இராட்டிரகூடப் பேரரசு அமைவுற்றது. கொடும்பாளூர்ச் சிற்றரசன் சமராபிராமணரால் சாளுக்கியர் வெல்லப்பட்டனர் என்றால் கி.பி. எட்டாம் நூற்றாண்டில், சாளுக்கிய அரசே மாறி இராட்டிரகூட அரசு தோன்றிய பொழுது எங்ஙனம் சாளுக்கியரை வெல்லமுடியும். ஆகையால், கொடும்பாளூர்க் கல்வெட்டில் கூறப்பெற்ற வாதாபி வெற்றி, முதலாம் நரசிம்மவர்மன் வாதாபியை வென்றதையே குறிக்கும். பரதுர்க்கமர்த்தனன் தன்னுடைய பேரரசன் முதலாம் நரசிம்மனுடன் சேர்ந்து வாதாபிப் போரில் பங்கு கொண்டிருக்க வேண்டும் என ஹீராஸ் பாதிரியார் கூறுவர். மேலும், இந்தக் கொடும்பாளூர்க் கல்வெட்டில் கூறப்பெற்ற அதிராசமங்கலம் என்னும் இடம் செங்கற்பட்டு அண்ணா மாவட்டத்தில் உள்ள மணிமங்கலம் என்னும் இடமாகும் என்றும் சாற்றுவர். கி.பி.665-7 ஆண்டுகளுக்கிடையில் பூதிவிக்கிரமகேசரி வாழ்ந்திருக்க வேண்டும். கொடும்பாளூரில் காணப்பெறும் மூவர் கோயில்களின் கட்டட அமைப்புப் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது அன்று. சோழர் கால கட்டட அமைப்பைப் பின்பற்றியதேயாகும். இக்கோயில்கள் பல்லவர்காலக் கட்டட அமைப்பிற்கும் சோழர்காலக் கட்டட அமைப்பிற்கும் இடைப்பட்ட தனித்தன்மை பெற்ற கோயில்களாகும். இவைகளுக்கு முன்னோடியான கட்டட அமைப்புகளையும், இவற்றைப் பின்பற்றிய அமைப்புகளையும் காண்பதரிது எனவும் கூறுவர்.

ஆனால் ஹீராஸ் பாதிரியர், கொடும்பாளூர்க் கல்வெட்டில் கூறப்பெற்ற வீரபாண்டியன் யார் என்று தீர்மானம் செய்யவில்லை. பூதிவிக்கிரம கேசரியின் மனைவியர்களாகிய வரகுணா, கற்றளி இருவரும் எப்பொழுது இருந்தனர் என்பதையும் ஆராயவில்லை. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணிய அய்யரும் கே.வெங்கட்டரங்கம் ராஜு என்பாரும் கொடும்பாளூர் மூவர் கோயிலின் கட்டட அமைப்புப்பற்றி ஹீராஸ் பாதிரியார் கூறுவதை ஒப்புக் கொள்ளவில்லை. அது தனிப்பட்ட அமைப்பு என்பதையும் அதற்கு முன்னோடியும் பின்னோடியும் கிடையாது என்ற கொள்கையை அவர்கள் மறுத்துக் கூறுவர். மூவர் கோயிலின் விமான அமைப்பிற்கு முன்னோடிக் கட்டடங்களும், பின் பற்றப்பட்ட கட்டடங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக காளியாபட்டி, ஏனாதி, திருக்கற்றளி, திருப்பூர், சி.விசலூர், பட்டடக்கல் முதலிய இடங்களில் காணப்பெறும் கோயில்கள் கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அவைகள் கொடும்பாளூர்க் கோயில்களின் கட்டட அமைப்பு முறையைப் பின்பற்றி அமைக்கப் பெற்றவையாகும். அறிஞர் மு. ஆரோக்கியசாமி என்பார் ஹீராஸ் பாதிரியாரின் கருத்துகளை ஒப்புக்கொண்டுள்ளார். ஆயினும் வீரபாண்டியன் என்ற அரசன் கி.பி.670 முதல் 710 வரை பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த அரிகேசரிவர்மனாக இருக்க வேண்டுமெனக் கூறுவர். அரிகேசரிவர்மன் என்ற பாண்டிய மன்னனுக்கு வீரபாண்டியன் என்ற பெயர் வழங்கியதாக இலக்கியங்களிலோ அல்லது கல்வெட்டு களிலோ சான்றுகள் கிடையாது. ஆகையால் கொடும் பாளூர்க் கல்வெட்டு கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்ற கொள்கை ஒப்புக்கொள்ளத் தக்கதன்று.[59]

கல்வெட்டறிஞர் வி. வெங்கய்யா மேற்கூறப்பெற்ற கொடும்பாளூர்க் கல்வெட்டு கி.பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்ததென்றும் அதில் கூறப்பெற்றுள்ள வீரபாண்டியன், சுந்தர சோழனின் மகன் இரண்டாம் ஆதித்த

கரிகாலனால் அவனுடைய இளமைக் காலத்தில் வென்று அடக்கப்பட்ட வீரபாண்டியரின் பூதிவிக்கிரமக் கேசரியால் வென்று அடக்கப்பட்ட வீரபாண்டியன் ஆவன் என்றும் கூறுவர்.[60] மேற்கூறப்பெற்ற வெங்கய்யா கருத்துகளை பேராசிரியர் கே.ஏ. நீலகண்டசாத்திரி ஒப்புக் கொண்டு பின்வருமாறு கூறினார். "பரதுர்க்க மர்த்தனன் வாதாபியின் மீது படையெடுத்து வென்றதற்கும், பல்லவ மன்னர்கள் முதலாம் நரசிம்மவர்மன் முதலாம் பரமேசுவர்மன் காலங்களில் நடைபெற்ற வாதாபிப் படையெழுச்சிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராட்டிரகூடர்கள் சோழநாட்டின் மீது படையெடுத்த பொழுது சமராபிராமன், சாளுக்கியன் ஒருவன் மீது வெற்றியடைந்திருக்கக்கூடும். அப்போர் அதிராசமங்கலம் என்னும் ஊரில் நடைபெற்றதாகும். பாண்டியர்கள் மீதும் வஞ்சிவேள் மீதும் பூதிவிக்கிரமகேசரி அடைந்த வெற்றிகள் தன்னைப் போன்ற சிறிய குறுநில மன்னர்கள் மீது அடைந்த வெற்றிகளாகும். விக்கிரம கேசரியின் மக்கள் இரண்டாம் பராந்தகன் சுந்தரசோழன், இரண்டாம் ஆதித்த கரிகாலன் ஆகியவர்களுக்குப் பின்னர் கூறப்பட்டுள்ளனர். இரண்டாம் ஆதித்த கரிகாலனுடைய கல்வெட்டுகள் சிலவற்றில் விக்கிரமகேசரியின் இரு மனைவியர்களும் குறிப்பிடப்பெற்றுள்ளனர்.[61]

இரண்டாம் நந்திவர்மனுடைய கி.பி. (710-775) உடன் காலத்தவனாகிய இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன் கொடும்பாளூரை அழித்தான் என்று செந்தலைத் தூண் கல்வெட்டுகள் கூறுகின்றன. கொடும்பாளூர்த் தலைவர் பாண்டியர்களோடு சேர்ந்து கொண்டமையால் சுவரன்மாறன் கொடும்பாளூர்த் தலைவன் மீது போர் செய்திருப்பான் என்று, திரு எம்.எஸ்.கோவிந்தசாமி கூறுவர்.[62] தான் எழுதிய முதல் ஆராய்ச்சி நூலாகிய பல்லவர் காலத்திய குறுநில மன்னர்களின் வரலாறு என்பதில் பூதிவிக்கிரமகேசரி கி.பி. 957 முதல் 970 வரை ஆட்சி புரிந்த

இரண்டாம் பராந்தக சோழ (சுந்தரசோழன்) னுடைய உடன் காலத்தவனாக இருக்கலாம் என்ற திரு கே.ஏ. நீலகண்டசாத்திரியார் கொள்கையை ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் 1979-ஆம் ஆண்டில், தான் பதிப்பித்துள்ள "பிற்காலச் சோழர் வரலாற்றில் குறுநில மன்னர்களின் பங்கு என்னும் நூலில் அக்கொள்கையைத் திருத்தி பூதி விக்கிரமகேசரி இரண்டாம் பராந்தகன் சுந்தரசோழனுடைய காலத்தவன் அன்று என்றும் முதலாம் ஆதித்த சோழனுடைய உடன் காலத்தவன் என்னும் கொள்கையை நிலை நாட்டியுள்ளார்.[63] பூதி விக்கிரமகேசரி கி.பி. 880 முதல் 930 வரை வாழ்ந்ததாகவும், திருப்புறம்பியப் போருக்கு முன் (885) பல்லவருக்கு அடங்கிய குறுநில மன்னனாக இருந்திருக்கலாம் என்றும் கூறுவர்.[64]

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பொறிக்கப்பெற்ற பல்லவர் கல்வெட்டுகளில் சில வேளிர் தலைவர்கள் (குறுநில மன்னர்கள்) குறிப்பிடப் பெற்றுள்ளனர். திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்திலுள்ள திருவெள்ளறையில் காணப் பெறும் மூன்றாம் நந்திவர்மனுடைய 6-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் மாற்பிடுகு இளங்கோ வேளான் சாத்தன் என்ற பெயர் வருகிறது. இத்தலைவன் கொடும்பாளூர்க் குறுநிலமன்னர்களின் இனத்தைச் சார்ந்தவனா? அல்லது முத்தரைய இனத்தைச் சார்ந்தவனா என்பது விளங்கவில்லை.[65] தென்னார்க்காடு மாவட்டம் திருக் கோவலூர் வட்டம் கீழூர் என்னுமிடத்தில் மூன்றாம் நந்திவர்மனுடைய 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று உளது. இக்கல்வெட்டின்படி மலைநாட்டுக் குறுக்கைக் கூற்றத்தைச் சேர்ந்த திருக்கோவலூர் இறைவருக்கு விளக்கெரிப்பதற்குப் பொற்காசுகள் தானம் செய்த செய்தியில் விடேல் விடுகு இளங்கோயதியரையன் என்ற விக்கிரமபூதியின் மகளும் சாத்தன் மறவன் என்பாரின் மனைவியும் ஆன பெண் மணியின் பெயர் காணப்பெறுகிறது. மற்றொரு கல்வெட்டில் மாறன்பூதி என்ற பெயர் காணப்பெறுகிறது.[66] விக்கிரமபூதி,

மாறன்பூதி என்ற பெயர்கள் கொடும்பாளூர்க் குறுநில மன்னர்களின் வேளிர் இனத்தைக் குறிக்கும். விடேல் விடுகு என்ற விருதுப்பெயர் அவர்கள் பல்லவருக்கு அடங்கிய தலைவர்கள் என்பதைக் குறிப்பிடுகின்றன. கோவிசய கம்பவர்மனுடைய ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பெற்ற திருவெற்றியூர்க் கல்வெட்டொன்றில் கொடும்பாளூர் விடேல் விடுகு இளங்கோ வேளாரின் மனைவியார் பூதி அரிந்திகை என்பாரின் பெயர் காணப்பெறுகிறது.[67] பல்லவர் களுடைய ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னர்களாகவும் அரசாங்க அலுவலர்களாகவும் விளங்கிய கொடும்பாளூர் வேளிர்களும் தலைவர்களும் சாத்தன் பழியிலி என்ற முத்தரைய மன்னனிடமிருந்து விசயாலய சோழன் தஞ்சை, புதுக்கோட்டைப் பகுதிகளை வென்று சோழ அரசை அமைத்த பின், சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாயினர் எனக் கூறலாம். நார்த்தாமலையில் உள்ள சிவன் கோயிலைச் சீர்திருத்தம் செய்த மல்லன் விடுமான் என்ற தென்னவன் தமிழதியரையன் என்பவன் கொடும்பாளூர் வேளிர் இனத்தைச் சேர்ந்தவனா அல்லது முத்தரையர் இனத்தைச் சேர்ந்தவனா என்பது தெரியவில்லை.

ரேநாட்டுச் சோழர் (கி. 545 - 630)

பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னர்களாக விளங்கிய ரேநாட்டுச் சோழர்களைப் பற்றி அறிவதற்கு பல கல்வெட்டுகளும் செப்பேடுகளும் துணை செய்கின்றன. ஆனால் அவர்களுடைய ஆட்சிக்கால ஆண்டு களும், மரபுவழிப் பட்டியலும் சரியாக விளங்க வில்லை. ரேநாட்டுச் சோழர்கள் கடப்பை, கர்நூல் மாவட்டங்களில் குண்டாறு என்னும் சிற்றாற்றினால் வளப்படுத்தப்பெற்ற பகுதிகளில் ஆட்சி செலுத்தினர் என்று திரு நீலகண்ட சாத்திரியார் கூறியுள்ளார்.[68] அனந்தபுரி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியும் ரேநாட்டுச் சோழர்களின் ஆட்சியிலிருந்ததென்று தெரிகிறது.[69] ரேநாட்டுச்

சோழர்களுடைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கடப்பை மாவட்டத்திலுள்ள சம்மால மடுகு, பொரடாத்தூர், கமலா புரம், புலிவெலண்டலா இராசம்பேட்டை முதலிய இடங்களில் இருந்து கிடைப்பதால், கடப்பை மாவட்டத்தின் பெரும்பகுதி ரேநாட்டுச் சோழரின் ஆட்சியில் இருந்ததெனக் கொள்ள லாம். ரேநாட்டுச் சோழருடைய நாட்டைச் சூழியா அல்லது சோழநாடு என்று யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளார். கர்நூல் மாவட்டத்தின் வனப்பிரதேசமும் அதில் அடங்கியதாகும். ரேநாட்டுச் சோழ மன்னன் புண்ணியகுமாரனுடைய தலைமை நகரம் சித்தூர் மாவட்டம் மதனபள்ளி வட்டத்தில் உள்ள சிப்பிலி அல்லது சீட்புலி என்னும் நகரமாகும். தமிழ்நாட்டிலிருந்த சோழ வமிசத்தினரின் ஒரு கிளையினர் எங்ஙனம், எப்பொழுது ஏன் குடிபெயர்ந்து ஆந்திரப் பகுதிகளுக்குச் சென்றனர் என்பதைப் பற்றி ஆராய்வது இன்றியமையாத கேள்விகளாகும். கர்நூல், கடப்பை மாவட்டங்கள் கரிகாற் சோழன் காலத்தில் சோழப் பேரரசோடு இணைக்கப்பட்டன என்றும் பின்னர் மேலைச் சாளுக்கியரும், பல்லவரும் ரேநாட்டுச் சோழரின் ஆட்சியில் இருந்த மேற்கு, கிழக்குப் பகுதிகளைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர் என்றும் திரு வி.வெங்கய்யா கருதினார்.[70] சிம்ம விட்டுணு பல்லவர் ஆட்சிக் காலத்தில் சோழர்கள் ரேநாட்டுப் பகுதியில் குடியேறி இருக்கக்கூடும் என்ற கருத்தும், அதற்கு முன்னரே பல்லவ விட்டுணு கோபனுடைய காலத்தில் சமுத்திரகுப்தன் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்த சமயத்தில் சோழர்கள் வடக்கே சென்றிருக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[71] ஆனால், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்னர் ரேநாட்டில் சோழர்கள் குடியேறி இருக்க முடியாது என்று திரு எம்.எஸ்.கோவிந்தசாமி கருதுகிறார்.[72] புத்ததத்தருடைய வினயவினிச்சயம் என்ற பௌத்தசமய நூலில் குறிப்பிட்டபடி சோழநாட்டில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தைக் களப்பிரத் தலைவன் அச்சுத விக்கிரந்தன் கைப்பற்றியபொழுது தங்களுடைய தாயகத்தை இழந்த சோழர்களின் ஒரு கிளையினர் வடக்கு நோக்கிக்

குடிபெயர்ந்து ரேநாட்டில் குடியேறி இருக்கக்கூடும் என்றும் கருதுகிறார்.[73] பின்னர் இச்சோழக் குடியினர் பல்லவ மன்னர்களுடைய மேலாண்மையை ஒப்புக் கொண்டனர் என்றும் கூறுவார்.[74]

நந்திவர்மன் (கி.பி. 540 - 565)

மலேபாடு, தொம்மாரர், நந்தியாலா செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவனும், புண்ணியகுமாரன் என்ற அரசனின் முப்பாட்டனுமாகிய நந்திவர்மன் என்பவன் ரேநாட்டுச் சோழ அரச மரபின் முதல்வன் என்று கருதலாம். கி.பி.ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி புரிந்த முதலாம் நந்திவர்ம பல்லவனுடைய பெயரைக் கொண்டுள்ளமையால், இந்த ரேநாட்டுச் சோழ நந்திவர்மன், முதலாம் நந்திவர்மப் பல்லவனுக்கு அடங்கிய சிற்றரசன் எனக் கொள்ளலாம். நந்திவர்மன், சோழனின் தந்தை பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்தமையால் தன்னுடைய மகனுக்குப் பேரரசனுடைய பெயரை இட்டு இருக்கக்கூடும் என்று திரு எம்.எஸ்.கோவிந்தசாமி கருதுகிறார்.[75] நந்திவர்ம சோழனுக்கும் காஞ்சிபுரத்துப் பல்லவ மன்னர்களுக்கும் இருந்த அரசியல் உறவைப்பற்றி அறிவதற்குரிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை.

சிம்ம விட்டுணு (கி.பி. 565 - 575)

தனஞ்செயவர்மன் நந்திவர்மனுடைய மூன்று குமாரர்களில் மூத்தோனாகிய சிம்மவிட்டுணு, பல்லவ மன்னன் சிம்ம விட்டுணுவின் பெயரைக் கொண்டுள்ளான். சிம்ம விட்டுணு பல்லவனுக்கு உடன் காலத்தவனாகவோ அல்லது அவருக்குப் பின்னரோ இந்த ரேநாட்டுச் சோழ சிம்ம விட்டுணு வாழ்ந்திருக்க வேண்டும். இந்த சிம்ம விட்டுணுவிற்கும் அவர் காலத்திய பல்லவ மன்னர்களுக்கும் நிலவிய தொடர்பு பற்றிய விவரங்களை அறிவதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை.[76] சிம்மவிட்டுணுவிற்குப் பிறகு அவனுடைய இளவல்

தனஞ்செயவர்மன் ரேநாட்டில் ஆட்சி புரிந்தான். கடப்பை மாவட்டம், கமலாபுரம் வட்டத்தில் உள்ள காலமல்லா என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் இந்த அரசனுடைய பெயர் காணப்பெறுகிறது. ஏற்ற குடிப்பாகு என்ற இடத்துக் கல்வெட்டும் இவ்வரசனைப்பற்றிக் குறிப்பிடுகிறது. பிற்கூறப்பெற்ற கல்வெட்டில் ஏரிகால் முத்துராசு வல்லவதுக்கராசுலு என்ற பெயர்கள் தனஞ்செயவர்மனையும், பல்லவ சிம்மவிட்டுணுவையும் குறிக்கக்கூடும் என்று எம்.எஸ்.கோவிந்தசாமி கருதுவது பொருத்தமாகத் தெரியவில்லை.[77]

மகேந்திரவர்மன் (கி.பி. 595 - 620 ஏ.மு.)

தனஞ்செயவர்மனுக்குப் பிறகு அவனுடைய மகன் முதலாம் மகேந்திரவர்மன் அரச பதவியை ஏற்றார். புண்ணிய குமாரனுடைய மலேபாடு செப்பேடுகளில் மகேந்திர வர்மனுக்கு சோழ மகாராசா என்ற விருதுப்பெயர் காணப்படுகிறது. சேர, சோழ, பாண்டியர்களுடைய நாடுகளுக்குத் தலைவர் என்றும் புகழப்பட்டுள்ளான்.

சோழ மகாராசா என்னும் பட்டம் மகேந்திர வர்மனுடைய தனியாட்சியைக் குறிக்கும் என்று டாக்டர் என். வேங்கட்டரமணய்யா கூறுவர். ஆனால் எம்.எஸ். கோவிந்தசாமி, மகாராசா என்ற பட்டத்தை குறுநில மன்னர்களும் மேற்கொள்வது வழக்கம் என்றும் அப்பட்டம் ஒரு தலைவனுடைய சுயேச்சையைக் குறிப்பிடாது என்றும் கூறுவர். மகேந்திரவர்மன் என்ற ரேநாட்டுச் சோழனுடைய பெயர் அவன் பல்லவ மகேந்திரவர்மனுக்கு அடங்கியிருந்தான் என்பதையே காட்டுகிறது என்று கூறுவர். சேர, சோழ, பாண்டியர்களுடைய நாடுகளை வென்றான் என்னும் கூற்று மகேந்திரவர்மன் இளவரசனாக இருக்கும்பொழுது, சிம்ம விட்டுணு பல்லவன் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடன் செய்த போர்களில் பங்கு கொண்டான் என்பதை நினைவூட்டும்.

குணமுடிதன் (கி.பி. 620 - 625)

ரேநாட்டுச் சோழன் முதலாம் மகேந்திரவர்மனுக்கு குணமுடிதன், புண்ணியகுமாரன் என்ற இரு மக்கள் இருந்தனர். குணமுடிதன் என்ற பெயர், பல்லவ அரசன் மகேந்திரவர்மனுடைய குணபரன் என்னும் பட்டத்தை நினைவூட்டுகிறது. பல்லவ மகேந்திரனுடைய மேலாண்மையைக் குணமுடிதன் ஏற்றுக்கொண்டமையால் பேரரசனுடைய குணபரன் என்னும் பெயரை இவன் மேற்கொண்டு குணமுடிதன் என்று அழைக்கப்பட்டான் என்று கருதலாம்.

புண்ணியகுமாரன் (சி. 625 - 655)

குணமுடிதனுக்குப் பிறகு அவனுடைய இளவல் புண்ணியகுமாரன் ரேநாட்டிற்கு அரசனானான். இவனுடைய ஆட்சிக் காலத்தைப்பற்றி வரலாற்று ஆராய்ச்சியாளர்களிடையே மிகுந்த கருத்து வேற்றுமை நிலவியது. மேல்பாடி அல்லது மலேபாடு செப்பேடுகளின் எழுத்தமைதி நோக்கி அஃது கி.பி.எட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலமாக இருக்கலாம் என்று கிருட்டிண சாத்திரியவர்கள் கருதினார்.[78] எச்.கே.நரசிம்மசுவாமி என்பார் இச்செப்பேடுகளை கி.பி. எட்டாம் நூற்றாண்டின் மத்திய காலம் ஆகிய 750-ஆம் ஆண்டிற்கு உரியதாகும் எனக் கூறினார். டாக்டர் எஸ். வேங்கட்டரமணய்யா அச்செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு உரியதாகும் எனக் கொண்டார். பேராசிரியர் க.அ.நீலகண்ட சாத்திரியார், வேங்கடராமையா, பீ. சீனிவாச்சாரியார் முதலியோர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்ததாகும் என்று கருதினர். இவற்றுள் டாக்டர் என். வேங்கட்டரமணய்யாவின் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைக் காலமாகிய கி.பி. 650-ஆம் ஆண்டே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. ஒரு குறுநில மன்னன் தன்னுடைய சமகாலத்திய பேரரசனுடைய பெயர்களையும்

விருதுகளையும் மேற்கொள்ளுவானேயொழிய தனக்குப் பின்வந்த பேரரசர்களுடைய பட்டங்களை மேற்கொள்ளுவது அரசியல் வழக்காறு ஆகாது. ரேநாட்டுச் சோழர்களால் மேற்கொள்ளப்பட்ட பெயர்களும் விருதுகளும் , அவர்களுடைய ஆட்சிக்காலத்தை நிச்சயிப்பதற்குத் துணை செய்கின்றன. புண்ணியகுமாரன் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனுடைய விருதுப்பெயர்களை மேற்கொண்டால் அவன் அந்தப் பேரரசனுடைய உடன் காலத்தவனாகவோ அவனுடைய இறுதிக் காலத்திலோ இருந்திருக்க வேண்டும். தொடக்கத்தில் புண்ணிய குமாரன் பல்லவ மகேந்திரவர்மனுக்கு அடங்கி இருந்த சிற்றரசனெனத் தெரிகிறது.

புண்ணியகுமாரனுடைய இராமேசுவரத் தூண் கல்வெட்டில் இவ்வரசனுக்குப் பிருதிவல்லபன் என்ற பட்டமும் இவனுடைய பட்டத்து அரசிக்கு வசந்தபோற்றிச் சோழ மகாதேவி என்ற பட்டமும் காணப்பெறுகின்றன. பிருதிவல்லபன் என்ற விருதுப்பெயர் வாதாபிச் சாளுக்கிய மன்னர்களுக்கு உரியதாகும். புண்ணியகுமாரனுடைய அரசிக்கு வழங்கிய வசந்தபோற்றி என்ற விருதுப்பெயர் சாளுக்கிய அரசகுல இளவரசிகளுக்கு வழங்கிய பெயராகும். புண்ணியகுமாரன் சாளுக்கிய இளவரசியாகிய வசந்த போற்றியைத் திருமணம் செய்துகொண்டான் எனக் கருதலாம். ஆகையால் சாளுக்கியருடன் திருமண உறவு கொண்டு பல்லவ மேலாண்மையை விட்டு வாதாபிச் சாளுக்கியருடன் உறவு கொண்டு பிருதிவி வல்லபன் என்ற சாளுக்கிய விருதுப்பெயரையும் மேற்கொண்டான் என்பது தெளிவாகிறது.[79] பல்லவ மகேந்திரவர்மனுக்கும் இரண்டாம் புலிகேசிக்கும் இடையே நடந்த போராட்டத்தில் புண்ணியகுமாரன் எவ்வித பங்கு கொண்டான் என்பது தெளிவாகத் தெரியவில்லை. பல்லவ-சாளுக்கியப் போராட்டத்தின் முதற் பகுதியில் போர் நடந்த இடங்களாகக் கொண்டு புண்ணிய குமாரன் மேலைச் சாளுக்கியருடன் சேர்ந்து

கொண்டான் என்று நாம் உய்த்துணரக்கூடும். மகேந்திர வர்மனின் மகனாகிய முதலாம் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசியை மணிமங்கலம், சூரமாரம், பரியளம் என்ற இடங்களில் தோற்கடித்துள்ளான். மணிமங்கலம் செங்கற் பட்டு மாவட்டத்தில் உள்ளது. சூரமாரம், காளத்திக்கருகில் உள்ளது. கடப்பை மாவட்டம், பொரடாத்தூர் வட்டத்தில் உள்ள பைதலா என்னும் இடம் பரியளம் என்று கருதப்பெறுகிறது. சூரமாரம், பைதலா என்ற இடங்கள் ரேநாட்டுச் சோழர்களுடைய ஆட்சிக்கடங்கிய நிலப் பகுதியில் இருப்பதால் அப்பகுதியிலும் பல்லவ சாளுக்கிய போராட்டம் நடந்ததெனக் கூறலாம். ரேநாட்டுச் சோழ நாட்டில் உள்ள சில ஊர்களின் பெயர்கள் மாமல்லபள்ளி என்றும் நரசிம்மபுரம் என்றும் அழைக்கப்பெறுவதால் மாமல்லனாகிய நரசிம்மவர்மன் ரேநாட்டுப் பகுதியைத்[80] தன்வசத்தில் கொண்டு வந்தான் என்று நாம் உணரலாம். ஆகவே புண்ணியகுமாரன் பல்லவ குறுநில மன்னனாகத் தொடங்கிய போதிலும் மேலைச் சாளுக்கியருக்கு அடங்கிய சிற்றரசனாக இரண்டாம் புலிகேசியின் காலத்திலும், அவருடைய மகன் முதலாம் விக்கிரமாதித்தன் காலத்திலும் இருந்தான், என்பது உறுதியாகிறது. கமலாபுரம் வட்டம் திப்பலூருவில் கிடைக்கும் ஒரு கல்வெட்டில் பொன்முகராமன் என்பவர் வடபெண்ணையாற்றால் சூழப்பெற்ற பாணமண்டலத்தை ஆண்டதாகக் கூறுகிறது. பொன்முகராமன் என்பது புண்ணியகுமாரனைக் குறிக்கும் பெயராகும். ஆகவே, பாணர்களுக்குச் சொந்தமான பகுதியில், மேலைச் சாளுக்கியரின் சிற்றரசனாக புண்ணியகுமாரன் ஆண்டதுடன் மேலைச் சாளுக்கியருடன் உறவு[81] கொண்டிருந்தான் என்பதும் புலனாகிறது. புண்ணியகுமாரனும் அவனுக்குப் பின் வந்த ரேநாட்டுச் சோழர்களும் பல்லவர்களுடைய மேலாண்மையை விடுத்து மேலைச் சாளுக்கியருடன் அரசியல் உறவு கொண்டனர் எனக் கூறலாம்.

சுருங்கக்கூறுமிடத்து ரேநாட்டுச் சோழர்கள் தொடக்கத்தில் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக இருந்த சிம்மவிட்டுணு பல்லவன் காலத்தில் பல்லவப் பேரரசு வளர்ச்சியுறுவதற்குத் துணை புரிந்தனர். ஆனால்,கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் இருந்து சாளுக்கியருடைய மேலாண்மையை ஒப்புக்கொண்டு அவர்களுக்கு அடங்கியவர் களாயினர். ரேநாட்டுச் சோழர்களைப் போன்று பாணர் களும் சாளுக்கியரைத் துணைவர்களாகக் கொண்டனர். பாணர் ரேநாட்டுச் சோழ்ர்களுடைய ஆட்சியில் அடங்கிய பகுதிகளில், பல்லவர் செல்வாக்குக் குறைந்தது. மேலைச் சாளுக்கியர் கை மேலோங்கியது. இந்தச் சூழ்நிலையில் மேலைச் சாளுக்கிய மன்னர்கள் அடிக்கடி பல்லவப் பேரரசிற்கும் படையெடுத்து அப்பேரரசிற்கும் மக்களுக்கும் துன்பம் விளைவிப்பது சாத்தியமாயிற்று.[82]

அதியமான்கள்

சங்கநூல்களாகிய புறநானூற்றிலும் அகநானூற்றிலும் கொங்கு நாட்டு அதியமான் மரபைச் சேர்ந்த மன்னர்களின் புகழ்மிக்க செய்திகள் பேசப்பெறுகின்றன. மௌரியப் பேரரசர் அசோகருடைய கல்வெட்டுகளில் கூறப்பெற்ற சத்தியபுத்திரர்கள் என்ற பெயர் இந்த அதியமான்களையே குறிக்கும் என்று கே.சி. சேசய்யர், டி. பரேர போன்றோர் கருதினர். இவர்களுடைய கருத்துகள் வரலாற்றுண்மையாகும் என்பதைச் சென்ற 1982-ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டம் சம்பை என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் “சதியபுதே அதியன் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி“ என்ற கல்வெட்டுத் தொடர் உறுதி செய்துள்ளது. இந்த அதியமான் மரபின் முதல்வனாகிய நெடுமிடல் அஞ்சி இக்காலத்தில் தருமபுரி மாவட்டத்தின் தலைமை இடமாகிய தருமப்புரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளான். கடைச்சங்க காலத்தில் அதியமான் நெடுமிடல் அஞ்சி, அதியமான் நெடுமான் அஞ்சி, அதியமான்

பொருட்டெழினி என்ற சிற்றரசர்களைப் பற்றி நாம் கேள்விப் படுகிறோம்.[83] ஆனால், மேற்கூறப்பெற்ற சிற்றரசர்கள் கொங்கு நாடு முழுவதையும் ஆண்டார்களா அல்லது அம்மண்டலத்தின் வடக்குப் பகுதியை ஆண்டார்களா என்பது விளங்கவில்லை.[84] சேக்கிழாருடைய பெரிய புராணத்தில் புகழ்ச்சோழ நாயனாருடைய வரலாற்றில் அவருக்கு அடங்கி ஆட்சி புரிந்த அதியமான் ஒருவனுடைய வரலாறு கூறப்பெற்றுள்ளது.[85] இந்த புகழ்ச் சோழர் கி.பி.500 வது ஆண்டிற்கு முன் சோழ நாட்டில் ஆட்சி புரிந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.[86] இந்த அதியமானுக்கும் பல்லவர்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருந்ததா என்பது தெரியவில்லை.

துர்வினிதன் என்ற மேலைக் கங்க மன்னன் ஏறத்தாழ கி.பி. 540 - 600-இல் ஆட்சிபுரிந்ததாகக் கருதப்பெறுகிறார். இம்மன்னன் கொங்கு நாட்டை 'காடுவெட்டி' என்பவனிடம் இருந்து வென்று தன்னுடைய மகனுக்கு கொங்கு நாட்டுச் சிற்றரசன் என்ற பட்டத்தை அளித்ததாகக் கூறப்பெறுகிறது.[87] காடுவெட்டி என்னும் பட்டப்பெயர் பல்லவ மன்னருக் குரியதாகும். ஆகவே, துர்வினிதனுடைய ஆட்சிக் காலத்திற்கு முன் கொங்குநாடு பல்லவருடைய ஆதிக்கத்தில் இருந்ததெனக் கூறலாம். தொட்ட பல்லாபூர் என்னுமிடத்தில் உள்ள ஒரு கல்வெட்டின்படி துர்வினிதன் சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களின் மீது படையெடுத்ததாகத் தெரிகிறது. ஆகையால், கொங்கு நாட்டை மீண்டும் பல்லவர்கள் கைப்பற்றினர் என்பதை உணரலாம்.

கடைச்சங்க காலத்தில், மழகொங்கம் என்னும் பகுதி அதியமான்களுடைய ஆட்சியில் இருந்தது.[88] இந்த மழகொங்கம் நாடு சோழநாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் இடையில் உள்ள கொல்லிமலைப் பகுதியைச் சேர்ந்ததாகும் என்றும் சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் பகுதிக்கு அருகில் இருந்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். சிம்ம விட்டுணு என்ற பல்லவ மன்னன் மழவர் இனத் தலைவன் மீது

வெற்றி பெற்றதாகக் கசாக்குடிச் செப்பேடுகளில் கூறப் பெற்றுள்ளது.[89] இந்த மழவர் கோமகன் அதியமான்களுக்கு உட்பட்டு மழகொங்கத்தை ஆண்டவனாக இருக்கக்கூடும். நாமக்கல் என்னுமிடத்தில் உள்ள அதியேந்திர விட்டுணுக் கிரகம் என்னும் மாலியத் திருக்கோயிலின் பெயர் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனுடைய விருதுப் பெயர்களில் ஒன்றாகிய 'அதிகேந்திரன்' என்பதின் மரூஉ மொழியாகக் கருதலாம். இவ்விருதுப் பெயர் மகேந்திரவர்மன் அதிய மான்கள் மீது செலுத்திய மேலாண்மையைக் குறிக்கிற தெனக் கூறலாம். மகேந்திரவர்மன் அதியமான்களை வென்றதாகக் கூறத் தகுந்த கல்வெட்டுச் சான்றுகள் இன்மையால், சிம்மவிட்டுணுப் பல்லவனே மழகொங்கத்தை வென்று தன்னடிப்படுத்தியதாகக் கொள்ள வேண்டி யுள்ளது.[90]

கொங்கு நாட்டின் இடவமைதி, பல்லவ, பாண்டிய மேலைக் கங்கர்களின் அரசியல் ஆதிக்கப் போட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. ஆகையால், இம்மூன்று அரச வமிசத்தினரும் கொங்கு நாட்டைத் தங்கள் வசத்தில் கொண்டு வருவதற்கு ஏற்ற முயற்சிகளை மேற்கொண்டனர்.

வேள்விக்குடிச் செப்பேடுகளில் கோச்சடையன் இரணதீரன் என்ற பாண்டிய மன்னன் "கொங்கர் கோமான்" என்று கூறப்பெற்றுள்ளமையால் அவன் கொங்குநாட்டை வென்றிருக்கக்கூடும். கோச்சடையனுக்குப் பின் வந்த மாற வர்மன் முதலாம் இராசசிம்மன் மழகொங்கத்தை அடிப் படுத்தி 'எழிலமைந்த நெடும்புரிசை பாண்டிக் கொடுமுடி சென்றெய்தி, பசுபதி பாதம் பணிந்து ஏத்திக் கனகராசியும், கதிர்மணியும் மனமகிழக் கொடுத்திட்டான் என்று மேற்படி செப்பேடுகள் கூறுகின்றன. இவற்றால் பாண்டியர்கள் ஈரோடு வட்டத்தில் உள்ள கொடுமுடி வரையில் கொங்கு நாட்டின் பகுதியினைத் தங்களுடைய ஆட்சியில் சேர்த்துக் கொண்டனர் என்று உணரலாம்.

சடிவ பராந்தக நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னனுடைய சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகளில் அதியமான் என்ற குறுநில மன்னனுக்கு உதவியாக வந்து பல்லவ, கேரள மன்னர்களையும், அதியமானையும் காவிரிநதியின் வடகரையில் உள்ள அ்ரியூர், புகழியூர், ஆயிரவேலி என்னும் இடங்களில் வென்று புகழடைந்ததைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இச்செப்பேடுகள் கி.பி. 782-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டவையாகும். அதியமானுக்கு உதவியாக பாண்டியனுடன் போரிட்ட பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனாகவோ அல்லது அவனுடைய மகன் தந்திவர்மனாகவோ இருக்க வேண்டும். இரண்டாம் நந்திவர்மன் தனக்கடங்கிய அதியமானுக்கு உதவி செய்தது குறிப்பிடத் தக்கதாகும். நாமக்கல்லில் உள்ள இலக்குமி நரசிம்மப் பெருமாள் குடைவரைக் கோயிலில் காணப்பெறும் பல்லவகிரந்த கல்வெட்டு ஒன்றில் இரண்டாம் நந்தி வர்மனுடைய விருதுப் பெயராகிய சிரீதரன் என்ற பெயர் காணப்பெறுவதால் இக்கல்வெட்டு அவன் காலத்தில் பொறிக்கப்பெற்றதாகும். சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகளில் கூறப்பெற்ற மேற்கொங்கு அரசன், அதியமான் சிற்றரசனைக் குறிக்காது என்ற கருத்து ஒப்புக் கொள்ளத்தக்கதன்று. மேற்கொங்கு அரசனும் அதியமானும் ஒருவனேயாவன். இச்செப்பேட்டின்படி பாண்டிய மன்னன் கொங்கு நாட்டினை வென்று தன்னடிப்படுத்தினன் என்று நாம் உணரலாம்.[91]

மேலைக் கங்கர்-அதியமான்கள் அரசியல் உறவு

சேலம் மாவட்டத்திலுள்ள ஒட்டர்பட்டி என்ற இடத்தில் கிடைத்த நடுகல் கல்வெட்டு ஒன்றில் சிரீ புருடர் என்பாருடைய ஏழாம் ஆட்சியாண்டுச் செய்தி ஒன்று குறிப்பிடப்பெற்றுள்ளது. கங்க மன்னன் சிரீ புருடவர்ம னுடைய 27-ஆம் ஆட்சியாண்டுச் செய்தியொன்றும் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இவ்விரண்டும் நடுகல்

கல்வெட்டுகளும் மேலைக் கங்க அரசன் சிரீ புருடவர்மனுடைய காலத்தவையாகும். இக்கல்வெட்டுகள் சிரீ புருடவர்மன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்த செய்திகளைக் கூறுகின்றன. வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டத்திலுள்ள சிரீ புருடமங்கலம் என்ற ஊரின் பெயரும் அதியன்குப்பம், அதியணர் என்ற பெயர்களும் மேலைக்கங்க அரசன் சிரீ புருடன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்ததையும், அவனுக்கு உதவி செய்த அதியமானுடைய நட்பையும் குறிக்கக் கூடுமென்று ஆராய்ச்சியாளர் கருதுவர்.[92] ஆனால், இந்த மேலைக் கங்கர் அதியமான் நட்பு வெகுநாள் நீடிக்கவில்லை. வேலூருக்கருகில் உள்ள கரடிக்குடி என்னும் இடத்தில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்று பல்லவருக்குத் துணையாக அதியமான் ஒருவன் மேலைக்கங்க அரசன் சிரீபுருடனுடன் போரிட்டதைக் குறிக்கிறது. ஆனால், சிரீ புருடன் அதியமானைத் தோற்கடித்து சேலம் மாவட்டத்திலுள்ள குமாரமங்கலம் என்னும் இடம் வரையில் தன் வசப்படுத்தினன். ஆகையால், அதியமான்கள் தங்களுடைய நாட்டின் வடக்குப் பகுதியை இழந்து, தெற்கேயுள்ள நாமக்கல் பகுதியில் ஆட்சி புரிந்திருக்கவேண்டும். தகடூர் அதியமான் சிற்றரசர்கள் தொடக்கத்தில் மேலைக்கங்கர்களுக்கும் பின்னர் பல்லவர்களுக்கும் அடங்கி அவர்களுடைய போர்களில் ஈடுபட்டனர் எனக் கூறலாம்.

மேலைக்கங்கர்–பல்லவர் உறவு

பல கல்வெட்டுகளின் துணைகொண்டு மேலைக் கங்க மன்னர்கள் பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர் என்று கொள்ளலாம். மேலைக் கங்க வமிசத்தை தோற்றுவித்த கொங்கணிவர்மன் அல்லது முதலாம் மாதவனைப் பல்லவ மன்னர்கள் கங்கநாட்டு அரசபதவியில் அமர்த்திப் பாணர்களுடைய நாட்டையும் சேர்த்துக் கொள்ளச் செய்தனர் என்று கூறுவர்.[93] கடம்ப வமிசத்து

மயூரசர்மனுக்கும் பல்லவ மன்னர்களுக்குமிடையே அமைதி தோன்றிய பிறகு பாணர்கள், அனந்தபூர் மாவட்டத்திலுள்ள பருளி விடயம் என்ற பகுதியில் இருந்தனர். அனந்தபூர் மாவட்டம் இந்துபூர் வட்டத்தில் உள்ள பார்கி என்ற இடம் பருளி விடயம் என்று கருதப்பெறுகிறது. தன்னுடைய எதிரிகளாகக் கருதப்பெற்ற பாணர்களை அடக்குவதற்காக முதலாம் சிம்மவர்மனாகிய பல்லவ மன்னன் மேலைக்கங்கத் தலைவர் அரிவர்மனை அரசப் பதவியில் அமர்த்தினான்.[94] ஆகையால் அரிவர்மன் பல்லவர்க்கு அடங்கிய கங்க அரசனாகவே இருந்திருக்க வேண்டும். பாணர்களுடைய ஆட்சியில் இருந்த பருளி விடயத்தை கங்க மன்னர்களுடைய ஆட்சிக்கு மாற்றியது கி.பி. 450-ஆம் ஆண்டில் நடந்ததெனக் கருதப்படுகிறது. இச்செய்தியைப் பெனுகொண்டாச் செப்பேடுகள் உறுதி செய்கின்றன.[95] திகம்பர சமண ஓலைச்சுவடியாகிய உலோகவிபாகம் என்ற நூல் சிம்மவர்மனுடைய இருபத்திரண்டாம் ஆட்சி யாண்டாகிய கி.பி.485-இல் பாணராட்டிரத்திலுள்ள பாடலீகா என்னும் இடத்தில் மொழிபெயர்த்து எழுதப் பெற்றதென நாம் அறிகிறோம். இந்தப் பாடலீகா என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைமை இடமாகிய திருப்பாதிரிப்புலியூர் எனக் கருதப்பெறுகிறது. ஆகையால், பாணர்கள் பருளி விடயத்திலிருந்த பாணராட்டிரத்தில் கி.பி. 450-இல் குடியேறியிருக்க வேண்டும்.

அரிவர்மனுக்குப் பிறகு கங்க அரியணையில் அமர்ந்த விட்டுணுகோபன் என்ற மேலைக் கங்க அரசன் ஐந்து ஆண்டுகளே ஆட்சிபுரிந்தான். விட்டுணுகோபன் என்ற பெயர் பல்லவ மன்னர்களின் பெயர் என்பது யாவரும் அறிந்ததொன்று. பெனுகொண்டா, கூடலூர், சூக்கட்டூர் முதலிய இடங்களில் கிடைத்த செப்பேடுகளில் விட்டுணு கோபனுடைய அரசியல் உறவுகளைப்பற்றி எவ்விதச் செய்தியும் கூறப்பெறவில்லை. தனக்குமுன் ஆட்சி புரிந்த கங்க மன்னர்களைப் போலவே விட்டுணுகோபனும்

பல்லவர்களுக்கு அடங்கிய கங்கச் சிற்றரசனாக இருந்தான் எனக் கூறலாம்.

விட்டுணு கோபனுக்குப் பிறகு அரச பதவியை வகித்த மூன்றாம் மாதவன் (கி.பி.465-500), மூன்றாம் கந்தவர்மன் என்ற பல்லவ மன்னனால் முடிசூட்டப்பெற்றுள்ளான். இவ்வரசனுக்குச் சிம்மவர்மன் என்ற மற்றொரு பெயரும் வழங்கியது. இப்பெயரைக் கொண்டு அவன், பல்லவ மன்னன் சிம்மவர்மனுக்கு அடங்கியவன் என்பதை உறுதி செய்யலாம். வனவாசிக் கடம்பர்களின் கிளை வழியினனாகிய கிருட்டிண வர்மன் என்பானுடைய உடன் பிறந்தாளை மூன்றாம் மாதவன் மணந்து கொண்டான். இத்திருமண உறவினால் கடம்ப வமிசத்து மிருகேசவர்மனும்(கி.பி .475-490.சி) மூன்றாம் மாதவனும் பகைவர்கள் ஆயினர் எனத் தோன்றுகிறது. மிருகேசவர்மனுடைய எட்டாம் ஆட்சி யாண்டில் மொழிபெயர்க்கப்பெற்ற ஹல்சி (Halsi) செப்பேடுகளில் 'துங்ககங்கன் என்பானுக்குப் பெருந்தீ போன்றவன் என்றும், பல்லவர் குலத்தை வேரறுத்தவன்[96] என்றும்' மிருகேசவர்மன் புகழப்பெற்றுள்ளான். துங்க கங்கன் என்னும் பெயர் மிருகேசவர்மனுடைய உடன் காலத்தவனாகிய மூன்றாம் மாதவனைக் குறிக்கும். இச்செப்பேட்டின் மூலம் பல்லவர்களுக்கும், கடம்பர்களுக்கும் இடையே பகைமை நிலவியது என்பது புலனாகிறது. மேலைக்கங்க மன்னன் மூன்றாம் மாதவனுக்குப் பல்லவப் பேரரசன் உதவி செய்தான்.

மூன்றாம் மாதவனுடைய மகன் அவனீதன் (கி.பி. 500-540) இளமையிலேயே கங்கநாட்டு அரியணையில் அமர்ந்தான். அவனீதனும் பல்லவர்களுடன் நட்புக்கொண் டிருந்ததாகக் கல்வெட்டுகளின் மூலம் நாம் உணருகிறோம். அவனீதனுடைய ஆட்சிக் காலத்தில் சிம்மவிட்டுணு பல்லவனுடைய தாய், கங்கபாடியிலுள்ள ஒரு[97] சமணப் பள்ளிக்கு நன்கொடை அளித்ததாகக் கூறுகிறது. ஆனால், சிம்ம விட்டுணுவின் தாய் கங்க அரசகுலத்தைச் சேர்ந்தவளா

என்று நிச்சயிப்பதற்குரியச் சான்று கிடைக்கப் பெறவில்லை.[98]

அவனீத கங்கனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த துர்வினிதனும் (கி.பி.540-600) அவனுக்குப் பின் வந்த கங்க அரசர்களும் பல்லவர்களுக்கு அடங்கி இருந்ததாகத் தெரியவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாதாபிச் சாளுக்கிய பெருவேந்தனாகிய இரண்டாம் புலிகேசி மேலைக் கங்கர்களையும் கடம்பர்களையும் வென்றதாக அறிகிறோம்.[99] இக்காலமுதற்கொண்டு இராட்டிரகூடர்கள் மேலைச் சாளுக்கியரை வென்று அடக்கும் வரையில், கங்கர்கள் மேலைச் சாளுக்கியர்களுக்கு அடங்கிய சிற்றரசர் களாக இருந்தனர். இராட்டிரகூடர்களுடைய அரசியல் வளர்ச்சி மேலைக் கங்கர்களுடைய வீழ்ச்சிக்கு அறிகுறியாகியது. மேலைக்கங்க அரசன் சிரீ புருடனும் அவனுடைய மகன் இரண்டாம் சிவமாறனும், இராட்டிரகூட அரசன் மூன்றாம் கோவிந்தனுடன் பெரியதொரு போரில் ஈடுபட்டிருந்தனர். இப்போர் முடிவுற்றபிறகு இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கோவிந்தனும் பல்லவ நந்திவர்மனும் சிவமாறனை மேலைக் கங்க அரசனாக ஒப்புக்கொண்டுள் ளனர்.[100] இரண்டாம் சிவமாறனுடைய மகனாகிய முதலாம் மாறசிம்மனுடைய மன்னே செப்பேடுகளில், தன்னுடைய தந்தை இராட்டிரகூட மூன்றாம் கோவிந்தனும் பல்லவ நந்திவர்மனும் முடிசூட்டியதைக் குறிப்பிடுகிறான். ஆகையால், கங்கர்கள் இராட்டிரகூடர்களுக்கு அடங்கி இருந்தனர் என்பதும் பல்லவ மன்னனும் அவர்களுக்கு ஒருவிதத்தில் கட்டுப்பட்டிருந்தனன் என்பதும் தெளி வாகின்றன. ஆனால் இச்செப்பேடுகளில் கூறப்பெற்ற பல்லவ அரசன் இரண்டாம் நந்திவர்மனா அல்லது மூன்றாம் நந்திவர்மனா என்பது தெளிவாக விளங்கவில்லை.[101]

இரண்டாம் சிவமாறனுக்குப் பிறகு, கோலாரில் கங்க வமிசத்தைச் சேர்ந்த முதலாம் விசயாதித்தன், முதலாம் இராசமன்னன் என்ற கங்க மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர்.

ஏனெனில் இரண்டாம் சிவமாறனுடைய மகன் முதலாம் பிருதிவிபதி மிக்க இளைஞனாக இருந்தனன். முதலாம் பிருதிவிபதி ஆட்சியைத் தொடங்கியதும் பல்லவர்களுக்கு அடங்கியே ஆட்சி புரிந்தனன். கி.பி.885 - இல் திருப்புறம்பியத்தில் நடந்த பெரும்போரில், முதலாம் பிருதிவிபதி, பல்லவ மன்னன் அபராசிதவர்மனுடைய வெற்றிக்காகத் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்தான். முதலாம் பிருதிவிபதியின் பெயரனாகிய இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரம் செப்பேடுகளில், முதலாம் பிருதிவிபதியின் வீரச்செயல்கள் பின்வருமாறு கூறப் பெற்றுள்ளன. "திருப்புறம்பியத்தில் பல்லவ மன்னன் அபராசி எதிர்த்த வரகுணபாண்டியனுடைய கடல்போன்ற படையை எதிர்த்து, அபராசிதன் அல்லது 'தோல்வியை அறியாதவன்' என்ற அரசனுடைய பெயரின் உண்மையை உலகிற்கு உணர்த்திப் பிருதிவிபதி தன்னுடைய உயிரைத் தியாகம் செய்து இந்திரலோகம் என்னும் வீரசுவர்க்கத்தை அடைந்தான்.[102]

முதலாம் பிருதிவிபதியின் மகனாகிய இரண்டாம் மாறசிம்மன் ஆதித்தச் சோழனுக்கு உதவியிருக்கக்கூடும்.[103] திருப்புறம்பியப் போருக்குப்பின், ஆதித்தச்சோழன் மேலைக் கங்கர்களோடு போர் புரிந்ததைக் கூறுவதற்கேற்ற சான்றுகள் கிடைக்கவில்லை.[104]

உதிரி கங்கத் தலைவர்கள்

மேலைக்கங்க மன்னர்களைப் போன்று பல்லவர் களுக்கு அடங்கிய வேறு சில கங்கத் தலைவர்களும் இக்காலத்திய வடார்க்காடு மாவட்டத்தில் இருந்தனர். இரண்டாம் நந்திவர்மனுடைய 52 - ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற குழிதிக்கி (Kulidikki) கல்வெட்டில் கார்காட்டூர் தலைவனாகிய கங்காதி அரையர் கன்னாடு பெருங்கங்கர் என்ற தலைவனுடைய பெயர் காணப் பெறுகிறது.[105] இத்தலைவன் பல்லவர்களுக்காக மேலைக் கங்கர்களுடன் போரிட்டு தன்னுடைய உயிரை நீத்துள்ளான்.

திருமலை திருப்பதி தேவத்தானக் கல்வெட்டு ஒன்றில் நந்திவர்ம பல்லவன் காலத்திய கங்கத் தலைவன் ஒருவன் குறிப்பிடப்படுகிறான்.[106] வேலூர் வட்டம் பள்ளி கொண்டாவில் மூன்றாம் நந்திவர்மனுடைய இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றில் அவனிகங்கரையர் மகன் செல்வன் வாணரையன் என்பான், பள்ளிகொண்டாவில் உள்ள நாகநாதீசுவரர் கோவிலின் முக மண்டபத்தை அமைத்தது பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இத்தலைவன் வாணர்குலத்தைச் சேர்ந்தவனா, அல்லது கங்கர் குலத்தைச் சேர்ந்தவனா என்பது விளங்கவில்லை. மூன்றாம் நந்திவர்ம னுடைய மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற சீயமங்கலம் கல்வெட்டில் நெற்குட்டிப் பெருமாள் என்ற கங்கத் தலைவனுடைய பெயர் காணப்பெறுகிறது.[107]

கம்பவர்மனுடைய எட்டாம் ஆட்சி ஆண்டில் எழுதப்பெற்ற சீயபுரம் கல்வெட்டில் பிருதிவி கங்கரையர் என்ற கங்கத் தலைவனின் பெயர் காணப்பெறுகிறது. ஆம்பூர், மேல்பட்டி, திப்பாசமுத்திரம் முதலிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளில் காணப்பெறும் பிருதிவிகங்கரையரும் இந்தச் சீயபுரம் கல்வெட்டுப் பெயரும் ஒன்றுதானா என்பது விளங்கவில்லை. பிருதிவிகங்கரையருடைய மகன் இராசாதித்தன் என்பவன் கம்பவர்மனுக்கு அடங்கிய தலைவனாவான். ஆம்பூர், மேல்பட்டி, திப்பாசமுத்திரம் முதலிய கல்வெட்டுகளில் கூறப்பெற்ற பிருதிவி கங்கரையர் பல்லவ மன்னர்களுடைய எல்லைப் போர்களில் பெரும்பங்கு கொண்டுள்ளான். மேல்பட்டி கல்வெட்டில் பாணர்களுக்கும், இத்தலைவனுக்கும் இடையே போரொன்று நடந்ததாகக் கூறப்படுகிறது. திப்பாசமுத்திரம் கல்வெட்டு, மேற்பட்டி கல்வெட்டிற்குப் பிறகு ஏழாண்டுகள் கழித்துப் பொறிக்கப் பெற்றுள்ளது. இதன்படி பிருதிவி கங்கரையர் பல்லவருக்குக் கீழ்ப்படிந்துள்ளார் என்றும் இத்தலைவனும் இவனுடைய மனைவியும் தங்களுடைய மகன் அய்யாக்குட்டி என்பவன் பெயரால் திப்பாசமுத்திரம் என்னும் ஊருக்குப்

பாலாற்றிலிருந்து விழுப்பேரரையன் என்ற கால்வாய் ஒன்றை அமைத்துள்ளனர் என்று அறிகிறோம்.[108]

கோவிசய நரசிம்மவர்மன் என்ற மற்றொரு கங்கத் தலைவன் பெயர் பல்லவர்களுடைய கல்வெட்டுகளில் காணப்பெறுகிறது. இத்தலைவனுடைய கங்கவாடி கல்வெட்டில் கி.பி. 878 -இல் நடந்த சோர்மதி (Soremati)ப் போரில் பங்கு கொண்டவர்களைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளது.[109] இத்தலைவன் தகடூர்ப் பகுதியில் வாழ்ந்த மேலைக் கங்கர்களுக்கும் நுளம்பப் பல்லவர்களுக்கும் பாணர்களுக்கும் இடையே நடந்த போர்களில் பாணர்களுக்கு உதவி செய்துள்ளான்.[110]

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில், பாணர்களைப் பல்லவர் களுக்கு அடங்கி நடக்கும்படி செய்வதற்கும் வனவாசிக் கடம்பர்களுடன் போர்புரிவதிலும் மேலைக்கங்கச் சிற்றரசர்கள் பல்லவ மன்னர்களுக்கு உதவி செய்துள்ளனர். கி.பி. 878-இல் சோர்மதி என்னும் இடத்தில் கங்க அரசன் முதலாம் பிருதிவிபதியும் பாணர்களும் சேர்ந்து நுளம்பப் பல்லவர்களுக்கு எதிராகப் போரிட்டதும் வெற்றி பெற்றதும் பல்லவப் பேரரசின் வடமேற்குப் பகுதியில் பல்லவர் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்தது. முதலாம் பிருதிவிபதி திருப்புறம்பியப் போரில், அபராசித பல்லவனுக்காகத் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்தது செயற்கரும் செய்கையாகும். ஆதித்த சோழன் தொண்டை மண்டலத்தை வென்று வசப்படுத்தியதற்குக் கங்கர்களுடைய உதவியும் இருந்தது.

பாணர்களும் பல்லவர்களும்

'அறிஞர் ந.சுப்பிரமணியம் தான் எழுதிய 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூலில் பாணர்கள் என்ற குறுநிலத் தலைவர்கள் சங்க நூல்களில் கூறப்பெற்றுள்ள பெரும்பாணர், சிறுபாணர் என்ற இனத்தவரின் வழியினர் எனக் கூறுவர்.

சங்க இலக்கியங்களில் கூறப்பெறும் பெரும்பாணர், சிறுபாணர் என்போர் யாழ், வீணை முதலிய இசைக் கருவிகளை இசைத்துப் பாடியும் ஆடியும் முடிவேந்தர் களிடத்தும் வள்ளல்களிடத்தும் பரிசு பெற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தினர். ஆனால், பல்லவர்கள் பிற்காலச் சோழர்கள் காலத்தில் வாழ்ந்த பாண சிற்றரசர்கள் போர் புரிவதிலும் ஆட்சியைக் கைப்பற்றுவதிலும் முடிவேந்தர் களிடம் அரசியல் அலுவல்களைப் பார்ப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். இசைக்கலையிலும் ஆடற் கலையிலும் சிறப்புற்றிருந்த பெரும்பாணர், சிறுபாணர் என்போர் எவ்விதம் குறுநில மன்னர்களாக மாற்றம் அடைந்தனர் என ந. சுப்பிரமணியம் கூறவில்லை.[111] பாணர்கள் தங்களை மகாபலிச் சக்கரவர்த்தியின் வழியில் தோன்றியவர்களாச கூறிக்கொள்ளுவதால், பெரும்பாணர் சிறுபாணர்களுடைய வழியினர் என்று கூறுவது வரலாற்று உண்மைக்கு மாறுபட்டதாகும்.

பாணர்களுடைய ஆதி தாயகம், பாணராட்டிரம் பெரும்பாணப்பாடி, பருளிவிடயம் என்று பல கல்வெட்டு களில் கூறப்பெற்றுள்ளன. பாணராட்டிரம் என்பது தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியையும். பெரும்பாணப்பாடி என்பது கர்நாடகத்தின் கிழக்குப் பகுதியையும். வடார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியையும் குறிக்கும். பருளிவிடயம் என்பது சிரீபரவதம் அல்லது சிரீசைலம் என்று கூறப்பெறும் நிலப்பகுதியாகும். பல்லவர்களுடைய கொடியில் காணப்பெறும் நந்தி உருவத்தைப் பாணர்களும் மேற்கொண்டனர். மேலைக் கங்கர்களுக்கும் பாண சிற்றரசர்களுக்கும் இடையே திருமண உறவுகள் நடைபெற்றன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பாண சிற்றரசன் முதலாம் விக்கிரமாதித்தனுடைய மகள் குந்தவை கங்க மன்னன் முதலாம் பிருதிவி பதியை மணந்து கொண்டாள். ஆகவே, பாணர்கள் அரச குலத்தைச் சேர்ந்தவர்களேயன்றி இசைக்கலை, ஆடற்கலையில் வல்ல

பெரும்பாணர், சிறுபாணர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூற முடியாது.

தென்னிந்திய வரலாற்றில் அரசவமிசங்கள் அல்லது இனக்குழுக்களின் இடப்பெயர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது பாணர்களுடைய வரலாறு ஆகும். கி.பி.நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரையில் பாணர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து முடிவில் பாண்டிய நாட்டில் குடியேறி மற்ற தமிழ் மக்களுள் ஒன்றுபட்ட செய்தி மிக்க வியப்பைத் தருவதாகும். தொடக்க கால வரலாற்றில் பாணர்கள் சதவாகனப் பேரரசர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக இருந்தனர் என்றும் பின்னர் பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசர் களாயினர் என்றும் கருதப்பெறுகிறது.[112] கடம்பர் குல மன்னன் சாகுத்தவர்மனுடைய தாளகுண்டாத்தூண் கல் வெட்டில் பாணர்களைப் பற்றிய குறிப்புகள் காணப் பெறுகின்றன. இக்கல்வெட்டு கி.பி.430 முதல் 450 முடிய உள்ள காலப்பகுதியைச் சேர்ந்ததாகும்.[113] இக்கல்வெட்டில் "பல்லவ மன்னர்களுடைய எல்லைப் பாதுகாவலர்கலள வென்று, பின்னர் (கர்நூல் மாவட்டத்திலுள்ள) சிரீபருவதம் வரையில் பரவியுள்ள முல்லை நிலப்பகுதியை மயூரசர்மன் கைப்பற்றி னான் என்றும் பெரிய பாணத்தலைவருக்கடங்கிய சிற்றரசர் களிடமிருந்து திறைப்பொருட்களைப் பெற்றான் என்றும் கூறப்பெற்றுள்ளது. பல்லவர்களுடைய தாயகம் பல்லாரி, கடப்பை மாவட்டங்கள் ஆகும் என்றும் கடம்பகுல மயூரசர்மன் காலத்தில் பாணர்கள், பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர் என்றும் வி. வெங்கய்யா கருத்துத் தெரிவித்துள்ளார்.[114] மயூரசர்மனுக்கும், பல்லவர்களுக்கும் ஏற்பட்ட ஆதிக்கப் போராட்டத்தில், பாணர்கள், பல்லவர்களுடைய மேலாண்மையை விட்டு நீங்கிக் கடம்பகுல மயூரசர்மனுடைய சிற்றரசர்களாயினர். பாணர்கள் தங்களுக்கு அடங்கிவாழ மறுத்தமையால் பல்லவர்கள்

மயூரசர்மனுடன் அனுமதி உடன்படிக்கை செய்துகொள்ளும் படி நேர்ந்தது.[115]

மேலைக்கங்க அரசவமிசத்தைத் தொடங்கிய கொங்கணி வர்மனை பல்லவ மன்னன் ஒருவன் முடிசூட்டுவித்து, பாணமண்டலத்தை வென்று அடக்கும்படி உதவிசெய்ததாக இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரம் செப்பேடுகளில் கூறப்பெற்றுள்ளன.[116] தொட்டபல்லாபுரி வட்டத்தில் கி.பி.459 – ஆம் ஆண்டில் வரையப்பெற்ற கல்வெட்டு ஒன்றில், கொங்கணிவர்மன் "பாணர்கள் என்னும் வைக்கோற்போரை அழிக்கும் நெருப்பு' என்று புகழப்பெற்றுள்ளான். ஆனால், இந்தக் கல்வெட்டோ மற்ற கல்வெட்டுகளோ கொங்கணிவர்மன், பல்லவ மன்னர்களால் முடிசூட்டப்பெற்றான் என்ற செய்தியைக் கூறவில்லை. இச்செய்தி எவ்விதமாக இருந்தபோதிலும், பல்லவ மன்னர்கள் கொங்கணிவர்மனுக்கு ஆதரவு தந்தது, தங்களை விட்டுக் கடம்பர்களுடன் சேர்ந்துகொண்ட பாணர்களை அடக்குவதற்குச் செய்த அரசியல் ஒப்பந்தமாகும் எனக் கொள்ளலாம்.[117]

பல்லவ நாட்டின் வடமேற்கு எல்லையில் இருந்து பாணத் தலைவர்கள் கடம்பர்களுடன் சேர்ந்து கொண்ட போதிலும், தமிநாட்டில் நடுநாடு என்று கூறப்பெறும் பகுதியில் பாணர்கள் இருந்ததாகத் தெரிகிறது. எவ்வாறெனில், வடமொழியில் உள்ள திகம்பர சமணசமய நூலாகிய உலோக விபாகம் என்னும் உலகத்தோற்றத்தைப் பற்றிக் கூறும் நூலைச் சர்வநந்தி என்பவர் பாணராட்டிரத்தில் உள்ள பாடலீகம் என்ற ஊரில் தங்கி மொழிபெயர்ப்பு செய்துள்ளார். பாடலீகம் என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இந்த மொழிபெயர்ப்பு காஞ்சிபுரத்தில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் சிம்மவர்மனுடைய 22-ஆம் ஆட்சியாண்டாகிய கி.பி. 458-இல் செய்யப்பட்டது என்றும் நாம் அறிகிறோம். ஆகவே, கி.பி.

ஐந்தாம் நூற்றாண்டில் பாணராட்டிரத்தில் இருந்து பாணர்கள் பல்லவருக்கு அடங்கி ஆட்சிபுரிந்தனர் எனக் கொள்ளலாம்.

கி.பி.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் பாணர்களைப் பற்றிய அரசியல் வரலாற்றுச் செய்திகளை நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. தமிழ்நாட்டின்மீது களப்பிரரர்கள் படையெடுத்தபொழுது பாணர்கள் என்ன செய்தனர் என்பதும் விளங்கவில்லை. கங்ககுல மன்னர்களாகிய அவநீதனும் துர்வினிதனும் பல்லவர்களுக்கு அடங்கியிருந்த கொங்கு நாட்டின் பகுதிகளின் மீது படையெடுத்த போதிலும், அவர்களுடைய கல்வெட்டுகளில் பாணர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்பெறவில்லை. கடம்பர்களுடைய கல்வெட்டுகளும் பாணர்களைப் பற்றிய செய்திகளைக் கூறவில்லை. இரண்டாம் நந்திவர்மனுடைய கசாக்குடிச் செப்பேடுகள் மலையர், களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர், சேரள, சிங்கள அரசர்களை வென்றதாகக் கூறுகின்றன. ஆனால், பாணர்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆகவே, பாணராட்டிரத்தில் இருந்த பாணர்கள் பல்லவ மன்னர்களுக்கு அடங்கியே இருந்தனர் என்றும் சிரீசைலம் பகுதியில் இருந்த பாணர்கள் கடம்பர்களுடன் நட்புக் கொண்டிருந்தனர் எனவும் கொள்ளலாம்.[118]

கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாணர்கள் கடம்பகுல அரசர்களுடைய மேலாண்மையை விட்டு நீங்கி மேலைச் சாளுக்கியருக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர். பாணர்களுடைய ஆட்சிப் பகுதியாகிய சிரீசைலப் பகுதியை அடுத்து வாழ்ந்த ரேநாட்டுச் சோழர்களும் மேலைச் சாளுக்கியர்களுக்கு அடங்கியவர்களாயினர். பெத்தவடுகூர் என்னும் ஊரில் கிடைத்த கன்னடமொழிக் கல்வெட்டு ஒன்றில் பாணராசனுடைய நாட்டில் அவ்வூர் இருந்ததாகக் கூறப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டு இரண்டாம் புலிகேசியின் காலத்தது எனக் கருதப்பெறுகிறது. கி.பி. 635-ஆம் ஆண்டில்

பொறிக்கப்பெற்ற அய்கொனோ கல்வெட்டில் பாணர்களைப் பற்றிய செய்திகள் காணப்பெறவில்லை. ஆகவே கி.பி.635-ஆம் ஆண்டிற்கு முன்னரே பாணர்கள் ரேநாட்டுச் சோழர்களைப் போல மேலைச் சாளுக்கியருக்கு அடங்கி யிருந்தனர் என்பது உய்த்துணரப்பெறுகிறது.[119]

இரண்டாம் புலிகேசியின் இறப்பிற்குப் பிறகு சாளுக்கிய நாட்டில் நிலவிய குழப்பக் காலத்திலும் அதன் பின்னர் முதலாம் விக்கரமாதித்தன் அரசுரிமை ஏற்பதற்கு முன்னரும் பாணர்கள் சாளுக்கியருக்கு அடங்கியிருந்தனரா அல்லது பல்லவருக்கு அடங்கியிருந்தனரா என்பது விளங்கவில்லை. முதலாம் விக்கிரமாதித்தனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றில் ரேநாட்டுச் சோழ மன்னன் பொன்முகராமன் வடபெண்ணாற்றால் சூழப்பெற்ற பாண அரசனுடைய நாட்டை ஆண்டான் எனக் கூறப்பெறுகிறது. இந்தப் பொன்முகராமன் என்பது புண்ணியகுமாரனுடைய மற்றொரு பெயராகும். இதனால் பாணர்கள் மேலைச் சாளுக்கியருக்கும் ரேநாட்டுச் சோழனுக்கும் அடிபணிந்தனர் என்பது புலனாகும்.

சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தனுடைய பெயரனாகிய விசயாதித்தனுடைய கல்வெட்டுகளில், பாணர்கள் மேலைச் சாளுக்கியர்களுக்கு அடங்கி துரமாரம், வங்கலூர் பகுதிகளை ஆண்டு வந்தனர் என்பது தெரிகிறது. விசயாதித்தனுடைய 23-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் (719-20) துரமாரவிடயப் பகுதியிலுள்ள சிற்றரசர் களை, நரசிம்ம பாணராசாவின் மகனாகிய விக்கிரமாதித்தய பலி இந்திர பாணராசா என்பவர் தோல்வியுறும்படிச் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால்,கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாணர்குல மன்னன் ஒருவன் துரமார விடயப் பகுதியை ஆண்டு வந்தான் எனத் தெரிகிறது. முதலாம் விக்கிரமாதித்தனும் இரண்டாம் விக்கிர மாதித்தனும் காஞ்சிபுரத்தின் மீது படையெடுத்தபொழுது

பாணர்கள் அவர்களுக்கு உதவி செய்தனரா என்பது பற்றி அறிய முடியவில்லை.

பாண செயநந்திவர்மன் (கி.பி. 733 - 772)

செய நந்திவர்மனுடைய ஆட்சிக் காலமாகிய கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாணர்கள் மீண்டும் பல்லவர்களுக்கு அடங்கியவர்கள் ஆயினர். இரண்டாம் நந்திவர்ம பல்லவனுடைய 23-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற குடிமல்லம் கல்வெட்டு வடுகவழிமேற்கு என்ற பகுதியை ஆட்சிபுரிந்த விக்கிரமாதித்த மாவலி வாணராயரைப்பற்றிக் கூறுகிறது.[120] விசய நந்திவிக்கிரம வர்மன் என்ற அரசனுடைய 62-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று வடுகவழி 12000 என்ற பகுதியில் ஆட்சிபுரிந்த மாவலி வாணராயர் என்பாரைப்பற்றிக் கூறுகிறது.[121] இக்கல்வெட்டுகளில் கூறப்பெற்ற வாணராயர் குடிமல்லம் உதயேந்திரம், முடியனூர் முதலிய இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளில் கூறப்பெற்ற செயநந்திவர்மன் என்ற பாணர் தலைவனைக் குறிக்கக்கூடும் என்று எம்.எஸ். கோவிந்தசாமி கூறுவர்.[122] இரண்டாம் நந்திவர்மப் பல்லவ னுடைய பெயரைத் தனக்கும் வைத்துக் கொண்டுள்ளமையால் இந்தச் செயநந்திவர்ம பாணராயர் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னன் என்பது புலனாகும்.[123]

பாணச் செயந்திவர்மன், இரண்டாம் நந்திவர்ம பல்லவனுக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்து பல்லவப் பேரரசு, மேலைக் கங்க அரச வமிசத்தினரால் அழிவுறாமல் இருப்பதற்கு உதவி செய்துள்ளார். வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டத்திலுள்ள சிரீபுருடமங்கலம் என்ற ஊரின் பெயர், கங்க மன்னன் சிரீ புருடன் தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சிக்குட்பட்ட பகுதியைக் கைப்பற்றி இருக்கக்கூடும் என்பதை உணர்த்துகின்றது. தான் மேலைக் கங்கர்களிடம் இழந்த பகுதியைக் கைப்பற்றுவதற்குத் தன்னுடைய 52-ஆம் ஆட்சியாண்டில் இரண்டாம் நந்திவர்மபல்லவன், சிரீ புருட

கங்கன் மீது படையெடுத்துச் சென்றார்.[124] இப்படையெடுப்பில் பாண செயநந்திவர்மன் இரண்டாம் நந்திவர்ம பல்லவனுக்கு உதவி செய்திருக்க வேண்டுமென எம்.எஸ். கோவிந்தசாமி கூறுவர். நந்திவர்ம பல்லவனுடைய தண்டந்தோட்டம் செப்பேடுகள் பல்லவ மன்னன் மேலைக்கங்க அரசன் மீது பெற்ற வெற்றியைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. பல்லவப் பேரரசின் அரசாங்கத்தில் செயநந்திவர்மன் உயர்ந்த சில பதவிகளை வகித்திருக்கக்கூடும் என்றும் கோவிந்தசாமி கருதுகிறார்.[125] பாண நந்திவர்மனும் அவனுக்குப் பின் வந்தோரும் வடுகவழி மேற்கு, வடுக வழி பன்னீராயிரம் என்று அழைக்கப்படும் பெரும்பாணப் பாடியை ஆண்டு வந்தனர். இந்தப் பெரும்பாணப்பாடி நாடு இக்காலத்திய சித்தூர் மாவட்டத்தில் மேற்குப் பகுதியும், வடார்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியின் கோலார் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், சேலம் மாவட்டத்தின் சில பகுதிகளும் அடங்கிய நிலப்பரப்பு எனக் கூறலாம். வடார்க்காடு மாவட்டத்திலுள்ள வாணபுரம் அல்லது வல்லம் என்ற ஊர் பாணர்களுடைய தலைமை இடமாகும்.[126]

முதலாம் விசயாதித்தியன் (கி.பி. 772-824) செயநந்திவர்மனுடைய மகன் விசயாதித்தியன் தன்னுடைய தந்தையினுடைய ஆட்சிக் காலத்திற்குப் பிறகு பெரும் பாணப்பாடி நாட்டிற்கும் அரசனானான். முதலாம் விசயாதித்தியன் பல்லவ நந்திவர்மனுக்கும், இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கோவிந்தனுக்கும் சமகாலத்தவன் ஆவன். தந்திவர்மன் (796-847) ஆட்சிக்காலத்தில் துருவன், மூன்றாம் கோவிந்தன் என்ற இராட்டிரகூட அரசர்கள் தக்காணத்தில் ஆட்சி புரிந்தனர். அவ்விரு அரசர்களும் பல்லவ நாட்டின்மீது படையெடுத்து தந்திவர்மன் பல்லவனைக் கப்பம் கட்டும்படிச் செய்தனர். பல்லவ நந்திவர்மனுக்கு அடங்கியிருந்த முதலாம் விசயாதித்தியன் கங்கபாடி ஆறாயிரம் என்ற பகுதியை பல்லவர்களுக்குச் சொந்தமா அல்லது மேலைக் கங்கர்களுக்கு உரியதா என்பதை நிச்சயிக்க முடியாமல் இருந்தது. ஆயினும்,

அப்பகுதியில் கிடைத்த மூன்று கல்வெட்டுகளில் பாண விசயாதித்தியனுடைய பெயர்கள் காணப் பெறுகின்றன.[127] நந்திவர்மனுக்கும் மூன்றாம் கோவிந்தனுக்கும் நடை பெற்ற போரில் நந்திவர்மன் தோல்வியுற்று மூன்றாம் கோவிந்தனுக்கு கப்பம் கட்டவேண்டிய நிலைமை தோன்றியது. ஆகவே, வாண விசயாதித்தியனும் பல்லவருடைய மேலாண்மையை விட்டு இராட்டிரகூட மன்னர்களுக்கு திரை செலுத்திட வேண்டியவராயினர்.[128] மூன்றாம் கோவிந்தனுக்குப் பிறகு மானியகேதத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அமோக வர்ஷன் காலத்தில் தோன்றிய உள்நாட்டுப் போரின்போது இராட்டிரகூடர்களும் கங்கவாடியில் நிறுத்தி வைத்திருந்த படைவீரர்களை மானியகேதத்திற்கு திரும்ப அழைத்துக் கொண்டனர். அப்பொழுது மேலைக் கங்க அரசனாகிய முதலாம் இராசமல்லன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள வள்ளி மலையில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இராசமல்லன் பாணர்களுடைய நாடாகிய கங்கவாடி ஆறாயிரத்தை வசப்படுத்திக் கொண்டதாகக் கூறுகின்றது.[129]

மேலைக் கங்கர்களுடைய எதிர்ப்பிற்குப் பயந்த விசயாதித்தியன் மீண்டும் பல்லவ மன்னன் நந்திவர்மனுடைய சிற்றரசனாக மாறினான்.[130]

வதுவல்லப மல்லதேவ நந்திவர்மன் (கி.பி. 824 - 843)

இந்தப் பாண சிற்றரசன் தந்திவர்மபல்லவன் ஆட்சிக் காலத்திலும் அவனுடைய மகன் மூன்றாம் நந்திவர்மனுடைய ஆட்சியின் தொடக்க காலத்திலும் இருந்தவனாவான். பாண அரசன் முதலாம் விசயாதித்தனுடைய மகனாவான். இவனுக்கு செகதேச மல்லன் என்ற பெயரும் வழங்கியது. சிக்கபல்லாபூர் செப்பேடுகளில் இரத்தினாவளி என்ற அரசியின் மகன் என்றும் தத்தநரதீபன் என்று கூறப் பெற்றவனும் இந்த அரசனேயாவான். இவனுடைய முடியனூர்க் கல்வெட்டு மிக முக்கியமானதாகும். சித்தூர்

மாவட்டம் மதனப்பள்ளியில் உள்ள சீட்புலியில் இவனுடைய கல்வெட்டு ஒன்று காணப்பெறுகின்றது. இந்தச் சீட்புலி என்ற இடம் ரேநாட்டுச் சோழன் திவாகரன் என்பானுடைய ஆட்சிக்குட்பட்டதாகும். ஆகவே, மல்லதேவ பாணன் ரேநாட்டு சோழரை வென்று தன்னுடைய ஆட்சிக்கு உட்படுத்தினன் என்று கொள்ளலாம். ரேநாட்டு சோழர்களுக்கு உட்பட்ட வைதும்பர்களையும் மல்லதேவன் தன்னடிப்படுத்தியதாக எம்.எஸ். கோவிந்தசாமி கூறுவர்.[131] மல்லதேவன் ரேநாட்டுச் சோழர்களையும், அவர்களுக்கு அடங்கிய வைதும்பர்களையும் வென்றடக்கிய பின்னர் பல்லவர்களுடைய மேலாண்மையையும் உதறிவிட்டுத் தன்னாட்சியை நிலைபெறச் செய்தான் என்றும் கூறலாம். இதனால் பல்லவருக்கு அடங்கிய பாணச் சிற்றரசர்களின் உதவி பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனுக்கு கிடைக்க வில்லை. முடியனூர்ச் செப்பேடுகளில் "பாணவமிசம் என்னும் தாமரை மலருக்குச் சூரியன் போன்றவன் என்றும் ஆந்திர மண்டலத்தில் உள்ளதும் இரட்டைப்பாடி ஏழரை இலக்கத்தில் 12000 ஊர்கள் அடங்கிய பகுதியையும் வென்றவன்" என்றும் போற்றப்படுகிறான்.[132] தன்னுடைய மகனாகிய முதலாம் விக்கிரமாதித்திய வித்தியாதரனுடைய வீரதீரச் செயல்களுக்கு மல்லதேவன் அடிப்படையான செயல்களைச் செய்தான் எனக் கூறலாம்.[133]

பாண விக்கிரமாதித்தியன் (கி.பி. 843 - 892)

பாண வித்தியாதரன் செயமேரு, பாண கந்தர்ப்பன், என்ற விருதுப் பெயர்களைக் கொண்ட முதலாம் விக்கிரமாதித்தியன், பாண மல்லதேவனுடைய மகனாவான். மல்லதேவனும் விக்கிரமாதித்தியனும் கங்கபாடி ஆராயிரம் பகுதியையும் ரேநாட்டுச் சோழர்களுடைய நாட்டையும் வென்று அடக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகளில், மேலைக் கங்கர்களும் நுளம்பப் பல்லவர்களும் பாணர்களும் பரம விரோதிகளாயினர். நுளம்பப் பல்லவர்கள் கங்கவாடி

ஆராயிரத்தின் ஒரு பகுதியையும், நுளம்பாலிக என்ற பகுதியையும் ஆண்டு வந்தனர். கருநாடக மாநிலத்தில் தும்கூர், சித்தல்துர்க்கப் பகுதிகளும் அனந்தபுரி மாவட்டத்தில் ஒரு பகுதியும் நுளம்பாலிக அல்லது நுளம்பர் நாடு என்று அக்காலத்தில் வழங்கியது. பாணர்களுடைய பெரும்பாணப்பாடிக்கு வெகு அருகில் நுளம்பாடி இருந்தமையால் பாணர்களும் நுளம்ப பல்லவர்களும் அடிக்கடி எதிரிகளாகிப் போரிட்டுக் கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பங்களும் வாய்ப்புகளும் தோன்றின. நுளம்பர்கள் மேலைக் கங்கர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆவர். முதலாம் நீதிமார்க்கன் என்பான் கங்க அரசு பதவியை ஏற்றபின் புழல்சோரன் (Polalchora) என்ற நுளம்பத் தலைவனும் ஒன்றுகூடி, பெரும்பாணப்பாடியில் இருந்த பாணர்களை எதிர்த்தனர். இவ்விருகட்சியினரும் கி.பி. 853-ஆம் ஆண்டில் முருகப்பாடி என்னும் இடத்தில் போரிட்டதால் பாணர்கள் தோல்வியுற்றனர்.[134] நுளம்பர்களுடைய படைவீரர்கள் பல்லவத் தலைநகராகிய காஞ்சிபுரம் வரையில் சென்றதாகவும் தெரிகிறது.[135] முதலாம் நீதிமார்க்க கங்கனுடைய இந்துபுரி கல்வெட்டில் நுளம்பச் சிற்றரசன் ஒருவன் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பகுதிகளை ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகிறது.

பல்லவ விசயகம்பவிக்கிரமவர்மனுடைய பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில், பாணராயருடைய படையைச் சேர்ந்த வீரன் அகளங்காட்டுவரையார் என்பான் காஞ்சிபுரத்திற்கும் வந்தவாசிக்கும் இடையில் உள்ள பெருநகர் என்ற இடத்தை நுளம்பப் பல்லவ படையிடமிருந்து விடுவித்ததாகக் கூறுகிறது. ஆகையால், பாணச் சிற்றரசர் களுடைய படைவீரர்கள் போரில் பங்கு கொண்டு காஞ்சி புரத்திற்கு அருகில் உள்ள இடங்களை நுளம்பர்களிடமிருந்து கைப்பற்றிப் பல்லவப் பேரரசைக் காப்பாற்றினர் என்று தெரிகின்றது. முருகப்பாடி என்ற இடத்தில் நடந்த போர் பாணர்கள் பல்லவப் பேரரசிற்குச் செய்த உதவியை எடுத்துக்

காட்டுகிறது. முருகப்பாடி போரில் பாணர்கள் அடைந்த வெற்றியைத் தொடர்ந்து பாண மன்னன் முதலாம் விக்கிரமாதித்தன் வடுகவழி பன்னீராயிரம், கங்கபாடி ஆராயிரம் என்ற நிலப் பகுதிகளை நுளம்பர்களிடமிருந்து திரும்ப வென்றதாக கோலார் பகுதியில் கிடைத்த சில கல்வெட்டுகள் கூறுகின்றன.[136] மேற்கூறப் பெற்ற போருக்குப் பிறகும் நுளம்பர்கள் புலிநாடு என்னும் பகுதியைத் தாக்கியும் ஆடுமாடுகளைக் கவர்ந்து சென்றும் சிறுசிறு போர்களில் ஈடுபட்டனர். பாணர்களுக்கும் நுளம்பர்களுக்குமிடையே மினிகி என்ற இடத்தில் நடந்த போரில் பாணர்கள் வெற்றி பெற்றனர்.[137]

பாணர்களும் கோலார் கங்கர்களும்

கங்கவாடியில் அரசு புரிந்த கங்க மன்னர்கள் மேலைக் கங்கர் என்றழைக்கப்பட்டனர். கங்கபாடியில் வடகிழக்குப் பகுதியில் கோலார் அல்லது குவளாலபுரம் உள்ளது. கோலாரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலைக் கங்கர்களின் தாயாதிகள் (கிளைவழியினர்) ஆட்சிபுரிந்தனர். அவர்களுள் முதலாம், இரண்டாம் பிருதிவிபதி என்போர் முக்கியமானவர்கள்.

இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரம் செப்பேடுகளில் முதலாம் பிருதிவிபதி "திண்டி என்ற அரசனுடைய மக்களாகிய இருகன், நாகநந்தன் இருவரை அமோகவர்சனிடமிருந்தும் எமனிடமிருந்தும் காப்பாற்றினான்." எனக் கூறப்பெற்றுள்ளது. முதலாம் பிருதிவிபதிக்கும், இராட்டிரகூட அரசன் அமோகவர்சனுக்கும் இடையே நல்லுறவு நிகழவில்லை. பிருதிவிபதி தன்னுடைய தாயாதியாகிய முதலாம் இராச மல்லனுடன் சேர்ந்து இராட்டிரகூடப் படைகளைக் கங்கவாடியிலிருந்து துரத்தியிருக்கக் கூடும்.

ஆனால், இந்த நட்பும். ஒற்றுமையும் நெடுநாள் நீடிக்கவில்லை. கோலார் கங்கமன்னன் முதலாம் பிருதிவிபதி தன்னுடைய மகள் குந்தவை என்பாளைப் பாணவிக்கிரமாதித்தனுக்கு மணமுடித்தது அந்த இரு கங்க வமிசங்களிடையே மனவேற்றுமையை வளர்த்தது. முதலாம் இராசமல்லன் நுளம்ப சிற்றரசனாகிய புழல்சோரனுடன் உறவு கொண்டான். பல்லவப் பேரரசன் இதை விரும்பவில்லை போலும். ஆகவே, பாணர்களும் கோலார் கங்கர்களும் பல்லவர்களுடன் நெருங்கிய தொடர்பை மேற்கொண்டனர்.[138]

புழல்சோர நுளம்பனுக்குப் பிறகு அவனுடைய மகன் மகேந்திரன் அரச பதவி ஏற்றனன். ஹோசகோட்டை (கர்நாடகம்) பகுதியிலுள்ள ஒரு நடுகல் கல்வெட்டில், கங்கவாடி ஆறாயிரம் என்னும் பகுதியை மகேந்திரன் கைப்பற்றி ஆட்சிபுரிந்தான் எனக் கூறப்பட்டுள்ளது.[139] சித்தூர் மாவட்டம், புங்கலூர் வட்டத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் கொங்கணி அரசனுடைய ஆணையின் படி நுளம்பத் தலைவன் ஒருவன் புலிநாட்டுப் பகுதியின் மீது படையெடுத்ததாகவும் கோயாற்றூர் என்ற ஊரைப் பிடித்ததாகவும் கூறப் பெறுகிறது. இதில் கூறப் பெற்ற கொங்கணி அரசரும், நுளம்பத் தலைவனும் முறையே இரண்டாம் இராசமல்லனும் மகேந்திர நுளம்பனுமாக இருக்கக் கூடும்.[140]

வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூர் வட்டத்திலுள்ள ஆம்பூரில் பல்லவ நிருபதுங்கவர்மனுடைய 26-ஆம் ஆட்சியாண்டாகிய கி.பி. 875-இல் பொறிக்கப் பெற்ற இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. இவ்விரு கல்வெட்டுகளில் பிருதிவி கங்கராயருடைய அலுவலர் அகளங்காட்டுவராயர் என்பாருடைய மகனும் வேலைக்காரனும், நுளம்பர்கள் நடத்திய கால்நடை வேட்டையில் இறந்துவிட்டதாகக் கூறுகின்றன. இவ்விதமாக நடந்த மாடுபிடிப் போர்களில் நுளம்பர்கள் அதிகமாக ஈடுபட்டதினால் நுளம்பர்களுக்கும்

பாணர்களுக்கும் இடையே சில போர் நிகழ்ச்சிகள் நடைபெற ஏதுவாயிற்று. நுளம்பர்களுடைய எதிரிகளாகிய வைதும்பர்களும், ரேநாட்டுச் சோழர்களும் பாணர்களுடன் சேர்ந்து கொண்டனர். முதலாம் பிருதிவிபதியும் பாணர்களுக்கு உதவியாக இருந்தார்.

நுளம்பர்களுக்குப் பூதிவிநாட்டுத் தெலுங்குச் சோழத்தலைவர் மகேந்திர விக்கிரமனும் மேலைக்கங்க அரசன் இரண்டாம் இராசமல்லனும் உதவி செய்தனர். இந்த நுளம்ப பாண போராட்டத்தில் மாண்டவு, முதுமுடுவு, சோரமதி முதலிய இடங்களில் போர்கள் நடைபெற்றன. மாண்டவு என்ற இடம் அனந்தபுரி மாவட்டம், பெனுகொண்டா வட்டத்திலுள்ள மாந்தே என்ற இடமாகும் என்றும் முதுமதுவு, முதுமதுகு என்னும் இடம் என்றும் சோழிமறி என்ற இடமே சோறுமதி என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். மேற்கூறப்பெற்ற போர்களில் சோரமதி என்னுமிடத்தில் நடந்த போரே இறுதிக் கட்டமாகும் என்றும். அதில் பாணர்களும் வைதும்பர்களும் சேர்ந்து நுளம்பர்களையும் மேலைக் கங்கர்களையும் தோற்கடித்தனர் என்றும் எம்.எஸ். கோவிந்தசாமி கூறுவர்.[141] இந்தச் சோரமதிப் போர் கி.பி.877-78ஆம் ஆண்டில் நடைபெற்றிருக்க வேண்டும் என்று திரு எம்.எஸ். கோவிந்த சாமி பல காரணங்களைக் காட்டி நிலைநாட்டியுள்ளார்.[142]

திருப்புறம்பியத்தில் நடந்த போருக்குப் பின்னர் பாணர்கள் பல்லவ மன்னர்களுடைய மேலாண்மையை உதறித் தள்ளியதாகத் தெரிகிறது. சகம் 810 அதாவது கி.பி. 888-இல் பொறிக்கப்பெற்ற பாணர்களுடைய கல்வெட்டு ஒன்று வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் வல்லத்தில் கிடைக்கிறது. அக்கல்வெட்டை எழுதும்படி ஆணையிட்ட பாணத்தலைவன் பல்லவர்களுடைய மேலாண்மையை ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. முதலாம் விக்கிரமாதித்த வித்யாதரன் தன்னுடைய சொந்தமான ஆட்சியாண்டுகளில் தன்னுடைய கல்வெட்டுகளை வெளியிட்டுள்ளான்.[143]

முதலாம் விக்கிரமாதித்தனுடைய மக்கள் இரண்டாம் விசயாதித்தனுடைய கல்வெட்டுகள் சக ஆண்டுகளில் தேதியிடப்பட்டும், பல்லவருக்கு அடங்காமலும் தனியரசு அடைந்ததையும் தெரிவிக்கின்றன.[144] பாணர்களுடைய ஆட்சிக்கு அடங்கிய பெரும்பாணப்பாடி பல்லவப் பேரரசின் மேற்கு, வடமேற்கு எல்லைகளுக்கு அருகில் இருந்தமையால், பல்லவர்களுடைய இறைமையதிகாரத்திற்குப் பாணர் களுடைய தன்னாட்சிக்கு, ஒரு முற்றுப்புள்ளியை வைத்தது எனக் கூறலாம். அபராசித பல்லவனுக்கும் முதலாம் ஆதித்த சோழனுக்கும் இடையே நடந்த போர்களில் பாணர்கள் பங்கு கொண்டனரா? என்பது விளங்கவில்லை. முதலாம் ஆதித்த சோழனுடைய கல்வெட்டுகளில் பாணர்களுடைய அரசியல் உறவுகளைப் பற்றிய செய்திகள் கூறப்பெறவில்லை. ஆகவே, திருப்புறம்பியப் போருக்குப்பின் பாணர்கள் தனியரசாக ஆட்சி புரிந்தனர் என்று எம்.எஸ்.கோவிந்தசாமி கருதியுள்ளார்.[145]

பல்லவப் பேரரசு நிலைபெறுவதற்குப் பாணர்கள் பேருதவி புரிந்தனர் எனக் கூறலாம். மேலைக் கங்கர்களும், நுளம்பப் பல்லவர்களும் பல்லவப் பேரரசின் மீது தொடுத்த தாக்குதல்களை எதிர்த்து நின்று பல்லவப் பேரரசினைக் காப்பாற்றினர். பேரரசின் மேற்கு வடமேற்குப் பகுதிகளில் பாணர்கள் எல்லைப் பாதுகாப்பாளர்களாக இருந்தனர். ஆகவே, பல்லவர்கள் தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியை, பாண்டியர்களிடமிருந்து காப்பாற்றுவதற்குப் பாணர்கள் பேருதவி புரிந்தனர். பாணத்தலைவர்கள் கோலாரில் இருந்த கங்கர்களோடு உறவுகொண்டு, முதலாம் பிருதிவிபதியோடு சேர்ந்து கொண்டு, சோரமதிப் போரில் வெற்றி பெற்றது மேலைக் கங்கர்களும், நுளம்பர்களும் பலவீனம் அடையும் படிச் செய்தது. பாணர்கள் ஆட்சிபுரிந்த பெரும்பாணப்பாடி பல்லவப் பேரரசின் மேற்கு வடமேற்குப் பகுதியில் இருந்தமையால் அதைக் கங்கர்களும் நுளம்பர்களும் தங்கள் வசப்படுத்தாமல் இருப்பதற்குப் பல்லவர்களும் பாணர்களும்

ஒத்துழைக்க வேண்டியிருந்தது. தொடக்கத்தில் பாணர்கள், பல்லவர்களுக்கு அடங்காது மேலைக் கங்கர்களுக்கும் இராட்டிரகூடர்களுக்கும் அடங்கியமையால் பல்லவ நந்திவர்மன் காலத்தில் பல்லவர் ஆதிக்கம் குறைவதற்கு ஏதுவாயிற்று. அபராசித பல்லவன் காலத்தில் பாணர்கள் தனியரசு அடைந்தனர். பாணர்களுடைய உதவி பல்லவ மன்னர்களுக்குக் கிடைக்காமற் போகவே, ஆதித்த சோழன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றுவது எளிதாயிற்று.

உதிரிக் குறுநில மன்னர்கள்

மேலைக் கங்கர்கள், உறையூர், பழையாறைச் சோழர்கள், பாணர்கள், முத்தரையர்கள், அதியமான்கள் கொடும்பாளூர்த் தலைவர்கள் முதலிய குறுநில மன்னர்கள் பல்லவர்களுக்குச் சில சமயங்களில் அடங்கியும் சில சமயங்களில் மாறுபட்டும் இருந்தனர் என்பதை இதுகாறும் பார்த்தோம். மேற்கூறப்பெற்ற குறுநில மன்னர்கள் அன்றியும் அரச குலத்தைச் சேராமல் தனிப்பட்ட சில தலைவர்களும் பல்லவர்கள் காலத்தில் இருந்தனர்.

திருவல்லம் என்னுமிடத்தில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று வசந்தப் பிரிய ராசனுடைய மகன் கந்த சேனன் என்பவனைப்பற்றிக் கூறுகிறது. இத்தலைவன் செங்கற்பட்டு அண்ணா மாவட்டம் வல்லத்திலுள்ள குடைவரைச் சிவன் கோயிலை அமைத்தான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த .கந்த சேனன் மகேந்திரவர்மனுடைய (பல்லவ மன்னன்) உடன்காலத்தவன் ஆவன்.[146] தென்னார்க்காடு மாவட்டம் நடுநாட்டில் உள்ள திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்க முனையதரையர் என்ற தலைவர் பல்லவர்களுக்கு அடங்கி ஆட்சிபுரிந்தனர். இவர் தேவார ஆசிரியர்கள் மூவரில் ஒருவராகிய சுந்தரரைத் தன்னுடைய வளர்ப்புக் குழந்தையாக மேற்கொண்டார்.[147] இந் நரசிங்கமுனையதரையர் சிறந்த சிவபக்தர் என்றும் பகையரசர்களை வென்று நன்னெறி வளர்த்தார் என்றும்

திருவாதிரை நாள்தோறும் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்து ஒவ்வொருவருக்கும் நூறு பொன் கொடுப்பது வழக்கம் என்றும் சேக்கிழார் கூறுவர். இந்நரசிங்க முனையதரையர் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்ம பல்லவன் காலத்தில் திருமுனைப்பாடி நாட்டில் சிற்றரசராக இருந்தார் எனக் கொள்ளலாம். நிருபதுங்க வர்மப் பல்லவர் காலத்திலும் ஒரு முனையதரையன் இருந்ததாக ஒரு கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.[148]

சங்க காலத்திய மலையமாநாடு இப்பொழுதைய திருக்கோவலூர் பகுதியாகும். அதற்குச் சேதிநாடு என்ற பெயரும் வழங்கியது. "சேதி நன்னாட்டு நீடு திருக்கோவ லூரில் ம்லாடர்கோமான் என்ற மெய்ப்பொருள் நாயனார்"[149] என்று சேக்கிழாரால் கூறப்பெற்றவரும் ஒரு பல்லவர் கால குறுநில மன்னராவார். சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத்தொகையில் "வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கடியேன்" என்று புகழப்பெற்றவர். முத்தநாதன் என்ற மற்றொரு சிற்றரசனால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். அவரை வஞ்சகமாகக் கொன்ற முத்தநாதனும் பல்லவர் காலத்திய சிற்றரசன் என்று கொள்ளலாம். மெய்ப்பொருள் நாயனாரின் வழியினர் சோழப் பெருவேந்தர் காலத்திலும் சேதி நாட்டில் குறுநில மன்னர்களாக இருந்தனர். இரண்டாம் நந்திவர்மப் பல்லவனுடைய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த சிறப்பு மிக்க குறுநிலத் தலைவன் வேகவதியாற்றுக்கருகில் உள்ள வில்வல நகரத்துத் தல்லவன் உதயச்சந்திரன் ஆவர். வடார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியில் அவனுடைய ஆட்சி பரவியிருந்ததெனக் கூறலாம். உதயேந்திரம் செப்பேடுகள், உதயச்சந்திரன் பூசான் குலத்தைச் சேர்ந்தவன் என்றும் அவனுடைய மூதாதையர்கள் பல்லவ குலத்திற்கு பரம்பரையாக நன்றியறிதலுடன் குறுநில மன்னர்களாக இருந்தவர்கள் என்றும் கூறுகின்றன. உதயச்சந்திரனுடைய வேண்டுகோளின்படி, பாலாற்றங்கரையில் உள்ள ஒரு

சிற்றூர் உதயச்சந்திர மங்கலம் என்று பெயரிடப்பெற்று 108 அந்தணர்களுக்குப் பிரமதேயமாக அளிக்கப்பெற்ற செய்தியை இச்செப்பேடுகள் தெரிவிக்கின்றன.[150] உதயச்சந்திரன் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனுக்குச் செய்த உதவிகள் உதயேந்திரம் செப்பேடுகளில் பின்வருமாறு தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன.

"நந்திபுரம் அல்லது நாதன் கோயில் என்ற இடத்தில் (இரண்டாம்) நந்திவர்மன் தமிழக அரசர்களால் முற்றுகை இடப்பட்டுள்ளான் என்று கேள்விப்பட்ட உதயச்சந்திரன் தம் உளங்கொதித்து எழுந்தான். நந்திவர்மப் பல்லவனுடைய எதிரிகளுக்கு எமன் போன்று கோபங்கொண்டு தன்னுடைய கூர்மையான வாளினால் பல்லவத் தலைவனாகிய சித்திர மாயனையும் அவனுடைய கூட்டாளிகளையும் கொன்று குவித்தான். தோற்று ஓடிய எதிரிகளின் சேனைகளை நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம், நெல்லூர், நெல்வேலி, சூறாவழுந்தூர் முதலிய இடங்களில் தோற்கடித்து பல்லவப் பேரரசு நிலைபெறும்படி நந்திவர்மனுக்கு உதவி செய்தான்.[151] நெல்வேலி என்ற இடத்தில் நடைபெற்ற கொடிய போரில் சபரமன்னனாகிய உதயணன் என்பானை வென்று மயில் பீலிகளைக் கொண்டு செய்யப்பெற்று, கண்ணாடி போல் அமைந்திருந்த அவனுடைய கொடியைத் தன்வசப்படுத்தினான். பல்லவ நாட்டின் வடக்குப் பகுதியில் பிருதிவி வியாக்கிரன் என்ற நிஷாதத் தலைவனை, அசுவமேத யாகத்திற்காக அவிழ்த்துவிடப்பட்ட குதிரையைத் துரத்திச் செல்வது போன்று பின்தொடர்ந்து விட்டுணுராசன் என்பானுடைய நாட்டினின்றும் வெளியேற்றி அந்நாட்டைப் பல்லவ மன்னனுக்கு அளித்தான்; வெண்மை ஒளி வீசுகின்ற முத்துமாலைகளையும், பொற்குவியல்களையும், பகட்டினங்களையும் தன்னுடைய பேரரசர் பெறும்படிச் செய்தான். மண்ணைக்குடி என்ற இடத்தில் பாண்டியர்களை வென்று காளிதுர்க்கம் என்ற கோட்டையையும் அழித்தான்.[152]

உதயேந்திரம் செப்பேடுகளில், உதயசந்திரன் வெற்றி பெற்றதாகக் கூறப்பெற்றுள்ள நிம்பவனம், சூதவனம், சங்கர கிராமம், மண்ணைக்குடி எங்குள்ளன என்பதை ஆராயவேண்டும். தொடக்கத்தில் கூறப்பெற்ற மூன்றிடங்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள வேப்பங்காடு, கோவிலூர், சங்கரனார் குடிகாடு, மண்ணைக்குடி முதலிய இடங்களாகும் என்றும் சூறாவழுந்தூர் என்பது சிதம்பரம் வட்டத்தில் உள்ள சூறாவழூந்தூர் என்றும் முதன் முதலில் பல்லவ வரலாற்றை எழுதிய ஆர்.கோபாலன் என்பாருடைய கூற்றைப் பின்பற்றி எம்.எஸ். கோவிந்தசாமியும் கூறுவர்.[153] சபரமன்னன் ஒரு தமிழ்ச் சிற்றரசன் என்றும் நெல்வேலி என்னும் இடம் திருநெல்வேலியைக் குறிக்கும் என்றும் டாக்டர் ஹூல்ட்ஷ் கருதுகிறார்.[154] சபரமன்னனான உதயணனுடன் போரிட்டு மயில் தோகையால் அழகு செய்யப்பெற்ற கண்ணாடி போன்ற கொடியைக் கைப்பற்றினான் என்று கூறப்பெற்றுள்ளது.[155] இந்த சபரமன்னன் சீனா, பர்மா முதலிய இடங்களிலிருந்து வந்து குடியேறிய அந்நியர்களாக இருக்கலாம் என்று ஓர் ஆராய்ச்சியாளர் கருதினார்.[156] சீனா, பர்மா முதலிய அயல் நாடுகளில் இருந்து தென்னிந்தியாவில் வந்து குடியேறினர் என்று கூறுவதற்குத் தகுந்த சான்றுகள் இல்லை. சபர இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள் என்றும் கூறமுடியாது. வனவாசி நாட்டை ஆண்ட கடம்பர்களே மயிற் பீலியினால் செய்யப்பெற்ற தலைமுடியையும், மயில் உருவம் எழுதப்பெற்றக் கண்ணாடிக் கொடியையும் கொண்டிருந்தனர். கடம்பகுல மன்னர்கள் மயூரசர்மன், மயூரவர்மன் என்ற பெயர்களைக் கொண்டிருந்தனர்.[157] நந்திவர்ம பல்லவனுக்கு எதிராகக் கடம்பகுல மன்னர்களின் சேனைத்தலைவன் உதயணன் என்பானைப் பல்லவப் பேரரசின் வட பகுதியில் தோற்கடித்து இருக்க வேண்டுமென நாம் கொள்ளலாம்.

உதயச்சந்திரனால் வென்று அடக்கப்பட்ட நிசாதர் தலைவன் தமிழ் நாட்டுத் தலைவனாகத் தெரியவில்லை. ஏனெனில், இந்த நிசாதர் தலைவர்

தொண்டைமண்டலத்திற்கு வடக்குப் பகுதியில் ஆந்திராவில் உள்ள நெல்லூருக்கு அருகில் இத்தலைவனை உதயச்சந்திரன் சந்தித்ததாக இச்செப்பேட்டில் கூறப்பெற்றுள்ளது. நிசத அல்லது நிடத நாட்டு அரசனாகிய நளமகாராசனுடைய மரபில் தோன்றியவர்கள் என்று கூறிக்கொள்ளும் மன்னர்களுடைய கல்வெட்டுகள் சில விதர்ப்ப நாட்டிற்குக் கிழக்கே மகேந்திர மலைப் பகுதியில் உள்ள கோரப்பட்டுப் பகுதியில் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்றில் பிருதிவி வியாக்கிரனைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது. இச்செய்திகளைக் கூர்ந்து நோக்கினால் உதயச்சந்திரனால் வெற்றி கொள்ளப்பட்ட நிசத பதியாகிய பிருதிவி வியாக்கிரன் நளவமிசத்தைச் சேர்ந்த மன்னனாக இருக்கக்கூடும்.[158] இந்தச் செப்பேட்டில் கூறப்பெற்றுள்ள விட்டுணுராசன் என்பான் கி.பி.709 முதல் 746 வரை அரசு புரிந்த கீழைச் சாளுக்கிய மன்னன் விட்டுணுவர்த்தனாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. உதயச்சந்திரனால் அழிக்கப்பட்ட காளிதுர்க்கம் என்னும் கோட்டை எங்குளது என்று தெரியவில்லை.

திருவண்ணாமலைச் சம்புவராயர் மாவட்டம் போளூர் வட்டத்தில் உள்ள புல்லூர் செப்பேடுகள் இரண்டாம் நந்திவர்மனுடைய முப்பத்தி மூன்றாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்றவையாகும். இச்செப்பேடுகளில் உதயச் சந்திரனுடைய மகன் அவனிச்சந்திர இளவரசன் என்ற குறுநில மன்னன் குறிப்பிடப்படுகிறான். இந்த சிற்றரசன் பல்குன்றக் கோட்டத்தில் உள்ள நெல்லி, புல்லூர், தக்கார், குடியூர் என்ற நான்கு ஊர்களை நயதீரமங்கலம் எனப் பெயரிட்டு 108 அந்தணக் குடும்பங்களுக்குப் பிரமதேயமாக வழங்கியுள்ளான். நந்திவர்ம பல்லவனுடைய பதினேழாம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்ற காஞ்சிபுரம் கல்வெட்டில் கூறப்பெறும் அவனிச்சந்திரனும் இந்த அவனிச்சந்திரனும் ஒரே ஆளாக இருக்கக்கூடும்.[159]

பட்டத்தாள் மங்கலம் செப்பேடுகளில் மங்கல நாடாள்வான் என்ற குறுநிலத் தலைவன் ஒருவன் இரண்டாம் நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இச் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதி நந்திவர்மனின் 61- வது ஆண்டில், மங்கல நாடாள்வான் விண்ணப்பத்தால் ஆலம்பாக்க விசய நல்லூழான் ஆணத்தியாகச் சோழநாட்டுத் தென்கரை ஆர்வலக் கூற்றத்து கொற்றங்குடி என்ற ஊரை பதினாறு பிராமணருக்கு பிரமதேயமாக விடப்பட்டது.[160] இச்செப்பேட்டில் கூறப்பெற்ற ஊர்கள், ஆர்வலக்கூற்றம் என்ற பகுதியில் இருந்தன. இஃது தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ள மங்கலம் என்னும் ஊரிற்கு அருகிலிருந்த ஒரு ஊராகும்.[161]

நந்திவர்மப் பல்லவனுடைய ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் தொண்டூர் என்னுமிடத்திலிருந்து கிடைத்துள்ளது. இது விண்ண கோவரையர் என்ற குறுநிலத் தலைவர் ஏற்றுக்குன்றனார் படாரி கோயிலுக்குத் தன்னுடைய உறவினர்கள் நன்மை பெறும்படி 16 கழஞ்சு பொன்னைத் தானம் செய்துள்ளார் என்று கூறுகிறது. இப் பதினாறு கழஞ்சு பொன்னின் வட்டியிலிருந்து அக்கோயில் எம்பிரானுக்கு சில நிவேதியங்கள் செய்யப் பெற்றன.[162] மூன்றாம் நந்திவர்மனுடைய பதின்மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் காவிரிப் பாக்கத்திலிருந்து கிடைத்துள்ளது. இக்கல்வெட்டின்படி, பங்காள நாட்டு குறுநிலத் தலைவன் அய்யக்கி பங்கள அடிகளின் மருமகனார் காவிரிப்பாக்கத்துக் கோயிலுக்குப் பொற்காசுகள் தானம் வழங்கியதாக நாம் அறிகிறோம். நிருபதுங்க பல்லவனுடைய பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று வந்தவாசி வட்டத்தில் உள்ள மருதாடு என்னும் ஊரில் கிடைத்துளது. இக்கல்வெட்டில் கொங்கரையர் நின்றபெருமாள் என்ற ஒருவர் அவ்வூர் நீர்ப்பாசன ஏரிக்கு மதகு ஒன்றை அமைத்து

செப்பம் செய்ததாகக் கூறுகிறது. இக் கொங்கரையர் கொங்கு நாட்டிலிருந்து வந்து தொண்டை மண்டலத்தின் கீழ்ப் பகுதியில் ஒரு குறுநில மன்னனாக இருந்திருக்கக்கூடும்.[163]

மதுராந்தகம் வட்டம் பரமேசுவரமங்கலம் என்னும் ஊரிலுள்ள சைலீசுவரம் கோயிலிலுள்ள நிருபதுங்க வர்மனுடைய 16-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் மண்ணைக்குடி மறமதாக்கி விழுப்பேர் அரையர் என்பாரும் அவருடைய மகள் நந்தி நிறைமதி என்பாரும் சேர்ந்து பரமேசுவரமங்கலம் கோயில் மகாதேவருக்கு 11 கழஞ்சு பொன் அளித்துள்ளனர். இவ்விருவரும் பல்லவருக்கு அடங்கிய குறுநில மன்னர்களா அல்லது குடிமக்களா என்பது விளங்கவில்லை.[164]

திருவதிகைத் திருவீரட்டானத்துச் சிவன் கோயிலில் பல்லவ நிருபதுங்கவர்மனுடைய 16-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று உளது. அதன்படி பெருங்குளத்தூர் தலைவனான முனையப் பேரரையன் மகன் முனையர்கோன் இளவரையன் என்பார் திருவீரட்டானத்திறைவருடைய கோயிலுக்கு நந்தாவிளக்கு ஒன்று வைப்பதற்குப் பொற்காசுகள் வழங்கியுள்ளார். இந்த முனையதரையப் பேரரயனும், இளவரையனும் நிருபதுங்கவர்மனுக்கு அடங்கிய திருமுனைப்பாடி நாட்டு குறுநில மன்னர்கள் எனக் கொள்ளலாம். இவர்கள் திருவீரட்டானத்து திருக்கோயிலையும் சீர்திருத்தியுள்ளனர்.[165] திருவொற்றியூர் எழுத்தறியும் பெருமாள் கோயிலில் காணப்பெறும் நிருபதுங்கனுடைய 18-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் விடேல் விடுகு பல்லவரையர் என்ற பெயர் காணப்பெறுகிறது. இக்கல்வெட்டில் காணப்பெறும் உம்பள நாட்டின் குறுநில மன்னர் என்று இவரைக் கொள்ளலாம்.[166] உத்தரமேரூர் கோயிலிலிருந்து கிடைத்துள்ள இரு கல்வெட்டுகள் நிருபதுங்கவர்மனுடைய 26-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகளில் விசயநல்லூழான்

காடவ அதியரையன் பூதி தீரன் என்பான் முத்தரைய நாட்டு மீக்கூற்று வளநாட்டு கூகூரைச் சேர்ந்தவன் என்று குறிப்பிடப் பெற்றுள்ளான். இக்குறுநில மன்னன் பட்டத்தாள் மங்கலத்துச் செப்பேடுகளில் குறிப்பிடப்பெற்றுள்ள விசய நல்லூழான்[167] என்பவனின்றும் வேறுபட்டவனாகத் தெரிகிறது.

செங்கை அண்ணா மாவட்டம் பொன்னேரி வட்டம் சத்தியவேடு என்னும் இடத்தில் கிடைத்த அபராசிதவர்மனின் நான்காம் ஆண்டு கல்வெட்டில் சேரநாட்டுக் காடுவெட்டிப் பேரரையன் பையூர் இளங்கோட்டத்து திருமதங்கன்பள்ளிக் கோயில் இறைவருக்கு கொடையளித்ததைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இக்கோயில் மதுராந்தகம் வட்டம் துறையூரில் உள்ளது. இவனுடைய மனைவி போற்றிநங்கை என்பாளும் நூறு ஆடுகளைத் தானம் செய்துள்ளாள். இவன் ஒரு பல்லவ குறுநில மன்னரா அல்லது அரசியல் அலுவலரா என்பது விளங்கவில்லை.

திருவொற்றியூர் இறைவனுக்கு, அபராசிதனுடைய எட்டாவது ஆட்சியாண்டில் 60 கழஞ்சு பொன் தானம் செய்த பைதாங்கி கண்டன் என்பான் சோழநாட்டில் உள்ள வடகரை இன்னம்பர் நாட்டில் உள்ள காட்டூர் என்னும் ஊரின் தலைவன் என்று கல்வெட்டில் கூறப்பெற்றுளது. இத்தலைவன் அபராசிதனுடைய குறுநில மன்னனாக இருந்தான் என்று அறியலாம்.[168] செங்கை அண்ணா மாவட்டம் திருத்தணிக்கு அருகில் உள்ள நெமிலியில் காணப்பெறும் அபராசிதவர்மனுடைய 10-வது ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் சிங்கபுரத்து அநிருத்த பல்லவரையன் செய்த அறங்கள் குறிப்பிடப்படுகின்றன.[169] திருக்கோவலூர் வட்டம் திருநாமநல்லூரில் (திருநாவலூர்) கிடைத்த ஒரு கல்வெட்டில் அபராசிதன் குலமாணிக்க மகாதேவன் என்பானின் பெயர் கூறப்பெற்றுளது.[170] இவரைப் பல்லவ மன்னருக்கு அடங்கியவனாகக் கருத முடியாது என்று திரு.

கோவிந்தசாமி கருதியபோதிலும் அபராசிதன் என்ற பெயரைக் கொண்டு இவரைப் பல்லவ மன்னனுக்கு அடங்கிய குறுநில மன்னன் எனக் கொள்ளலாம்.[171]

விசயகம்பவர்மனுடைய ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று திருவொற்றியூர் கோயிலில் உள்ளது. இது இந்தளூர் நாட்டுக் கஞ்சனூர் அமர்நீதி பல்லவாதியரையர் 30 கழஞ்சு பொன்னைத் திருவொற்றியூர் இறைவனார் திருவமுது செய்வதற்காக அளித்துள்ளார் என்று கூறுகிறது. கஞ்சனூருக்கு சிம்மவிட்டுணு சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் இருப்பதால் சோழநாடு சிம்மவிட்டுணுப் பல்லவன் காலத்திலேயே பல்லவப் பேரரசின் பகுதியாயிற்று எனக் கூறலாம். அமர்நீதி பல்லவாதியரையர் சோழநாட்டில் இருந்த பல்லவ குறுநில மன்னர்களில் ஒருவர் எனக் கொள்ளலாம்.[172]

முடிவுரை

தமிழக வரலாற்றில் பல்லவ மன்னர்களுடைய குறுநில மன்னர்கள் பல்லவப் பேரரசிற்கு எவ்விதம் உதவி புரிந்தனர் என்றும், அவர்களுடைய உதவியின்மையால் பேரரசு எவ்வாறு மறையத் தொடங்கியது என்றும் நாம் ஆராய்ந்து அறிதல் அமைவுடைத்தாகும். கி.பி. நான்காம் நூற்றாண்டில் பெரும்பாணப்பாடி, வடுகவழி மேற்கு என்ற இடங்களில் இருந்த பாணர்கள், கடம்பகுலத்துத் தலைவனுடன் சேர்ந்து கொண்டமையால் பல்லவ மன்னர்கள் மயூரசர்மனுடன் சந்து செய்து கொள்ள வேண்டிய நிலைமை தோன்றியது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் மேலைக்கங்க மரபைச் சேர்ந்த சிற்றரசர்கள் உதவி கொண்டு பாணர்களையும், கடம்பர் களையும் பல்லவர்கள் அடக்கி ஆட்சிபுரிந்தனர். ரேநாட்டுச் சோழர்களைப் பல்லவ மன்னர்கள் அடக்கியமையால், பல்லவப் பேரரசின் வடக்குப் பகுதியில் அவர்களுடைய ஆட்சி சிம்மவிட்டுணுப் பல்லவன் காலத்தில் நன்கு காலூன்றியது. ஆனால், மகேந்திரவர்மன் காலத்தில்

ரேநாட்டுச் சோழர்கள் மேலைச் சாளுக்கியர்களுடன் சேர்ந்துகொண்டதினால் வடக்குப் பகுதியில் பல்லவர்களுடைய மேலாண்மை குறைவுற்றது. பாணர்களும் மேலைச் சாளக்கியருடைய சிற்றரசர்களாக மாற்றம் அடைந்ததால், பேரரசின் வடமேற்குப் பகுதியில் இருந்த மேலைச் சாளுக்கியர் அடிக்கடி பல்லவ நாட்டின்மீது படையெடுக்க ஏதுவாயிற்று. கி.பி.7-ஆம், 8-ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்கள் தங்களுடைய பேரரசின் வடமேற்குப் பகுதியைக் காப்பாற்றுவதில் மிகுந்த துன்பத்தை அனுபவித்தனர்.

மேலைச் சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தன் தமிழ் நாட்டின்மீது படையெடுத்த பொழுது, தமிழ்நாட்டு பழையாறை, உறையூர் ஆகிய இரு சோழச் சிற்றரசர்களும் பல்லவர்களுக்கு உதவி செய்திருக்கக் கூடும். அதனால், முதலாம் விக்கிரமாதித்தன் பெருவள நல்லூரில் தோல்வியடைந்து தன்னாடு திரும்பியுள்ளான். இரண்டாம் நந்திவர்மனுக்கும், சித்திரமாயப் பல்லவனுக்குமிடையே நடந்த உள்நாட்டுப் போரில் முத்தரைய சிற்றரசர்கள் பல்லவருக்கு உதவி செய்துள்ளனர். நந்திபுரத்து முற்றுகையில் பழையாறைச் சோழமன்னர்கள் நந்தி வர்மனுக்கு உதவி செய்தனரா என்பது தெளிவாக விளங்கவில்லை. மேலைக்கங்க அரசன் சிரீபுருடன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் பல்லவப் பேரரசின்மீது படையெடுத்தபொழுது கொங்குநாட்டு அதியமான்கள் பல்லவ மன்னனுக்கு உதவி செய்யவில்லை.[173]

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பாணர்கள் பல்லவருக்கு அடங்கிய சிற்றரசர்களாயினர். ஆகவே, மேலைக் கங்கர்களுக்கு எதிராக பல்லவர்க்கு உதவி செய்தனர். கி.பி.எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முத்தரையர்கள் சிலசமயம் பாண்டியர் கட்சியிலும் சில காலங்களில் பல்லவர் கட்சியிலும் சேர்ந்திருந்தனர். ஆனால், அவர்கள் பாண்டிய மன்னர்களையே சார்ந்திருந்தனர் எனக் கூறலாம். விசயாலய

சோழன் தஞ்சையை வென்று அடக்குவதற்கு முன் முத்தரையர்கள் தனியரசு பெற்றிருந்தனர் எனவும் கொள்ளலாம்.[174] பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் கொங்கு நாட்டின்மீது படையெடுத்தபொழுது அதியமான்கள் பல்லவர்களுக்கு உதவி செய்தனர். ஆனால், பல்லவ ஆட்சி கொங்கு நாட்டில் நிலைபெறவில்லை. தந்திவர்ம பல்லவன் காலத்தில் சில ஆண்டுகளில் சோழ நாட்டில் பல்லவ ஆட்சி மறைந்தது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பல்லவப் பேரரசு மறைவதற்குரிய அறிகுறிகள் தோன்றின. வடமேற்குப் பகுதியில் இருந்த பாணர்கள் இராட்டிர கூடர்களுடன் சேர்ந்து கொண்டனர். இராட்டிரகூட அரசன் அமோகவர்சன் காலத்தில் நடந்த உள்நாட்டுப் போரினால் தோன்றிய குழப்பங்களைச் சாதகமாகக் கொண்டு மேலைக் கங்கர்கள் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தனர். மூன்றாம் நந்திவர்மன் பல்லவப் பேரரசனாகப் பதவியேற்றபின் பல்லவ, பாண்டிய போர் பெருமளவில் தோன்றியது. முதல் கட்டமாகிய தெள்ளாற்றுப் போரில் பழையாற்றுச் சோழர்கள் பல்லவர் பக்கத்தில் சேர்ந்திருந்தனர். ஏனெனில், பழையாறைப் போரில் பாண்டியர் தோல்வியுற்றனர் என நந்திக் கலம்பகத்தில் கூறப்பெற்றுளது. குடமூக்கு அல்லது கும்பகோணத்திற்கு அருகில் நடந்த போரில் பழையாறைச் சோழர்கள் பல்லவருக்கு உதவி செய்துள்ளனர்.[175] பல்லவ, பாண்டிய போராட்டத்தில் முத்தரையர்களுடைய உதவி பாண்டியருக்கு இருந்திருக்க வேண்டும். ஏனெனில், அவர்களுடைய ஆட்சிப் பகுதி பல்லவ, பாண்டிய எல்லைகளில் இருந்தது. முத்தரையர்கள் பாண்டியர்களுடன் சேர்ந்திருந்தமையால் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் விசயாலய சோழன் முத்தரையர் நாட்டையும், தஞ்சையையும் தன்வசப்படுத்துவதற்குப் பல்லவ மன்னன் உதவியிருக்கக்கூடும். விசயாலயன், சோழ நாட்டின் தென்பகுதியை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றியது தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

நுளம்பப் பல்லவ குறுநில மன்னர்களையும் மேலைக் கங்கர்களையும் அடக்குவதில் பாணர்கள், பல்லவர்களுக்கு உதவி புரிந்துள்ளனர். கோலார் பிரிவு கங்க மன்னனாகிய முதலாம் பிருதிவிபதியும் பாணர்களும் சேர்ந்து, நுளம்பரும் மேலைக் கங்கரும் ஒன்று கூடிப் பல்லவப் பேரரசை எளிதில் அழித்துவிடாதபடி பாதுகாத்தனர். கி.பி. 878-இல் நடந்த சோரமதிப் போருக்குப்பின் மேலைக்கங்கரும் நுளம்பர்களும் ஒன்று சேரவில்லை. ஆகவே, பல்லவ மன்னர்கள் பாண்டியர்களுடன் போரிடுவதில் தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடிந்தது. திருப்புறம்பியப் போரில் கோலார் பிரிவு கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதியும் சோழர்களும் பல்லவ மன்னன் நிருபதுங்கனுக்கு உதவி செய்தனர். தங்களுக்கடங்கிய சிற்றரசர்களுடைய உதவி கொண்டு நிருபதுங்கனும் அவனுக்குப்பின் வந்த அபராசிதனும் திருப்புறம்பியப் போரில் வெற்றிபெற்றனர் எனலாம்.

திருப்புறம்பியப் போருக்குப்பின் ஒளிமங்கிக் கிடந்த சோழ மரபு வியக்கத்தக்க முறையில் மேன்மையுறத் தொடங்கியது. பல்லவருக்கு அடங்கியிருந்த முத்தரையர் நாட்டினை விசயாலய சோழன் கைப்பற்றிய பிறகு கொடும்பாளூர் இருக்குவேளிர் மரபினரும் சோழருக்கு அடிபணிந்தனர். கி.பி. 888-இல் பல்லவ மேலாண்மையை உதறித்தள்ளிய பாணர்களும் சோழப் பேரரசின் குறுநில மன்னர்களாயினர். கங்க மன்னர் முதலாம் பிருதிவி பதிக்குப்பின் வந்த கங்க அரசர்களும் ஆதித்த சோழனுக்கு உதவி செய்தனர். அபராசித பல்லவனுடைய கல்வெட்டுகள் தொண்டை மண்டலத்தில் மட்டுமே குறைந்த எண்ணிக்கை யில் காணப்பெறுகின்றன. ஆதித்த சோழன் பல்லவ குல அரசகுமாரி ஒருத்தியை மணம் புரிந்திருந்தபோதிலும் தக்க சமயத்தில் பல்லவப் பேரரசைத் தாக்கித் தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்குத் தயங்கவில்லை. அபராசித பல்லவனுக்கும் முதலாம் ஆதித்த சோழனுக்கும் எவ்விதம்

பகைமையுணர்வு ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. 'கொக்கொக்க கூம்பும்' பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்தவிடத்து' என்னும் குறளுக்கிணங்க ஆதித்த சோழன் அபராசிதப் பல்லவனை வென்று சோழப் பேரரசிற்கு அடிகோலினான். அபராசிதப் பல்லவன், சிம்மவிட்டுணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், பரமேசுவரவர்மன் போன்று ஒப்பற்ற தலைவனாக விளங்கவில்லை. மூன்றாம் நந்திவர்மனுக்குப் பிறகு பல்லவப் பேரரசு நிலைகுலைவதை ஒருவராலும் தடுக்க முடியாது. வரலாற்றில் ஓர் அரசமரபே நிலையாக ஆட்சி புரிவதும் இயற்கை இல்லை. அரச மரபுகளுடைய வாழ்வும் தாழ்வும் மக்களுடைய பிறப்பும் இறப்பும் போன்று உலக வரலாற்றில் காணப்பெறுகின்றன. பல்லவப் பேரரசும் அந்த நியதிக்கு உட்பட்டது என்றாலும் வடக்கிலிருந்து படையெடுத்து வந்த மேலைச் சாளுக்கியர்களோடு போரிட்டதினாலும் தெற்கிலிருந்து வந்த பாண்டியப் படையெடுப்புகளினாலும் பல்லவப் பேரரசின் அமைதியும் பொருள் வளமும் குறைந்து, வறுமையும் பஞ்சமும் மேலோங்கி இருத்தல் வேண்டும். இவைகள் பல்லவப் பேரரசின் மறைவிற்கு முக்கிய காரணங்களாக இருந்தபோதிலும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி பல்லவர் தமது குறுநில மன்னர்களுடைய உதவியைப் இழந்து, அவர்கள் விடுதலை பெறும்படியும் பேரரசே குலைந்துவிடும்படி செய்ததும் முதன்மைக் காரணமாகும்.

அடிக்குறிப்புகள்

1. Subramaniam, N. History of Tamilnadu p. 285
2. Ibid p. 286
3. அம்பிநாரம் வயல்களில் இன்னும் சிதைந்த சிற்பங்கள், ஆவுடையார் இலங்கம் முதலியன கிடைக்கின்றன.
4. Gopalan, R. The Pallavas of Kanchi. Introduction p. XXIII
5. Journal of Indian History Vol. 7 p. 75
6. நடனகாசிநாதன், முத்தரையர் பக். 24
7. Epigraphia Indica Vol. 27 p. 223
8. இராஜா முகம்மது, முத்தரையர் முரசு
9. Krishnan, K.G. The Muthuraiyars Journal of Ancient Indian History Vol. V Part I 1971-72
10. செங்கம் நடுகற்கள் 1971/85
11. வானகோ முத்தரைசர் நாடு பாலிய மேற்கோவலூர் மேல் வந்து தஞ்சிற்றப் படிகளை எறிந்த ஞான்று

11-அ. வானகோ முத்தரைசர் நாடுபாவிய் மேற்கோவலூர் மேல் தஞ்சிற்றபடிகளை எறிந்த ஞான்று

12. பொன் மாந்தரும் மாந்தபருமரும் ஒருவரே என்று திரு நடன காசிநாதன் அவர்கள் கருதுகிறார். பல்லவர்க்கு உட்பட்ட சிற்றரசனான பொன் மாந்தனார் தனித்த ஆட்சியினை மேற்கொண்ட பொழுது மாந்த பருமர் என அழைக்கப் பட்டதாக கருதுகிறார். பொன் மாந்தனாரின் மகன் மாந்த பருமர் எனப்பெயர் பெற்றான் எனக் கருதுவதே பொருத்த முடையதாகத் தோன்றுகிறது.
13. நடனகாசிநாதன், முத்தரையர் பக். 35-36
14. Krishnan, K.G. Studies in South Indian History and Epigraphy 1981 p. 186
15. *Ibid* pp. 134-135
16. Inscription of the pudukkottai State No. 13
17. *Ibid*

18. Krishnan, K.G. Tamil liea Vol. 1 p. 71
19. ந. காசிநாதன் முத்தரையர் பக். 47
20. *Ibid*
21. Epigraphia Indica Vol. XIII pp. 134 to 149
22. Govindasamy, M.S. Role of Feudatories in Pallava History p. 40-41
23. ந. காசிநாதன். முத்தரையர் பக். 50
24. பதிப்பாசிரியர்
25. ந. காசிநாதன். மு. குறிப்பு பக்கம். 83
26. Annual Report on Epigraphy 1960. No. 318
27. South Indian Inscriptions. Vol. XII. No. 259
28. இராசசேகர தங்கமணி. முத்தரையர் பற்றிய கட்டுரை பக். 24
29. South Indian Inscriptions Vols. V, VI & VII Nos. 618, 448, 529 respectively and A.R.E. 1981 No. 114
30. இராசசேகர தங்கமணி-கட்டுரை பக்கம். 24
31. M.E.R. 1899 para 20.
32. No. 12 of 1899
33. Govindasamy, M.S. Op.cit. p. 46
34. *Ibid*
35. A.R.E. 1931 No. 39 p.S.I. No. 237 and No. 14
36. தமிழிகா
37. Krishnan, K.G. 'The Mutharaiyar' Journal of Ancient Indian History Vol. 5 part I (1931-32)
38. A.R.E. 1924 No. 259
39. பெரிய புராணம், கோச்செங்கட்சோழர் புராணம். செய்யுட்கள் 1 முதல் 17 வரை
40. இருக்கிலங்கு திருமொழிவாய்எடோவீசர்க்கு
எழில்மாடம் எழுபது செய்துலகாண்ட
திருக்குலத்து வளச்சோழன். பெரிய திருமொழி
41. இராசமாணிக்கனார், மா. பெரியுராண ஆராய்ச்சி. பக். 92, 93

42. Mahalingam, T.V. Kanchipuram in Early South Indian History p. 58
43. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 259
44. இராசசேகர தங்கமணி - கட்டுரை. பக்கம். 33
45. மறைமலையடிகள். மாணிக்கவாசகர் வரலாறும், காலமும் பக். 612
46. Narayana Iyer, C.V. Origin and Development of Saivism in South India p. 183
47. பெரியபுராணம், திருநாவுக்கரசர் புராணம், செய்யுட்கள் 294-98
48. சதாசிவப்பண்டாரத்தார். தி.வை. பாண்டியர் வரலாறு. பக். 39
49. இரா. தங்கமணி. கட்டுரை பக்கம். 39
50. South Indian Inscriptions Vol. II No. 33
51. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 55
52. இராசசேகர தங்கமணி கட்டுரை பக். 34
53. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 261
54. சதாசிவபண்டாரத்தார். தி.வை. பாண்டியர் வரலாறு பக். 66, 67
55. Govindasamy, M.S. Op.cit p. 91
56. Mahalingam, T.V. Kanchipuram in Early South Indian History p. 217
57. Govindasamy, M.S. Op.cit p. 91
58. JRAS 1934 pp. 34-35
59. கோவிந்தசாமி, எம். Op.cit. p. 78
60. M.E.R. 1908 para 88
61. Govindasamy, M.S. Op.cit p. 852
62. *Ibid*
63. Govindasamy, M.S. The Role of Feudatories in Later Chola History p. 12

64. *Ibid*
65. *Ibid* in pallava History. p. 80
66. S.I.I. Vol. VII Nos. 296 and 295 of 1902
67. S.I.I. Vol. XII Nos. 103, 174 of 1912
68. Nilakanta Sastri, The Colas. Second Editon pp. 103
69. A.S.I. 1905-6 p. 175
70. Epigraphia Indica Vol. 27 p. 247
71. *Ibid*
72. Govindasami, M.S. Op.cit. p. 100
73. *Ibid* p. 101
74. *Ibid*
75. *Ibid* 101
76. *Ibid* 102
77. *Ibid* 103
78. Epigraphia Indica Vol. XI p. 344
79. Govindasamy, M.S. Op.cit p. 106
80. *Ibid* p. 107 F.N. No. 4
81. *Ibid* p. 108
82. Ibid p. 109
83. சீனிவேங்கடசாமி, கொங்குநாட்டு வரலாறு பக். 51
84. கோவிந்தசாமி, எம்.எஸ். மு.கு. பக். 112
85. பெரியபுராணம் புகழ்ச்சோழநாயனார் புராணம் செய்யுள் 17
86. இராசமாணிக்கம், மா. பெரியபுராண ஆராய்ச்சி பக். 94
87. கோவிந்தசாமி, எம்.எஸ். மு.கு. R ப. 113
88. Quarterly Journal of the Mythic Society 1956 pp. 225-27
89. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 174
90. M. S. G Op.cit p. 114
91. M.S.G. Op.cit. p. 118
92. *Ibid*

93. Govindasamy, M.S. The Role of Feudatories in pallava History.
94. *Ibid*
95. Epigraphia Indica Vol. XIV No. 24
96. Indian Antiquary Vol. VI p. 25
97. Archaeological Survey of Mysore . 1938 pp. 80-90 Gpvomdasa, u MS Op.cit. p. 128
98. *Ibid*
99. Epigraphia Indica Vol. VI pp. 8-10
100. Epigraphia, Carnatica Vol. No. 60
101. Govindasamy, M.S. Op.cit p. 131
102. *Ibid*
103. *Ibid*
104. *Ibid*
105. Epigraphia Indica Vol. 22 pp. 10013
106. Tirumalai Tirupati Devasthanam Inscription Vol. I No. 2
107. Epigraphia Indica Vol. VI No. 32
108. Govindasamy, M.S. Op.cit. p. 134
109. Ibid
110. Ibid
111. Subramaniyam, N. History of Tamilnadu p. 287
112. Govindasamy, M.S. The Role of Feudatories in pallava History p. 1
113. Ibid
114. Epigraphia Indica Vol. XI p. 231
115. Arokiaswami, M. Dr. The Kongu Country p. 129
116. Govindasamy, M.S. Op.cit. p. 2
117. *Ibid*
118. *Ibid* பக்கம். 4
119. *Ibid*

120. Epigraphia Indica Vol. XI p. 223 part. A
121. *Ibid*, No. 22 and Journal of Indian History Vol. 29 p. 168
122. Govindasamy, M.S. p. 7
123. *Ibid*
124. Epigraphia Indica Vol. 22. pp. 110-113
125. Govindasamy, M.S. Op.cit. p. 8
126. *Ibid* pp 8-9
127. Nos. 312, 313 and 335 of 1912
128. Govindasamy, M.S. Op.cit. p. 10
129. No. 227 of 1915
130. Govindasamy, M.S. Op.cit. p. 10
131. Govindasamy, M.S. Op.cit p. 13
132. Epigraphia Carnatica. Vol. X No. 157
133. Govindasamy, M.S. p. 14
134. Journal of Indian History Vol. 29. p. 172.
135. Govindasamy, M.S. Op.cit. p 14
136. *Ibid*
137. *Ibid* p. 16
138. *Ibid* p. 17
139. Mys. Arch. Report. 1919. p. 31 para 72
140. *Ibid*
141. *Ibid* p. 19
142. *Ibid* Op. 22
143. Epigraphia Carnatica Vol. X No. 92
144. Epigraphia Indica Vol. XI p. 227
145. Govindasamy, M.S. Op.cit. p. 24
146. South Indian Inscriptions Vol. II No. 72 pp. 340-41
147. பெரியபுராணம் திரு. வி.க. பதிப்பு பக். 1106

148. Govindasamy, M.S. The Role of the feudatories in pallava History p. 139
149. பெரியபுராணம் மு.கு.
150. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 108
151. கோவிந்தசாமி, எம்.எஸ். Op.cit. p. 140
152. South Indian Inscriptions Vol. II part 3. p. 372
153. Govindasamy, M.S. Op.cit. p. 141
154. South Indian Inscriptions Vol. II part 3 p. 364
155. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 114
156. மேற்படி, மு. குறிப்பு
157. History of Karnataka by H.V. Srinivasamurthy, p. 42
158. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 117
159. கோவிந்தசாமி, எம்.எஸ். Op.cit. பக். 143
160. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 247-48
161. Govindasamy, M.S. Op.cit p. 143
162. *Ibid* p. 144
163. *Ibid*
164. எண். 417 of 1912
165. எண். 35 of 1903
166. எண். 70 of S.I.I. Vol. XII
167. Govindasamy, M.S. Op.cit. p. 147
168. No. 159 of 1912, South Indian Inscriptions Vol. XII No. 92
169. No. 154 of 1940-43
170. No. 230 of 1939-40
171. Govindasamy, M.S. Op.cit. p. 149
172. S.I.I. Vol. XII No. 100 and 188 of 1912
173. Govindasamy. M.S. Op.cit. p. 165
174. *Ibid* p. 166
175. *Ibid*

அ. பல்லவர் ஆட்சி முறை

பல்லவர் ஆட்சியானது வடஇந்திய ஆட்சிமுறையின் சில கூறுகளைக் கொண்டிருந்தது. பல்லவர்களின் மண்டலப் பிரிவுகள் குப்தர்களின் மண்டலப் பிரிவுக்கான விஷயங்கள், இராட்டிரங்கள் பல்லவர்களின் மண்டலப் பிரிவுகளாக உள்ளன. பல்லவர்கள் முதன் முதலாகக் குறுநில மன்னர்களை முறியடித்துப் பல்லவப் பேரரசினை விரிவு செய்தனர். சமயச் சார்புள்ள ஓர் அரசினைத் தொடங்கினர்.[1] பல்லவ நாட்டின் வட பகுதியில் ஆந்திர நாட்டின் பகுதிப் பெயர்களையும் தமிழ்நாட்டுப் பகுதியில் தமிழ் அரசர்களால் அழைக்கப்பட்ட பகுதிப் பெயர்களையும் தொடர்ந்து வைத்திருந்தனர். இதுவரை கிடைக்கப் பெற்ற 552 கல்வெட்டுகளும் 31 செப்பேடுகளும் பல்லவர் காலக் கலைச் செல்வங்களும் இலக்கியங்களும் அக்கால ஆட்சிமுறையினை எடுத்தியம்புகின்றன.

நாடு - விரிவு - பிரிவுகள்

ஆந்திர நாட்டில் உள்ள தசனபுரம், மேன்மதுரா, இராயக்கோட்டை, சேந்தலூர் போன்ற இடங்களில் கிடைத்த செப்பேடுகளாலும் அமராவதி, வயலூர் போன்ற இடங்களில் காணப்பெறும் பல்லவர் காலக் கல்வெட்டுகளாலும் பல்லவ நாட்டின் வட எல்லை கிருட்டிணை ஆறு வரையிலும் பரவியிருந்தது என்று அறியலாம். அவர்கள் காலத்து அமைக்கப்பட்ட குடைவரைகள் வடார்க்காடு அம்பேத்கார், தென்னார்க்காடு, செங்கை அண்ணா, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் காணப்படுவதால் தெற்கே திருச்சிராப்பள்ளி வரையிலும் பல்லவர் ஆட்சி பரவியிருந்ததை அறியலாம்.

தொண்டையர்கோன் என்று அழைக்கப்பட்ட பல்லவரின் தொண்டை மண்டலத்தின் எல்லைப் பகுதிகளாக வடக்கில் திருப்பதி, காளத்தி மலைகளும் தெற்கில் பாலாறும் மேற்கில் மலைத் தொடரும் இருந்ததாக ஆசிரியர் ஒருவர் கூறுகின்றார்.[2]

மேற்கில் பவழமலையையும் வடக்கில் வேங்கடத்தினையும் கிழக்கில் கடலினையும் தெற்கில் தென்பெண்ணை யாற்றையும் எல்லைகளாகக் குறிப்பிட்டுள்ளார் டி.வி. மகாலிங்கம்.[3]

இங்கே கூறப்பட்டுள்ள இக்கருத்துகள் பல்லவர் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் இருந்த நிலப்பகுதியினைக் குறிப்ப தாகும். பிறகு விரிவடைந்து ஆந்திர நாட்டில் கிருட்டிணை ஆறு வரையிலும் தெற்கில் திருச்சிராப்பள்ளி வரையிலும் விரிவடைந்தது என்று கொள்ளலாம்.

நாடு முழுமையும் சீரான ஆட்சிமுறை நடைபெற வேண்டிப் பல்லவப் பேரரசானது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நடுவண் அரசின் பெரும்பகுதி 'விஷயம்' எனப்பட்டது.[4] இராட்டிரம்[5] என்ற பகுதி விஷயத்தின் ஒரு பகுதியாம். கிராமம் என்பது அதன் கடைசிப்பிரிவாக அமைந்திருந்தது. கௌடில்யருடைய அர்த்தசாத்திரத்தில் காணப்பெறும் இப்பகுதிகள் யாவும் மௌரியர் காலத்தில் கூறப்பட்டு மௌரிய சதவாகனர் மண்டலப் பிரிவுகளாக இருந்தன. பல்லவர்கள் ஆண்ட தமிழகப் பகுதிகளில் கோட்டம், நாடு, ஊர் என்ற பிரிவுகள் இருந்தன.[6] நாடு என்பது கோட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கியமையை நன்கறிய முடிகின்றது.[7]

தொண்டை மண்டலம் இருபத்திரண்டு கோட்டங் களைக் கொண்டதாக இருந்ததெனக் கனகசபை குறிப்பிட் டுள்ளார்.[8] தொண்டை மண்டலச் சதகம் என்ற நூலில் மேலும் இரு கோட்டங்கள் காணப்படுகின்றன. தொண்டை

மண்டலம் இருபத்தியேழு கோட்டங்களைக் கொண்டதாகத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொண்டை மண்டலத்தில் எழுபது நாடுகள் இருந்ததாகக் குறிப்பொன்று கூறுகின்றது.[9]

1. புழல் கோட்டம்.
2. ஈக்காட்டூர்க் கோட்டம்
3. மணவிற் கோட்டம்
4. செங்காட்டுக் கோட்டம்
5. மையூர்க் கோட்டம்
6. எயில் கோட்டம்
7. தாமல் கோட்டம்
8. ஊற்றுக்காட்டுக் கோட்டம்
9. களத்தூர்க் கோட்டம்
10. செம்பூர்க் கோட்டம்
11. வெண்குன்றக் கோட்டம்
12. பல்குன்றக் கோட்டம்
13. காளியூர்க் கோட்டம்
14. படுவூர்க் கோட்டம்
15. குன்ற வர்தனக் கோட்டம்
16. வெங்கடக் கோட்டம்
17. புளியூர்க் கோட்டம்
18. ஆமூர் கோட்டம்
19. செங்குன்றக் கோட்டம்
20. மேலூர்க் கோட்டம்
21. திருக்கடிகைக் கோட்டம்
22. இடூர்க் கோட்டம்
23. பவ்வத்திரி கோட்டம்
24. வீராவதாரக் கோட்டம்
25. புட்டனூர்க் கோட்டம்
26. கடமூர்க் கோட்டம்
27. திருக்காட்டுக் கோட்டம்

பல்லவ நாட்டின் உட்பிரிவுகளுக்கு வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பெயர்கள் இடப் பெற்றன. இதனால் வட இந்திய ஆட்சிமுறையும் தமிழக ஆட்சி முறையும் கலந்து நடைபெற்றதாகக் கொள்ளலாம். கிராமம் என்பது அடிப்படைப் பகுதியாக இருந்தது. குப்த அரசர்கள் விஷயம், இராட்டிரம், கோஷ்டம், கிராமம் என்ற நிலப் பிரிவுகளாகவே கொண்டிருந்தனர். பல்லவ நாட்டிலும் அதுபோன்ற அமைப்புமுறை இருந்தது என ஆர்.கோபாலன் கருதுகின்றார்.[10] எனவே நாட்டின் பிரிவு முறைகள் இந்தியா வெங்கும் பரவியிருந்த முறையே பின்பற்றப்பட்டுள்ளது. விஷய அமைப்பும் கிராம அமைப்பும் குப்தர்களிடத்திலும்

இராட்டிர அமைப்பானது சதவாகனர்களிடத்திலும் இருந்தபடியால் பல்லவர் ஆட்சி அமைப்பிற்குப் பிற அரசுகளின் ஆட்சி அமைப்புகள் வழிகாட்டின எனலாம்.

அரசன்

அரசன் மக்கட்குத் தலைவனாக விளங்கிய போதிலும் மக்களுள் ஒருவனாகப் போற்றப்பட்டான்.[11] அரசனது ஆணைகளே சட்டமாயின. அவனது ஆணைக்கு அதிகாரிகளும் ஆயுக்தர்களும் (Ayuktas) மக்களும் கீழ்ப்படிந்திருந்தனர்.[12] போர் முறைகளில் சிறந்து விளங்கினர்.[13] போரில் களைப்பில்லாமல் ஈடுபட்டனர்.[14] பரிவேள்விகளைச் செய்து பகைவர்கள் மீது போர் தொடுத்தனர். அறம் தழைப்பதற்காக வெற்றியில் விருப்பம் கொண்டனர்.[15] மேலும், அறநெறி பெருக நன்னெறியினை வளர்த்தனர்.[16] கண்ணோட்டத்துடன் ஆட்சி புரிந்தனர்.[17] எல்லாத் துறைகளிலும் நீதி சிறக்க வேண்டும் என எண்ணினர்.[18] அவர்களின் விருதுப் பெயர்களில் சில அறத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.[19]

அறநெறிகளையே சிறந்தது என்றும் உயர்ந்தது என்றும் போற்றினர்.[20] மக்களின் நல்வாழ்வுக்கே அரசாட்சி புரிந்தனர். அரசர்களும் நீதியை உயர்த்துவதில் முனைந்து நின்றனர்.[21] சைவத்துடன் அருமறையின் துறைகள் விளங்க ஆட்சி புரிந்தனர்.[22] அறத்தின் இருப்பிடங்களாகத் திகழ்ந்தனர்.[23] அறநெறியினையே ஆட்சிமுறையாகக் கொண்டனர்[24] என்றும் போற்றப்படுவதால் அறநெறிக் கொள்கைகளுக்கு முக்கிய இடம் அளித்து ஆட்சிபுரிந்தனர் என்பது பெறப்படுகின்றது. பிரகசுபதியின் நீதி நூல்களையும்[25] தரும சாத்திரங்களையும் பின்பற்றினர் எனச் செப்பேடுகளில் குறிப்புகள் உள்ளன. வைதீக நெறியான வர்ணாசிரம தருமத்தினை நன்கு கடைப்பிடித்தனர்.[26]

பல்லவர் குலம்

சதவாகனர்களின் ஆட்சியானது முடிவுற்ற பின்னர் சிவசுகந்தவர்மன் என்பார் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததை மயிதவோலுச் செப்பேடு கூறுகின்றது. சிவசுகந்த வர்மனைக் குறிப்பிடும் ஹீரஹதஹள்ளிச் செப்பேடானது பரத்துவாச கோத்திரத் தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிட்டுள்ளது.[27] இக்கோத்திரம் பிராமணரில் ஒரு பகுதியினரென மஞ்சகல்லு கல்வெட்டுக் கூறுகிறது. பல்லவர்கள் தொடக்கத்தில் பிராமணர்களாக இருந்து, பின்னர்ப் போர்க்கலை பயின்றனர். ஆதலால், பிரம்மசத்திரியர் என அழைக்கப்பட்டனர் என பள்ளன் கோயில் செப்பேடு கூறுகின்றது.[28] இதனைக் கசாக்குடிச் செப்பேடு உறுதி செய்கின்றது.[29] பல்லவ அரசர்கள் சிறந்த படைத்தலைவர்களாக விளங்கியமை அவர்கள் ஈடுபட்ட போர் நிகழ்ச்சிகளால் அறியமுடிகின்றது. நெடுங்கராய்ச் செப்பேட்டில் இவர்கள் சத்திரிய தர்மத்தினை உடையவர்கள் என்றும் பிரம்மணியத்தை அடைந்தவர்களில் சிறந்தவர்கள் என்றும் குறிப்புள்ளது.[30] அந்தணர்களின் குண நலனும் சத்திரியரின் வீரத் தன்மையும் கொடைத் தன்மையும் பெற்றிருந்தனர்.[31] இவர்கள் அந்தணர்கள் என்று கூறப் பட்டுள்ளபோதிலும் இவர்களின் பெயர்களில் ‘வர்மன்’ என்று காணப்படுவதால் அக்கினிபுராணத்தின் கூற்றுப்படி ‘வர்மன்’ என்பார் சத்திரியரைக் குறிப்பதாகும் என்று கொள்ளலாம். அக்னிபுராணத்தின் கூற்றானது தாள குண்டாக் கல்வெட்டில்[32] காணும் மயூரசர்மன் என்னும் அந்தணப் பெயரால் உறுதி செய்யப்படுகின்றது. பல்லவ குலத்தினரின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்த வீரகூர்ச்சன் என்பான் பல்லவர் குலவழிப்பட்டியலில் இடம் பெறவில்லை என்றாலும் வேலூர்ப்பாளையம் செப்பேட்டின் கூற்றால் நாக இளவரசியை மணந்து அரச பதவியைப் பெற்றான் என்பதை அறிய முடிகின்றது.[33] நாகர்கள் அந்தணர்கள் அல்லர் என்பதை அறியலாம்.

முடி சூட்டுதல்

பல்லவப் பேரரசில் தந்தைக்குப் பிறகு மகன் மணி முடிதரிக்கும் மூத்த வாரிசுக் கொள்கையே பின்பற்றப் பட்டது. சில சமயங்களில் மூத்த வாரிசைச் சேராதவர்களும் முடிசூட்டப் பெற்றனர். முடிசூட்டும் நிகழ்ச்சியானது ஓர் அரசியல் முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாகவும் அரசப் பொறுப்பினை ஏற்பார்க்கு அரசாளும் அதிகாரம் வழங்கும் நிகழ்ச்சியாகவும் கருதப் பெற்றது.[34] அரசன், அரசி இருவரும் முடி புனைந்து நிற்கும் சிற்பம் வைகுந்தப் பெருமாள் கோயிலில் உள்ளது. அரசனின் முடியில் பெரிய மணிக் கற்கள் பதிக்கப்பட்டு வேலைப்பாடு மிக்கதாகவும் அரசியின் முடியானது வேலைப் பாடில்லாமலும் காணப் பெறுகின்றன. பல்லவரின் முடியானது ஒரு களிற்றின் மத்தகம் போன்று காணப்படுகின்றது.[35] முடி சூட்டப் பெறும் அரச குமாரனை ஊர்வலமாக அழைத்து வந்தனர். அரச மாளிகையில் மந்திரி மண்டலத்தாரும் மகாசாமந்தரும் உபய கணத்தார் என்ற இரு கணங்களின் உறுப்பினர்களும்[36] திறை செலுத்தும் குறுநில மன்னர்களும் மூலப்பிரகிருதியாரும் கூடி இருந்து அரச குமாரனை வரவேற்றனர். அரச குமாரனுக்கு மகாபிடேகம் என்னும் திருமுழுக்கிட்டு அரசனாகப் பொறுப்பேற் பதற்குரிய செங்கோலையும் வெண்கொற்றக் குடையையும் அளித்தனர்.[37] முடிபுனை நாளில் பல்லவ அரசர்கள் சிறப்புப் பெயர்களைப் புனைந்தனர்.

விருதுப் பெயர்கள்

அரசர்களின் சிறப்பு, வீரம், அதிகார நிலை, பொழுதுபோக்கு, கலையார்வம், பண்பு நலம், நோக்கு ஆகியன அவர்களுடைய விருதுப் பெயர்களால் அறிய முடிகிறது. மகேந்திரவர்மன் 'சித்திரக்காரப்புலி' 'விசித்திர சித்தன் அயமுகன், நிதியவிநிகன், சத்துருமன்னன், கலகப்பிரியன் பிரகிருதிப் பிரியன் என்று பலவாறாக அழைக்கப்பட்டான். இது போன்ற பெயர்களால் அவனது

ஓவியத் திறமையையும் விநோதமான மூளைத்திறனையும் முன்னோக்கியே செல்லும் ஆற்றல் உடைமையையும், எப்போதும் பணிவு நலம் இருக்கப் பெற்றவன் என்பன போன்ற பண்பு நலங்களையும் அறிய முடிகின்றது. நரசிம்மவர்மன் 'மாமல்லன்' கவிப்பிரயோதன் என்றும் அழைக்கப்பெற்றான். இவைகள் அவனைச் சிறந்த மல்லன் என்றும் கவிபுனையும் ஆற்றல் மிக்கவன் என்றும் தெளிவாகக் காட்டுகின்றன. 'வாரண பாகதத்தன்' என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளமையானது பாகதத்தன் இயற்றிய யானை பற்றிய நூலில் சிறந்த புலமை பெற்றிருந்தமையும் 'வாத்யவித்யாதரன்', 'வீணாநாரதன்' என்பன இசை ஈடுபாட்டினையும் நன்கு விளக்குவனவாக உள்ளன.[38] இராசசிம்மன் இருநூற்றைம்பது விருதுப் பெயர்களால் அழைக்கப் பட்டுள்ளான்.

தோற்றப் பொலிவு

மாமல்லபுரத்து ஆதிவராகர் குகையில் சிம்மவிட்டுணு மகேந்திரவர்மன் ஆகியோரின் சிலை வடிவங்கள் காணப் படுகின்றன. அவைகளின் தோற்றமும் பொலிவும் உடலமைப்பும் அரச குலத்திற்கென்றே அமைந்த தனியொரு பொலிவுடன் அமைந்துள்ளன. அரச குலத்திற்குரிய உயரிய சின்னங்கள் அவர்களது உருவங்களில் காணப்பட்டன என்று டி.வி. மகாலிங்கம் கூறுகிறார்.[39] கைலாசநாதர் கோயில் மூலவர் திரு உறையினைச் சுற்றிலும் அரசன், அரசியர் சிலைகள் நல்ல முகத்தோற்றத்துடன் உள்ளன.[40] இச்சிற்பங்களுக்கேற்பச் செப்பேடுகளில் சாந்தம் நிறைந்தவன் என்றும் பொன்மயமானவன், நற்குறிகள் உடையவன் என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளமையால் ஆதிவராகக் குகைச் சிற்பங்களும் செப்பேட்டுச் செய்திகளும் ஒத்துள்ளன என்பதை நாம் அறிய முடிகின்றது.

பண்புநலம்

நிருவாகத்தில் தம் முன்னோர்களின் வழியினைப் பின்பற்றினர். பல்லவ மன்னர்கள் இராசரிசிகளாக விளங்கினர்.[41] சான்றோர்க்கு நிதிக் குவைகளும் அறக்கட்டளைகளும் அளித்துச் சிறப்பித்தனர்.[42] ஐம்பொறிகளையும் அடக்கி ஆட்சிபுரிந்து குடிமக்களைத் தமது குழந்தைகளைப் போல் கருதினர்.[43] மக்கள் குறைகளை நேரில் கேட்டறிந்தனர். அறநூல்களில் காணப்பட்ட எல்லாக் குணங்களையும் கொண்டிருந்தனர்.[44]

வேள்வி நிகழ்த்தல்

பல்லவர் காலத்தில் பிராமணர் செல்வாக்கு ஓங்கியிருந்தது. அரசர்கள் பரிவேள்வி, அக்னித்தோமம், வாஜபேயம் போன்ற வேள்விகளைச் செய்தனர். பேரரசப் பதவியைப் பெறுவதற்குப் பரிவேள்வி செய்யப் பெற்றது. உன்னகுரவய பாளையம் செப்பேட்டில் முதலாம் பரமேசுவரன் அசுவமேதம் போன்ற பல வேள்விகளைச் செய்தான் என்று குறிக்கப்பட்டுள்ளது.[45] சிம்மவர்ம பல்லவன் தசாச்சுவமேத வேள்வி நிகழ்த்தியதாகக் கல்வெட்டுக் குறிப்பொன்று கூறுகின்றது.[46]

சமயநோக்கு

பல்லவ அரசர்கள் சிவனியம், மாலியம், ஆகிய இரு சமயங்களையும் ஆதரித்துப் பின்பற்றினர்.[47] புறச்சமயங்களான சமண, பௌத்த சமய நிலையங்களுக்கும் அறக்கொடைகள் வழங்கி ஆதரித்தனர். தேவதான திருவிடையாட்ட நிலக்கொடைகள் சிவனிய, மாலிய கோயில்களுக்கும் பள்ளிச்சந்தம் என்னும் நிலக்கொடை சமண, பௌத்த நிலையங்களுக்கும் அளிக்கப்பட்டன.

மகேந்திரவர்மன் சமணப் பள்ளிகளை அழித்துக் குணபர ஈச்சுரமெடுத்தான் என்று நாவுக்கரசர் புராணப்

பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.[48] சமயங்களின் உண்மை யினை உணர்ந்து அரசர்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குற்றங்களை நேரில் விசாரித்த பின்னரே நீதி செலுத்திச் சமணர்களை மன்னன் வேரொடு களைந்தான் எனக் குறிப்பொன்று கூறுகின்றது. சீனப்பயணி யுவான் சுவாங் ஆயிரக்கணக்கான சமணர்கள் வாழ்ந்ததைக் குறிப் பிட்டுள்ளான்.[49] இதனால், பல்லவர்கள் புறச் சமயத்தினரை அழிக்க முடியவில்லை என்பதனை அறியலாம்.

வாரிசுகள்

வாரிசுரிமையானது அரச பரம்பரையாளரின் மூத்த மகனுக்கே உரியதாயிற்று. இதனைப் பற்றிய உண்மைச் செய்திகள் சிம்மவிட்டுணுவின் காலம் வரை தகுந்த சான்றுகளின்மையால் அவற்றை உறுதியாகக் கொள்ள முடியவில்லை. சிம்ம விட்டுணுவிற்குப் பிறகு மூன்றாம் மகேந்திரவர்மன் காலம் வரை மூத்த மைந்தன் அரசாள்வதே வழக்கமாயிற்று. இரண்டாம் பரமேசுவரனுக்குப் பின்னர், நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் மக்கள் அடுத்த வாரிசாக இரண்டாம் நந்திவர்மனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தாயிற்று. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மக்களே அடுத்த வாரிசைத் தேர்ந்தெடுத்தனர் என்று வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணும் கல்வெட்டுக் குறிப்பு[50] இதனை உறுதி செய்கின்றது.

சின்னம்

பல்லவருக்கு நந்தி இலச்சினையே அரசின் சின்னமாயிற்று. நந்தியானது. சிவனின் ஊர்தியாகவும் சார்ந்துநின்ற சைவ சமயத்தினையும் இடைவிடா முயற்சி யையும் கடின உழைப்பையும் குறிப்பதாக அமைந்துள்ளது. பல்லவர்களுடைய நாணயங்களில் இரண்டு பக்கங்களிலும் உயர்ந்த விளக்குகளும் இடையே நந்தி உருவமும் கொண்டு சின்னம் காணப்படுகின்றது. கசாக்குடி, கூரம்

செப்பேடுகளில் காளையின் உருவமும் இலிங்க உருவமும் காணப்படுகின்றன. இலிங்க உருவம் அவர்கள் பின்பற்றிய சைவ சமயத்தை மேலும் வலுப்படுத்துகிறது. மேலும், வெற்றியினைப்பெறக் காளையினைக் குறிக்கும் தொடர்களாகக் கைலாசநாதர் கோயில் கல்வெட்டில் இராசசிம்மனைக் குறிக்கும் தொடர் 'ஸ்ரீ விருஷ தர்ப' என்றும் 'ரிஷபலாஞ்சனன்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொடர்களைக் கொண்டு காளையைச் சின்னமாகக் கொண்டு பெருமை பெற்றவன் என்றும் காளையைச் சின்னமாகத் தரித்தவன் என்றும் கொள்ளலாம். முதலாம் பரமேசுவரவர்மன் 'ரிஷங்கா'[51] என்று குறிப்பிடப் பட்டுள்ளான். அதற்குக் காளையைச் சின்னமாகக் கொண் டவன் என்பது பொருள். இச் சொற்களை உறுதி செய்வதாக நந்திக்கலம்பகம் என்னும் இலக்கியம் விடை மண்பொறி ஓலை[52] என்றும் திருமங்கையாழ்வாரின் பாடல் ஒன்றில் வெற்றியுடைய விடைக்கொடியினை முன் உயர்த்திச் சென்றனர்[53] என்றும் கூறப்பட்டுள்ளதால் அறியலாம். அரசனால் அனுப்பப்பெற்ற ஆணைகளில் காளையின் உருவம் பதிக்கப் பெற்று 'விடேல் விடுகு' என்று பெயர் பெற்றது. விடை + வெல் + விடுகு என்பதின் குறுவடிமே விடேல் விடுகு என்பதாகும். அதற்கு வெற்றியுடைய நந்தி இலச்சினையோடு விடப்பட்ட ஆணை என்பது பொருளாகும்.[54] உருவப் பள்ளி, பீகிரச் செப்பேடுகளில் அரிமா உருவங்கள் காணப்படுகின்றன.[55] அரிமா உருவங்கள் தாங்கியவை அனைத்தும் போர் முனைகளில் வெற்றி பெற்ற பின்னர் விடப்பட்டவைகளாகும். வெற்றியினைக் குறிப்ப தற்கு அரிமாவை விடச் சிறந்த உருவம் ஏதுமில்லையென இராசமாணிக்கனார் கூறுகின்றார்.[56]

இவ்விரு அரசு சின்னங்களும் சமய வழிபாடு, விடாமுயற்சி, வெற்றியில் நாட்டம் ஆகியனவற்றை விளக்கு கின்றன. அரசச் சின்னமாக வெண்கொற்றக் குடையையும் கொண்டிருந்தனர்.[57]

கத்வாங்கம்

கத்வாங்கம் என்பது சிவனுடைய படைக்கருவிகளுள் ஒன்றாகும். இதனாற்றான் சிவன், கத்வாங்கதரன்[58] என்றும் கத்வாங்க பிருதன் என்றும் கூறப்படுகின்றான். சிவனடி யார்கள் தாங்கள் சார்ந்துள்ள சமய அடையாளமாகக் கத்வாங்கத்தினைப் பயன்படுத்தினர். சிம்மவிட்டுணுவிற்குப் பின்வந்தோர்கள் சைவ சமயத்தில் தீவிரப் பற்றுக் கொண்டவர்கள். ஆதலால், கத்வாங்கத்தினைத் தங்களது சமய அடையாளமாகக் கொண்டனர்.[59]

இரண்டாம் நந்திவர்மனுடைய முடிசூட்டு விழாவின் போது செங்கோல், கத்வாங்கம் முதலியன அளிக்கப்பட்டன என்று வைகுந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டொன்று கூறுகின்றது.[60] கத்வாங்கத்தில் அரவம் ஒன்று சுற்றியிருந்ததைத் திருமங்கை மன்னன் வாக்கால் அறியலாம். அரண்மனையில் திருவாயிலின் முன்னர் அரசின் கொடி ஒளிவிட்டுத் திகழ்ந்தது.[61]

அரசனும் அமைச்சர்களும்

அரசனுக்கு ஆலோசனை கூறும் குழுவொன்று அவசியம் தேவையென அரசியல், அமைச்சியல் பற்றிக் கூறும் நூல்கள் உரைக்கின்றன. தனியொரு சக்கரம் தேரை உருட்டிச் செல்லப் பயன்படாது. அது போன்றே நாடு என்ற தேரினை அரசன் என்ற ஒரு சக்கரத்தால் மட்டும் உருட்டுவது முடியாது. அரசனும் அமைச்சரும் இணைந்து செயல்பட்டால்தான் நாட்டில் அரசியல் சிறப்பாக நடைபெறும் எனக் கிராதாரசூனியம் என்ற நூல் கூறுகின்றது.[62] ஹீரஹத ஹள்ளிச் செப்பேடுகளில் சிவகந்தவர்மனின் அமைச்சர் களைப் பற்றிய குறிப்பொன்று உள்ளது.[63] அமைச்சர்கள் அடங்கிய குழுவானது மகேந்திரனின் கீழ் இயங்கியது எனப் பெரிய புராணத்தால் அறியலாம். வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டில் மந்திரி மண்டலம் பற்றிய

குறிப்பொன்று உள்ளது.[64] இக்குறிப்பால் அமைச்சர்கள் அடங்கிய அவையினரையே மந்திரி மண்டலம் என அழைத்தனர் எனலாம்.

பணிகள்

அரசனுக்கு அறிவுரை கூறுவதே அமைச்சரின் முதன்மைப் பணியாகும். நாட்டில், அமைதி நிலவவும் நிருவாகச் சீர்கேட்டினை அகற்றவும் அரசரிடம் காணும் கருத்து வேறுபாடுகளைப் போக்கவும் வன்முறையில் மாற்றாரை ஒடுக்கத் தகுந்த திட்டம் தீட்டுதலும் ஆகிய பணிகள் குறித்து அரசனுக்கு அவ்வப்போது அமைச்சர்கள் அறிவுரை கூறினர். சமயக் காவலில் அரசன் தவறியபோது தக்கபடி கூறி, வழிப்படுத்தி நிற்றல் அமைச்சர்களின் கடமைகளில் ஒன்றாக இருந்தது.[65] பெரியோர்கள் மீது குற்றம் ஏதும் சுமத்தப்பட்டால் அவர்களைக் கொண்டுவரச் செய்ய அமைச்சர்களைத் தலைமையாகக் கொண்ட படை அனுப்பப்பட்டது.[66]

மேலும் நகரங்கள், சிற்றூர்கள், காடுகள், வேளாண்மை யில் கிடைக்கப் பெறும் வருவாய் அரசின் செலவினங்கள், தரிசு நிலங்கள், வரிவகைகள், சுரங்கங்களின் வருவாய், ஆகியனவும் காணாமல்போன பொருள்களைப் பற்றித் தகவல்கள் சேகரித்து வைத்தல் ஆகிய பணிகளை யும் மேற் கொண்டனர்.[67] இம்முக்கியப் பணியினால் இவர்கள் அரசனுக்கு ஆலோசனை கூறும் உயர்மட்ட அலுவலர்களாகத் திகழ்ந்தனர் என்று கூறலாம். அர்த்த சாத்திரத்தில் காணப்பட்ட மந்திரி பரிசாத்தும்[68] சாதகக் கதைகளிலும் அசோகருடைய கல்வெட்டுகளிலும் காணப்படும் மந்திரி பரிசத்தும் பல்லவர் ஆட்சியில் இடம் பெற்ற மந்திரி மண்டலத்தை ஒத்துள்ளமையை அறிய முடிகின்றது.

நாட்டின் ஒரு பகுதிக்கு அமைச்சர் தலைவராக நியமிக் கப்பட்டதும் உண்டு.[69] அப்பகுதியின் வருவாய் அவர்களுக்கு

ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. இவர் அறநூல்களில் புலமை பெற்றும் வீரம் மிக்கவராகவும் படைக்கலப் பயிற்சி பெற்றவராகவும் நல்ல பரம்பரையில் உதித்தவராகவும் இருத்தல் வேண்டுமென மனுநூல் கூறுகின்றது. அமைச்சர்கள் சாளுக்கிய மன்னரின் தந்திரச் செயல்களை நந்திவர்மனுக்கு எடுத்துக் கூறிப் போர்த்திட்டங்களை நன்கு வகுத்து அளிப்பதாக வைகுந்தப் பெருமாள் கோயில் கல் வெட்டொன்று கூறுகின்றது. படைப் பயிற்சியில் சிறந்து விளங்கிய சிறுத் தொண்டரைப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.[70]

அமைச்சர் அவை

அமைச்சர் அவையானது எட்டுப்பேரைக் கொண்டதாக மனு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அமைச்சவையில் பதினாறு பேர்கள் இருக்கலாம் எனப் பிரகசுபதி கூறியதைச் சாணக்கியன் காட்டுகிறான்.[71] முப்பத்தி இரண்டு பேர்களைக் கொண்டதாக மகாபாரதக் குறிப்பு ஒன்று கூறுகின்றது. இதனால், நாட்டின் தேவைக்கேற்ப அமைச்சர் அமர்த்தம் செய்யப்பட்டதை அறிகிறோம். அமைச்சர்களில் தலைமை அமைச்சர் ஒருவர் இருந்தமை செப்பேட்டுச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் பிரம்மசிரீராசன் என்பாரும் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் நம்பன் இறையூர் உடையான் என்பாரும் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தனர். நந்திவர்ம பல்லவமல்லன் காலத்தில் விளங்கிய பிரம்மசிரீராசனே ஆன்மீக நெறியாளராகவும் முக்கிய அமைச்சராகவும் இருந்தார்.[72] அரசர்களின் முடிசூட்டு விழாவில் அமைச்சர்கள்

முக்கியப் பங்கினை வகித்தனர். அரசன் ஏவிய ஆணைகளை விரைவில் நிறைவேற்றினர்.[73]

செயலகம்

அரசின் செயலாளர்களைப் பற்றிய குறிப்புகள் பல்லவர்கள் காலக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இரகசியாதிகிருத்தன் என்பான் அரசனின் அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றினான், என ஹீரஹத ஹள்ளிச் செப்பேடுகளால் அறியலாம்.[74] இரகசியாதி கிருத்தன் என்பான் அரசனுக்கு அறிவுரை கூறும் அந்தரங்கச் செயலாளர் எனப் பியூலர் குறிப்பிடுகின்றார். இவர்கள் அரசனின் வாய்மொழி ஆணைகளைக் குறித்துக் கொண்டு பதிவு செய்தனர். அவ்வாணைகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் செப்பேடுகளில் எழுதுவோரால் பொறிக்கப் பெற்றன.[75]

வாயில் கேட்பார், நிலங்களை அளந்து கணக்கிடுவோர், குற்றவியல் நயன்மையர் ஆகியோரைப் பற்றிக் கசாக்குடிச் செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. கீழ் வாயில் கேட்பார் என்பதைக் கீழ்நிலைச் செயலாளர்கள் என்றே ஹூல்சு குறிப்பிடுகின்றார்.[76] இதனால், வாயில் கேட்பார் என்பாரைச் செயலாளர்கள் என்று கொள்ளலாம். இவர்களிடம் அரசினரின் ஆணைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. சில நேரங்களில் தானம் கொடுத்த நிலப் பகுதிகளில் நேரடி மேற்பார்வை செய்து நிலங்களை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வர்.[77]

வாயில் கேட்பார் என்போரைத் திருவாய்க் கேள்வி[78] என்றும் சோழ அரசியலில் இருந்த திருவாய்க்கேள்வி என்கிற அலுவலர்களுடன் ஒப்பிடத் தோன்றுகின்றது. முற்காலப் பல்லவர்கள் தமது செயலாளரை இரகசியாதி கிருத்தன் என்றும் பிற்காலப் பல்லவர் வாயில் கேட்பார்[79] என்றும்

அழைத்தனர் என்று அறிய முடிகிறது. இவரகளே சோழர்கள் காலத்தில் திருவாய்க் கேள்வி என அழைக்கப்பட்டனர் எனக் கூறலாம்.[80]

அதிகாரர்கள், நிலைக்களத்தார் என்ற அதிகாரிகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. குற்றவியல் நீதிபதிகளையே அதிகாரர்கள் எனக் கூறினர் எனலாம்.[81]

ஹூல்சு வடமொழியில் அதிகாரர்களை அதிகாரிகள் என்றே குறிப்பிட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து நிலைக்களத்தார் வாயில் கேட்பார் போன்ற சொற்கள் காணப்படுகின்றன. எனவே இம்மூவரும் நிலம் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. அதிகரணம் என்ற வட மொழிச் சொல்லானது நிலைக்களம், உரிமைப்படுத்துதல் என்ற பொருள்களில் உள்ளது.[82] நிலைக்களத்தாருடன் அதிகாரர் காணப் படுவதால் அதிகாரர் என்பார் உரிமைப்படுத்தும் பதிவாளர்[83] என்று கொள்ள அதிக இடமுண்டு. நிலைக் களத்தாரை ஹூல்சு ஊர்த்தலைவன் என்று பொருள் கொள்கின்றார். நிலைக் களம் என்ற சொல்லானது நிலையாகப் பிரிக்கப்பட்ட ஒரு பயிரிடும் பகுதியெனக் கொள்ளலாம். பயிரிடும் நிலத்தினைப் பிறருக்கு நிலைக் களத்தார் முன்னிலையில் அரசினர் இறையிலி நிலங்களாக வழங்கினர் எனத் தெரிகிறது. நிலக் கொடையினை வாயில் கேட்பார் என்ற இகரசியாதி கிருத்தன் என்பான் அரசினிடத்து வாய் மொழியாகப் பெற்ற ஆணையினைச் செயற்படுத்தினான். நிலைக்களத்தார் உடன் இருந்து நிலத்தின் எல்லைகள் அமைக்கப்பட்டன. கல்லும் கள்ளிச் செடிகளும் நில எல்லைகளாக நடப்பட்டன. அதன்பின்னர் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது.

குறுநில மன்னர்கள்

பேரரசின் வடக்கில் சாளுக்கியர்களாலும் இராட்டிர

கூடர்களாலும் தெற்கில் பாண்டியர்களாலும் பல்லவர் களுக்குத் தொல்லைகள் நேர்ந்தன. இதனால் பல்லவர்கள் பல குறுநில மன்னர்களைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். அவர்களுக்குச் சிறிய நிலப் பகுதிகளை ஆளும் பொறுப்பு அளிக்கப்பட்டது.[84] அவர்கள் அமைச்சர்களுக்கு அடுத்த நிலையில் இருந்த அரையர், பொரையர், முத்தரையர்[85] பல்லவேந்திரபிருத்தியர்[86] என்ற பட்டங் களைக் கொண்டு குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர். நியுக்தர்[87] என்னும் அதிகாரியால் குறுநில மன்னர்களிடம் திறைத் தொகையானது வசூலிக்கப்பட்டது. பெரும்பாலான குறுநில மன்னர்கள் பல்லவ அரசர்க்குத் திறை செலுத்தித் தங்களின் பற்றறுதியினை வெளியிட்டனர். அவர்கள் பல்லவப் பேரரசின் மேலாண்மையினை எதிர்த்த போதும் திறை செலுத்த மறுத்தபோதும் அவ்விடங்களில் அரச குடும்பத்தினரையும் உயர் அதிகாரிகளையும் நியமித்தலும் வழக்கம் ஆகும்.[88]

இளவரசர்கள்

மாநிலங்களின் நிருவாகமானது இளவரசர்களின் கீழ் இருந்தது. அவர்கட்கு ஆட்சிமுறைப் பயிற்சி பெறும் வாய்ப் பளிக்கப்பட்டது. அவர்கள் மாநிலங்களின் நிருவாகத்தினை மேற்கொண்டனர்.[89] பல்லவர் அரச வாரிசு முறையானது தந்தையினின்று மூத்த மகனுக்கு உரிமையானது. மாநில நிருவாகம் ஆளுநர் ஒருவரிடம் அளிக்கப்பட்டது. இக்கால ஆளுநரைப் போல அக்கால இளவரசர் மாநிலத் தலைவராக ஆண்டார். அரச பரம்பரையினரின் பிறவித் தூய்மை முக்கியமாகக் கருதப்பட்டது.[90] இருபத்தோராம் வயது முடியும் தருவாயில் அரசினை இளவரசர்கள் ஆள முனைந்தனர்.[91] வாரிசு இல்லாமல் அரசன் அகால மரணமுற்றபோது அமைச்சர் முதலானோர் கூடி எண்ணிப் பார்த்து அரச மரபில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து முடிபு னைதல் வழக்கமாகும்.[92] தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு ஆட்சி

முறையினை நடை முறையில் பயிற்றுவிக்க அசிசுவாமி என்பார் இருந்தார்.[93] இவரிடம் ஆட்சிமுறை பயின்று வந்த பல்லவ மன்னன் சாசிராசன் என அழைக்கப்பட்டான்.

அரக்காதித்தர்கள்

'ஆரக்ச' என்ற வடமொழிச் சொல்லானது பாதுகாப்பவன் என்ற பொருளில் உள்ளது. ஆரக்சா சொல் லானது மருவி அரக்காதித்தர்கள் என்று ஏற்பட்டிருக்கலாம். இவர்கள் மக்கள் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளித்தனர் என்பது பெறப்படுகின்றது. இவர்கள் இன்றுள்ள காவல்துறையினரைப் போல் பணியாற்றினர் என்று கருதுகின்றார் எசு.கே. அய்யங்கார்.[94]

இதர அலுவலர்கள்

மாடலிகர்கள் சுங்க வரியினைக் கண்காணித்தனர். தூதிகர் என்பார் அயல்நாட்டுத் தூதுவராகவும் சஞ்சரந்தர் என்பார் ஒற்றர்களாகவும் பணிபுரிந்தனர். மேலும், தேசாதிகர் என்னும் நாடாட்சி செய்வாரும் சிரமாசிரம போசகர் என்பாரும் வ்ல்லபர் என்னும் குதிரைக் காவலரும் கோவல்லவர் என்னும் ஆநிரைக் காவலரும் பணி புரிந்தனர்.[95]

மேற்குறிப்பிட்ட அரச அலுவலர்க்கு உணவு, நீர், விறகு, கட்டில், இருப்பிடம், பால், தயிர், காய்கறி, கீரை, பூ, புல், பொதி சுமக்கும் காளை, மாற்றுக் காளை, பசு, ஆடு முதலியவற்றை மக்கள் அவர்களது ஊதியமாகக் கொடுத்தனர்.[96]

பரம்பரைக் கலைஞர்கள்

தெய்வத் திருப்பணிகளான தேவகர்மத்திற்கும் புதிய சிலைகளை உருவாக்கும் நவகர்மத்திற்கும் நிலங்கள் ஒதுக்கப் பட்டு கலைஞர்கள் ஆதரவு பெற்றனர்.[97] ஆலயப் பணிகளில்

கலைகள் போற்றப்பட்டன. நடன ஓவியங்களும், இசையினைப் பற்றியக் கல்வெட்டுகளும் கோயில்களில் காணப்படும் சிற்பங்களும், நுண்கலை வல்லுநர்களின் சீரிய செயல்களை வெளிப்படுத்துகின்றன. நுண்கலையில் வல்லவர்கள் தேர்ந்தெடுக்கப்பற்று அரசின் பரம்பரைக் கலைஞர்களாக நியமனம் பெற்றனர். அவர்கட்குப் பெருந்தட்டார், மகாகாஷ்டாகாரி என்னும் சிறப்புப் பெயர்கள் வழங்கிச் சிறப்பு செய்யப்பட்டனர். அவர்களின் தொழில் உரிமை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டது.[98] பொற்கொல்லர்களுக்கு சுவர்ணகிருத் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. செப்புப் பட்டயங்கள் தீட்ட பட்டய எழுத்தாளரும் நியமிக்கப்பட்டனர். காஷ்டாகாரி என்பாரும் சுதபதி என்பாரும் ஒருவரே எனக் கொள்ளலாம்.

புலவர்கள்

புலவர்கள் அரசர்களின் மெய்ப்புகழைப் புகழ்ந்து வாழ்க்கை நடத்தினர். இவர்களுடைய புகழ் மொழிகளில் அரசர்களின் உண்மை நிலைகளை மறைக்காமல் எடுத்துக் கூறினர்.[99] அரசனையும் அவனது முன்னோர்களையும், அறக்கட்டளைகள் பெறுவோர் பெயர், ஊர் முதலிய விவரங்களையும் வடமொழியிலும் தமிழிலும் பாடினர். பட்டய எழுத்தர்கள் அதனைச் செப்பேடுகளில் பொறித் தனர். இப்புலவர்கள் உத்தரக்காரணிகள் என்றழைக் கப்பட்டனர். காரணிகர் என்பார் உள்ளவற்றினை ஆராய்ந்து[100] அவர்பால் மெய்க்கீர்த்தியாக அளிப்பவர் என்று தெரிகிறது. இவர்களுக்கு மேலாக உத்தரக்காரணிகர் பரமோத்திரக் காரணிகர் ஆகியோர் இருந்தனர். இவர்கள் ஆவணங்களையும் நிபந்தனைகளையும் ஆவண வடிவில் கொடுத்தனர்.

தருமாசனம்

அரசனைத் தலைவனாகக் கொண்டு இயங்கிய ஒரு முக்கிய அமைப்பாகத் தருமாசனம் விளங்கிற்று. நியாயம் வழங்கிய அமைப்பு தருமாசனம் எனப் பெயர் பெற்றது. அர்த்தசாத்திரத்தில் தர்மாஸ்தியம் என்ற குறிப்பு காணப் படுகின்றது.[101] அது கோயில் அறக்கட்டளைக்கும் ஊர்ச் சபைக்கும் இடையே எழும் உரிமைகளைப் பற்றிய வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவதற்கு அமைந்த மன்றம் ஆகும். அந்தத் தருமாஸ்தியமே பல்லவர் காலத் தருமாசனம் என்று கொள்ளலாம். மேலும், ஒரு குறித்த காலத்திற்குள் ஒரு பணியினை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு தங்கள் பணியில் தவறிய ஊரவைகள் தர்மாசனத்திற்குத் தண்டத் தொகையினைச் செலுத்தின.[102] இம்மன்றங்களில் பாரபட்ச மின்றி நியாயம் வழங்கியதாகச் செப்பேட்டுச் செய்தி யொன்று கூறுகின்றது.[103]

நீதி மன்றங்கள்

மக்களிடையே தோன்றும் வழக்குகளைத் தீர்க்க நீதி மன்றங்கள் உதவின. அதிகரணம், கரணம் என்ற பெயர்களில் நீதிமன்றங்கள் இருந்ததற்கான குறிப்புகள் செப்பேடுகளில் அதிகம் உள்ளன. அதிகரணம் என்ற சொல்லானது அதிகாரி என்ற சொல்லில் இருந்து தோன்றியிருக்கலாம். அதிகாரர், நிலைக்களத்தார் ஆகியோர் நிலக்கொடை தொடர்பாகக் காணப்படுவதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம். இதனால் அதிகாரி என்பார் நிலத் தொடர்பான வழக்கினை விசாரித்து அதனை உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கும் பணியில் ஈடுபட்டனர் எனத் தெரிகின்றது. அதுவே ஒருவனது உரிமைப் பொருளை மீட்டுத் தந்துள்ளதாக மத்தவிலாசப் பிரகசனக் குறிப்பொன்று கூறுகின்றது. சொத்துகள் தொடர்பான வழக்குகளை விசாரித்து அதனை உரியவர்க்குச் சேர்ப்பிக்கும் பணி நடைபெற்றதென அறியலாம்.[104] கீழ் நிலையில் உள்ள நீதிமன்றமே கரணம் என்ற அமைப்பாகும்.

அது விதித்த தண்டத் தொகை கரண தண்டம் எனப் பட்டது.[105] கரணத்தான் என்பான் அறங்கூறு அவையோர் முன் ஆவணத்தில் உள்ளவற்றை உரக்கப் படித்து அனைவரையும் கேட்குமாறு செய்தான். சபையோர் ஆவணத்தை நன்கு பரிசீலித்து நடுநிலையாகத் தீர்ப்புக் கூறினர். கரணத்தான் என்ற சொல்லமைப்பு காரணிகன் என்ற சொல்லில் இருந்து வந்திருக்கலாம். காரணிகன் என்பான் நடுநிலையாளன் என்று குறிக்கப்பட்டுள்ளது.[106] எனவே, கரணத்தான் என்னும் காரணிகனே நீதிபதியாகவும் செயல்பட்டான் எனலாம்.[107]

தீர்ப்பு வழங்குதல்

நீதிமன்றங்களில் தமது வழக்கினைத் தொடுப்பவர்கள் மன்றாடிகள் எனப்பட்டனர். தீர்ப்புகள் நீதிநெறி முறைகளுடன் அமைந்தனவாகும். தண்டம் செய்யுங்கால் வழக்குக்கு உட்பட்ட இரு திறத்தாரையும் முன் வைத்துக் கேட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டன.[108] வழக்கினை நன்றாக அறியச் செய்வனவாக மூன்று சான்றுகள் தேவைப்பட்டன. ஆவணம் என்பது வழக்கினை ஆராய உதவும் சுவடி, பத்திரம் முதலிய எழுத்துச் சாட்சியங்களாகும். ஆவணத்தில் காணும் எழுத்துகளை நேர் ஒப்பு நோக்கினார்கள். அரண்தருகாப்பிலிருந்து வேறொன்றைப் பெற்றனர். அதில் காணும் கையெழுத்துகளைச் சரிபார்த்தனர். அவற்றால் அறியப்படும் உண்மைகளைக் கண்டு தெளிந்தனர். ஆட்சி என்பது நீண்டகாலமாகக் கையாண்டு வரும் ஒழுக்க நெறி அல்லது அனுபவ பாத்தியம் ஆகும். அயலார் காட்சி என்பது வழக்குத் தொடர்பான நிகழ்ச்சிகளைக் கண்டோர் கூறுவதாகும். மூன்று சான்றுகளையும் நன்கு ஆராயப்பட்ட பின்னரே தீர்ப்பு வழங்கப்பட்டது.[109] சாசன சஞ்சாரிகள் என்பார் நீதிமன்றத் தீர்ப்பினை ஒட்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் பெற்றவராக விளங்கினர்.

தண்டனைகள்

உடலைத் துன்புறுத்தும் தண்டனையை அரசர்கள் அளித்தனர் எனக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.[110] குற்றமிழைத்தவர்களைக் கைது செய்யவும் தண்டிக்கவும் பயன்படுத்தப்பட்டது.[111] கடுங்குற்றவாளிகள் சேனை தண்டனையிலிருந்து தப்பி வெளிவர இயலாதபடிக் காவல் அமைக்கப்பட்டது. எளிதில் திறக்க இயலாத இருப்புத் தாளினைப் பலமுறை திருகிக் கோத்தனர்[112] சிறியோரின் குற்றங்களுக்குப் பெற்றோரை வருத்தினர்.[113]

அரண்தரு காப்பகம்

ஒப்பந்தங்கள் இசைவு எனப்பட்டது. அவ்வொப்பந்தப் பத்திரங்களில் சாட்சிக் கையொப்பங்கள் பெறப்பட்டன.[114] கையொப்பங்கள் இட்டவர்கள் மேல் எழுத்திட்டவர்கள் எனப்பட்டனர். ஊராரின் கையொப்பங்கள் தனியாகச் சேமித்து வைக்கும் அரசாங்க அறச்சாலைகள் இருந்தன. அதுவே அரண்தரு காப்பகம்[115] எனப்பட்டது.

அதிகரணத்தில் ஊழல்

நியாயம் நெறிமுறைகள் தவறியதும் உண்டு. அரசனது கட்டுப்பாட்டினுள் நீதிமன்றங்கள் இயங்கிய போதிலும் நீதி வழங்குவதில் ஊழல் மலிந்திருந்தன[116] என்பது மகேந்திர வர்மனின் மத்தவிலாசம் என்னும் நூலில் குறிக்கப் பட்டுள்ளது. அவை அரசனாகிய மகேந்திரனால் கூறப்பட் டுள்ளதால் நீதிமன்றங்களில் காணப்படும் ஊழல்களை நீக்க வேண்டும் என்ற நோக்குடன் அந்நூலை ஆக்கியிருக்கலாம் என்ற கருதுகிறார் சி. மீனாட்சி.[117]

நாடு காவல்

பல்லவர்களுடைய கல்வெட்டுகள் அக்கால நாடு காவல் முறையினைக் கூறுகின்றன. நாடு என்பது பெரும் பிரிவாக

உள்ளதால் காவல் முறையில் பலர் ஈடுபடுத்தப் பட்டிருக்கலாம் என அறிய முடிகின்றது. இரவு முழுமையும் முறைப்படுத்திக் காவல் புரியும் காவலாளர்கள்[118] இருந்தனர் என்று தெரிவிப்பதால் பகல் மற்றும் இரவு நேரங்களில் இடைவிடாமல் காவல் காத்தனர் என்பதனை அறியலாம். மக்கட்குப் பாதுகாவலை வழங்கிட உயர்ந்த மதிலை அமைத்திருந்தனர்.[119] அது பிறர் ஏற முடியாதவாறும் எளிதில் உடைக்கமுடியாதவாறும் விளங்கிற்று. அம்மதிலைச் சுற்றித் தாண்டமுடியாத ஆழமான அகழி இருந்தது. மாற்றார் தாக்கும்போது மக்கள் உயிருக்கும் உடைமைக்கும் இவைகள் பாதுகாவலாய் அமைந்தன.[120]

படைமாட்சி

பல்லவர்களின் படைகள் களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர், சிங்களர், கேரளர்[121] சாளுக்கியர்[122] ஆகியோரை வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, படை நன்னிலையில் அமைக்கப்பட்டிருந்தமையை அறியலாம். மன்னர்கள் போர்த் திட்டங்களையும் முறைகளையும் வகுப்பதில் திறமை பெற்றவர்களாக விளங்கினர்.[123] வட இந்தியாவில் காணப்பட்ட கரி, பரி, தேர், காலாள் ஆகிய நால்வகைப் படை அமைப்புகள் பல்லவர் காலத்தில் இருந்தன. இராசசிம்மனும்[124] பல்லவமல்லனும்[125]. யானை நூலில் சிறந்து விளங்கினர். யானைப் படையானது மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[126] வைகுந்தப் பெருமாள் கோயில் சிற்பங்களில் பல்லவர்களின் யானைப் படை நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. போர்க் காலங்களில் யானைகளுக்கு மதுவைக் கொடுத்துப் போரிலீடு படுத்தினர்.[127] யானைகள் மீது அம்பாரிகள் வைக்கப் பட்டன.[128] யானைப்படை கடற்படையின் ஒரு பிரிவாக இயங்கி வந்தது.[129]

தேர்ப்படையினைப் பற்றிய குறிப்பு நந்திக் கலம்பகம் என்னும் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[130]

இச்சான்றுகள் உறுதி செய்யவல்ல செப்பேட்டு, கல்வெட்டுச் சான்றுகள் ஒன்றும் கிடைத்துள்ளது. குதிரைப்படையும்[131] காலாட்படையும்[132] பயன்படுத்தப்பட்டன. கடற்படை இலங்கைக்குச் சென்று வெற்றிபெற்ற செய்தியினை மகாவமிசமும் கல்வெட்டுச் செய்திகளும் கூறுகின்றன.[133] மேலும் ஒரு கல்வெட்டு பாண்டிய அரசனுக்குப் பல்லவக் கடற்படை அனுப்பப்பட்டதைத் தெரிவிக்கின்றது.[134] கடற்படையின் உதவியால் பல்லவப் பேரரசு தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் தூரக் கிழக்கு நாடுகளிலும் வாணிகத் தினை வளர்த்தது.[135] நிலைப்படையேயன்றிக் கடற் படையிலும் பல்லவர்கள் வெற்றி கொண்டனர் என்ற செப்பேட்டின் கூற்று மேலும் வலிவு பெறுகிறது.[136] பல்லவ மன்னர்களின் விருதுப்பெயர்கள் தெற்கு அசாம், மேகாங்க், மலாயா தீபகற்பம் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது. இவைகளால் அப்பகுதிகளில் பல்லவர்களின் செல்வாக்குக் கடல்கடந்து பரவியிருந்தது என்பதைத் தெளிவு படுத்துகின்றன என்று மீனாட்சி கருதுகிறார்.[137]

படைத்தலைவர்கள்

படைத்தலைவர் தானைத்தலைவர் என்றழைக்கப் பட்டார். இவர் போர்ப் பயிற்சியில் சிறந்து விளங்கினார்.[138] படைகள் பல பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன. குமிகர் என்பார் ஒரு பிரிவின் தலைவராக இருந்தார். 'குல்மா' என்று ஏழு பெரும் பிரிவில் ஒன்றாக இராமாயணம் குறித்துள்ளது. அதுபோன்றே பல்லவர் படையும் ஏழு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பெரும் பிரிவிற்குத் தலைவனாகக் குமிகர் என்பார் நியமிக்கப்பட்டிருந்தார் என எஸ்.கே. அய்யங்கார் கருதுகிறார்.[139] இப்பெரும் பிரிவு சிறிய பிரிவுகளாகப் பிரித்து சிறிய சிறுபகுதியின் தலைவனாக நெயிகர் நியமிக்கப்பட்டிருந்தார்.[140] இராணுவத்தின் உயர் அதிகாரி யாகச் சேனாதிபதி நியமிக்கப்பட்டிருந்தார்.[141] 'குறுநிலத் தலைவர்களும் படைத்தலைவர்களும் தலைவர்களாக

விளங்கினார்.[142] சேனைத் தலைவர்களின் சேனைகளைப் பாராட்டிச் சிறப்புகள் அளிக்கப்பட்டன.[143]

படைகள் வாள், குறுவாள், வில், அம்பு ஆகியவற்றைக் கொண்டு போரிட்டன.[144] தற்காப்புக்காகக் கேடயமும் பயன்படுத்தப்பட்டது. வேல் சிறப்பான படைக்கலனாகக் கொள்ளப்பட்டது. இவைகளேயன்றிக் கொடிபோன்ற வளைந்த கத்தி, தோமரம், சக்தி, பிரகாசம், கதை, கணையம், கார்ப்பணம், சக்கரம் ஆகியனவும் பயன்படுத்தப்பட்டன.[145] அயில், ஆழி, கட்டங்கம், சூலம், தண்டாயுதம், ஆரம் (அம்பறாத்துணி) போன்ற படைக்கலங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.[146] படைகள் தலைநகர் நீங்கியதும் முகாம் அமைக்கப்பட்டது.[147] சங்கு, தாரை, தாளம், மிக்க ஒலியினை எழுப்பும் பேரி, பம்பை, தண்டை, துடி, திமிலை கரடிப்பறை ஆகியவற்றால் போரொலி எழுப்பிப் போரினை அறிவித்தனர்.[148] சமுத்திரகோசம் கடுமுக வாத்தியம் என்னும் வாத்தியங்களும் இருந்தன.[149] பறையானது இடைவிடாமல் ஒலிக்கப்பட்டது. அது கடல்போல் முழங்கும் கடுவாய்ப்பறை எனக் குறிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் காலில் வீரக்கழல் அணிந்திருந்தனர்.[150] போர் வீரர்கள் ஒருவரை ஒருவர் சமமாக எண்ணிப் போரிட்டனர்.[151] மன்னர்களும் போரில் சிறந்து விளங்கினர்.[152] காலாட் படையினர் கொடியும் குடையும் தாங்கிச் சென்றனர்.[153] படையின் முன் அணியினராக விளங்குவோருக்குத் தூசிப்படை என்ற பெயர் வழங்கியது.[154] மையப் பகுதியில் இருந்த பெரும் படையினரைப் பேரணி என்றழைத்தனர்.[155] இறுதியாக நின்ற அணிக்குக் 'கடைக்கூழை'[156] என்றனர். பாசறையில் மன்னர்கள் தங்கிய வண்ணம் போர் நிகழ்ச்சியினைக் கண்காணித்தனர்.[157] போரில் காயமுற்ற வீரர்களுக்கு உதவிகள் மேற்கொள்ளப் பெண் மக்கள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

இராட்டிரபாலர்

இராட்டிரங்களின் நிருவாகம் இராட்டிபாலர் என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டது.[158] அவர்களுக்குத் தனியானதொரு அரசவையும் படையமைப்பும் இருந்தது. அவர்களுக்குக் கால எல்லையானது எதுவும் குறிக்கப் படவில்லை. அவரவர் திறமையினைப் பொறுத்தே ஆட்சி செய்தமையைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இவர்களின் வழித் தோன்றல்கள் தொடர்ந்து நிருவாகத்தினை நடத்திச் சென்றனர்.[159]

நாட்டார்

நாடு என்பது ஒரு முக்கிய பிரிவாக விளங்கிற்று நாட்டார் என்பாரே நாடு அல்லது கோட்டத்தில் தலைவராக இருந்தார்.[160] நாட்டார் என்பார் அப்பகுதியில் உள்ள சான்றோர்களாவார்.[161] பிறருக்கு வழங்கப்பட்ட நிலத்தினை அப்பகுதியில் நாட்டார் அதன் உரியவரிடம் இருந்து பெற்று அளந்து ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி பிரித்துக் கல்லும், கள்ளிச் செடிகளும் நட்டு நிலம் கொடை பெற்றவர்களுக்கு அளித்தனர். நிலக் கொடையைப் பெற்றோருக்கு வரி விலக்குகள், நீர் வசதிகள், சர்வபரிகாரம் முதலியவற்றினை நாட்டார் அமைத்துக் கொடுத்தனர். இவர்கள் கோட்ட அளவில் காணப்படும் எதேச்சாதிகார போக்கினை தடுக்கும் சக்தி வாய்ந்தவர் என ஐயன்லால் கூறுகின்றார்.[162]

ஊரார்

தமிழகத்தில் தன்னாட்சி உரிமைகள் கொண்ட தனியரசு நிலையங்கள் செயல்பட்டன. அவைகளே ஊர்ச்சபைகள் ஆகும். சிற்றூர்களின் அலுவல்கள் அவ்வூரின் அவையினரால் செய்து முடிக்கப்பட்டன. ஊர் அவையினர் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். ஊராக இருந்த உரோம் என்ற குறிப்பால் இவர்களைப் பற்றியறிய முடிகின்றது. இவர்கள் பொது இடங்களில் கூடி விதிகளுக்கு

உட்படாமல் சுதந்தரமாக காலவரையின்றிக் காரிய மாற்றினர்என நீலகண்ட சாத்திரி கூறுகின்றார்.[163] இது அரசர்க்கு அடங்கிய அமைப்பாக இருந்த போதிலும் தன்னிச்சையாக இயங்கிற்று. பீகரச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள கிராமித்ரிகள் என்பார் ஊரராகவே இருக்கலாம் என அறிய முடிகிறது. இவ்வூரார் உழவு, கோயிற் பணி, அறங்கூறல் சிற்றூர் ஆட்சி, பாசன நீர், நிலைகள் ஆகியவற்றைக் கவனித்தல் முதலிய பல பணிகளைச் செய்தனர். இவர்கள் தங்களைச் சிறுசிறு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு பல துறைகளிலும் நுழைந்து ஊராட்சியினைத் திறம்படச் செய்தனர்[164] என்று கோபாலன் கூறுகின்றார். திருவெண்ணநல்லூரிலும், சிதம்பரத் திலும் ஊரவைகள் இருந்ததாகப் பெரிய புராணம் கூறுகின்றது. இவ்வவையினர் தமக்கு அளிக்கப்பட்ட பணிகளிலிருந்து தவறினால் தர்மாசனத்துக்குத் தண்டத் தொகை செலுத்துவதாக உறுதி அளித்தமையால்[165] தம்மை அறநெறிகளுக்குட்படுத்திப் பணிபுரிந்தமையை அறிய முடிகின்றது.

ஊரார் செயல்பட்ட அவையானது ஊர் அவை எனப்பட்டது. அது சபை என்றும் மகாசபை என்றும் அழைக்கப்பட்டது. ஊரில் ஆண்மக்கள் அனைவரும் உறுப்பினர்களாக இருந்தனர் என எஸ்.கே. அயங்கார்[166] கூறுகிறார்.

அரசர்கள் இந்த அவையினரைக் கலந்த பின்னரே நிலக் கொடையினை வழங்கினர். ஊருக்கப் பொதுவாக அமைந்த கிணறுகள், குளங்கள், ஓடைகள், நெற்கதிர் அடிக்கும் இடங்கள் ஆகியவை அவையினரால் பராமரிக்கப்பட்டன. இந்தச் சிற்றூர் அவையில் நிலத்தொடர்பான வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இவர்களின் தீர்ப்புக்கு ஊதியமாக நில உடமைக்காரரிடம் பொன்னைப் பெற்றனர். பொன்னைப் பெறாத நிலையில் பொன்னின் மதிப்புள்ள நிலத்தினை விற்று

எடுத்துக் கொண்டனர். அவை உறுப்பினர்கள் தவறான நடவடிக்கைகள் மேற்கொண்டால் சொத்துகள் பறிமுதல் செய்ய அவையினருக்கு அதிகாரம் இருந்தது.[167]

புனிதப்பயணிகளின் நலன்கள் பாதுகாக்கப்பட்டன. அருளாகூர் அவையினர் பொன்னைப் பெற்று அதனின்று கிடைக்கும் வட்டித் தொகையைப் புனிதப்பயணிகளுக்கு உணவளித்தனர்.[168] தானம் கொடுத்தோரிடம் அவையினர் உடன்பாடுகள் செய்து கொண்டனர். அவ்வுடன்பாட்டு விதிகளைச் செயல்படுத்த வாரியம் ஒன்றை ஏற்படுத்தினர்.[169]

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் டயினூர் சபையினர் ஊரில் உள்ள குளத்தினைத் தூர் எடுக்க உடன்பட்டு 6400 காசு நெல்லை நாகன் என்ற வணிகரிடம் தானமாகப் பெற்று ஏரிப்பணிகள் செய்தனர்.[170] குறிப்பிட்ட பணிகளுக்கான வாரியம் என்ற தனி உறுப்புகளை ஏற்படுத்திப் பொதுப்பணி செய்தனர். பொதுப்பணிகளில் நாட்டமுடையவராகத் திகழ்ந்தாலும் இயற்கையான சிறப்புக் குணம் இருக்கப் பெற்றவராகவும் இருப்பதால் இவர்களுக்குப் பெருமக்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது. திருத்தணியில் காணும் அபராசிதவர்மனின் கல்வெட்டால் அவையினர் தாம் பெற்ற தானங்களை எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் மேற்பார்வை செய்தனர் என்பதனை உணரலாம்.[171] அவையினர் ஒரு நிலையான சேமிப்பு வங்கியாகச் செயல்பட்டதை அறியலாம்.[172]

வாரியப் பெருமக்கள்

அவையானது பல்வேறு பணிகளைச் செயற்படுத்த வாரியங்களை நியமித்தது. குறிப்பிட்ட ஒரு பணிக்காகப் பங்கு பெற்ற குழுவினை வாரியம் என்றனர். நீர்ப்பாசன ஏரிகளைச் செப்பனிட ஏரி வாரியப் பெருமக்களும் கோட்டங்களைப் பராமரிக்கக் கோட்ட வாரியப் பெருமக்களுமிருந்தனர். ஏரிவாரியப் பெருமக்களிடமிருந்து சம்வத்சர வாரியத்தினர் பணிகளைப் பெற்றனர் என உக்கலில்

காணப்படும் கல்வெட்டொன்று கூறுகின்றது.[173] சம்வத்சர வாரியமானது ஆண்டுக்கு ஒருமுறை ஏற்படுத்தப்படும் அமைப்பாகும். நியாயம் வழங்கும் பணியானது நியாய வாரியப் பெருமக்களிடம் விடப்பட்டது. மற்றும் பொன் வாரியம், பஞ்சவார வாரியம் ஆகியன அமைத்து நற்பணிகள் ஆற்றினர். நாணயங்களைச் செம்மைப்படுத்துவது பொன் வாரியத்தின் கடமையாகும்.

கணப் பெருமக்கள்

கணம் என்பது பொது நோக்குடன் பலர் நடத்திய கூட்டுத் தொகுதியென ரைஸ்டேவிட் கூறுகின்றார்.[174] பல்லவர் கல்வெட்டுகளில் காணும் கணம் என்பது ஓர் ஆளும் குழுவினரைக் குறிப்பதாக உள்ளது. கணப் பெருமக்கள் ஆளுங்கணத்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் கோயிலை நிருவகிக்கும் பொறுப்பினை மேற்கொண்டனர். எனவே, இதனைச் சமயச் சார்புடைய நிறுவனமென்பர்.[175] இவர்கள் இன்றைய அறநிலைய ஆணையர்களைப் போன்று பணியாற்றினர் என்று இராசமாணிக்கனார் கூறுகின்றார்.[176] கல்வி கற்ற பிராமணர்களும்[177] வேறு குலத்தைச் சேர்ந்த சிலரும்[178] ஆளுங்கணத்தாராக விளங்கியமை அறிய முடிகின்றது. ஆலயங்களில் நிலங்களைப் பயிர் செய்தும் அரசினரால் அனுமதிக்கப்பட்ட வரிகளை வசூலித்தும் சில வரிகளைத் தள்ளுபடி செய்தும் ஆலயங்களுக்கு வரும் பணத் தொகையினைச் சேர்த்து வைத்தும் பணியாற்றினர். ஆலய நிருவாகத்தையும் கவனித்தனர்.[179]

அமரித கணத்தார்

சில இடங்களில் மட்டும் குறிப்பிட்ட பணிக்காக இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கோயில் பணிக்காகப் பொன்னைப் பெற்றனர்.[180] இன்றைய வங்கிகள் போன்று பொன்னைப் பாதுகாத்து அதனைக் குறித்த

வட்டிக்குக் கடன் தருவர். கோயில் தொடர்புள்ள பிற வேலைகள் எல்லாவற்றையும் கவனிப்பர். இவர்கள் ஊரவையாருக்குக் கோயில் தொடர்பான செய்திகளில் பொறுப்புள்ளவர் ஆவர்.

நிலக் கொடைகள்

வைதீகத் தனிமையில் சிறந்த நற்பார்ப்பாரைப் பாராட்டிச் சிறப்புகள் பல செய்து நிலக் கொடையாக வழங்கப்பட்டது.[181] அவைகள் பிரம்மதேயங்கள் என்று கூறப்பட்டுள்ளன. கல்வியில் கரைகண்டவர்களுக்கும் நன்னடத்தைப் புகழ் ஆகியன உடையவர்களுக்கும் வேதம் ஓதுவித்தல், விளக்கம் தருதல் ஆகியவற்றில் ஊன்றிய மனமுள்ளவர்களுக்கும் பிரம்மதேயங்கள் வழங்கப்பட்டன.[182] அந்நிலங்கள் வழங்கப்பட்ட பிராமணர்களுக்குச் சகல விதமான பரிகாரங்களும் அளிக்கப்பட்டன. பிரம்ம தேயங்களில் வரிகள் நீக்கப்பட்டும் உப்பு, சர்க்கரை போன்ற பொருள்களின் உற்பத்திக்கான தடையினை நீக்கியும் பிராமணர்களுக்குக் கட்டாய வேலையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டும் உழும் காளைமாடுகளை அரசு அதிகாரிகள் பெறாமல் இருக்கவும் பால், காய்கறிகள், கீரை, பூக்கள் முதலியன அதிகாரிகளுக்கு அளிக்கப்பெறாமல் இருக்கவும் பிராமணர்களுக்குப் பதினெட்டு வகையான விலக்குகள் அளிக்கப்பட்டன.[183] இதுபோன்று ஆலயங்களுக்கு விலக்குகள் அளிக்கப்பட்டு தேவதானம், பள்ளிச்சந்தம் என்ற பெயர்களால் கொடுக்கப்பட்டன. தேவதானம் கோயில்களில் நறும்பூச்சாந்து, குங்கிலியம் ஆராதிக்கவும் திருக்கோயில் பணிகள் செய்ய மாணிக்கத்தாரும் அடிகள் மாரும் பணி செய்கின்ற மக்களுக்கும் வருவாய்க்காக நிலம் தேவதானம் அளிக்கப்பட்டது.[184] பள்ளிச்சந்தம் சமண பௌத்தக் கோயில்களுக்கு அளிக்கப்பட்டன.

பிரம்மதேய கிராமங்கள் அனைத்திலும் பிராமணர்களின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.[185] அவ்வூரினை ஆளும்

பொறுப்பினைப் பிராமணர்களே ஏற்றனர். அவர்களுக்குச் சுட்ட செங்கல்லால் ஆன பல அடுக்கு மாளிகைகள் அமைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.[186] பிராமணர்கள் சர்வ பரிகாரங்களுடன் அளிக்கப்பட்ட நிலங்களைப் பிறருக்குத் தானமாகவோ அல்லது விற்கவோ உரிமை ஏதும் இல்லாமலிருந்தனர்.[187] இவ்வுரிமையானது நில உடமையாளர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டதென அறியலாம். தேவதானம் பெற்ற கோயில்கள் சமுதாயத்தில் பலருக்கு வாழ்வளித்தன. இதனால் அவர்களின் பொருளாதாரக் கலாசார சமய வாழ்வில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தியது. பிரம்மதேயங்கள் ஆரியச் சமய நெறிகளை வளர்த்தது.[188] பறை கொட்டுவோருக்கு நிலங்கள் மானியமாக விடப்பட்டன. இதன் பயனைப் பறை அடிப்போர் நுகர்ந்தனர்.[189]

நில அளவை

நிலங்கள் நன்கு அளக்கப்பட்டன. கல்லும் கள்ளிச் செடிகளும் எல்லைகளாக அமைத்துப் பதிவு செய்யும் முறையும் இருந்தது. வரியுள்ள நிலம், வரியற்ற நிலம் எனப் பிரித்து ஊர் அதிகாரிகளால் பதிவுசெய்து பாதுகாக்கப் பட்டன. பத்திரம் எழுதும் முறையும் இருந்தது.[190] இக்கால நடைமுறையைப் போல் நன்செய் புன்செய் நிலங்கள், வீட்டுத் தோட்டங்கள், சுடுகாடுகள், இடுகாடுகள் கோயில் நிலங்கள் கடைவீதிகள் முதலியன நன்கு அளக்கப்பட்டு எல்லைகள் குறிக்கப் பட்டிருந்தன. குளங்கள் கோயில்கள், ஓடைகள் முதலியன மக்களுக்குப் பொதுவாக்கப்பட்டன. மிகப் பெரிய நிலப் பகுதியினை எளிதாகப் பிரித்து இயற்கையாக அமைந்துள்ள ஆறுகள், மலைகள், பாறைகள், கால்வாய்கள், பெரியமரங்கள் ஆகியவற்றினை எல்லைகளாகவும் கொண்டிருந்தனர்.[191]

அளவை முறைகள்

நிலமானது கலப்பை, உழவு, நிபர்த்தனம், பட்டிகா,

பாடகம் போன்ற அளவுகளால் அளக்கப்பட்டன. கலப்பை என்பது எருதுகள் பூட்டிய கலப்பை ஒன்று ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உழுது முடிக்கும் நிலத்தினுள் அளவைக் குறிக்கும். உழவு, கலப்பை ஆகிய இரண்டும் ஒரே அளவாகக் கொள்ளலாம். "நிவர்த்தனம்" என்பது திரும்புதல் என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அது ஒருவன் குறிப்பிட்ட இடத்தினை குறிப்பிட்ட நேரத்திற்குள் சுற்றிவந்த நிலப்பரப்பினை நிவர்த்தனம் எனக் கொண்டனர். இவ்வளவுகள் ஆளுக்கு ஆள் மாறுபாடு உடையதால் இருபது குச்சி சதுரங்கள் அல்லது நாற்பதாயிரம் சதுரங்கள் கொண்ட பரப்பினை நிவர்த்தனமாகக் கொண்டனர். 'பட்டிகா', 'நிவர்த்தனம்' ஆகியன ஒரே அளவினைக் குறிக்கப் பயன்படுத்தியனவாகும்.[192] இது இருபத்தைந்து கோல்களென்றும் நூறு அல்லது நூற்று இருபத்தைந்து முழங்களின் நீள அளவினைக் குறிப்பதாகக் குறிப்புள்ளது. 'ஹலசத சகஸ்ர' என்பது நூறாயிரம் எருதுகளைக் கொண்டு உழும் ஒரு பெரிய நிலப் பரப்பினைக் குறிப்பதாகக் கூறுவர்.[193] பாடகம்[194] என்பது சிற்றூரைக் குறிப்பதென்றும் உள்ளது. அது இருநூற்றி நாற்பது குழிகள் கொண்ட நிலப்பரப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.[195] பல செப்பேடுகளில் அது விளை நிலமாகவேக் கூறப்பட்டுள்ளது. மா,[196] குழி போன்ற அளவைகள் பொதுவாக அறியப்பட்டன. குழி என்பது 81 சதுர அடியினைக் கொண்டதாகும்.[197] நாலுசாண்கோல்,[198] பன்னிருசாண்கோல்,[199] பதினாறு சாண் கோல்[200] ஆகியன திட்ட அளவுக் கருவிகளாக இருந்தன.

முகத்தல் அளவுகள்

மிகச்சிறிய அளவாக எளிதில் கையாளும் முறையில் 'பிடி' என்ற கைப்பிடி அளவைக் குறிப்பதாக இருந்தது.[201] இவ்வளவால் நெய்யும் எண்ணெயும் அளந்தனர். நெய், வெண்ணெய், எண்ணெய், பால், தயிர் ஆகியன அளக்கச் சோடு, ஆழாக்கு, உழக்கு, உறி, நாழி போன்ற அளவுகள் இருந்தன. சோடு என்ற அளவை ஆழாக்கில் ஐந்தில் ஒரு

பகுதியாகவும், உறி என்பது அரைப்படியாகவும் நாழியும், படியும் ஓர் அளவாகவும் இருந்தன என்பதை அறியலாம்.[202] உழக்கு நான்கில் ஓர் பங்காகவும், ஆழாக்கு எட்டில் ஓர் பகுதியாகவும் இருந்தது.[203]

தானியங்கள் நாழி,[204] தொன்றி மரக்கால்,[205] குறுணி பதக்கு,[206] சாடி,[207] கலம்[208] என்பனவற்றால் அளக்கப் பட்டது. பொற்கால் என்ற அளவானது அரசினரின் அளவாக இருந்து வந்தது.[209] உழக்கு என்ற அளவு அரசினரின் முத்திரை பதித்து விடேல் விடுகு உழக்கு[210] எனப்பட்டது. இதைப் போன்று உறியும் பிருதிமாணிக்கம் உறி[211] என்று நிருபதுங்கன் மனைவியின் பெயரால் வழங்கப்பட்டது. இவைகளால் எண்ணெய் போன்ற பொருள்கள் அளக்கப்பட்டன.

நிறுத்தல் அளவுகள்

கழஞ்சு, மஞ்சாடி என்ற அளவுகள் தங்கத்தை நிறுக்கும் நிறைகளைக் குறிக்கும். கழஞ்சு என்பது ஒரு விதையாகும். இது நாற்பத்தைந்து முதல் ஐம்பது தானியங்களின் நிறையினைக் கொண்டது எனவும் மஞ்சாடி கழஞ்சு இருபதில் ஒரு பங்கு எனவும் மீனாட்சி கூறுகின்றார்.[212] மஞ்சாடி என்பது மிகச் சிறிய அளவாக உள்ளது. பத்து காணம் கொண்டது ஒரு கழஞ்சு எனவும் ஒரு காணம் ஒரு பொன் எடையைக் கொண்டது என்றும் இராசமாணிக்கனார் கூறுகின்றார்.[213] பத்து பொன் கொண்டது ஒரு காசு என இரண்டாம் வரகுணபாண்டியன் திருச்செந்தூர் கல்வெட்டுக் கூறுகின்றது. எனவே பொன், காணம் என்பதனை ஒரே அளவாகக் கொள்ளலாம். கழஞ்சு பல பட்டயங்களில் காணப்படுவதால் அதனையே அரசினரின் அளவாகக் கொள்ளலாம்.[214] கழஞ்சியின் பன்னிரெண்டில் ஒரு பகுதியாக மஞ்சாடியைக் கொள்ளலாம்.

நாணயங்கள்

ஈயம் இலகுவான தன்மையுள்ளதால் முற்காலப் பல்லவர்கள் ஈயநாணயங்களை வெளியிட்டனர். அரசுச் சின்னமான காளை உருவம் அதில் பொறிக்கப்பட்டது. அக்காளை உருவமானது பள்ளன் கோயில் செப்பேடுகளில் காணும் காளையை ஒத்துள்ளது. அவற்றில் காணப்படும் பிற குறிப்புகள் யாவும் விளக்கமாக இல்லை. சதவாகனர்கள் காலத்தில் கிடைத்த செப்பு நாணயங்களுக்கு மேல் ஈய நாணயங்கள் கிடைத்துள்ளதாலும் அவைகள் காஞ்சி முதலான பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ள பல்லவர் கால நாணயங்கள் என்றும் கொள்கின்றனர்.[215]

பல்லவர்ப் பெருவேந்தர் காலத்தில் காசுகள் பொன், வெள்ளி, செம்பு முதலான உலோகங்களால் வெளியிடப் பட்டன. சென்னை அருங்காட்சியகத்தில் காணப்பட்ட ஆறு பொற்காசுகள் மகேந்திரன் காலத்தவையென ஆராய்ந்து கூறுகின்றனர்.[216] அக்காசுகளின் மேல் காணப்படும் கதாசித்ரா எனனும் சொல்லை"கடாத்""சித்ரா" என்று பிரிந்து கடாக் என்பதனைக் காடவ என்றும் சித்ரா என்பதனைச் சித்திரகாரப்புலி என்றும் கொண்டு காடவ அரசனாக விளங்கிய மகேந்திரவர்மனேயென்று கூறுகின்றார்.[217] சில நாணயங்களில் காணப்படும் காளை வடிவமும் சிரீபரன், சிரீநிதி என்னும் விருதுப் பெயர்களும் இராசசிம்மனைக் குறிப்பதால் நாணயங்கள் அவன் காலத்து வெளியிடப்பட்டவையெனலாம். சில நாணயங்களில் சுவஸ்திகா என்னும் சின்னம் ஒருபுறமும் மானபரலி என்ற சொல் மறுபுறமும் உள்ளன. தேசிகாச்சாரியில்நாணயத் தொகுதியில் நந்தி உருவமும், மானபரன் என்ற சொல் இருபுறத்திலும் மறுபுறத்தில் ஒலிக்கதிர்கள் கொண்ட வட்டமும், சங்கும் பொறித்துள்ளனர்.[218] மானபரன் என்ற விருதுப் பெயர் யாருக்கும் காணப்படாமையால் அதியமான்[219] என்று கூறப்படும் இராசசிம்மன் காலத்தில் வெளியிட்டதெனக் கருதலாம். சங்கு தெளிவாக இடம் பெற்றுள்ளதால் வைணவச் சின்னத்தையும் காளையானது சைவ சின்னத்தையும் தாங்கியுள்ளன. வேள்விக்குரிய விளக்கு,

பிறை பௌத்தர்களின் ஆலயம், வெண்கொற்றக்குடை குதிரை, சிங்கம், ஆமை, நண்டு, கப்பல், மீன் ஆகிய சின்னங்கள் தாங்கிய நாணயங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. நண்டு, ஆமை, கப்பல் முதலியன உருவங்கள் பல்லவர்களது கடல் வாணிகச் சிறப்பினைக் குறிப்பதாக உள்ளன. மீன் சினனம்[220] அக்காலத்தில் பாண்டியர் மீது செலுத்திய மேலாண்மையைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இராசசிம்மன் காலத்தில் கோச்சடையன் இரணதீரன் என்பான் பாண்டிய அரசனாக இருந்தான். இவன் பெரியபுராணம் கூறும் நின்ற சீர் நெடுமாறனுக்கும் மங்கையர்க்கரசிக்கும் மகனாகப் பிறந்தவன். இவன் மகன் இராசசிம்மன் என்றே பெயர் பெற்றிருந்தான். பாண்டியர் பல்லவர் பெயர் பெற்றதும் மீன் சிங்கம் பல்லவர் நாணயங்களில் இடம் பெற்றதும் அக்காலத்தில் பல்லவரும் பாண்டியரும் இணைந்து செயல்பட்டமை அறிய முடிகின்றது. சோச்சடையன் இரணதீரன் இராசசிம்ம பல்லவனின் மகளை மணந்து பிறந்த குழந்தைக்கு இராசசிம்மன் என்று பெயரிட்டான். சோச்சடையன் செய்த பணியைக் குலப் பெருமைக்குரிய செயலாகவும் பல்லவர்களின் மேலாண்மையினால் தங்கள் நாணயங்களில் பாண்டியரின் மீன் சின்னத்தை வெளியிட்டமையும் அறிய முடிகின்றது.

பொன் நாணயங்கள்

பொன் நாணயங்களின் குறிப்புகள் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. அவைகள் காணம், பழங்காசு துளைப் பொன், விடேல் விடுகுப் பொன் ஆகிய பெயர்களால் குறிப்பிட்டுள்ளனர். பழங்காசு என்பது தூய்மையான பொன்னால் செய்யப்பட்டதென்பதை அறிய முடிகின்றது.[221] பிற்காலக் காசுகள் பழங்காசின் தன்மைக்கு முத்திரையிடப் பட்டது.[222] துளைப் பொன்னை அரசே தூய்மையினை நன்கு பரிசோதித்துத் துளையிட்டு நாணயமாக வெளியிட்டது என்பதை விடேல் விடுகுத் துளையிட்ட செம்பொன் என்ற குறிப்பால்[223] அறியலாம். செல்லத்தகாத நாணயத்தைக் 'கறை

கொள் காசு' என அழைத்தனர்.[224] இதனையே சம்பந்தரின் தேவாரப்பாடல் ஒன்று "வாசி இன்றி" எனக் குறிப்பிட்டுள்ளது. 'வாசி இன்றி என்பது வட்டமில்லாமல் செல்லாதென ஆயிற்று எனக் கூறுகின்றார்.

வருவாய் வரிமுறைகள்

அரசினர் தனது செப்பேடுகளில் வருவாய் அற்ற இறையிலி நிலங்களைப் பற்றிய குறிப்புகளை வெளியிட்டுள்ளனர். இவற்றால் அரசினர் பெற்ற வரிகள் யாவையென்பதை அறியமுடிகின்றன. வரி, ஆயம் காணம், தண்டல், இறை, கடமை, விலை, நாழி போன்ற பல சொற்கள் வரியினைக் குறிப்பதாக உள்ளன.[225] வரியைக் கடன்என்ற சொல்லால் அழைக்கப்பட்டமையால் மக்கள் வரி செலுத்துவதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று கருதினர் என்றே தோன்றுகின்றது.

நிலவருவாய்

வரி செலுத்தும் நில உடமையாளர்களின் நிலங்கள்'பயல்'நிலமெனப்பட்டது. அவைகளில் இருந்து அரசினர் அறிவொரு பங்கினை இறையாகப் பெற்றனர்.[226] அது பணமாகவும், பொருளாகவும் பெறப்பட்டன எனலாம். அதனை புரவுவரி என்றனர்.[227] தினைக்களத்தார் என்னும் அலுவலர் வரியினைப் பெற்று அரசுக்குச் செலுத்தினர். அரசருக்குரிய பயிரிடும் நிலங்கள் அடைநிலம் எனப்பட்டது. இது குடியானவர்களுக்குப் பயிரிடும் உரிமைமட்டும் வழங்கி விளைச்சலைப் பெற்றனர். அவ்வுரிமையானது அடிக்கடி மாற்றப்பட்டு வந்தது.[228] தென்னை, பனை, பாக்கு ஆகிய மரங்களுக்கு வரியிடப்பட்டது. வெட்டப்பட்ட மரங்களில் அடிப்பகுதியை அரசுக்கு அனுப்பப்பட்டது. கல்லாலமரம் பயிரிடுவோரும் செங்கொடி மருக்கொழுந்து முதலியன பயிரிடுவோரும் அரசுக்கு வரிசெலுத்த வேண்டியதாயிற்று.

மூலிகைச் செடிகளுக்கு வரிகள்

செங்கொடி என்னும் சித்ர மூலம் என்ற மூலிகைக் கொடிக்கு வரி விதிக்கப்பட்டது. அது பலவகை நோய் களையும் இரணங்களையும் ஆற்ற வல்லதாக அமைந்திருந்தது. செங்கொடிக்கானம் என்ற வரியினைச் செலுத்தி அக்கொடியினைப் பயிரிட்டனர் என இராசமாணிக்கம் கூறுகின்றார்.

நீலோற்பலம் எனப்படும் குவளைச் செடிகள் நடுவதற்கு அரசினர் குவளைக்காணம் என்ற வரியினைப் பெற்று உரிமை வழங்கினர். குவளை மலர்கள் கோயில் வழிபாட்டிற்கும் மருந்துகள் செய்வதற்கும் பயன்பட்டது. சீன நாட்டிலிருந்து பெறப்பட்ட மருக்கொழுந்து செடிகள் பயிரிடவும் வரி விதிக்கப்பட்டது.

ஏரிப்பட்டி

சிற்றூர்களில் உள்ள ஏரிகளைப் பழுதுபார்க்க நிரந்தர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக ஏரிப்பட்டி[229] என்னும் பெயரால் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தினை ஒதுக்குவர். அந்நில வருவாயினைக் கொண்டு ஏரிகள் பழுதுபார்க்கப்பட்டது. ஏரி வாரியத்தவருக்கும் இதற்கும் உரிய தொடர்பினை விளக்குவதாகக் குறிப்புகள் யாதும் கிடைத்தில.

நீர்வரி

பயிர்த்தொழிலுக்கான நீர்ஏந்துகள் அரசால் செய்யப்பட்டிருந்தன. அந்நீர் ஏந்துகள் ஓர் குறிப்பிட்ட அளவு நீரினைப் பாசனத்திற்கு வழங்கிற்று. மேலும், நீர் பெற விரும்பியவர்கள் நேர்வயம்[230] என்ற வரி செலுத்தி நீரைப் பெற்றனர். கிணறு தோண்ட விரும்புவோர்கள் 'உல்லியக்கூலி'[231] என்னும் தொகையினைச் செலுத்திய பின்னர் அவர்களுக்கு அனுமதி வழங்கினர்.

நெல்வரி

விற்கும் தானியங்களுக்கு வரி விதிக்கப்பட்டது. ஆறு குருவி அல்லது நாற்பத்தெட்டு படி அளவு நெல் விற்றபோது ஒரு படி நெல் அரசனுக்கு இறையாகச் செலுத்தப்பட்டது. இதுவே வட்டி நாழி எனப்பட்டது.[232] வட்டி என்ற கூடையானது நாற்பத்தெட்டு படியினைக் குறிக்கும் என எஸ்.கே. அய்யங்கார் கூறுகின்றார். புகாநாழி என்ற வரியானது வேலூர்ப்பாளையம் செப்பேட்டில் புகாரி என்று குறிக்கப்பட்டுள்ளது.[233] இதனைப் புதா + நாழி என இரண்டாகப் பிரித்து புதா என்பதை நான்கு நாழியாகக் கொண்டு புதிதாக விளைவித்த பொருள்கள் விற்கப் படும்போது நான்கு நாழிக்கு ஒரு நாழிப் பொருளை இறையாக அரசுக்குச் செலுத்தினர் என்றும் கூறியுள்ளார்.[234]

ஊடு போக்கு

பட்டத்தூள் மங்கலம் வேலூர்ப் பாளையம் செப்பேடுகளிலும் நிருபதுங்கவர்மனின் கிட்ரூர் செப்பேடு களிலும் 'ஊடுபோக்கு' என்னும் வரி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் ஹூல்சு போன்ற அறிஞர்கள் இது குறித்த விளக்கம் ஏதும் கொடுக்கவில்லை. இவ்வரியினை ஆராய்ந்த மீனாட்சி அம்மையார் இது தானியத்தின் மீது விதிக்கப்பட்ட மற்றோர் வரியென்று கூறுகின்றார். மேலும் இத்தொடரின் விளக்கமாக மற்றோர்பொருளைத் தருகின்றார் டி.வி. மகாலிங்கம். அது மக்களிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் முயற்சிக்காகப் பெற்ற தொகையென்கின்றார்.[235] பழங்காலக் கல்வெட்டுகளில் "வழி ஆயம்"[236] வழி அடைக்கிடும் பணம்[237] வழி நடைக்காணிக்கை[238] எனப் பல்வேறு பெயர்களின் வரிகள் வகுக்கப்பட்டுள்ளதைக் காணும் போது ஊடுபோக்கு என்னும் தொடரானது ஓர் இடத்தினைக் கடந்துசெல்லக் கொடுக்கப் பட்ட அனுமதித் தொகையென்பதே பொருத்தமாக உள்ளது.

தொழில்வரிகள்

உப்புவரி

முற்காலப் பல்லவர்கள் காலத்தில் வெளியிடப்பட்டச் செப்பேடுகளில் அலோலக்குளச் சோபம் என்ற உரிமை காணப்படுகின்றது. ஹீரஹதஹள்ளிச் செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ள அச்சொல்லுக்குச் பியூஸர் "உப்பால் ஏற்படும் தொல்லைகள் நீக்கப்பட்டு" என்று விளக்கம் தருகின்றார். மேலும் அவர் உப்பு தயாரிப்பதை அரசினர் மேற்கொண்டதாகக் கூறுகின்றார். பண்டை நாளில் அரசின் அனுமதி பெற்றே உப்பு தயாரித்தனர் என வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதரும் கூறுகின்றார்.[239] சிவகந்தவரம்னின் செப்பேடுகளில் அலோலகுலச்சோப[240] என்று குறிக்கப் பட்டுள்ளது. இவ்வடமொழிச் சொல்லானது பிற்காலப் பல்லவர் செப்பேடுகளில் தமிழ்ப் பகுதியில் உப்புக் கோசெய்கை எனக் காணப்படுகின்றது. எனவே, இதனால் அரசினர் உப்பு தயாரித்து வழங்கினர் என்று கருதலாம். அதனை மொழி பெயர்த்த கிருட்டிணசாத்திரி என்பார் உப்புகோ செய்கை எனப் பிரித்து உப்பு தயாரிப்போர் அரசினருக்குச் செலுத்தும் உரிமைத் தொகையென்று கூறுகின்றார். எனினும் அரசினர் உப்பு தயாரித்தனர் என்பதே பொருத்தமாக உள்ளது. ஹீரஹதஹள்ளிச் செப்பேட்டில் அரசினர் சர்க்கரையும் தயாரித்தனர் என்று குறிக்கப்பட்டுள்ளது.[241] எனவே உப்பும், சர்க்கரையும் தயாரிக்கும் உரிமை அரசுக்கே உண்டெனலாம்.

அபரம்பரபலிவதம்

அபரம்பரபலிவதம் என்ற சொல் மயிதபோலு செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. ஹீரஹதஹள்ளிச் செப் பேட்டில் அபரம்பரபலிவாதககனம் என்று கூறப்பட்டுள்ளது. பொதி சுமக்கும் மாற்றுக் காளைகளைக் கைப்பற்றாமை என்பதே இதன் பொருளென செப்பேட்டை மொழிபெயர்த்த தி. நா. சுப்பிரமணியம் கூறுகின்றார்.[242] இதே பொருளை

ஹூல்சு என்பாரும் அளித்து அதன் அடிக்குறிப்பாக அரசு அதிகாரிகளுக்குப் பயண வண்டிகளை இழுத்துச் செல்ல காளைகளை அளித்து வந்தனர் என்று குறித்துள்ளார்.[243] வேலூர்ப்பாளையம் செப்பேட்டில் 'நல்லெருது' என்று காணும் தொடரால் நல்ல பொதி சுமக்கும் எருதுகள் அரசின் அதிகாரிகளுக்குப் பொது மக்களால் வழங்கப்பட்டது என்பதனை அறியலாம்.

பட்டினச்சேரி

மீன் பிடிக்கும் தொழிலுக்கு வரி விதிக்கப்பட்டது. மீன் பிடிப்போர் பட்டினச்சேரி[244] என்னும் வரியினைச் செலுத்தினர். இது வேலூர்ப்பாளையச் செப்பேட்டில் மட்டும் கூறப்பட்டுள்ளது அதில் குறிப்பிடப்பட்டுள்ள எருக்காட்டுப் பள்ளி எனும் ஊர் எண்ணூருக்கு வடக்கில் 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. எனவே அவ்வூரில் வாழும் மீனவர்களைக் குறிப்பதாக அமைந்துள்ளதால் மீனவர்கள் அனைவரும் அரசுக்குச் செலுத்திய வரியெனக் கொள்ளலாம். இச்செப்பேட்டால் மீனவர்கள் செலுத்திய வரியைக் கோயிலுக்குச் செலுத்த வேண்டும் என்பதையும் அறிகிறோம்.

ஈழப்பூட்சி

பிற்காலப் பல்லவர் செப்பேடுகளில் ஈழப்பூட்சி காணப்படுகின்றன.[245] ஈழம் என்பது ஈழவர் குலத்தினையும் பூட்சி என்பது வரியினையும் குறிப்பதாக அமைந்துள்ளது. கள் இறக்குவோரான ஈழவர்கள் கள் இறக்குவதற்காக அரசினருக்குச் செலுத்திய வரியே ஈழப் பூட்சியாகும்.

இடைப்பூட்சி

ஈழப்பூட்சி என்ற சொல் வரும் இடங்களில் எல்லாம் இடைப்பூட்சியும் சுட்டப்பட்டுள்ளது. இது கால்நடை வளர்ப்போரிடம் இருந்து அரசினர் பெற்ற வரியாகும். எனவே, பால் மற்றும் பால்பொருள்களின் உற்பத்திக்கேற்ப இடைப்பூட்சிதண்டல் செய்யப்பட்டதெனலாம். சோழர் கல்வெட்டுகளில் இது இடைப்பாட்டம் எனக் குறிக்கப் பட்டுள்ளது.

குசக் காணம்

இதனைக் குயவன் + காணம் என்று பகுத்துக் குயவர்களிடம் இருந்து பெறப்பட்டதெனக் கொள்ளலாம். இதனைத் திரிகைக்கும் தொழிலுக்கும் செலுத்திய வரியாகக் கொள்ளலாம்.[246] அவர்களின் வருவாயில் வரியானது ஒரு பகுதியாக அமைந்திருந்ததெனக் கல்வெட்டுத் தொகுதி கூறுகின்றது.[247]

தட்டுக்காயம்

தண்டந்தோட்டம் செப்பேட்டில் தட்டுக்காயம் என்றும் வேலூர்ப்பாளையச் செப்பேட்டில் 'தட்டுக்கயம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. 'தட்டுக்காயம்' என்ற சொல்லே பொருத்தமாக உள்ளது. இது தட்டார் பாட்டம் என்ற சொல்லோடு ஒப்புமையுடையதாக உள்ளது. எஸ்.கே. அய்யங்கார் தட்டுக்கு ஆயம் என்று பிரித்து, கொல்லர்கள் பயன்படுத்தும் சுத்தியலுக்கு வரி விதிக்கப்பட்டதே தட்டுக்காயம் என்று கூறுகின்றார்.[248] பல்லவர் செப்பேடு களில் தட்டன்பாட்டம் என்ற வரி காணப்படாமையால் தட்டுக்காயம் என்பதனைத் தட்டார் பாட்டம் என்று கொள்ளலாம். தட்டுக்காயம் என்றதால் தட்டார் செலுத்திய வரியேயாகும் என மீனாட்சி அம்மையார் கூறுகின்றார்.[249]

விஷக்காணம்

வியனம் + காணம் எனப் பிரித்து ஊர்த் தலைவனான வியனன் பணியாற்றுவதற்காக ஊர் மக்கள் அவனுக்கு ஊதியமாக ஒரு வரித்தொகையை அளித்தனர். அதனையே விஷக்காணம் என்பர்.[250] வியனன் குற்றமிழைப் போரிடமிருந்தும் சட்டத்தை மீறுவோரிடமிருந்தும் தண்டத் தொகையினைப் பெற்று அரசின் கருவூலத்திற்குச் செலுத்தி வந்தான்.[251]

பாறைக்காணம்

இச்சொல் பாறை மீது விதிக்கப்பட்ட வரியைக் குறிக்கின்றதென கிருட்டிணசாத்திரி கூறுகின்றார்.[252] பாறை மீது வரி விதித்ததின் காரணம் அறிய இயலவில்லை. எனவே பாறைக்காணம் என்பது துணி வெளுப்போர் பயன்படுத் தப்பட்ட பாறைக்கும் அவர்கள் உபயோகித்த நீருக்கும் கொடுக்கப்பட்ட தொகையாகக் கொள்ளலாம். சோழர்காலக் கல்வெட்டுகளில் காணப் பெறும் வண்ணார் பாறை என்ற வரியினைத் துணி வெளுப்போர் பயன்படுத்தும் பாறைக்கு விதிக்கப்பட்டதெனக் கே.வி.எஸ். அய்யர் கூறுகின்றார்.[253]

புட்டக விலை

புட்டக விலை என்பதனைத் துணி விலை என்று ஹூல்சு குறிப்பிட்டுள்ளார். கே.வி.எஸ்.அய்யர் என்பார் இதனைத் துணிகள் விற்போர் மேல் செலுத்தப்பட்ட வரி என்று கூறுகின்றார்.[254] மேற்கூறப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் புட்டகம் என்ற சொல்லைத் துணி என்ற பொருள் கொண்டதனால் ஏற்பட்டுள்ளது என்றும் புட்டகம் என்பது தற்காலிகமாகக் கூடாரம் அமைப்போரிடம் பெறப்பட்ட தொகை என்பதே பொருத்தமாக உள்ளது.

பட்டிகைக் காணம்

பட்டிகை என்பது தோணி என்ற பொருளில் உள்ளதால்[255] பட்டிகைக் காணம் என்பது படகுக்காரர் களிடம் அரசினர் பெற்ற வரித்தொகையெனலாம். ஆயினும், துணியில் ஒரு பங்கு என ஹூல்சு விளக்கமளித்துள்ளார். மனுவில் ஒடக் கூலியானது கொடுக்கப்பட்டுள்ளமை குறிக்கப்பட்டுள்ளது.[256] சோழர்கள் காலத்தில் ஒடக் கூலி[257] தண்டப்பட்டதால் பட்டிகைக் காணம் என்பது ஒடக்காரர்களிடம் பெறப்பட்ட வரித்தொகை என்பதை அறியலாம்.

தறிக்கூறை

வேலூர்ப்பாளையம் செப்பேட்டில் தறிக்கூறை யென்றும் தண்டத் தோட்டம் செப்பேட்டில் தறியென்றும் குறிப்புள்ளது. அக்காலத்தில் நெசவுத் தொழில் ஒரு முக்கியத் தொழிலாக இருந்து வந்தது. கூறையென்பது நெய்யப்பட்ட துணியாகும். தறிக்கூறையென்பது ஒவ்வொரு தறிக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள துணியை அரசினர் பெற்ற வரியாகும்.

செக்கு

இது எண்ணெய் எடுப்போரிடம் பெறப்பட்ட வரியாகும். செக்கு என்பதனை அனைத்துச் செப்பேடு களிலும் காணலாம். பிரம்மதேயமல்லாத இடங்களில் எண்ணெய் எடுப்போர் அரசினருக்கு வரியாகக் குறிப்பிட்ட அளவு எண்ணெய்ச் செலுத்தினர். அதனையே செக்கு என்ற வரியென மீனாட்சி கூறுகின்றார்.[258]

தரகு

இதனைத் தரகர் கூலியென்ற சொல்லால் அறியலாம். கிருட்டிணசாத்திரி தரகர் வரியென்று விளக்குகின்றார்.[259] எனவே, தரகு என்ற வரியானது தரகர்கள் மீது விதிக்கப் பட்டது என்றே கொள்ளுதல் பொருத்தமாக உள்ளது.

பாடாம் கழி

பாடாம் என்பதைத் துணியாகக் கொள்ளலாம். கழி என்பதனை நூற்கண்டாகக் கொள்ளலாம். துணி நெய்வதற்கான நூல் நூற்போரிடம் வரி பெறப்பட்டது. அதுவே பாடாம் கழி எனப்பட்டது.

பத்தூர் சாற்று

கசாக்குடிச் செப்பேடுகளில் காணும் பத்தூர் சாற்று என்னும் தொடரை மொழிபெயர்ப்புச் செய்யாமல் ஹூல்சு

விட்டு விட்டார். சாற்று வரி[260] என்பதும் பத்தூர் சாற்று என்பதும் பத்தூர் என்னும் ஊரில் உள்ள கள் இறக்கும் மரங்களுக்கு விதிக்கப்பட்ட வரியென்பதேயெனக் கொள்ளத் தோன்றுகின்றது. பத்தூர் என்பது சிறிய ஊராகவும் அங்கு கள் இறக்கும் மரங்கள் மிகுதியாக இருந்திருக்கலாம் என்றும் ஊகிக்கின்றார் மீனாட்சி.[261]

கத்திக் காணம்

கூரம் செப்பேட்டில் கத்திக் காணம் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இதனைக் கத்தி என்றும் காணம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். இது கத்தி போன்ற தற்காப்புக் கருவிகளுக்கு விதிக்கப்பட்ட வரியெனக் கூறுகின்றது. தற்காப்புக் கருவிகளுக்குப் பயன்படுத்துவோர் கத்திக் காணம் என்றதொரு வரியினை அரசுக்குச் செலுத்திக் கருவிகள் வைத்திருக்கும் உரிமைகள் பெற்றனர் என்பதனை அறியலாம். இந்நாளில் கைத்துப்பாக்கிகள் போன்ற தற்காப்புக் கருவிகள், உரிமங்கள் வழங்கி அளித்தல் போன்று அந்நாளில் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. கத்தியைத் தொழில் கருவியாகப் பயன்படுத்தும் நாவிதர் முதலானோரிடம் பெறப்பட்ட வரித் தொகையாகவும் கொள்ளலாம். இருப்பினும் கத்திகள் தயாரிப்போரிடம் இருந்து பெறப்பட்ட வரித் தொகையே பொருத்தமாக உள்ளதென மீனாட்சி அம்மையார் கூறுகின்றார். எனவே, இதனை இது கொல்லர் மீது விதிக்கப்பட்ட ஒரு வரியெனக் கொள்ளலாம்.

நெடும்பறை

கசாக்குடிச் செப்பேட்டில் காணும் நெடும்பறை என் பதனை கே.வி.எஸ். அய்யர் நெடும்பறையென்று திருத்திப் பெரிய பறையினை அடிப்போருக்கு விதிக்கப்பட்ட வரியென்று கூறுகின்றார். அது ஊர்களில் வாழும் பறையடிப்போரால் செலுத்தப்பட்ட வரித் தொகையாகக் கொள்ளலாம்.

நெய்விலை

இதனை நெய்யின் விலையென்ற பொருளிலேயே ஹூல்சு கொள்கின்றார். இதனை கே.வி.எஸ்.அய்யர் என்பார் நெய் விற்போர் அளிக்கும் வரித் தொகையென்று கூறுகின்றார். இதனால் நெய் விற்போர் அரசினருக்குச் செலுத்திய வரித் தொகையே நெய் விலையென்றும் அது நெய் விலையில் ஒரு பகுதியாகவும் இருந்திருக்கலாம் என அறிய முடிகின்றது.

எச்சோறு

இதனை எள்+சோறு என்று பிரித்துப் பொருள் கொண்டால் எள் என்பது ஒரு நாளையும் சோறு என்பது சோற்றையும் குறிப்பிடுவனவாக உள்ளன. அது நில வரியினைப் பெற வந்த அரசின் அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட தொகையாகக் கொள்ளலாம். நில உடமையாளர்கள் வரித் தண்டல் செய்யும் அதிகாரிகளுக்குச் செலுத்திய அன்றாடப் படித் தொகையே எச்சோறு எனப்பட்டது.

மன்று பாடு

மன்று என்ற சொல் நயன்மை வழங்கப்பட்ட இடத்தினைக் குறிக்கும். பாடு என்றது கிடைக்கும் வருவாயைக் குறிக்கும். இதனால் நீதி மன்றங்களில் கிடைக்கப் பெறும் தண்டத் தொகையே மன்று பாடு என்ற சொல்லால் வழங்கப்பட்டதெனலாம்.

திருமுகக் காணம்

திருமுகக் காணம் என்ற சொல் செப்பேடுகளில் காணப்படுகின்றது.[262] அரசனின் கடிதம் பெற்றவர் அரசுக்குச் செலுத்திய தொகையென்று கிருட்டிணசாமி அய்யங்கார் கூறுகின்றார். திருமுக ஓலையைக் கொண்டு வந்து

கொடுப்போர் அவ்வோலையைப்பெற உரிமையுடையோரிடம் வாங்கும் தொகையே திருமுகக்காணம் ஆகும்.[263]

நாட்டு வகை

வகை என்பது ஒரு பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டு வகையானது சிற்றூரின் வருவாயில் ஒரு பகுதியை நாடு என்னும் பிரிவுக்கு வழங்கப்பட்ட தொகையெனக் கொள்ளலாம். நாடு என்ற பெரும் பிரிவானது மேலாண்மை ஆதிக்கம் உள்ளதால் சிற்றூரின் வருவாயில் ஒரு பகுதியே நாட்டு வகை எனப்பட்டது.

பிற வரிகள்

ஏற்றகாணம் என்ற வரியினை நீர் இறைக்கப் பயன்படுத்தும் ஏற்றத்திற்காகக் கொடுத்தனர். பருப்பு வகையினை விற்போர் காணம் என்ற வரி கொடுத்தனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வாங்கப்பட்ட வரியானது பன்னிரண்டைக்கறை யெனப்பட்டது.[264] திருமண நிகழ்ச்சிகளுக்காகச் செலுத்தும் பணம் கலியாணக் காணம்[265] எனப்பட்டது. அதுவே கண்ணாலக்காணம்[266] என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இது இக்காலத்தில் பெரியோர்களால் மண நிகழச்சிக்காகக் காணிக்கை செலுத்தி ஆசி பெறுவது போல் அக்காலத்தில் அரசர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையினை வழங்கி ஆசி பெற்றனர் எனக் கோபிநாதராவ் கருதுகிறார். மேலும் சில வரிகளைக் குறிப்பிடும் சொற்கள் புரியாதவையாக உள்ளன. அவைகளாவன வீரதுக்க காணம், ஆத்துக்காணம், ஊராட்சி சாதிப் பொன், பரிக்காணம், உறிக்காணம், அரிகொழியும் புதக்குதிகை குற்றதுவையும் என்பவையாகும்.

சூதாட்ட விடுதிகள் அரசுக்கு வரி செலுத்தின. உலோக வேலை செய்வோர், தோல் பதனிடுவோர், ஒற்றர்கள், கழைக் கூத்தாடிகள் ஆசிவக சமயத்தினர் ஆகியோர் வரிகள் செலுத்தினர்.[267] சாதி மாறம் புரிவோர் வரி

செலுத்தினர். கிணறு தோண்டுவோர் ஒவ்வொரு கிணறு எடுப்பதற்காக வரி செலுத்தினர்.[268]

பாசன ஏந்துகள்

பல்லவ மன்னர்கள் காடுவெட்டிகள் என்றழைக்கப் பட்டனர். எனவே மக்களிடம் பெற்ற வரித் தொகையில் பல நீர்ப்பாசன ஏந்துகளைச் செய்து கொடுத்தனர். இதனால் தொண்டை மண்டலத்துள் பல ஏரிகளும், குளங்களும் வாய்க்கால்களும் அமைத்து நீர்ப்பாசன ஏந்துகள் குடிநீர், ஏந்துகள் ஆகியன பெருகின. ஏரிகள், குளங்கள் ஆகியன அதனை அமைத்த அரசர்கள், குறுநில மன்னர்களின் பெயர்களால் அழைக்கப்பட்டன.

பெரும்பரப்பில் இராசதடாகம் என்னும் பெயருடைய குளத்தினை சாருதேவி பல்லவ அரசி வெட்டினார்.[269] மகேந்திரதடாகம் மகேந்திரவாடியிலும் சித்திரமேகதடாகம் மாமண்டூரிலும் மகேந்திரனால் உருவாக்கப்பட்டன. மகேந்திரத் தடாகம் 10 கி.மீ பரப்பளவில் நிலங்களுக்கும் நீர்ப்பாசனம் அளித்துள்ளதென்றுவடார்க்காடு குறிப்பேடு கூறுகின்றது.[270] இந்திரமேகத் தடாகம் மிகப் பெரிய ஏரியென்றும் ஆண்டு முழுமையும் நீர் வழங்கும் தன்மைபெற்ற ஏரியென்றும் குறிப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.[271] நந்திவர்ம பல்லவ மன்னன் காலத்தில் காஞ்சிக்குக் கிழக்கில் 15 கி.மீ. தொலைவில் திரையனேரி என்ற ஏரி வெட்டப்பட்டது.[272] வெள்ளேரி தும்பானேரி ஆகிய இரண்டும் தண்டிகர்களால் வெட்டப்பட்டது. சம்பவர்மன் காலத்தில் கனகவல்லி தடாகம் வெட்டப்பட்டது. புள்ளூர்ச் செப்பேடு நெசவபூண்டி ஏரி வெட்டியதைக் கூறுகின்றது. மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் காவேரிப்பாக்கம் ஏரியும் வந்தவாசிக் கூற்றத்தில் மருதநாடு ஏரியும் திருச்சிராப்பள்ளிக்கருகே உள்ள ஆலப்பாக்கத்தில் மாரிப்பிடுகு ஏரியும் வெட்டப்பட்ட முக்கியமான ஏரிகளாகும். முதலாம் பரமேசுவரவர்மனால் வெட்டப்பட்ட பரமேசுவரத் தடாகத்திற்குப் பாலாற்றில் பெரும்பிடுகு

கால்வாய் வெட்டித் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது.[273] ஏரிகளே இல்லாமல் பல கிணறுகளும் எடுக்கப்பட்டன. திருவெள்ளறை என்னும் வைணவத் தலத்தில் பெருங்கிணறு ஒன்றை எடுத்துள்ளதாக நந்திவர்மனின் செப்பேடு ஒன்று கூறுகின்றது.

அணைகள்

வெள்ளநீரைத் தேக்கி வைத்தனர். அது சென்னீர் பொதுவி எனப்பட்டது. அதிகமாக நீரைத் தேக்கி வைத்துள்ள இடம் சென்னீர் வெட்டி எனப்பட்டது.[274] அவைகளில் தலைமடை அமைக்கப்பட்டது. நீர் சீரான முறையில் கால்வாய்களில் அனுப்பப்பட்டது. நீர் ஓட்டத்தினைத் தலைமடைக் கட்டுப்படுத்திற்று, அது தலைவாய்,[275] முகவாய், கூற்றல்வாய்,[276] வாய்த்தலை என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டது. மதகுகளில் பொறிகள் அமைக்கப்பட்டன. அவை கலிங்குகள் எனப்பட்டன.[277]

நீர் எந்திரங்களால் நீர் எடுக்கும் முறையும் மேற்கொண்டனர்.[278] ஆற்றுக் கால்களில் நீரைப் பெறுவதற்குக் கொள்கலம் பயன்படுத்தப்பட்டது.[279] குற்றேத்தம் என்பது[280] பேரேத்தம் என்பதும்[281] நீர் இயந்திரத்தைக் குறிப்பதாக உள்ளன. வெள்ள வடிகால்கள் வேகாவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டது.[282] ஊற்றுக்கால்களைத் தோண்டிக்[283] கோடைப் பருவங்களில் நீர்பெற வழி செய்தனர்.

ஏரி, குளங்களில் நிரம்பிய சேற்றினைஅப்புறப்படுத்தப் படகுகள் பயன்படுத்தப்பட்டன.[284] செய்யாறு, வேகாவதி, பாலாறு ஆகிய ஆறுகளால் ஏரிகள், குளங்கள் ஆகியன நிரப்பப்பட்டன. இப்பணிகள் பல பல்லவ அரசர்களாலும் குறுநில மன்னர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. செல்வந்தர்கள் நிதி அளித்து ஏரி குளங்களைத் தொடர்ந்து பராமரித்து வந்தனர். ஊர் வருவாயின் ஒரு பகுதியாலும் அரசின் உதவியாலும் நீர்ப்பாசன ஏந்துகள் குறைவின்றி நிகழ்ந்ததென கே.பி.எஸ். ஐயர் குறிப்பிட்டுள்ளார்.[285]

பஞ்சம்

ஆற்றுவளம் நிரம்பப் பெறாமையால் மழையற்ற காலங்களில் பல்லவ நாடு பஞ்சத்திற்கிடமாகி விடும். அத்துடன் ஓயாத போர்களால் அரசியல் நிலைகுலைய மூலக் கருவூலம் வற்ற நாட்டின் பஞ்சக் கொடுமைகள் தலைவிரித்தாடுதல் இயல்பாகும். இராசசிம்மன் காலத்தில் நிகழ்ந்த போரின் விளைவால் கொடிய வறுமை உண்டாயிற்று. சிவனிய குரவர்கள் காலத்தில் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. இதனை இராசசிம்மன் காலத்து வாழ்ந்த அவைப் புலவர் தண்டி என்பார் கூறியுள்ளார். அக்காலம் மூன்றாம் நந்திவர்மன் காலமாகக் கொள்ளலாம். எனவே பல்லவ நாட்டின் பல்வேறு காலகட்டங்களில் பஞ்சங்கள் நிகழ்ந்துள்ளதைப் பெரிய புராணம் கூறுகின்றது.[286] வேள்விகள் குன்றிக் களஞ்சியங்கள் காலியாயின. தோட்டங்களும் மரங்களும் அழிக்கப்பட்டன. பலர் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர்; வேள்விச் சாலைகள் அழிக்கப்பட்டன; செல்வர்கள் கொல்லப் பட்டனர்; சாலைகள் பழுதுண்டு கிடந்தன என்று காவியதர்சம் என்னும் நூலில் தண்டி குறிப்பிட்டுள்ளார்.

பஞ்ச நிவாரணம்

பல்லவ அரசர்கள் 'பஞ்ச வாரவாரியம்' என்ற அமைப்பினை ஏற்படுத்திப் பஞ்ச நிவாரணம் அளித் தனர் என நீலகண்ட சாத்திரி கூறுகின்றார். இவ் வாரியத்தவர் பஞ்ச ஒழிப்புக்கென்று அறுவடைக் காலத்தில் ஒரு பகுதி நெல்லைப் பெற்று பஞ்ச காலத்தில் வறுமையால் வாடும் குடிமக்களுக்குக் கொடுத்தனர்.

பஞ்ச ஒழிப்பிற்காக நெல் வருவாயின் ஒரு பகுதி ஒதுக்கி வைக்கப்பட்டது. அதுவே பஞ்சவாரம் எனப்பட்டது. அந்த நெல்லைப் பெறுதல், சேர்த்தல், மேற்பார்வையிடுதல், காத்தல், பஞ்ச காலத்தில் குடிமக்களுக்கு உதவுதல் ஆகிய பணிகளை அரசினர் மேற்கொண்டனர்.[287]

ஆ. பாண்டியர் ஆட்சிமுறை

பாண்டிய மண்டலம்

தமிழகத்தின் 'தென்புலம்' என விளங்கிய ஆட்சிப்பகுதி 'பாண்டிய மண்டலம்' என்று அழைக்கப்பெற்றது. பாண்டிய மண்டலத்தைப் பன்னெடுங் காலம் ஆண்ட பாண்டியர்கள், படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் தொல் குடியினர்.

தொன்மை

வடமொழியாளர் ஆதிகாவியமெனக் கூறும் வால்மீகி இராமாயணத்திலும் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த காத்யாயனர் நூலிலும் பாணினி வியாகரணத்திற்கு வரைந்த வாத்திகம் என்ற உரையிலும் இலங்கையின் வரலாறு கூறும் பண்டைய நூலான மகாவமிசத்திலும், அசோகப் பெருவேந்தனின் கல்வெட்டிலும் மெகசுத்தனீசின் குறிப்பு களிலும் காணப்பெறும் பாண்டியர் குறித்த செய்திகள் அவர்தம் தொன்மையை மெய்ப்பிக்கும். 'பாண்டிய நாடே பழம் பதி' என மாணிக்கவாசகரின் திருவாசகம் உரைக்கும். தமிழ் வளர்த்த' காரணத்தால் 'செந்தமிழ்நாடு' எனப் பாண்டியநாடு அழைக்கப்பெற்றது'.

தொன்று தொட்டுவரும் மரபு

பாண்டிய மண்டலத்தை ஆட்சிபுரியும் உரிமை எக்காலத்து, எவர் காலத்து இவர்கள் கைக்கொண்டனர் என அறிந்திட இயலவில்லையாயினும் தொன்மைக் குடியின ராதலால் தொன்றுதொட்டு நிலவி வரும் ஆட்சி அமைப் பினைக் கைக்கொண்டனர் என்பதனைச் சுட்டிக் காட்டும் வகையில் அவர்தம் தொன்மையைச் சுட்டிக் காட்டினோம்.

பரப்பு

நன்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அடங்கிய நிலப்பரப்புடைய பாண்டிய நாட்டின் கிழக்கிலும் தெற்கிலும் கடல்பரப்பு எல்லையாக அமைந்திருந்தது. மேற்கு எல்லையில் மேற்குத் தொடர்ச்சி மலையும் வடமேற்கில் கொங்குநாடும் வடகிழக்கில் புதுக்கோட்டையும் வடக்கில் வெள்ளாறு வரையும் பரவியிருந்தது.

எனவே, பாண்டிமண்டலம் என்பது இன்றைய மதுரை மாவட்டம், பசும்பொன் தேவர்திருமகனார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், காமராசர் மாவட்டம், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் ஆகியவற்றையும் புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றுக்குத் தென்பகுதியினையும் ஏறக்குறையக் கொண்டிருந்தது எனலாம்.

முற்காலப் பாண்டியர் காலத்திற்கு முன்பிருந்தே பாண்டிய நாடு எனவும் பின்னர், சோழர் காலம் முதல் 'இராசராசவளநாடு' 'இராசராசமண்டலம்' 'இராசராசப் பாண்டி நாடு' எனவும் பெயர் பெற்ற போதிலும் பாண்டிய நாடெனவே சுருக்கமாக அழைத்தனர்.

பாண்டியர் ஆட்சி எல்லை விரிவடைதலும் சுருங்குதலும் மன்னர்கள் தம் ஆற்றல் வலிமையின்பால் பட்டதாயினும் இரண்டாம் இராசசிம்மன் முதலானோர் காலத்தில் சோழமண்டலம், தொண்டை மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகியன பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளாயின.

குறுநில மன்னர் பகுதிகள்

பாண்டியருக்கு அடங்கி ஆட்சி செலுத்திய குறுநில மன்னர்களான ஆய்வேளிர், கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகளை ஆண்டனர். தஞ்சாவூர், புதுக்கோட்டைப் பகுதிகளில் முத்தரையர் ஆண்டனர். இவ்வாறு ஆட்சி

செலுத்திய பகுதிகள் ஆய்நாடு, முத்தரையர் நாடு, கோநாடு என்றழைக்கப்பெற்றன.

ஆட்சிப் பிரிவுகள்

பாண்டிய மண்டலம் பல வளநாடுகளாகப் பகுக்கப் பெற்றிருந்தது. வளநாடுகள் கூற்றங்களாகப் பகுக்கப் பெற்றிருந்தன, டாக்டர் கே.வி. இராமன் 'பிற்காலத்தில் இக் கூற்றங்களே நாடுகளாகப் பெயர் மாற்றம் பெற்றன' எனப் 'பாண்டியர் வரலாறு' என்னும் தம் நூலில் சுட்டிக்காட்டுகிறார்.[1] ஒவ்வொரு கூற்றமும் (நாடும்) பல ஊர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

கூற்றம் அல்லது நாடு என்பது 'இராஷ்டிரம்' எனச் சின்னமனூர்ச் செப்பேட்டில் கூறப்பெற்றுள்ளதைக் காண்கிறோம். சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் 'வடகாவழி ராஷ்டிரம்' என்றும் 'இராசசிம்ம குளக்கீழ் ராஷ்டிரம்' என்றும் காணலாம்.

நாட்டுப் பிரிவுகள்

வளநாடு

பாண்டிமண்டலத்தின் பெரும் பிரிவு வளநாடுகளாகப் பகுக்கப் பெற்றிருந்தன. இவை நாடுகள் அல்லது பல கூற்றங்கள் சேர்ந்து உருவானவை. திருக்குறுங்குடியிலுள்ள இரண்டாம் வரகுணன் கல்வெட்டு ஒன்று வைகுந்த வளநாட்டைக் குறிப்பிடுகிறது.

கேரளசிங்க வளநாடு, திருவழுதி வளநாடு, சீவல்லப வளநாடு, அமிர்த குண வளநாடு[2] முதலான வளநாடுகள் முதலாம் இராசசிம்மன், இரண்டாம் வரகுணப் பாண்டியன் ஆகியோர் காலங்களில் இருந்தன.

கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளிலும் மதுரோதய வளநாடு, வரகுண வளநாடு, கேரளசிங்க வளநாடு, திருவழுதி வளநாடு, சீவல்லப வளநாடு, பராந்தக வளநாடு, அமிர்தகுண வளநாடு ஆகியன இருந்தன எனப் பட்டயங்கள் வாயிலாக அறிகிறோம்.[3]

திருப்பத்தூர் வட்டத்தின் ஒரு பகுதியையும் புதுக்கோட்டை, சிவகங்கை வட்டத்தின் சில பகுதியையும் கொண்டது கேரளசிங்க வளநாடு. ஆழ்வார் திருநகரிப் பகுதியைச் சார்ந்தது திருவழுதி நாடு.

சோழன் தலைக்கொண்ட வீரபாண்டியன் பெயரால் அழைக்கப்பெற்ற வளநாடு 'பாண்டி மார்த்தாண்ட வளநாடு' ஆகும். வைகுந்த வளநாடு, தென்வையை வளநாடு ஆகிய இரண்டும் தளவாய்ப்புரம் செப்பேட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளன. சோழர் ஆட்சியின் தொடக்கத்தின் முன்னரே பாண்டிய நாட்டில் பல பகுதிகள் வளநாடு என்று பெயர் பெற்று இருந்தன.

திருவழுதி வளநாடு என்பது ஆழ்வார் திருநகரிப் பகுதியைச் சார்ந்தது எனவும் கேரளசிங்க வளநாடு என்பது திருப்பத்தூர் வட்டத்தில் பெரும் பகுதியும் புதுக்கோட்டை, சிவகங்கை வட்டங்களின் சில பகுதிகளையும் கொண்டிருந்தது என டாக்டர் கே.வி. இராமன் குறிப்பிட்டுள்ளார்[4].

கூற்றம் (நாடு)

சங்க காலம் முதலே வழக்கிலிருந்த பிரிவு கூற்றம் என்னும் பிரிவு ஆகும். வேள்விக்குடிச் செப்பேட்டில் பாகனூர்க் கூற்றம் பற்றியும் சீவரமங்கலச் செப்பேட்டில் கொழுவூர்க் கூற்றம் பற்றியும் சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் களவழிநாட்டு வேம்பற்றூர்க் கூற்றமும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

இவை தவிர துவ்வூர்க் கூற்றம், நடுவில் கூற்றம், மிழலைக் கூற்றம், திருக்காளப் பேர்க் கூற்றம், கீழ்க்களக் கூற்றம், முத்தூர்க் கூற்றம் ஆகியனவும் பட்டயங்களில் குறிப்பிடப் படுகின்றன.

தென்களவழிநாடு என்பது சீவரமங்கலச் செப்பேட்டிலும் களக்குடி நாடு என்பது தளவாய்ப்புரச் செப்பேட்டிலும் காணப்படுவன. இவை தவிர்த்து அண்டநாடு, ஆசூர் நாடு, ஆன்மா நாடு, இரணியமுட்ட நாடு, வேம்ப நாடு, களக்குடி நாடு, கொற்கை நாடு, தொண்டி நாடு, முல்லி நாடு, புறம்பு நாடு, வேம்பைக்குடி நாடு, புரத்தாய நாடு, செம்பி நாடு முதலான பிற நாடுகள் குறித்தும் செப்பேடுகள் கூறுகின்றன.

பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் பெயர்களைச் சதாசிவப் பண்டாரத்தார் பட்டியலிட்டுக் காட்டுகிறார். சில கூற்றங்களின் எல்லைகள் சரிவரத் தெரியவில்லை. பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையில் இருந்தவை எனக் கூறப்படுபவை மிழலைக் கூற்றம், முத்தூர்க் கூற்றம் ஆகும். 'தமிழகப் பண்டைய நிலவியல் பிரிவுகள்' என்னும் ஆங்கில நூலில் கூற்றங்கள் குறித்த விளக்கத்தினை கே.எஸ். வைத்தியநாதன் என்பவர் அளிக்கிறார்.[5]

டாக்டர் கே.வி. இராமன், மிழலைக் கூற்றம் வெள்ளாற்றுக்கும் பாம்பாற்றுக்கும் இடைப்பட்ட பகுதி எனவும் பாம்பாற்றின் மேற்புறத்துக் கட்டிவயல் அஞ்சுகோட்டை, கப்பலூர், முத்தூர் முதலியன அடங்கியது முத்தூர்க் கூற்றம் எனவும் கூறுகிறார். வெள்ளாற்றுக் கூற்றம் என்றும் கூற்றங்கள் புதுக்கோட்டை மாவட்டப் பகுதியில் அமைந்திருந்தன என்பதும் அவர் தம் கூற்றாகும்.

நாடுகளின் பெயர்கள், கூற்றங்களின் பெயர்கள் எல்லாம் ஊர்களின் அடியாகப் பிறந்தன எனவும் வளநாடுகளின் பெயர்கள் பாண்டியர்களின் இயற்பெயர்களும் சிறப்புப் பெயர்களும் கொண்டு அமைந்திருப்பதையும் சதாசிவப் பண்டாரத்தார் எடுத்தியம்புகிறார்.[6]

ஊர்கள்

கூற்றம், நாடு ஆகியனவற்றிற்கு அடுத்த பிரிவு ‘ஊர்’ என்பதாகும். அரசர்கள் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் ஆகிய முதல்வகை ஊர்களை உருவாக்கினர். இவை தவிரப் பார்ப்பனர் அல்லாத இரண்டாம் வகையினரான, வெள்ளான் வகை ஊர்களில் நிலக்கிழார்களும், உழவர்களும் வாழ்ந்தனர். மூன்றாம் வகையின நகரங்கள் ஆகும். ஊர்களின் பெயர்கள் பொதுவாக ‘மங்கலம்’, ‘குடி’, ‘ஊர்’, என்றே முடிந்துள்ளன. சிலவற்றின் பெயர்கள் மட்டுமே வயல் என்று முடிந்துள்ளன.

நடுவண ஆட்சி

முற்காலப் பாண்டியர் காலத்திலும் முடியாட்சி முறையே நிலவியது. மாறவர்மன் அவனிசூளாமணி காலம் முதல் பாண்டிய மன்னர்கள் மாறவர்மன், சடையவர்மன் என்னும் பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்து வருவாராயினர். சங்காலப் பாண்டியர் எவரும் இவ்வாறு வர்மன் என்று பெயருக்குப் பின் அடைமொழி கொள்ளாது வழுதி, செழியன், கோன் முதலான அடைமொழிகளைக் கொண்டிருந்தனர்.

இதே காலக்கட்டத்தில் தொண்டை மண்டலத்தில் ஆட்சி செலுத்திய பல்லவர்கள் வர்மன் என்ற வடமொழிப் பெயரைக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

முதல் அரசனின் பெயருக்கு முன் மாறவர்மன் என்னும் அடைமொழி வருமேயானால் அடுத்து வந்த அரசனின் பெயருக்கு முன் சடையவர்மன் என்னும் அடைமொழி வரும். பின்னாளில் ஆண்ட சோழ வேந்தர்கள் இதுபோலவே இராசகேசரி, பரகேசரி ஆகிய பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர். ஆயினும் சின்னமனூர்ச் செப்பேடு வாயிலாக வரகுணனும் அடுத்துவந்த பராந்தகனும் சடையவர்மன் என்றே பெயர் கொண்டனர் என அறிகிறோம்.

பாண்டிய மன்னர்கள் மண்ணுலகில் இறைவனின் மறுபிறப்பெனக் கருதப்பெற்றனர். செப்பேடுகளில் முதலாம் வரகுணன் மாலுருவின் வெளிப்பட்டு எனவும் 'சீமாறன் சீவல்லபன்', 'செங்கண்மால் சீவல்லபன்' என்றும் குறிப்பிடப் பட்டனர். 'திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே' என நம்மாழ்வார் பாடுகிறார்.

முற்காலப் பாண்டியர்கள் 'பாண்டியாதி ராசன்', 'பாண்டியமகாராசன்', 'மன்னர்மன்னன்', 'அவனிபசேகரன்', 'பரசக்கரகோலாகலன்', 'ஏகவீரன்' முதலிய பல விருதுகளை ஏற்றனர்.

தூய தமிழ்ப் பெயர்களையும் பட்டங்களையும் கொண்டு தமிழ் வளர்த்த பாண்டிய மரபில் வந்த இம் மன்னர்களின் சிறப்புப் பெயர்கள் வடமொழியில் அமைந்தமை சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டுவோம். சீவரன், வீதகள்மஷன், விநயவிச்ருதன், விக்கிரம பாரகன், வீரபுரோகக்ஷன், மருத்பலன், மானியசாசனன், மனுபமன், மர்த்திதவீரன், கிரிஸ்திரன், சீதகின்னரன், கிருபாலையன், கிருதாபதரனன், கண்டநிஷ்டூரன், காரிய தக்ஷிணன், பண்டிதவத்சலன், பரிபூர்ணன், குணாக்ராகியன், கூடநிர்ணயன், சிரீநிகேதன், பரமேஸ்வரன், அசலாஅசலன் நவரஜ்ஜியன், மகாகேதநன்மன் முதலிய வடமொழிப் பெயர்களை அவர்கள் சூட்டிக் கொண்டமைக்கு வடபுலத்துச் செல்வாக்கே காரணம் எனலாம்.[7]

சங்ககாலப் பாண்டியர் போன்றே இக்காலப் பாண்டிய ரும் பாடல் புனையும் திறனும் சிவனிய மாலிய அடியார்களான நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் போற்றும் பண்பும் இவர்களிடத்து மிளிர்ந்தது. மன்னர்கள் பட்டயங்களில் சிறப்பித்துச் சிலைத் தடக்கைக்கொலைக் களிற்றுச் செழியன் மன்மகனை மறுக்கடிந்து விக்கிரமத்தின் வெளிப்பட்டு விலங்கல் வெல்பொறி வேந்தர் வேந்தன் 'வானவன் செங்கோற்சேந்தன்' என்றவாறு

புகழப்பட்டுள்ளனர். கோச்சடையன் இரணதீரன் வேள்விக் குடிச் செப்பேட்டில் வானவன், செம்பியன், மன்னர்மன்னன், மதுரகரு நாடகன், கொங்கர் கோமான் என்றெல்லாம் அழைக்கப்பட்டார்[8].

சிரீவரன், சிரீமனோகரன், சினச்சோழன், புனப் பூழியன், விதகன்மஷன், விநயவிச்ருதன், விக்ரம பாரதன், வீரபுரோகன், மருத்பலன், மான்யசாசனன், மனூபமன், மர்த்திர வீரன், கிரிஸ்தரன், சீதகிந்நரன், கிருபாலயன், கிருதாபதானன். கலிப்பகை கண்டகநிஷ்டுரன், பார்ய தடணன், கார்முக பார்த்தன், பராந்தகன், பண்டிவத்சிலென், பரிபூரணன், பாபபீரு, குரையுறு கடற்படைத் நாளைக்குணக்கிராதியல் நிறையுறுமலர் மணிநீள்முடி நேரியர் கோநெடுஞ்சடையன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தனர்.

மன்னர்கள் சங்க காலத்தினைப் போன்றே இக்காலத்தும் வேள்விகள் நிகழ்த்தினர். வேள்விக்குடிச் செப்பேட்டில் நெடுஞ்சடையன் வேள்விகள் நிகழ்த்தியமை 'இரணியகர்ப்பமுஞ் துலாபாரமுந்தரணிமிசை[9] பல செய்தும்' என்ற வரிகள் வாயிலாக வெளிப்படுகிறது. பாண்டிய மன்னர் பெரும்பாலோர் சைவச் சமயப் பற்றாளர் எனினும், மாறவர்மன் அரிகேசரி சமணப் பற்றுடையவராக விளங்கி ஞானசம்பந்தரால் சைவராயினர். நெடுஞ் செழியன் பராந்தகன் வைணவச் சமயப் பற்றாளர் என்பதற்குச் சீவரமங்கலச் செப்பேட்டில், பராந்தகன் பரம வைணவன்றானாகி நின்றிலங்கும் என்ற வரி சான்று பகர்கிறது.[10] மன்னர் மட்டுமல்லாமல் அமைச்சர்களான மதுரகவி, முதலான அமைச்சர்களும் சமயப் பற்றுடையோராய் விளங்கினர். ஆயினும், மன்னர்கள் சமயப் பொறையுடையராய் விளங்கினர். நெடுஞ்சடையன் வைணவராயினும் காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குப் பெரிய ஆலயம் எழுப்பியிருந்தும் சிவன் கோயிலுக்கும் செல்வத்தை வாரி வழங்கினார். பிரம்மன், மால், சிவன் ஆகிய

மூவருக்கும் வணக்கம் செலுத்தும் சீவரமங்கலம் செப்பேட்டினை வழங்கியிருப்பதும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

வாரிசுகள்

பாண்டிய மன்னர்கள் மூத்த மகனுக்கு மூடிசூட்டும் முறையைப் பின்பற்றினர். ஆனால், வரகுணவர்மன் என்ற மன்னரின் தம்பி பராந்தக பாண்டியன் மன்னரின் இறுதிக் காலத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் வென்று அரியணை ஏறிய செய்தி, முன்பிறந்த வெல்வேந்தனைச் செந்தாமரை மலர் பழனச் செழுநிலத்தைச் செருவென்றும் செப்பேடுகள் குறிக்கின்றன. இரண்டாம் வரகுணனுக்குப் பின் அவரது உடன் பிறப்பு பராந்தக வீரநாராயணன் அரியணை ஏறிய செய்தியிலிருந்து தகுந்த வாரிசு இல்லாத காலங்களில் அரசனின் தம்பி பட்டத்திற்குரியரானார் என அறிகின்றோம்.

இணையாட்சி

பாண்டியர்களிடையே இணையாட்சி முறை நிலவியது. என்ற செய்தி தளவாய்ப்புரச் செப்பேட்டினால் அறியப் பெறுகிறது.[11] பராந்தகனின் மூத்த உடன் பிறப்பான இரண் டாம் வரகுணனும் இணைந்து இணை ஆட்சி நடத்தினர் வரகுணன் பெயரளவிலேயே அரசராக விளங்கினார் என்றும் வீரநாராயணன் உண்மையில் அரசு செலுத்தியிருக்கக்கூடும். வரகுணனும் பராந்தக வீரநாராயண னும் சடையவர்மன் என்ற பட்டமே புனைந்து ஆட்சி செலுத்தியதும் இருவரும் இணைந்து ஆட்சியினை மேற்கொண்டனர் என்றும் செய்தி மெய்ப்பிக்கப்பெறுகிறது.[12]

தலைநகர்

பாண்டியர்களின் தலைநகரமாகப் பண்டைய நாள்முதல் விளங்கியது. 'கூடல்', 'தமிழ்கெழுகூடல்'

என்றெல்லாம் அழைக்கப்பெற்ற மதுரை நகரமாகும். மதுரையை ஆட்சி செலுத்திய பாண்டியர்கள் தங்களைக் (கூடற்கோன் கூடல்நகர்க்காவலன் மதுராபுரப்பரமேசுவரன் என்றெல்லாம் அழைத்துக்கொண்டனர்.

அரியணை

பாண்டிய மன்னர்கள் வீற்றிருந்த அரியணை பல பெயர்களில் பட்டயங்களில் காணப்படுகிறது. சடையவர்மன் சீவல்லபன் அழகிய பாண்டியன் என்னும் கூடத்தில் பாண்டியராசர் பள்ளிக் கட்டிலில் வீற்றிருந்து அரசு செலுத்தினார். கலிங்கத்தரையன் முனைய தரையன் என்னும் பள்ளிக்கட்டில் விளங்கியது. சீவல்லபன் திருநெல்வேலியிலிருந்த முனைய தரையன் என்னும் பள்ளிக்கட்டில் மீது வீற்றிருந்தார். மங்கலபுரத்து அரண்மனையில் இருந்த அரியணைக்கு வீரகேரளன் பள்ளிக்கட்டில் என்று பெயர்.

செயலகம்

அரசனின் செயலகம் 'எழுத்து மண்டபம்' என்று அழைக்கப்பெற்றது. அரண்மனை 'திருமாளிகை' எனப் பட்டது. மங்களப்புரத்தில் மானாபரணன் திருமாளிகை என்னும் அரண்மனை இருந்தது. அரசவை கூடிய இடம் 'அழகிய பாண்டியன் கூடம்', 'மானாபரணன் திருமாளிகை' எனறெல்லாம் அழைக்கப்பெற்றது. ஆட்சிப் பொறுப்பில் அரசனுக்கு உதவிட அமைச்சர்கள் இருந்தனர். தலைமை அமைச்சர் உத்தரமந்திரி என்று அழைக்கப்பெற்றார். ஒன்றுக்கு மேற்பட்ட தலைமை அமைச்சர்கள் இருந்திருக்கக்கூடும்.

அரசு உதவியாளர்

அரசருக்கு உறுதுணையாக விளங்கிய அரசியல் தலைவர்கள் மாறன்காரி, மாறன் எயினன், சாத்தன் கணபதி, எனாதி சாத்தன், சாத்தன், தீரதீரன், மூர்த்தி எயினன்,

சங்கரன் சீதரன் முதலிய அரசியல் தலைவர்களின் பெயர்கள் செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.[13]

தலைமை அமைச்சர்களாக விளங்கிய மாறன்காரி, மாறன் எயினன் ஆகியோர் பெயரும் சாத்தன் கணபதி என்னும் பெயர் கொண்ட மகாசாமந்தர் என்பான் பெயரும் காணப்பெறுகிறது. மகாசாமந்தன் படைத் தளபதியாவார். சாத்தன் சாத்தன் மகாசாமந்தனுக்குக் கீழ்ப்பட்ட படைத்தலைவர் ஆவார்.

சீதரன், மூர்த்தி எயினன் ஆகியோர் ஆணத்தி என்னும் பொறுப்பினையும் சங்கரன் சீதரன் யானைப் படைத் தலைவன் பொறுப்பினையும் வகித்தனர்.[14]

உத்தர மந்திரி

உத்தரமந்திரி பொறுப்பு வகித்தவர்கள் சிறந்த கல்வியறிவு நிரம்பியவராகவும் சமய உயர்வுடையவராகவும் விளங்கினர். குலச்சிறையார், மாறன்காரி, மாணிக்கவாசகர் முதலானோர் உத்தர மந்திரிகளே. மாணிக்கவாசகர் 'தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டம் பெற்றவர்.

உத்தரமந்திரிப் பதவி வகித்தவர் இறந்துவிட்டால், அப்பதவியினை அவர் தம் உடன் பிறப்பிற்கு வழங்கினர். நெடுஞ்சடையரின் உத்தரமந்திரி மறைந்தபின் பதவி யேற்றவரை 'மாறன்காரிக்குப் பின் உத்தரமந்தரி பதமெய்தின பாண்டிமங்கல விசையரையன் ஆகிய மாறன் எயினன்' என்று நரசிங்கப்பெருமாள் கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

உத்தரமந்திரிகள் கல்வியறிவு மிக்கவர் என்பதற்கும் கவிதை பாடல்புனையும் ஆற்றல் மிக்கோராய் விளங்கினர் என்பதற்கும் மதுரகவி என்னும் பட்டம் பெற்ற மாறன்காரியும் மாணிக்கவாசகரும் எடுத்துக்காட்டாவர். (மாணிக்கவாசகர் காலம் குறித்து மாறுபாடு உண்டு)

மாறன்காரி வைத்திய குலத்தினர் எனவும் மதுரகவி

என்னும் பட்டத்துடன் மூவேந்த மங்கலம் பேரரையன் பட்டத்தினைப் பெற்றிருந்தார் எனவும் அறிகிறோம். திருமாலுக்குக் கற்றளி எழுப்பும் அளவிற்குச் செல்வாக் குடையவராய்த் திகழ்ந்தார்.[15]

மகாசாமந்தன்

திருப்பரங்குன்றம் குடைவரைக்கோயில் கல்வெட்டு மகாசாமந்தர் பொறுப்பு வகித்த சாத்தன் கணபதி என்பவரைப்பற்றிக் கூறுகிறது. மகாசாமந்தர்களுக்கும் அரசர்கள் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தனர்.

பாண்டி அமிர்தமங்கல அரையனாயின சாத்தன் கணபதி என்று அழைத்ததைத் திருப்பரங்குன்றம் கல்வெட்டுச் சுட்டிக்காட்டுகிறது. மன்னர்கள் வழங்கிய பட்டங்கள் சில: மூவேந்த மங்கலப் பேரரையன், பாண்டி மங்கல விசையரையன், பாண்டி அமர்த மங்கல அரையன், ஏனாதி பாண்டி இளங்கோ மங்கலப் பேரரையன், வீரமங்கலப் பேரரையன் முதலானவை யாகும்.

மகாசாமந்தனான படைத்தலைவனுக்கு 'ஏனாதி' 'வீரமங்கலப்பேரரையன்' அமிர்தமங்கல அரையன்' ஆகிய பட்டங்களும் யானைப்படைத் தலைவனுக்குப் 'பாண்டி இளங்கோ மங்கலப் பேரரையன்' என்னும் பட்டமும் மன்னர்கள் வழங்கினர்.

பிற அலுவலர்

திருமந்திர ஓலை என்னும் அலுவலர் மன்னரின் ஆணையை நிறைவேற்றியவர் ஆவார். அதனை மேற்பார்வையிட்டுக் கையொப்பமிட்டவர் திருமந்திர ஓலைநாயகம் ஆவார். அரசரின் உதவிப் பணிகளை மேற்கொண்டோர் அகப்பரிவார முதலிகள் எனப் பெற்றனர். அரையர்கள் எனப்பெற்றோரும் அரசருக்குதவினர்.

அரசர்கள் வழங்கிய பட்டங்களைக் குறித்து, ஈண்டு சிறு

விளக்கம் ஒன்று அளித்திடல் இன்றியமையாதது. இப்பட்டங்கள் பொதுவானவையன்று. குறிப்பிட்ட சிலருக்கு மன்னர் அவர் பணியினைச் சிறப்பிக்க வழங்கியவை.

ஊர் நிருவாகம்

ஊராட்சியின் அடிப்படைப் பிரிவாகத் தன்னாட்சி அமைப்புகளாக ஊர்கள் விளங்கின. மாறன் சடையனின் நெல்லை மாவட்டத்து மானூர்ப் பட்டயம் வாயிலாகப் பாண்டியரின் ஊர் அவை குறித்த செய்திகளை அறிகிறோம்.[16]

பிரம்மதேயச் சிற்றூராக விளங்கிய மானூர்ச்சபை, ஊர் அவை இயங்கிய விதம் குறித்து அறிய ஓர் எடுத்துக் காட்டாகும்.

சபை கூட முரசறைந்தனர், முரசறைந்த பின்னர் சபையினர் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் கூடினர். மக்கள் சபையில் உறுப்பினராதர்க்குரிய தகுதிகள் வரையறை செய்யப்பட்டிருந்தன. சொத்துடையாரும் கல்வித் தகுதி பெற்றவருமே உறுப்பினர் ஆயினர்.

உறுப்பினர் தகுதிகள்

1. ஊர்ப் பங்காளர் மக்களில் மந்திரப்பிரமாணமும் தர்மமும் கற்ற ஒருவனே ஊர்ச்சபையில் தன் தந்தையின் பங்குக்குரிய உறுப்பினராக இருக்கலாம் அதே தகுதி யுள்ளவரே, விற்கப்பட்ட அல்லது விலைக்கு வாங்கப்பட்ட அல்லது சிரீதனமாகப் பெறப்பட்ட பங்குக்குரிய ஆளாகச் சபையில் இருக்கலாம்.

2. இங்ஙனம் மூன்று வகையில் அடையப்பெற்ற பங்கு ஒருவனை முழு உறுப்பாண்மைக்கன்றி கால், அரை, முக்கால் உறுப்பாண்மைக்கு உரியவனாக்குவது.

3. பங்கை விலைக்கு வாங்குவோர் ஒரு வேதம்

முழுவலதையும் அதன் பரிச்சிட்டங்களோடு நன்றாக ஓதுகின்றவனையே தம் பங்குக்குரிய உறுப்பினனாகத் தேறவேண்டும்.

4. முழு உறுப்பாண்மையில்லாதார் ஊர்க்காரியங்களை நிறைவேற்ற எந்த வாரியத்திலும் இருக்க முடியாது.

5. இந்தத் தகுதியெல்லாமுடையோர், ஊர்ச்சபை நடவடிக்கைகளில் ஒவ்வொரு முன்னீட்டையும் கட்டுப்பாடாக எதிரக்கவும் தடுக்கவும் கூடாது.

6. இங்ஙனம் தடங்கல் செய்தோர் தாமும் தம் சார்பாளருமாகத் தம்மால் செய்யப்பட்ட ஒவ்வொரு தடங்கலுக்கும் (குத்துக்கால்) அய்யங்காசுகள் தண்டம் செலுத்த வேண்டும்.

கட்டுப்பாடுகள்

உறுப்பினர் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தச் சொத்துடையவரின் பிள்ளைகளில் யார் நல்ல நடத்தை உடையவரோ, யார் மந்திரப் பிரமாணங்களையும் தருமந்தியில் ஒன்றைக் கற்றவரோ அவரே தகுதியுடையவர் என விதித்து எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தினர்.

சொத்துரிமை இல்லாதவர் சொத்தினை விலைக்கோ கொடையாகவோ, சீதனமாகப் பெற்றோ சொத்துரிமை பெறலாம். ஆனாலும் மேலே கூறப்பட்ட சொத்துரிமை உள்ளிட்ட தகுதிகள் படைத்தவராயின் மட்டுமே முழு உறுப்பினர் தகுதி பெற்றவராயினர். 16அ

வாரிய நிருவாகம்

வாரிய உறுப்பினர் தகுந்த முறையில் நடந்து கொள்ள வேண்டுமெனவும் கண்மூடித்தனமாக எல்லாவற்றையும் மறுக்கக்கூடாது எனவும் விதிக்கப்பட்டது.

அவ்வாறு தடுத்தலைக் குத்துக்கால் செய்தல் என அழைத்ததையும் அதற்கு ஐந்து காசுகள் தண்டம் செலுத்த

வேண்டும் என விதித்ததையும் மானூர்ப் பட்டயம் வாயிலாக அறிகிறோம்.

சபையின் நடவடிக்கைகளை நடத்தவிடாது தடை போடும் வழக்கம் இருந்தது எனவும் அவ்வாறான தடை முயற்சிக்குக் குத்துக்கால் செய்தல் எனப்பெயர் எனவும் அறிகிறோம். மானூர் பிரம்மதேயச் சிற்றூர் பிரம்ம தேயமல்லாத ஊர்களில் எவ்வாறு கிராமசபைகள் நடைபெற்றன. என்றறியப் போதுமான சான்றுகள் கிடைத்தில.

பிரம்மதேயமல்லாத பகுதிகளில் 'ஊர்' என்னும் அமைப்புகள் இருந்தன. இவ்வடிப்படையில் அவற்றிலும் ஆட்சி நடைபெற்றிருக்கக்கூடும். மானூர்ப் பார்ப்பனர் களுக்குக் கொடையாக வழங்கப்பெற்ற ஊராதலால் வேதம், தருமம் ஆகியவற்றில் தேர்ச்சி வலியுறுத்தப் பெற்றிருக்கலாம்.[17]

மகாசபை

இரண்டாம் வரகுணனின் திருச்செந்தூர்ப் பட்டயங்கள் அம்பாசமுத்திரம் பட்டயங்கள் மகாசபையின் நடவடிக்கைகள் குறித்து அறிய உதவுகின்றன. இவை தவிர முதல் பராந்தகனின் கல்வெட்டும் நரசிங்கப்பெருமாள் கோயில் கல்வெட்டும் துணை புரிகின்றன.

அரசர் வரகுணன் 290 பொற்காசுகளை அம்பா சமுத்திரம் ஊர்ச்சபையாரிடம் ஒப்படைத்து அதில் வரக்கூடிய 580 கலம் நெல் வட்டியைக் கொண்டு நாள் காலவழிபாடு நடைபெற வகை செய்தார்.

ஆனைமலை நரசிங்கப்பெருமானடிகள், தம்முடைய நிலங்களுக்காக நரசிங்கமங்கலத்துச் சபையோருக்கு ஆண்டு தோறும் பதினெட்டு ஈழக் காசுகளை வரியாக அளிக்க வேண்டும் எனவும் இப்பதினெட்டு ஈழக்காசுகளில் மூன்றில்

ஒரு பங்கான ஆறு ஈழக்காசுகளை ஆண்டுதோறும் சபையாருக்குக் கிடைக்குமாறு மருதூருடையான் அருணிநிகலியன் பதினைந்து ஈழக்காசுகளை மூலதனமாகச் சபையாரிடத்தில் கொடுத்துள்ளார் எனவும் அறிகிறோம். ஊர், ஊர் அவை, மகாசபை தவிர வேறு அமைப்புகள் ஏதும் இருந்தனவா என்பதனை அறிய இக்காலத்திய சான்றுகள் கிடைத்திடவில்லை.

சிவகாசிச் செப்பேடுகள் வாயிலாக நாடு என்பது பெரிய அவை எனவும் ஊரார், சபையினரின் உறுப்பினர்களைக் கொண்டது எனவும் அறிவதற்கான சான்றுகள் உள்ளன.[18]

நாட்டவை

பல ஊர்களைக் கொண்ட ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பேரவை இருந்தது. அதற்கு நாடு என்றே பெயர். நாட்டு மக்களே 'நாடு' என்ற சபையாகக் கூடினர். 'நாடாயினசந்த நாட்டோம் என்று கல்வெட்டுச் செய்திகள் கூறும்.

நாட்டின் உறுப்பினர் நாட்டார் ஆவர். நிலங்களுக்குத் தரம் வகுத்தல், வரி வகுத்தல், தீர்வை பெறல் முதலான பணிகளை மேற்கொண்டனர்.

நாட்டாரின் பரிந்துரைகளை ஏற்ற மன்னர், அதற்கேற்ப ஆணை பிறப்பித்தார். அரசன் பிரம்மதேயமாக அளித்த நில எல்லையை நிருணயிக்கும்போது நாட்டார் உடனிருந்தனர் என்பதனைத் தளவாய்ப்புரச் செப்பேடு வாயிலாக அறிகிறோம்.[19] இவ்வளவைகள் ஊராட்சிக்கு அடித்தளங்களாயின.

இவ்வாட்சிமுறை ஊர்கள் ஓரளவிற்குத் தன்னாட்சி அமைப்புகளாக விளங்கின என்று காட்டுகின்றன.

படை நிருவாகம்

பாண்டிய மன்னர்கள் குறுநாடு, சேரநாடு, புலியூர்,

உறையூர், மங்களபுரம், மழகொங்கம், பெண்ணாடகம், புகழூர், ஆயிரூர், சிங்களம், தெள்ளாறு, குடமூக்கு, திரும்புறம்பியம், குடவை, கரவந்தபுரம் முதலிய இடங்களில் போரிட்டனர். காலாட்படை , குதிரைப்படை, யானைப் படை, கடற்படை ஆகியன கொண்டு போரிட்டனர். வேள்விக்குடிச் செப்பேடு 'நாற்பெரும்படையும் பார்படப் பரப்பி' என்று கூறுகிறது[20]. கடற்படை வலிமையினால்தான் பரதவரையும், தென்னிலங்கையையும் வென்றனர்.

மதுரை அருகே நிலைப்படை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. திருவுடையப்புத்தூர், கோட்டாறு, சுசீந்திரம், கோவில்பட்டி முதலான கோயில்களில் நிருவாகப் பொறுப்புகளைப் படைத் தலைவர்கள் ஏற்று நடத்தினர்.

படைத்துறைத்தொழில் மரபு வழிப்பட்டது. தந்தைக் குப்பின் மகனுக்கு என்ற நிலையில் படைத்துறைப் பதவிகள் வழங்கப்பெற்றன. படையினர் மன்னர்பால் பற்றுறுதி கொண்டவர்களாக விளங்கினர். பள்ளி வேளான், அவன் மகன் பராந்தகப் பள்ளி வேளான்; புள்ளன் நக்கன், அவன் மகன் நக்கன் புள்ளன் ஆகியோர் முதல் வரகுணன் காலம் முதல் இரண்டாம் வரகுணன் காலம் வரை பாண்டியர படைக்குத் தலைமை வகித்து நடத்தியுள்ளனர்.

மன்னவன் கட்டளையை ஏற்று, மன்னவனையே இறைவனாகக் கருதி, மன்னவனுக்காக உயிர் துறப்பதை மண்ணுக்குச் செய்யப்படும் சிறப்பாகக் கருதிச் செயல்பட்டனர்.

'மாந்தேர்மாறன்' என்ற அடைமொழி பாண்டியர் குதிரை பூட்டிய தேர் ஓட்டுவதில் வல்லவர்கள் எனவும் காட்டும். யானைப் படைத்தலைவனுக்கு 'கஜாதியக்ஷகாரன்' அல்லது யானை ஒழுக்கு என்றும் பெயர் வழங்கியது.

சீமாறன் சீவல்லபன் பல்லவனுடன் நட்புப் பூண்டு அவனுடைய கடற்படையின் துணைக்கொண்டு இலங்கைமீது படையெடுத்ததை வேள்விக்குடிச் செப்பேடு கூறும்.

"சூழியானை செலவுந்திப்பாழி வாயமர் கடந்து
வில்வேலிக் கடற்றானையை நெல்வேலிச் செருவென்று"

என்னும் அடிகள் வாயிலாக அறிகிறோம்.

படைத்துறை உயர் அலுவலர் 'மகாசாமந்தன்' என அழைக்கப்பெற்றார். படைத்துறையில் பார்ப்பனர் பங்கேற் றனர். அவ்வாறு பங்கேற்றவர்கள் மாறன்காரி நாராயண சோழாந்தக பிரம்மராயன் என அறிகிறோம். நெடுஞ்சடைய பராந்தகனின் உயர்படை அலுவலர் வைத்திய குலத்தவர் எனச் சீவரமங்கலப் பட்டயமும், வேள்விக்குடிப் பட்டயமும் காட்டும்.[21]

படைமறவர்களுக்கு மூவேந்த மங்கலப் பேரரையன், பாண்டியமங்கலப் பேரரையன், வீரமங்கலப் பேரரையன், பாண்டி, இளங்கோ மங்கலப் பேரரையன முதலான பட்டங்கள் வழங்கினர்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உக்கிரன்கோட்டை நெடுஞ்சடையப் பராந்தகனின் முதன்மைப் படைத்தளமாக விளங்கியது.

நீதி நிருவாகம்

சீவரமங்கலச் செப்பேடு நீதி தவறாது ஆட்சி செலுத்துவோன் என்னும் பொருளில் பராந்தக நெடுஞ் சடையனை மனுபமன் எனவும் 'மனுதர்சித மார்க்கத்தினான் என்றும் குறிப்பிடுகிறது[22]. பராந்தக வீரநாராயணன் மனுசமானன் வழுவாத செங்கோளடாவி என்று தள்வாய்ப்புரச் செப்பேடு குறிப்பிடுகிறது. இராசசிம்மனைச் சின்னமனூர்ப் பெரிய பட்டயம் நீதிக்குக் கொடித்தம்பம் போன்றவன் என்று கூறுகிறது.[23]

உரிமையியல் வழக்குகளில் ஆவணச் சான்றுகளுக்கு முதன்மை நிலை அளிக்கப்பெற்றது. ஆவணச் சான்றுகள் இல்லாதபோது நீள் வழக்காற்றுரிமை ஊரார் சாட்சி

அடிப்படையில் வழக்குகளுக்குத் தீர்வு காணப்பெற்றது. தளவாய்ப்புரப் பட்டயம் இதற்கு எடுத்துக்காட்டு.[24]

நிருவாகத்துறைப் பயிற்சி

நாட்டு நிருவாகத்தில் பல துறைகளில் நிருவாகத் துறைச் செய்முறைப் பயிற்சி அளிக்கப்பெற்றதுக்குப் பார்த்திபசேகரச் சாலையில் அவ்வாறு பயிற்சி அளிக்கப் பெற்றது. சட்டர்களும் ஆசிரியர்களும் வேதங்களையும் அவற்றின் பிரிவுகளான வியாகரணம் பௌரோகித்யம் முதலிய சாத்திரங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த அந்தணரும் அரசு நிருவாகத்தில் சேர்ந்திருந்தனர். நாட்டில் நிருவாகப் பகுதி, படைப்பகுதி என்று இரு பிரிவுகள் தனித் தனிப்பிரிவுகளாக இயங்கிடவில்லை. இருவகைப் பொறுப்புகளையும் ஒருவரே நிருவகித்தார்.

கோயில் நிருவாகம்

பட்டயங்களில் கோயில் நிருவாகப் பொறுப்பில் இருந்தவர்களென அகநாழிகைப்பணி செய்வார். பஞ்சகவ்யம் தெளிப்பார், பூத்தொண்டு செய்வார், இசைகாரர் முதலானோர் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. சட்டர்கள் முதலானோர் இருமடங்கு ஊதியம் பெற்றனர். படைத்தலைவர்கள் கோயில் நிருவாகத்தினை மேற்கொண்டனர். என்பதையும் முன்னரே குறிப்பிட்டோம்[25]

வரிவிதிப்பு

நிலத்தின் வளம், நீர் வளம் ஆகியவற்றின் அடிப்படையிலேதான் நிலத்தின் தரங்கள் வகுக்கப்பெற்றன. விளை நிலங்களுக்கு மட்டுமே வரிவிதிக்கப்பெற்றது. கோயில், குளம், ஊருணி, நந்தவனம், ஓடை, சுடுகாடு, பாதைகள், ஊர்ப் பொது நிலம் முதலானவற்றின்மீது வரி விதிக்கப் பெற வில்லை. கோயிலுக்கு விதிக்கப்பெற்ற நிலங்களுக்கு விலக்களிக்கப் பெற்றமையால் அவை இறையிலி

எனப்பட்டன. கடமை, காணிக்கடன் என்றெல்லம் நிலவரி அழைக்கப்பெற்றது. பணமாகவும் பண்டமாகவும் நிலவரி பெறப்பெற்றது. மகாசபையினர் நிலவரியைப் பெற்று அரசரிடம் ஒப்படைத்தனர்.

செலவினங்கள்

அரசின் செலவினங்களில் நிருவாகச் செலவு, படைச்செலவு அலுவலர் ஊதியம், அரண்மனைச் செலவு, பொதுப்பணிச் செலவு முதலானவை அடங்கியிருந்தன. ஆலயங்களுக்கும் அறப்பணிக்கும் பொதுப்பணத்தை அரசர்கள் வாரி வழங்கினர். வாய்க்கால் அமைத்தல், குளம்வெட்டுவித்தல் ஆகிய பணிகளுக்குச் செலவிட்டனர். தமிழகக் கலை வளர்ச்சிகளுக்கும் தம் பங்கினை ஆற்றினர். பராந்தக பாண்டியன் ஆட்சிக் காலத்தில் தடாகங்கள், கால்வாய்கள் அமைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்து நிலையூர் என்னும் ஊரின்கண் காணப்படும் பராந்தகனின் கல்வெட்டு சிரீவீரநாராயணன் மதகொன்று இருந்ததாகத் தெரிவிக்கிறது. நிலங்களுக்கு எல்லை குறிப்பிடும் பணியும் நடைபெற்றது.

அளவைகள்

செப்பேடுகள் ஒவ்வொன்றின் இறுதியிலும் நான்கெல்லை குறிப்பிடப்பெற்றது. பாண்டியர் காலத்தில் தொண்டை மண்டலத்தில் ஆட்சி செலுத்திய பல்லவர்கள் கால வரலாற்றிலும் நாழி, கலம் முதலான அளவைகள் பற்றிக் கேள்வியுறுவதன் அடிப்படையில் தமிழகம் முழுமையும் ஒரே மாதிரியான அளவுகள் இருந்திருக்கலாம் என எண்ணுகிறோம்.

நிலவரி விதிப்பதற்கு வாய்ப்பாக விளைநிலங்கள் அளக்கப்பெற்று அவற்றின் உரிமையாளர் முதலான குறிப்புகள் எல்லாம் மிகக் கவனமாகக் குறிக்கப்பெற்றன. கொடை நிலங்களின் எல்லைகள், உரிமை முதலியன பற்றிய

குறிப்புகள் மகாசபைக் குறிப்பேட்டில் இடம் பெற்றதை ‘மகாசபைக் குறிப்பேடு கொடுத்து’ எனவும் ‘புரவெழுதி’ எனவும் தளவாய்ப்புரச் செப்பேடு குறிப்பிடுகிறது. நிலங்களை அளந்து கல்லும் கள்ளியும் நட்டனர். சீவரமங்கலச் செப்பேடும் வரையறுப்பது பற்றிக் குறிப்பிடுவதுடன், வரையறுக்கையில் மகாசபையார், நாட்டார், கணக்கர் முதலானோர் இருந்தமையைக் கூறுகிறது.[26]

நிலங்களை அளக்க 24 அடிக்கோல், 14 அடிக்கோல் முதலான அளவுகள் பயன்படுத்தப்பெற்றன. நிலங்கள் வெள்ளான் வகை, சீவிதம், போகம், காயா விருத்தி, பிரம்மதேயம், தேவதானம் சாலாபோகம் எனவும் பிரிக்கப்பெற்றிருந்தன. வெள்ளான் வகையினர் அரசுடன் நேரடித் தொடர்பு கொண்டு இறை செலுத்தினர். கோயில்களுக்கும் பார்ப்பனருக்கும் வழங்கப் பெற்றவை தேவதானம், பிரம்மதேயம், சாலாபோகம் எனப்பெற்றன. யாருக் கும் சொந்தமிலா நிலங்கள் ஊர்ப் பொது நிலங்களாகும். அரசர்கள் தனியார்களிடமிருந்து நிலங்களை வாங்கித் தேவதானமாகக் கோயில்களுக்கு அளித்தனர்.

தனி ஒருவரைச் சிறப்பிக்கும் வகையில் பிரம்ம தேயத்திலுள்ள நிலங்கள் ஒருவருக்கே அளிக்கப்பெற்றால் அது ஏகபோகப் பிரம்மதேயமாகும். பொற்கொல்லர், கிராம மருத்துவர், தச்சர், கல்தச்சர், குயவர், சலவைத் தொழிலாளர் முதலானோர்களுக்குப் போகம், சீவிதம், காணி முதலான பெயர்களில் கொடை வழங்கப்பெற்றது. தட்டாரக்காணி, தச்சுமானியம், பட்டவிருத்தி, கோயில்மானியம், மடப்புரம் வீரபோகம் ஆகியன இவ்வகையின.

வரி பெறுதலை மட்டுமே தமது கடமை எனக் கொள்ளாது வாய்க்கால் அமைத்துக் காடு மேடு திருத்திக் கழனியாக்கிய பெருமைக்குரியவர்கள் முற்காலப் பாண்டியர்கள். பாண்டியன் கடுங்கோன் திருமங்கலம் என்ற ஊரைத் திருத்திச் சீராக்கியது இதற்கு எடுத்துக் காட்டாகும்.

அ. பல்லவர் ஆட்சிமுறை

1. Burton Stein, Peasant State and Society in Mediaeval South India p. 288
2. Taylor's Catalogue Vol. III p. 29
3. Mahalingam, T.V. Early History of Kanchi, p. 3 fn 9
4. சுப்பிரமணியன், த.நா. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 367
5. மேற்படி வரி. எண். 17
6. S.I.I. Vol. I, p. 144
7. Ins. 461, of. 1905
8. Pillai V.K, 1800 years ago, p. 10
9. அபிதான சிந்தாமணி, பக். 1629
10. Gopalan, R. History of Pallavas of Kanchi, p.146
11. தான் அளித்தோ, பிறர் அளித்தோ எதுவாயினும் என்று செப்பேடுகள் கூறும் சொற்றொடரால் அரசன் மக்களில் ஒருவனாகவே கருதினான்.
12. E.I. Vol. XV, p. 250
13. போரில் சிங்கம் போன்றும், பகைவர்க்கு இடியேறு போல் விளங்கினான்-சுப்.தி.நா. முன்னூல் பக்.
14. S.I.I. Vol. I. Nos. 24-25
15. சுப்.தி.நா. முன்னூல் பக். 329
16. நந்திக்கலம்பகம் பாடல்-60, பெரியபுராணம்-நந்திவர்மன்
17. நந்திக்கலம்பகம். 61
18. கையாள்வதில் சிறந்தவன் என்று கூறப்படுகிறான். சுப். திநா. முன்னூல் பக். 380
19. சிவஸ்கந்தவர்மன் தர்மமகா ராஜாதி ராஜன் என்று விருது பெயரால் அழைக்கப்பட்டான்.
20. நீதிகளை நிலை நிறுத்தியபோது அவர்களின் சமயம் சமூக அமைப்பு, சமூக நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பாதுகாத்து

அவர்களின் உணர்வுக்கும், கருத்துக்கும் இடம் கொடுத்தனர் என்று கூறுகிறார் மகாலிங்கம். முன்னூல் பக். 30

21. கலிகால குற்றத்தால் தாழ்ந்த அறத்தினை உயர்த்துவதிலே முனைந்து நின்றார்.

22. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் செய்யுள். 2

23. சுப்.தி.நா. முன்னூல் பக். 172. சுலோ. 18

24. நாகசாமி, இரா.யாவரும் கேளீர்.

25. சுப்.தி.நா. முன்னூல் பக். 175. சுலோ. 27

26. மேற்படி பக். 55

27. சுப்.தி.நா. முன்னூல் பக். 360

28. E.I. XXXII pp. 87-90

29. சுப்.தி.நா. முன்னூல் பக். 172

30. மேற்படி பக். 307.

31. பல்.செப்.முப்.பக். 4.

32. S.I.I.Vol. II பக். 348

33. சுப்.தி.நா. முன்னூல் பக். 4

34. Aitareya Brahmana, VIII 12-23

35. S.I.I. Vol. XII p. 11

36. Mahalingam T.V. Op.sit. 142.

37. S.I.I. No. 135, 10th Label Section J

38. Minakshi, C.Op.cit. p. 51.

39. Mahalingam, T.V. Op.cit. p. 126.

40. Aravamudam, T.G. Portrait Sculptures in South India. p. 24

41. செப்பேடுகளில் வடமொழிப் பகுதியில் இராஜரிஷி என்றே காணப்படும்.

42. சிறுத்தொண்டர் புராணம் 9

43. நாவுக்கரசு புராணம், பாடல் 85.

44. நாகசாமி இரா. முன்னூல்

45. சுப்.தி.நா. முன்னூல் பக். 73.

46. தசாச்சவ மேதம் என்றால் பத்து பரிவேள்விகள் என்று பொருள்.

47. வல்லமணர் தமை நீத்து மழனிடையோன் தாளடைந்தான்
– நாவுக்கரசர் புராணம் 145

தலையில் சந்திரனைத் தரித்தவனும் தோளிலே படமெடுத்த பாம்பைப் போட்டிருப்பவனும் இடது பக்கம் பவாணியைக் கொண்டிருப்பவனும் ....பரமசிவம் உங்களுக்கு மங்கலத்தை அளிக்கட்டும்
– சுப்.தி.நா.முன்னூல் பக். 160

48. திருநாவுக்கரசர் புராணம், பாடல் 146.

49. Beals Records Vol. II p. 229

50. S.I.I. Vol. IV No. 135

51. சுப்.தி.நா. முன்னூல் பக். 162 வரி 58.

52. நந்திக்கலம்பகம் பாடல் எண். 11 வரி 15 (கழக வெளியீடு)

53. விடைவேற்கொடி வேற்படை முன்உயர்ந்த
– பெரிய திருமொழி 119.

54. Minakshi, C., Op.cit p. 54

55. மேற்படி 54

56. இராசமாணிக்கம், மா. முன்னூல் பக். 222

57. விண்தோய்குடை-திருக்கோவை 383

58. Malatimadhava, 5:4:23.

59. கசாக்குடிச் செப்பேடுகள் முதலாம் பரமேச்வர வர்மன் கத் வாங்கசேது என்றழைக்கின்றது. இதனால் அவன் கர்வாங்க உருவத்தை தனது கொடியில் கொண்டிருந்தான் என்பதை அறியலாம்.

60. S.I.I. Vol.II, No. 135, p.2

61. நாவுக்கரசர் புராணம் 86

62. Kiratarjumimza, Canto I, Verse 3

63. S.I.I.Vol. I p. 5

64. S.I.I. Vol. IV, No. 135, 10th Label Sec.J.
65. குலச்சிறை நாயனார் புராணம்
66. திருநாவுக்கரசர் புராணம்.
67. Minakshi, C. Op.cit p.60 – 4
68. Arthasastra, Book I. 15
69. Rock Edict Services III, IV
70. சிறுத்தொண்டர் புராணம்.
71. Mahalingam, T.V. South Indian Policy, p. 108
72. ஆசாரியராக அமர்ந்தவரும், மந்திரிகளில் முக்கியமானவரும் கசாக்குடிச் செப்பேடுகள் சுப்.தி.நா. பக். 178
73. நாவுக்கரசர் புராணம், பாடல் 123
74. ஹீரஹதஹள்ளி விழவெட்டிச் செப்பேடுகளில் குறிக்கப் பட்டுள்ளன.
75. Fleet, Gupta Inscriptions, p. 99
76. பாஸ்கர ரவிவர்மனின் கொச்சிச் செப்பேடுகள்
77. Minakshi, C. Op.cit., p. 67
78. S.I.I. Vol. II. Pt. III. p. 276
79. S.I.I. Vol. II p. 361
80. Iyer, K.V.S. Ancient Dekkan, p. 372
81. Minakshi, C. Op.cit p. 70.
82. வடசொற்றமிழ் அகரவரிசை பக். 21
83. Registrar.
84. இராசமாணிக்கம், மா. முன்னூல் பக். 230
85. S.I.I. Vol. IV, No. 125 line J.
86. Mahalingam, T.V. South Indian Polity p. 322
87. சுப்.தி.நா. முன்னூல் பக். 68
88. சுந்தரர், தேவா. 9:4
89. சுப்.தி.நா. முன்னூல பக். 367

90. வைகுந்த பெருமாள் கோயில் சிற்பங்கள் இரண்டாம் வரிசையில் இடம் பெற்றது.

91. சுப்.தி.நா. முன்னூல் பக். 109

92. இராசமாணிக்கம், மா. முன்னூல் பக். 220

93. சுப்.தி.நா. முன்னூல் பக். 100 அக்ஷிஸ்வாமி என்பது கண்ணையுடையவனான அரசன் என்று பொருள்.

94. Aiyangar, S.K. Administrative Institutions of S.I. p. 95.

95. சுப்.தி.நா. முன்னூல் பக். 367

96. சுப்.தி.நா. முன்னூல் பக். 266

97. மேற்படி பக். 60

98. S.I. Vol. XXVII p. 15

99. பெரிய திருமொழி 6:6:10

100. சுப்.தி.நா. முன்னூல் பக். 175. சுலோ. 27 பிள்ளை, கே.கே. தமிழக வரலாறு பக். 244.

101. Arthasastra Book III, Ch. I

102. S.I.I. Vol. I. No. 148., MER 161, 162, 190 of 1912

103. சுப்.தி.நா. முன்னூல் பக். 175, சுலோ. 27

104. S.I.I. Vol. II 73

105. மேற்படி

106. வடசொற்றமிழ் அகரவரிசை பக். 145

107. மேற்படி 48

108. தண்டியடிகள் புராணம் 18

109. தடுத்தாட் 56

110. சுப்.தி.நா. முன்னூல் பக். 3601

111. நாவுக்கரசர் புராணம், 92

112. மேற்படி 96.

113. சண்டீச நாயனார் புராணம்

114. Subramania Mudhaliar, Sekkilar, pp. 68-72.

115. தடுத்தாட். 62

116. Mattavilase, Text p. 23
117. Minakshi, C., Op.cit. p. 71
118. இடங்கழிநாயனார் புராணம் 7
119. மதிற்காஞ்சிமா நகரம் அப்பர்-தேவாரம், 21.10
120. கத்வல் செப்பேட்டுச் செய்தி.
121. சுப்.தி.நா. முன்னூல், பக். 147
122. மேற்படி பக். 149
123. Minakshi, C., Op.cit. p. 19
124. சுப்.தி.நா. முன்னூல் பக். 223.
125. மேற்படி பக். 176
126. மேற்படி பக். 170, சுலோ 9
127. இரண்டாம் விக்கிரமாதித்தனின் கேந்தூர் செப்பேட்டில் பல்லவர்களின் மது ஊட்டப்பட்ட யானைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
128. சுப்.தி.நா. முன்னூல் பக். 58
129. பெரிய திருமொழி, 11-6
130. எறிபத்த நாயனார் புராணம் 29
131. சுப்.தி.நா. முன்னூல் பக். 56. சுலோ. 13
132. மேற்படி பக். 57. சுலோ. 13
133. Mattavilasa, Part XI, p. 35
S.I.I.Vol. II, part V, p. 336.
134. S.I.Vol. XVIII, p. 13
135. சயாமல் காணப்படும் தமிழ்க் கல்வெட்டில் நந்திவர்மன் காலத்தில் நிகழ்ந்த வர்த்தக உறவு கூறப்பட்டுள்ளது.
136. பல்லவர் செப்பேடுகள், பக். 174. சுலோ. 20
137. Minakshi, C.Op.cit p. 84
138. I.A. Vol. V. pp. 50-53.
139. Aiyangar, S.K. Op.cit p. 95
140. Select Inscriptions. Vol. I

141. I.A., Vol. V. p. 50

142. பல்லவர் செப்பேடுகள். முன்னூல் பக். 108

143. சிறுத்தொண்ட நாயனார் புராணம் 7

144. Michael lockwood, Mahabalipuram Studies. p. 98

145. சுப். முன்னூல் பக். 57

146. திருக்கோவையார்.

147. விசயன் கந்தஸ்வாரா செப்பேடு

148. எறிபத்த நாயனார் புராணம் 31

149. இரண்டாம் விக்கிரமாதித்தனின் கேந்தூர் செப்பேட்டில் காணலாம்.

150. எறிபத்த நாயனார் 27

151. சுப்.தி.நா.பக்கம் 57

152. தன் புஜபலத்தினால் கர்வமடைந்த சிங்கள மன்னனை சிம்மவிட்டுணு தோற்கடித்தான் என்று குறிக்கப்பட்டுள்ளது. மேற்படி பக். 174, சுலோ. 20.

153. மேற்படி பக்கம் 58

154. திருவா. 46:2

155. மேற்படி

156. மேற்படி

157. வைகுந்தப் பெருமாள் கோயில் அணிவரிசை 3....சிற்பம் 111-6

158. பல்லவர் செப்பேடுகள் முன்னூல் பக். 367

159. Srinivasachari, C.S., History and the Institutions of Pallava,p. 23

160. சுப்.தி.நா. முன்னூல் பக். 178, 226

161. இராசமாணிக்கம், மா. முன்னூல் பக். 228

162. Jayaswal, K.P. Hindu Polity, Ch. XXVII, p. 62

163. Sastri, K.A.N. Studies in Chola History, p. 77.

164. Gopalan, R. Op.cit, pp. 154-56

165. 162 - 1912

166. Aiyangar, S.K. Op.cit., p. 131
167. E.I. XXIV, pp. 33-34
168. A.R. No. 283 of 1916
169. S.I.I. Vol XII, No. 42, p. 17
170. *Ibid* No. 34, pp. 14-15 AR No. 109 of 1932-33
171. S.I.I. Vol. XIII, No. 95, p. 42
172. S.I.I. Vol. XII, No. 90, p. 39
173. *Ibid* Vol. III, pt. I p. 9
174. Rheys David Pato English Dictionary Vol. II
175. Jayaswal, K.P. Hindu Polity Ch. XX
176. இராசமாணிக்கம், மா., முன்னூல் பக். 339
177. செங்கல்பட்டில் காணக்கிடைக்கும் அநேக கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படுகின்றன.
178. E.I. Vol. XI, pp.223-229
179. Minakshi, C. Op.cit. p. 152
180. A.R.No. 1912-18 p. 90
181. E.I. Vol. XXIII, p. 122
182. பாண்டியர் செப்பேடுகள் பக். 119, சுலோ. 18
183. சுப். முன்னூல் பக். 168
184. 303 of 1921
185. சுப். முன்னூல் பக். 368
186. மேற்படி பக். 167 பாகம் 120, 121
187. கசாக்குடி தண்டந்தோட்டம் ஹூரஹதஹள்ளி செப்பேடுகளில் பிரம்மதேயம் பெற்றோரும் அவர்களது வாரிசுகள் மட்டும் அனுபவிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளன.
188. Burtoin Stein, Op.cit, p. 291
189. திருஞானைப் போவார் 13.
190. சுப். முன்னூல் பக். 247
191. உருவபள்ளி, பாகூர் செப்பேடுகள்

192. சர்வமாகிய நிவர்த்தன திவ்யமர் யாதவர் என்பது சாமான்ய இரண்டு பட்டியபடியால் என்று குறிக்கப்பட்டுள்ளது.
193. Tamil Lexicon p. 22, 83
194. S.I.I. Vol. I. pt V. p. 59
195. Ins 5 of 1898
196. A.R. No. 530 of 1920
197. Ins 33 of 1900
198. Ins. 7 of 1898
199. Ins. 33 of 1900
200. A.R.No. 372 of 1911
201. Ins. 257 of 1912
202. Ins. 179 of 1915
203. Ins. 360 and 227 of 1920
204. Ins. 303 of 1901, 162 of 1912, 38 of 1920 மற்றும் கருநாழி நால்வா, நாழி, மாநாய் நாழி என்னும் அளவுக்கும் இருந்தன.
205. A.R. No. 123 of 1936
206. Ins. 303 of 1901
207. மேற்படி 48 of 1904
208. மேற்படி 118 of 1923.
209. A.R. No. 109 of 1932-33
210. Ins. 32 of 1912
211. A.R. No. 461 of 1905
212. Minakshi, C. Op.cit p. 1
213. இராசமாணிக்கம் பாண்டியர் வரலாறு பக். 179
214. S.I.I. Vol XXI No. 17
215. Krishnan in C. Minakshi op.cit pp. 116 - 117
216. Minakshi C. Op.cit p. 89
217. Minakshi, C. p. 89
218. Elliot Plate I Nos. 32, 34, 36, 37

219. E.I. Vol. X. p. 6. p. 9
220. Toung Pao. Series II Vol. 5, p. 64-65
221. Ins. 278 of 1902
222. இது பழங்காசினோடு உரைப்பதனைப் பொன் என்று கல்வெட்டுக் குறிப்பு கூறுகின்றது.
223. Ins. 297 of 1092
224. சம்பந்தர் திரு இருக்குக்குறள் பதிகம். 92:1
225. சுப்.தி.நா. முன்னூல் பக். 317
226. பெரியபுராணம் திருநாட்டுச் சிறப்பு
227. S.I.I. Vol. II, p. 512
228. இராசமாணிக்கம், மா. முன்னூல் பக். 351
229. Minakshi, C. Op.cit, p. 168
230. E.I. Vol. XVIII, p. 124
231. S.I.I. Vol. II p. 352 Line 122
232. S.I.I. Vol. XVIII, p. 124
233. S.I.I. Vol. II p. 352 Line 118, 119, 122
234. Aiyangar, S.K. Op.cit P. India, p. 119
235. Mahalingam, T.V. South Indian Polity, p. 444
236. S.I.I. Vol. II, p. 32
237. S.I.I. Vol. VII, p. 129
238. Vol. IV, p. 287
239. Dikshitar, V.R.R. Hindu Administration Institutions. p. 176
240. E.I. Vol. VII, p. 67
241. மேற்படி Vol. I p. 6
242. சுப்.தி.நா. முன்னூல் பக். 468
243. மேற்படி பக். 256
244. மேற்படி பக். 262
245. S.I.I. Vol. XVII, p. 127
246. E.I. Vol. XVIII, p. 177

247. S.I.I. Vol. II, p. 530 pt. III, p. 352 line 124
248. Aiyangar, S.K. Op.cit, p. 14
249. Minakshi, C.Op.cit, p. 94
250. இராசமாணிக்கம், மா., முன்னூல் பக். 236
251. பல்லவர் செப்பேடுகள் முன்னூல் பக். 194, வரி. 120
252. S.I.I, Vol. II pt . V, p. 512
253. S.I.I. Vol. VI, p. 324
254. S.I.I. Vol. II, p. 73
255. Tamil Lexicon p. 24
256. Mana XIII, 407
257. S.I.I. Vol. XII, p. 4
258. Minakshi, C. Op.cit in p. 97
259. S.I.I. Vol. II, p. 98
260. Pt. III p. 353 Line. 129
261. Minakshi, C. Op.cit, p. 100
262. S.I.I. Vol. V, p. 411
263. S.I.I. Vol. II, pp. 98 – 99
264. E.I. XXXVI, No. 20
265. S.I.I. Vol. II, p. 509. Pt. IV. line. 45
266. S.I.I. Vol. II, p. 520
267. Minakshi, C. Op.cit, pp. 104-105
268. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 361
269. E.I. Vol. VIII, p. 145
270. Manual of North Arcot District (I.Ed)
271. ,, ,, ,, Vol. II, p. 438
272. S.I.I. Vol. III, pt. III, p. 351
273. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 53 வரி. 63
274. S.I.I. Vol. II, pt. II, p. 359
275. சுப்.தி.நா. முன்னூல் பக். 53 வரி 80

276. Minakshi C. Op.cit, p. 130
277. Ins. 147 of 1912
278. சுப்.தி. நா. முன்னூல் 187
279. மேற்படி பக். 167 வரி 17
280. S.I.I. Vol. II, p. 352-18 = Ins. 181 of 1912
281. Ins. 189 of 1912
282. S.I.I. Vol. II p. 352 line 16
283. சுப்.தி. நா. முன்னூல் பக். 63, வரி 79, 80
284. E.I. Vol. V. p. 52
285. Iyer, K.V.S. Ancient Dekkan pp. 368-70
286. கோட்புலி நாவலர் புராணம் 4. 10
287. இராசமாணிக்கம், மா. முன்னூல் பக். 238

ஆ. பாண்டியர் ஆட்சிமுறை

1. இராமன்,கே.வி. பாண்டிய வரலாறு (1977) பக். 146
2. S.I.I. Vol. XIV No. 16-A, 20 of 1912- 717 of 1960 + 1962- 296 of 1928 ARE
3. S.I.I. Vol. XIV, No. 16-A, ARE 381 of 1959 -60 ARE 357 of 1958-59 260 of 1928
4. இராமன்,கே.வி. பாண்டிய வரலாறு பக். 147
5. Vaidyanathan,K.S. Ancient Geographical Division of Tamil Handbook Published by II world Tamil Conference, Madras 1968.
6. பாண்டிய வரலாறு சதாசிவ பண்டாரத்தார்- சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு 1977 பக். 132
7. மங்களமுருகேசன், ந.க. இராசம்மங்களமுருகேசன், பாரி நிலையம். சென்னை 1987, பாண்டியர் ஆட்சி முறை.
8. வேள்விக்குடிச் செப்பேடு வரிகள் 50-51 69-70, Epigraphia Indica Vol. XVII 291-309
9. Epigraphia Indica Vol. XVII, 291 -309
10. The Madras Museum Plate No. 15

11. பராார்தக வீரநாராயணனின் தளவாய்ப்புரப்பட்டயம், பாண்டியர் ஆட்சிமுறை ந.க. மங்களமுருகேசன், இராசம்மங்கள முருகசேன் பக். 120

12. ARE: 1927-28 பக். 56.

13. The Madras Museum plate No. 15

14. அதே நூல்

15. செந்தமிழ் நான்காம் தொகுதி

16. Epigraphia Indica, Vol. XXII, p. 3

16-அ. For detail study of Manur Inscription See "Hero stones in Tamil Nadu" by Natana Kasinathan.

17. இராமன்,கே.வி. பக். 149

18. சிவகாசிப்பட்டயம்- பாண்டியர் ஆட்சிமுறை ந.க. மங்கள முருகேசன்
இராசம்மங்கள முருகேசன் பக். 129.

19. தளவாய்ப்புரப் பட்டயம்

20. Epigraphia Indica Vol. XVII p. 291-309

21. The Indian Antiquary Vol. XXII 1893

22. அதே செப்பேடு

23. விஜயஸ்தம் சிசும்பணவச்

24. தளவாய்ப்புரச் செப்பேடுகள்.

25. S.I.I. XVI 42.

26. A.R.E. 1936-37 பக். 74.